ரீ வேதாந்த தீபிகை.

தொகுதி. 25 எண். 4.5.6

அக்டோபர் முதல் டிசம்பர் வரை

1936

JL
.65ஏ211,N12
N36.25.4-6
158961

SRI VEDANTA DIPIKA

[Special Number]

Vol. 25] OCTOBER 1936 [Part 4

468

OFFICE OF ... 12 MAR 1937

ஸ்ரீ
வேதாந்த தீபிகை

ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிக மஹோத்ஸவ மலர்

தாது ஹு

புரட்டாசி மீ

பத்ராதிபர்கள் :

ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

CONDUCTED BY

Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd.,

VANI VILAS, 4, BADRIAH GARDEN ST., PARK TOWN, MADRAS,

ஸ்ரீ:

ஸ்ரீ வெ நமஃ

இம்மஹோத்ஸவ மலர்

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபா
பொக்கிஷதார் ஸ்வாமியின்
ஆதரவைக் கொண்டு ப்ரசுரிக்கப்பட்டுள்ளது.

த்ரிலோகவநககநம் தஶாருவணம்
ரவிகரமளரவராஉரம் உயாநெ ।
வவாரஜககரூரவ்ருதா ந நாவெ
விஜயஸவெ ரதிரஸ்தா ஜெஉநவஷ்ரா ॥

விஷய ஸூசிகை

1. ஸ்ரீ அஹோபில மடத்து ஸ்ரீமுகம் 1
2. ஸ்ரீ தேசிக ஜயந்தி ஸந்தேசம் 4
   [ஸ்ரீ. உப. வே. கபிஸ்தலம் தேசிகாசார்யர்]
3. மஹாதேசிகன் மஹோத்ஸவம் 5
   [ஸ்ரீ. உப. வி. வி. ஸ்ரீனிவாஸ அய்யங்கார்]
4. ஆசார்ய குணப்ரபா 7
   [ஸ்ரீ. உப. திருக்கோட்டியூர் ஸௌம்ய நாராயணாசார்யர்]
5. ஸ்ரீ தேசிகன் அவதார வைபவம் 17
   [ஸ்ரீ. உப. சேட்லூர் துரைஸாமி ஐயங்கார்]
6. விவேசக ஸௌலக்ஷ்ம்யம் 1
   [ஸ்ரீ. உப. திருவரங்கம் திருமலை தாதாசார்யர்]
7. அடியவர்க்கு மெய்யனும் தேசிகனும் 2
   [ஸ்ரீ. உ. வே. சேட்லூர் நரஸிம்ஹாசார்யர்]
8. செந்தமிழ்ச் செல்வர் 2
   [ஸ்ரீ. உப. ரெ. திருமலை ஐயங்கார்]
9. ப்ரபந்தங்களும் பிருதங்களும் 3
   [ஸ்ரீ. உப. உத்தமூர் தி. வீரராகவாசார்யர்]
10. ஆத்ம ஶ்லாகா தத்வம் 4
    [ஸ்ரீ. உப. டி. டி. ஸ்ரீநிவாஸாசார்யர்]
11. ஸ்ரீ தேசிக குணாம்ருதாஸ்வாதினீ 5
    [ஸ்ரீ. உப. தி. இ. சடகோபாசார்யர்]
12. வைபவ ப்ரகாசம் 6
    [ஸ்ரீ. உப. ஏ. வி. கோபாலாசார்யர்]
13. ஸ்ரீ தேசிக ஸூக்திகளும் ஸம்ரக்ஷணமும் 6
    [ஸ்ரீ. உப. பரவஸ்து ஸ்ரீநிவாஸாசார்யர்]
14. கீர்த்தி ப்ரவாஹம் 7
    [ஸ்ரீ. உப. தி. ராமஸ்வாமி ஐயங்கார்]



ஸ்ரீமத் நிகமாந்த மஹாதேசிக [illegible]

वेदे संजातखेदे मुनिजनवचने प्राप्तनित्यावमाने
संकीर्णे सर्ववर्णे सति तदनुगुणे निष्प्रमाणे पुराणे ।
मायावादे समोदे कलिकलुषवशाच्छून्यवादेऽविवादे
धर्मत्राणाय योऽभूत्स जयतु भगवान्विष्णुघण्टावतारः ॥

श्रीः

ஸ்ரீ அஹோபில மடத்து ஸ்ரீமுகம்

श्रीमद्वेदमार्गप्रतिष्ठापनाचार्य, परमहंसपरिव्राजकाचार्य, सर्वतन्त्रस्वतन्त्रोभयवेदान्ताचार्य भगवद्रामानुजसिद्धान्तनिर्धारणसार्वभौम श्रीवण्शठकोप श्रीलक्ष्मीनृसिंहशठकोप श्रीरङ्गशठकोपयतीन्द्रमहादेशिकाभ्यामनुगृहीतं श्रीवेदान्तदेशिकवैभवाभिनन्दनश्रीमुखम् ।

श्रीमते श्रीलक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

श्रीमते रामानुजाय नमः

श्रीमते निगमान्तमहादेशिकाय नमः

श्री आदिवण्शठकोपयतीन्द्रमहादेशिकाय नमः

सर्वोपकारको यस्यावतारः सर्वनन्दितः ।
स वेदमस्तकाचार्यः चिरं जीयान्महीतले ॥ १ ॥

दर्पाविष्टकुदृष्टिदुर्मतपरिध्वंसाय पद्मानिधेः
घण्टारत्नमयी यदीयवपुषा भूम्यां पुरावातरत् ।
तस्य श्रीनिगमान्तदेशिकमणेः सत्सूक्तिसंवर्धिनी
तन्माहात्म्यगुणोपपादनपरा जीयात्सभा भूतले ॥ २ ॥

निगमशिखरसूरेर्वैभवख्यापिकेयं निखिलविबुधहृद्याशेषभव्यप्रवृत्ता ।
अविदितनिगमार्थान्सम्यगुद्घाटयन्ती विलसतु चिरमुर्व्यां श्रीनृसिंहप्रसादात् ॥ ३ ॥

निगमशिखरसूरेर्निर्मलज्ञानसिन्धोर्निरवधिकमहिम्नो नित्यकल्याणधाम्नः ।
चरितमखिलमुर्व्यां कः प्रवीणः प्रवक्तुं विधिशिवभुजगेशव्यासमुख्यैरचिन्त्यम् ॥ ४ ॥

श्रीमान्निखिलजगज्जनिस्थितिलयैः क्रीडन्रमावल्लभो
धर्माणामवनेः सतां च समये जातां विपत्तिं पराम् ।
प्रोद्धर्तुं दशधावनाववतरन्नुन्मूल्य सद्धर्मभू-
कष्टं विष्टपमातनोत्प्रमुदितं पूर्वं दयावारिधिः ॥ ५ ॥

वाल्मीकिव्यासमुख्यप्रवरमुनिकृतैः सेतिहासैः पुराणैः
निर्णीते धर्मतत्त्वे कुमतिजनकृतक्षोभमुद्वीक्ष्य तीव्रम् ।
कालेन श्रीशठद्विट्कलिमथनमुखैर्भक्तवर्गैस्तथान्यै-
राचार्यैर्नाथमुख्यैर्यतिधरणिभृताशीशमत्तं मुरारिः ॥ ६ ॥

एवं गच्छति वासरे बहुतिथे भूयोऽपि वृद्धिं गते
दुर्वादे जडकुक्कुरोग्रविषवद्भेदे सखेदे ततः ।
स्मृत्यादिष्वपि यत्र कुत्र विलयं यातेषु पद्मानिधिः
धर्मत्राणकृतेक्षणो गुरुवरः स्वामित्युदाशोऽभवत् ॥ ७ ॥

श्रीवासः स्वयमाविरास हि यमाविश्येति केचिन्नराः
तद्धण्टेति तथैव केचन यतिक्षोणीभृदेव स्वयम् ।
सिद्धान्तं निजनिर्मितं कुमतिभिः कालेन सन्दूषितं
सम्यक्संस्थापयितुं व्यजायत यदात्मेत्येव केचिज्जगुः ॥ ८ ॥

श्रीमान्वेदान्तसूरिः कविकथकघटाभञ्जकण्ठीरवेन्द्रः
क्षोण्यां नावातरच्चेद्यतिपतिकृतयो नामशेषा भवेयुः ।
गाथाः श्रीमच्छठारिप्रमुखविरचिताः धर्मशास्त्राणि वेदा-
श्चोत्सन्नाः स्युर्धरण्यां बहुविधदुरिताचारवृद्धिर्भवेच्च ॥ ९ ॥

सोऽयं वेदान्तसूरिर्बुधवरमहितो दुर्मताक्षुभ्यमाणान्
ग्रन्थान्निर्माय नानाकुहककवरमदध्वंसनान्साधुभोग्यान् ।
श्रीमद्वेदान्ततत्त्वप्रकटनचतुरान्संस्कृतप्राकृतश्री-
द्राविड्याख्यस्वरूपानकृत करुणयाहो कृतार्थान्समस्तान् ॥ १० ॥

श्रीमद्वेदान्तसूरिप्रवरविरचितान्ग्रन्थवर्गान्पुमांसः
सेवन्ते येऽतिभक्त्या गुरुवरमुखतस्ते विशुद्धान्तरङ्गाः ।
नानासिद्धान्तमर्मप्रकटननिपुणास्तत्त्ववित्सार्वभौमा
जायन्ते दान्तिशान्तिप्रमुखगुणयुताः श्रीशवीक्षैकलक्ष्याः ॥ ११ ॥

श्रीवासः करुणानिधिर्गुरुवरो भूत्वा भवाब्धौ जनान्
मग्नांस्तारयितुं दृढप्लवसमान्ग्रन्थान्न कुर्याद्यदि ।
लोके दुष्कलिपुष्कलीकृतिपुषि स्वैरं प्रवृत्ता जना
दुर्मोचोत्कटपापकर्मनिरता नष्टा भवेयुर्ध्रुवम् ॥ १२ ॥

लोके केचन पण्डिता निजमतिप्रख्यापनायामितान्
ग्रन्थान्पाणिनिगौतमादिफणितेरुद्धृत्य कुर्वन्त्यहो ।
किं तैः स्वोदरवृत्तिहेतुभिरिहामुत्रापि भव्यप्रदाः
श्रीमद्देशिकसूक्तयः शुभतमाः सर्वोपकारक्षमाः ॥ १३ ॥

कर्म ज्ञानमुपास्तिरित्युरुतरा ये मुक्त्युपायाः स्मृताः
पूर्वैस्तेषु परं शितेतरधियां नो नावकाशो भवेत् ।
इत्थं क्लेशजुषां नृणां सुगतये तत्पापविध्वंसिनीं
प्रख्याप्यावदिह प्रपत्तिपदवीं सर्वोपयोज्यां गुरुः ॥ १४ ॥

वेदान्तदेशिकमणेर्विमलैः प्रबन्धैर्ज्ञायेत तत्कृतमहोपकृतिर्बुधेन्द्रैः ।
सर्वोपकारकृतये हि गुरोर्वतारो नास्मात्परोपकृतिकृद्भुवि कश्चनान्यः ॥ १५ ॥

श्रीलक्ष्मीनरकेसरीन्द्रशठजिद्योगीश्वराणां तथा
श्रीमद्रङ्गशठारियोगिनृपतेश्चानुग्रहानुज्ञया ।
श्लोकान्पञ्चदशागमान्तगुरुराट्सद्वैभवख्यापकान्
रामो वेङ्कटपूर्वको व्यरचयच्छ्रीकार्यमुद्रान्वितः ॥

ஸ்ரீ:

ஸ்ரீ தேசிக ஜயந்தீ ஸந்தேசம்

[உபயவேதாந்தாசார்ய ஸ்ரீராமாநுஜஸித்தாந்தவிஜயத்வஜ ஸ்ரீமத் உ. வே. கவிதார்க்கிகஸிம்ஹம் தேசிகாசார்ய ஸ்வாமி — திருப்பதி]

ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் திருவடிகளில் ப்ரதிபந்நர்களான மஹநீயர்களே!

'ஓதாதோதும் வேதாந்தார்யன் உதயம் செய்திடுநாள்
உத்தமமான புரட்டாசித் திருவோண மெனுநாளே'

என்கிறபடி ஸர்வஜ்ஞனை தூப்புல் திருவேங்கடமுடையான் அவதரித்த நாளாகையால், ஸ்ரீஜயந்த்யாதிகளைக் காட்டில் உத்தமமான நாளாகப் பெரியோர்களால் கொண்டாடப்படும் நாள், நாளது புரட்டாசி மீ 12௳ ஞாயிற்றுக்கிழமை வாய்க்கிறது. 'வேதே ஸஞ்ஜாதகேதே' என்கிறபடியே, துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலநங்களோடே ஸகல வர்ணாச்ரமதர்ம ஸ்தாபநத்திற்காக 'பரித்ராணாய ஸாதூநாம்' என்கிறபடி பெருமாள் ப்ரதியுகம் அவதரித்து, 'வேதோऽகிலோ தர்மமூலம்' என்கிறபடி, ஸர்வ தர்ம மூலமான வேதத்தையும் தது பப்ருஹ்மணங்களையும் ப்ரவர்த்திப்பித்து ரக்ஷித்துக்கொண்டு வரும்போது, கலி ப்ரபாவத்தாலே சூந்ய வாதத்திற்கு ப்ராக்ரூபமான மாயாவாதம் தலையெடுத்து ப்ரபஞ்சத்திலே பரவி, பசுத்தோல் போர்த்துப் புலிப்பாய்ச்சல் பாயும் கணக்கிலே ச்ருதி ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்களை ப்ரமாணமாகக் கொண்டதாகத் தன்னை எண்பித்து, ஶ்ருதி ஸ்ம்ருதிகளையும் ஸமஸ்த தர்மங்களையும் அஜ்ஞாதிகாரமாக்கி, ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் முதலிய பகவல்லீலைகளையும் அவனுடைய உபய விபூதிகளையும் நித்ய நிரவத்ய திவ்யமங்களவிக்ரஹத்தையும் ஸமஸ்த கல்யாண குணாதிகளுடைய ஸ்ரிய: பதியான அவனுடைய குணங்களையும் பொய்யாக்கி, நாஸ்திக பத்ததியிலே ப்ரஜைகளை நடத்துகிறபடியாலே வர்ணஸாங்கர்யத்துக்குக்கூட வழி யேற்பட, ஸர்வேஶ்வரன், 'இதென்ன ஸாத்ய தர்மங்களை யெல்லாம் ஸ்தாபிக்க நாம் நாநாவிதவதாரங்கள் செய்து வந்தும், ஸித்ததர்மமான நம்முடைய நிலையே அழியும்படி இவர்கள் செய்வது! அந்தோ! நாம் என் செய்வது? ஆவாரார்துணை?' என்று ரக்ஷக ப்ரதிஜ்ஞை பண்ண நேரிட, அப்பொழுது ஸித்த ஸாத்ய ரூபோபயவித தர்மத்ராணார்த்தமாக அந்த பகவானுடைய கண்டையே நம் தேசிக ரூபேண அவதரித்து, சததூஷண்யாதி ப்ரௌட க்ரந்தங்களையுமருளிச்செய்து, அப்படிப்பட்ட மாயாவாதத்தை ஸமூலோந்மூலநம் பண்ணி, ச்ருதிஸ்ம்ருதீதிஹாஸபுராண பாஞ்சராத்ரங்களிற் சொல்லப்பட்ட ஸித்த ஸாத்ய தர்மங்களை ஸ்தாபித்து, வர்ண வ்யவஸ்தையையும் குலையாதபடி செய்து வைத்தபடியாலே, விஷ்ணுவின் அவதாரத்திற் காட்டிலும் விஷ்ணுகண்டாவதாரத்திற்கு ஏற்றம் அதிகமுண்டு. ஆகவே ஸ்ரீஜயந்த்யாதி நாள்களைக் காட்டிலும் விஷ்ணுகண்டாவதார தினமான இப் புரட்டாசித் திருவோண நாளே உத்தமம்.

ஆகையால் அன்றை தினம் ஆங்காங்கு ஒன்று கூடி, ஸகல பக்தர்களும் நம் ஸ்வாமி தேசிகனுடைய மஹிமையை 'கோஷயந்த: ஸஹஸ்ரஶ:' என்கிற கணக்கிலே விசேஷமாகக் கொண்டாடி க்ருதார்த்தர்களாவீர்களாக.

ஸ்ரீ:

மஹா தேசிகன் மஹோத்ஸவம்

[ஸ்ரீ. உப. வி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார்]

உத்ஸவம் என்பது, ஜந ஸமூஹங்கள் கண்டு களிக்கச் செய்யும் கொண்டாட்டம். மஹோத்ஸவம் என்பது, தூர ப்ரதேசங்களிலுள்ள யாவரும் ஒன்றுசேர்ந்து விசேஷமாகச் செய்திடும் கொண்டாட்டம். மஹாசார்யரான மஹா தேசிகனுக்கு எண்ணிறந்த க்ராமங்களிலும் க்ஷேத்ரங்களிலும் நகரங்களிலும் அவ்வவதார புருஷன் அவதரித்த கந்யாமாஸம் ச்ரவண நக்ஷத்ர திநத்தை வர்ஷோத்ஸவமாய் மஹோத்ஸவம் செய்து மகிழ்விப்பதும் எல்லோர்க்கும் தெரியும். ஆனாலோ, இத்தகைய உத்ஸவங்கள் நம்முடைய பக்தி அதிசயத்தையே தெரிவிக்கக்கூடியவை. ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகன் திருவுள்ளத்திற்கு இச் சாதாரண உத்ஸவங்கள் உகப்பு உண்டாக்கக் கூடியனவோ என்று சங்கிக்க நிரம்ப இடமுண்டு. பொன்னைப் புழுவாய்க் கருதிய அப் புருஷ ஸிம்ஹம் அப் பொன்னைப் புனையவும் வேண்டுமோ? வைராக்ய சிகாமணியான அவ் வேதாந்த மூர்த்தி வைரங்கள் பூண்டு வீதிவலம் வரவும் விரும்புமோ? ஆதலின் இவ்வித மஹோத்ஸவங்களில் கொண்டாடப்படும் விக்ரஹம் நம்முடைய மநோபீஷ்டத்தின் காஷ்டையே யென்று மதிப்பதும் தகுதியாம். அது காரணம் பற்றியே மற்றொரு ரீதியான மஹோத்ஸவமும் மஹநீயர்களால் பஹுமாநிக்கப் படலாமென்று தோன்றுகிறது. உத்ஸவங்களுக்கு அங்கங்களாகவும் அறிகுறிகளாகவும் கருதப்படுபவை அதிர்வெடி, மேளம், அலங்காரம், புஷ்பமாலைகள், தீவட்டி மத்தாப்புகள், பாணங்கள், ஜனக் கூட்டம், ஊர்வலம், வேத பாராயண அத்யாபக கோஷ்டிகள்; முடிவிலாயினும் முக்யதமமான விசேஷ ப்ரஸாதங்களுமாம். அதிர் வெடி யென்பது அனைவரும் அறிவதற்காகச் செய்வதோர் அதிர்ச்சியை யுண்டாக்கும் சப்த விசேஷம். இம் மலரைக் குறித்துச் சென்ற ஸஞ்சிகையில் செய்யப்பட்ட விளம்பரமானது அதிர்ச்சி உண்டாக்காவிடினும், அது மகான்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி யுண்டாக்கும் தெரிவிப்பன்றோ? மேற்படி விளம்பரத்தை வாசித்து ஸஹ்ருதய சிகாமணிகள் ஸந்தோஷத்துடன் ஸம்பாஷிப்பது மேளச் சங்கீதத்திலும் மதுரமான ஸங்கீத மன்றோ? மஹா தேசிகனுடைய திவ்ய சரித்ரத்தையும், திவ்ய ப்ரபந்தங்களையும் குறித்துப் பண்டிதவர்யர்களின் கூர்மையான புத்தியில் புதிது புதிதாயும் அழகாயும் உண்டாகும் யோசனைகளை விட அமூல்யமான ஆபரணங்களில்லை யன்றோ?

அக்கவிதார்க்கிக கேஸரியைக் குறித்து எழுதப்புக அர்த்தவத்தான அரிய பதங்களைப் பொறுக்கிக் கோத்துத் தொடுக்கப்படும் ஸாரஸ்வத ஸுகந்த மாலைகளைவிட விசேஷித்த பூமாலை இல்லையன்றோ? புகையும் துர்க்கந்தமும் சூழ்ந்த தீவட்டி மத்தாப்புகளைக் காட்டிலும் பதினாயிர மடங்கு விசேஷிதிருப்பது அஜ்ஞாநமான நள்ளிருளைப் போக்கி ஗ஹநமாகவும் குஹ்யமாகவும் உள்ள விஷயங்களைக் கூட ப்ரகாசப்படுத்துவது வேதாந்த ஸூர்யனன்றோ? புதிது புதிதாய் உத்பவிக்கும் உந்மேஷமாம் ஒரு பொறியைக்கொண்டு அமுக்கி அடைத்துவைத்திருக்கும் அர்த்த விசேஷங்களை வெளிப்படுத்தி, ஆகாசத்தில் அனைவரும் கண்டு களிக்குமாறு அழகாய் ப்ரகாசிப்பவையே ஆச்சர்யமான அபூர்வ பாணங்களன்றோ? வெகு தூரத்தில் வஸிப்பவர்களுங்கூட வாசித்து மனமுருகி ஆநந்த பரவசராய் ஏகீபாவத்தையடையும் ரஸிகசிகாமணிகளின் கூட்டமே கூட்டமன்றோ? இப்பரமாசார்யன் புகையிலும் புழுதியிலும் ஊர்வலம் வருவதிலும், உலகவலம் வந்து ஒவ்வொருவர் மனத்திலும் கோயில் கொள்ளும் கோலமே கோலமன்றோ? உபய வேதங்களும் முன்னும் பின்னுமாக அர்த்தோபபத்தியின்றி பாராயணமிருக்க, உபயவேதாந்தாசார்யரால் அவ்வுபயவேதங்களின் அநந்தமான ரஸாஸ்வாத விஷயத்தில் பராயணரா யிருப்பதைவிட, பாராயணம் விசேஷித்த தன்றன்றோ? அம்ருதம் போலாயினும் அளவுக்கு மிஞ்சினால் விஷமாகும். க்ஷணிக ருசியையே கொடுக்கக்கூடிய ப்ரஸாதங்க ளெனப்படும் பதார்த்தங்களைவிட அசைபோடப்போட ருசியதிகரித்து அஜீரணமே யின்றி அநவரதமும் ஆநந்தத்தை யளிக்கக்கூடிய நம் தேசிகனால் ப்ரஸாதிக்கப்பட்ட பதங்களையும் அர்த்தங்களையும்விட வேறு ஸ்வாதுதமமான ப்ரஸாதங்கள் இல்லவே இல்லையென்று ஸத்யமாய்ச் சபதம் செய்யலாமன்றோ?

ஆதலால் நம் 'நிகமாந்த மஹாதேசிகனுடைய மஹோத்ஸவ மலர்' எனப் பெயருடன் வெளிவரும் இம்மலரே ஒரு சிறிய கைங்கர்யமாயினும், மலரே ஒரு மஹோத்ஸவமாகக் கருதப்படலாமென்று கோரப்படுகிறது.

ஸ்ரீ:

ஆசார்ய குணப்ரபா

[ஸ்ரீ. உ. வே. திருக்கோட்டியூர் ஸௌம்யநாராயணாசார்ய ஸ்வாமி]

[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ।

“ [illegible] ”

‘[illegible]’ இத்யாதி [illegible]ணங்களால் [illegible] இவை முதலிய பெருமைகள் ஆசார்யபத நிர்வஹணத்திற்கு அத்யந்தோப யுக்தங்களென அறியப்படுகின்றன. இக் குணங்க ளனைத்தும் இவ்வாசார்யரத்நத்தை ஆஶ்ரயித்து நிறம் பெறுகின்றன. குலப் பெருமை படைத்தோர்க்குக் குணப் பெருமைகள் குறைந்து நிற்கின்றன. இப்பெருமை ஏற்றோர் அப்பெருமை யழிந்து நிற்கிறார். இவை யிரண்டு முடையோர்க்கு ஸம்ப்ரதாய ஶுத்தி நேர்வதில்லை; ஐய மறுக்கும் அறிவும் அதி துர்லபமே. இவர்க்கு ஞானப் பெருமை வாய்க்கும். அது பெற்றவிடம் ப்ரஸித்தி ரஹிதமாயிருக்கும். உபதேசங்களால் விஷயீகரித்து இவர்கள் திருத்தும் நிலங்களும் உவடாய் ஒரு பயனும் பெறுவதில்லை. வேறே சிலர் சிஷ்யர்களாலும் ஆசார்யர்களாலுமே “ [illegible] ” என்கிறபடி நடுவிற் புகுந்து நிறம்பெற வேண்டுவார். ஸங்கேதோத்ஸவாதிகளால் ஸார்வாதிக்யம் தோற்ற இருப்பாரு முண்டு. இப்பெருமைகள் சிலருக் கிருப்பினும், வாத யுத்த ப்ரஸ்தாவங்களில் குறைந்து காட்டும்போது, ஸாதுக்களான ஸத்வ குண ஸார்வபௌம ஸந்நிதியில் நிமிர்ந்து நீங்க

நினைக்கும். இவ்விளப்பங்கள் ஈஷத்துமின்றி, இவ்வுலகினது பாக்யத்தா லீன்ற ரத்நங்களில் கநிஷ்டை விரலைக் கல்லிழைப் பூட்டுவிக்கும் கநிஷ்டதை யில்லாத கமலமாவார் இவ்வாசார்ய மணியும்.

அதில் இவரது ஸந்தாந சுத்தியை ஸர்வதோமுகமாக விஸ்தரிக்கிறது இஸ்லோகத்தில் பூர்வார்த்தம். [illegible]— இவருக்கு ஸம்ஶய விபர்யய ரஹித பஹுதந்த்ர வைதுஷ்யம் இதம் ப்ரதமமன்று. [illegible]. [illegible]—இவரைப் பெறுவதற்கு இவர் ஐயர் செய்த தவமாவது, பல சாஸ்த்ரங்களிற் பாடுபட்டமையால் ஸ்வரூபாநுகுண ப்ரயோஜநாந்தரங்களின் [illegible] தெளிவதால், தயாவித ப்ரயோஜந ஸ்பர்சமற்ற மனம் படைத்தமை தான். இத்தாலிறே திருமலைமால் திருமணி யாழ்வார், "[illegible]" என்னும் கணக்கிலே இவரைத் திருவவதார ஸ்தாநமாகக் கருதியது. இவ்வாசார்யர் திருப்பிறவி தெய்வத்தன்மை பொருந்தியதொரு திருவவதாரமென்பதும் இவ்விடத்து விவக்ஷிதம். இஃது இவரது க்ரந்தாந்தரத்தில் கண்டோக்தம்.

"[illegible]" [illegible]

வண்டை அவதரிப்பதாகப் புராணங்களி லிருப்பதாலும், ஆழ்வார்களும் ஆசார்யர்களுமாகப் பல திருவவதாரம் நடந்துவருங் காலமாகக் காண்கையாலும், இவர் பிதாவின் ஸ்வப்நாதி வ்ருத்தாந்தங்களாலும், இவரது அதிதைவ அதிமாநுஷ திவ்ய சக்திகளாலும், தாயாவித ஸஹஜதேஜஸ்ஸாலும், அவதார ரஹஸ்ய வித்துக்களான ஸத்யவாதிகள் இப்படிச் சொல்வதாலும், இவைகளை யெல்லாம் அப்ரத்யயித மாக்கவல்ல ப்ரபல பாதகங்களொன்றும் தெரியாமையாலும், இவரைத் தேவதாவதாரமென ஸம்பாவிப்பதற்கு ந்யாய முண்டிறே.

[illegible]—'[illegible]'

என்று இவரது பீடு ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் பேசியிருப்பதை யுணர்க. தைவங்கள் கர்ப்பவாஸம் பண்ண நினைப்பிடும் இவர் திருத்தாயார் தோதாரம்மையின் தூய்மையு மிங்கே நினைப்பது. இனி இவரது பிதாமஹாதிகளின் ப்ரபாவம் சொல்லுகிறது.

[illegible]—'[illegible]'

என்றன்றோ இவர் கோத்ர வைலக்ஷண்யம். இத்தால் [illegible] துடங்கி இவ்வாசார்ய ரளவும் இவ்வம்சத்தில் விலக்ஷணாதிகாரி பூயிஷ்டதை தோற்றுகிறது.

[illegible]—[illegible] யிற்று இவரது திருவம்சம். [illegible]— [illegible]. இத்தால் '[illegible]' என்பதில் வ்யாவ்ருத்தி.

இப்படி த்ரிபுருஷமத்யத்தில் வேதி ஸம்பந்தம் சொல்லுவதால், [illegible] பண்ணவேண்டும்படி '[illegible]' என்னும் அநாபிஜாத்ய மிவருக்கில்லை என்கிறது. இவர் ச்ரௌத கர்மங்களை ஸம்பாதியா தொழிந்தது ந்யாயத்தால் த்ரவ்யாதி ஸம்பத்து இக்காலங்களில் கிடைப்ப தரிதானபோது, இவைகளின்றி யிருப்பதும் இக் காலத்துக்கு ஶாஸ்த்ரீயம் தானென்று ப்ரதர்சிப்பித்தபடி. இவ ரவதாராதிகளி லுள்ள தேச காலாதி வைலக்ஷண்யமு மிங்கே அநுஸந்தேயம். '[illegible]' என்கிறபடி பிறவியாலே ராம பக்தியைத் தரும் அத்திருப்பதி மண்கள் ஸம்பந்தமில்லாத கேரளாதிகளில் க்ராமாந்தரங்களி லன்று இவர் பிறந்தது. வளர்ந்ததும் [illegible] குலங்களில் அன்று. வஸித்ததும் அந்நார்த்தியாய் ராஜஸ்தாநங்களி லன்று. வைஷ்ணவஶ்ரீயை விளக்கும் வரத பாதநூளீ பரிஷ்க்ருதமான பரிசுத்த பூமியில் அவதரித்து, வானவர் வானவர் கோனொடு சிந்து பூமகிழும் மண முள்ள மலையில் வளர்ந்து, ப்ரத்யக்ஷ பரமபதமான பெரிய திருக்கோயிலில் பிரியாவடிமை செய்துகொண்டாயிற்றுப் போது

போக்கியது. இனி இவரது அவதார காலம், '[illegible]' என்றபடி பாத்ரபத மாஸ ஶ்ரவணமாகிய திருவேங்கடமுடையான் திவ்யோத்ஸவ அவப்ருத திநம். இதில் அவதரித்தாயிற்று ஶரண்யன் ஸர்வலோகத்தையும் திருமேனியாலே வ்யாபித்து விஷ்ணுவானது. இவரும் தமது யஶ:காயத்தால் மூவுலகையும் வ்யாபித்தருளினர்.

இப்படி இவர் திருமேனியால் அவதரித்த தேஜஸ்ஸைத் தெளிவித்துத் 'திருமந்த்ரத்தில் பிறந்து' என்று பூர்வர்களும், '[illegible]' என்று மஹர்ஷிகளும், 'அன்று நான் பிறந்திலேன் பிறந்த பின் மறந்திலேன்' என்று ஆழ்வார்களும் அருளிச்செய்த ஞானப் பிறவி இவருக்கு வாய்த்தவாற்றை வகுக்கிறது.

[illegible]—இவரது ஜ்ஞாநம் தான் தோன்றியன்று; ஶாஸ்த்ரம் வகுத்த நியமங்களுடன் கூடிய ஶ்ரவணத்தால் வந்தது. [illegible]—இவர் ஸம்ப்ரதாய ஸம்பந்தம் பெற்றது தமக்கு அம்மானன ஆத்ரேய ராமாநுஜாசார்யர் திருவடிகளிலாயிற்று. கிடாம்பிக் குலபதி யப்புளார் தேமலர் சேவடிசேர்ந்து பணிந்து, அவர்தம் மருளால் நாவலரும் தென்வடமொழி பெற்ற நம்பி ப்ரஸித்தாசார்ய ஸம்பந்தத்தையிறே இவர் தமக்குப் பெருமையாக நினைத்திருப்பது. '[illegible]' என்றன்றோ இவர் அருளிச் செய்திருப்பது. இவ்வப்புள்ளாரின் பெருமை ந்யாய குலிசாதி ததீய க்ரந்தங்களாலும் ஸ்வகுண ஸந்தோஷித தாத்காலிக புதஜந தத்தமான வாதிஹம்ஸாம்புதாசார்ய ரென்னும் திருநாமத்தாலும் தெரிந்து கொள்ளலாம். இவரது ஸம்ப்ரதாயமும் யதிவரனார் மடைப்பள்ளி வந்த மணம் மன்னியதாயிருக்கும். தமக்கு இவ்விலக்ஷணாசார்ய லாபத்தையும், அவரது ஸம்ப்ரதாயத்திற்கு அடி தொடங்கி [illegible] தத்வத்தையுமிறே யிவர் தஞ்சமாக நினைத்திருப்பது. "[illegible]" [illegible]

இப்படி ஆசார்யரும் மாதுலருமான அப்புள்ளார் பெருமை இங்கு அநுஸந்திப்பதில் [illegible]மும் ஏற்படுகிறது.

[illegible]—ஒரு மூலையை வாசித்து அதனால் யந்யம்மந்யரை வ்யாவர்த்திக்கிறது. தென்வடமொழி ஸித்தாந்த க்ரந்தங்களையும் பூர்வ பக்ஷ மதாந்தர க்ரந்தங்களையும் ஒன்றொழியாமே வித்வதாசார்ய ஸகாசத்தில் விசதமாகக் கேட்டாயிற்று இவற்றை யறிவது. [illegible] விவக்ஷிதம். இவரது ஜ்ஞாந ஜந்மத்தில் பிதாமஹ யஶஸ்ஸை ப்ரகாசிப்பிக்கிறது.

[illegible]—இவருக்கு அளவில்லாப் பெருமைகளெல்லாம் நடாதூரம்மாள் அநுக்ரஹத்தால் கிடைத்தன. இவர் அக்ஷர க்ரஹணம் பண்ணி வாசித்துவரும் நாளில் அம்மானுடன் அம்மாள் காலக்ஷேப கோஷ்டிக்குச் சென்று, அவ்விடத்து ஆசார்யக சாதுரியை ஆதரத்துடன் கேட்டிருக்கையில், ப்ரஸங்காந்தரத்தாலே அந்தரிதமான ப்ரஸ்துத விசாரப்ரகரணம் ஝டிதி ஸ்பூர்த்திக்கு வராமல் எல்லாரும் ஆலோசிக்க, இவ்விஷயம் ப்ரஸ்துதமாய் நின்றதென்று இவர் அவ்விஷயத்தை ப்ரஸ்தாவிக்க, இவர் பால்யத்துக்கு அஸம்பாவிதமான இவ்வதிமாநுஷ மஹிமாவைக் கண்டு போர வுகந்து,

"[illegible] ।
[illegible] ॥"

என்று அநுக்ரஹிக்க, இந்த அமோகமான மஹாசீர்வாதத்தால் இவர் பல பெருமை படைத்தார். அம்மாளும் அப்புள்ளாரும் விராநுவ்ருத்யாதி உபாதிகளில்லாமல் இப்படி க்ருபாநுக்ரஹம் செய்வதற்கு ப்ரதாந ஹேது இவரது ஝டிதி க்ரஹண ஸாமர்த்யம் [illegible].

[illegible]—[illegible] போல் இவருக்கு [illegible] வைபவங்கள் காட்டப்படுகின்றன. அவைகளாவன: [illegible], [illegible], [illegible] முதலியவை. இவரது கவிதையில் [illegible]

சித்ரகம், யாதவாப்யுதயம், ஹம்ஸ ஸந்தேசம், ஸுபாஷித நீவீ, ஸங்கல்ப ஸூர்யோதயாதி முதலியவைகள் ஸ்ரீபாதுகா ஸஹஸ்ராதிகளில் அநஸூய ஹ்ருதயங்களால் அநுபவிக்கவேண்டுவன சொல்ல நிலமல்ல.

"இக்ஷுக்ஷீர குடாதீநாம் மாதுர்யஸ்யாந்தரம் மஹத் ।
ததாபி ந தத் ஆக்யாதும் ஸரஸ்வத்யாபி சக்யதே ॥"

தேனின் இனிமையின் பெருமை பித்தாநுபஹதமான நாவிலிட்டுத் தெளிவதொழிய, இவ்வாறென்று வாயாற் சொல்லுவதற்கு வராது. சாஸ்திரங்களைக் கவிதையில் இசைத்து ப்ரவர்த்தித்திருக்கிற காரிகாவளீ, வையாகரண பூஷணம், ஜைமினீய ந்யாயமாலா, அதிகரணஸாராவளீ, அநந்தவ்யாக்யாநம் முதலியவைகளையும், இவரது அநாவச்யக ப்ரகார தாத்பர்ய ஸூக்ஷ்மார்த்த ஸம்ப்ரதாய ஸ்ரீஸூக்திகளையும் சாஸ்த்ரஜ்ஞர் பார்த்து வாசி வகுத்து ஸந்தோஷிக்கவேணும். 'வேதாந்தாசார்ய ஸூக்தீநாம் ஸர்வஸ்வம் தீப்யதி ஸதாம் ஹ்ருதி' என்கிறபடி மூர்க்கில்லாத மூக்குக் காதில் முளைத்து அநுபவித்தார்கள் முன்னோர்கள். ரஸாலங்கார ராமணீயகம், ஸந்தேசத்வயம், அப்யுதயத்வயம், உதயத்வயங்களை ஸஹ்ருதயர் தங்கள் ஸர்வதோமுகமான ப்ரஜ்ஞா சாணத்தி லுறைத்து ஊன்றிப் பார்த்து உகந்து இன்னமும் ஆஸ்வாதித்து வருகிறார்கள். "க்ஷதிர் நயிமதஃ கவிதார்கிக ஸிம்ஹ நாநாவிக்ஷாஸு". இவைகளில் சித்ரகம் சித்ரஜந மென்னுமிடம், சித்தத்தைச் சிறிய காலத்திலாவது சிதறவிடாமல் சித்ரபத்ததி ப்ரப்ருதியில் ஊன்றிச் செவ்வனே தெரிந்துகொள்வது. ஆசுபாவத்தை ஆக்ஷேபித்தார் அடியிலேயே யுள்ளோராயினும் ஸமஸ்யா ஸஹஸ்ரத்தை ஸாக்ஷாத்கரித்து சாந்தரானார்கள். 'அகணி ஜகதி ஸத்ய...' இவர் வாக்குக ளனைத்தும் வகுத்த விஷயத்தைப் பற்றி வீறு பெற்று வீண்வார்த்தையின்றி யிருப்பதும் பக்தர்களது பாக்யமே.

இனி இவரது தர்க்க கர்க்கச விசார சாதுர்யம் தத்வமுக்தா கலாப தத்வ்யாக்யாந சததூஷண்யாதிகளில் தத்பராரானுரைத் தாண்டவித ஹ்ருதய ராக்கும். இவரது வாதஸதஸ்ஸுக்களில் சிங்க மொத்த சீர்மை 'யதீச்வர ஸரஸ்வதீ' என்கிற ச்லோகத்தில் லக்ஷ்யதாம். இந்த தைர்யம் இவருக்கு ப்ராப்த காலங்களில் இகழ்வைக் கொடாது; அழகையே அளிக்கும்.

"ச்ருதிஸித்தாந்த ஸம்ரக்ஷ்ய தத்ப்ராஞ்ஜலிர்யதஃ ।
வந்தே வாதி ஸிம்ஹஸ்ய க்ருதிநஃ கிந சோபதே ॥"

ஸத்யமான ஸித்தாந்தத்தை ஸ்தாபிப்பதற்காகப் பொய்யரைப் போக்கும் பொழுது, திறமையுடையவன் தீவிழித்துக் கிளம்புவது திருப்பெருத்த திறே. அவ்வோ தந்த்ரத்தோர் தங்கள் தந்த்ரங்களில் தங்களுக்குத் தோற்றும் ஸம்சயங்களை இவரிடம் வந்து தெளிவார்க ளென்னுமிடம் 'ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ர பஞ்சாநந விசாரத உக்திஃ' என்கிற ஸ்வவாக்யத்தாலே தெளியலாம்.

இவருக்கு ந்யாயவைசேஷிக ஜ்யோதிஷ அலங்கார வ்யாகரணாதிகளில் சாஸ்த்ரஜ்ஞதா... சாஸ்த்ரார்த்த... ஸ்வதந்த்ரமான ஸாமர்த்யம் ... ந்யாயபரிசுத்தி ... ஸேச்வர மீமாம்ஸா ... நிக்ஷேப ஸ்ரீபாஞ்சராத்ர ரக்ஷா ... நிக்ஷேபரக்ஷாதி நிபந்தநங்களாலும், தத்ர தத்ர தத்தத் அநுவாதங்களாலும், தந்தாத்ருச கூப நிர்மாண மாந்த்ரிக விஜயாதி சரித்ரங்களாலும் ஸுப்ரஸித்தம். இவரை நம்பெருமாள் நம் வேதாந்தாசார்யரென்று அருளிப்பாடிட்டருளினர். ['ஸ்ரீரங்கராஜ திவ்யாஜ்ஞாலப்த வேதாந்தாசார்ய பதஃ'] இவர் ஸ்ரீபாஷ்யத்தைப் பலதடவை ப்ரவசநம் செய்தருளினர். 'பூர்வம் நவிபாஷாவிம்சதி த்ரிம்சதாரம் ச்ராவித சாரீரகபாஷ்யஃ' என்று அவ்வோஸமயங்களில் இவர் அருளிச்செயல். இவர் தமக்கு 'சாரீரகார்த்த ... ஆஜ்ஞை.' ... என்று எம்பெருமானார் ஆஜ்ஞை. 'நிக்ஷேபம் யதிஸார்வ ... ' 'யதிஸார்வபௌம ... ' என்று இவரும் அவ்வாணையின்படி அழகாகக் காலம் போக்கினர். ஸ்ரீபாஷ்யத்தில் அந்வயமின்றிப் பாஷ்யகார ஸித்தாந்தாசார்யத்வம் வந்தால் மாம்பழ உண்ணி ந்யாயமாய் விடுமென்று இவர் அஞ்சி, 'ஸதைத்ரி... ச்வேத... ' என்று ஸ்ரீபாஷ்ய ப்ரவசந மூல காலயாபநமாய்ச் சென்று தமக்கு அஸாதாரணமாக ... வ்யாக்யாதாவான நம்பெருமாளாலே வேதாந்தாசார்ய ஸம்ஜ்ஞை வ்யாக்ருதை யானதின் திருவுள்ளத்தை ஆராய்ந்த விடத்தில், நிகமாந்த பாஷ்யஸூக்தி கங்கைக்கு அஸாதாரணமான தம்

முடைய கவநசாஸ்த்ர ஜ்ஞாந ஸாமார்த்யாநுகுணமான திருப்பணி செய்யத் திருவுள்ளமெனத் தெளிந்து, ஐந்நூறுக்கு அதிகமான ஶ்லோக ரத்நங்க ளமைந்த ஸாராவளி என்னும் ஹாராவளி யமைத்து அணிவித்து, அந்த அருளிப்பாட்டை அந்வர்த்தமாக்கி ஆநந்தித்தார். [illegible] நாமைவமாகவிறே [illegible] அதிஶயாதாநம் செய்யவேண்டுவது. இவருக்கு யதிராஜ ஸூக்தி பக்தி யிருக்கும் ப்ரக்ரியையை யதிராஜஸப்ததி [illegible] ப்ரகாசிப்பிக்கிறது.

இவருக்கு ஸம்ஸ்க்ருத வேதாந்தத்திற் போலவே அதிலும் அதிகமாகவோ த்ராமிட வேதாந்தங்களிலும் ஜ்ஞாந பக்திகள் ஜ்வலித்து வருவதை, இவைகளைத் தெளிய வோதித் தெளியாத மறை நிலங்களை இவர் தெளிந்து கொள்வதாலும், தொகை நாலாயிரமும் தமக்கு வாழ்வாகக் கருதுகையாலும், சந்தமிகு தமிழ் மறையோ னென்று தம்மை த்ராமிட சாகாத்யாயியாக நிரூபிக்கையாலே, ஸம்ஸ்க்ருத வேதாந்தத்தை நிரூபித ஸ்வரூப விசேஷணீபூத பூஷணங்களாக ஸூசிப்பிக்கையாலும், பரம பதத்திலும் விண்ணவர் தம் குழாங்களுடன் வேதம்பாடி 'ஸாமகாயந்நாஸ்தே' என்னும் சடங்கைத் தலைக்கட்டிப் பின் பல்லாண்டுகளிலும் பண்ணுலகிற் படியாத விசையால் பாடும் பல்லாண்டையே பாடுவதாகப் பரிகர பந்தம் பண்ணுகையாலும் '[illegible]' என்ற திருமறையையும் எப்போது மொக்க ப்ரவசநம் பண்ணிப் போருகையாலும், 'செஞ்சொல் தமிழ்மறைகள் தெளிந்துரைப்போன்' என்று இவரைப் பின்னுள்ளோர் வாழ்த்துகையாலும் தெளிந்துகொள்ளலாம். இப்பெருமை யெல்லாம் நினைத்து 'உதாரதீ:' என்கிறது.

[illegible] தத்வமுக்தாகலாபம் வ்யாதநீத என்று அந்வயம். [illegible] அல்ப அறிவு அடைந்தார் அடைவு கெட ஆடும்படிகளை யறிவோம். நிறைகுடமாகையால் நிஸ்தரங்கமாக நிற்கிறது. இவரது குருபக்தியும் க்ருதஜ்ஞதையும் விநயமும் வீதாஹங்காரத்வமும் இவ்விடத்தே தோற்றுகின்றன. '[illegible]'

'வெள்ளைப் பரிமுகர் தேசிகராய் விரகா லடியோ முள்ளத் தெழுதிய தோலையிலிட்டனம் யாமிதற்கென்' இத்யாதிகளும் இங்கே அநுஸந்தேயம். விசேஷித்து அப்புள்ளாரை அநுஸந்தித்த ப்ரக்ரியை ஸார ஸாரஸ்த்ரத்தின் சரம பாகத்தில், "இப்படி ரஹஸ்ய த்ரயத்தைப் பற்றின கீழும் மேலுமுள்ள பாசுரங்களெல்லாம் வேதாந்தோதயந ஸம்ப்ரதாயமான மடைப்பள்ளி வார்த்தையை ஆசார்யன் பக்கலிலே தான் கேட்டருளினபடியே கிடாம்பி யப்புள்ளார் அடியேனைக் கிளியைப் பழக்குவிக்குமாப்போலே பழக்குவிக்க, அவர் திருவுள்ளத்தி லிரக்க மடியாகப் பெருமாள் தெளிய ப்ரகாசிப்பித்து மறவாமற் பண்ணிச் சேர்த்துப் பிழையறப் பேசுவித்த பாசுரங்கள்" என்கிற வாக்யத்தில் காணலாம். தம் ஸம்ப்ரதாயத்தை எம்பெருமானார் மடைப்பள்ளி வார்த்தையாகப் புகழ்வதால் நம்மவர்கள் தமக்கு ஸர்வஸ்வமாகப் பாவித்து வரும் எம்பெருமானார் திருவடிகளில் இவரது ப்ராவண்யமும் ப்ரகாசிக்கிறது. "[illegible]" முன்னும் பின்னு மிருக்கும் ஆசார்யர்களுக்கும் யதிராஜனால் பணிப்பெற்றவர்க ளென்றும், யதிராஜனைப் பணியுமவர்க ளென்றும், இது ஹேதுவாகப் பெருமை விளங்குகிறது. அவர்கள் எல்லோரும் எம்பெருமானார் ஸம்பந்தத்தாலேயே பாக்யவான்கள் என்றும், "[illegible]" ஸ்ரீபாஷ்யகாரர் திருவடிகள் முக்ய கல்பம். ஆச்ரயணத்திற்கும் அநுபவத்திற்கும் ஸர்வேச்வரன் சரணாரவிந்தம் அநுகல்பம்' என்றும் இவை முதலிய பாசுரங்களை இங்கே நினைப்பது. அவர் திருவுள்ளத்தி லிரக்கமடியாக என்று [illegible] நாதிகளெல்லாம் ஆசார்ய க்ருபா மூலமாக அருளிச்செய்கையால், இவரது க்ருதஜ்ஞதை எவ்வளவில் நிற்கிறது என்பதைத் தாங்களே ஆராய்வது. '[illegible]' '[illegible]' என்றிருக்கிறது. இவருக்கு ஸ்ரீ வைஷ்ணவ விஷயத்தில் விநயமும். நிரஹங்காரத்வமும், '[illegible]' என்னும் பத்யம் அவதரித்த சரித்ரத்தாலே அறிவது.

[illegible] தத்வமுக்தாகலாபம் வ்யாதநீத — தாம் ஜ்ஞாந வைராக்யங்களைப் பூஷணமாக அணிந்ததற்குத் தம தர்ம தாரங்களுக்கு ரஹஸ்ய ரத்நாவளி செய்து கொடுத்ததற்கு ஏற்பத் தம் திருவடிகளை யடைந்தோர்க்கு முக்தாகலாப மியற்றி யருளினார். நிர்மலமான உண்மைப் பொருள்களை இதிற் கோத்திருப்பதாகச் சொல்லுவதால் இவரது ஸத்யவாதித்வம் ஸூசிதம். [illegible], ஸத்யவாதீ. இவரது நூற்றுக் கணக்கான அருளிச்செயல்க ளெல்லாம் இத் தத்வ முக்தா கலாபம் போலே நிர்மல தத்வ கர்ப்

பங்களாயுள்ளன. அவைகளில் சுதிவிஸ்த்ருதாவஸ்யகார்த்த ஸங்க்ஷேபஸாமர்த்த்யமும், ஸங்க்ஷிப்தார்த்தவிஸ்தாரவைதுஷ்யமும், ஸாரஸாரவிவேகாதி வைந்யாஸ சௌரியும், சுவஹிதபராஸ்த்ரஜ்ஞாஸ்ஸரதர்க்கஸ்வீகாரவைபவமும், ஸுகாந்தஸௌஷ்டவத்திலும் ப்ராணஸந்தாநாய ஸ்வாதந்த்ர்யமும், வாசிகமநோவசீகரணசைவாவ்யாக்யாநவைசித்ர்யும், வத்ய பரிவாதிகளும், மத்யமநிகைகளும், ஸம்ஸ்க்ருத ப்ராக்ருதத்ராவிட ஸர்வ நாநாவிதஸார்வாதிகளுக்கேற்ப அவ்வோ பாஷையாலே உபகாரங்களும், ஸாநுஷவைரவதைஸாந்யாவதைஸாதிகளும், இன்னமும் அடியேன் நாவுக்கடங்காத ஆச்சர்யங்களும் ஆவிர்ப்பவித்துள்ளன. "வாண்வஸ்ய ஸாஹஸ்ராய ஸ்காலே தாமரஸ்விநீ। ஸாகீஸ் ப்ரஹ்ம ஸ்ரீ மதேந கவிதஃ வாரா। ஸ்ரீசுவாசாஸநிதிவைராக்யம் கேஸவேநாவி யேதா। உவயைஜ்ஞேநம் க்ருக்வாவிஸ்தாரஃ கவிதஃ வாரா। ஸ்ரீஜகத்வபூர் வாஸ்வ வ்யஷ்ணீநாஜ்ஞ நம் ப்ரதி। வளராஷே ஜொவகிரம் க்ருக்வா ப்ராவதஜ்ஞ யநாஷ்தாழ்। சுநெந்யாந்யக்ஷஹெ வாவி விவாதெ வாவி வ்யஷ்ணயஃ, சுஜ்ஞநாவிநயேதாஷ்யஃ காதஸ்ஷிதிவாப்ராவது। ஜாதாம்ஸ்வாஸ்தாது ஸ்ருஹ்ணஜ க்ரூஸிஷெ வ்ருஷ்ணியொப்ராவது। சுஜ்ஞநஸ்யஸயோவீயேஹ்வ தாதயநாயஃ। தஸ்ய ஸஹஸ்ரா வகெ வளராஷாதீராஷஷேஹழ்।"

என்கிற ப்ரக்ரியையாலே சிலர் இவ்வாசார்யருக்கு வைபவ ப்ரகாசிகைகளெழுதியும், சிலர் தங்கள் அபிமதத்துக்கு இவரருளிச் செயலை மேற்கோளாக்கியும், சிலர் கோபாஸமயாதிகளால் புலம்பும் புஸ்தகங்களில் பரவசமாக இவரது பௌருஷங்களைப் பேசியும், சிலர் தங்களுக்குப் பெருமை படைக்க நினைப்போர் இவரைப் போல க்ரந்த வ்யவஹார சைலிகளை நடத்துவதாகக் கருதி அநுகரித்தும், 'தூப்புலம்மானையும் தூரத்தி விடுவேன் மற்றெனக்கார் நிகர்?' என்று வாசகங்களிலும் இவரைப் போல இருக்கத் தங்களுடையாரை ஆசாஸிக்கும் முகத்தாலும், மற்றும் பல முகங்களாலும், இவர் பெருமையைப் பேசி, இவர் திறத்து நமக்குப் பரமபக்தியை விளைவிக்கிறார்கள். பரமதஸ்தர்கள் ப்ரத்யவஸ்தாநம் பண்ணும்பொழுது பாங்காகக் காப்பதற்கு இவரது பாசுரங்கள் பரிவாலங்க்ருத ப்ராகாரங்களாயிருக்கின்றன. ஆனமை பற்றிப் பரம புருஷார்த்தாபேக்ஷிகள் அனைவரும் இவ்வாசார்யர் பதபங்கஜங்களில் பரமபக்தியுக்தராய்ப் பக்திக்குரிய பணிவிடைகளில் அந்வயிக்கவேண்டுவது பான்மையென்பது பரமார்த்தம்.

இத்யாசார்யஸ்ய காருண்யேந தாஸ்ரேணவ்ருதாஃ।
வர்த்ததேஹதி ஹ்ருதயம் ஹஸ்திஹாவேந ஹஸ்ரேதாஃ॥

ஸ்ரீ:

ஸ்ரீதேசிகன் அவதார வைபவம்

[ஸ்ரீ. உப. சேட்லூர் துரைஸ்வாமி ஐயங்கார், B. A., B. L.,
அட்வொகேட், சித்தூர்]

திருவேங்கடமுடையான் தன்னுடைய திருமணி ஆழ்வானைத் தூப்புல் பிள்ளையாய் அவதரிப்பித்தது எல்லோரும் அறிந்த விஷயமே.

'வேங்கடேசாவதாரோऽயம் தத்கண்டாம்சோऽதவா பவேத்'

"ஸாத்வதாம் ஸஹமத வித்ஷ்ணவிஷ்யக்ஷே
வேங்கடேஹீ ஸ்ரவணீ தீர்த்தே நிநதேதே"

என்றும் சொல்லுகிறபடியே இவர் அவதரித்தார். இந்தக் கலியுகத்தில் க்ஷேத்ரங்கள் பலம் அடைந்து, ஸ்வதர்ம ஜ்ஞாந வைராக்யங்களுக்கு ஹாநி உண்டாயிற்று.

"காகிந்யூவி ஸாவாஸு சுஸாராவ ஹராக்ஷஸாஃ। மத்ஸம்தி வம்டாவொஷெண" என்றபடியே ஸாசப்த வ்யாப்தியால் க்ஷேத்ரங்களின் பல விலகிப் போகும். ஆகையால் திருவேங்கடமுடையான் தம் ஸம்ப்ரதாயம் விளங்கும் பொருட்டு ஜ்ஞாந வைராக்யங்களுக்கு நிதியான தூப்புல் பிள்ளையாக த்தன்னுடைய வண்டையை அவதரிப்பித்தான்.

அத்யாபி, திருவேங்கடமுடையான் நிகமாந்த மஹாதேசிகனிடம் உள்ள புத்ரவாத்ஸல்யத்தையும் பெருமையையும் தெரிவிக்கும் பொருட்டு ப்ரஹ்மோத்ஸவத்தில் த்வஜாரோஹண உத்ஸவ ப்ராரம்பத்தில் வஜ்ரகவசம் சாத்திக்கொண்டு விசாலமான முகமண்டலத்துடன் மிகவும் ஸங்குசிதமான விடத்தில் (அதாவது: திருமணி பக்கத்தில்) எழுந்தருளிக் கங்கணதாரணம், ஸங்கல்பாதிகள் இவைகளெல்லாம் நடத்திக்கொள்ளுகிறார். இது ஸ்ரீதேசிகன் பெருமைக்கு ஒரு அஸாதாரணமான விசேஷம்.

ஸ்ரீ:

விவேசந ஸௌக்ஷ்ம்யம்

[ஸ்ரீ. உப. திருவரங்கம் திருமலை தாதாசார்யர், சிரோமணி, M. O. L.,
ஸம்ஸ்க்ருத காலெஜ் ப்ரின்ஸிபால், திருப்பதி.]

(1)

ஸ்ரீ ஆளவந்தார் அருளிச்செய்த ஸ்ரீமத் கீதார்த்த ஸங்க்ரஹத்தில், கீதா சாஸ்த்ரத்தின் பொதுவான அர்த்தத்தைச் சொல்லவந்தது முதல் ஸ்லோகம்; ஒவ்வொரு ஷட்கத்தின் அர்த்தத்தைச் சொல்லவந்தன மேல் மூன்று ஸ்லோகங்கள்; தனித்தனியே பதினெட்டு அத்யாயங்களின் அர்த்தங்களைச் சொல்லவந்தன அதற்குமேல் பதினெட்டு ஸ்லோகங்கள்; ப்ரதாநமான சில பதார்த்தங்களையும் பலங்களையும் சுருக்கமாகவே விளக்கிக் காட்ட வந்தன அதற்கு மேலுள்ள பத்து ஸ்லோகங்கள் என்று நான்கு விதமாக ப்ரகரண விபாகம் செய்யலாம். அதில் மூன்றாவது ப்ரகரணத்திலுள்ள அத்யாயார்த்த ஸ்லோகங்களில் முதலாவது

“அஸ்தாந ஸ்நேஹ காருண்ய தர்மாதர்ம தியாகுலம் ।
பார்த்தம் ப்ரபந்நமுத்திஶ்ய ஶாஸ்த்ராவதரணம் க்ருதம் ॥”

என்பது. பதினெட்டு அத்யாயங்களுக்குப் பதினெட்டு ஸ்லோகங்கள் என்கிற முறையில் இந்த முதல் ஸ்லோகம் முதல் அத்யாயத்தின் அர்த்தத்தை ஸங்க்ரஹிக்க வந்ததெனவேண்டு மாகையால், இந்த ஸங்க்ரஹ ஸ்லோகங்களைத் தமது பாஷ்யத்தில் உதாஹரிக்கும் நம் பகவத்ராமாநுஜன், இம்முதல் ஸ்லோகத்தை முதல் அத்யாய பாஷ்யத்தில் உதாஹரித்திருக்க வேண்டும். ஆனல் அப்படிச் செய்யாது இரண்டாவது அத்யாயத்தில் பத்து ஸ்லோகங்களுக்குப் பாஷ்யம் செய்தருளி, பிறகு ‘ததுக்தம்—அஸ்தாந...’ என்று உதாஹரித்திருக்கிறார். இங்கு ஸ்ரீஆளவந்தார் திருவுள்ளம் இருக்கும்படியையும், அதை நம் பாஷ்யகாரர் செவ்வனே க்ரஹித்தும் ஸ்பஷ்டமாய் ஸாதிக்காமல், ஸ்தாந விசேஷத்தில் பாடமாத்ரத்தாலே ஸூசநம் பண்ணியிருக்கிறபடியையும், அஸ்மத் தேசிகன் தெளிவாக எடுத்து ப்ரதிபாதிக்காவிட்டால் மிகச் சிலரே அதையறிய சக்தராவார்கள்.

முதல் அத்யாயம் மாத்ரமன்று சாஸ்த்ராவதரணம். பின் இரண்டாவது அத்யாயத்தின் முதல் பத்து ஸ்லோகமும் சேர்ந்தது என்று ஸ்ரீஆளவந்தார் திருவுள்ளம். ஆகையாலேயே மேல் ஸ்லோகங்களில் த்விதீய த்ரிதீய என்றிப்படித் தவறாமல் அந்தந்த அத்யாய எண்ணிக்கையைக் குறிப்பிட்

-துபோல், இந்த ஸ்லோகத்தில் ப்ரதம என்று குறிப்பிடவில்லை. இந்த ஸூக்ஷ்மத்தை யறிந்த பாஷ்யகாரர் இந்த ஸ்லோகத்தை இரண்டாவது அத்யாய நடுவில் படித்தார் என்றும், இதற்குமேல் வரும் சங்கைகளுக்குப் பரிஹாரம் இன்னதென்றும் தாத்பர்ய சந்த்ரிகையில் காணலாம்.

(2)

* “மந்த: கவியஶ:ப்ரார்த்தீ கமிஷ்யாம்யுபஹாஸ்யதாம் ।
ப்ராம்ஶுலப்யே பலே லோபாதுத்பாஹுரிவ வாமந: ॥”

என்றான் மஹா கவி. இங்கு உபமேயத்திற்குத் தகுந்த உபமானமில்லை என்று நம் தேசிகன் திருவுள்ளம் தோன்றுகிறது. வாமநன் தனக்கு எட்டாத தூரத்திலுள்ள பழத்தையும், போதுமான உயரமுள்ள ஒரு ஸஜ்ஜநனை ப்ரார்த்தித்து, அந்தப் பழத்தின் ரஸத்தைக் குறைவின்றி அநுபவிக்கலாம். மந்தன் மற்றொரு கவியை ப்ரார்த்தித்து, அவன் செய்த காவ்யத்தைக்கொண்டு கீர்த்திபெற முடியாது. அதற்கு நேர் விரோதமாக அகீர்த்தியே மிக வுண்டாம்.

“உத்பாஹுஹாவவேஹாய பமெயெவ வவ: ।
ப்ராம்ஶும் பலாய ஹஸியா வதி யொமிவிம்த்ய ॥”

என்கிற சரணாகதி தீபிகா ஸ்ரீஸூக்தியால் இது ஸ்பஷ்டமாகிறது.

(3)

“பிம்போஷ்டம் பஹு மநுதே துரகம் வத்ஸேதி ...
ஶ்ராந்தம் ஸ்வதி ஹரிணம் ப்ரியாயா: ।
ஸ்ப்ருஷ்யந்தம் ஸ்வஹஸ்த ஸரோஜ தம் நிஜஸ்ரீ
ஸ்தந்தம் ஸ்தந ஸம்ஹீர ஸயந்யாம் ॥”

என்பது மகா கவியின் வாக்கு. வ்யங்க்ய ப்ரதாந காவ்யம் உத்தமோத்தமம் என்பது ஆலங்காரிக ஸித்தாந்தம். அதிலும் உத்தமமானது வ்யங்க்யம் ரஸம். இதை மாவன் இவ்வளவு பச்சையாய்ச் சொல்லியிருக்கக் கூடாதென்று ஸ்வாமி கவிதார்க்கிக ஸிம்ஹனின் திருவுள்ளம். ஆகவே ஸ்ரீயாதவாப்யுதயத்தில்

‘பாம்ஸூஹம் வாஜிஸ்வாம் மநாநாம்
வக்த்ரம் வயஸ்ஜஹிஹ கிஹரீணாம் ।
ஸ்தநதஸ்யதிம் விதயெ விபிஶ்ச
த்ருக்ஷ: ஸ்வயம் வதபரவஸ்ய ஜெதா ॥”

என்று விதக்த கோஷ்டீ ரஞ்ஜகமான ரீதியில் ஸாதித்தது.

* இங்கு சனி சுக்ர யசஸ்ஸுக்கு ஆசைப்பட்டால் அபஹாஸ்யதையே என்பர் சில ரஸிகர்கள்.

ஸ்ரீ:

அடியவர்க்கு மெய்யனும் தேசிகனும்

[மஹாமஹோபாத்யாய, சேட்லூர். ஸ்ரீ. உ.வே. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி,
திருவஹீந்திரபுரம்.]

அடியவர் மெய்யர் மலர்ப்பதங்களே சரணம்.
மறைமுடித்தேசிகன் மலரடி போற்றுவோம்.

‘**अखिलश्रुतिहितं रामानुजीयं मतम्**’ என்கிறபடியே எல்லா ப்ரமாணங்களுக்கும் யுக்திகளுக்கும் லோகாநுபவத்துக்கும் ஒத்தது இந்த விசிஷ்டாத்வைத மதம் என்று சொல்லப்படுகிற பகவத்ராமாநுஜனுடைய ஸித்தாந்தம். இதில் ப்ரதிபாதிக்கப்படுகிற முக்யமான அர்த்தம்,

> ‘**त्रय्यन्तैरेक कण्ठैस्तदनुगुणमनुव्यासमुख्योक्तिभिश्च**
> **श्रीमान्नारायणो नः पतिरखिलतनुर्मुक्तिदो मुक्तभोग्यः**’।
> ‘**स्वप्राप्तेः साधनं च स्वयमिति हि परंब्रह्म तत्रापि चिन्त्यम्**’।
> ‘**देवः श्रीमान्स्वसिद्धेः करणमिति वदन्नेकमर्थं सहस्रैः**’॥

‘இப்படி ஸ்ரீமானான நாராயணன் திருவடிகளே உபாயதசையிலும் உபேயதசையிலும் உபஜீவ்யங்கள்’ என்று நம் நிகமாந்த தேசிகன் நிஷ்கர்ஷித்தருளினபடியே, எம்பெருமானை யடைவதற்கு அவனே உபாயம் என்பதே. இந்த உபாயத்வம் உபேயத்வம் இரண்டும் திவ்யமங்கள விக்ரஹத்தோடு கூடிய எம்பெருமானுக்கே என்பதை, ‘**द्वयं तत् स्वासाधारणतनुविशिष्टस्य गणयन् तृतीये विश्वेशं शुभसुभगरूपं कथयति**’ என்று த்ரமிடோபநிஷத் ஸாரத்தில் நம் தேசிகன் அருளிச்செய்தார். அதாவது: திருவாய்மொழி முதற்பத்தில், உபாயத்வோபயுக்தமான ஸேவ்யத்வத்தை அருளிச்செய்தார். இரண்டாம் பத்தில் ப்ராப்யத்வோபயுக்தமான போக்யத்வத்தை யருளிச்செய்தார். இந்த உபாயத்வ ப்ராப்யத்வங்கள் இரண்டும் அப்ராக்ருத ஸ்வாஸாதாரண திவ்யமங்கள விக்ரஹத்தை யுடையவனுக்கே ஸம்பவிக்கும் என்று நினைத்து, அந்த திவ்ய மங்கள விக்ரஹத்தை யுடையவன் என்பதை மூன்றாவது பத்தில் நிரூபித்தருளுகிறார் என்பது. இவ்விடத்தில் ஒரு விஷயம் யோசிக்கத்தக்கது. த்வயமந்த்ரத்தில் ‘**इदं अष्टपदं व्यासे**’ என்கிறபடி,

‘**श्रीमन्**’ என்று பதம்பிரித்துச் சொல்லும் பக்ஷத்தில், மூன்றாவது பதமாகிற ‘**चरण**’ சப்தத்திலும், ஸ்ரீமத்பாஷ்யத்தில் மூன்றாவது அதிகரணமாகிய அந்தராதிகரணத்திலும், ஸ்ரீமத்ராமாயணத்தில் மூன்றாவது காண்டமாகிய ஆரண்ய காண்டத்திலும், திருவாய்மொழி மூன்றாவது பத்திலும் இந்த திவ்யமங்கள விக்ரஹம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இவைகளை யடியொற்றித் திருவாய்மொழியில் மூன்றாவது பத்தில், “முடிச்சோதியாய்” என்று உபக்ரமித்துப் “பரஞ்சோதி” என்றும், ‘எழில் கொள்சோதி’ என்றும், ‘ஆதியஞ்சோதி யுருவை’யென்றும், ‘சுடரொளி மூர்த்தி’யென்றும் பலவிடங்களில் நிரூபித்த அர்த்தத்தை, வையமெல்லாம் மறைவிளங்க வாள்வேலேந்தும் மங்கையர்கோன், அறிவுதரும் பெரிய திருமொழி மூன்றாவது பத்தில் அடியவர்க்கு மெய்யன் விஷயமான முதற்றிருமொழியில் “தண் டிருவயிந்திரபுரத்து மேவுசோதியை” என்று உபஸம்ஹரித்ததைத் திருவுள்ளம் பற்றி நம்தேசிகன் தாத்பர்ய ரத்நாவளியில் மூன்றாவது பத்தின் அர்த்தங்களை ஸங்க்ரஹிக்குமிடத்தில், “**एवं सौन्दर्यभूम्ना तनुविहितजगत्क्राय-सौभाग्ययोगात् स्वेच्छासेव्याकृतित्वात् निखिलतनुतयोन्मादादानार्हकान्त्या । लभ्यार्चा वैभवत्वात् गुणरसिकगुणोत्कर्षणादक्षकृष्ट्या स्तुत्यत्वात् पापभङ्गात् शुभसुभगतनुं प्राह नाथं तृतीये**” ‘இவ்விடத்தில்’ என்றருளிச்செய்தார். நாதனென்கிறது அடியவர்க்கு மெய்யனாகிற தேவநாதனையே குறிக்கிறது. எப்படியெனில்: ஸ்ரீ தேவநாயக பஞ்சாசத்தில் “**नाथ त्वया नतजनस्य भवौषधेन**” “**नाथ त्वयापि शिरसा विधृतः किरीटः**” “**नाथ त्वदीयपदयोर्नखरत्नपङ्क्तीः**” இத்யாதிகளில் கேவலம் நாத சப்தத்தை ப்ரயோகித்திருக்கிறபடியாலும், அவரையே தமக்கு அநுரூப பர்த்தாவாகத் திருவுள்ளம்பற்றி ‘**ओज्ज्वोत्तजौग्वणवहंवरथो**’ என்றும், மும்மணிக் கோவையில் விஸ்தாரமாக அருளிச்செய்திருக்கிறபடியாலும், நாதசப்தம் அடியவர்க்கு மெய்யனையே குறிக்கிறது. இவ்விடத்தில் “**प्रथमशतके वीक्ष्य वरदं**” என்று தேசிகன் அருளிச்செய்திருப்பதனால், உபாயத்வோபேயத்வங்கள் அடியவர்க்கு மெய்யனுக்கு ப்ரதிபாதிக்கப்படுகிறதென்பது அஸங்கத மன்றோ என்று சங்கிப்பார்கள். அது உசிதமல்ல. ஏனெனில் வேதார்த்த ஸங்க்ரஹ ச்ருதப்ரகாசிகையில் ‘**वरदं वरेण्यं**’ என்கிற பதங்களுக்கு, வரத சப்தம் உபாயத்வ பரமென்றும், வரேண்ய சப்தம் உபேயத்வ பரமென்றும் வ்யாக்யாநம் செய்யப்பட்டிருக்கிறது. அவ்விதமாகவே இங்கும் வரத சப்தத்துக்கு அப்படியே அர்த்தம் சொல்வது முன் பின் ஸந்தர்ப்பங்களை யநுஸரித்திருக்கிறது. த்ரமிடோபநிஷத்

ஸாரத்தில் இதற்கு முன் பின் சுலோகங்களில் 'आद्ये पश्यन्नुपायं प्रमुमिह-परमप्राप्यभूतं द्वितीये' என்றும், 'उपायत्वैकान्तं प्रथममिह सेव्यत्वमुदितं' என்றும், 'उपायत्वं यत्प्रथमशतकेऽभाव्यत विभोः' என்றும் அருளிச்செய்திருப்பதனாலும், வரத சப்தம் உபாயம் என்னும் அர்த்தத்தைச் சொல்லுமாகையினாலும், இதுவே ப்ரகரணத்துக்கு ஒத்த அர்த்தமாகும். இந்த மூன்றுவது பத்தின் திருவாய் மொழிகளில் அடைவே ஆழ்வார் நிரூபித்தருளின பத்தர்த்தங்களை நம்தேசிகன் அடியவர்க்கு மெய்யன் திவ்ய மங்கள விக்ரஹத்தில் நிரூபித்து நிகமித்தருளினார். எங்ஙனேயெனில்—முதற்றிருமொழியில், எம்பெருமான் வாசாமகோசரமான ஸௌந்தர்யத்தையுடையவனென்று அருளிச் செய்தார். அவ்வர்த்தத்தை நம் தேசிகன் "प्रत्यङ्गपूर्णसुषमासुभगं वपुस्ते" என்று ஸங்க்ரஹமாய் நிரூபித்து, இதையே மேல் ஒவ்வொரு அவயவ ஸௌந்தர்யத்தையும் விஸ்தாரமாய் அருளிச்செய்தார். இரண்டாவது திருவாய்மொழியில், ஜகத்ஸ்ருஷ்டி முதலிய கார்யங்களைச் செய்கிறது இந்த திவ்ய விக்ரஹம் என்று ஆழ்வாரருளிச்செய்தார். தேசிகன் அவ்வர்த்தத்தை, "विश्वं विभो जनितवन्ति विरिञ्चिपूर्वे" 'பெற்றனை நீயே...நாரணனாதலின்' இத்யாதிகளில் அருளிச்செய்தார். மூன்றும் திருவாய் மொழியில், ஆச்ரிதர்களால் தன்னிஷ்டப்படி யனுபவிக்கக் கூடியது திருமேனி என்று ஆழ்வார் அருளிச்செய்தார். அவ்வர்த்தத்தைத் தேசிகன் 'गोपाङ्गणेषु कृतचङ्क्रमणं, दुत्ये दुकूलहरणे 'உயர்ந்த நீ யுன்னை யெம்முடன் கலந்தனை' இத்யாதிகளில் அருளிச்செய்தார். ஸர்வ வஸ்துக்களையும் தனக்குச் சரீரமாய் உடையவன் என்றும், நாலாவது திருவாய்மொழியில் ஆழ்வாரருளிச்செய்தார். 'யாவருமறியாதெங்குநீ கரந்து மேவுருச்சூழ்ந்த வியப்பினன் மிகுதி' 'दिव्यास्त्रभूषणतया तव विग्रहेऽस्मिन्' என்றித்யாதிகளில் நம் தேசிகன் அருளிச்செய்தார். ஐந்தாவது திருவாய்மொழியில் ஸேவித்தவர்களைப் பித்தேறும்படி அருளிச்செய்தார். அவ்வர்த்தத்தை நம தேசிகன் 'ஓர் விலங்கா மயல் பெற்றனமே' 'बिम्बाधरं स्पृशति रागवती मतिर्मे' என்று அருளிச்செய்தார். ஆறுவது திருவாய்மொழியில், அர்ச்சா ரூபத்தின் வைலக்ஷண்யத்தை ஆழ்வார் அருளிச்செய்தார். அதைத் தேசிகன் "நானாவுருவம் கொண்டு நல்லடியோர் வானாரின்ப மிங்குற வருதி" "अम्बाचले च बहुमानपदे मुनीनां व्यक्तं तव त्रिदशनाथ वदन्तिनित्यां" இத்யாதிகளில் அருளிச்செய்தார். இந்த திவ்யமங்கள விக்ரஹ ஸௌந்தர்யத்தில் ஈடுபட்டவர்களே நமக்குத் தேசிகர்கள் என்று, அவர்களின் மேன்மையை

ஏழாவது திருவாய்மொழியில் அருளிச்செய்தார். அதை நம் தேசிகன் 'நின் வடிவழகு மறவாதார் பிறவாதாரே' 'त्वद्भक्तिभूषितधियामिह देवभावं,' 'நின் தனக்கு நிகர் நின்னடி யடைவார்' என்றருளிச்செய்தார். ஸேவிப்பவர்களுடைய கண் முதலிய இந்த்ரியங்களைத் தன்னிடத்திலேயே இழுத்துக்கொள்ளும் அழகினால் எப்பொழுதும் அனுபவிக்கக் கூடியது திருமேனி என்று எட்டாந் திருவாய்மொழியில் ஆழ்வாரருளிச் செய்தார். அவ்வர்த்தத்தை நம் தேசிகன் 'दृष्ट्वा दृशौ विबुधनाथ न तृप्यतो मे, जानुद्वयं सुरपते न जहाति चित्तं' என்று அருளிச்செய்தார். எல்லாராலும் ஸ்தோத்ரம் பண்ணக்கூடியது திருமேனி என்றும், ஒன்பதாந் திருவாய் மொழியில் ஆழ்வார் நிரூபித்தருளினார். அவ்வர்த்தத்தை நம் தேசிகன் 'निरवधिगुण जाते என்கிற சுலோகத்தில் "स्तुतिपदमधिगच्छन् शोभते सत्यवादी" என்னுமளவாகப் பரக்க நிரூபித்தருளினார். பத்தாவது திருவாய்மொழியில், பாபங்களைப் போக்கடிக்கக் கூடியது திருமேனி என்று ஆழ்வார் அருளிச்செய்தார். அவ்வர்த்தத்தை நம் தேசிகன், "नलवनमिव मृद्नन्पापराशिं नतानां" என்றருளிச்செய்தார். இவ்விதமாகப் பத்து திருவாய்மொழிகளிலும் ஆழ்வார் நிரூபித்த திவ்ய மங்கள விக்ரஹத்தின் குணங்களை, அடியவர்க்கு மெய்யன் திருமேனியில் அனுபவித்தபடியினால், அதையுபஜீவித்து நிற்கும் உபாயத்வோபேயத்வங்கள் இரண்டும் அந்தத் திருமேனியை யுடைய எம்பெருமானுக்கு உண்டென்று திருவுள்ளத்தில் கொண்டருளினாராயிற்று. ஆகையினாலேயே "அயிந்தைமா நகரினில் அமர்ந்தனை யெமக்காய்" என்று பொதுவாய் அருளிச்செய்தது. ஆகையினால் 'वासुदेवः सर्वमिति' என்னுமாப்போலே இவ்வாசார்யவர்யனுக்கு ஸர்வ உபகாரங்களைச் செய்வதற்காக அயிந்தைமா நகரில் முன்பே வந்தமர்ந்தாராயிற்று. அவ்வுபகார விசேஷங்களாவன: 'அடியவர்பால் மெய்யை வைத்துத் தெருள்தர நின்ற தெய்வ நாயக' வென்றும், ஞானக்கை கொடுத்து 'आकृष्टवानिति भवान्' என்கிறபடி தன்னிடத்தில் வரவழைத்து "முந்தைமறை மொய்யவழி மொழி நீ" என்று நியமித்து, உலகத்தாரெல்லாருக்கும் வேதாந்தார்த்தங்களை ப்ரகாசம் செய்யும்படியான க்ரந்தங்களைச் செய்யென நியமித்து, அப்படியே க்ரந்தங்களைச் செய்வித்து ஆசார்ய குண பூர்த்தி யுண்டாக்கி, ப்ராப்ய ப்ராபகனுமானது முதலியன. இப்படி, தனக்கு அஸாதாரணமான உபகாரங்களைச் செய்த அடியவர்க்கு மெய்யன் வடிவழகில் ஈடுபட்டுப் பாவநாதிசயத்தினால் ஸ்த்ரீ ஹாவத்தைத்

யடைந்து, அவனையே யநுரூப பர்த்தாவாக வரித்து, அவன் விஷயத்தில் விலங்கா மயல் பெற்றாராயிற்று. ஆகையினாலேயே **"मां नयेद्यदि काकुत्स्थः तत्तस्य सदृशं भवेत्"** என்று அநுஸந்தித்தாப்போல் நம்தேசிகன் 'அடியோர் மெய்ய வந்தருளே' என்றருளிச் செய்தது. பரமபதத்திலும் இவ்வயிந்திர புரத்தில் ப்ரகாசித்துக்கொண்டிருக்கிற சூரியனே ப்ரகாசிக்கிறான் என்று திருவுள்ளம் பற்றியே ரஹஸ்ய ரத்நாவலி ஹ்ருதயத்தில் "அபரஸந்த்யை யில்லாதபடி ஒருக்கால் விடிந்த திவஸமாய் உதயாஸ்தமயங்களும் உபராகமு மன்றிக்கே அநபாயப்ரபாந்விதனை அபரிச்சிந்நாதித்யன் என்றநுஸந்தித்து" என்றருளிச்செய்யப்பட்டது. எப்படி யெனில்: **"अपास्यतु तमः"** என்று விரோத பரிஹாரத்திலும் பரமதபங்கத்திலும் அடியவர்க்கு மெய்யன் விஷயமாய் அருளிச்செய்திருக்கும் ச்லோகத்தில், பரமபதத்திலும் ப்ராப்யத்வம் அடியவர்க்கு மெய்யனுக்கு உள்ளதென்று நிஷ்கர்ஷித்தா ராயிற்று. இப்படிப்பட்ட நம் நிகமாந்த தேசிகனுடைய ஈடுபாட்டை ஸ்ரீ பெரியபரகால ஸ்வாமி, அதுகண்டே கச்சியில் அவதரித்த நம் குருவராவதாரத்திலும் தேவநாயக கருடதண்டக பஞ்சாசத்துகளாலும் அச்சுதசதக ஹயக்ரீவ ஸ்தோத்ராதிகளாலும் தான் விளங்கப்பெற்ற விடமும் இவ்விடமேயாயிற்று என்றருளிச்செய்திருக்கிறார். ஆகையால் தன் பர்த்தாவின் ஸந்நிதியில் அலங்கரித்துக் கொள்ளும் ஸ்த்ரீயைப்போல், இவ்வாசார்யன் திருவுள்ளமுகந்த அடியவர்க்கு மெய்யன் ஸந்நிதியில் இவ்வாசார்யனை யலங்கரிப்பது, உத்ஸவாதிகள் செய்வது, முதலியவை **'भुङ्क्ते स्वभो गमखिलं पतिभो गशेषं'** என்று இவ்வாசார்யன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்திவ் த்வயாதிகாரத்தில் அருளிச்செய்தபடியே, இவ்வாசார்யனுடைய பாரமைகாந்த்ய நிஷ்டைக்கும், ஆசார்ய அபிமதத்தையே நமக்குப் பரமபுருஷார்த்தமாகக் கொண்டிருக்கும் நம்முடைய நிஷ்டைக்கும் உசிதமாகும் என்றறிந்து, தேசிகபக்தர்கள் அனைவரும் திரளாகச் சேர்ந்து ஆசார்ய கைங்கர்ய ரஸத்தை அநுபவிக்கும்படியாக ப்ரார்த்திக்கப்படுகிறார்கள்.

ஸ்ரீ:

செந்தமிழ்ச் செல்வர்

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரெ. திருமலை ஐயங்கார், காரியதரிசி,
திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்]

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய꞉ கவிதார்க்கிககேஸரீ ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ॥

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக்கு எழில் ஒழுகும் சீராரும் வதனம் எனத் திகழ்கின்றது பரத கண்டம். அம்மடந்தைக்குத் தக்க சிறு பிறை நுதலும் தனித்த நறுந்திலகமும் போல்வன தெக்கணமும் அதிற் சிறந்த திரவிட நற்றிரு நாடும். திரவிட தேசத்தின் பெருமை கணக்கிட முடியாது. மஹரிஷியும்,

"கலௌ கலு பவிஷ்யந்தி நாராயணபராயணா꞉ ।
க்வசித்க்வசிந்மஹாபாகா த்ரமிடேஷு ச பூரிச꞉ ॥
தாம்ரபர்ணீ நதீ யத்ர க்ருதமாலா பயஸ்விநீ ।
காவேரீ ச மஹாபாகா ப்ரதீசீ ச மஹாநதீ ॥"

என அருளிச் செய்ததும் காண்க. [கலியுகத்தில் பகவானையே ப்ராப்ய ப்ராபகமாக ஆச்ரயித்திருக்கிற மஹாநுபவர்கள் மற்றைத் தேசங்களில் சிற்சில இடங்களிலும் அவதரிக்கப் போகிறார்கள். த்ரமிட தேசத்தில் அதிகமாக அவதரிப்பர். அவ்விடங்கள் எவை என்னில்: எவ்விடத்தில் தாம்ரபர்ணீ நதி உளதோ, கிருதமாலா நதி உளதோ, பாலாறு உளதோ, மிகவும் பிரபாவத்துடன் கூடின காவேரி நதி உளதோ, மேற்கு ஸமுத்ரத்தை நோக்கிச் செல்லும் மஹாநதி உளதோ அவ்வவ்விடங்களில் தான்.] மேலும் திரமிட தேசம் தமிழ் நாடு; வழங்கும் பாஷை தமிழ். தமிழ் நாட்டின் நான்கெல்லைக ளாவன: வடக்குத் திருவேங்கடம், கிழக்கும் மேற்கும் கடல்கள்; தெற்கில் குமரியாறு. இப்பழந் தமிழ் நாட்டில் மண்டலங்கள் பல உள. அவற்றில் சான்றோ ரிருப்பிடமாயது தொண்டை மண்டலம் என்பர். இம்மண்டலத்துக்குத் திலகம் போல்வது ஸ்ரீ காஞ்சிமா நகரம். அதில் தமிழணங்கு நோற்ற நோன்பின் பயனையும், தமிழ் நாடு செய்த தவப் பயனையும், ஹிமவநம் என்றும் திருத்தண்கா என்றும் சொல்லப்படுகிற விளக்கொளி எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் திவ்ய தேசத்தில் கலி 4370

ஆன கி. பி. 1268-விபவஹ புரட்டாசி மாஸம் சிரவண நக்ஷத்திரம் கூடிய சுப தினத்தில் ஒரு செந்தமிழ்ச் செல்வர் அவதரித்தார். திருவோண நக்ஷத்திரத்தின் பெருமை அளவிடற்கரியது. “ஶ்ரோணா நக்ஷத்ரம் விஷ்ணு தேவதா” என வேதத்தில் ஓதப்பட்டிருக்கிறது. “திருவோணத் திருவிழவு”, “நீ பிறந்த திருவோணம் இன்று”, “திருநாள் திருவோணம் இன்று ஏழு நாள்” என்பன ஆழ்வார்கள் பணிப்பு. “இது தான் வைஷ்ணவ நக்ஷத்ரமாகையாலும், அவதாராந்தரங்களிலே இந்த நக்ஷத்ராந்வய முண்டாகக் கூடு மாகையாலும், தர்மி ஐக்யத்தைப் பற்றச் சொல்லுகிறது” என்பது பெரியார் வியாக்கியானம். அவதரித்த செல்வரின் தந்தையார் ஸ்ரீ அநந்த ஸூரி; தாயார் தோத்தாத்திரி யம்மையார்; இதனை:

“விதாயஸ்யாநந்த ஸூரி: ஸூநு: காக்ஷயஜ்வந: ।
ஸௌத்ராயஸ்நயஸ்தாதாரம்பாயாஸ்தஸ்ய மங்களம் ”॥

என்கிற மங்கள ஶ்லோகத்தில் காண்க.

அநந்தஸூரி என்கிற ஸ்வாமிக்கும் தோதாரம்மை என்கிற அவர்தம் திவ்ய மஹிஷிக்கும் திருக்குமாரராயும், புண்டரீகாக்ஷ ஸோமயாஜிகளுக்குத் திருப்பேரனாராயும் அவதரித்தருளின ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகன் வாழ்க என்பது இதன் பொருள். அநந்த ஸோமயாஜியார் எம்பெருமானார் நியமித்த எழுபத்துநான்கு ஸிம்ஹாஸநாதிபதிகளில் ஒருவர். அவர்தம் திருக்குமாரர் புண்டரீகாக்ஷ யஜ்வா. இவர்தம் குமாரர் அநந்தஸூரிகள். இவர்தம் அருந்தவப் புதல்வரே நம் செந்தமிழ்ச் செல்வர். “யதிராஜமாஹாநஸிகரான கிடாம்பியாச்சானுடைய ப்ரபௌத்ரியாய், ராமாநுஜாசார்யரென்பவருடைய பௌத்ரியாய், ஸ்ரீரங்க ராஜப் பிள்ளானென்கிற பத்மநாபாசார்யருடைய புத்ரியாய், வாதிஹம்ஸாம்புவாஹாசார்யரென்கிற கிடாம்பி யப்புள்ளாருடைய ஸஹோதரி இத்தோத்திரியம்மை. எனவே நம் செந்தமிழ்ச் செல்வரது தந்தை தாயார் குலங்களின் பெருமையும் அளவிட முடியாதென்க.

„நபஸ்யஶ்ரவணே ஶ்ரோணாயாமவதீர்ணாய ஸூரயே ।
விஶ்வாமித்ராந்வயாயாஸ்து வேங்கடேஶாய மங்களம் ”

என்றதால் புரட்டாசி மாதத்தில் திருவோணத்தன்று இவ்வுலகின்கண் தோன்றிய மஹாஜ்ஞாதாவும் விச்வாமித்திர குல திலகரும் என்பது பெறலாம். “ஓதாதோதும் வேதாந்தாரியன் உதயஞ்செய்திடு நாள், உத்தமமான புரட்டாசித் திருவோண மெனுநாளே” என்பதும் நோக்குக.

நம் செந்தமிழ்ச் செல்வர் திருவேங்கடமுடையானுடைய தீர்த்தோற்சவத்தில் அவதரித்தபடியாலும், அவரே பிரசாதித்தபடியாலும்,

‘திருவேங்கடமுடையான்’ என்ற திருநாமம் பெற்றோரா லிடப் பெற்றார். ஆனால் இவரை ஸ்ரீவேங்கடேசஶ ஷண்டாவதாரர் என்றும், எம்பெருமானாருடைய அம்ஶமாகவே இருப்பர் என்றும், திருவேங்கடமுடையானுடைய அவதாரம் என்றும் மஹான்கள் கூறுவர்.

“வேங்கடேஶாவதாரோऽயம் தத்கண்டாம்ஶோऽதவா பவேத் ।
யதீந்த்ராம்ஶோऽதவேத்யேவம் விதர்க்யாயாஸ்து மங்களம் ॥
ஸ்ரீஹாஷ்யகார: பந்தாநமாத்மநா தர்ஶிதம் புந: ।
உத்தர்த்துமாகதோ நூநமித்யுக்தாயாஸ்து மங்களம் ” ॥

என்ற ஶ்லோகங்களும்,

“திருமலைமால் திருமணியாய்ச் சிறக்க வந்தோன்”
“தெங்கொடு மாங்கனி தேன்சுனை வேங்கடத் தீசர்பிறந் திடுநாள்”

என்றும்,

“அன்றிவ் வுலகினை யாக்கி யரும்பொருள் நூல்விரித்து
நின்றுதண் ணீள்புகழ் வேங்கட மாமலை மேவிப் பின்னும்
வென்றிப் புகழ்த்திரு வேங்கட நாத னெனுங் குருவாய்
நின்று நிகழ்ந்து மண்மேல் நின்ற நோய்கள் தவிர்த்தனனே”

என்றும் வருவன காண்க.

தூப்புல் க்ஷேத்திரத்தில் அவதரித்தமை பற்றி நம் செல்வர்க்குத் தூப்புற் பிள்ளை என்ற அஸாதாரண நாமம் வழங்கலாயிற்று. அக்காலத்திய ஸ்ரீவைஷ்ணவ சிகாமணிகளுக்குப் ‘பிள்ளை’ என்று வழங்குதல் இயல்பு. நம்பிள்ளை, வடக்குத் திருவீதிப் பிள்ளை, பெரியவாச்சான் பிள்ளை என்பன நோக்கற்குரியன.

மாதுலரான கிடாம்பிக்குல திலகரான இராமானுசப்புள்ளான் என்பாரிடம் இருபது திருநக்ஷத்திரத்திற்குள்ளே ஸகல கலைகளையும் ஓதியுணர்ந்து பிரசித்தியுடன் விளங்கினர் நம் செல்வர்.

“ராமாநுஜார்யாதாத்ரேயாந்மாதுலாத் ஸகலா: கலா: ।
அவாப விம்ஶத்யப்தே யஸ்தஸ்மை ப்ராஜ்ஞாய மங்களம் ॥ ”

“காவல னெங்கள் கிடாம்பிக் குலபதி யப்புளார்தம்
தேமலர் சேவடி சேர்ந்து பணிந்தவர் தம்மருளால்
நாவல ருந்தென் வடமொழி நற்பொருள் பெற்றநம்பிக்
காவல் தூப்புற் குலத்தர சேயெம்மைக் காத்தருளே”

[எம்மைக் காப்பவரும், கிடாம்பிக் குலச் சிரேஷ்டருமான அப்புள்ளாருடைய தேன் திகழும் செந்தாமரைப் பூப்போன்ற செவ்விய திருவடி

களைச் சேர்ந்து ஆச்ரயித்து, அவரது திருவருளால் நாவில் மலர்கின்ற தமிழ் ஸம்ஸ்கிருத நூல்களின் சிறந்த பொருள்களை அதிகரித்த புருஷ சிரேஷ்டரே! அனைவர்க்கும் காவல! தூப்புற் குலத்தரசே! அடியோங்களை ரக்ஷித்தருள வேணும்.]

கல்வியிற் சிறந்த கம்ப நாட்டாழ்வார் நகர் நீங்கு படலத்தில் ஸ்ரீராமபிரானைக் குறிக்கையில், 'தென்சொற் கடந்தான் வட சொற்கலைக் கெல்லை தேர்ந்தான்' எனப் புகழ்கின்றார். இதற்குப் பரதகண்டத்தின் தென்பகுதியில் வழங்கும் பாஷையாகிய தமிழ்மொழிக் கடலைத் தாண்டினவனும், ஸம்ஸ்க்ருத மொழியிலுள்ள சாஸ்திரங்களை எல்லாம் நன்கு அறிந்தவனுமாகிய ஸ்ரீராமன் என்பது பொருள். இனிமை, மஹிமை, தொன்று தொட்டு வருகை என்பன முதலிய பல தன்மைகளிலும் வடகலையும் தென்கலையும் ஒப்பனவாம். 'தென்சொற் கடந்தான்' என்று கூறி, 'வட சொற் கலைக்கு எல்லை தேர்ந்தான்' எனக் கூறியதன் நயம் நோக்கத்தக்கது. இதனை நம் தூப்புற் பிள்ளைக்குக் கூறுவது மிகையாகாது. இதனைச் சற்று விளக்குவோம்.

"செய்யதமிழ் மாலைகள்நாம் தெளியவோதித் தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே" என்பது நம் செல்வர் பாசுரம். [ஸந்தேக விபரீதங்களின்றி எளிதில் தெளிவிக்கும் ருஜுக்களான ப்ரீதி ஹேதுக்களான தமிழ் ப்ரபந்தங்களை நாம் ஐயந்திரிபற அத்யயனம் செய்து, இதற்கு முன் தெரிந்துகொள்ளப்படாதனவான வேத ரஹஸ்யார்த்தங்களைத் தெளிந்துகொள்ளுகிறோம்.]

தமிழரிற் றலை சிறந்தவர் நம்மாழ்வார். இவருக்குப் பிரதம சீடர் தமிழ்ச் சீரியரான மதுர கவிகள். ஸ்ரீ பாதுகா ப்ரபாவம பரதனால் தெளிந்தோம். ஆழ்வார் வைபவம் மதுரகவிகளால் சீர் பெற்றது.

'குருவில்லா வித்தை பாழ்' என்பது தமிழரது தொன்று தொட்ட அநுபவம். பகவத் பக்தி ஸூக்ருதங்கள் முதலியவற்றால் ஞானம் சம்பாதித்து மோக்ஷம் பெறலாமாயினும், ஆசார்ய பக்தியே செய்தற்குரியது என்று வற்புறுத்துகிறார் நம் செல்வர். இதனைக் கீழ்ப்பாசுரம் தெளிவிக்கும்.

"இன்பத்தி லிறைஞ்சுதலி லிசையும் பேற்றி
லிகழாத பல்லுறவி லிராக மாற்றில்
தன்பற்றில் வினைவிலக்கிற் றகவோக் கத்திற்
றத்துவத்தை யுணர்த்துதலிற் றன்மை யாக்கில்

அன்பர்க்கே யவதரிக்கு மாய னிற்க
வருமறைக டமிழ்செய்தான் றாளே கொண்டு
துன்பற்ற மதுரகவி தோன்றக் காட்டுந்
தொல்வழியே நல்வழிக டுணிவார் கட்கே"

[குற்றமற்ற மதுரகவி இனிமையாயிருப்பதில், ரக்ஷிக்கிறவனாக அடைவதில், ஒப்புக்கொள்ளப்பட்ட புருஷார்த்த லாபத்தில், விட்டு நீங்காத பலவிதமான உறவுகளில், இந்திரியானுபவ விஷய ஆசையை மாற்றுவதில், தன்னிடத்தில் பிடிப்பை உண்டாக்குவதில், முன் செய்த கர்மங்களைப் போக்குவதில், கருணையினுடைய உயர்த்தியில், உண்மைத் தத்துவத்தை அறியும்படி செய்கையில், தன் ஸ்வபாவத்தை உண்டாக்குகையில், ஆகிய இப்பத்து விஷயங்களில் பக்தர்கட்காகவே அவதரித்த கோபாலகிருஷ்ணன் இருக்கும்போது, அவரை விட்டுவிட்டு அறிய அரிய வேதத்தின் உட்பொருள்களைத் தமிழ்ப் பாக்களால் வெளியிட்டருளிய நம்மாழ்வாருடைய திருவடிகளையே அடைந்து உலகினருக்குத் தோன்றும்படி காட்டின பழைய வழியே விச்வாஸ முடையவர்களுக்கு நல்ல வழிகள்.]

மதுரகவிகள் 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்னுந் திருப் பதிகத்தால் பகவத் விஷயத்தில் அனுஸந்திக்க வேண்டிய ஆகாரங்களனைத்தையும் ஆசார்யன் விஷயத்தி லனுஸந்தித்தார். இப்பதிகத்தின் அர்த்தங்களைப் பத்துப் பதங்களினால் ஸங்க்ரஹித்தருளுகின்றார் நம் செல்வர். அப்பதங்களாவன: இன்பம், இறைஞ்சுதல், இசையும்பேறு, இகழாத பல்லுறவு, இராகம் மாற்று, தன்பற்று, வினைவிலக்கு, தகவோக்கம், தத்துவத்தை உணர்த்துதல், தன்மையாக்கல் என்பன. இன்பம் என்பது, ஆநந்தம் அல்லது ஆநந்த ரூபமான அநுபவம். ஆநந்தாவஹத்வத்தை 'என்னப்பனில் நண்ணித் தென்குருகூர் நம்பி என்றக்கால் அண்ணிக்கும் அமுதூறும்' என்றார் கவிகள். இறைஞ்சுதலில் என்பது, ஶரணகுநாஶ்ரயணத்தில். 'மேவினேன் அவன் பொன்னடி மெய்ம்மையே' என்றார் கவிகள். இசையும் பேறு என்பது, அங்கீகரிக்கக் கூடிய புருஷார்த்தம். 'தேவபிரானுடைக் கரியகோலத் திருவுருக் காண்பன்நான் பெரிய வண்குருகூர் நகர்நம்பிக் காளுரியனாய்' என்றார் கவிகள். இகழாத பல்லுறவு என்பது, ஒரு காலத்திலும் அழியாத பலவித பாந்தவம். இதனை 'அன்னையாய் அத்தனாய்' என்றார் கவிகள். இராகம் மாற்று என்பது, அநுசித விஷயாக நிவர்த்தனம். 'செம்பொன் மாடத் திருக்குருகூர்நம்பிக் கன்பனாய் அடியேன் சதிர்த்தேன்' என்றார் கவிகள். தன்பற்றில் என்பது, தானே தன் பற்றை உண்டாக்குகை. 'இன்று தொட்டு மெழுமையு மெம்பிரான் நின்று தன்புக ழேத்த வருளினான்' என்றார் கவிகள். வினைவிலக்கு என்பது, பாப நிவாரணம். 'காரி மாறப்பிரான்

பண்டை வல்வினை பாற்றியருளினான்' என்றார் கவிகள். தகவேரக்கம் என்பது, கிருபையினுடைய உத்கர்ஷம். 'அருள்கொண்டாயிர மின்தமிழ்ப் பாடினா னருள் கண்டீரிவ் வுலகினில் மிக்கதே' என்றார் கவிகள். தத்துவத்தை உணர்த்துதல் என்பது, தத்வபோதனம். 'மிக்க வேதியர் வேதத்தினுட்பொருள் நிற்கப்பாடி என்னெஞ்சுள் நிறுத்தினான்' என்றார் கவிகள். தன்மை யாக்கல் என்பது, தன்னுடைய ஸ்வபாவத்தை உண்டாக்கல். 'செயல் நன்றாகத் திருத்திப் பணிகொள்வான்' என்றார் கவிகள். பகவத் விஷயத்தையும் கழித்துப் புருஷார்த்த காஷ்டையிலும் ஸாரமான ஆசார்யனையே கவி பாடுகையாலே மதுரகவியாயினார். இவர் தோன்றும்படி காட்டுகிற ஸர்வ ஸுலபனான கிருஷ்ணன் இருக்கச் செய்தே, அனுஷ்டானத்தாலும் உக்தியாலும் நிஸர்க்க ஸுஹ்ருத்தாய் ஸர்வபலப்ரதனான ஸர்வேஶ்வரனிருந்தாலும் ஸதாசார்ய ஸமாச்ரயண மில்லாதார்க்கு மோக்ஷ தர்மம் கிடையாதென்று ஜகத்துக்கெல்லாம் ஸ்பஷ்டமாகத் தோன்றும்படி காட்டிய அநாதியான மார்க்கமே மோக்ஷ ஸாதநங்களான பக்தி ப்ரபத்திகள்.

மேலும் தமிழ் நாட்டிற் றிகழ்கின்ற பிரபல ஸ்ரீவைஷ்ணவ க்ஷேத்திரங்கள் மூன்று. அவையாவன: கோயில், திருமலை, பெருமாள் கோயில். மந்த்ர த்ரயங்களுக்குள் மூல மந்த்ரம் பெரிய பெருமாளிடத்தும், சரமஶ்லோகம் திருமலை எம்பெருமானிடத்தும், த்வயம் பேரருளாளனிடத்தும் முக்யமாய் ப்ரதிபாதிக்கப் படுவதாக ஆன்றோர் அபிமதம். அரங்க நகரப்பன் வலது திருக்கையால் சிரஸைக் காட்டுவதும், ஸ்ரீநிவாஸன் திருவடியைக் காட்டுவதும், வரதன் பெரிய பிராட்டியின் ஸ்தானமான திருமார்பை முன்னேறக் காட்டுவதும், இவ்வபிப்ராயத்தை வலியுறுத்தும். இத்திருப்பதிகளைக் குறித்த நம் செந்தமிழ்ச் செல்வர் பாசுரங்கள் பின் வருமாறு:—

“ஆராத வருளமுதம் பொதிந்த கோயில்
அம்புயத்தோ னயோத்திமன்னர்க் களித்த கோயில்
தோராத தனிவீரன் றொழுத கோயில்
துணையான வீடணற்குத் துணையாங் கோயில்
சேராத பயனெல்லாஞ் சேர்க்குங் கோயில்
செழுமறையின் முதலெழுத்துச் சேர்ந்த கோயில்
தீராத வினையனைத்துந் தீர்க்குங் கோயில்
திருவரங்க மெனத்திகழுங் கோயி றானே”

[ஸ்ரீரங்கம் என்று பிரசித்தியுடன் விளங்கும் கோயில் தானே எவ்வளவு அநுபவித்தாலும் திருப்தி வாராத கருணாமிர்தம் நிறைந்த கோயில்; தாமரையில் உறையும் ப்ரஹ்மா அயோத்தி மன்னனாகிய இக்ஷ்வாகுவுக்கு அளித்த கோயில்; எஞ்ஞான்றும் தோல்வியுறாத தனிவீரனான சக்ரவர்த்தித் திரு

மகன் ஆராதனம் செய்த கோயில்; துணைவனான விபீஷணனுக்கு ரக்ஷகமான கோயில்; வேறு எவராலும் சேர்க்க முடியாத சதுர்வித புருஷார்த்தங்களான பலன்கள் யாவையும் சேர்க்கும் கோயில்; மிகவும் ஸ்லாக்யமான வேதத்தின் பிரணவமான முதல் எழுத்துச் சேர்ந்த கோயில்; வேறு உபாயத்தினால் போக்க முடியாத பிராரப்தம் முதலான பாபங்களையும் தீர்க்கும் கோயில்.]

“கண்ணனடி யிணையெமக்குக் காட்டும் வெற்புக்
கடுவினைய ரிருவினையுங் கடியும் வெற்புத்
திண்ணமிது வீடென்னத் திகழும் வெற்புத்
தெளிந்தபெருந் தீர்த்தங்கள் செறிந்த வெற்புப்
புண்ணியத்தின் புகலிதென்னப் புகழும் வெற்புப்
பொன்னுலகிற் போகமெல்லாம் புணர்க்கும் வெற்பு
விண்ணவரும் மண்ணவரும் விரும்பும் வெற்பு
வேங்கடவெற் பெனவிளங்கும் வேத வெற்பே”

[திருவேங்கடமலை யென விளங்குகின்ற வேதப்ரதிபாத்யமான மலை, கண்ணனாய் அவதரித்த எம்பெருமானுடைய உபய சரணாரவிந்தங்களை மிகவும் தாழ்ந்த நமக்குக் காட்டும் வெற்பு; கொடிய பாபங்களை யுடையவர்களுடைய புண்ணிய பாப கர்மங்களைப் போக்கும் வெற்பு; உண்மையாகவே இது பரமபதம் என்று சொல்லும்படி திகழும் வெற்பு; தெளிவான பெரிய தீர்த்தங்கள் நிறைந்த வெற்பு; புண்ணியங்கள் வதியும் இடம் என்று சொல்லும்படி கொண்டாடப்படும் வெற்பு; அழகிய வைகுந்தத்தில் இருக்கும் சகல போகங்களையும் ஒருவனிடம் சேர்க்கும் வெற்பு; நித்யசூரிகளும் பூவுலகிலுள்ளாரும் ஆசைப்படும் வெற்பு.]

“உத்தம வமர்த்தல மமைத்ததொ
ரெழிற்றனு வுயர்த்த கணையால்
அத்திர வரக்கன்முடி பத்துமொரு
கொத்தென வுதிர்த்த திறலோன்
மத்துறு மிகுத்ததயிர் மொய்த்தவெணெய்
வைத்த துணு மத்தனிடமா
மத்திகிரி பத்தர்வினை தொத்தற
வறுக்கு மணி யத்திகிரியே.”

[எம்பெருமான் ஸ்ரீ ராமபிரானாகத் திருவவதரித்த காலத்திருந்த ஒப்பற்ற போர்க்களத்தில் இருந்த ஒப்பற்ற அழகிய வில்லாலே விடப்பட்ட பாணத்தால் அஸ்திரங்களையுடைய ராக்ஷஸராவணன் பத்துத் தலைகளும் ஒரு பனம்பழக் கொத்துபோல் கீழே உதிரும்படி செய்த வலிமை யுடைய

னும், மத்தை வைத்துக் கடையும்படியான அதிகமான தயிரில் மேலே வந்த வெண்ணெயை உறியில் வைத்ததை எடுத்துச் சாப்பிடுகிற நமக்கு வேண்டியவனுமிருந்த எம்பெருமான் இருக்கும் இடமான ஹஸ்திகிரியானது பக்தர்களுடைய வினைகளை வாஸனையுடன் அறுத்து விடும். அந்தச் சக்ராயுதமானது, அது செய்யும் வேலையை மலை செய்துவிட்டபடியால் அது திருக்கைக்கு வெறும் அலங்காரமே.]

திருவரங்கத்திற்கு, "செழுமறையின் முதலெழுத்துச் சேர்ந்த கோயில்" என்பதால் திருமந்த்ர ஸம்பந்தத்தையும், திருவேங்கடத்திற்குக் "கண்ணன் அடியிணை எமக்குக் காட்டும் வெற்பு" என்பதால் 'மாமேகம் ஶரணம் வ்ரஜ' என்கிற சரம ச்லோக ஸம்பந்தத்தையும் அருளிச்செய்து, அத்திகிரிக்குத் தோராத தனிவீரனையும் கண்ணனையும் பாசுரம் இட்டு த்வய ஸம்பந்தத்தையும் பேசினார்.

நம் செந்தமிழ்ச் செல்வரைக் குறித்துப் பிள்ளை யந்தாதியில் பின் வரும் அரிய பாடல் காணப்படுகிறது:

" வித்தகன் வேதியன் வேதாந்த தேசிக னெங்கள்தூப்புல்
மெய்த்தவ னுத்தமன் வேங்கட நாதன் வியன்கலைகள்
மொய்த்திடு நாவின் முழக்கொடு வாதியர் மூலமறக்
கைத்தவ னென்று ரைத்தேன்கண்டி லேனென் கடுவினையே "

[தேசிக சிகாமணியின் சில திருநாமங்களைப் பேசின வளவிலே, கடுவினைகளெல்லாம் நசித்துப் போயின.] இப்பாசுரத்தில் ஏழு திருநாமங்கள் வருகின்றன.

1. வித்தகன்—ஆச்ரிதரது ஸம்ஸார ரோகத்துக்கு நிதாநஜ்ஞனான சிகித்ஸகன். சகலரும் ஆச்சரியப்படத்தக்க ஞானானுஷ்டானங்களை யுடையவன்.

2. வேதியன்—ஸர்வாகம ஸாரவேதி. வேத வேதாந்த தத்வப் பொருள்களை நன்குணர்ந்தவர்.

3. வேதாந்த தேசிகன்—வேதாந்தாசாரியகம் பண்ணுபவர். எம்பெருமானால் வேதாந்த தேசிகன் என்ற திருநாமம் சாத்தப் பெற்றவர்.

4. தூப்புல் மெய்த்தவன்—[illegible]. பரம்பரையாக வைதிக சிகாமணிகள் வாழ்ந்த இடமான தூப்புல் ஸ்தலத்தில் அவதரித்த அருந் தபஸ்வி.

5. உத்தமன்—ஒரு சொற்றைச் சொல்ல வொண்ணாத ஸர்வோத்தம சீலன். ஒத்தார் மிக்காரிலராய் எல்லாரினுஞ் சீரியன்.

6. வேங்கடநாதன்—ஸ்ரீ வேங்கடநாதார்யர் என்ற திருநாமம் வழங்கப்பெற்றவர்.

7. வியன் கலைகள் மொய்த்திடு நாவின் முழக்கொடு வாதியர் மூலமறக் கைத்தவன்—ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர் என்ற விருது வஹித்து ஸகல சாஸ்திரங்களும் நர்த்தனம் பண்ணும்படியான திருநாவின் மதுரத்வநி விசேஷங்களால் குதர்க்கிகளை நிர்மூலமாக நிரஸித்தவர்.

தமிழ் ஞானக்கடலான ஆழ்வாரிடத்திலும் திவ்ய ப்ரபந்தங்களிலும் நம் செல்வர்க்கு அளவிறந்த பக்தி வெள்ளம் குடிகொண்டிருந்தது. இதனைத் தாம் இயற்றி யருளிய அம்ருதாஸ்வாதினீ என்ற பிரபந்தத்தில் கீழ்வரும் பாசுரத்தால் நன்கு அறியலாகும்.

" அந்தமிலாப் பேரின்ப மருந்த வேர்க்கும்
அடியோமை யறிவுடனே யென்றுங் காத்து
முந்தைவினை நிரைவழியி லொழுகா தெம்மை
முன்னிலையாந் தேசிகர்தம் முன்னே சேர்த்து
மந்திரமும் மந்திரத்தின் வழியுங் காட்டி
வழிப்படுத்தி வானேற்றி யடிமை கொள்ளத்
தந்தையென நின்றதனித் திருமால் தாளிற்
றலைவைத்தோஞ் சடகோப னருளி னாலே"

[முடிவில்லாத பேரின்பத்தை அனுபவிக்க யோக்யர்களான அடியோங்களை ஞானத்தோடே எப்போதும் ரக்ஷித்து, பழமையான கர்மஸமூஹங்களின் மார்க்கத்தில் சிதறிப்போகாமல் நம்மை முந்தின நிலையாகிய ஆசார்யர்களுடைய முன்னே சேர்ப்பித்து, ஆசார்ய ப்ராப்தி செய்வித்து, மந்த்ரத்தின் வழியும் மந்த்ர ப்ரதிபாத்யமான மார்க்கத்தையும் அறிவித்து, பக்தி ப்ரபத்தி ரூப உபாயத்தில் ப்ரவர்த்திப்பித்து, பரமபதத்தில் ஏற வைத்து, கைங்கர்யங்களைத் திருவுள்ளம் பற்றுவதற்குப் பிதா போல் வீற்றிருந்த ஶ்ரிய: பதியினது திருவடிகளில் நம்மாழ்வாருடைய கிருபையால் சிரஸ்ஸைப் பணித்தோம்.]

திருப்பாணாழ்வாரிடத்து நம் செல்வர்க்கு விசேஷ ஈடுபாடு. 'நம் பாண நாதன்' என்கிறார். திருப்பாணாழ்வாராகிற நம்முடைய நாதன். முனிவாஹன னென்று திருநாம மாம்படியாகவும், ஸ்ரீவேதாந்தாசார்யரென்று திருநாமஞ் சாற்றி யருளியும், தங்க ளிருவரிடத்திலும் பெரிய பெருமாள் வ்யாமோஹம் செய்தருளின ஸம்பந்தத்தையிட்டு விசேஷித்து நம்முடைய நாதனென் றனுஸந்திக்கிறார். உலக விருத்தாந்தத்தையும் காடு மேடுகளையும் வருணிக்கும் மற்ற ஆழ்வார்கள் போலன்றிக்கே, பெரிய பெருமாள் திரு

மேனியையும். அவருடைய கல்யாண குணங்களையுந் தவிர வேறொன்றை இவ்வாழ்வார் அனுபவியார். இவரருளியது 'அமலனாதிபிரான்' என்ற திருப்பதிகம். இதில் அடியிலே நான்கு பாட்டுக்கள் காரணத்வத்தையும், மேல் நான்கு பாக்கள் ரக்ஷகத்வத்தையும், மேலிரண்டு பாக்கள் ஸ்வாமித்வத்தோடு கூடின போக்யத்வத்தையும் முக்யமாகப் ப்ரதிபாதிக்கின்றன.

"பாவளருந் தமிழ்மறையின் பயனே கொண்ட
பாண்பெருமாள் பாடியதோர் பாடல் பத்தில்
காவலனுங் கணவனுமாய்க் கலந்து நின்ற
காரணனைக் கருத்துறநான் கண்ட பின்பு
கோவலனுங் கோமானு மான வந்நாள்
குரவைபுணர் கோவியர்தங் குறிப்பே கொண்டு
சேவலுடன் பிரியாத பெடைபோற் சேர்ந்து
தீவினையோர் தனிமையெல்லாந் தீர்ந்தோம் நாமே"

[பாக்கள் வளர்கின்ற திரமிட வேதத்தின் ப்ரயோஜனத்தையே தமக்கு முக்யமாகக் கொண்ட திருப்பாணாழ்வார் பாடியதான ஒப்பற்ற பத்துப் பாட்டுக்களில் ரக்ஷகனும் ஸ்வாமியுமாய்ச் சேர்ந்துநின்ற ஸர்வ காரண பூதனை ஶ்ரிய: பதியை மனத்தில் பொருந்த நான் பார்த்தபின், கோபாலனும் கோமானுமாகிய அந்த நாளிலே ராஸபந்தம் செய்த கோபிகைகளின் குறிப்பை க்ரஹித்து ஆணுடன் நீங்காத பெண்போல் கூடித் துஷ்கர்மவான்களது தனிமையை எல்லாம் நாம் நீங்கினோம்.]

"ஆதிமறை யெனவோங்கு மரங்கத் துள்ளே
யருளாருங் கடலைக்கண் டவனென் பாண
னோதியதோ ரிருநான்கு மிரண்டு மான
வொருபத்தும் பற்றாக வுணர்ந்து ரைத்தோம்
நீதியறி யாதநிலை யறிவார்க் கெல்லா
நிலையிதுவே யென்றுநிலை நாடி நின்றோம்
வேதியர்தாம் விரித்துரைக்கும் விளைவுக் கெல்லாம்
விதையாகு மிதுவென்று விளம்பி னோமே."

[முதன்மையான வேதம் (ப்ரணவம்) என்னும்படி வ்ருத்தி பெறுகின்ற ஸ்ரீரங்கத்தில் க்ருபாபூர்ண ஸமுத்ரத்தைப் பார்த்தவராகிய என்து திருப்பாணாழ்வார் அருளிச்செய்த (ஒரு இரண்டு நான்கும் இரண்டுமாகிய) ஒரு பத்துப் பாட்டையும் ஆலம்பநமாக அறிந்து சொன்னோம். மதாந்தர நிரஸந யுக்தியைத் தெரிந்துகொள்ளாத தத்வ ஸ்திதியை அறியுமவர்க்கெல்லாம் இதுவே ஸ்திரம் என்று ப்ரபந்த தாத்பர்யத்தை விசாரித்து நின்றோம். வைதிகர்கள் விஸ்தரித்துச் சொல்லுகின்ற விளைவுகளுக் கெல்லாம் இதுவே விதையாகும் என்று சொன்னோம்.]

நந்தமிழ்ச் செல்வர் கல்விச் செருக்கின்றி ஆடம்பர மற்ற வாழ்க்கையும் அமுதமொழி கூறும் இன்சொல் லுடையராயு மிருந்தனர். 'க்ருஶாநுஶ்ரம் ஸுத: .கெ௱ஜிஉக்ருஶாம் ஸுது கூவ-ிதெ' என்கிறபடியே தகூிவாணீத்வத்தாலே நினைத்ததெல்லாம் ஸாதிக்கவல்லவிருக்கச் செய்தேயிறே நாம் ப்ருதரண ஶரணராய்ப் போருகிறது என்றும்,

"வெள்ளைப் பரிமுகர் தேசிக ராய்விர காலடியோம்
உள்ளத் தெழுதிய தோலையி லிட்டனம் யாமிதற்கென்
கொள்ளத் துணியினுங் கோதென் றிகழினுங் கூர்மதியீர்
எள்ளத் தனையுக வாதிக ழாதெனெ றின்மதியே"

என்றும்,

"ஶரீரவதநாவயிவவஹ் நிஷெவணாவாஉநாக
சுவிஸநயநஞ்ஜயவ .ஶஉஂ யநஂ உஸநஂ ।
யநஜூயவிவயநஂ யநஉஉ-ஐஹெரவயநஂ
ஸஸாயந உஷாயநஂ ஸஉநஸாஂ ஸஉாராயநழ ॥

என்றும்,

"நாஸ்தி விதாஜிதஂ கிஂசிந் உயா கிஂசிஉாஜிதழ ।
சுஸ்தி ஜெ ஹஸ்தியெஹுர்ஜெ . வஸ்ஹ வெதாஉஹஂ யநழ ॥

என்றும் இவர் தாமே திருவாய் மலர்ந்தருளினமையே சான்றாகும்.

ஆழ்வார்களையும் அவர் அருளிச் செயல்களையும் பிறர் வெவ்வேறாகக் கூறுமவற்றிற்கெல்லாம் அவர் வாய்திறவாமலிருக்கும் பொருட்டு நம் செல்வர், "வராஹ வாகாஜூதி ஶவத்தாலே சுஹிநவமாக வொரு உஶாவதாரம் பண்ணி, ஜெவங்கள் ஸஉஜமத்தை வாங்கி ஸவெவ ஜீவ்யமான தண்ணீராக வுமிழுமாப்போலே வெஉாயங்களில் வேண்டும் ஸாரதஉாஂஶத்தை ஸவருக்கு மயிகரிக்கலான ஹாஷையாலே ஸஂஹஹித்துக் காட்டியும்......சுஹஸ்ர வெஸிதமான ஜெஶத்திலே சுநெகஜெஶிகாவஜெஶத்தாலே யவதரித்தருளினான்" என்று கூறுமதற்கு நாம் என்ன கைம்மாறு செய்ய முடியும்? இதனை நன்குணர்ந்தன்றோ

"ஓரொன்று தூப்புற் றிருவேங் கடமுடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள்—ஓரொன்று
தானே யமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு"

என்ற தனியனும் எழுந்தது.

ஸ்ரீமங்கிகமாந்த மஹா தேசிகனை நம் செந்தமிழ்ச் செல்வரது அருமை பெருமைகள் அளவிடற்கரியன. எம்பெருமானரைப் 'பெரும் பூதூர் வந்த வள்ளல்' என்றும், "ஆரண நூல்வழிச் செவ்வையழித்திடு மைதுகர்க்கோர் வாரண மாயவர் மாயக்கதலிகள் மாய்த்தபிரான், ஏரணி கீர்த்தி யிராமாநுச முனி" என்றும் இவர் வாழ்த்துகின்றார். இவை நம் செல்வர்க்கும் பொருந்தும். இம்மஹா தேசிகன் வருஷ மாத உத்ஸவங்கள் ஆங்காங்கு ஒரு ப்ரகாரத்தில் சிறப்பாக நடப்பதாயினும், அவர் ஸ்ரீஸூக்திகள் எங்கும் முழங்குமாறு பூர்ணமான திட்டங்கள் ஏற்படாதது சற்று வருந்தத்தக்கதே. பின்புள்ளார் உஜ்ஜீவிக்குமாறு இருகலைகளையும் நன்கு தேர்ந்து விசேஷ கருணையுடன் அன்னார் இயற்றி யருளிய கிரந்தங்களைப் போற்றுவதே நமது முதற்கடமையாகும். ஸ்ரீவைஷ்ணவர்கள் ஏகோபித்தால் எதுவும் சுலபமாக நிறைவேறும். நம் செல்வரின் பிரபந்தங்களை எளிய நடையில் பொருளுடன் வெளியிடல் வேண்டும். அனைவரும் கற்றுக் களிக்குமாறு தகுந்த ஏற்பாடுகள் உடனே செய்தல் வேண்டும். அடக்க விலைக்கு அச்சிட்டு அளித்தல் வேண்டும். இதுவே அன்னார்க்கு நாம் செய்யும் கைம்மாறு. "ஞானியர்கள் சென்னியணிசேர் தூப்புல் வேதாந்த தேசிகனே! இன்னமொரு நூற்றாண்டிரும்" என்ற வாழித் திருநாமம் பயனடையுமாறு செய்தலே சாலச் சிறந்தது. ஆஸ்திகர்கள் ஆலோசித்து அதிவிரைவில் தகுந்த ஏற்பாடுகள் செய்வரென எதிர் பார்க்கின்றனம்.

"வாழி யணிதூப்புல் வருநிகமாந் தாசிரியன்
வாழியவன் பாதார விந்தமலர்—வாழியவன்
கோதிலாத் தாள்மலரைக் கொண்டாடிக் கொண்டிருக்கும்
தீதிலா நல்லோர் திரள்."

"தொண்ட ருகக்குந் துணையடி வாழிநின் தூமுறுவல்
கொண்ட முகம்வாழி வாழி வியாக்கியா முத்திரைக்கை
வண்டிரு நாமமும் வாழி மணிவட முப்புரிநூல்
கொண்டசீர் தூப்புற் குலமணியே வாழி நின்வடிவே"

கவிதார்க்கிக ஸிம்ஹாய கல்யாண குண ஶாலிநே ।
ஶ்ரீமதே வேங்கடேஶாய வேதாந்த குரவே நம: ॥

ஸ்ரீ:

ப்ரபந்தங்களும் பிருதங்களும்

[தார்க்கார்ணவ பண்டிதரத்ந சிரோமணி
ஸ்ரீ. உப. உத்தமூர் தி. வீரராகவாசார்யர்]

ஸ்ரீ தேசிகனுக்கு ப்ரஸித்தமாயுள்ள பிருதங்களுக்கும் அவர் அருளிச்செய்த ப்ரபந்தங்களுக்கு மிருக்கும் பொருத்தமானது, அதிமேதாவிகளுக்கும் அநுபவிக்க அநுபவிக்க அபரிச்சிந்நமாகவே நிற்கிறது. ஒவ்வொரு ப்ரபந்தத்திலும், இந்த பிருதங்க ளெல்லாம் இவருக்கே தகுமென்பதை அறிவிக்கும்படி அநேக அத்புத விஷயங்கள் இருக்கின்றன. இவ்வளவு பிருதங்களை அணியும்படி அபார யோக்யதை யில்லாதவர்க்கு, இப்படி அழகாய் அநேகார்த்தங்களைச் சொல்லும் திறமை வாய்க்காதென்பது திண்ணம். எந்த விஷயத்தை யெடுத்து நிரூபிக்க ப்ரவர்த்தித்தாலும், அதில் இதர புருஷர்களுடைய புத்திக் கெட்டாத அரிய பெரிய அம்சங்களைச் சடக்கெனப் பிடிப்பதும், அத்புத ரமணீயமாக உபர்யவஸிப்பதும், நம் தேசிகனிடமே நிறைந்திருக்கின்றன.

ஸ்வாமிக்குக் 'கவிதார்க்கிக ஸிம்ஹம்' என்பது ஒரு பிருதம். ஸமஸ்தமான கவிகளும் தார்க்கிகர்களும் கவிதார்க்கிகர்களும் இந்த ஸிம்ஹத்தைப் பார்க்கும்போது ம்ருக மதங்கஜ ப்ராயராய் விடுகிறார்க ளென்பதை இந்தப் பிருதம் சொல்லுகிறது. அதற்குத் தக்கபடியே அவருடைய ப்ரபந்தங்கள் இருக்கின்றன. ஒருவன் கவியாக வேணுமானால், தார்க்ரஹமானவற்றையும் க்ரஹிக்கும்படி அவனுக்குச் சக்தி யிருக்கவேணும். ரஸஹாவாதி ப்ரதாநமாக, குணாலங்காராதி சோபிதையான ஸரஸ்வதி அவனிடத்தில் விஹாரம் செய்யவேணும். அவனும் ஒரு ஸ்ரஷ்டாவாக வேண்டும்.

"ஶக்திர் நிபுணதா லோக காவ்ய ஶாஸ்த்ராத்யவேக்ஷணாத் ।
காவ்யஜ்ஞ ஶிக்ஷயாப்யாஸ இதி ஹேதுஸ்ததுத்பவே ॥"

என்று ஆலங்காரிகர் சொன்னார்.

[ஶக்தி:—ப்ரதிபை. இதி—இந்த மூன்றும் சேர்ந்து, ததுத்பவே—காவ்ய முண்டாவதில், ஹேது:—காரணம்] "லௌகிக ஜ்ஞாநஹீநஸ்ய

[illegible] ” (4-199) என்று ஸ்ரீ சாண்டில்ய ஸ்ம்ருதியிற் சொன்னபடி எல்லோருக்குமே லௌகிக ஜ்ஞாநம் வேண்டியிருக்க, ஸர்வ லோக வசீகரணமான கவந பத்ததியிற் புறப்பட்டவனுக்கு, ஜங்கம ஸ்தாவர ஸகல லோக ஜ்ஞாநம் வேண்டுவது ஆவச்யக மன்றோ? ஸங்கல்ப ஸூர்யோதயத்திலே,

“ [illegible]
[illegible] ”

இத்யாதி ஸூக்திகளிலிருந்து ஸகல பாஷா ஜ்ஞாநமும், யோகம் செய்ய ஸமுசித ஸ்தாநாந்வேஷண ப்ரகரணத்திலிருந்து ஸகல தேச பரிஸ்திதி ஜ்ஞாநமும், [illegible] பாத்ரங்களின் வாக்யங்களிலிருந்து நாநா ஜந நாகரிக விஜ்ஞாநமும் இவருக்கு அத்புதமாயிருப்பது வ்யக்த மாகிறது.

தபோயோக ப்ரபாவ ஸர்வ ஸாக்ஷாத்கார ஸரஸ கவந ஸாமர்த்ய சாலிகளான வ்யாஸ வால்மீகிகளை நினைத்தபோது, மற்றவர் கவியென வெளிக்கிளம்பினதும் வெட்கக்கேடே யென்று யாதவாப்யுதயம்.

“ [illegible]
[illegible] ”

நமக்கு ஸ்ரீ தேசிகனைப் பார்த்த பிறகு மற்றவரைக் கவியாக நினைக்க மனம் துணியவில்லை. பாண்டித்யத்தோடு கவித்வம் சேருவது அரிது. ஆனால் பாண்டித்யம் எவ்வளவு குறைகிறதோ, அவ்வளவுக் கீடாகக் கவித்வ சோபையும் குறைந்து விடுகிறது. வித்யாஸ்தாநங்களின் வாஸ்தவார்த்தங்களைக் காந்தையைப் போலே வசப்படுத்தும் கவிதையைக் கொண்டு ஸர்வ ஜநங்களுக்குத் தெளிவித்து, அவர்களை ஸத்பதத்திலே நடக்கச் செய்வதன்றோ கவிகளுக்கு முக்ய லக்ஷ்யமாவது? ‘வித்யைகளுக்குள்ளே முக்யமாய், விசேஷ சாஸ்த்ரமான வேதாந்த மென்கிற ப்ரஹ்ம வித்யைக்குத் தகுந்தபடி இதர சாஸ்த்ரங்களை அடக்கி உபயோகித்து, யசஸ் முதலிய பலங்களில் அபேக்ஷையற்று, பரோபதேச ரூபமான பலத்தை ப்ரதாநமாக நினைத்துக் காவ்யங்களை எழுதுவதென்பது, ஸர்வ தந்த்ர ஸ்வதந்த்ரரும் வேதாந்தாசார்யருமான நம் தேசிகனுக்கு இருக்குமா? அல்லது வேதாந்தார்த்த நிஷ்கர்ஷமே யிராமலும், ஏதோ யதாசக்தி சாஸ்த்ர பரிசயம் பண்ணியு மிருக்கிற கவி யச:ப்ரார்த்தியான காளிதாஸாதிகளுக்கு இருக்குமா?’ என்பதை ஸஹ்ருதயரே விமர்சிக்க வேணும்.

இப்படி, லோக காவ்ய சாஸ்த்ர ஜ்ஞாநாதி ஸம்பத்தோடு விலக்ஷண ப்ரதிபா விசேஷமென்கிற சக்தி சேர்ந்தால் காவ்யம் பிறக்கிறது. ஸஹ்ருதயர்கள் ஸர்வதா ஆஸ்வாதநம் செய்யும்படி நவநவோல்லேகங்கள் நிறைந்த க்ரந்தங்களை நம் தேசிகன் இயற்றியுள்ளார். ஒரு ராத்ரியில் ஒரு யாமத்திற்குள்ளாக ஒற்றைச் சாண் பாதுகையைப் பற்றி த்வந்யர்த்த சப்தசித்ர அர்த்தசித்ர மயமாய், ஆயிரம் ச்லோகங்களுக்கு மேற்பட்டதாய், அத்புதமான ஓர் மஹாகாவ்யம் செய்தருளின இந்த மஹநீயருக்கு எவ்வளவு நவநவோந்மேஷசாலியான புத்திசக்தி யிருக்கவேண்டும்? இவ்வித சக்தியும் அபராஹயக்ரீவன இவருக்கு ஸஹஜ ஸித்தமே.

“ [illegible] ।
[illegible] ॥”

என்கிறபடி ஸர்வ ரீதிகளையும் ‘[illegible]’ என்கிறபடி த்ராக்ஷாபாகாதி ஸர்வ பாகங்களையும் அநுஸரித்து, ஸமயோசிதமாக ஸங்க்ஷேப விஸ்தரங்களை ஆதரித்து ப்ரபந்திக்கும் ப்ரபாவம் இவர்க்கு அஸாதாரணம். விஷய வைலக்ஷண்யம், அர்த்த கௌரவம், அநுப்ராஸம், அக்லேசாந்வயம், அநேகாலங்கார ஸமாவேசம் ஸர்வபத ஸார்த்தக்யம் முதலிய மஹநீயாம்சங்கள் இவ்வுடைய ஒவ்வொரு காவ்ய ச்லோகத்திலும் காணலாம். இத்துடன், பக்தி மந்த்ரஸித்தி முதலிய மஹிமையுள்ளவ ரானபடியாலே, இவருடைய காவ்யங்கள் ஸர்வ ஹ்ருத்யங்க ளானமையோடு ஸர்வ பலப்ரதங்களு மாகின்றன. இவருடைய ஸ்ரீ ஸ்துதிக்குக் ‘கநகதாராஸ்தவம்’ என்கிற பெயர் வழங்குவதையும் காண்க.

எவ்வளவு ஆக்ரஹியான விரோதியும், இவருடைய ஸூக்தி ச்ரவண மாத்ரத்திலே ரஸாஸ்வாத மக்நனாய் ச்லாகிக்க முன்வருவா னென்பதை,

“ [illegible] ।
[illegible] ॥ ” (யா. 1-15)

என்கிற ச்லோகத்திலே ஒரு ப்ரகாரத்தாலே இவரே ஸூசிப்பித்தருளினார்.

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயத்தில்—

“ [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ ”

என்கிற ச்லோகத்தினாலே, 'மாத்ஸர்யத்தாலே தலை குனிந்து மௌனியா யிருப்பவரும், சில வாக்யங்களைக் கேட்டவாறே மயிர் சிலிர்த்துத் தலையசங்கி, வெட்கம் முழுவதும் நீங்காததாலே மூடின கண்ணோடு முகத்தை நிமிர்த்துத் தமக்குத் தாமே வசமில்லாமல் ஸ்வாரஸ்யத்தை யநுபவித்து ஸ்துதிப்பார்கள்' என்று ஸர்வ பத்யவ்ருத்தங்களிலும் கத்யத்திலும் வஶ்ய வாக்கான இவர் தாமே வெகு அழகாகவும் வ்யக்தமாகவும் வர்ணித்திருப்பதையும் காண்க.

> “ கீர்த்யா தயிதயா ஸஹஸிந்து கந்யாவாஸ விதயா ஸஹ ।
> ஸங்கோ வித்ருதம் வித்ருதம் விஹா: ஶ்ரீ ஸங்கராஜநக ॥ (யா. 1-9)

என்கிற ச்லோகத்தின் வ்யாக்யாநத்திலே ஒவ்வொரு பதத்தின் ஸாவார்த்தத்தையும் ப்ரஹ்ம ஸூத்ர தர்க்கங்களை ஸூசிப்பித்த விதத்தையு முற்று நோக்கி, அப்பய்ய தீக்ஷிதர்:—

> “ ஊஹ்யம் விதிஜ்ஞாஸ்ஸ்வந்து பாவாஸ்ஸந்தி பதே பதே ।
> கவிதார்க்கிகஸிம்ஹஸ்ய காவ்யேஷு லலிதேஷ்வபி ॥ ”

என்று பிருதத்தைச் சொல்லிப் பத்ய மெழுதிப் புகழ்ந்தார். யாதவாப்யுதயம் ஸ்ரீ க்ருஷ்ண சரித விஷயமான சிறந்த இதிஹாஸம். இது ஸ்ரீமத் ராமாயணம் போலே கௌரவிக்கத் தகுந்தது. ரகுவம்சத்திற்கும் இதற்கும் நெடுவாசி யுண்டு. ரகுவம்சத்திலே பாருங்கள்: வர்ணித்தது ராமவம்சத்தை; வணங்கினது பார்வதீஸ்வரர்களை. அது அநுசித மென்பதை இங்கே 'ஸம்பூநாவநவாம்' என்று எழுதிக் காண்பிக்கிறார். இப்படி ஸர்வ ஶாஸ்த்ர ஶைவவைஷ்ணவாதி ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ர்யத்தோடு ஸம்ஸ்க்ருத ப்ராக்ருத பாஷைகளில் கவந ஸாமர்த்யத்தைப் போல், த்ரமிட பாஷையிலும் இவருடைய கவிபாடும் திறமையைப் புகழாதார் யாவர்? ஆபால வ்ருத்தம் அகில வர்ணத்தாருக்கும் அபேக்ஷிதார்த்தோபதேசத்துக்குத் தகுந்த அநேக ப்ரபந்தங்களை யருளிச்செய்த இவருடைய தார்க்கிகத்வமும் அஸாதாரணமே. 'இது தான் ப்ரமாணம்; இந்த ப்ரமாணத்திற்கு இந்த விஷயந்தான் கோசரமாகும்; இது வேத விருத்தமான தர்க்கம்; இது அவிருத்தம்; இது அப்ரதிஷ்டிதம், இது ப்ரதிஷ்டிதம்; இந்த இந்த பரமதத்தைப் பங்கம்பண்ண இது இது தர்க்கம்' என்றிப்படித் தீர நினைத்துத் தீரமாகச் சொல்லும் மஹான் வேறு யார்? “இதம் ப்ரயோக்ஷ்யமாணத் தூஷிதி ஜாநு கூடதக்ஷா:” என்கிறபடி ஸ்ரீ பாஷ்யகாருடைய திவ்ய ஸூக்திகள் இனி வரும் பரமதங்களுக்குப் பரிஹாரங்களா யிருப்பதும் இவருடைய தர்க்க ஸூக்தி பலத்தாலே. அநேக வாதி ஸம்மதமான வழிகளை விட்டு

நம் பாஷ்யகாரர் ஒரு விதமாகத் தீர்மானித்த விஷயங்களை 'ஶ்ருதாத வ்யாக்யேவ்ய:' என்கிறபடி யுக்திகளைக் கொண்டு அவற்றிற்கு வழியைப் பரிசீலித்து விவரித்தருளினார். ஆதுநிக விமர்சகர்கள் பிறர் சொல்லும் பக்ஷங்களை யெடுத்து விமர்சித்து நிற்பர். நம் ப்ராசீந பண்டிதர்களும் மஹர்ஷிகளும் பிறர் சொல்லாத வழிகளைக்கூட ஸ்வபுத்தி சக்தியாலே சங்கித்துப் பரிஹரிப்பது வழக்கம். அதன்படியே நம் தேசிகன் சததூஷணி முதலிய க்ரந்த ரத்நங்களில் பிறருடைய பக்ஷத்தை உக்தாநுக்த ஸம்பாவித ஸர்வ ப்ரகாரங்களாலும் விகல்பித்து விஸ்தரேண கண்டித்தருளினார். இப்படி தர்க்க ப்ரதாநமான க்ரந்தங்களிலேயும் கவித்வாவிஷ்காரகமான வாக்யசைலீ விடப்படுவதில்லை.

இப்படிப்பட்ட யோக்யதா விசேஷங்களைக் கணிசித்தே ஸ்ரீ ரங்கநாதன் தன் அபிமாந பாத்ரர்களாக அநேக ஆசார்யர்கள் முன்னும் பின்னுமிருக்கச் செய்தேயும், இவருக்கே வேதாந்தாசார்ய பிருதத்தை யளித்தது. இந்தப் பிருதம் ரங்கநாதனால் அளிக்கப்பட்டதென்று பல ப்ரமாணங்களாலே ஸ்பஷ்டமாயிருக்க, ஸ்ரீ தேசிகனே “ வேதாந்ததேஶிகபதே விநிவேஶ்ய பாலம் தேவோ தயாஶதகமேதத³வாத³யந்மாம் ” என்று திருவேங்கடமுடையானிடத்திலே அநுஸந்தித்தது எப்படி யென்னில்: இங்கே மூர்த்தி பேத மிருந்தாலும், அவரே இவரான படியாலே இப்படி யநுஸந்தித்தது என்று ஒரு நிர்வாஹம். 'வித்யாஸு நீ விப்யபிரபாவேரிவாசயிநீநாம்' என்கிறபடி வண்டாம்சமாக இவரை அவதரிப்பித்து, அதன் மூலமாக ப்ரதிக்ஷிப்த பஹிர்மத ராகவும் ப்ரதிஷ்டாபித வேதாந்தராகவும் வேதாந்தாசார்ய பிருதம் பெறும்படியும் செய்தபடியாலே இப்படி யென்று மற்றொரு நிர்வாஹம். “ க்ருஷ்ணாக்²ய விப்ர வேதாந்ததேஶிகத்வப்ரதாயிநே ”என்று வேங்கடாசல மாஹாத்ம்யத்தி லிருப்பதை யநுஸரித்து மற்றுமோர் நிர்வாஹம். இந்த நிர்வாஹத்திலே, க்ருஷ்ணன் என்கிற ஒரு ப்ராம்ஹணனுக்கு வேதாந்ததேசிகத்வத்தைக்கொடுத்ததாக இங்கே சொல்லியிருக்கிறது. 'இதற்கும் தேசிகனுக்கும் என்ன ஸம்பந்தம்? எவ்வளவோ காலத்திற்கு முன் ஏற்பட்ட புராணத்தி லிருக்கும் விஷயத்தை, பின்னிட்டு அவதரித்த தேசிகனிடத்தில் ஸமந்வயப்படுத்துவதும் அயுக்தம்' என்று ஆக்ஷேபம் செய்வது யுக்தமன்று. ஏனெனில்: வேங்கடாசல மாஹாத்ம்யத்திலே இதன் விவரண மிருப்பதைக் கவனித்தால் இப்படி ஆக்ஷேபிக்க இடமில்லை.

> “ தேவதேவோ நவம் ப்ராஹ நவாஸ்ய ஸத்ருஶோ ஹரி: ।
> வித்யாஸ்ய ஜயி ஸக்தஸ்ய தயைவ நியதாத்மந: ॥

கவ்ள ஜநாஸதோ ராஜந் த்யுஹாயம் வ்யவதர்க: ।
ஸவிஷ்யதி கலௌ தே ச ஸ்ரீநிவாஸ வோ'ங்கதி ॥" (வ்யா. 10-49)

என்று அங்கே ச்லோகங்கள். நம் தேசிகன் பூர்வ ஜந்மத்தில் க்ருஷ்ணன் என்கிற ஒரு ஸ்ரீநிவாஸ பக்த ப்ராஹ்மணராயிருந்தால் என்ன வர்யகம்? விசிஷ்டாத்வைத ஸித்தாந்த மன்றோ வேதாந்த ஸித்தாந்தம்? இதுவரையில் தேசிகன் தவிர வெதாந்தாசார்யரென்று ப்ரஸித்த வ்யக்தி யாராவது உண்டா? புராணத்திலே பவிஷ்யத்தாகச் சொல்லப்பட்டவர் இவராகில் தோஷமென்ன? ஆக, 'ஸவிஷ்யதி' என்று, தான் ஸங்கல்பித்திருந்தபடி பிறகு கண்டாம்சமாக அவதரிப்பித்து யோக்யதையை விளைவித்து, ஸமய விசேஷத்திலே ரங்கநாதன் முகத்தாலே ஸ்வாபிமதத்தைத் திருவேங்கடமுடையான் ஆவிஷ்கரித்தருளினா ரென்றால் ஒரு பாதகமுமில்லை. ஆக, அநஸூயுக்களான நமக்கு இந்த நிர்வாஹமும் க்ராஹ்யமே. இவருக்கு இந்தப் பிருத மளித்ததிலிருந்து ஸ்ரீ தேசிகாபிமதமான ஸித்தாந்த ஸம்ப்ரதாயங்களே லோகோஜ்ஜீவநங்கள் என்று எம்பெருமான் திருவுள்ளமென்று நிச்சயம். இதையே அதிகரண ஸாராவளி முதலானவற்றிலும், ஸ்தோத்ர ரத்ந பாஷ்யாதிகளிலும், இந்தப் பிருதத்தை அநுஸந்தித்துத் தேசிகன் ஸூசிப்பித்தார். ஆக: இவருடைய ஸம்ஸ்க்ருத த்ராமிட காவ்ய சாஸ்த்ர க்ரந்தங்களிலே ஸ்வரூபப்ராப்தமான பரிச்ரம பரிசீலநங்களிலே அவதாநம் வைத்து, "ம்ருதா நாம ஹி தே கோ கொஸ ந ஸொஸ: வாரணாயிர்க:" என்கிற ந்யாயத்தினாலே அஸாரமான பர க்ரந்தங்களிலே வைத்த அதிக வ்யாஸங்கத்தை விட்டு, ஸர்வவித்யாஸ்தாநங்களையும் ஆலோடநம் செய்து, ஸாரஸமாய் ஸர்வலோகோஜ்ஜீவநமாய் இவர் அருளிச்செய்த காவ்ய நாடக ஸித்தாந்த ஸம்ப்ரதாய க்ரந்தங்களை ஸர்வஸஹ்ருதயர்களோடு சேர்ந்து அநுபவித்து ஜந்ம ஸாபல்யத்தைப் பெறுவோமாக.

ஸ்ரீ:

ஆத்ம ச்லாகா தத்வம்

[ஸ்ரீ. உ.வ. டி. டி. ஸ்ரீநிவாஸாசார்யர், M. A., M. L.
அட்வொகேட், சென்னை.]

ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகனுடைய கத்ய பத்ய ரூபமான ப்ரபந்த ரத்நங்கள் உத்க்ருஷ்ட காவ்ய லக்ஷண பரிபூர்ணங்களாயும், ஸஹ்ருதய சித்த ரஞ்ஜகங்களாயும், 'வாக்யம் ரஸாத்மகம் காவ்யம்' என்னும்படி சப்த ஸௌஷ்டவத்தாலும் அர்த்த பௌஷ்கல்யத்தாலும் ஆநந்தாவஹங்களாயிருக்கின்றன வென்பது நிர்மத்ஸரர்களான ஸகல வித்வத் ரஸிக விவேகிகளுக்கு ஸுஜ்ஞேயம்.

ஸ்வாமியினுடைய ஸஹஜ கவித்வத்தை ப்ரகாசிப்பிக்குமதான 'வேங்கட நாயகவி' என்கிற திருநாமமும், ஸர்வஜ்ஞத்வத்தை நன்றாக உணர்த்துகிற கவிதார்க்கிகஸிம்ஹ பிருதும் குண பக்ஷபாதிகளின் அபிமான மடியாக ஔபசாரிகமாயிராமல், ஸ்ரீதாய-ஸம்ஸியாயும் யொகாய-யுக்தமாயுமிருப்பவை யென்பதை, துக்தராசி கல்பமாய் அதிகஹந கம்பீரமான அநேக ஸாஹித்ய க்ரந்தங்களையும் சாஸ்த்ர க்ரந்தங்களையும் பகவங்முகோல்லாஸார்த்தமாக நிர்மாணம் செய்து தாமே ப்ரகடநம் செய்தருளினார்.

ஆகிலும் இது விஷயத்தில் சிலர், "ஜ்ஞாந வைராக்ய பூஷணமென்று ஸ்வதஸ்ஸித்தமான விலக்ஷணஜ்ஞாந வைராக்யாதி கல்யாணகுணபரிபூர்த்தி இருக்கச்செய்தேயும், தம் க்ரந்தங்களின் நிகமந ச்லோகங்களில் தம் திருநாமத்தையும் பிருதுகளையும் விசேஷமாகக் கருதி, 'வேங்கட நாய கவி' என்றும், 'கவிகதககஸிம்ஹ' மென்றும், 'கவிதார்க்கிக கேஸரி' என்றும் ஆதரத்துடன் கோத்திருப்பது எப்படிப் பொருந்தும்?' என்று சோத்யம் பண்ணுவார்கள். இதற்கு ஸாதாரணமாக ஆலங்காரிக ஸமயத்தின்படி

"கவிகாவ்யஸ்ய ஸம்ஸார்க்கு காவ்யேவஸ்யம் விபீயதே
ஸுநாம கீர்த்யெக காவ்யே கவி: காவ்யவிசக்ஷண: "

என்று ஒரு ஸமாதாநம் சொல்லலாம். உத்தம கவிகள் தம்முடைய பெயரையும் தம் க்ரந்தத்தின் பெயரையும் அவசியம் பிரகாசப் படுத்தவேண்டு மென்று சொல்லப்பட்டிருக்கிறது. தவிரவும், வக்த்ரு வைலக்ஷண்யமும் விஷய வைலக்ஷண்யமும் நன்றாக ஜ்ஞாதமானாலன்றி, ப்ரேக்ஷாவத்ப்ரவ்ருத்தி உண்டாகாதாகையாலே, பிரபந்த கர்த்தாக்கள்

தம் க்ரந்தங்களில் ஸ்வநாமாங்கநம் செய்து வைத்தார்கள். 'பரம் கவீநாம் ஆதாரம்' என்னும்படியான ஆதிகாவ்யத்திலும், மஹர்ஷியானவர் அநுபவத்தாலும் ஜ்ஞாநாதிசய வைபவத்தாலும் உண்டான தம் பரிபூர்த்தி தோன்றும்படி "வால்மீகிஸ்ஸம்பவா ந்ருஷிஃ, பாராவால்மீகிநா க்ருதம்" என்று சொன்னார். அப்படியே பாரதத்திலும் ஸ்ரீவ்யாஸ பகவானும் "க்ருஷ்ண த்வைபாயநஃ வ்யாஸஃ" என்றும், "வகார ஐமவாநுநிஃ" என்றும் தம்மைப் புகழ்ந்தே பேசியுள்ளார். ஸாக்ஷாத் த்ரமிடோபநிஷத் த்ரஷ்டா வான ஆழ்வாரும் ஒவ்வொரு தசகத்திலும் "குருகூர்ச் சடகோபன் சொல்" என்றும், திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியின் ஈற்றில் "மன்றில் புகழ் மங்கைமன் கலிகன்றி சொல்" என்றும் தமது ஆப்தியைப் பேசினார்கள். கம்பநாட்டாழ்வார் சடகோபரந்தாதியில் "மன்றேபுகழும் திருவழுந்தூர் வள்ளல்" என்று தற்சிறப்புப்பாயிரம் கூறியுள்ளார். இதனை த்ரமிட கவிதாபிஜ்ஞர்கள் 'திருநாமப் பாட்டு' என்றும், 'இது தற்புகழ்ச்சி ஆகாது' என்றும் சொல்லுவார்கள். இவற்றையெல்லாம் கணிசித்தே நம் தேசிகன், தம் ப்ரபந்தங்களின் விச்வஸநீயதமத்வத்தையும் உபாதேய தமத்வத்தையும் மங்களதமத்வத்தையும் பிரகாசிப்பிக்கும் பொருட்டு, அதி பவித்ரமான தமது திருநாமத்தை ஒவ்வொரு ப்ரபந்தத்திலும் ஸாதித்துள்ளார். "இத்தம் ஸ்ரீவேங்கடேசஃ" என்கிற ச்லோகத்திற்கு வியாக்கியாநம் செய்யுமிடத்து ஸர்வார்த்தஸித்தியில் இவ்வபிப்ரா யத்தை "ஸ்ரீவேங்கடேசஃ இதி வக்த்ருவைலக்ஷண்யம்......" இத்யாதி யாலே தாமே அருளிச்செய்திருக்கிறார்.

உண்மையில் அஸிதர ஸாதாரணமான 'வேங்கடநாதகவி,' 'கவிதார்க்கிக ஸிம்ஹம்' இத்யாதி திருநாமங்களில், 'கவி' சப்தத்திற்கு அர்த்தத்தைச் சிறிது பராமர்சிக்கும்போது, அது கேவலம் க்ரந்த நிர்மாண சாதுரீயை மட்டில் பற்றினதல்லவென்று அபிஜ்ஞ ரஸிகர்களுக்கு நன்கு புலப்படும். 'க்ராந்தம் கலதி பச்யதி' என்கிற வ்யுத்பத்தியைக்கொண்டு, "க்ராந்த தர்சீ ஹி கவிரித்யுச்யதே" என்று ஸ்வாமியே நிர்வசநம் செய்திருக் கிறார். ஸ்ரீதேசிகன் விஷயத்தில் ஸர்வதர்சித்வபரமாய், 'கவிஃ ஸர்வஜ்ஞஃ' என்றே தாத்பர்யம் கொள்ளவேண்டும். யுகபத் ஸர்வத்தையும் ஸாக்ஷாத் கரிக்கிற புராண கவியின் முகோல்லாஸார்த்தமாக, ஆதிகவியின் காவ்ய பத்ததியை அநுஸரித்து, அநேக காவ்யரத்நங்களை ரசநம் பண்ணின நம் தேசிகனுக்குக் கவிப் பட்டம் ஸுதராம் ஔசித்ய சோபியாகும்.

"யஸ்மிந் ப்ரஸாதஸுமுகே கவயோபி தே தே
ஸாஸ்த்ராண்யஸாவஸரிஹ தீர்த்தஹிசா ப்ரயாணி"

என்கிறபடியே மஹாகவியின் போக்யதாதிசயமானது பகவதநுக்ரஹத்

தினால் ஏற்பட்டதன்றோ? அன்றிக்கே கவய: - விபஸ்சிதஃ (கீதாபாஷ்யம்) கவி: - க்ராந்த தர்சி என்கிற விசேஷார்த்தங்களை அநுஸரித்து, "வடிவீஃ கவீநாம், ப்ரஹ்மணா விபஸ்சிதா" என்கிறபடியே ஔபநிஷத பரம புருஷ தத்வ தத்கல்யாணகுண போதநாநுகுண ப்ரபந்தங்களை நிர்மாணம் செய்தவ ராகையாலே நம் தேசிகனைக் கவி என்று சொல்வது ரொம்பவும் உபபந்நம். "வேங்கடேச விபஸ்சிதா" என்று பல இடங்களில் தம்மை ஸ்வாமியே நிர்த்தேசம் செய்திருக்கிறார். "வேங்கடநாதம் விபஸ்சிதாம் வரம்" என்று பின்புள்ளோரும் அநுஸந்தித்தார்கள்.

ஸாதாரணமாகவே, கவியென்றால், 'கவியீவித்ருவஸ' என்கிறபடி, விசித்ர நவ நவார்த்த ஸ்ரஷ்டாவாயும் மார்க்க தர்சியாயு மிருக்கவேண்டும் என்பது ஸ்வாமியின் அபிப்ராயம். "ஸ கவிஃ கத்யதே ஸ்ரஷ்டா ரமதே யத்ர பாரதீ" என்றும், "விசித்ர ஸ்ருஷ்டிர் விஹரந்து வ்யாஸஃ கவீந்த்ர நவி" என்றும் தாமே காட்டியருளிய உத்தம கவிலக்ஷணங்களை ஸ்வாமி யின் எந்த க்ரந்தத்தை ஸேவித்தாலும் தெரிந்துகொள்ளலாம்.

இனி கவிதார்க்கிக ஸிம்ஹ பிருதைச் சிறிது விமர்சிப்போம். 'கவயஃ காவ்யக்ருதஃ, தர்க்கணீயவ்யக்தி இதி தார்க்கிகாஃ-வாதிநஃ தேஷாம் பரிபவ யிதா நாம் ஸிம்ஹவத்பயங்கரஃ" என்று அப்பய்யதீக்ஷிதர் வ்யாக் யாந பங்க்தி. கவிகளுக்கும் வாதிகளுக்கும் ஸிம்ஹம் போன்றவர்; அல்லது கவியாயும் வாதியாயு மிருப்பவர்களுக்கு ஸிம்ஹம் போன்றவர். இவ்வர்த் தத்தை "கவிகதககடா கேஸரீ வேங்கடேசஃ" என்று ஸ்ரீ தேசிகன் ஆமோதித்தார். அநேகர் கவிவாதிகள் என்று பெயர் பூண்டு க்ரந்தங்களும் செய்திருக்கிறார்கள். உதாஹரணமாக ஸ்ரீஹர்ஷன் என்கிற கவி,

"யஃ ஸாக்ஷாத்குருதே ஸமாதிஷு பரம் ப்ரஹ்ம ப்ரமோதார்ணவம்
யத்காவ்யம் மதுவர்ஷி தர்ஷிததராஃ தர்க்கேஷு யஸ்யோக்தயஃ"

என்று தம் கவிதையையும் தர்க்க பாண்டித்யத்தையும் புகழ்ந்து பேசி யிருக்கிறான். ஆயினும் அஸமீசீந ந்யாய பத்ததியை அவலம்பித்து, ச்ருதி ப்ரதிபாதித பரதேவதா விசேஷ நிச்சயமில்லாமல் கண்டந கண்டநாதி க்ரந்தங்களில் அத்வைத மத பக்ஷபாதியாகவே போந்தான். நைஷத காவ் யத்தில் தூதகுணாதிகளை அதிரமணீயமாய் வர்ணித்தானாயினும், ராம க்ருஷ்ணாதிகளைக் கதாநாயகனாகக் கொள்ளவில்லை. அவனுடைய ந்யாய பத்ததியைப் பல ப்ரகரணங்களில் தேசிகன் கண்டித்துள்ளார். தம்முடைய ஸந்தேச. காவ்யத்தின் உத்கர்ஷத்தை 'நைஷதீய லக்ஷ்ய வாதிநாம்', 'ச்ருங்காரிணாம் வஃ' என்று வேடிக்கையாக ஸ்வாமி ஸூசிப்பித்தார்போலும். இம்மாதிரியான கவிவாதிகளுக்கு ஸிம்ஹம் போன்றவர் என்றாயிற்று.

அதவா, "கவயஶ்ச தார்கிகாஶ்ச கவிதார்கிகா: தேஷு ஸிம்ஹ: ஶ்ரேஷ்ட:" என்றும் கொள்ளலாம். "ஸகார ஸரிதவ்ருத:" என்கிறபடியே "குருகுலக்லிஷ்டோ முராரி: கவி:" என்றும், "ஸ்ருதி பரிசயமுள்ள மஹாகவி" என்றும் கொண்டாடப்பட்டு, ஸமீசீந ந்யாய மார்க்கத்தை அநுஸரித்த முராரியைப்போன்ற கவிதார்க்கிகர்களுக்குள் ஸ்ரேஷ்டர் என்றபடி.

அன்றிக்கே, "கவிஶ்சாஸௌ தார்கிகஶ்ச கவிதார்கிக: கவிதார்கிக: ஸிம்ஹ இவ" என்று உபமித ஸமாஸமாய் வைத்துக்கொண்டாலும் பொருந்தும்.

வஸ்துத: ஸ்ரீதேசிகனுக்குக் கவி என்றால், வால்மீகியையும் வ்யாஸரையும் தான் சொல்லவேணுமென்று திருவுள்ளம்.

"ப்ராசேதஸ கவீந்த்ர நிகமஸம்ஹித ஸூக்திநேத்ரே
ப்ராசேதஸ வ்யாஸத்ருஷ்டிகாந்த"

என்றவாறே பலவிடங்களில் இவர்களுடைய கவிதா மாஹாத்ம்யத்தைப் பேசியிருக்கிறார். வேறு இடத்தில், இந்த இருவருடைய க்ரந்தங்களை ப்ரம்ஹ ஸாக்ஷாத்காரத்துக்கு இரண்டு சக்ஷுஸ் போன்றவை என்று ஸாதித்துள்ளார். வேதோபப்ரம்ஹண ரூபமாயிருந்தபோதிலும், "ப்ரத்யக்ஷ இவ தர்ஶிதம்" என்கிற லக்ஷணத்தினாலும், காந்தாஸம்மிதமாய் ஸீதையின் ஸுமஹச்சரித்ர மானபடியாலும், ஸ்ரீராமாயணத்தை ஆதிகவி காவ்யமென்றே நிர்த்தேசம் பண்ணினராகையால், கவிஸிம்ஹ மென்றதால் முநிஸிம்ஹமான வால்மீகியைச் சொல்லிற்றாயிற்று. அப்படியே "ஸத்ந்யாயகுஸாவேந ஶதாஹாரேண தேந வ" என்கிறபடியே தார்க்கிக ஸிம்ஹ மென்றதால் ஸ்ரீவ்யாஸரையும் சொன்னபடி. இப்படி லோகோத்தர வர்ணந நிபுணதையும், விலக்ஷண நீதி நிபுணதையும் சேர்த்து ஏக ரூபம்கொண்டு, ஸ்ரீதேசிகனுடைய கவிதார்க்கிக ஸிம்ஹத்வமாக அவதரித்தது என்றே சொல்லலாம். ப்ராயஶ: இவர்களுடைய திவ்ய ஸூக்திகளையே அநுஸரித்துத் தம் க்ரந்தங்களை ஸாதித்துள்ளார். இவைகளோடு தம் ப்ரபந்தங்களில் ஸாம்யம் "வஶீகவஸம்ஹவப்ரிய ஸதாம் ஹ்ருதயோக்தி:" என்றதால் சொல்லப்பட்டது.

"ஸர்வஶ்ருதிமநோஹரம், த்ருஷ்யம் வேதைஶ்ச ஸம்மிதம், உதாரவ்ருத்தார்த்தபதை:"

என்று ஸ்ரீமத்ராமாயணத்தில் மஹர்ஷி தம் ஏற்றத்தைப் பேசினர். ஸ்ரீதேசிகனும்,

'ஶ்ருதிஸுகஹ்ருதயாநாம்', 'ஶ்ருதிவதம் ஸித்ஸூக்தஸூக்தயை:' 'வேங்கடேசஸ்ய வாணீ'

என்று தம் ப்ரபந்தங்களின் உத்கர்ஷத்தை ஆங்காங்குக் காட்டியிருக்கிறார். ஶதகோடி ப்ரவிஸ்தரமான ராமாயணத்தை ஸ்ரீவால்மீகி இருபத்து நாலாயிரம் ஸ்லோகமாக ஸங்க்ரஹித்தாட்போலே, வால்மீகி ராமாயணத்தின் ஸாரார்த்தத்தை, ஸ்ரீரங்கநாத திவ்யாஜ்ஞையாலே ப்ரணவமுக வாணீ பரிபணமான பாதுகா ஸஹஸ்ரம் மூலமாக வெளியிட்டருளினர்.

"ஶ்ருதம் தேவ தே ப்ரஹ்மந் ப்ரவ்ருத்தேயம் ஸரஸ்வதீ"

என்று வால்மீகிக்கு ஸாக்ஷாத் லோகபிதாமஹன் அநுக்ரஹித்தாப்போல் "ஜுஷ்டம் கவேர்நிஜகௌஶலவஶாத்காஷீ:" என்று ஸ்ரீரங்கநாத பாதுகையே இந்த க்ரந்தத்தைச் செய்வித்ததாகத் தேசிகனுடைய அநுஸந்தானம். இதில் 478-ஸ்லோகத்தில் இந்தப் பாதுகா ஸ்தோத்ரத்தை ஒருதடவை கூட திருப்பிப் பார்க்க அவகாசமில்லாமல் வெகு சீக்ரத்தில் செய்ததாக "ஸாராஸாரவஸக்ருத்விஶோத வரிஷ்டநாக்ஷரஶ்ரேயஸிஹி:" என்றதால் ஸூசிப்பித்திருக்கிறார்.

ஸம்க்ஷேப ராமாயண ஸ்தாநத்தில், "ஶஷ்யம் கவீநாம் நிகஷம் வதந்தி" என்கிற ந்யாயத்தை ஒட்டி, கடோர ஸுகுமார ஶும்ப ஶம்பீரமான மஹாவீர வைபவத்தைச் செய்தருளினர். ஸம்க்ஷேபத்தின் முடிவில் வஸுதா ஸ்ரோத்ர ஜந்மாவான முநிவர் 'பஂநு ஶிஜ:' இத்யாதியாலே த்ரிவர்க்க பலத்தையே சொல்லித் தலைக் கட்டினர். வேங்கடேசாவதாரமான தேசிகன் "ஸவ்யஸேவ்யஜம்—பஂத" என்று ஸம்ஸார நிவ்ருத்தியையே பரமபலமாக அருளிச்செய்தார்.

இச்சரணாகதி வேதமான ராமாயணத்துக்கு உபநிஷத்பாகம் போன்ற அபயப்ரதாந ப்ரகரணத்தை, மணிப்ரவாள ஸரணியில் ஒரு ரஹஸ்ய க்ரந்த மூலமாக விஶதமாகவும் விஸ்தாரமாகவும் ஸாதித்தருளி, முக்யமாக சிஷ்ய க்ருத்யத்தையும் ப்ரபத்தியின் அங்காங்கிகளையும் ஸ்பஷ்டமாகக் காட்டியிருக்கிறார். ஆயினும், ஆசார்ய க்ருத்யம் தத்ஸம்பந்தியான சேதநாந்வேஷணம். சேதநோஜ்ஜீவநோபாய சிந்தநம், ஸர்வரக்ஷகனுக்கு ஆசார்யமுகேந புருஷகாரலாபம், இவைகளை விஷயீகரித்து, ஆசார்யர்கள் இதுவரை காவ்ய ரூப க்ரந்தம் ஸாதிக்கவில்லை என்கிற குறைதீர, வ்யங்க்ய ப்ரதாநமாய் ஆசார்ய ப்ரவ்ருத்தி ப்ரதர்ஶகமுமான ஹம்ஸ ஸந்தேஶத்தை ரசநம் பண்ணினர். இதில் அநேகமாய் "யஶ ஸாரஸம்ஹிதம், ஹம்ஸோ யதா க்ஷீரமிவாம்புமிஶ்ரம்" என்கிறபடியே ஸாரக்ராஹியாயும், ஸத்ஸம்ப்ரதாயத்துடன் கூடின ஸதாசார்யரான ஸ்ரீதேசிகனுடைய ஸ்வவ்ருத்தாந்தமும்

ஸ்வாநுஷ்டாநாநுபவாதிகளும் விவக்ஷிக்கப்பட்டிருக்கின்றன வென்பது அங்கங்கே கண்டு கொள்ளலாம். கேவலம் ஒரு அரசன், யக்ஷன் முத லானவர்களைக் கதாநாயகனாகக் கொண்ட இதர ஸந்தேஶ க்ரந்தங்கள் போலன்றிக்கே,

"ந ஶக்நோத்யாஹர்தும் காவ்யாநாம் யஶோபாக் ராகவாத்ருதே"

என்று மஹர்ஷி அறுதியிட்டபடியே ரகுநாயகனைக் கதா நாயகனாகக் கொண்டார் தம் க்ரந்தத்தில். ராம ஸந்தேஶார்த்தம் ஒரு பக்ஷி விஶேஷத் தை வரித்ததற்கு ஒரு காரணமும் உண்டு. அசோக வநிகையில் பிராட்டி யானவள் ராக்ஷஸிகளினுடைய தர்ஜந பர்த்ஸநாதிகளாலே துக்காக்ராந்தை யாக இருக்கும்போது, ஸீதாபக்ஷபாதிநியான த்ரிஜடையானவள் தான் கண்ட ஸ்வப்ந கதநாவஸாநத்திலே ராமவார்த்தா ஶ்ரவண ஸூசகமான சகுந நிமித்தத்தை

"பக்ஷீ ச ஶாகாநிலய: ப்ரஹ்ருஷ்ட: புந: புநஶ்சோத்தம ஸாந்த்வ வாதீ"

என்றனள். இந்த ஆசார்ய லக்ஷண கர்ப்ப ஶ்லோகத்தில் 'பக்ஷி' சப்தத்தால் ஸூசிப்பிக்கப்பட்ட ராகா சந்த்ர த்யுதி ஸஹசரமான ராஜஹம் ஸத்தை ஸ்ரீராமசந்த்ரன் வஹித்தது ரொம்பவும் உசிதம் என்று நம் கவி ஸிம்ஹம் எண்ணினர் போலும். இந்தக்காவ்யத்தை ரொம்பவும் அவதாநத் துடன் தாம் செய்தருளினபடியை "ஶிக்ஷா ஶாணோல்லிகிதம், ரஸஜ்ஞ ஶாஸ்த்ரம்" என்பதால் ஸாதித்துள்ளார்.

இம்மாதிரியே 'ஜயம்' என்று பெயர்பெற்ற வ்யாஸாம்நாய பயோ நிதியான மஹாபாரதத்தினுடையவும் ஹரிவம்சத்தினுடையவும் ஸாராம் சத்தைக் கோபால விம்சதியினாலேயும், 'க்ஷோதக்ஷமம் காவ்யரத்நம்' என்று தாமே புகழ்ந்து யதுவீர சரிதத்தினாலும் ஸங்க்ரஹித்தருளினர் நம் தேசிகன். "கண்டே ஸ ஏஷ கவிதார்க்கிக ஸிம்ஹநாத:" என்று ஜயகோஷணம் செய்ததும் பாரதத்தின் முடிவில் மஹர்ஷி "ஶ்ரூயதாம் ஸிம்ஹநாதோऽயம் ருஷேஸ்தஸ்ய மஹாத்மந:" என்று சொன்னதை அடியொற்றினது.

இனி ஸ்வாமியினுடைய வாதி ஸிம்ஹத்வத்தைச் சிறிது அநுபவிப் போம். "வாத: ப்ரௌடதராஶயம், நீதிர் ஸூக்ஷ்மநிரீக்ஷிதாம்" என்று கீதாசார்ய னால் ப்ரசம்ஸிக்கப்பட்ட ஸத்தர்க்கமும், நீதி நைபுண்யமும் தேசிகனிடத் திலேயே குடிகொண்டன. ந்யாயபரிசுத்தி ந்யாயஸித்தாஞ்ஜநாதிகளில் ஆங்காங்கு அவைதிக அஸாம்ப்ரதாயிக தர்க்க க்ரந்தங்களைக் கண்டித் தும் பரிஷ்கரித்தும், ஸம்ப்ரதிபந்ந க்ரந்தங்களை அநுஸரித்தும் இருக்கிற ந்யாய பத்ததி நம் ஸபையோரால் ப்ரசாரம் செய்யப்பட்ட ந்யாய ஸித்

தாஞ்ஜந கோசத்திலும், அதின் முடிவில் அநுபந்தமாகச் சேர்க்கப்பட்ட இதர க்ரந்த ஸூசிகை பார்வையிட்ட மாத்ரத்தில் ந்யாய ஸித்தாந்தத் தில் அதிக ப்ரவேச மில்லாதவருக்கும் நன்கு விளங்கும்.

அன்றிக்கே: தேசிகனுடைய காவ்யங்கள் நவரஸாஸ்பதமா யிருந்தும்

"ரஸ ரஸ ஸ்வோத்ஸம் ஶ்ருங்காரோ வீர ரஸ வா
ஸம்பந்நோ ரஸாஸ்வேத்ய காயத்ம் நிவேஷ்டணோத்தம்"

என்கிறபடியே ஶ்ருங்கார ரஸத்தையும் வீரரஸத்தையுமே முக்யமாகக் கொண்டன. ஶ்ருங்காரத்துக்கு உறுப்பானது இவருடைய கவி ஸிம்ஹத் வம். வீர ரஸத்துக்கு உறுப்பானது தார்க்கிகாக்ரேஸரத்வம். இதற்கு அநு குணமாகவே, பக்தியானது ஶ்ருங்கார வ்யாபாரமாகப் பரிணமிக்கும்போது, ஸப்த தந்த்ரி ஸம்பூர்ண விலக்ஷண வீணாவாத்ய ஸ்தாநாபந்நராய்க் கொண்டு, தேசிகன் வீணாநாதம் போலேயும், வேணுகாநம் போலேயும், கர்ணாம்ருதமாயும், ஸ்வாதுப்ரஸந்ந ரூபகமாயுமுள்ள ஸூக்திகளை அவ தரிப்பிக்கிறார். வீரரஸத்துக்கு ஸஹகாரியான உத்ஸாஹ ஸ்தாயீபாவத் தைக் காட்டும்போது, இவருடைய ஸிம்ஹநாதம் கம்பீர பீஷணகதியுடன் அதி ப்ரௌடமாய்க் கிளம்புகிறது. ஶ்ருதி ஸித்தாந்த சூரராகப் பரமதப் போர் பூரிக்கும்போது 'பாஞ்சஜந்ய ஶ்ரேணீ ஸ்ஃபூர்ஜிதம்' என்கிறபடியே இவருடைய ஸூக்திகள் ப்ரதிவாதிகளுக்குப் பயாவஹமாய் இருக்கின்றன. திவ்ய வேணுவானது ஒருகால் விசேஷத்தில் க்ருஷ்ணனுடைய அதர ரஸாநுபவம் செய்தது. அதனால் கோபிகைகள் உஜ்ஜீவித்தார்கள். மற்றொரு காலத்தில் பாஞ்சஜந்யம் அப்படியே அநுபவித்தது. அதன் மூலம் கீதையும் அவதரித்தது. ஸர்வ ஜநங்களும் உஜ்ஜீவித்தார்கள். இவைகள் இரண்டின் அநுபவ ப்ரகாரத்தை ஒரே ஸமயத்தில் அநுபவித் தார் நம் தேசிகன்.

"வம்ஶேந ஸம்வவதிநா ச நிஷேவிதம் தே
பிம்பாதரம் ஸ்ப்ருஶதி பாஞ்சஜந்ய உதிதே"

என்றல்லவோ வ்யாமோஹித்தது நம் தேசிகன் !

மேலும், கவிதார்க்கிக சப்தங்களாலே த்ராமிட வேதாந்தத்திலும் ஸம்ஸ்க்ருத வேதாந்தத்திலும் அநன்யாத்ருசமான ப்ரதிஷ்டையை யுடையவ ரென்றும் ஸூசிதம். த்ரமிடோபநிஷந் நிவேஶ ஶூந்யரான பாஹ்ய ஹீநர்களையும், ஸம்ஸ்க்ருத பரித்யாகம் பண்ணின குத்ருஷ்டிகளையும் திருத் தித் தம்முடைய ஸிம்ஹாவலோகநத்தாலே உபயவேதாந்தங்களையும் விசே ஷமாகக் கடாக்ஷித்து ப்ரவர்த்தித்தபடியாலே, இப்பட்டம் ஸார்த்தம் உப பந்நம். செவிக்கினிய செஞ்சொற்களால் ததும்புகிற த்ரமிடோப ஸார்த்

தினின்றும் ரத்நங்களைத் திரட்டி, "ஈஶ்வர, ஈஜநீ ஈம்ஹதாவ:" என்கிற தாத்பர்ய ரத்நாவளியையும் ஸம்ஸ்க்ருத வேதாந்தத்துக்கு அத்யந்தம் உபகாரமானதும் "யாயெஹா ஹெதாஜயாஷெ:" என்று ப்ரசம்ஸிக்கப்பட்ட தத்வமுக்தா கலாபத்தையும் ரசநம் பண்ணி இப்பிருதை அந்வர்த்தமாக்கினர். இப்படியாகவே நமது ஆசார்யனுடைய கவிதையும் தார்க்கிகத்வமும் அந்யோந்ய சோபாவஹமானவை. ஸிம்ஹவநகுப்தி ந்யாயத்தினலே இவருடைய ஸத்கவிதை யதாவஸ்தித ந்யாய மார்க்கத்தினல் அநுக்ரஹிக்கப்பட்டது. ந்யாய மார்க்கமோ ஸமீசீநமாயும் பாரிஷத ஹ்ருதயங்கமமாயும், 'நிஜா தி நீதெ தஃ ஶஹம்' என்னும்படிக்கு அதிமங்களகரமாயுமுள்ளது. ஆனதுபற்றியே இச்சேர்த்தியையே "ஜிநீஷெதாஜெ கவிதாகிகெஹரநு ஜிஹ்வாஜ்ரஸிஂஹாஸநஜ்யெயாஃ" என்று ப்ரார்த்தித்தார். தவிரவும்,

'ஸாகஜொநவா ந யஸ்ய ஸூக்திஃ
வூஷெதஷ்யூ வயொநியெஸூயெவ'

[நீதியோடு கூடின கவிதை பாற்கடல் அமுதம்போல் மநோஜ்ஞமானது] என்று இந்த ஸாஹித்யத்தின் அழகைத் தாமே காட்டி யிருக்கிருர். "கவீநாஜஶநாகவி:" என்கிற விடத்திலேயும், கவிகளுக்குள் உசநர்க்கு வைலக்ஷண்யம் நீதிநிபுணத்வாதிகளால் என்று ஸ்வாமியின் விவரணம். இவைகளையெல்லாம கணிசித்தே தம்முடைய கவிதாகுண பரிபூர்த்தியை, 'கவிஃ ஶொஹதெ ஸத்யவாதீ' என்று பேசினர்.

இவருடைய கவித்வ ஸிம்ஹத்வ சாஸ்த்ர பாண்டித்யமும், அதிகம்பீர சப்த ஸந்தர்ப்பமும், ரசநாவைகரியும் மீமாம்ஸா பாதுகாதி க்ரந்தங்களில் ஸுஸ்பஷ்டம். இவைகளைப்பற்றி நாம் சொல்வதானல்

'கநாஶ்ராதாவஷ்யம்', 'ஷஹாநம் ஸௌஹாஷ்ம
வரிதிதயொவிஹநம் வஷாநாம ஸொஜ்ராத்ராக"

இத்யாதி ச்லோக பதங்களாலே ஒருவாறு பேசலாம்.

சுத்த சாஸ்த்ர பங்க்திகளில்கூட ஶப்தஸௌஷ்டவத்தைப் பார்த்து நாம் ஆச்சரியப்படுகிறோம். "ஶாதக ஶயகா ஜஶயா திதிரதஶாஷ ஷெவஹாநாம க்ருஷ்ணஹெஷாஃ" என்று வர்ணிக்கிருர் நம் கவிஸிம்ஹம்.

நமது தேசிகன் ப்ரயோகம் செய்த சில பதங்களும் ப்ரயோகங்களும், பூர்வாசார்யர்களாலும் மஹாகவிகளாலும் ஏற்கெனவே உபயோகப்படுத்தப்பட்டன என்பதனல் நிகர்ஷாவஹமாகாது. அந்தந்த அநுகரண ஸ்தலங்களில் த்வந்யலங்காரத்தாலோ, ரஸ புஷ்டியினலோ, ஒரு

விசேஷ கல்பனை செய்தே காட்டியிருக்கிருர். சித்தாகர்ஷகமான விடத்தை ஶ்ரோத்ராகர்ஷகமாயும் செய்துள்ளார். ரத்நக் குவியலிலிருந்து நல்ல ரத்நங்களைப் பொறுக்கித் தோஷங்களை மறைத்து ஒரு ஸம்ஸ்தாந விசேஷத்தில் அழகாக அமைப்பது சில்பியின் (art) சாதுர்யம். சப்த ரத்நங்களை அமைப்பதில் அதிக சமத்காரத்தை உடையவர் நம் தேசிகன். "ஶ்ருந்நாதிரநீஜாதம்" என்றுர் தம் வேலையை. "விஷ்யாஶிஷ்ட ஶூஶணஜிநா" என்று தம்முடைய சாதுர்யத்தைத் தாமே பேசியும் இருக்கிருர். இந்த ரசநா சமத்காரத்தைச் சில நாட்களுக்கு முன் ஸ்ரீஸ்துதி வ்யாக்யாநத்துக்கு உபோத்காதம் எழுதிய ப்ராச்ய பாஶ்சாத்ய கலைகளில் அந்யாத்ருசமான கௌஶலத்தையுடைய ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமி, "ஸ்மாரகாலங்காரம்" என்று சொல்லலாமென்று தம்முடைய ஸ்வாபாவிக ராஸிக்யத்தாலே வெகு அழகாக எடுத்துக் காண்பித்திருக்கிருர்.

சாஸ்த்ரபாண்டித்யத்தைக் காட்டிலும் தம்முடைய வித்யா கௌசலத்திலும் கவிதையிலும் தமக்கு அதிக ஆதரவு இருந்தமையை, "கவிதாகிக கெஸரிணா வெஂகடநாயெந விரசிதஃ கவிநா" என்றதால் நன்கு காண்பித்திருக்கிருர். கவிதார்க்கிக ஸிம்ம பிருது கிடைத்தாலும் தம்முடைய ஸஹஜ கவித்வம்தான் தமக்கு ரொம்பவும் ருசித்தது என்று தம்மைக் 'கவி' என்று அதிக குதூஹலத்துடன் ஸாதித்துக்கொண்டார்.

ஸ்வாமிக்குக் கவிப் பட்டம் கொடுத்ததற்கு இன்னமும் ஒரு காரணம் தோற்றுகிறது. உலகம் படைத்தான் கவியாயின மாறனுக்கு அன்பராய் அவர் பணியுரைத்தே மதுரகவியானர் அவ்வாழ்வார். அவர் துணிவார்க்குத் தொல்வழி காட்டினற் போல நம் தேசிகனும் 'யதிஸாவஹௌஜ வசஸாம ஶ்ருவ்யத்திஹிஃ' என்றும், 'யஸ்ய வா ஶ்ரீத்திவயஹா யதிராஜ ஸாஷஸதீ' என்றும், 'ஶ்ராவீஜ வெத்ய வஷவீம யதிராஜஷ்ரஷ்டாம' என்கிறபடியே, "மாறன் துணையடிக்கீழ் வாழ்வையுகக்கு மிராமானுசமுனி வண்மை போற்றும் சீர்மையன்' என்று பஹுமானிக்கப்பட்டு, 'ஸ்ரீஹாஷ்யகாரஃ வத்ரநஶாநா ஷஶிதம் வாநஃ। உஜதஹ ஶாஹதொநநம்' என்று சொல்லப்பட்ட ஆச்சர்யமான வைபவத்தை உடையவராய் வைகுண்டகண்டா பதத்தை நிஷ்க்கண்டமாகச்செய்த தூப்புல் குலமணி யாகையாலே, இவருக்கும், மதுரகவிக்குப்போல கவியென்ற திருநாமமும் சாத்தினது ரொம்பவும் பொருந்தும். திருமாலை விலக்கி மாறனிடத்தில் மதுரகவி ஈடுபட்ட ரீதியிலே, ஸ்ரீமுராரியையும் தவிர்த்து ஸ்ரீஶடாரியிடத்தில் காட்டிலும் யதி ஸார்வபௌமரிடத்தில் வ்யாமோஹித்தார் நம் தேசிகன். 'கநகஶூத ஶாஹிஷவஷம ஸதாம, யதீஂஷ்ரவாணள" என்று தமது ஆச்ரயணத்

னுக்கு உடையவர் திருவடியையே முக்யமாகக் கொண்டார். ஆழ்வார் பெருமையைப்பற்றி ஆயிரம் ஸ்லோகங்களால் பேசிய பாதுகா ஸஹஸ்ரத்தின் நிகமந ஸ்லோகத்திலும், உடையவரிடம் தம் ஆதராதிசயம் தோற்ற முதலில் 'ஜயதி யதிராஜஸூக்தி:' என்றே முதலில் ஸாதித்துப் பிறகு, "ஜயதி ஸகலவித்யா வாஹிநீ ஜந்மசைல:" என்று தலைக்கட்டின ஸ்வாரஸ்யமும் நோக்கத் தகுந்ததே.

இப்படியாகவே, "நிக்ஷேபம் கஞ்சிந்ந்ருபதி ர்லபதி ஸந்தஸ் ஸாக்ஷணாயத்தம் ஸத்வம்" என்கிறபடியே ஸ்ரீபகவத் ராமாநுஜ ஸித்தாந்தத்தை நிலைநிறுத்தினது ஸ்ரீஸ்வாமியினுடைய மஹோபகாரம். ஸ்ரிய:பதியின் அபார கருணைக்கு எல்லோரும் பாத்ரர்களென்றும், அந்தணரும் அந்தியரும் வாசியில்லாமல் ப்ரபத்தியை அநுஷ்டித்துத் தச்சரணாரவிந்தத்தையடைய அதிகாரிகள் என்றும் நிர்த்தாரணம் செய்த உதாரசீலரான மஹாபுருஷன் இவர். அவதார புருஷராயினும் ஸர்வ ஸாது ஜநோஜ்ஜீவநார்த்தம் உத்தம ஸ்ரீவைஷ்ணவர் இருக்கவேண்டும் முறையை வேதோக்தமான ஒரு நூற்றாண்டு திவ்யமங்கள விக்ரஹத்துடனே இந்த லீலாவிபூதியில் எழுந்தருளியிருந்து, தம்முடைய உத்தம அநுஷ்டாநாதிகளாலே, பரமகாருணிகரான இம்மஹான் நமக்குக் காண்பித்தருளினார். மிகவும் ரோபநீயமான நிக்ஷேப சாஸ்த்ரத்தையும் லோகஸங்க்ரஹார்த்தம் ஸம்க்ஷேப க்ரந்தங்களாலும், விஸ்த்ருத ப்ரபந்தங்களாலும், ஸம்ஸ்க்ருத பாஷையாலும், தேச பாஷையாலும், கத்யத்தாலும், பத்யங்களாலும், நாடகத்தாலும் வெளியிட்ட இம்மஹானுடைய கருணையை நாம் என்னவென்று சொல்லக்கூடும்?

"விஸ்ருததிஹ ரஹஸ்யம் யந்நயாமோ வநீயம்
ஸ்வமதவிபரீதக்ஷ ஸம்யமா வா ததேதத் ।
நிஜமஹிமவிசேஷவ்யஞ்ஜநோத்ஸேண நாயம்
க்ஷமத இதி விவிச்ய க்ஷந்த மஹந்தி ஸந்த: ॥"

என்று அருளிச் செய்தார்.

நம் தர்சநத்தில் சரீர சரீரிபாவத்தை முக்ய கொள்கையாக ஒப்புக்கொண்டதின் முக்ய பலம் யாரிடத்திலும் வைஷம்யமே பாராட்டக்கூடாதென்பதே. இதையும் நம் ஆசார்யன்

"க்ருத்ஸ்ந ஜக வபுஷாபி விஸ்வமேவ ஸமவஸ்ரிதவத்ஸலாநுஸாரா
த்ந கயம் வைராவகாச:"

என்று அதிரமணீயமாய் நிஷ்கர்ஷித்தார்.

இற்றைக்குச் சுமார் 668 ஆண்டுகளுக்கு முன் இம்மஹாநுபாவர், லோகஹிதைஷிணீயான பகவத்ராமாநுஜ திவ்யாஜ்ஞையை திகந்த வ்யாபினியாக ஆக்கும்பொருட்டு இப்பூமண்டலத்தில் அவதரித்தார். காலக்ரமத்தாலே நம் ஆசார்ய கோஷ்டியில் கடைசியாக அவதரித்தும், ஜ்ஞாநவைராக்யாதிகளாலே ப்ரதமாசார்யராகவே விளங்கினதுபற்றி அநந்ய ஸாதாரணமான 'தேசிகன்' என்கிற திருநாமம் ஏற்பட்டது. நமது ஆசார்ய கோஷ்டியில், இவர் ஆசார்ய சக்ரவர்த்தியாகையாலே 'வேதாந்ததேசிகன்' என்று இவருக்கு மூர்த்தாபிஷேகம் செய்யப்பட்டதாம். இவருக்கு நடந்த பட்டாபிஷேகம் அதிவிலக்ஷணமானது. "வஸிஷ்ட்ரோ ராமம் ந்ருபேசயத்" என்கிறது போல், இவரை வேதாந்ததேசிக பதத்தில் வெங்கடசைல நாதனே நிவேசிப்பித்தார். வஸிஷ்ட வாமதேவாதிகள் ஸ்ரீராகவனுக்கு அபிஷேகம் பண்ணினாப்போல், ஸுபமதிகளான ஆசார்யர்கள் இவருக்கு அபிஷேகம் பண்ணினார்கள். 'சதுர்ணாம் ஸாகராணாம்' என்று நான்கு ஸமுத்ர தீர்த்தங்களால் சக்ரவர்த்தித் திருமகனுக்கு அபிஷேகம். நம் தேசிக சக்ரவர்த்தியோ "யதிந்ருபதி யச: ஸம்வேதைகார்ணவே அபிஷிக்தம்" என்று நாலு ஸமுத்ரமும் ஏகார்ணவமாகி உடையவர் யசஸ்ஸாக வ்யாபித்து, அதினாலேயே ஆசார்யக ஸாம்ராஜ்யத்தில் அபிஷிக்தரானார். இப்படி, திக்விஜயம் பண்ணி ஆசார்ய ஸிம்மாஸநத்தில் நம் கவிதார்க்கிகஸிம்ஹம் வீற்றிருந்தபோது, ஜயத்வஜபட்டிகை வேணுமன்றோ? சாரீரக சரீரத்தை வ்யக்தமாக்கின ஸ்ரீபாஷ்ய தத்வ டீகையே அந்த ஸ்தாநத்தில் ஏற்படுத்தப்பட்டது. இப்படி நமது ஆசார்யன் நமக்கு ஏற்படுத்தி வைத்த ஆசார்யக லக்ஷ்மீ ஸாம்ராஜ்யத்தைக் கைநழுவ விடாமல் 'வர்த்ததாம் அபிவர்த்ததாம்' என்று மேன்மேலும் வ்ருத்தியாக்கும்படி அவதார திநமான இத்திநத்தில் ஸ்ரீவைஷ்ணவ ஜநங்கள் அனைவரையும் ப்ரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ:

ஸ்ரீதேசிக குணாம்ருதாஸ்வாதிநீ

[ஸ்ரீ. உப. தி. இ. சடகோபாசார்யர், B. A. B. L.
அட்வொகெட், திருப்பாப்புலியூர்.]

விராஜதே தேசிகம் தீபம் நிகமாந்த நவாச்ரயம் ।
யஸ்ய ஸாரஸ்வதம் ஸ்ரோதோ வகுளாமோதவாஸிதம் ॥

ஶ்ரிய:பதியின் திருவடித்தாமரையில் உத்பத்தியாய், லோகத்ரய பாவ நார்த்தம் பகீரத ப்ரார்த்தனையை வ்யாஜீகரித்துப் பூமியில் அவதரித்த கங்கையும் ஸூர்ய புத்ரீயாகிய யமுனையும் அந்தர்வாஹிநீயான ஸரஸ்வதீ நதியுடன் ‘கங்கா யமுநயோர்மத்யே யத்ர குப்தா ஸரஸ்வதீ’ என்றபடி த்ரிவேணீ ஸங்கமமென்று பெயர் வழங்கும் ப்ரயாக புண்ய க்ஷேத்ரத்தில் ஒன்று சேர்ந்து, ஸர்வோபஜீவ்யமாய் லோகத்தை உபகரிப்பது போல், ஸ்ரீமந்நாராயணனால்

“யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம்
யோ வை வேதாம்ஶ்ச ப்ரஹிணோதி ॥”

என்று ஶ்ருதி ஸித்தமானபடி, தம் நாபீகமலத்தில் உதித்த முதற் புதல்வனை பிரமதேவனுக்கு உபதேசிக்கப்பட்டு, தந்முகமாய் லோகத்தில் ஆசார்ய சிஷ்ய க்ரமேண ப்ரசாரமடைந்து வரும் வேதவேதாந்த ஸித்தாந்தமும், இக்கலியுகத்தில் தத்வஹித புருஷார்த்த விஷயமாய் ஏற்படும் அஜ்ஞான ஸம்ஶய விபர்யய ரூபமான அந்தகாரத்தை விலக்கித் தெளியாத மறை நிலங்கள் தெளியும்படி செய்வதற்கென்றே இந்த யுகாரம்பத்தில் உதித்த ஜ்ஞாந ஸூர்யனாகிய ஸ்ரீசடகோப முநியின் வதநாரவிந்தத்தில் நின்று வெளிவந்து, பிறகு ஸ்ரீமந்நாத முனிகளால் அதிகரிக்கப்பட்டு ப்ரவசநம் நடந்துவரும் த்ரமிடோபநிஷத் ஸம்ப்ரதாயமும், ‘வக்தா து பகவாந் ஸ்வயம்’ என்றபடி பகவத்ப்ரோக்தமான ஸ்ரீபாஞ்சராத்ராத்யாகம மார்க்கத்துடன்

‘வேங்கடேஶாவதாரோऽயம் தத்கண்டாம்ஶோऽதவா பவேத்’

என்று பெரியோர் போற்றும்படி, ஜந்மம்முதல் அஸாதாரணமான விஶ்ரத்தியும் வைலக்ஷண்யமும் பொருந்திய ஸ்ரீநிகமாந்த தேசிக மஹாதீர்த்தத்தில் ஸம்மிளிதங்களாய் ஸமஸ்த ஜகத்துக்கும் உபஜீவ்யமாய்க்கொண்டு,

ஸர்வப்ரகாரமாகவும் லோகத்தை உபகரிக்கும் விஷயம் தத்வார்த்தத்தை யதாவத்தாய் அறிபவர்களுக்கு நன்கு விளங்கும்.

இவ்வாசார்யன் அதி பால்யத்திலே ஸ்ரீ நடாதூர் அம்மாள் காலக்ஷேப கோஷ்டியில் தம்முடைய அதிமாநுஷமான மேதா விலாஸத்தை ஆவிஷ்கரித்ததையும், பின்பு எண்ணிறந்த ஸந்தர்ப்பங்களில் ப்ரதிவாதிகளை வாதப்போர்களில் திசையற்றோடும்படி நிரஸநம் செய்ததையும், தேவ பாஷையிலும் தேசபாஷையிலும் துர்க்ரஹமாகவும் ஸுலபமாகவும், விரிவாயும் சுருங்கியும், ‘அணோரணீயாந் மஹதோ மஹீயாந்’ என்பதுபோல் அவ்வோவதிகாரிக்குத் தக்கபடி பரமகாருண்யத்துடன் பரஶ்ஶத க்ரந்தங்கள் அநுக்ரஹித்திருப்பதையும், பஹுவிதமான ஸம்சயங்களுக்கும் ஆக்ஷேபங்களுக்கும் விஷயமாயுள்ள அதிகஹநமான ஶாஸ்த்ர ஸூக்ஷ்மங்களையும், அதிநிர்மலமான நிஶ்சய ஜ்ஞாநத்துடன் மந்தமதிகளுக்கும் ஸந்தேஹமற விஶதவிஶதமாய் விளங்கும்படி உபபாதிக்கும் ப்ரணாடியையும் நன்கு பராமர்சிக்குமிடத்து, இவர் விபவாவதாரங்களுள் பூர்ணாவதாரமென்று புகழ்பெற்ற ஸ்ரீ க்ருஷ்ண பகவானைப்போல் ஆசார்யாவதாரங்களுக்குள் பரிபூர்ணமான ‘ஸ்ரீவிஷ்ணு பூர்ணாவதார’ மென்று நாம் கொண்டாடத் தட்டில்லை. ஒருகால் இவ்விதமான ஸாத்ருஶ்யம் ஸ்வபாவத்தில் அமைந்திருப்பது காரணமாகவே இவ்வாசார்யனுக்குப் பாலக்ருஷ்ண மூர்த்தியினிடம் அடங்காப் பற்று ஏற்பட்டு, அதன் பரீவாஹமாக

“அயாசித சாருவம்ஶநாளா ப்ரேக்ஷாரும்பி ஸந்த்ரோதஸம்ஸாரைர: ।
ஹரிநீலஶிலாவிமர்த நீலா: ப்ரதிபாஸ்ஸந்து மம ப்ரயாணே” ॥

என்று தமது அந்திம ஸ்ம்ருதிக்கு அம்மூர்த்தியே விஷயமாகக்கடவதென்று இவரால் அநுஸந்திக்கப்பட்டதுபோலும்.

இது நிற்க: போர்க்களத்தில் திடீரென்று துயரத்தில் அழுந்திக் காண்டீவத்தைக் கை நழுவ விட்டுப் புலம்பும் பாண்டவ வீரன் சரணமடைந்தவாறே, அவன் திறத்தில் கருணை மிகுந்து, பண்டைக் காலத்தில் ராஜர்ஷிகளால் அநுஷ்டிக்கப்பட்டுப் பிறகு நாளடைவில் மறைவடைந்த கர்மயோகத்தை அவனுக்கு உபதேசித்து, அந்த ப்ரஸக்தியிலேயே பக்தியோகத்தையும் விளக்கிக் கூறியும் அவனுக்கு மனந் தெளியாததைக் கண்டு, ஸர்வஶாஸ்த்ர ஸாரமான ஶரணாகதி ரஹஸ்யத்தைச் சரமஶ்லோக மூலமாக அவனுக்கு வெளியிட்டவளவிலே அவன் தெளிவுற்று,

“ஸ்திதோऽஸ்மி கதஸந்தேஹ: கரிஷ்யே வசநம் தவ”

என்று வில்லைக் கையிலேந்தித் தைர்யத்துடன் யுத்தம் செய்ய வெழுந்து நின்றாப்போல், பக்தியோக ஸம்ப்ரதாய மற்றுப்போன இக்காலத்தில்,

'ஸர்வ ப்ரகாரத்திலும் சக்தியற்ற நாம் பரம புருஷார்த்தத்தைப் பெறுவதற்கென் செய்வோம்?' என்று ஸாத்விக லோகம் புகலற்றுத் தவித்து நிற்கும் ஸமயத்தில், காருண்யக் கடலாகிய நமதாசார்யன் ஸர்வாதிகாரமான ப்ரபத்தி ஶாஸ்த்ரத்தை ஸாங்கோபாங்கமாய் ஸர்வ ஸம்ஶயங்களும் அறும்படி எல்லோர்க்கும் தெளிய வுபதேசித்துத் தேற்றி வைத்த பரமோபகாரத்தைக் கணிசித்தாலும், இவருக்கு ஸ்ரீ கீதாசார்யனை உபமானமாய்க் கூறப் பொருந்தும்.

மேலும், இம்மண்ணுலகில் உள்ளவர்கட்குக் கால் வைகுண்யத்தால் ஏற்படத் தக்க சக்திக் குறைவை யுத்தேசித்து,

'க்ருஷ்ணத்வைபாயநம் வ்யாஸம் வித்தி நாராயணம் ப்ரபும்'

என்றபடி பகவதவதார விசேஷமான வ்யாஸமஹர்ஷி அநந்தமான வேதங்களை வகுத்துக் கணக்கிட்டு, அவைகளில் பூர்வ பாகமான கர்மகாண்டத்துக்குத் தமது சிஷ்யரான ஜைமினி முனிவரைக் கொண்டு தர்ம ஸூத்ர நிர்மாணம் செய்வித்து வழிகாட்டியும், உத்தரபாகமான உபநிஷத்துக்களின் தத்வார்த்த நிர்ணயத்துக்காகத் தாமே ப்ரஹ்ம ஸூத்ரங்களை இயற்றி விளக்கியும் உபகரித்தது காரணமாக வேதவ்யாஸரென்று திருநாமம் சாற்றப் பெற்றதுபோல, உபய வேதாந்தங்களின் உட்பொருள் எல்லோர்க்கும் ஸம்சயமற விளங்கும்படி கணக்கற்ற க்ரந்தங்கள் மூலமாய் விரித்துரைத்துத் தெளியாத இருமறை நிலங்களும் நன்கு தெளியுமாறு மஹாநுக்ரஹம் செய்தருளினது பற்றி நம்மாசார்யனுக்குப் பெரிய பெருமாள் ஒரு ஸந்தர்ப்ப விசேஷத்தில் ப்ரஸாதித்த 'வேதாந்தாசார்யந்' என்கிற திருநாமம் ஸர்வ ப்ரகாரத்திலும் உபபந்நமென்னத் தகும்.

'ஸர்வாஸ்வபி ச வித்யாஸு தத்த்வேஷ்வபி ச வேதாந்தேஷு ஸ்வாதந்த்ர்யம் ப்ராணாய'

என்று ஸ்வாமியே அருளிச் செய்தபடி, ஸ்ரீ பாதராயண போதாயந டங்க த்ரமிடாதி பூர்வாசார்யாபிமதமான ஸந்மார்க்கத்தை அவலம்பித்துத் தத்வ ஹித புருஷார்த்தங்கள் விஷயமாக ஸ்ரீ பாஷ்யத்தில் செய்யப்பட்ட நிர்ணயங்களுக்குப் பிறருடைய குதர்க்கங்களால் யாதொரு க்ஷேபமும் வாராதபடி நாற்புறமும் கோட்டை கட்டிக் காத்தது மன்றியில், ஸ்ரீ பாஷ்யகாராதி பூர்வாசார்யர்கள் தம் தாம் அநுஷ்டித்தது மாத்ரமன்றிக்கே க்ரந்த முகேந விவரமாய் எடுத்துரைக்காமல் சேமித்து வைத்திருந்த ப்ரபத்தி ஶாஸ்த்ரத்தின் தத்வத்தை எல்லோர்க்கும் விளங்கும்படி பல க்ரந்தங்களில் வெளியிட்டு, இந்த ஸுகரோபாயத்தைக் கைக்கொண்டு லோகங்கள் உஜ்ஜீவிக்க வழி காட்டின பரமோபகாரத்தை நினைத்தால், இவருக்கே

'தைசிகந்' என்கிற திருநாமம் அஸாதாரணமாய் அமையுமெனக் கூறத் தகும்.

தவிரவும், ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவிடத்தில் இவருக்கு ஸ்வரஸமாய் ஏற்பட்ட ப்ரேமாதிசயத்தை முன்னிட்டு, இவரால் இயற்றப்பட்ட யாதவாப்யுதய கோபாலவிம்சதிகளைப் பராமர்சிப்பவர்களுக்கு, இவர் வ்யாஸ புத்ரராகிய ஶுக ப்ரஹ்மத்தின் க்ருஷ்ணாநுபவ காஷ்டையை அநுஸரிக்கிறாரென்பது புலப்படும்.

மேலும், பகவதர்ச்சாவதாரங்களில் இவர்க்குள்ள ஈடுபாட்டையும், அதிலும் திருவயிந்தையில் அமர்ந்த தேவநாயகன் திறத்தில் இவர்க்கு ஏற்பட்ட அநுராக விசேஷத்தையும், அதுகாரணமாக இவர் அப்பெருமாளை நாயகனுக்கித் தாம் நாயிகா பாவத்தை வஹித்து, பஹுப்ரகாரமாய் மாநஸோபபோகம் செய்து, அதன் பரீவாஹத்தை ஸம்ஸ்க்ருதத்திலும் ப்ராக்ருதத்திலும் த்ராமிடத்திலும், தேவநாயக பஞ்சாசத், அச்யுதசதகம், மும்மணிக்கோவை, நவரத்நமாலை, பந்து, கழல், அம்மானை, ஊசல், ஏசல் முதலிய ஸ்தோத்ர ரூபமாக ஆவிஷ்கரித்திருப்பதைப் பார்த்தால்,

'ஹஸ்திஸ்ரீநாத வ்ருத்த்யா பரிணமதி ஶடாரேர் நவம் ஸம்ப்ரயுக்தோ'

என்று இவராலேயே போற்றப்பட்ட 'ஸ்ரீவகுளாபரணனுடைய வம்சம் தானோ இவர்?' என்று எல்லோரும் உகக்கத்தகும். ப்ரபத்தி சாஸ்த்ர ப்ரவக்தாவான இவ்வாசார்யன் ப்ரபந்நஜநஸந்தாந கூடஸ்தரான நம்மாழ்வாரை அடியொற்றி நிற்பதும் உபபந்நமே யாகுமிறே.

இவ்வாறு மஹர்ஷியென்றும் ஆசார்யனென்றும் ஆழ்வாரென்றும் பகவதவதாரமென்றும் கொண்டாடத்தகுந்த ஸ்ரீவேதாந்த தேசிகனது திவ்ய ஸம்ப்ரதாயத்தில் ஜந்ம மெடுக்கும்படியான மஹாபாக்யத்தைப் பெற்ற நாம், 'பண்யம் வேதாந்த ஸித்தம்' என்று சொல்லக்கூடிய அவருடைய ஸ்ரீஸூக்திகள் சாஶ்வதமாய் நின்று, லோகத்தில் மேன்மேலும் ப்ரசாரமடைந்து எல்லோரையும் உஜ்ஜீவிக்கச் செய்யும்படி அவைகளை ரக்ஷித்து ப்ரவசநம் பண்ணுவதற்கு வேண்டிய ஸர்வப்ரயத்நங்களும் செய்து ஜந்மஸாபல்யத்தைத் தேடிக்கொள்வது நமது முதற்கடமையாயிருக்க, செல்வப் பிள்ளையாய்ப் பிறந்தவன் தான் சிறிதும் முயலாமல் பெரியோர்களிடமிருந்து தனக்குக் கிடைத்த மஹாதநத்தைக் காப்பாற்றத் திறமையற்றுக் கைவிடுவதுபோல், நமதாசார்யனுடைய க்ரந்த ரத்நங்களில் பலவற்றைச் சிறிது காலத்துக்குள் லுப்தமாம்படி உபேக்ஷித்திருந்ததையும்,

தத்காலம் கிடைக்கக்கூடியவைகளையும்சரிவரப் பாதுகாப்பதற்கு வேண்டிய முயற்சிகள் எடுத்துக்கொள்ளாமல் அநாதரம் செய்வதையும், அவைகளை அத்யயநம் செய்யும் விஷயத்தில் அத்யந்தம் உதாஸீநர்களாக இருப்பதையும் யோசித்தால், கலி புருஷனுடைய மாயாவிலாஸமே தலையெடுத்து நிற்கிறதென்பதற்கு ஸந்தேஹமில்லை. இவ்வாசார்யன் தம் ஸித்தாந்தத்துக்குப் பூர்வ பக்ஷமாக எடுத்துப் பரஸ்ஸஹஸ்ர தோஷங்களை விடுத்துக் காட்டி நிஸ்ஸாரமாக்கி, ம்ருதப்ராயமாய்க் கிடத்தின க்ரந்த கந்தைகள் ‘ஸம்ஹ்ருத்ய ஶக்தி: கஸ்ய யாதி’ என்று சொல்லியபடி கேவலம் ஸங்கேத ப்ரதாநமாய் தத்வ விமர்ஶமற்று நிற்கு மிந்நாளில், நாற்புறமும் பரவும்படி பற்பல முயற்சிகளைப் பிறர் செய்வதை நாம் பார்ப்பதினாலும் இவ்வபிப்ராயமே உறுதியாகிறது. இக்காலத்திலும் அஸூயாகந்த மில்லாத தத்வைக த்ருஷ்டிகளான ஸாத்விகர்கள் யாராவது இருந்தால், அவர்களுக்கு இத்தகைய வைபரீத்யம், விலையற்ற பீதாம்பரத்தைப் பாழியில் போட்டு அழுக்கு நிறைந்த கந்தைகளை யுடுத்தித் தெருவில் உலாவும் உந்மத்தனுடைய சேஷ்டைக் கொப்பாகத் தெரியு மென்பது திண்ணம். இப்படியே முன்னால் ஸ்ரீ பாஷ்யகாரரும் பிறகு தாமும் பலமுறை தோஷக்ரஸ்தங்களென்று நிரஸநம் பண்ணியிருந்தும், கேவலம் அபிநிவேசத்தால் அவைகளை நிரர்த்தமாய்க் கொண்டாடும் மதாந்தரஸ்தர்களை உத்தேசித்து,

“ தத்ருஷ்டே த்ருஷ்டதத்த்வே தவ தஸாம் வாதிநாம் ஶிரஸ்ஸு நிஹிதஸ்ய பத்மகக்ஷிணம் ப்ரக்ஷ்யதாம் ”

என்று நம்மாசார்யன் ஸ்ரீஸங்கல்ப ஸூர்யோதய நாடகத்தில் சிஷ்யமுகேந வெளியிட்டதும் அதிலாதமாகமாட்டாது. ‘ இது ஸம்பந்தமாகச் சிலர் விஷய ஸ்வரூப மறியாமல் செய்யும் சங்கைகள் உபபந்நமாகா தென்பதும், தாத்விகார்த்தத்தைத் துரபிநிவேஶத்தால் மறுப்பவர்களை இந்த க்ரமத்தில் திரஸ்காரம் செய்வது ஆர்யஸம்மத மென்பதும், ஸ்ரீமஹாபாரதத்தில் யுதிஷ்டிரருடைய ராஜஸூய யாகத்தில் ஸ்ரீக்ருஷ்ண பகவானுக்கு அக்ர பூஜை பண்ணும்படி பீஷ்மர் நியமநத்தை அநுஸரித்து ஸஹதேவன் நடத்தியதை ஸஹிக்காமல் சிஶுபாலன் முதலியவர்கள் ஆக்ஷேபித்த ஸந்தர்ப்பத்தில்: அந்த மஹாஸதஸ்ஸில்,

‘ பூஜ்யமானம் மயா யோ வ: க்ருஷ்ணம் ந ஸஹதே ந்ருபா: ।
ஸர்வேஷாம் பலிநாம் மூர்த்நி மயேதம் நிஹிதம் பதம் ॥ ’

என்று தத்வஜ்ஞனான ஸஹதேவன் உத்கோஷித்து, அதைப் பீஷ்மாதிகளான ஜ்ஞாநாதிகர்கள் அபிநந்தநம் செய்ததே நிதர்ஶநமாகும்.

இப்படி ஸ்ரீபகவத்ராமாநுஜ ஸித்தாந்த விஜயத்வஜத்தை எங்கும் நிலைநாட்டி, ‘ நாயோவஜகும் ப்ரவ்ருத்தி ’ மான நமது ஸத்ஸம்ப்ரதாயம் நிராபாதமாய் எங்கும் பரவும்படி ஸர்வப்ரகாரமாயும் உபகரித்த நமது ஆசார்யன் திறத்தில் பகவத்பாஷ்யகார ஸம்ப்ரதாயாந்வயிகள் அனைவரும் ஏகாந்த பக்தியுடன் அவரது க்ரந்தங்களை ரக்ஷிக்கவும் ப்ரவசநம் பண்ணவும் வேண்டிய உத்யமங்களைச் செய்வது ஸ்வரூப ப்ராப்தமான ஶாஸ்த்ரீய க்ருத்யமாகு மென்பதற்குக் கொஞ்சமும் ஸந்தேஹமில்லை. இதற்கு முதலில்

“ ஆசார்ய ப்ரவ்ருத்தவாயிதி ஸ்வோந்நதிம்-
ந்நாஶாஸநீயமந்ந விபக்ஷ ஹேதோ: ।
ஆசாதஶாஸ்த்ரியாந் ப்ரதாநீயா-
நந்யாந்ய ஸௌஜந்ய விஜஹாதுஸூயா ॥ ”

என்று நம்மாசார்யன் தாமே ஆஶாஸநம் செய்தபடி, நாமெல்லோரும் பரஸ்பராஸூயையை வேருடன் ஒழித்து, நமது ஸத்ஸம்ப்ரதாயத்தின் ஶாஶ்வதமான நன்மையையே புருஷார்த்தமாகக் கருதி நிஷ்க்களங்கமான மநஸ்ஸுடன் ருஜு புத்திகளாகவும் ஏகமதிகளாகவும் அவரவர் அதிகாரத்துக்குத் தக்கவாறு விடாமுயற்சி செய்வதே ஸர்வாத்மநா ப்ராப்தமாகும்.

ஜயதி ஸ நிகமாந்தாசார்ய திவ்யஸூக்தி ஸ்வாதாஸ்வாத: ।
ஶமயதி ஸ்வ பரிவேதம் திஶதி ஸமாநந்தஸந்தோஹம் ॥

ஸ்ரீ:

வைபவ ப்ரகாசம்

[ஸ்ரீ. உப. ஏ. வி. கோபாலாசார்யர் M. A., B. L., அட்வோகேட், திருச்சி]

" தாராதவநதெதஜொபுரஂஹிதாயுஸக்திஃ
கவிகயகபுரொஹா ஃ ஸவதந்த்ர ஸுதந்த்ரஃ।
ஜயதி ஶாஸ்த்ரபாயாஂ வெத வாஞாயஸம்ஜ்ஞா-
உதிதாஜநஹ்யாஂ ஶஂஹிதொ ராஹஸ்த்ர ॥"

இது ஸ்ரீ தேசிகன் விஷயமாகத் தொட்டயாசார்யர் ஸாதித்த மங்கள ச்லோகம். மஹாசார்யர், ஸ்ரீதேசிகன் ஸம்ப்ரதாய பரம்பரையைச் சேர்ந்தவரல்லர். மஹாசார்யன் என்ற திருநாமம் அவருக்கு யதார்த்தாக்ஷரம். சததூஷணியின்பேரில் 'தீப' மென்னும் ஓர் க்ரந்தம் பிறந்தது. அதில் கூறப்பட்ட யுக்திகளுக்குப் பதில் கூறி, சததூஷணிக்கு வ்யாக்யாநமாக மஹாசார்யர் 'சண்டமாருதம்' ஸாதித்தார். அதில் இது ஒரு மங்கள ச்லோகம். தேசிகனுடைய ஸர்வஜ்ஞத்வம் முதலிய மஹிமைகளைப் பூர்ணமாக அநுபவித்து ப்ரகாசப்படுத்தியவர் மஹாசார்யர். ப்ரபலமான பிற மத வித்வான்களோடு பெரிய பெருமாள் முன்னிலையில் பல திநங்களில் நடந்த வேதாந்த வாதங்களை ஸங்க்ரஹித்த க்ரந்தம் சததூஷணி என்பது. அந்த வாதங்கள் முடிந்ததும், பெரிய பெருமாள் தேசிகனுக்கு வேதாந்தாசார்யரென்று ஓர் பிருதநாமம் அருளினது ப்ரஸித்தம். ஒருவருக்கும் கிடைக்காத அவ்வரும் பெரும் ஸம்மாநத்தை ஸ்ரீ தேசிகன் தமக்குத் தகாதென்று மறுதளித்ததாகவும், ஈச்வரன் ஆஜ்ஞையை மறுக்கக்கூடாதென்று பெரியோரைக் கொண்டு வற்புறுத்தித் தேசிகனை அங்கீகரிக்கச் செய்ததாயும், 'ஶஂஹிதஃ' (அடைவிக்கப்பட்டார்) என்னும் பதத்தால் மஹாசார்யர் ஸூசிக்கிறார். இந்த பிருதத்தை 'ஸ்வஸ்திஸ்ரீ' என்று தொடங்கிப் பட்டய சாஸநமாக அருளியதைத் தேசிகன் ஒரு கௌரவ பிருதென்று கொள்ளாமல், வேதாந்த ஸூத்ரங்களில் தோன்றக்கூடிய ஸகல ஆக்ஷேபங்களையும் பரிஹரித்து, ஸ்ரீபாஷ்ய விஷயங்களை எல்லோரும் எளிதில் மனத்தில் தரித்து அநுஸந்திக்கும்படி க்ஷீரராசியான இனிய ச்லோகங்களால் 'ஸாரர்வளி' க்ரந்தத்தைச் செய்யும்படி ஓர் கைங்கர்ய நியமந சாஸநமாகக் கொண்டு, அந்தச் சாஸநக்கட்டளையைச் சிரஸாவஹித்து, ஸபையிலேயே அந்த க்ரந்தத்தைக்

க்வநம் செய்ய ஆரம்பித்தார். பிருது தாளப் பட்டயத்திற்கு 'ஸ்வஸ்திஸ்ரீ' என்று ஆரம்பித்தது, ஸாராவளிக்கு 'ஸ்வஸ்திஸ்ரீ' என்று மங்களமாயிற்று. இந்த 'ஸ்வஸ்தி' சப்தத்தில் ஆரம்பித்து, முடிவில் 'ஸூாஶ்வதாக்ஷ்யஃ' என்று சேர்த்துக்கொண்டு, 'ஸ்வஸ்தி நஸ்தாக்ஷ்யஃ' என்று, தமக்கு ப்ரத்யக்ஷரான கருடன் விஷயமான வேத மங்களத்தையும் ஸம்பாதித்தார். 'தஸ்ய ஸமெத்ரு' என்று பொதுவாய் 'அவர் ப்ரஸாதத்திற்காக' என்று பேசுவதால், முதல் ச்லோகத்தில் ப்ரக்ருதமான யதிபதி ப்ரோக்தமான ஸ்ரீபாஷ்யமென்ன, யதிபதி யென்ன, ரங்கநாதனென்ன ஆகிய மூவர் ப்ரஸாதத்திற்குமென்று பொருள் கூட்டி, 'தஸ்யாஷ்யஂ, ஸ ச ஹாஷ்யகாரஃ, ஸ ச ஹரிஃ ஸஹ்யஸ்ரீஈஶாநஃ' என்று முதல் ச்லோகத்தில் பாஷ்யத் தனியனையும் சதுரமாய்ச் சேர்த்துக்கொண்டார். ரங்கராஜனிட்ட பெயரை எக்காலத்திலும் ஒருவரும் ஸாதிக்க முடியாதென்று மஹாசார்யர் ஸாதித்து, அதைச் சண்டமாருத வ்யாக்யாநத்தால் மூதலித்தார்.

யதிராஜருடைய ஹ்ருதயத்தில் ஆரூடமான ஸூத்ர தாத்பர்யங்களை இந்த ஸாராவளி மூலமாக வேதாத்மாவான கருடன் பேரில் ஆரூடரான ஹயக்ரீவர், தம்மாசிரியரான அப்புள்ளாரையுங் கூட்டிக்கொண்டு பேசினாரென்று, முடிவில் குறிக்கப்பட்ட மூன்று க்ரந்த கர்த்தாக்களிலும் தேசிகன் சேரவில்லை. ஸார க்ரந்தத்தில், வெள்ளைப் பரிமுகர் தேசிகராய் விரகால் தம் முள்ளத்தி லெழுதியதை ஓலையிலிட்டதாக அநுஸந்தாநம். ஸங்கல்ப ஸூர்யோதயம் முடிவில், 'வக்தா ஶெ தா வவநவிஷயஃ ஸ்ரீயதாஂ வாஸு தெவஃ' என்று வாஸுதேவனைக் கர்த்தாவாகப் பேசினார். 'வாதீஶாவஹா வாஸுதெவஸ்ய ஸூக்திஃ' என்றபடி வாஸுதேவன் ஹயக்ரீவன் வாதங்களிலும் கவிதார்க்கிகேந்த்ரர்களை ஜயிக்கத் தம் நாக்கு நுனியாகிய ஸிம்மாஸநத்தில் ஹயக்ரீவர் வீற்றிருந்து ஸிம்ஹகர்ஜநம் செய்வதாக அநுஸந்தாநம்.

எந்த க்ரந்தத்தை யெடுப்பது? 'ஓரொன்றுதானே யமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு வானேறப் போமளவும் வாழ்வு' என்று அரும் பெரியார் பாசுரம். தேசிகன் ஸூக்திகள் புராணமான பழமொழியாகக் கௌரவிக்கத் தக்கவையென்று 'பாரொன்றச் சொன்ன பழமொழியுள்' என்று காட்டப்பட்டது. இப்படி, பெரியோர் ஸாதித்ததை அநுஸரித்துத் தேசிகன் ப்ரசிஷ்யரான ஸ்ரீ ப்ரதிவாதி பயங்கரம் அண்ணாவும், 'தத்ரா ஶெஷஃ வுஶு ஸூக்திஸூக்த்யாஃ' என்று ஸப்ததியில் ஸாதித்தார்.

கண்ணன் கீதை பாடியது ஜகத்தெங்கும் எல்லாத் தேசத்திலும் எல்லாப் புத்திமான்களாலும் ஏககண்டமாய் அபிப்ராய பேதமில்லாமல்

புகழப்படப்போவதைத் தேசிகன் அறிந்து, தயா சதகத்தில் 'விவஶிஷவிநீ தயா ஜமதிநீ தயா' என்று ஸாதித்தார். அவிஸீதமானால் தான் கீதையாகும். ஸர்வஜநாகர்ஷகமாகக் கீதை பாடியது பெரிதல்ல. அந்தக் கீதைக்கு ராமாநுஜன் பாஷ்யம் ஸாதிக்கப் பெற்றதே கண்ணனுக்குப் பாக்யம் என்பதைத் தாத்பர்ய சந்த்ரிகை மங்கள ச்லோகத்தில்,

'யதிவஶிவ்யஜொ யஜூ தா நாஉஷஶ ஸ்யடிஂஜவா நிமஉவாஶிஷணெஜீ யாஂவஹ'

என்று ஸாதித்தார். கீதா பாஷ்யத்தில் ஸாதித்த அர்த்தங்கள் மூலத்திற்குப் பொருந்துவதைச் சந்த்ரிகையில் விஸ்தாரமாய் நிரூபித்தார். கூடியவரையில் பிறச் சமயங்களையும் நெருங்கியதென்று ஸமரஸப்படுவதில் தேசிகனுக்கு நோக்கு. ஸ்ரீமத்வ மதத்தை ஸங்கிக்ருஷ்டமென்றே ஸாதித்தார். எம்பெருமானார் தர்சந ஸம்ப்ரதாயங்களில் அர்த்த பேதமில்லையென்று ஸாதித்தார். கீதைக்கு ஏற்பட்டிருக்கும் பரஸ்பரதமான பாஷ்யங்களெல்லாம், 'வாஸுதேவன் பரதத்வம்; அநந்ய சரணமாய் அவனை யாச்ரயிப்பது சிறந்த உபாயம்' என்று ஏககண்டமாகப் பேசுவதை நிரூபித்தார். அத்வைதத்தில் ஜ்ஞாநிகள் கர்மாநுஷ்டாநத்தை விடலாமென்று சொல்லுவது, யோக ஸமாதி அநுபவத்தில் உலகமே தோன்றாமல் மெய்ம்மறந்திருக்கும் காலத்தில் மட்டுந்தா னென்றும், ஸமாதி யில்லாத காலங்களில் கர்மங்களை அநுஷ்டித்தே தீரவேண்டு மென்றும், ஸ்ரீசங்கரர் வாக்யங்களைக் காட்டி நம் மதத்திலும் அப்படியேதா னென்று ஒற்றுமையை நிரூபித்தார்.

'யத்ர யொமெஶ்வரஃ க்ருஷ்ணொ யத்ர வாயொ-ா யநுயூஶஃ' என்ற கடைசி ச்லோகத்தில் முதல் அத்யாயமுடிவில் 'விஸ்ருஜ்ய ஸஶரம் வாபம்' என்று காண்டீவத்தைக் கீழே யெறிந்தவன், கீதோபதேசம் முடிந்ததும் காண்டீவத்தை யெடுத்துக்கொண்டு தநுர்த்தரனானான் என்ற ஸ்வாரஸ்யம் சந்த்ரிகையில் தான் காட்டப்பட்டது.

எல்லையற்ற க்ருபையையுடைய நம் பூர்வாசார்யர்கள் கருணையே வடிவான தேவியோடு கூடிய பெருமாளின் க்ருபையால் ப்ரஜைகள் கரையேறும் வழியை யறிந்து, ஸகல ப்ராணிகளும் உஜ்ஜீவிக்கும்படி சரணாகதியை வெளியிட்டார்களென்று தயாஶதகத்தில்

'யதிவதியாஉ-ந ப்ருஹ்ரதயஃ ப்ருஃயஷி ஷயெ
ஜமதி ஹிதம் ந நஷுவ ஹி ஸாமுவஶாஷயிகஷ'

என்று ஸாதித்தார். அசக்தியும் ஆர்த்தியும் நம்பிக்கையுமே அதிகாரம்.

'அந்தண ரந்திய ரெல்லையி னின்றவ னைத்துலகும்
நொந்தவ ரேமுத லாக'

என்றும்,

'கஷ்ஜயாஷெஜ்ஃ ப்ரவத்ரா'

'வஶிஹாணஉ-ஷொவாஹ்யஷியெதஃ'

என்றும்ஸாதித்தார். தயைக்கு முறையிடத்தக்கவர் குற்றவாளிகளும் அசக்தர்களும். மோக்ஷ மென்னும் உப்பரிகைக்கு எல்லா வர்ணத்தோடும் ஏறக் கூடிய தெருப்புறத்துப் படிக்கட்டாகும் சரணாகதி மார்க்கம். அதை ப்ரகாசப்படுத்தும் நம்மாசார்யர்களின்க்ரந்த பங்க்திகள் விஶிவாஸோபாநபங்க்திகளாகும். ராமாயணம் முதலில், தேவர்களான உத்தமர்கள் ராவண பயம் நீங்கச் சரணாகதி செய்ததாகச் சொல்லி, உத்தர காண்டத்தில் க்ரந்தம் முடிவில், தமோமயமான புல் பூண்டு வ்ருக்ஷங்களும் பெருமாள் தேசத்தில் வஸித்ததைக் கொண்டும், பெருமாள் பிரிவை ஸஹியாமல் வாடியதைக் கொண்டும், அவர் தயையால் நற்கதி யடைந்ததைக் காட்டி, உத்தமாதம பேத மன்றியில் எல்லோரும் அதிகரிக்கலாம் என்பதை அபய ப்ரதாநஸாரத்தில் விளக்கியருளினர். சரணாகதரை ரக்ஷிக்கும் வ்ரதத்தை யநுஷ்டித்துக் காட்டியவரில், தம்முடைய கூடஸ்தரான விச்வாமித்ரரும் ஓர் முக்யரென்பதை,

"விஶ்வாமித்ர கவொ தவாநா ஈவஷவொராஜூமவெயஸீ
நாஶீஜஂவவ்ரஹவஷதி ப்ருஹ்ரதிஹி ந-ஷெஷ ஸஂடாவயஃ ।"

என்று ஸாதித்தார். 'ஸஂடாவய' மென்பது எல்லோரும் நடக்கக்கூடிய ராஜமார்க்கம். வண்டையாகிய தேசிகன் ரஹஸ்யங்களில் அத்புதமாய் நிரூபித்த மார்க்கம். திருவேங்கடத் தெழில்கொள் சோதிக்கு, ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி வழுவிலா வடிமை செய்வது, அவர் வண்டையாகிய தேசிகனுக்கு நித்யமாகவே அமைந்தது. மலைச் சிகரத்திலிருந்து நாதிக்கும் மணியோசை எல்லோருக்கும் பக்தியை யுண்டாக்கிப் பரிசுத்தமாக்கும். தேசிகன் ச்லோகங்கள் மலையுச்சி மணி யோசையை யொக்கும்; த்வநி பரம்பரைக்கும் காரணமாவதால் உத்தம காவ்யமாகும்.

தர்க்க வாதங்களில் மேலே மேலே கோடி போவதால், 'கஷ்ட்ஷி ஷ்தகஂ' என்ற குறைவு வரலாம். காவ்ய த்வநியில் மேலே மேலே

எவ்வளவு போனாலும் ப்ரதிஷ்டை யதிகமாகும். விபக்த விஷயங் களிலேயே ஸர்வரஞ்ஜகமாய்க் காந்தாஸம்மிதோபதேசமாய்ப் பல அரும் பெருங்காவ்யங்க ளமைந்தன. ஸ்வாமி காவ்யங்களின் ரஸங்களில் ஈடுபடாத அபிஜ்ஞரில்லை. ராமாயணத்தை யவலம்பித்துக் காளிதாஸர் ரகுவம்சம் பாடியது போல், வ்யாஸ வேதார்ணவாம்ருதமான வஸுதேவ வம்ச கதையை யாதவாப்யுதய காவ்யமாகப் பாடினார் ஸ்வாமி. உத்தமமான வாக்ஸித்திக்காக ஈச்வர தம்பதிகளை 'ஜகதஃ பிதரௌ வந்தே' என்று காளிதாஸர் வர்ணித்தார். 'வாக்ஸித்தியைக் கோருபவர்கள் ஹயக்ரீவ ஸ்தோத்ரத்தைப் படியுங்கோள்' என்று உபதேசிக்கும் ஸ்வாமி, வாக் பாலக னான கோபாலனையே 'வந்தே ப்ருந்தாவந சரம்' என்று வர்ணித்தார். கோபாலனைப்பணிந்தால் ஸரஸ்வதியின் அநுக்ரஹம் ஸித்திக்குமோ வென் றால், கோபால விம்சதியில் இரண்டாவது ச்லோகத்தில் 'கோபால' என்று மூன்றெழுத்துள்ள திருநாமத்தில் ஸரஸ்வதி ரஸிகையாய் அவர் கடா க்ஷத்தைப் பெறுவதால், அவரடியாரை அவள் அநுக்ரஹிப்பது திண்ண மென்று ஸூசித்தார். 'வாசம் நிஜாங்கரஸிகாம் ப்ரஸமீக்ஷமாணஃ' என்று அங்கே ஸாதித்தது. ஸரோஜாஸந தர்ம பத்நியான வாக்தேவியும், வ்யா ஸாதிகளும், வாஸுதேவ மூர்த்தியான ஹயக்ரீவருடைய சக்தி லேசத்தால் ப்ரகாசிப்பவர்கள். மேகஸந்தேசத்தைப்போல ஸீதாராம வ்யதிகரமான ஹம்ஸ ஸந்தேசத்தைச் செய்தருளினார். அதிவேகமாக ஓரிரவில் ஆயிரம் ச்லோகங்களை ஓர் பாதுகா விஷயமாக அமைத்தவர், இந்த க்ரந்தத்தைப் புத்திப் பலகையில் எழுதி யெழுதி மாற்றி மாற்றி நகாசு செய்ததாக 'விஜ்ஞாபநாயோக்ய விசேஷரூப' என்று ஸூசிக்கிறார். இனிப்பில் மேக ஸந்தேசத்திற்குக் குறையாமலிருக்க வேண்டும். அங்கே நாயகன் பேர் ஊரில்லாத யக்ஷன்; அவன் தன் வேலையில் அஜாக்ரதையா யிருந்தவன்; யஜமாநன் சாபத்தால் கீழே வந்தவன்; மஹிமை யெல்லாம் அஸ்தமித்த வன். இங்கே லோக நாயகனே நாயகன்; ஸூர்ய வம்சத்தில் உதித்தவன்; தன் வேலையில் ஜாகரூகன்; தன் இச்சையால் அவதரித்துப் பிறவாமற் பிறந்தவன். 'அஜாநவம் ஜாதஜநம் கோவெநிஜதெநாஃ' என்று மாகத்தில் நாதர் ராமன் அவதாரத்தை வர்ணித்தார். இங்கே 'அஜாதஃ' 'ஜாதஃ' என்று இரண்டு விதமாயும் பிரியும்படி 'வம்சே ஜாதஃ' என்றமைத்தார். ஹநுமா ரைப்போன்ற வடகரான ஸுதஹம்ஸர் பரஹம்ஸரான லக்ஷ்மண முனி யென்னும் ஓர் ஸமாதி. ஸம்ஸார மென்னும் ஸமுத்ரத்தால் சூழப்பட்ட இலங்கை யென்னும் தேஹத்தில் சிறையிடப்பட்ட ஜீவனிடம் பெருமாள் தூதனுப்பி ஸம்ஸாரத்திலிருந்து மீட்டதாக ஓர் உல்லேகம். முதலில் 'லக்ஷ்மணஸ்யாக்ரஜந்மா' என்றும், முடிவில் 'லக்ஷ்மணஸ்யாவபோதைஃ' என்றும் லக்ஷ்மணத் திருநாமத்தைக் கீர்த்தநம் செய்வதால் இதை ஸூசிக்

கிறார். 'ராகாவநஸ்ய திஸஹ வரம் ராஜஹம்ஸம் உபாஸே' என்று இரண் டாம் ச்லோகத்திலும் 'ரங்கேசஸ்ய ஸகுஜநஸோநஸராஜஹம்ஸஃ', 'ஸ்ரீரங்க ராஜ சரணாம்புஜ ராஜஹம்ஸம்' என்று துதிக்கப்படும் ராமாநுஜ பரம ஹம்ஸரை நினைக்கிறார்.

ஸங்கல்ப ஸூர்யோதயம் என்னும் திருநாமமே த்வநிமயமானது. ப்ர போத சந்த்ரோதய நாமத்திற்கு எதிர்த் தட்டாக அப்பெய ரிடப்பட்டது. தேகத்தை விடுங்காலத்தில் சந்த்ரோதய மாவதென்றால், சந்த்ரன் இரண்டு மார்க்கங்களுக்கும் பொதுவானதால், தூமாதி மார்க்கமோ அர்ச்சிராதி மார்க்கமோவென்று ஸந்தேஹம் வரும். மேலும் 'சந்த்ரனையே அவர்கள் அடைகிறார்கள்' என்கிற ச்ருதியை யநுஸரித்துத் தூமாதி மார்க்கத்தையே காட்டக்கூடும். ஸூர்யனே மோக்ஷமார்க்கமான அர்ச்சிராதி மார்க்கத்தில் மட்டும் இருப்பவர். ஸூர்ய கிரணம் அந்த மார்க்கத்தில் ஆதிவாஹிக கணத்தில் இரண்டாவது. ஸூர்யோதய மென்றால் ராத்ரி அடியோ டிராது. ஸம்ஸாரத்தைக் காளராத்ரி யென்பர். சந்த்ரோதய மானாலும் ராத்ரியுங்கூட இருந்தே தீரும். நம்முடைய ப்ரபோத மென்னும் ஜ்ஞாநம் மட்டும் மோக்ஷத்தைக் கொடுக்குமா? அதனால் ப்ரீதரான பரமாத்மாவின் அநுக்ரஹ ரூபமான ஸங்கல்பம் அதைக் கொடுக்குமா? 'தஸ்யோத்க்ரமண ஸூத்ரம்' என்ற ஸூத்ரத்தில் அந்தர்யாமியான பரமாத்மாவின் அநுக்ரஹ ஸங்கல்பத்தால் ப்ரஹ்ம நாடியில் ப்ரவேசம் கிடைத்து, மோக்ஷத்தை யடைவிக்கும் அர்ச்சிராதி மார்க்க ஸம்பந்தம் கிடைக்கிறதென்று தீர்மா னித்திருப்பதை யநுஸரித்து, இங்கே ஸங்கல்ப ஸூர்யோதயமென்று பெய ரிடப்பட்டது. பலன்களைக் கொடுப்ப தெதுவென்று தீர்மானிக்கும் ஃபலாதி கரணத்தில், எல்லாப் பலன்களும் பரமாத்மாவால் கொடுக்கப்படுகின்றன வென்று தீர்மானிக்கப்பட்டது. மோக்ஷமென்னும் ஃபலம் மட்டும் அவர் திருவுள்ள மன்றியில் கிடைக்குமோ வென்கிற யுக்தியைக் காட்டுகிறார். மோக்ஷ சாஸ்த்ரத்தில் செய்த அந்தத் தீர்மாநம் மோக்ஷத்தை மட்டும் விலக்குமோ வென்றும் யுக்தி. நாடகமென்பது த்ருஶ்ய காவ்யம். இந்த நாடகத்தில் சாந்தி ரஸமும் மோக்ஷ மார்க்கமும் த்ருஶ்யம் போல் அநுபவத் திற்கு வருகிறது. இதில் தேசிகனுடைய வேதாந்தாசார்யத்வமும் அஷ்ட பாஷா கவித்வமும் த்ருஶ்யமாவதாக ஸ்ரீ அண்ணா ஸாதித்தார்.

பாதுகா ஸஹஸ்ரத்தை ஓரிரவிற்குள் அநுஷ்டாநத்திற்கு விரோத மன்றியில் அத்புதமாகக் கவநம் செய்து முடித்து, மறுநாள் அரங்கன் முன் னிலையில் அரங்கேற்றியபொழுது, 'பெரியோ ரெல்லோரும் கவிதார்க்கிக ஸிம்ஹ மென்பது இவருக்குத் தகு மென்றார்கள்' என்று ஸ்தோத்ர பாஷ் யத்தின் முடிவில்,

" ஊஙணி ஸஃவஸி ஸஜூய-ஃ ஹீஸெ்ாஸஹஸீ
கவிகயகஃரெஜ: ஸவ-ஃம் த: ஷூம் த: "

என்ற ஶ்லோகத்தால் காட்டப்படுகிறது. இந்தக் காவ்யத்திற்கு நிகரே யில்லை என்று ஸப்ததியில் ஸாதிக்கப்பட்டது. ராமாயணம் ப்ரவசநம் செய்யு மெல்லாரும் இதில் பல ச்லோகங்களை வரப்படுத்தி உதாஹரித்து, ஶ்ரோதாக்களை ரஞ்ஜநம் செய்வது ப்ரஸித்தம். முதலில் உதாஹரித்த மஹாசார்யர் மங்கள ச்லோகத்தில் ஸாதிக்கப்பட்ட ஆச்சர்யமான ஜ்ஞாந சக்தியும் கவிதா சக்தியும் முழுவதும் யதிராஜ ஸப்ததி ரசனையில் ராமாநுசன் புகழைப் பாடுவதில் விநியுக்தமான பிறகு, தம் வாக்ஸரஸ்வதீ சுத்தமாகி ஸௌபாக்யத்தைப் பெற்று தமக்கே தித்திக்கிறதென்று,

'ஷூஃதெ ஐஶஃ ஸஂஜமா ஸஶஷூதீ யதிராஜகீதி-ஃகதெகெவி-ஃ ஶெரயிதா'

என்று ஸாதிக்கிறார். ஏழு லோகங்களிலும் பத்துத் திக்குக்களிலும் ஸ்ரீபாஷ்யகாரர் கீர்த்தி பரவவேண்டுமென்று மநோரதித்து, ஏழைப் பத்தால் பெருக்கி எழுபது என்கிற எண்ணிக்கையை ஆதரித்து யதிராஜ ஸப்ததியைச் செய்ததாகச் சொல்லலாம். 'விசெ்ரு ஹூெஜாவசெஷெ செஃ' என்று தமக்குத் தேசிகனோடு நேர்ந்த பலவித ஸம்பந்த பாக்யங்களைப்பேசும் திருக்குமாரர், 'இராமாநுசன் சீரிய வண்மை போற்றும் சீர்மையன்' 'இராமாநுச முனி தோத்திரம் செய் ஊனமில் தூப்பு லையன்,' 'இராமாசன் குணங்கூறும் தூப்பு லணுக்கன்' என்று யதிராஜ ஸப்ததியை அத்புதமாய்ப் பாடியதை யிட்டுத் தேசிகனிடம் தமக்கு நிரதிசயமான உபகார ஸ்மரணமென்று விளக்குகிறார். அவர் சிஷ்யரான ப்ரதிவாதி பயங்கரம் அண்ணாவும் 'கவிதாகி-ஃக ஸிம்ஹகரு திரந்திலகம்' என்று யதிராஜ ஸப்ததியைப் புகழ்ந்தது மன்றி, ராமாநுசன் யசஸ்ஸைப் போல் தேசிகன் யசஸ்ஸும் 'ஜ்ரம்ஹதாஜ ஹிஜ்ரம் ஹதாஜ' என்று ஸர்வதேச ஸர்வ காலங்களிலும் பரவவேண்டுமென்று மநோரதித்து, தேசிகன் விஷயமாக அத்புதமான 'ஸப்ததிரத்ந மாலிகா' ஸ்தோத்ரத்தை யருளினார். அந்த ஸப்ததியும், மஹாசார்யர் 'வெஹவஃகாஶிகா' ஸ்தோத்ரமும், தேசிகன் மஹிமைக்குக் கண்ணாடி போன்றன.

ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் ஸகல சாஸ்த்ரங்களிலும் பாரங்கதரா யிருந்ததோடு, ஸாஹித்யத்திலும் அத்யந்தம் நிபுணராயிருந்தா ரென்பது ப்ரஸித்தம். எத்தனையோ வாத நூல்கள் அவரால் இயற்றப்பட்டுள்ளன. தேசிகனுடைய 'யாதவாப்யுதயம்' முழுவதற்கும் அவர் வ்யாக்யாநம் எழுதியிருப்பது ப்ரஸித்தம். தேசிகனுடைய கவிதையிலும் சாஸ்த்ர ஜ்ஞாநத்திலும் வாதசைலியிலும் கவிதார்க்கிக ஸிம்ஹமென்று தாமும் மன மார்ந்து அவரைப் புகழ்வதாக அந்த வ்யாக்யாநத்தில்,

'ஶாவாஃ ஸஞ்தி வசெ வசெ ।
கவிதாகி-ஃக ஸிம்ஹஸ்ய காவெ்ஷு ஶலிதெஷூவி'

என்று அறுதியிட்டார். 'ஒரொன்று தானே யமையாதோ' என்றும், 'ஊ்செகஃ வஶ' என்றும் நம் பெரியோர் புகழ்ந்தபடி அவரும் புகழ்ந்தார். தேசிகனிடத்தில் அவருக்கு வ்யாமோஹ மிருந்ததுமட்டு மில்லாமல், தேசிகனுக்கு உபாஸ்யரும் தேசிகனுடைய சக்திகளை ப்ரஹ்மணம் செய்தவருமான வெள்ளைப் பரிமுகரிடமும் அவர் ப்ரீதி சென்றது. ராமாநுஜமதத்தை யநுஸரித்து ப்ரஹ்ம ஸூத்ரங்களுக்கு அவர் செய்த 'நயமயூவ மாலிகா' என்னும் அத்புதமான க்ரந்தத்தில் முதலில் 'ஹெஷாரவெஃ' என்று ஸ்ரீ ஹயக்ரீவன் விஷயமாக மங்கள ச்லோகம் அமைத்தா ரென்பது கவனிக்கத்தக்கது.

தேசிகன் ச்லோகத்தில் நாம் ஒரு பதத்தை மாற்றினாலும் அழகு குறையும். 'ஸக்காரகாஷகஞுடம்' என்கிற ச்லோகத்தில், 'வஶிஹாரதி ராஜயா நீகஞம்ஹீவாகம்' என்று ராஜதாநியான பட்டணம் விவிக்த ஸேவியான விரக்தர்களுக்குக் கும்பீபாகம்போல அஸஹ்யமென்று வர்ணித்தார். தேசிக திநசர்யையில் திருக்குமாரர் 'ஸஃஞளரவம் ராஜஶஹம்' என்று அமைத்தார். தேசிகன் திருவுள்ளத்தில், சாகுந்தளத்தில் கண்வர் சிஷ்யர், ராஜதாநியான ஹஸ்திநபுரத்தை அருவருப்புடன் 'ஜநாகீணம் ஜெநஃ ஹுதவஹவஶீதம் ஶஹமிவ' என்று வர்ணித்த ச்லோகம் ஓடிக்கொண்டிருந்தது. அதை அநுஸரித்தும் அதை யதிசயித்தும், குயவன் சூளையில் மண் பாண்டம் வேவது போல் ராஜதாநி சந்தடியில் மண்ணுடம்பு வேவதற்கு ஸமாநமாய் அஸஹ்ய வேதனை யுண்டாகிறதென்றும் திருவுள்ளம் கொண்டு 'கும்பீபாகம்' என்று ஸாதித்தார். ரௌரவம் என்று கும்பீபாகம் போன்ற ஓரிடப்பேர் மட்டும் அமைந்ததல்லது, இந்த ஸ்வாரஸ்யம் அமையவில்லை. எம்பெருமானார் தர்சநத்தில் எல்லோருக்கும் பொதுவாசிரியரா யிருப்பதோடு, கவி லோகத்திற்கும் வைதிக லோகத்திற்கும் தேசிகன் பஹுமாந்யரே. வைதிக ஸார்வபௌமரான ஸ்ரீ தேசிகனுக்கு 'ஶதாயுஃ வைஷஃ' என்றபடி வேத நூற்பிராய நூறு மமைந்தது. பல நூற்றாண்டுகள் அவர் பெருமையும் அவர் ஸ்ரீஸூக்திகளின் பெருமையும் பொலிக பொலிக பொலிக.

கவிதாகி-ஃக ஸிம்ஹாய கஃயாணஶணஶாலிநே ।
ஸ்ரீமதெ வெங்கடெஶாய வெதாஜஶரவெ நமஃ ॥

ஸ்ரீ:

ஸ்ரீதேசிக ஸூக்திகளும் ஸம்ரக்ஷணமும்

[ஸ்ரீ. உப. பரவஸ்து ஸ்ரீநிவாஸாசார்யர், கீழைச்சேரி]

அபிஜ்ஞசிகாமணிகளே! ஆதிமத்ய மில்லாத அனந்தன் ஸ்ருஷ்டியில் அவதரித்த ஆசாரிய வர்க்கங்களில் "அநந்யவிஷய ஜ்ஞாநாதே யதீந்த்ர ஹித ஸம்ப்ரதாய:" என்றபடி அச்சுதன் அனுப்பிரவேசத்தால் அகிலமு மறிந்து அளவற்ற தயையினால் ஆருயிர்களை ஆண்டருளிய ஆசாரிய ரத்னமாகிய ஸ்ரீநிகமாந்தமகாதேசிகன் அவதாரோத்ஸவத்தில் ஸ்ரீ வேதாந்த தீபிகை யெனும் தாமரைக்கொடியில் வித்வத்கடாக்ஷமாகிற ஸூர்யாலோகத்தினால் அலர்ந்த இம்மலரில், 'ஸாயம் ஸம்ஹாரு ஸஹ்ருதயதல்லீகாவரீதல ஸமா வாஸா' என்று தாமே கொண்டாடும்படி மணம் வாய்ந்த ஸ்ரீதேசிக ஸூக்திகளின் பெருமையையும் ரக்ஷணத்தையும் பற்றிச் சிறிது விண்ணப்பித்துக்கொள்கிறோம்.

"வெங்கடேசவிதுஷா ரசிதாநாம் ஜாயதே ந கணநா விக்ருதீநாம்" என்றபடி ஸ்ரீதேசிக ஸூக்திகள் எண்ணமுடியாதபடி அனந்தங்களாகையால் 'அநந்தபாரம் பஹுவேதிதவ்யம் அல்பஸ்ச காலோ பஹவஸ்ச விக்நா:' அல்ப காலத்தில் அறிந்துகொள்ளவேண்டியவை அனேகம். இடையூறுகளோ பல. என்செய்வதென்று வருந்தவேண்டா.

"சீரொன்று தூப்புல் திருவேங் கடமுடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள்—ஓரொன்று
தானே யமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு."

என்று பிள்ளை லோகாசாரியர் அருளிச் செய்தார். ஆதலின், நாம் உஜ்ஜீவிப்பதற்கு ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்திகளில் ஒவ்வொன்றே போதும். ஆனால் அவைகள் அதிகாரிகளின் பிரிவிற்குத் தகுந்தபடி அமைந்திருக்கின்றன. எப்படி யெனில்: முதலில் ஸ்தோத்திரங்களை எடுத்துக்கொள்வோம். கடினாக்ஷரங்களை யுச்சரிக்க முடியாத தசையுள்ள பாலர்களுக்காக ஸ்ரீ கோபால விம்சதி, ஸ்ரீ கோதாஸ்துதி, ஸ்ரீ தேவநாயக பஞ்சாசத் போன்ற ஸ்தோத்திரங்கள் அமைந்திருக்கும் அழகைப் பாருங்கள்.

"வந்தே ப்ருந்தாவநசரம் வல்லவீஜநவல்லபம் । ஜயந்தீஸம்பவம் தாம வைஜயந்தீவிபூஷணம் ।" 'ஸ்ரீவிஷ்ணுசித்தகுலநந்தந கல்பவல்லீம் ஸ்ரீரங்கராஜஹரிசந்தந யோகத்ருஸ்யாம் । ஸாக்ஷாத் க்ஷமாம் கருணயா கமலாமிவாந்யாம் கோதாமநந்யஸரண: ஸரணம் ப்ரபத்யே ।" "ப்ரணதஸுர கிரீடப்ராந்தமந்தாரமாலா விகளிதமகரந்தஸ்நிக்தபாதாரவிந்த: । பஸுபதிவிதிபூஜ்ய: பத்மபத்ராயதாக்ஷ: பணிபதிபுரவாஸீ பாதுமாம் தேவநாத: ।"

"பிம்பாதரம் விகசபங்கஜலோசநந்தே ஸம்பாவகம் ஸுஜித கம்பஸு ஸ்மரணீயம் । காந்தம் ஸுவம் கநககேதக கர்ணபூரம் ஸ்வாந்தம் விபூஷயதி தேவவதே கவீயம் ॥"

இவைகள் 'வாசோமயே வ ஹயாரம்' என்றபடி படிப்பதற்கும் பாடுவதற்குமே இனிமையுள்ளவை. பொருளைச் சிறிது கவனித்தாலோ 'அண்ணிக்கு மமுதூறு மென் நாவுக்கே' என்றபடி, தேனும் பாலுங் கன்னலும் அமுது மொத்திருக்கிறபடியை அக் கவிசிங்கத்தின் அருள் பெற்ற அதிருஷ்டசாலிக ளறிவர். மேற்சொன்ன தசை கடந்து கொஞ்சம் கடின பதங்களையு முச்சரிக்க ஆரம்பிக்கும் சிறு குழந்தைகள் வயதிற்குத் தகுந்தபடி, [கமோர ஸாங்கட ஸார ஸாமஹம்ஸீரம்] கடினமும் மிருதுவுமான பதங்களின் சேர்த்தியா லழகான ஸ்ரீரகுவீர கத்யமென்று வழங்குகிற மஹாவீரவைபவ மெனும் ஸ்தோத்திரத்தைக் கவனித்தால், 'ஸமுத்ர இவ ரத்நாட்யம்' என்று முத்துக்கள்போல் போற்றக்கூடிய பல அர்த்தங்களுக்கிடமான ஸ்ரீமத் ராமாயணமெனும் க்ஷீராப்தி ஸமுத்ரத்தில் அவகாஹித்து எடுத்துத் தூப்புல் வள்ளல் உதவிய பொருள்களை யடைந்த நாம் எப்படி நன்றியின்றி இருக்க முடியும்? இதில்,

"ஜெயதிஜநஸ ஸாம்ராஜ்யநாம ராஜ்ய ஸகோர ஸம்ரு! । ககுத ஸர ஸநஸர ரணகரண வெலக்ஷ்ய க்ஷணிதாக்ஷ பஹுவிய ரக்ஷா பஹுக்ஷவக்ஷ: கவாடபாட நபடுஸ்ஸாடோபகோபாவவெல! கடாரடகட நிடங்கஜதி படு கமோரகாகுக!"

என்றிருப்பதை நோக்கவும். வயது வந்தபின் அநுஸந்திக்கக் கூடியவை ஸ்ரீ கருட பஞ்சாசத் முதலியவை.

"க்ஷோணீ க்ஷோணீயராணி க்ஷாமித வதாரகவோர திவ்யூரா க்ஷீ

த்ருட்யத்தாராஸாராணி ஸ்வாபிதவிபாயஸ்தாநகாநி க்ஷிதேயா: ।
வாதாதூத்ரஹஸளயாவயிவிஹிதஜாயாவதந்தாநந்ஸ்தூதாதிம் ।
ஸ்ரஹாம்லஸ்யா தாரெ வ்யூஹதி வமவெதாஹம்கச்ரீயிதாநி"

ஸ்ரீதயா சதகத்தில் ஸ்ரீந்ருஸிம்மாவதாரத்தைப் பற்றிய

"ஸடாபடலபீஷணே ஸரபஸாட்டஹாஸோத்படே ஸ்புரத்க்ருதி பரிஸ்புடத்ப்ருகுடிகேபி வக்த்ரே க்ருதே । தயெ வ்ருஷகிரீசிது: தநுஜடிம்பதத்தஸ்தநா ஸரோஜஸத்ருசா த்ருசா ஸமுதிதாக்ருதி த்ருச்யஸெ ।"

என்னும் ச்லோகத்தில், பொருளிற்குத் தகுந்தபடி பூர்வார்த்த உத்தரார் தங்கள் அமைந்திருக்கும் ஆச்சரியத்தை அநுபவிக்கவேணும். [திருமலையரசன் தயையே பிடரிமயிரின் அடர்த்தியினால்பயங்கரமாயும், திடீரென்று உண்டான அட்டஹாஸம் நிறைந்ததும், கோபம் பொங்கியதும், நெறிந்த புருவங்கள் உள்ளதுமான முகம் இருக்கச் செய்தேயும், அசுரன் மதலைக்கு முலை கொடுத்துக்கொண்டு செந்தாமரைக்கு நிகரான கண்களால் கனத்த உருவத்தோடு காணப்படுகிறாய்.] ஸ்ரீ உக்ரந்ருஸிம்மத்தின் கோபாவேசத்திற்கு அநுகுணமாகக் கடிநபதங்களாலும், தயாதேவியென்னும் தாயின் ஸந்நிவேசத்திற் கேற்ப அதி லலித பதங்களாலும், முன் பின் பாதிகளைக் கருணாநிதியான கவிஸிம்ஹம் அமைத்திருக்கும் அழகோடு, பொருள்சுவை செறிந்துமிருப்பதை அறிந்த நாம் அளவற்ற ஆனந்தக் கடலில் அமிழ்ந்து விடுகிறோம். ஸ்ரீ யாதவாப்யுதய மஹா காவ்யத்தில் ஸ்ரீ கண்ணன் ஸ்ரீ ருக்மிணிப் பிராட்டியைப் பாணிக்ரஹணம் செய்து திருத்தேரி லேற்றியபோது, சேர்த்தியில் இமை கொட்டாது ஸேவித்த தோழிகள், 'ப்ராவாஸூஸ்வர்வாரஸ்த்ரீஸமாநாநாம்' குறைவில்லாத அப்ஸரஸ்ஸுக்களின் ஸாம்யத்தைப் பெற்றாரென்னுமிடத்தில் 'அநூநாநாம்' (குறைவில்லாத) என்பதற்கு உரைகாரரான அப்பய்ய தீக்ஷிதரும் அரும்பாவம் எழுதாமல் விட்டது பெரும்பாவமே. நம் தேசிகன் அர்த்த புஷ்டியில்லாத வீண் சப்தாடம்பரங்களைச் செய்வதில்லை யென்பதை யறிந்த நாம், அழகில் அப்ஸரஸ்ஸுக்களையொத்த தோழிகள் இமை கொட்டுவதினால் சிறிது குறைந்திருந்த ஸாத்ருஶ்யத்தை அஃதொழிந்ததினால் பூர்ணமாயும் பெற்றார்களென்று ஆனந்திக்கிறோம். 'தோழியும் நாமும் தொழுதோம் துயிலைப் பணித்தருளாயே' என்கிற பெரியாழ்வார் பாசுரத்தின் கருத்து வைத்து, கோபிகா வஸ்திராபஹார ப்ரகரணத்தில் பரஸ்பர ஸஹாயத்தோடு பரமனைப் பணிந்தார்களென்று பணித்தவிடத்திலும் வ்யாக்யாதா தவறிவிட்டார். அப்பெண்கள் ஒரு கையை

வஸ்திரமாகவும் மற்றொன்றை மற்றொருவர் கையோடு சேர்த்து அஞ்ஜலியாகவும் செய்துகொண்டார்களென்ற ஆழ்வார் அருளிச்செயல்களின் ஆழ்ந்த கருத்தை அவரெப்படி அறிவார்? ரஹஸ்ய க்ரந்தங்களிலோ 'ஸம்க்ஷிப்தம் விஸ்த்ருதம் வா ஸரஸஸமுசிதம்' என்கிறபடி சுருக்கமாகவும் விரிவாகவும் லலிதமாகவும் கடினமாகவும் பல ரீதிகளை யனுஸரித்து மணிப்பிரவாளமாக அருளிச்செய்திருப்பதும் அநுக்ரஹ கார்யமே. அவைகளில் ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரயஸாரத்தில் ஸ்வநிஷ்டாபிஜ்ஞாநத்தில் ஸாதித்திருக்கும் அர்த்த விசேஷங்களில் ஆச்சரியப்படாதவரு முண்டோ?

1. பிறரால் பரிபவப்படும்போது தேஹாதிகளைப்பற்றிப் பிறர் சொல்லும் குற்றங்கள் தேஹவிலக்ஷணனான ஆத்மாவில் இல்லை யென்று அறிந்து, அறிவாளர்கள் வருந்தார்களென முதலில் ஸாதித்த ஸ்வரூப நிஷ்டையின் அடையாளத்தை எல்லா மதத்திலும் பெரியார்கள் எழுதியுள்ளார்கள்.

2. தன்னைப் பரிபவித்துப் பாவிகளாய் அருநரகென்னும் அனலுக்கு இரையாகிறார்களே என்று கரைபுரண்ட தயையும்,

3. தாம் அநுஸந்திக்க வேண்டிய தோஷங்களை மறவாதபடி பண்ணினார்களென்ற நன்றியறிவும்,

4. கர்மாநுகுணமாக ஈச்வரனால் ஏவப்பட்டுப் பரிபவம் செய்கிறார்களென்று அவர்களிடம் மனங் கலங்காமலிருப்பதும்,

5. நம் பாவம் தொலைகின்றதென்கிற ஸந்தோஷமும், என்று இப்படி மேன்மேலும் ஆச்சரியமான அனுபவங்களின் அடையாளங்களை வேறு மதாசிரியர் ஒருவரும் சொல்லவில்லை என்பதை ப்ராமாணிகர் யாரும் ஒப்பாமலிரார். இப்படியே ஸ்ரீபாதுகாஸஹஸ்ரம் முதலிய காவியங்களில் இன்னொருவர்க்கு இல்லாத சாதுர்யமும் ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதய நாடகத்தில் எட்டுப் பாஷையிலும் கவிதையின் திறமும், சததூஷணியில் யுத்தத்தில் முன்னணியில் நிற்பதும், தத்வமுக்தாகலாபத்தில் ஸர்வஜ்ஞத்வமும் தமிழ்ப் பிரபந்தங்களில் "சந்தமிகு தமிழ் மறையோன்" என்று தம்மைத் தாமே யனுஸந்தித்தபடி ஸ்ரீ பரகாலன் ஸ்ரீ திருமழிசைப்பிரான் முதலான ஆழ்வார்கள் அருளிச்செயல்களின் ஆழ்ந்த கருத்துக்களையும் ரீதிகளையும் அடியொற்றி அமைந்திருப்பதும், எல்லாவற்றிலும் ப்ரம்ஹவித்துக்களில் மேன்மையும் நிரஸூயர்களான மஹான்களுக்கு நிலமாகும். இதை ஸ்ரீநைனாராசாரியரின் திருவடியான ஸ்ரீ ப்ரதிவாதி பயங்கரம் அண்ணன் அருளிச்செய்த ஸ்ரீஸப்ததி ரத்ந மாலிகையின்.

"கந்த்யஸாயாரண பாதராஷ்ட்ர காவ்யாதிஷு ப்ரஹ்விஷ்ணூர்ணிஷ்டம் தயாஷூஷா கவிதாபடுகம் ஸங்க்ஷ்ய ஸூக்தியைர் யஸ்ய ஶ்ருத்யஸ்ய ।"

"த்ரைவிஷண்யாதள தாதிகாரே ஸாரகம் ஸ்வஷ்டம் ஶ்ரீமதேஶம் கடேஶஸ்ய ஸூக்தேஶ꞉ । கந்த்யாஹாஹ்ய பாதராஶீ வத்ஸ்யகம் ஹே ஸர்வஜ்ஞகம் தகரகாகுராவெ ।"

என்னும் சுலோகங்களில் காணலாம்.

"ஸத்யம் ஸத்யம் புந꞉ ஸத்யம் உத்த்ருத்ய புஜமுச்யதே । வேதஶாஸ்த்ரம் பரம் நாஸ்தி ந தைவம் கேஶவாத் பரம் ॥"

என்று ஸ்ரீ வ்யாஸ பகவான் கைதூக்கி உறுதி செய்தது போல், நம்பெருமாள் ஸன்னிதியில் ரத்னமாலிகா ஸ்தோத்ரத்தினால் அண்ணா அறுதியிட்டாராகையால், ப்ரதிஜ்ஞாஸப்ததி என்று ரத்னமாலிகைக்கு மற்றொரு திருநாமமுண்டு. இவ்வாசாரியர் கிருதிகளில் க்ஷணம் பரிசயம் பண்ணுவது பல வருஷங்கள் வேறு க்ரந்தங்களின் வீக்ஷணத்தால் ஏற்படும் அறிவையளிக்குமென,

'யதீயஸூக்திஷு க்ஷணம் பரிசிதி꞉ ஸதாம் பாரதீம் தநோதி பஹுவர்ஷஶாஸ்த்ரஶீலந ஶ்ருதாநந்த꞉"

என்கிற ஸ்ரீ ரத்ந மாலிகை சுலோகம் கூறுகிறது.

இந்த ஸ்ரீ தேசிகரத்னத்தைத் தூஷிப்பவர் ஸ்ரீராம கிருஷ்ண தூஷகரான ராவண சிசுபாலரை அநுஸந்தித்தவரென,

ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய வேங்கடேஶஸ்ய தத꞉ க்ஷாந்தே தேவநாதநாத கேவலநாஸ்திகா꞉ । ஹந்த ஹந்த ராமக்ருஷ்ணத்வேஷிணாம் ஹி யாயிநாம் கிம் நு சித்ரம் த்வேஷ்யா ராவணாநாம் ஶிஶுபாலிநாம் ।

என்கிற சுலோகம் தீர்மானிக்கிறது. மற்றுமோர் பெரியார்:

"தேஶிகோ நிகமாந்தார்யாத் ந ஸ்தோதா ஸாத்விகோ ஜந꞉ ।
தத்ஸூக்தேஶ்ச ப்ரபந்தோ(அ)ந்ய꞉ நாஸ்தி நாஸ்தி மஹீதலே ॥"

ஸ்ரீதேசிகனைப்போல் ஆசிரியரும், அவரிடம் பக்தியுள்ளவரைப்போல் ஸாத்விகரும், அவர் ஸ்ரீ ஸூக்திபோல் வேறு பிரபந்தமும் இப்புவியில் இல்லை

இல்லை என்று அறுதியிட்டார். ஆதலின் இவ்வாசாரிய சிரோமணியின் ஸ்ரீ ஸூக்திகளில் அவத்யம் சிறிது ஆர் சொல்லினும்

"யதாஶக்தி நிக்ரஹீதவ்யா தேவதாகுருநிந்தகா꞉"

[சக்தியுள்ளவரை தெய்வம் ஆசாரியன் இவர்களைத் தூஷிப்பவரைத் தடுக்க வேணும்] என்ற விதிப்படி செய்ய விவேகிகள் கடமைப்பட்டிருக்கிறார்கள். அநர்க்கமான ஸ்ரீதேசிக ஸ்ரீ ஸூக்திகளுக்கு அடியோங்கள் செய்யும் ரக்ஷணமுண்டோவென்று சிலர் கலங்குவர்கள். ஸ்ரீ பாஞ்சராத்ரமென்னும் ஶ்ருதி꞉ பதியுடன் ஸ்ரீஸூக்திக்கு ஸ்ரீதேசிகன் ரக்ஷை செய்தருளவில்லையா? பெருமாளைக் கண்ட பெரியாழ்வாரும் சேவடி செவ்விக்குத் திருக்காப்பிட்டார். 'தர்மோ ரக்ஷதி ரக்ஷித꞉'. தர்மத்தை நாம் ரக்ஷித்தால் அது நம்மை ரக்ஷிக்குமென்றபடி தர்மமயங்களான ஸ்ரீ ஸூக்திகளையும், பிறர் தூஷணங்களின் கந்தமுமில்லை என்று நாம் கிரந்தங்களாலும் உபன்யாஸங்களாலும் ரக்ஷிக்க நம்மை அவைகள் ரக்ஷிப்பதில் ஐயம் சிறிதுமில்லை. நம் முன்னோர்களும் 'ஶிவாத் பரதரம் நாஸ்தி' [சிவனில் உயர்ந்ததில்லை] என்று ஒருவன் கையெழுத்து செய்யும்படி நிர்ப்பந்திக்க (அபரமர்கள்) லக்ஷ்மி இல்லாதவர்கள், (பரமர்கள்) உயர்ந்தவர்கள் ஆகமாட்டாரென்று உயிரையும் கண்களையும் கொடுத்தன்றோ ஸ்தாபித்தார்கள்.

தங்கள் ஸித்தாந்தங்களில் பிறர் காற்றடிக்கப் பார்ப்பரோ ப்ராமாணிகரான பண்டிதர்கள்? ஆகையால் நம் ஸ்ரீ தேசிகனுக்கு யதாசக்தி உத்ஸவாதிகளையும் அம்மஹானுடைய ஸ்ரீ ஸூக்தி ப்ரசாரங்களையும் நடத்துவது, அவர் திருவடி ஸம்பந்தம் பெற்ற பாக்யசாலிகளுக்குப் பிராப்தம். அநிதரஸாதாரணமான நிருபபதமான ஸ்ரீ தேசிகனென்னும் திருநாமமே இவ்வாசாரிய சிரேஷ்டரின் பெருமையைப் பெரிதும் பிரகாசப்படுத்துவது கவனிக்கற் பாலது.

ஸ்ரீ:

கீர்த்தி ப்ரவாஹம்

[ஸ்ரீ. உப. வி. ராமஸ்வாமி ஐயங்கார், B. A. B. L. அட்வொகேட், சென்னை]

" ஜயதி ஸஹஜதேஜா நாம் ஜ்ஞாநமுத்ரிதபாணிநாம்
வர இவ வரிணாஃ வர்ஷீயஸாம் கவீநாம் ।
ஸாரதாரீவ ஹம்ஸஸந்ததா நாம் ஜநாநாம்
விசததரவிவேகோ விஷ்ணுபாதாவதாரஃ ॥ "

ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகனுடைய திருவவதார மஹோத்ஸவத்தைக் கொண்டாடும் இம்மலரில் ஒரு இதழ் சேர்க்கும்படி அடியேனுக்கு ஏற்பட்ட நியமநத்தைச் சிரஸா வஹித்துச் சிறிது எழுதத் துணிந்தேன். இவ்வுத்தம கைங்கர்யத்தில் அந்வயிக்கும் பாக்யம் அடியேனுக்கு ஏற்பட்ட விஷயத்தில் உண்டாகும் மகிழ்ச்சி சொல்லொணாது.

ஸ்வாமி தேசிகன் மஹிமையும் பெருமையும் பின்புள்ளார் தமது ஆசார்ய பக்திக்குப் போக்கு வீடாகக் கற்பிக்கவேண்டு மளவில் நில்லாது, எத்திறத்தாரும் புகழும்படி ஓங்கி நிற்பவை. ஸ்வாமி விபவத்தில் எழுந்தருளியிருக்கும்போதே அவ்வோ ஸமயங்களில் கிடைத்த பிருதுகளும் பட்டங்களும் ஸ்வாமியினுடைய மேன்மைக்குப் போதுமான ஸாக்ஷ்யங்கள். அதிலும் ஐதிஹ்ய ரூபமான கதைகளில் மட்டும் காணவேண்டும்படியல்லாது, ஸ்வாமி ஸ்ரீ ஸூக்திகளிலேயே பதிக்கப்பட்ட சில ரத்நங்களின் ஒளியால் ஸ்வாமியினுடைய காந்தி உலகெங்கும் பரவியிருக்கிறது. திருவவதாரமே விலக்ஷணமான தென்பது,

" உத்ப்ரேக்ஷ்யதே புதஜநைருபபத்திபூம்நா "

என்று அவர் தாமே அருளிச் செய்யும்படி, மஹாங்கள் அக்காலத்திலேயே அங்கீகரித்த விஷயம். இவ்வுலகைப் படைத்து நாமத்தை அவ்வோ வஸ்துக்களுக்குத் தெரிந்தளிக்கும் ஸர்வேஶ்வரனே, தம்மை வேதாந்தாசாரியர் என்று வாய்குளிரப் பெயரிட்டழைத்ததாக ஸ்ரீ அதிகரண ஸாராவளியில் அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. " வேதாந்ததேசிகபதே விநிவேஶ்ய பாலம் " என்கிற ஸ்ரீதயாசதக ஶ்லோகத்தின்படி, ஸ்வாமியை அவ்வேதாந்த தேசிக பதத்தில் வைத்தருளியது எம்பெருமானே. அப்படியே ஸ்ரீயதிராஜ ஸப்ததி நிகமந ஶ்லோகத்தில் 'கவிதார்க்கிக ஸிம்ஹம்' என்கிற பிருதும் பேசப்படுகிறது.

'ஸ்ரீரங்கராஜ திவ்யாஜ்ஞா லப்த வேதாந்தாசார்ய பதஃ'
'கவிதார்க்கிக ஸிம்ஹ இதி ப்ரக்யாத குண ஸம்பத்ஃ'

என்கிற ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதய வாக்யங்களாலே அக்காலத்திய இந்தப் பிருதுகளும், அவைகள் கிடைத்த வகைகளும், நிராக்ஷேபங்களாய் எல்லாராலும் அங்கீகரிக்கப்பட்டவைக ளென்பது புலப்படுகிறது.

ஸ்வாமி தமது பூர்வாசார்யர்களைக் கொண்டாடிப் புகழ்ந்து பேசும் பாசுரங்களில் பல, ஸ்வாமி விஷயத்தில் மிகப் பொருத்தமுடையனவாக அமைந்திருப்பன.

"காக்குங் கருத்துடைத் தேசிகர் கன்றென நம்மை யெண்ணிச்
சுரங்குஞ் சுரபிகள்போல் சொரிகின்றனர் சொல்லமுதே."

இது எந்த வ்யக்திகளைத் திருவுள்ளத்தில் வைத்து ஸ்வாமி அருளிச்செய்தாரோ அறிகிலோம். ஆனால் காமதேனுவைப்போல் சொல்லமுதை வர்ஷித்தவர் இந்தத் தேசிக வள்ளல்தான். வடமொழியிலும் தென்மொழியிலும் இரு மொழிகளிலும் பல ஸ்ரீ ஸூக்திகளைச் சிறப்புறச் செய்தருளியதில் ஸ்வாமிக்கு முன் செல்லவல்லவர் யாவர் ?

"ஏற்றி மனத்தெழில் ஞான விளக்கை யிருளனைத்தும்
மாற்றினவர்க்கொரு கைம்மாறு மாயனுங் காணகில்லான் "

என்ற இந்தப் பாசுரமும் ஸ்வாமிக்கே பொருந்தும் என்பதில் ஐயமிலது. நாதமுனிகளால் ப்ரவ்ருத்தமான தர்சநம், ஸ்ரீயாமுந முனியின் அருளிச் செயல்களால் பலவிதமாய்ப் போஷிக்கப்பட்டு, ஸ்ரீ பாஷ்யகாரர் ஸ்ரீஸூக்திகளால் நன்கு ரக்ஷிக்கப்பட்டு, ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகனால் அகிலமான இருட்டையும் போக்கடிக்கக் கூடிய சக்தியடைந்த தென்பது ஸ்வாமியினுடைய ஸ்ரீ தத்வ முக்தா கலாப ச்லோகத்திலிருந்தே த்வனிக்கிறது.

" நாதோபஜ்ஞம் ப்ரவ்ருத்தம் பஹுபி-
ருபசிதம் யாமுநேய ப்ரபந்தைஃ
த்ராதம் ஸம்யக் யதீந்த்ரைரிதமகில-
தமஃ கர்சநம் தர்சநம் நஃ ॥ "

ஆகவே இருளனைத்தும் மாற்றிய நம் ஸ்வாமி திறத்தில்தான் உண்மையில் பரமாத்புத சேஷ்டிதங்களுடைய ஸர்வேஶ்வரனும் கைம்மாறு செய்ய அறியாமல் கலங்க ப்ராப்தம். ராமக்ருஷ்ணாத்யவதாரங்கள் செய்து ஈஶ்வரன் சரணாகதி தர்மத்தைப் பல படியாயும் எடுத்துக் காட்டிச் சேதநர்களை ஆட்கொள்ளப் பார்த்தவிடத்தே அது பலியாமல் போய்விட்டது.

பிறகு சரணாகதியை அநுஷ்டித்துக் காட்டி, அவ்வழி நின்று உய்ந்து போக ஸ்ரீ பாஷ்யகாரர் மார்க்க தர்சியாய் இருந்தார். அதுவும் பூர்ண பலனை அளிக்கமாட்டாது போய்விட்டது. பிறகு தஞ்சப் பாகதியைத் தந்தருள்வோனான நம் தேசிகன் ஸித்தாந்தித்த பிறகுதான் கலியும் கெட்டது கண்டு கொண்மின்.

இப்படிப்பட்ட அத்யத்புத வைபவசாலியாய், 'தத்ராஹநேகஃ வஹாஸக்ஷிஹாகேத்ரா:' என்றும், 'ஓரொன்று தானே யமையாதோ?' என்றும் மஹாங்களெல்லாம் வியக்கும்படியான ஸ்ரீஸூக்திகளை அருளியவராய், தமது திருவடிகளை அவலம்பித்த அஸ்மதாதிகளுக்கு இங்குமங்கும் வைக்கப்பட்ட பெருநிதியாயுள்ள நம் ஸ்வாமி ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகனைப் போற்றி யுகப்பதும், புந்தியிற் கொள்வதும், பொங்கு புகழ்ச் சாற்றி வளர்ப்பதும், வார்ஷிக மஹோத்ஸவத்தை உத்தேசித்து ஒரு தனி மலர் வெளியிடுவதும் சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே.

ஸ்ரீ தேசிகனுடைய திவ்ய கீர்த்தியானது கங்கையே போலும். பகவானிடமிருந்தே உத்பத்தியாகிய அந்த மஹா நதி வரவர விஸ்தாரத்தையடைந்து லோகத்தைப் புநிதமாக்கிப் பூமிக்குச் செழிப்பையும் சிறப்பையும் இடைவிடாது அளிப்பது போலவே, ஸ்வாமியின் கீர்த்தியும் இஹபர ஸாதநமாய் ஆசந்த்ரார்க்கம் ப்ரவஹிக்கப் ப்ராப்தம்.

தொண்டருகக்கும் துணையடி வாழிநின் தூமுறுவல்
கொண்ட முகம்வாழி வாழி வியாக்கியா முத்திரைக்கை
வண்டிரு நாமம் வாழி மணிவட முப்புரிநூல்
கொண்டசீர் தூப்புல் குலமணியே வாழி நின்வடிவே.

அதிர்ஷ்டம்! எப்படி?

L. N. பெப்பர்மெண்டையே வாங்கவேண்டும்.

குழந்தைகளின் சிநேகிதர்கள்! பெற்றோர்களின் களிப்பு!!

விலை மலிவு! சுவை பெரிது!
நன்மை தரும்!

இந்திய முதல்—இந்திய தொழிலாளிகள்.

வாங்கி ருந்துங்கள்! கொடுக்கும் பணத்திற்கு
நல்ல பெப்பர்மெண்டு!!

For Delicious and wholesome Confectionery made of selected Fruit Essence and healthy glucose, apply to:—

SRI L. N. CONFECTIONARY,
Sales Depot:—West Chitrai St., Madura.

MADRAS OFFICE:—**Phone No. 3658.**
Y. M. I. A. Buildings, Armenian St., Madras.

हिंगु காயம்

"हृद्यं हिंगु कटूष्णं च क्रिमिवातकफापहम् ।
विबन्धाध्मान शूलघ्नं चक्षुष्यं गुल्मनाशनम् ॥"

சுத்தமான பெருங்காயம் ஹ்ருதயத்திற்கு பலம் தரும்; காரமும் உத்ஸாஹமுமளிப்பது; வயிற்று க்ரிமிகளையும், வாத தோஷத்தையும், கப தோஷத்தையும் போக்கும்; மலக்கட்டும், வயிற்று நோய் இவைகளையும் தீர்க்கும்.

இவ்விதம் சாஸ்திரத்திலுள்ள குணங்களைப் பெற்ற சிறந்த பெருங்காயம் L. G. குறி உள்ளதுதான்—

லால்ஜி கோது & கம்பெனி
பிரபல பெருங்காய வியாபாரிகள்,
பம்பாய் சென்னை கும்பகோணம்

अमृतांजनम्

அம்ருதாஞ்சனம்

உண்மையில் அம்ருதம் போன்றது. இப்பெயர் அகரத்தில் ஆரம்பிப்பதால் இது அகில மங்களமும் அளிக்கக் கூடியது என்று அடியில் கூறும் ப்ராசீன முதுமொழி கூறுகிறது.

"अ इति भगवतो वाचकमकारं
प्रयुञ्जानेन किं नाम मङ्गलं न कृतम् ।"
"अकारोपक्रमश्चास्मिन्मङ्गलत्वाभिसंस्थितः ।"

தலைவலி, ஜலதோஷம்,
சுளுக்கு முதலான சகல
நோய்களையும் தீர்க்கவல்ல
ப்ரஸித்தமான லேபனம்.

அம்ருதாஞ்சனம் டிபோ

பம்பாய், மதராஸ், கல்கத்தா,

எல்லா ஆயுர்வேத வைத்தியர்களும் இங்கிலீஷ்
டாக்டர்களும் பிறரும் கொண்டாடும்

சார்ங்கதர ஸம்ஹிதை

ஆயுர்வேத சாஸ்திரத்தின் ஸகல ஸாராம்சங்களும் அடங்கிய மிகப்
பிராசீன வைத்தியக் கிரந்தம்.
வைத்தியரத்னம்

பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,
ஆயுர்வேத பூஷணம், ஆயுர்வேதாசார்யர் அவர்களால்
ஸம்ஸ்க்ருதத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.
சீர்திருத்திய மூன்றாம் பதிப்பு

மூன்று கண்டங்களும் 32 அத்தியாயங்களும் அடங்கியது.

வைத்திய பரிபாஷை முதலியவைகள்.

1. பூர்வகண்டத்தில்:—(1) வைத்திய பரிபாஷைகள், (2) ஔஷதி முதலியவற்றின் விவரணம், (3) நாடீ பரீக்ஷாதிகள், (4) தீபந-பாசநாதி குண விவரணம், (5) சரீரதத்வாதிகள், (6) உணவு உட்செல்லும் வகை முதலியன, (7) ரோகவிவரணம் என்னும் ஏழு அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

ஔஷத முறைகள்.

2. மத்திம கண்டத்தில்:—(1) ஸ்வரஸ முறைகள், (2) க்வாத-கஷாய முறைகள், (3) பாண்ட கஷாய முறைகள், (4) ஹிமகஷாய முறைகள், (5) கல்க முறைகள், (6) சூர்ண முறைகள், (7) குளிகை-மாத்திரை முறைகள், (8) லேஹ்ய முறைகள், (9) ஸ்நேஹ-தைல-க்ருத-முறைகள், (10) ஸந்தாந ஆஸவாரிஷ்ட-முறைகள், (11) தாது-லோஹ-பாஷாணாதி-சுத்தி பஸ்மாதி முறைகள், (12) ரஸங்கள்-ரஸ-கந்தகாதி முறைகள் என்னும் பன்னிரண்டு அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

சிகித்ஸா க்ரமங்கள்.

3. உத்தரகண்டத்தில்:—(1) ஸ்நேஹபாநவிதி, (2) ஸ்வேதவிதி, (3) வமநவிதி, (4) விரேசநவிதி, (5) வஸ்திவிதி, (6) நிரூஹவஸ்திவிதி, (7) உத்தரவஸ்திவிதி, (8) நஸ்யவிதி, (9) தூமபாநவிதி, (10) கண்டூஷாதி விதி, (11) லேபநாதி விதி, (12) இரக்த மோக்ஷணவிதி, (13) நேத்திர சிகித்ஸை, ஆகப் பதின்மூன்று அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

வேறு விவரம்.

எளிய வசனநடை, விஷயங்கள் ஒழுங்காகவும் தலையங்கங்களோடும் அமைக்கப்பட்டிருக்கின்றன. விரிவான உரை. விசேஷ அநுபந்தங்கள் ஸகல விஷயங்களுக்கும் விஸ்தாரமான விஷய அகராதிகள்.

உயர்ந்த காலிகோ பைண்டு	ரூ.	5	4	0
இரண்டாந்தர பைண்டு	ரூ.	4	4	0

வைத்திய கலாநிதி ஆபீஸ்,

11, ஆதியப்ப முதலித் தெரு, வேப்பேரி, மதராஸ்.

Registered No. M. 916.

ஓர் ஆச்சர்யமான ஸம்வாதம்

கேளுங்கள்: பாருங்கள்: வாருங்கள்: வாங்குங்கள்:

சாஸ்திரி:—விசுவாச முள்ளோர்க்கன்று சாஸ்திரமே ப்ரமாண மென கிறார் கீதாசார்யன். "तस्माच्छास्त्रं प्रमाणं ते" என்று கேட்டதில்லையா?

க்ருஹிணீ:—ஆனால் என்ன?

சாஸ்திரி :—ஆசார்ய வாக்படா் கூறுவதைக் கேளம்மா. நீங்கள் சும்மா இருப்பது சரியல்ல.

"सूर्यादिग्रहनिग्रहापहरणं दीर्घायुरारोग्यदम्
सौभाग्योदयभाग्यवश्यविभवोत्साहप्रदं धैर्यकृत्
दुश्छायाचलधूलिसङ्गतिभवालक्ष्मीहरं सर्वदा
वज्राणां परिधारणं निगदितं भूतादिनिर्नाशकम् ॥"



க்ருஹிணீ :—நீர் சொல்வது எனக்குப் புலப்படவில்லையே.

சாஸ்திரி:—கதிரவன் முதலான கிரகங்களின் சாபங்களைத் தடுக்கும்; நீண்ட ஆயுளையும் சரீர சுகத்தையு மளிக்கும்; ஸௌமங்கல்ய நிலையைத் தந்திடும்; ஸகல பாக்யங்களையும், வசியத்தையும், விபவங்களையும், உத்ஸாஹத்தையும் விளைவிக்கும்; கெட்ட நிழல் பர்வத தூசி இவைகளின் சேர்க்கையினால் உண்டாகும் பிணியை நீக்கும்; பூதம் முதலான பேய் பிசாசுகளை நிர்மூலமாக்கும். எது? வைரமணிகளை 'परिधारणं' நிரம்பத் தரிப்பதேயாம்.



க்ருஹிணீ :—அடடா! என்ன ஆச்சர்யம்! அவைகள் எங்கே கிடைக்கும்?

சாஸ்திரி :—வெகு அழகாயும் மிக்க ஸரஸமாயும் ஒரே ரேட் (விலை) உள்ளதாயும் வைரங்கள் கிடைக்குமிடம்—

ஸூராஜ்மல் லல்லுபாய் அண்டு கம்பெனி,
313, எஸ்பளனேட், மதராஸ்.

SURAJMAL'S
The Jewellers
313 ESPLANADE. MADRAS.

Printed by Kabeer Printing Works, Triplicane, and Published by Vankipuram S. Vasudevachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd., Madras

SRI VEDANTA DIPIKA

Vol. 25] NOVEMBER 1936 [Part 5

ஸ்ரீ
வேதாந்த தீபிகை

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபையாரால்
ப்ரசுரிக்கப்படும் மாதத் தமிழ்ப் பத்ரிகை.

தாது ௵ ஐப்பசி ௴

பத்ராதிபர்கள் :

ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்
வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

CONDUCTED BY

Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd.,

VANI VILAS, 4, BADRIAH GARDEN ST., PARK TOWN, MADRAS.

ஸ்ரீ:

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

விஷய ஸூசிகை

1. ஸம்பாதகரின் குறிப்புகள் — 173
2. ஸ்ரீமத் ராமாயண ரஸாஸ்வாதம் — 181
   [ஸ்ரீ. உப. தி. வீரராகவாசார்யர்]
3. ஸ்ரீ. கீதா மஹிமை — 189
   [ஸ்ரீ. உப. திருக்கோட்டியூர் ஸ்ரீ ராமதேசிகாசார்யர், ஸ்ரீரங்கம்]
4. சமயாசாரியர்களும் தமிழும்
   [ஸ்ரீ. உப. டி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார், மதுரை] — 195
5. ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகனும் பாதஞ்ஜலயோகமும் — 199
   [ஸ்ரீ. உப. திருமலாபிஜந: க்ருஷ்ணமாசார்யர், மைஸூர்]
6. மீமாம்ஸா ஸங்க்ரஹம் — 206
   [ஸ்ரீ. உப. வி. கோ. ராமாநுஜாசார்யர்]
7. மதிப்புரை — 213
8. விவாத பாகம் — 214
   [ஸ்ரீ. உ. வே. ஸ்ரீசைல சக்ரவர்த்யாசார்யர்]
9. ஸ்ரீ தேசிகன் திருவவதார வைபவம் — 219
10. வாதராஜ பஞ்சாசத் — 220
    [ஸ்ரீ. உப. ஏ. வி. கோபாலாசார்யர்]
11. மன்னுபுகழ் மாமுனிவன் — 227
    [ஸ்ரீ. ரெ. திருமலை ஐயங்கார்]
12. ஸ்ரீ வைகுண்ட ஸ்தவம் — 117—124
    [ஸ்ரீ. உப. ஸ்ரீ. வாசுதேவாசார்யர், மாம்பலம்.]
13. திவ்விய ஸூரி சரிதம் — 265—280
    [வங்கீபுரம் : கோ. ஸ்ரீ. உப. ஸ்ரீனிவாஸாசார்யர்]

குறிப்பு :—(1) சந்தாத் தொகையை தாமதமன்னியில் அனுப்பாவிடில் அடுத்த சஞ்சிகை V. P. யில் அனுப்ப நேரிடும்,

(2) மற்ற ஸமஸ்த விஷயங்களுக்கும் சபையின் ரிஜிஸ்டர்ட் ஆபீசின் விலாஸத்தைக் கவனிக்கவும்.

T. Rajagopalachari,
General Secretary.

அதிர்ஷ்டம்! எப்படி?

L. N. பெப்பர்மெண்டையே வாங்கவேண்டும்,

குழந்தைகளின் சிநேகிதர்கள்! பெற்றோர்களின் களிப்பு!!

விலை மலிவு! சுவை பெரிது! நன்மை தரும்!

இந்திய முதல்—இந்திய தொழிலாளிகள்.

வாங்க முந்துங்கள்! கொடுக்கும் பணத்திற்கு நல்ல பெப்பர்மெண்டு !!

For Delicious and wholesome Confectionery made of selected Fruit Essence and healthy glucose, apply to :—

SRI L. N. CONFECTIONARY,
Sales Depot :—West Chitrai St., Madura.

MADRAS OFFICE :—**Phone No. 3658.**
Y. M. I. A. Buildings, Armenian St., Madras.

12 MAR 1937

हिंगु காயம்

“हृद्यं हिंगु कटूष्णं च क्रिमिवातकफापहम् ।
विबन्धाध्मान शूलघ्नं चक्षुष्यं गुल्मनाशनम् ॥”

சுத்தமான பெருங்காயம் ஹ்ருதயத்திற்கு பலம் தரும்; காரமும் உத்ஸாஹமுமளிப்பது; வயிற்று க்ருமிகளையும், வாத தோஷத்தையும், கப தோஷத்தையும் போக்கும்; மலபந்தம், வயிற்று நோய் இவைகளையும் தீர்க்கும்.

இவ்விதம் சாஸ்திரத்திலுள்ள குணங்களைப் பெற்ற சிறந்த பெருங்காயம் L. G. குறி உள்ளதுதான்—

லால்ஜி கோது & கம்பெனி
பிரபல பெருங்காய வியாபாரிகள்,
பம்பாய் சென்னை கும்பகோணம்.

अमृतांजनम्

அம்ருதாஞ்சனம்

உண்மையில் அம்ருதம் போன்றது. இப்பெயர் அகரத்தில் ஆரம்பிப்பதால் இது அகில மங்களமும் அளிக்கக் கூடியது என்று அடியில் கூறும் ப்ராசீன முது மொழி கூறுகிறது.

" अ इति भगवतो वाचकमकारं
प्रयुञ्जानेन किं नाम मङ्गलं न कृतम् । "
" अकारोपक्रमश्चास्मिन्मङ्गलत्वाभिसन्धितः । "

தலைவலி, ஜலதோஷம், சுளுக்கு முதலான சகல நோய்களையும் தீர்க்கவல்ல ப்ரஸித்தமான லேபனம்—

அம்ருதாஞ்சனம் டிபோ

பம்பாய், மதராஸ், கல்கத்தா.

ஶ்ரீ:

ஶ்ரியை நம꞉

ஸம்பாதகரின் குறிப்புகள்.

யோऽந்த꞉ ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர꞉ ஸ்வதாம்நா ।
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

ஜந்மாந்தரமும் 'பயாலஜீ' சாஸ்த்ரமும்

சென்ற ஸெப்டம்பர் மாஸத்தில் வெளிவந்துள்ள 'வேதாந்த கேஸரீ' என்னும் ஒரு இங்க்லீஷ் பத்ரிகையில், ப்ரத்யக்ஷ சாஸ்த்ரங்களுள் ஒன்றாகிய 'பயாலஜீ' [Biology] என்னும் சாஸ்த்ரத்தைக் கற்றிருக்கும் ஒரு ஹிந்து மதஸ்தர், 'ஜந்மாந்தரம் என்பது உண்டு என்று சொல்வது சில ப்ரத்யக்ஷாநுபவத்திற்கு விருத்தமாக இருக்கின்றது' என்று வாதித்து வ்யாஸமொன்று எழுதி இருக்கிறார். அந்தக் 'கேஸரி' பத்ரிகையின் ஸம்பாதகரும், 'ஜந்மாந்தரம் உண்டு என்று ஹிந்து சாஸ்த்ரம் சொல்வதைச் சற்று பரிஷ்கரித்து விட்டால், அது ஒருவித ப்ரத்யக்ஷாநுபவத்திற்கும் விருத்தமாக இருக்கமாட்டாது' என்று நினைத்து, அம்மாதிரி அதைப் பரிஷ்கரித்துப் 'பயாலஜீ' சாஸ்த்ரஜ்ஞராற் சொல்லப் பட்டுள்ள ஆக்ஷேபத்திற்கு ஒரு ஸமாதாநத்தை, 'Transmigration—a restatement' என்னும் ஒரு வ்யாஸ ரூபமாக வெளியிட்டிருக்கிறார். நமது சாஸ்த்ரங்களில் விச்வாஸ மிராதவர்களுடன் நமக்கு ஒரு வித விவாதமும் இல்லை. ஒவ்வொருவருக்கும் அவரவர் கர்மத்திற்குத் தக்கவாறு 'ஆஸ்திக்ய மும் நாஸ்திக்யமும் ஜநிக்கின்றன. ஆனால், நமது சாஸ்த்ரம் சொல்வ தெல்லாம் ப்ராசீந பரிபாடியை அநுஸரித்திருக்கின்றதென்றும் அவை இக் காலத்திற்கு அநுகுணமாகப் பரிஷ்கரிக்கப்படுதல் வேண்டுமென்றும் சொல்லிக்கொண்டு, அவைகளைத் தமது இஷ்ட ப்ரகாரம் மாற்றுவதற்கு ப்ரயத்நப்படும் ஸாஹஸிகர்களுடன் நமக்குப் பூர்ணமான விவாதம் உண்டு. சாஸ்த்ரம் சொல்வதை விசாரியாமலே அதைப் பரிஷ்கரிக்க முயல்வது ஸாஹஸமன்றோ? ப்ரக்ருதத்தில், கேஸரியின் ஸம்பாதகரால் செய்யப்பட்டுள்ள பரிஷ்காரம் அத்யந்தம் வேதவிருத்தமாக இருப்பதால், அதன் தோஷத்தை வெளியிடுவதில் நாம் ப்ரவர்த்திக்கும்படி ஸம்பவிக்கின்றது.

முதலில், ப்ரத்யக்ஷவாதிகள் சொல்லும் ஆக்ஷேபம் என்னவென்பதை விசாரிப்போம். இந்த உலகத்தில் தென்படும் ஜந்துக்களின் தேஹங்க

ளெல்லாம், ஆரம்பகாலத்தில், 'ஸெல்' (cell) என்று சொல்லப்படும் அத்யல்பமான ஒரு மாம்ஸபாகமாகவே இருந்தனவென்றும், அந்த 'ஸெல்'கள் தமக்கு இயற்கையாகக் கிடைத்துள்ள சில வ்யாபார விசேஷங்களால் ஒன்று நூறாகப் பெருகி ஸ்தூலங்களான சரீரங்களாகப் பரிணமிக்கின்றனவென்றும், அந்த 'ஸெல்'களுக்கு அவ்விதமாக வ்யாபரிக்கும் சக்தி விசேஷமிருக்கிறபடியால் அவைகளுக்கு உயிருண்டு என்று ஒத்துக்கொள்ளுதல் வேண்டுமென்றும், ஏதாவது ஒரு காரணத்தால் அந்த 'ஸெல்'கள் தமது சக்தி விசேஷத்தை இழந்துவிடும் பக்ஷத்தில் அவை ஒன்று நூறாகப் பெருகுவதற்கும் ஸ்தூல சரீரங்களாகப் பரிணமிப்பதற்கும் யோக்யதை அற்றவையாகி விடுகின்றனவென்றும், இவ்விதம் உயிருள்ள ஒரு வஸ்துவினிடமிருந்தே மற்றொரு உயிருள்ளவஸ்து உண்டாகிறபடியால் உயிருக்கு ஒரு விததொடர்ச்சி இருக்கிறதென்றும் அவர்கள் சொல்லுகிறார்கள். பூதக் கண்ணாடியைக் கொண்டு இந்த 'ஸெல்'களின் வ்யாபாரத்தைப் பார்த்தால், அவை முதலில் ஒன்றோடொன்று சேர்வதும், பிறகு பிரிவதும், அப்படிச் சேர்ந்து பிரிவதன் கார்யமாக வேறு புதிய 'ஸெல்'கள் உத்பத்தி பெறுவதும், இவைகளெல்லாம் அதி விசித்ரமான வ்யாபாரங்களாகத் தென்படுகின்றனவாம். இப்படி அத்யாஸ்சர்யகரமான வ்யாபாரம் அந்த 'ஸெல்'களில் தென்படும் காரணத்தால் மாத்ரம் 'அவை உயிருள்ளவை' என்று அவர்கள் சொல்லுகிறார்களே தவிர்த்து, 'அவை ஜீவனால் அதிஷ்டிதங்களாக இருக்கின்றன ; ஆகையால் அந்த வ்யாபாரங்களைச் செய்வதற்கு அவை யோக்யங்களாகின்றன' என்று அவர்கள் சொல்லுகிறார்களில்லை. அவைகளுள் ஒவ்வொன்றுக்கும் ஒரு ஜீவன் உண்டென்று ஒத்துக்கொள்ளும் பக்ஷத்தில் 'அப்படி ஸஜீவன்களான கணக்கற்ற 'ஸெல்'களால் ஏற்படும் ஒரு ஸ்தூல தேஹத்தில் ஒரே ஜீவன் அதிஷ்டாநம் செய்துகொண்டு நிற்கிறான் என்று சொல்வது எவ்விதத்தில் உபபந்நமாகும் ?' என்பது அவர்களுடைய முதல் ஆக்ஷேபம். அந்த ஸ்தூல தேஹம் 'ஸெல்'களிலிருந்து காலக்ரமேண உத்பத்தியைப் பெறுகிறபடியால், அந்த உத்பத்தியின் எந்த தசையில் அதை அதிஷ்டிக்கும் ஜீவன் அதில் ப்ரவேசிக்கிறான் ? இவ்விதம் ஒரு தேஹத்தில் ப்ரவேசத்தைப் பெறுதற்கு முன் அந்த ஜீவன் எவ்விடத்தில் இருந்தான் ? அப்பொழுது அவனுக்கு ஒரு தேஹம் இருந்ததோ ? இருந்திருந்தால் அந்தத் தேஹம் நாசமடைந்த க்ஷணத்திலேயே இப் புதிய தேஹம் இந்த ஜீவனுக்கு ப்ரவேசார்ஹமாகப் பரிணமித்தது என்று சொல்வது எப்படி ஸாத்யமாகும் ?' இவ்வாறு பலவித அநுபபத்திகளை உத்தேசித்து, இந்தத் தேஹங்களைக் காட்டிலும் அதிரிக்தமாக ஜீவன் என்று ப்ரத்யக்ஷாகோசரமான ஒரு வஸ்துவும் இல்லையென்றும், அது ஒரு தேஹத்தை விட்டு மற்

றொரு தேஹத்தில் புகுகின்றது என்பதும் இல்லையென்றும் ஒத்துக் கொள்வது ச்லாக்யமன்றோ ? இதுவும் அவர்கள் செய்யும் ஆக்ஷேபம்.

நிற்க: க்ருமிகளாகத் தென்படும் அத்யல்பமான சில ஜந்துக்களின் விஷயத்தில், மற்றுமொரு விசித்ரமான அம்சம் காணப்படுகின்றதாம். அது என்னவென்றால்: அந்த க்ருமிகள் ஜீவித்திருக்கும் காலத்தில் அவைகளின் தேஹத்தைத் துண்டித்தால், அதிலிருந்து கிடைக்கும் துண்டுகள் ஒவ்வொன்றும் உயிருடன் கூடிய வெவ்வேறு க்ருமிகளாக மாறுகின்றனவாம். ஜீவன் துண்டிக்கப்படக்கூடிய வஸ்துவன்றாதலால், இம்மாதிரி ஒரு ஜீவனிடமிருந்து பல ஜீவன்கள் உண்டாவது எப்படி ? இம்மாதிரியான நூற்றுக் கணக்கான சங்கைகள் 'ஜீவன் உண்டு, அது ஸம்ஸரிக்கின்றது' என்னும் வாதத்தில் ஏற்படுகிறபடியால், அந்த வாதம் ஆதரிக்கத்தக்கதன்று என்பது அவர்கள் கக்ஷி.

இதற்குக் 'கேஸரி' யின் ஸம்பாதகர் சொல்லும் ஸமாதாநம் என்னவென்றால் :—எல்லா ஜந்துக்களும் ஜீவனால் அதிஷ்டிதங்களாக இருக்கின்றன வென்று ஹிந்து சாஸ்த்ரம் சொல்கின்றது என்பது உண்மையேயாயினும், அதன் தாத்பர்யம், எந்த எந்த ஜந்துக்களிடம் 'நான்' என்னும் ஜ்ஞாநம் இருக்கின்றதோ அந்தந்த ஜந்துக்களிடம் மாத்ரம் ஜீவன் உண்டு' என்பதுதான். 'நான்' என்னும் ஜ்ஞாநமின்றிக்கே, கேவலம் சிற்சில வ்யாபாரத்தை மாத்ரம் செய்துவரும் 'ஸெல்' போன்ற நிக்ருஷ்ட வஸ்துக்களிடம் ஜீவன் அதிஷ்டித்து நிற்கவில்லையாம். இவ்விதம் ஒத்துக்கொள்ளும் பக்ஷத்தில், கீழ்க்கூறப்பட்டுள்ள ஆக்ஷேபங்களெல்லாம் பரிஹ்ருதங்களாகிவிடுகிறபடியால், நமது சாஸ்த்ரத்திற்கு ப்ரத்யக்ஷ விரோதம் என்னும் தோஷம் ப்ரஸங்கிக்கமாட்டாதாம். இதைத்தான் பரிஷ்காரமென்று 'கேஸரி' ஸம்பாதகர் உரைக்கிறார். ஜீவ ஸம்ஸ்ருதியானது இவர் சொல்லும் ப்ரகாரமே நடைபெறுவதாக நாம் ஒத்துக்கொண்டால், க்ருஸ்த்வ மதமே ஸ்வல்ப மாறுதலுடன் நம்மால் ஒத்துக்கொள்ளப்பட்டதாகின்றது என்பதை இவர் கவனித்தாரில்லை. மநுஷ்ய சரீரம் மாத்ரம் ஜீவன்களால் அதிஷ்டிதம் என்பது க்ருஸ்தவர்களின் கொள்கை. இவர், மநுஷ்யர்களுடன் கூட சில உத்க்ருஷ்ட திர்யக்குக்களிடத்திலும் ஜீவன் நிற்கிறான் என்று கொஞ்சம் அதிகமாக சொல்லுகிறார். இம்மாதிரி ஒரு வ்யவஸ்தை செய்வதற்கு எந்த ப்ரமாணம் இடம் கொடுக்கின்றது என்பது நமக்குப் புலப்படவில்லை. ப்ரக்ருத விஷயமாக நமது சாஸ்த்ரம் சொல்வதைச் சரிவர அறிந்திருந்தால், இவர் இம்மாதிரி பரிஷ்காரம் செய்ய முயன்றிருக்கமாட்டார் என்பது திண்ணம்.

நமது சாஸ்த்ரங்கள் சொல்வது என்னவென்றால்:-இந்த ஸ்ருஷ்டியில் தென்படும் பூத வர்க்கங்கள், தேவர்களென்றும் மநுஷ்யர்களென்றும் திர்

யக்குக்களென்றும் ஸ்தாவரங்களென்றும் நாலு வகைப்பட்டவை. ஸ்தாவரங்களாவன : மரம் செடி முதலியவை; திர்யக்குக்கள்: பசு பக்ஷி முதலியவை; மநுஷ்யர்கள்: நம்மைப்போன்றவர்கள்; தேவர்கள்: நமக்கு அத்ருஶ்யமான சரீரத்தை உடையவர்கள். இந்த நாலு வர்க்கங்களும் ஜீவனுடன் கூடியவைகளே. சுத்த ஜீவன்களுடைய ஜ்ஞாநம் இயற்கையால் எவ்வித ஸங்கோசமுமற்றதானாலும் அவரவர்களுடைய கர்மத்திற்குத் தக்கபடி பந்தம் ஏற்படும்பொழுது அந்த ஜ்ஞாநம் பஹு ப்ரகாரமாகத் திரோதானத்தை அடைகின்றது. அதன் தாரதம்யத்தை அவலம்பித்து இந்த விபாகம் ஏற்படுகின்றது. ஸ்தாவரங்களைக் காட்டிலும் குறைந்து அதிமாத்ரம் அநுத்புத்தமாக இருக்கும் ஜ்ஞாநத்தை யுடைய காஷ்டம் லோஷ்டம் முதலிய பொருள்களை நாம் நிர்ஜீவன்களென்று வ்யவஹரிக்கின்றோம். ஆகையால் ஜீவனால் வ்யாப்தமல்லாத வஸ்து ஒன்றும் இந்த ஸ்ருஷ்டியில் இல்லை என்றே சொல்லவேண்டும்.

இந்த நாலு வர்க்கங்களுள் அகப்பட்டிருக்கும் வஸ்துக்களெல்லாவற்றிலும், ஜ்ஞாநமயமான ஜீவன் ஒரு அம்சம், ப்ரக்ருதிமயமான சரீரம் ஒரு அம்சம், ஆக இரண்டு அம்சங்கள் உண்டு. ஜீவன் என்னும் அம்சம் ஒரு பொழுதும் நாசம் அடையாதது; சரீரம் என்னும் அம்சம் நஶ்வரமே; அதாவது : ஸ்வரூபத்தில் மாறுதலை அடையக்கூடியது. ஒரு ஜீவனுக்குச் சரீர வியோகம் நேர்ந்தால், அப்பொழுது அவன் மறுபடியும் தனது கர்மத்திற்கு அநுரூபமான மற்றொரு தேஹத்தைப் பெறுகின்றான். பகவத் க்ருபையால் ப்ரஹ்ம ஜ்ஞாநத்தை அடைந்து அதன் பலமாக ஸகலவித கர்ம நாசத்தையும் பெறும் ஜீவன்கள் மாத்ரம் மற்றொரு சரீரத்தினுடைய ஸம்பந்தத்தைப் பெறுகிறார்களில்லை. அவர்கள் ஆவிர்ப்பூத ஸ்வஸ்வரூபர்களாய் [அதாவது தமக்கு இயற்கையாயுள்ள எவ்விதக்குறைவுமற்ற ஜ்ஞாநத்தைப் பெற்றவர்களாய்] பகவத் ஸாயுஜ்யத்தை அடைகிறார்கள்; மற்றவர்களெல்லாரும் வேறொரு தேஹத்தைப் பெறுகிறார்கள்.

இவர்கள் எவ்விதம் மற்றொரு தேஹத்தைப் பெறுகிறார்கள் என்பதை உபநிஷத்துக்கள் விஸ்தாரமாக விளக்கியிருக்கின்றன. அதைச்சுருக்கமாகக் காட்டுவோம். ஜந்மத்தைப் பெற்றுள்ள ஜீவன்களை நாம், ப்ரஹ்மத்தை உபாஸிக்குமவர்களென்றும், ப்ரஹ்மோபாஸநயின்றி இஷ்டா பூர்த்தத்தைச் செய்பவர்களென்றும், ப்ரஹ்ம வித்யை கர்மம் இவைகளை உபாஸிக்க அதிகாரம் இருக்கையிலும் அவைகளை உபாஸியாமல் இருப்பவர்களென்றும், அவ்விதம் உபாஸியாமல் இருப்பது மாத்ரமின்றிக்கே நிஷித்தத்தைச் செய்பவர்களென்றும், வித்யை கர்மம் இவை ஒன்றுக்கும் அதிகாரமற்ற உத்பிஜ்ஜம் ஸ்வேதஜம் முதலிய நிக்ருஷ்ட ஜந்துக்களென்றும், ஆக ஐந்து வர்க்கங்களாகப் பிரிக்கக்கூடும். இவர்களுள் முதல் வர்க்கத்தார் ம்ருதியடையும் பொழுது தேவயாநம் என்னும் மார்க்கத்தால் உத்க்ராந்தி பெற்றுக் கடைசியாகப் பகவதநுக்ரஹத்தால் கர்மம் கழிந்தவர்களாய் வேறு தேஹத்தைப் பெறாமலே மோக்ஷத்தை அடைகிறார்கள். மற்றவர்களெல்லாருக்கும் தேஹாந்தர ப்ராப்தி உண்டு. அவர்களுள் இஷ்டா பூர்த்தம் முதலியவைகளைச் செய்பவர்கள், தங்களுடைய தேஹத்தை இழந்தவுடன், தேஹாந்தராரம்பத்திற்கு ஹேதுவாயுள்ள பூதஸூக்ஷ்மங்களுடன் கூடினவர்களாய் பித்ருயாணம் என்னும் மார்க்கத்தின் மூலமாக வெளிப்புறப்பட்டு சந்த்ர லோகமடைந்து, அங்கிருந்து ஆகாசம் வாயு தூமம் மேகம் இவைவழியாக இறங்கி, பிறகு மழையாகவும் அந்நமாகவும் ரேதஸ்ஸாகவும் மாறும் பூதஸூக்ஷ்மங்களுடன் கடைசியாக ஸ்த்ரீ கர்ப்பத்தில் ப்ரவேசித்து அங்கு ஒரு புருஷரூபமான சரீரத்தைப் பெறுகிறார்கள். வித்யா கர்மங்களை உபாஸியாதவர்கள் நிஷித்த கர்மங்களைச் செய்பவர்கள் இந்த இருவர்க்கத்தாரும் தமது கர்மங்களுக்கு அநுரூபமான யாதனைகளை அநுபவிப்பிப்பதற்காகச் சிற்சில லோகாந்தரங்களுக்கு நயிப்பிக்கப்பெற்று பிறகு தேஹாந்தரத்தை அடைந்து ஸம்ஸரிக்கிறார்கள். இதர நிக்ருஷ்ட ஜந்மம் பெற்றிருப்பவர்களுக்கு ஒரு ஜந்மம் போனவுடன் இவ்விடத்திலேயே அடுத்த ஜந்மம் ஸம்பவிக்கின்றது. அவர்களுக்கு ஸ்த்ரீ கர்ப்ப ப்ரவேசமிராமலே தேஹாரம்பம் ஸம்பவிக்கக்கூடுமென்பது அநுபவ ஸித்தம். த்ரௌபதி த்ருஷ்டத்யும்நர்கள் முதலான சில புண்யசாலிகள் விஷயத்திலும் அப்படிப்பட்ட தேஹாரம்பம் ஏற்படுவதை நாம் படித்திருக்கிறோமன்றோ?

இந்த விவரணத்திலிருந்து இரண்டு மூன்று விஷயங்கள் நிஷ்க்ருஷ்டங்களாகத் தெரிகின்றன. நமது பூர்வபக்ஷிகளும் அவர்களுடைய ஆக்ஷேபத்திற்கு ஸமாதாநம் சொல்லும் பாஶ்சாத்ய வித்வாங்களும் நினைப்பதுபோல, ஜீவன்களுக்குப் புதிய தேஹ ஸம்பந்தம் ஏற்படும் காலம் அவ்யவஸ்திதமன்று என்பது அவைகளுள் முக்யம். 'ஸெல்' என்றும் 'ப்ரோடோ ப்ளாஸம்' என்றும் அவர்கள் சொல்லும் மாம்ஸ பாகங்கள் உத்பத்தியடைவதற்கு முன்னதாகவே புதிய தேஹத்தை அடையப்போகும் ஜீவன் அவைகளுக்கு மூலமாக இருக்கும் பதார்த்தத்துடன் ஸம்பந்தப்பட்டிருக்கின்றானாகையால் இதில் எவ்வித அவ்யவஸ்தையும் இல்லை. இரண்டாவது, புருஷனுடைய ரேதஸ்ஸுடன் அந்த ஜீவனுக்கு ஸம்பந்தம் சொல்லப்படுகிறபடியால் ஸ்த்ரீகளுடைய சோணிதம் கேவலம் உபகாரகமாகின்றதே [Fertiliser] தவிர்த்து, அதுவும் ஒரு ஜீவ ஸம்பந்தம் பெற்றிருக்கின்றது என்று நினைக்க இடமில்லை. ஆகையால் இரண்டு 'ஸெல்'கள் ஒன்று சேர்ந்து ஒரே 'ஸெல்' லாக மாறும்பொழுது இரண்டு ஜீவன்கள் ஒன்றாக மாறவுமில்லை. இவ்விதம் ஸம்பந்தம் பெற்ற பிறகு தேஹம் வ்ருத்தி அடையும் ப்ரக்ரியையில் ப்ரத்யக்ஷஸித்தங்களென்று, Scientists சொல்

னும் அம்சத்தில் நமக்கு எவ்வித விவாதமுமில்லை. மூன்றாவது, அநிஷ்டகாரிகளுக்கும் க்ருமிகள்போன்ற ஜந்துக்களுக்கும் லோகாந்தரகமநமிராமலே ஒரு தேஹம் போனவுடன் மற்றொரு தேஹத்தை அவர்கள் ப்ரவேசிப்பதும் உபபந்நமே. ஒவ்வொரு க்ஷணத்திலும் பிறக்கும் இறக்கும் ஜந்துக்கள் கணக்கற்றவை யல்லவோ? ஒரு க்ருமி துண்டிக்கப்பட்டவுடன் அந்தத் துண்டுகளில் வேறு இரண்டு ஜீவன்கள் ப்ரவேசித்து அவைகளை ஸஜீவன்களாகச் செய்வதில் ஒருவித அநுபபத்தியுமில்லை. பூர்வம் அந்த க்ருமியில் இருந்த ஜீவனுக்கு ஒரு ஜந்மம் முடிந்து வேறொரு புதிய ஜந்மம் ஏற்பட்டு வேறொரு தேஹ ப்ரவேசம் ஸம்பவிக்கலாமன்றோ? வஸ்து ஸ்திதி இவ்வாறு இருக்கிறபடியால், ப்ரத்யக்ஷ விரோதம் என்பது எவ்விதத்தில் ப்ரஸங்கிக்கும்? பரிஷ்காரமும் எதற்கு?

*   *   *   *

காமமும் அதன் கார்யமும்

சென்ற ஸஞ்சிகையில் எட்வர்ட் கார்பெண்டரால் [Edward Carpenter] எழுதப்பட்டுள்ள "Drama of Love and death" என்னும் க்ரந்தத்தைப்பற்றி ப்ரஸ்தாவித்து, அதில் ஆத்ம விஷயமாகப் பல ச்லாக்யங்களான நிர்ணயங்கள் காணப்படுகின்றனவென்று எழுதி யிருந்தோம். இப்பொழுது அந்த க்ரந்தத்தின் ப்ரதாநமான விஷயத்தைப்பற்றி கொஞ்சம் விசாரிப்போம். இந்த ப்ரபஞ்சம் வ்ருத்தியைப் பெறுவது முழுவதும் இரண்டு ஜந்துக்களுக்குப் பரஸ்பரம் ஸம்பவிக்கும் அநுராகத்தின் [அல்லது காமத்தின்] பலமென்பது வ்யக்தம். இந்த ந்யாயம் ஸ்த்ரீ புமான் என்று பேதித்து நிற்கும் ஜந்துக்களில் மாத்ரம் தென்படுகிறது என்னும் நியமத்துடன் நிற்காமல், ஸ்த்ரீ புமான் என்னும் பேதமிராத ஸ்வேதஜம் முதலிய ஜந்துக்கள் விஷயத்திலும், ஸகல தேஹங்களுக்கும் மூல காரணமாயிருக்கும் 'ஸெல்'களின் விஷயத்திலும் அதி ஸூக்ஷ்மமாய்க் காணப்படுகின்றது என்று இவர் நிரூபிக்கிறார். இந்த 'ஸெல்'கள் பரஸ்பரம் ஆகர்ஷித்துக்கொள்வதும், ஒரு க்ஷணகாலம் இரண்டும் ஒன்று சேர்வதும், உடனே அவை மாறிப் பஹுவான புதிய 'ஸெல்'களாக ஆவிர்ப்பவிப்பதும், அந்தப் புதிய 'ஸெல்'களுக்குள் திரும்பவும் பூர்வம்போல் பரஸ்பரம் ஆகர்ஷம் உண்டாவதும், இவையெல்லாம் ஒரு ந்ருத்யகோஷ்டியில் ஸுசிக்ஷிதர்களான நர்த்தகர்கள் விசித்ரமான விலாஸத்துடன் நர்த்தநம் செய்வது போலவே காணப்படுகின்றனவாம். அந்த 'ஸெல்'களுக்குச் சைதந்யம் இருப்பது ஸந்திக்தமாக இருந்தாலும், அவைகளில் கீழ் விவரிக்கப்பட்டுள்ள வ்யாபாரங்கள் போன்ற சில விசித்ர சேஷ்டிதங்கள் காணப்படுகிறபடியால் அவைகளிடமும் அநுராக விசேஷமொன்று இருப்பது போலவே இவர் பேசுகிறார். இவ்விதம் மநுஷ்ய ஜாதி முதலான ஸகல

ஜந்துக்களும் தமக்குள் இருக்கும் அநுராகத்தின் கார்யமாக உத்பத்தியைப் பெறுகிறபடியால், ஜகத் முழுவதும் இந்த அநுராகத்திலேயே ப்ரதிஷ்டிதமாக இருக்கின்றது என்பது அவருடைய நிர்ணயம். நிற்க: கீழ் விவரிக்கப்பட்டுள்ள வ்யாபாரங்களின் பலமாகப் புதிய 'ஸெல்' கள் உண்டாகும் க்ஷணத்திலேயே பழைய ஸெல்கள் நஷ்டங்கள் ஆகிவிடுகின்றன என்பதும் ப்ரத்யக்ஷ ஸித்தமாம். சில பெரிய ஜந்துக்கள் விஷயத்திலும் ஸந்ததி ஜநித்தவுடன் அதைப் பிறப்பிக்கும் ஜந்துக்கள் அந்தப் பிறவியைப் பெறுவிப்பதன் பலமாக ம்ருதி அடைவதை நாம் பார்க்கிறோம். அப்படி ஸந்ததியை ஜநிப்பிப்பதன் கார்யமாக மரணத்தை அடையாமலிருக்கும் ஜந்துக்கள் பல வுண்டு. அவைகளின் விஷயத்திலும் அநுராகம் உத்கடமாக இருந்து அதன் பலமாக ப்ரஜை ஒன்று உத்பத்தி யாகும்பொழுதெல்லாம், மாதா பிதாக்களுக்கு ம்ருதி ப்ராயமான ஒரு சக்தி நாசம் உண்டாகின்றது என்பது அநுபவ ஸித்தம். சாஸ்த்ரமும் ஒரு பிதாவுக்குப் புத்ரன் ஜநிக்கும்பொழுது அந்தப் பிதாவே புத்ரனாக ஜநிக்கிறான் என்று சொல்லுகின்றது. இவையெல்லாவற்றையும் பரிசீலித்துப் பார்த்தால், ஜகத்தில் ஜந்துக்களுக்கு ஸம்பவிக்கும் மரணம் என்னும் நாசமும் அநுராகத்தின் கார்யமென்றே சொல்லக்கூடு மன்றோ? இவ்விதம் அதி விசித்ரமாக அந்த க்ரந்த கர்த்தா பஹுவாகப் பல நிர்ணயங்களைச் செய்து, கடைசியாக ப்ரபஞ்சத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி விநாசம் இவையெல்லம் ஜந்துக்களுக்குப் பரஸ்பரமுள்ள அநுராகத்தின் கார்யங்களாகவே காணப்படுகின்றனவென்று ஸ்தாபிக்கிறார்.

இதுதான் இந்த க்ரந்தத்தின் ப்ரதாந விஷயம். காமத்தின் வழியாகவே ஜகத்தின் அபிவ்ருத்தி உண்டாகின்றது என்பது ஸர்வ ஸம்மதமே. ஆனால் அந்தக் காமம் அவர் சொல்வதுபோல 'ஸெல்' கள் போன்ற வஸ்துக்களிடத்திலும் இருக்கின்றது என்பது உபபந்நமாகமாட்டாது. காமம் என்பது ஆத்மாவுக்கு இயற்கையாயுள்ள ஜ்ஞாநத்தின் ஒரு அவஸ்தா விசேஷம். கர்மத்தால் ஏற்படும் திரோதாநத்தின் கார்யமாக அந்த அவஸ்தை ஸம்பவிக்கின்றது. ஆகையால் அது ஆத்மாவுக்கு ஸ்வதஸ்ஸித்தமே தவிர்த்து, அசேதநங்களென்று அவரால் க்ரஹிக்கப்படும் ஸெல்களுக்கு அது ஸம்பவிக்கமாட்டாது. நச்வரங்களாகவும் அல்ப ஸுகத்தைக் கொடுக்கக் கூடியவைகளாகவும் இருக்கும் விஷயங்களில் பரம போக்யதா புத்தியைச் செய்து அவைகளின் அநுபவத்தை அடைய விரும்புவதே காமம். அதற்கு இடம் கொடுப்பது ஸம்ஸ்ருதிக்கு ஹேதுவாகின்றதென்றும், அதைச்சரிவர நியமநம் செய்வது மோக்ஷ ஹேதுவாகுமென்றும் நமது சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன. அது ஸம்ஸ்ருதியின் அபிவ்ருத்திக்கு ஹேதுவாகும் பொழுது அது எவ்விதம் வ்யாபரிக்கின்றது. என்பதை ஸ்ரீ பகவத்கீதை

யில் பரக்கக் காணலாம். ஜ்ஞாந யோகத்திற்கு அதிகாரிகளாக இருக்குமவர்கள் விஷயத்திலும் அந்த ஜ்ஞாந யோகத்தின் துஷ்கரதையையும் ஸப்ரமாதத்வத்தையும் ஸ்ரீ பகவாந் நிரூபித்து வரும்பொழுது, அர்ஜுநன், 'விஷய போகங்களில் ப்ரவர்த்திப்பது ஜ்ஞாநயோகத்திற்குப் பாதகமென்று அறிந்தவனன்றோ ஜ்ஞாநயோகத்திற்கு அதிகாரி? அப்படிப்பட்டவனையும் எது பலாத்கரித்து விஷயங்களில் இழுத்துவிடுகின்றது?' என்று கேட்க, ஸ்ரீ பகவான்,

"𑌕𑌾𑌮 𑌏𑌷 𑌕𑍍𑌰𑍋𑌧 𑌏𑌷 𑌰𑌜𑍋𑌗𑍁𑌣𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌃 ।
𑌮𑌹𑌾𑌶𑌨𑍋 𑌮𑌹𑌾𑌪𑌾𑌪𑍍𑌮𑌾 𑌵𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑍇𑌨𑌮𑌿𑌹 𑌵𑍈𑌰𑌿𑌣𑌮𑍍 ॥"

[அப்படி இழுக்குமது காமமே. அதற்கு இடம் கொடுத்தால் அது மேன்மேல் வ்ருத்தியாகுமே தவிர்த்து ஒரு பொழுதும் சாந்தமாகமாட்டாது. அது மஹத்தான பாபங்களுக்கும் காரணமாகும். ஆகையால் அது ஜ்ஞாந யோகத்திற்குப் பெரிய சத்ரு] என்று சொல்லிவிட்டு, அதற்குமேல் அது எவ்விதம் வ்யாபரிக்கின்றது என்பதை நிரூபிக்கிறார். இந்த்ரியங்கள் மநஸ் புத்தி இவைகள் அதற்கு அதிஷ்டாநமென்றும், இவைகளின் வழியாகவே அது வ்யாபரிக்கின்றதென்றும், ஆகையால் மோக்ஷத்தை விரும்புமவன் இவைகளை நியமநம் செய்வதுடன் இவை யெல்லாவற்றுக்கும் அதிஷ்டாதாவாக இருக்கும் காமத்தையே முக்யமாக நியமித்தல் வேண்டுமென்றும்

"𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌮𑌨𑍋 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑌸𑍍𑌯𑌾𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।"

என்று ஆரம்பித்து,

"𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌪𑌰𑌾𑌣𑍍𑌯𑌾𑌹𑍁𑌰𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑌰𑌂 𑌮𑌨𑌃 ।
𑌮𑌨𑌸𑌸𑍍𑌤𑍁 𑌪𑌰𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌯𑍋 𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌃 𑌪𑌰𑌤𑌸𑍍𑌤𑍁 𑌸𑌃 ॥
𑌏𑌵𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌃 𑌪𑌰𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌵𑌾 𑌸𑌂𑌸𑍍𑌤𑌭𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 ।
𑌜𑌹𑌿 𑌶𑌤𑍍𑌰𑍁𑌂 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌕𑌾𑌮𑌰𑍂𑌪𑌂 𑌦𑍁𑌰𑌾𑌸𑌦𑌮𑍍 ॥"

என்னும் வாக்யங்களால் விவரித்திருக்கிறார். இதிலிருந்து காமமே ஸம்ஸ்ருதியின் அபிவ்ருத்தியில் பலிஷ்டமான காரணமென்றும், ஆனால் அதன் வ்யாபாரம் இந்த க்ரந்த கர்த்தா சொல்வதுபோல் ஸாக்ஷாத்தாக ப்ரஜா வ்ருத்திக்குக் காரணமாயிருந்துகொண்டு அது வழியாக ஸம்ஸ்ருதியை வ்ருத்தி செய்கின்றது என்பது, மாத்ரமின்றிக்கே, ஜந்துக்களில் இந்த்ரிய மநோ புத்திகளை விஷய ப்ரவணங்களாக்கி அது வழியாக ஜ்ஞாநத்தை ஸங்கோசிப்பித்து ஸம்ஸ்ருதியை வ்ருத்தி செய்கின்றது என்றும் ஏற்படுகின்றது. கேவலம் யுக்தியை மாத்ரம் ஆதாரமாக வைத்துக்கொண்டு விசாரத்தில் ப்ரவர்த்தித்த இந்த க்ரந்த கர்த்தா, கீழ்க் குறிக்கப்பட்டுள்ள ஸூக்ஷ்மத்தை அறிந்தாரில்லை.

ஸ்ரீ:

ஸ்ரீமத்ராமாயண ரஸாஸ்வாதம்

[சிரோமணி தர்க்கார்ணவ பண்டிதரத்ந உத்தமூர்
ஸ்ரீ. உ. வே. தி. வீரராகவாசார்யர்]

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

மேலும் குசத்வஜர் என்கிற ஒரு ப்ரம்மர்ஷியின் பெண்ணான வேதவதி யென்பவள், விஷ்ணுவையே ஜாமாதாவாக வரிக்கவேண்டுமென்று தீர்மானித்திருந்த தன் தகப்பனாரைத் தைத்ய ராஜனான 𑌶𑌂𑌭𑍁 என்பவன் கோபத்தினாலே படுக்கையில் தூங்கும்போது கொலை செய்துவிட, எப்படியாவது அவர் மநோரதத்தைப் பூர்த்திசெய்ய வேணுமென்று நினைத்து ஹிமவத் பர்வதத்திலே தபஸ் செய்துகொண்டிருக்கும் தருணத்தில், ராவணன் மதாந்தனாய் அவளைத் தனக்குப் பார்யை யாகும்படி நிர்ப்பந்தித்துக் கேசபாசத்தைத் தொட்டதாகவும், அதன்மேல் அவள் கோபமுற்றுத் தன் கையையே கத்தியாகக்கொண்டு கேசத்தைச் சேதநம் செய்துவிட்டு, 'வேறு ஜந்மம் எடுத்து என் பர்த்தாவைக்கொண்டு உன்னை ஸம்ஹரிப்பேன்' என்று ப்ரதிஜ்ஞை செய்து, தத்க்ஷணம் அக்நியில் ப்ரவேசித்துப் பிறகு ஒரு தாமரைப் புஷ்பத்திலே அவதரிக்க, அந்த ஸமயத்தில் ராவணன் பார்த்து வ்யாமோஹித்து எடுத்துச் செல்ல, அவனுடைய மந்திரி யொருவன் இவளிடத்தில் அவனை வதம் செய்யத்தக்க சில குறிகள் காணப்படுகின்றனவாகச் சொல்ல, ராவணனும் பயந்து ஸமுத்ரத்திலே எறிந்துவிட, பிறகு ஜனக மஹாராஜனுடைய யஜ்ஞ பூமியிலே ஸீதாதேவியாக ஆவிர்ப்பவித்தாளென்று உத்தரகாண்டத்தில் (17-வது ஸர்க்கத்தில்) சொல்லப்பட்டது. இவ்விஷயம் யுத்தகாண்டத்திலும்,

"𑌶𑌪𑍍𑌤𑍋𑌽𑌹𑌂 𑌵𑍇𑌦𑌵𑌤𑍍𑌯𑌾 𑌚 𑌯𑌦𑌾 𑌸𑌾 𑌧𑌰𑍍𑌷𑌿𑌤𑌾 𑌪𑍁𑌰𑌾 ।
𑌸𑍇𑌯𑌂 𑌸𑍀𑌤𑌾 𑌮𑌹𑌾𑌭𑌾𑌗𑌾 𑌜𑌾𑌤𑌾 𑌜𑌨𑌕𑌨𑌨𑍍𑌦𑌿𑌨𑍀" (60)

என்று ஸம்க்ஷேபமாகச் சொல்லப்பட்டது. ஆக தேவதைகளின் ப்ரார்த்தனையின்பேரில் ஸர்வேஸ்வரன் அவதாரம் செய்ததற்கும் மூலமானது ஸீதா ஸங்கல்பமானபடியாலே அவளே புத்திபூர்வகமாக ராவண வதத்திற்காக ராமனை விவாஹம் செய்துகொண்டு கார்யத்தை நடத்திவந்ததாகச் சொல்லவேண்டியிருப்பதால், இது ஸீதா சரிதமாகத் தட்டில்லை. மேலும்:

'மாதர் மைதிலி ராக்ஷஸீஸ் த்வயி ததைவார்த்ராபராதாஸ் த்வயா
ரக்ஷந்த்யா பவநாத்மஜால் லகுதரா ராமஸ்ய கோஷ்டீ க்ருதா ।
காகம் தம் ச விபீஷணம் சரணமித்யுக்திக்ஷமௌ ரக்ஷத:
ஸா ந: ஸாந்த்ரமஹாகஸ: ஸுகயது க்ஷாந்திஸ்தவாகஸ்மிகீ ॥'

என்று பட்டார் அருளிச்செய்தபடியே பெருமாளைவிட பிராட்டிக்கு விசேஷித்து மஹிமையிருப்பதை இங்கிருந்து நாம் அறிகிறபடியாலும், கோராபராதியான ராவணனுக்கும் 'மித்ரமௌபயிகம் கர்த்தும் ராம: ஸ்தாநம் பரீப்ஸதா' என்று ஹிதோபதேசம் செய்யும்படி வாத்ஸல்ய நிர்ப்பரையாகப் பிராட்டியிருப்பதைத் தெரிவிப்பதாலும், இதிஹாஸங்களான பாரத ராமாயணங்களிலே பாரதம், திவ்ய தம்பதிகள் இருவரில் பெருமாளின் ப்ரபாவத்தையும், ராமாயணம் புருஷகார பூதையான பிராட்டியின் ப்ரபாவத்தையும் சொல்லுவதாகப் பெரியோர் நினைத்தபடியாலும், இதற்கு 'ஸீதா சரிதம்' என்கிற பெயர் ஸமுசிதம்.

'பௌலஸ்த்ய வதம்' என்கிற மூன்றாவது பெயரும் பொருத்த முள்ளதே. எவ்வாறெனில்: ராவண வதமான பிறகு ராமனுடைய ராஜ்ய பரிபாலநாதிகளைச் சொல்ல உத்தர காண்டம் ஒன்று மேலே இருந்தாலும், பதினோராயிரம் வர்ஷங்கள் தர்ம ஸ்தாபநம் செய்திருக்கச் செய்தேயும், 40-வருடத்திற்குள் நடந்த ராவண வதமே ராமாவதாரத்திற்கு உத்தேச்யமாகத் தேவதாசரணாகத்யாதிகளாலே வ்யக்தமாயிருப்பதால், ஸ்ரீ ராம சரித்ர பரமான இந்த க்ரந்தத்திற்கும் அவதாரமுக்யோத்தேச்யமான பௌலஸ்த்யவதத்தை யிட்டுப் பெயர் வைப்பதும் ந்யாய்யமே. ஆகவே 'பௌலஸ்த்ய வதம்' என்கிற பெயரை மட்டுங்கொண்டு 'உத்தர காண்டம் வால்மீகி மஹர்ஷி யருளிச் செய்யவில்லை; யாரோ செய்துச் சேர்த்து விட்டார்களத்தனை' என்று சில விமர்சகர்கள் நினைப்பதும் ஆதார மற்றது என்று விளங்கிற்று. இங்கே உத்தர காண்டம் வால்மீகி செய்யவில்லை யென்பதற்கு ஸாதகமாகத் தோன்றக்கூடிய மற்றும் சில காரணங்களையும் எடுத்துக் கழிக்கிறோம்.

வால்மீகி மஹர்ஷி இந்த ராமாயணத்தை எப்போது செய்தார் என்று விசாரிக்கவேண்டும். ராமன் தன்னடிச் சோதிக்கு எழுந்தருளின பிறகா? அல்லது ராஜ்ய பரிபாலநம் செய்யும் போதா முதல் பக்ஷத்தில்

'ப்ராப்தராஜ்யஸ்ய ராமஸ்ய வால்மீகிர் பகவாந் ருஷி: ।
சகார சரிதம் க்ருத்ஸ்நம்'

என்று பாலகாண்டம் நான்காவது ஸர்க்கத்திலும், உத்தரகாண்டத்திலும்,

ராஜ்ய பரிபாலநம் பண்ணும்போது மஹர்ஷி செய்ததாகவும், குசலவர்களைக் கொண்டு ஸ்ரீராமாச்வமேத மஹாமண்டபத்தில் காநம் பண்ணி வைத்ததாகவும் குறிப்பிட்டிருப்பது ஸங்கதமாகாமற் போகிறது. இரண்டாம் பக்ஷமானால், உத்தரகாண்டத்தில் ராமாயணம் செய்த பிறகு நடக்கவேண்டிய ராம கதாபாகத்தைப் பவிஷ்யத்தாக அல்லவோ சொல்லியிருக்கவேண்டும்? முதலில் ஆரம்பத்தில் நாரதர் உபதேசிக்கும்போது மேல் நடக்கும் கதைகளைப் பவிஷ்யத்தாகவே நிர்த்தேசித்திருக்கிறதையும் கவனித்தால், இது உசிதமென்று புலப்படும். ஆக 'ஜகாம [illegible]' என்று தன்னடிச் சோதிக்கு எழுந்தருளின ஸந்தர்ப்பம் வரைக்குமாக ராம கதையைப் பூர்ணமாக பூதகாலிகமாக (அதாவது: முன்னமே நடந்து விட்டதாகச்) சொல்லியிருப்பது பொருந்துமா? ஆகவே யுத்தகாண்டம் வரையில் தான் வால்மீகி செய்தது. உத்தர காண்டம் பின்னிட்டு யாரோ எழுதிச் சேர்த்திருக்கவேண்டும். இப்படியே பாலகாண்டத்தில் நான்காவது ஸர்க்கமும், மற்றும் சில பாகங்களும் வால்மீகி செய்திருக்கமுடியாது. மேலும் வால்மீகி என்கிற பதத்திற்கு வல்மீக புத்ரர் என்று வ்யாகரணத்தை அநுஸரித்துப் பொருள். உத்தரகாண்டத்திலோ "ப்ரசேதஸோ(அ)ஹம் தசம: புத்ர:" (96-19) என்று பிதாவுக்கு ப்ரசேதஸ் என்று பெயராகச் சொல்லப்பட்டிருக்கிறது. யுத்தகாண்டத்தின் முடிவிலே பல ச்ருதிகள் விசேஷமாகச் சொல்லப்பட்டிருப்பதும் அத்துடன் க்ரந்தம் முடிந்துவிட்டதென்பதற்கு ஸாதகமாயிருக்கிறது. பாலகாண்டத்தில் இரண்டு அநுக்ரமணிகைகளிருப்பதாலேயே சில பாகம் பின்னிட்டுச் சேர்க்கப்பட்டதாகக் கொள்ளவேணும். இப்படி யெல்லாம் பராமர்சிக்கும்போது பூராக ஏழு காண்டங்களும் வால்மீகியினாலேயே செய்யப்பட்டவை யென்கிற கொள்கை யுக்தமாகாது என்று இங்கே ஆக்ஷேபம். இதற்குப் பரிஹாரம் பின் வருமாறு:—

ராமன் ராஜ்ய பரிபாலநம் செய்தருளினபோதே ராமாயணம் செய்யப்பட்டதென்பதே ஸித்தாந்தம். நாரத மஹர்ஷி உபதேசம் செய்தது ராம ராஜ்ய காலத்திலே யென்றும், அன்றைய திநமே ப்ரஹ்மா ராமாயணம் செய்யும்படி நியமித்ததாகவும், குசலவர்களைக் கொண்டு ஸ்ரீராமாயண காநம் நடத்தினதாகவும் ஸ்பஷ்டமாக ஏற்படுகிறபடியால், இதை ஆபாஸ தர்க்கங்களைக்கொண்டு அழிக்கலாகாது. அதிலும் ஸீதா பிராட்டி கர்ப்பிணியாயிருக்கும்போது மறுபடியும் ராமனைவிட்டுப் பிரிந்து வால்மீகி மஹர்ஷியின் ஆச்ரமத்தில் இருக்கும்போது, லவணாஸுரவதம் செய்வதற்காக மதுரா புரத்திற்குப் புறப்பட்ட சத்ருக்நன் மத்யே மார்க்கம் மஹர்ஷியின் ஆச்ரமத்தில் வந்து தங்கினதாகவும், அந்த ராத்ரியே ஸீதாதேவிக்கு இரண்டு குழந்தைகள் பிறந்ததாகவும்,

"யாமேவ ராத்ரிம் ஶத்ருக்ந: பர்ணஶாலாம் ஸமாவிஶத் ।
தாமேவ ராத்ரிம் ஸீதாபி ப்ரஸூதா தாரகத்வயம் ॥"

என்று 66-வது ஸர்க்கத்திலே வ்யக்தம், அப்போது ராமாயண கதா காநம் அவ்விடத்திலே சத்ருக்நனால் கேட்கப்பட்டதாகச் சொல்லவில்லை. தத் ஸமயம் குசலவர்களைக்கொண்டு காநம் செய்வதற்கு ப்ரஸக்தியில்லை யானாலும்,

"தஸ்ய ஶிஷ்யாஸ்தத: ஸர்வே ஜகு: ஶ்லோகமிமம் புந: ।
முஹுர்முஹு: ப்ரீயமாணா: ப்ராஹுஶ்ச ப்ருஶவிஸ்மிதா:" (1-2-39)

என்கிறபடி 'மா நிஷாத' ச்லோகத்தை மஹாப்ரீதியோடு திருப்பித் திருப்பி காநம் செய்த சீடர்களில் யாராவது காநம் செய்திருக்கலாமே. பிறகு லவணாஸுரவதம் செய்து அங்கே ராஜ்ய பரிபாலநம் செய்தருளும் சத்ருக்நன், பன்னிரண்டாவது வருஷத்தில் மறுபடி அயோத்திக்கு எழுந்தருளுந் தருணத்தில் அந்த ஆஶ்ரமத்தில் தங்கி நிற்க, அப்போது 'இன்னார் காநம் செய்கிறார்கள்' என்று தெரிந்துகொள்ளாமல் ராமாயண கீதத்தை மட்டும் அவரும் அவருடன் வந்தவர்களும் கேட்டு விஸ்மிதராய் ஆநந்த பரவசரானார்கள் என்று வர்ணிக்கப்பட்டது. மேலும்:

"சிந்தயாமாஸ கோந்வேதத் ப்ரயுஞ்ஜீயாதிதி ப்ரபு:..... அக்ருஹ்ணீதாம் தத: பாதௌ...... வேதோபப்ரும்ஹணார்தாய தாவக்ராஹயத ப்ரபு:" (1-4)

என்று ஸ்ரீமத்ராமாயணத்தைச் செய்தருளி, அத்யேதா யார் இருக்கலாமென்று மஹர்ஷி ஆலோசிக்கும் ஸமயத்திலேயே குசலவர்கள் பாதோப ஸங்க்ரஹணம் பண்ணதாகச் சொல்லியிருப்பதால், வெகு நாள் முன் ராமாயணத்தை இயற்றி வைத்திருந்து, பிறகு குசலவர்கள் பிறந்து வளர்ந்த பிறகு அவர்களுக்கு உபதேசித்தார் என்பதற்கு அவ்வளவு உபபத்தியில்லை. வேதோபப்ரும்ஹணத்திலே விசேஷித்து அபிநிவேசமடைந்த மஹர்ஷி வெறுமனே வெகு நாள் உபதேசம் செய்யாமலிருந்தார் என்பது அவ்வளவு ஸ்வரஸமாகவுமில்லை. ஆக, குசலவர்கள் பிறந்த பிறகே இந்த ஸ்ரீமத் ராமாயணம் செய்யப்பட்டிருக்கவேண்டுமே யல்லது, ஸீதா பிராட்டி ஸ்வாச்ரமத்திற்கு வருவதற்கு முன்னமே செய்து வைத்திருந்தார் என்று சிலர் சொன்னபடியில்லை யென்று விமர்சிப்பதா யிருந்தாலும், ராம ராஜ்ய காலத்திலேயே செய்யப்பட்டதென்பதற்கு விவாதமில்லை. இப்படி ராஜ்ய பரிபாலநத்திலே கொஞ்ச காலமான பிறகு விரசிதமானபடியாலே ஸ்ரீ ராம பட்டாபிஷேகத்திற்குப் பின்னுள்ள வ்ருத்தாந்தங்களைச் சொல்லுகையாலே உத்தரகாண்டமென்று பேர் பெற்ற காண்டத்தில், சில வ்ருத்தாந்தங்கள் பவிஷ்யத்தாக இருக்கவேண்டுமென்பதும் அங்கீகரிக்க வேண்டியதே. இதுவும் 'ஸ பவிஷ்யம் ஸஹோத்தரம்' (1-4) என்று உக்தமாகவே யிருக்கிறது.

அதில் எவ்வளவு அம்சம் பவிஷ்யத்தாக இருக்கவேண்டுமென்று யோசிக்கும்போது பின் வருமாறு விமர்சிக்கவேண்டி யிருக்கிறது. ராமன் முதன் முதலாக அச்வமேத யாகம் அநுஷ்டித்தருளத் தொடங்கின போது, அநேக மஹர்ஷி முதலானோரைப் போல வால்மீகி மஹர்ஷியும் எழுந்தருளினார். அப்போது—

"ருஷிவாடேஷு புண்யேஷு ப்ராஹ்மணாவஸதேஷு ச ।
ரத்யாஸு ராஜமார்கேஷு பார்திவாநாம் க்ருஹேஷு ச ॥
ராமஸ்ய பவநத்வாரி யத்ர கர்ம ச வர்ததே ।
ருத்விஜாமக்ரதஶ்சைவ தத்ர கேயம் விஶேஷத: ॥
திவஸே விம்ஶதிஸ்ஸர்கா கேயா மதுரயா கிரா ॥" (7-93)

என்று ஒரு திநத்தில் இருபது ஸர்க்கங்கள் என்கிற கணக்கிலே ரிஷிகள் தங்கியிருக்குமிடங்களிலும் ப்ராம்மணர் வீடுகளிலும் வீதிகளிலும் ராஜ பாட்டைகளிலும் ராஜக்ருஹங்களிலும் விசேஷித்து ராமனுடைய பவநத்தின் வாசலிலும், யஜ்ஞக்ரியை நடக்குமிடத்திலே ரித்விக்குகளின் முன்னிலையிலும் கானம் செய்யவேண்டுமென்று மஹர்ஷி நியமிக்க, அதை அநுஸரித்து அவர்கள் காநம் செய்துவரும்போது ராமன் கடாக்ஷித்தருளிக் குதூஹலமடைந்து மஹர்ஷிகளையும் மஹா ராஜர்களையும் ஸகல கலாபிஜ்ஞர்களையும் வரவழைத்து மஹா ஸபையிலே குசலவ காநத்தைக் கேட்டருளினார். அதில்,

"தஸ்மிந் கீதே து விஜ்ஞாய ஸீதாபுத்ரௌ குஶீலவௌ ।
தஸ்யா: பரிஷதோ மத்யே ராமோ வசநமப்ரவீத் ॥" (7-9[illegible])

என்கிற ச்லோகத்தில் குசலவ கீதமான ராமாயணத்திலிருந்தே 'இவ்விருவரும் ஸீதையின் புத்ரர்கள்' என்று ராமன் அறிந்ததாகச் சொல்லியிருப்பதால், எந்த பாகத்தில் இவ்விஷயம் அறிய முடியுமோ அதுவரையில் அப்போது தாமே கேட்டருளினதாகக் கொள்ளவேண்டும். இனி முதலிலிருந்து அவர்கள் பாடியிருப்பதாலே பால காண்டத்தில் கதாரம்பத்திற்கு முற்பட இருக்கும் நாலு ஸர்க்கங்களைக் கூட முதலில் பாடினதாக அங்கீகரித்தோமானால், நான்காவது ஸர்க்கம் கேட்கும்போதே இவர்கள் இன்னாரென்று ராமன் வ்யக்தமாக அறியவேண்டி வருகிறது. ஏனெனில்:

அங்கே 'ராஜவத்ஸள' என்று, 'பிம்பாதிவோத்திதௌ பிம்பௌ ராமதேஹாத்யாவரௌ' (ராமதேஹமாகிற பிம்பத்திருந்து வந்த இரண்டு பிரதி பிம்பங்கள் போன்ற) என்றும் இருப்பதாலும், ராமனுக்கு ஸீதை தவிர வேறு பத்நிக்கு ப்ரஸக்தி யில்லையாகையாலும், இது ஜ்ஞாதமாகத் தட்டில்லையே. வால்மீகியின் ஆச்ரமத்தில் ஸீதையை விட்டிருப்பதாலும், அவ்வாச்ரமத்திலிருந்தே இவர்கள் வந்திருப்பதாலும், ஸாத்ருஶ்யம் பரிபூர்ண மாயிருப்பதாலும், இவர்களை ஸீதா புத்ரர்களாக ஏற்கனவே ராமன் நினைத் திருக்கவேண்டும். ஆனாலும் ஸபையோர் அறியும்படி ராமாயணத்திலே வரும் வரையில் அப்படி யறிந்தவராகத் தம்மை அவர் காட்டிக் கொள்ளவில்லை. ராமாயணத்திலிருந்தே அறியவேண்டி யிருந்தது. அதுவும் முதலில் 5-வது ஸர்க்கத் தாலேயே வ்யக்தமாய் விட்டால் 7-95ல் சொல்லுகிறபடி தூதர்களை யனுப்பி ஸீதாதேவியோடு வால்மீகி மஹர்ஷியை உடனே வர வழைத்திருக்கவேண்டும். அப்போது அடுத்தபடியாக ஸீதையின் ப்ரவேசாதிகளை நடக்கவேண்டியிருப்பதால்,

ராமோ பஹூந்யஹாந்யேவம் தத் கீதம் பரமம் ஶுபம் ।
ஶுஶ்ராவ முநிபிஸ்ஸார்த்தம் பார்த்திவைஸ்ஸஹ வாநரை: ॥

என்று வெகு நாள் ராமாயணத்தை அஶ்வமேத யாகத்திலே கேட்டருளின தாகவும், அதற்குப் பிறகே குசலவர்களை ஸீதா புத்ரர்களாக அறிந்ததாக வும் சொல்லியிருப்பது ஸங்கதமாகாது.

மேலும் நான்காவது ஸர்க்கத்தைக் காநம் பண்ணியிருந்தால்,

சதுர்விம்ஶத்ஸஹஸ்ராணி ஶ்லோகாநாமுக்தவாந்ருஷி: ।
ததா ஸர்க்கஶதாந் பஞ்ச ஷட்காண்டாநி ததோத்தரம் ॥

என்கிறதிலிருந்தே காண்ட ஸங்க்யை, ஸர்க்க ஸங்க்யை, ச்லோக ஸங்க்யை இவ்வள வென்றும், பவிஷ்யத் விஷயமெல்லா மிதிலிருப்பதாகவும் ஸ்பஷ்ட மாய் விட்டபடியால் முதல் நாள் 20 ஸர்க்கங்களைக் கேட்டவுடன் ஸந் தோஷாதிசயத்தாலே ராமனால் அளிக்கப்பட்ட ஸுவர்ணத்தை விரக்தர் களாய், குசலவர்கள் ப்ரதிக்ரஹிக்காமலிருக்கப் பிறகு ராமன்,

'கிம் ப்ரமாணமிதம் காவ்யம் கா ப்ரதிஷ்டா மஹாத்மந:'

[இந்தக் காவ்யத்தின் உருவம் எவ்வளவு? எவ்வளவு சுமையில் இந்தக் காவ்யம் முடிவு பெற்றிருக்கிறது?] என்று கேட்பதும்,

'ஸந்நிபத்தம் ஹி ஶ்லோகாநாம் சதுர்விம்ஶத்ஸஹஸ்ரகம் ।'
'ஶ்ருதி ப்ரஹ்ருதி யோராஜந் பஞ்சஸர்க்க ஶதாநி ச ।'
'காண்டாநி ஷட் க்ருதாநீஹ ஸோத்தராணி .... ।
ப்ரதிஷ்டா ஜீவிதம் யாவத்தாவத் ஸர்வஸ்ய வர்த்ததே ॥'

என்று காவ்ய ப்ரமாணத்தையும் ராம ஜீவிதம் முற்றும் அடங்கி யிருப் பதையும் மறுபடி சொல்லியிருப்பதும் அஸங்கதமாகிறது. நான்காவது ஸர்க்கத்தில் கடைசியிலிருக்கும்,

"இமௌ முநீ பார்த்திவ லக்ஷணாந்விதௌ
குஶீலவௌ சைவ மஹாதபஸ்விநௌ ।
மமாபி தத்பூதிகரம் ப்ரசக்ஷதே
மஹாநுபாவம் சரிதம் நிபோதத ॥
ததஸ்து தௌ ராமவச: ப்ரசோதிதௌ
அகாயதாம் மார்க்கவிதாந ஸம்பதா ।
ஸசாபி ராம: பரிஷத்கதஶ்ஶநை-
ர்புபூஷயாஸக்தமநா பபூவ ஹ ॥

[ராஜசிஹ்நங்கள்உள்ள மஹாதபஸ்விகளான இந்த ரிஷி காயகர்கள், நானும் அநுபவிக்கும்படி சொல்லப் போகிறார்கள். பெரிய சரித்திரத்தைக் கேளுங் கள். பிறகு ராம வாக்யத்தாலே ப்ரேரிக்கப்பட்டு அவ்விருவரும் மார்க்கம் என்கிற ரீதிஸௌஷ்ட்வத்தைக்கொண்டு பாடினார்கள். ஸிம்ஹாஸநத்திலே வீற் றிருந்த ராமனும் மெதுவாக பரிஷத்திற் சேர்ந்துகொண்டு அநுபவிக்க ஆவல் கொண்டு, மனத்தை அவ்விஷயத்திலேயே செலுத்தி யிருந்தார்] என்கிற ச்லோகங்களைப் பராமர்சித்தால் குசலவர்கள் இந்த ஸர்க்கத்தைக் காநம் செய்திருக்கமாட்டார்கள் என்றே விளங்குகிறது. ஆக 7-34ல்

'ப்ரவ்ருத்தமாதித: பூர்வம் ஸர்க்கம் நாரததர்ஶிதம்'

[நாரதரால் காண்பிக்கப்பட்ட முதல் ஸர்க்கம் முதலில் (பாட) ஆரம்பிக் கப்பட்டது] என்கிற விடத்தில், 'ததஸ்ஸ ஶேஷேண' என்கிற வ்யாக்யாந பங்க்தியில், ஶேஷேண என்கிற த்ருதீயாந்த பதத்திற்கு அந்வய ஸௌகர்ய மில்லையாகையாலே, 'ஶேஷே' என்று ஸப்தமீயாகப் பிரித்து 'ந' என்று தனியாக்கினால், முதல் ஸர்க்கத்திலிருந்து பாடவில்லை யென்று அர்த்த மாகிறபடியால் அதற்குத் தக்கபடி மூலம் இருக்க வேண்டும். அல்லது நாரதர் சொன்ன விஷயத்தைச் சொல்லும் ஸர்க்கங்களில் முதல் ஸர்க்கம் (அதாவது: கதாரம்பமான 5-வது ஸர்க்கம்) முதலில் காநம் பண்ணப்பட் டது என்றே இந்த ச்லோகத்திற்கு அர்த்தம் சொல்லவேணும்.

சத்ருக்நன் வால்மீகி யாஶ்ரமத்திற்கு வந்த ராத்ரியில் ஸீதைக்கு இரண்டு குழந்தைகள் பிறந்ததாகவும், மஹர்ஷி தர்ப்ப முஷ்டியை யெடுத்து

இரண்டாக்கி, அக்ரபாகமாகிய குசத்தாலே ஒரு சிசுவையும் மற்றொரு பாகமாகிய லவத்தாலே மற்றொரு சிசுவையும் வ்ருத்தைகளைக் கொண்டு தடவிக் கொடுத்து ரக்ஷை செய்தபடியாலே அவர்களுக்குக் 'குசலவர்' என்று பெயர் என்பதாகவும் ஆறு காண்டங்களுக்குப் பிறகு உத்தர காண்டத்தில் அந்தக் கதாபாகம் வரையில் கேட்டதிலிருந்து ஸபையில் தெரிந்து கொண்டாலும்

> யதி வ்யஜ்ஞெ ஸ காகுஸ்தஸ்ஸோ ய்வாம கஸெ்யௌதி தாரகௌ ।
> ஆவாம் வால்மீகி ஶிஷ்யௌ ஸொா ஐ ததெவம் நராயிவ்ழ ॥

என்று வால்மீகியின் நியமநமாகையாலே, தங்களை ஸீதா புத்ரர்களாக இவர்கள் சொல்லிக்கொள்ளாததினாலே, 'ஸீதா புத்ரர்களே இந்தக்காயகர்கள்' என்று ஸபையாரோடு நிச்சயிக்க இவருக்கு ஆதாரம் ஏற்படாமலிருந்ததாகையாலே, மஹர்ஷி சிஷ்யரைப் பரபரப்புடன் ஒரு விதம் தீர்மானிப்பது அயுக்தமானதால், வெகுநாள் இவர்களைத் தபஸ்விகளாகவே நினைக்கவேண்டியிருந்தது. கடைசியாக 7-93ல்

> 'ஸம்திஷ்டௌ ஶநிநா தெந தாவுஹௌ ஜெயிஸீஸுதௌ ।
> தயெவ காவாவெதி நிஜர்ூ தாரிநூ ।"

என்கிற ச்லோகம் கீதமான ஸமயத்திலேதான் இவர்களே ஸீதா புத்ரர்கள் என்று நிச்சயித்தார். இவ்விஷயந்தான்,

> 'தவிது நீதெதஂ விஜ்ஞாய ஸீதாவுதௌ கூஶீலவௌ ।'

என்ற விடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. முதலில் பால காண்டத்திய நாலு ஸர்க்கங்களைக் கூட இவர்கள் கானம் பண்ணினதாக ஒப்புக்கொண்டாலும், உத்தர காண்டம் 93-வது ஸர்க்கம் வரையில் கேட்ட பிறகே ராமனுக்கு நிச்சயம் பிறந்ததாக எப்படியாவது சொல்லவேண்டும். ஆனால் அதில் ரொம்ப நிர்வாஹ ச்ரமம் ஏற்படுவதால் முதல் நாலு ஸர்க்கங்களை விட்டுக் கானம் பண்ணினார்க ளென்பதே உசிதம்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஶி்ரியை நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

*ஸ்ரீ கீதா மஹிமை

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

நிராக்ருதவதீத்யாதி—'நிகமஸௌயதீபஶ்ரியா' என்றும், 'விபஶ்சிதபிதீதயா' என்றும் கீதையை விசேஷிக்கிறது. நிகமமாகிற ஸௌதம் நிகமஸௌதம். நிகமம் என்பது வேதம். 'ஸௌய' சப்தம் இங்கு, பரிசுத்தியும் உயர்வுமுள்ளதும், தம்மையடைந்தாரை உயர்ந்ததாக்க வல்லதுமான வஸ்துவைக் காட்டுகிறது. அறிவைத் தருவதில் தோஷ லவலேசமு மில்லாமையும், ப்ரமாணாந்தர ஸாபேக்ஷதை என்கிற தாழ்ச்சி யில்லாமையும், தம்மை யடைந்தாரை. 'பஹுவாதிந' என்றாக்க வல்லமையும் உள்ளதாகையாலே நிகமம் ஸௌதமாக ரூபிக்கப்பட்டது. பட்டணத்திலுள்ள பெரியதோர் கட்டிடமென்று அர்த்தமுள்ளதும் 'நிகமஸௌதம்' என்று சேர்க்கப்பட்டதுமான மற்றொரு நிகமஸௌய சப்தத்தோடு முன் சொன்ன நிகமஸௌத சப்தம் 'நிகமஸௌயமேவ நிகமஸௌயம்' என்று ஓரே நிகமஸௌத சப்தமாக ஆகிறது. ஆக, பரிசுத்தியும் உயர்வும் உயர்த்தி செய்வதும் உள்ள வேதமெனும் நிகரில்லா நகரில் அமைக்கப்பட்ட உயர்ந்த மாளிகைக்கு என்று தெரிந்து, மேல் இதற்குத் தீப லக்ஷ்மியாகிறது கீதை என்கிறது. வேதம் அறிவைத்தர பரிசுத்தியுள்ள உயர்ந்த வஸ்துவாகிலும், அவ்வேதத்திலுள்ள பொருள்களை அயர்வு மயர்வுகளற உள்ளபடி தெரிவிப்பதற்குக் கீதை தீபலக்ஷ்மி எனப்படுகிறது. இத்தால், காட்டில் நிலவுபோ லாகாமலும், தாழ்ந்த கட்டிடத்தில் இடப்பட்ட விளக்குப்போல் சிறிதிடங்களுக்கு மட்டும் உபயோகமாகாமலும் இருப்பதால், நகரத்திலுள்ள எல்லா ஜனங்களும் எல்லா விடங்களிலும் உபயோகிக்க உரிமையுடையதென்று தேறுகிறது. தீப சப்தத்தால்

*இது, ஸ்ரீரங்கம் வடக்குச் சித்திர வீதி ஸ்ரீ தேசிகன் ஸந்நிதியில் ஸ்ரீ ஹயக்ரீய வித்யா மந்திரத்தின் சார்பில் திருக்கோட்டியூர் ஸ்ரீ. உ.ப. ஸ்ரீராம தேசிகாசார்ய ஸ்வாமியால் செய்யப்பட்ட உபந்யாஸத்தின் ஸங்க்ரஹம்.

கொடுமையில்லாமையும், நேத்ராநுகூல்யமும் ஸாம்யம் மாதுர்யம் உபகாரத்தை என்றிவை முதலான குணங்களும் தோற்றுகின்றன. ஶ்ரியா என்பதால், தோஷமே நாந்தரீயகமாகக்கூட இல்லாமல் கேவலம் மங்களமானமை தோற்றுகிறது.

“ விபஶ்சித்ப்ரீதயா ”—வித்வான்களுக் கெல்லாம் அதிப்ரியமானது. அதவா: “ ஸ்ரூயதே ஸா விபஶ்சிந்த ஸா பரநாதா ” என்கிற இடத்தில் போல் இங்கும் இது ஸூர்யவாசியாகி, பஞ்சமீ ஸமாஸத்தால் ‘ ப்ரீதா ’ சப்தத்தோடு சேர்ந்து, ஸூர்யனில் காட்டில் கீதா தீபலக்ஷ்மியில் அதி ப்ரீதியைக் காட்டுகிறது. ஸூர்யனுக்கு ஓரிடத்தில் நிலையான விருப்பின்மையும், அஸ்தமநமும் தமஸ்ஸினால் அபிபவமும், மேகங்களினால் மறைவும், உள்ளிருளை நீக்க முடியாமையும் உண்டாகையாலும், ஸ்ரீ கீதா தீப லக்ஷ்மிக்கு இவைகள் ஒருக்காலும் இல்லாமையாலும், அவனில் காட்டில் இதில் அதிக ப்ரீத்யுபபத்தி யுள்ளதே. அன்றிக்கே, ‘ நேதரோ நுபபத்தே: ’ என்கிற ஸூத்ர பாஷ்யத்தில் நிர்த்தாரித்தபடி நிருபாதிகமான விபஶ்சித்வமுடைய பகவானுக்கும் இது அதிப்ரீதி விஷயபூதை என்கிறது.

“ அஹஹ ஸஹஸ்ரேஷ்வபி ஶில்பகல்பேஷ்வகிஞ்சிதேவ கதாசிதுத்கடம் பவேத ”

[ஆச்சர்யம்! ஆச்சர்யம்! ஆயிரக்கணக்காகச் செய்யப்படும் வஸ்துக்களுக்குள் ஏதோ ஒரு காலத்தில் ஏதோ ஒருவஸ்து தான் மிகுந்த உயர்வுள்ளதாக அமையும்] என்று ஸ்ரீஸங்கல்பஸூர்யோதயத்தில் அருளினபடிக்கும், தேவீஸ்ருஷ்டியில் ப்ரஹ்மாவுக்கு ப்ரீதியைக் காட்டும் புராண வசநங்களின் படிக்கும் இப்பொருள் உபபந்நமேயாகும்.

ப்ரீதயா ’

“ யதேந்ரு: ஶ்ருதம் தத்ஹ தாவகமாஸ காலே
ப்ரீதேந யேந ஹி ஶிவா: ஸமிதா: ஸப்ரஹ்மதேவா: ।
ஸம்ஸாரி கிம்ஸ வரிவ்ருத்தி ஶ்ரேணாநி ஸந்தா
ந்யாஸீக்ருஶாநா ஶாஸ்த்ர ஶஸ்த்ராணி ॥ ”

என்கிறபடியேயுள்ள ஆகாரத்தை யொட்டி ஆரோபணீயாகாரத்தையே அமைப்பிக்கும் கீதம்போல் அன்றிது. தேஹமே ஆத்மாவென்றும், ஆத்மா ஸ்வதந்த்ரனே என்றும் வரும் ப்ரமங்களால் ஆரோபிதாகாரங்களையொட்டி,

“ அவரேயமிதஸ்த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்தி மே பராம் । ஜீவபூதாம் ”

இத்யாதிகளால் ஜீவர் பகவச்சேஷபூதர் என்றும், ஜ்ஞாநாநந்த ஸ்வரூபரென்றும் அறிவித்து, உண்மையான உள்ள நிலைமையையேயிறே ப்ரதிஷ்டாபநம் செய்கிறது இக்கீதை. “ அஜ்ஞம் தமோ நிராகுர்வதீ ” ஸ்வபராத்மாக்களின் அறிவை அடியோடு கெடுக்கும் பெரிய இருளை நீக்கினாள் தயாதேவி என்கிறது.

“ உபேந்த்ரவிஶிஷ்ய ஶாந்த்ர பூர்வேதாம் ப்ரீதாவியாயிநா ”

என்கிறபடியே பகவதவதாரங்களுக்குள் மிகவும் கொண்டாடத் தகுந்த ராமக்ருஷ்ணவதாரங்களுக்குள், ராமாவதாரத்தில் காட்டிலும் க்ருஷ்ணவதாரத்துக்கு இத்தாலே பெருமை சொல்லிற்றுகிறது. எங்ஙனே யென்னில்:

முன்னொருகால் பாகவத ச்ரேஷ்டரும் அயோத்யா திபதியுமான அம்பரீஷன் என்னும் அரசனுக்கு ஸ்ரீமதி என்னும் ஓர் உயர்ந்த பெண் இருந்தாள். அவளை நாரதர் பர்வதர் என்னும் இரண்டு முனிவர்களும் கண்டு அவ்வரசனிடம் அபேக்ஷித்தார்கள். உங்களுக்குள் ஸ்வயம்வரத்தில் யாரை ஸ்ரீமதி வரிக்கிறாளோ, அவருக்கு அவளை விவாஹம் செய்துவைக்கவும், மறுநாள் ஸ்வயவரமென்றும் அரசன் சொன்னார். அது கேட்ட அவ்விருவரும் ஸம்மதித்து, ஒருவர் போவது மற்றொருவர் அறியாதபடி தனித்தனியாக க்ஷீராப்தியில் ஸ்ரீபகவானிடம் சென்றார்கள். முதலில் நாரத முனிவர் போய்ப் பெருமாள் ஸந்நிதியில் இந்த நடத்தையை விஜ்ஞாபித்து, ஸ்ரீமதி பார்க்கும்போது, பர்வத முனிவர் அவர்களுக்குக் குரங்கின் முகமுடையவராகத் தோற்றும்படி செய்தருளவேண்டுமென்று அபேக்ஷித்தார். அப்படியே பர்வத முனிவரும், ஸ்ரீமதி பார்க்கும்போது அவளுக்கு நாரத முனிவர் மந்திபோன்ற முகமுடையவராகத் தோன்றும்படி செய்யப் பகவானை அபேக்ஷித்தார். இவ்விருவருக்கும் பகவானும் அப்படியே செய்வதாகத் தனித்தனியே இசைந்தார். மறுநாள் மிகுந்த அலங்காரம் செய்யப்பட்ட ஸ்வயம்வர மண்டபத்தில் பெரிய ஆஸநங்களில் தகுதியான ஸபர்யையுடனும் அலங்காரங்களுடனும் கூடி இவ்விரண்டு முனிவரும் வீற்றிருந்தார்கள். ஸ்ரீமதி மணக்கோலத்துடன் வரணமாலையைக் கையில் கொண்டு, தோழிகளுடனும் பிதா முதலானோர்களுடனும் ஸ்வயம்வர மண்டபம் வந்து அவ்விரண்டு முனிவர்களையும் குரங்கு போலவும் மந்தி போலவும் முகமுடையவர்களாகக் கண்டு, ஆற்றங்கரையில் வாழும் வஞ்சி போல் அஞ்சினாள். பிறகு அரசன் அச்சத்தின் காரணத்தை வினவ, ஸ்ரீமதியும் இவர்களைத் தான் கண்டபடியை அறிவித்துப்பிறகு இவ்விருவர் நடுவுள் ஸிம்மாஸநத்தில் ஒரு மஹா புருஷனைக் கண்டு அவனை மணம் செய்து கொள்வதில் தனக்கிருக்கும் ப்ரீதியை அந்த ஸபையிலே தன் தந்தையார்க்

குத் தெரிவித்தாள். அந்த ஸமயம் அவ்விரண்டு முனிவரும் அக்கந்நிகை யை நோக்கி,

'ஸ்ரீமதி! நடுவில் தோற்றுமவர் யாவர்?'
ஸ்ரீமதி:—'இன்னாரென் றறியேன்.'
முனிவர்:—'அவர் என்ன நிற முடையவர்?'

ஸ்ரீமதி:—'இலங்கொலி நீர்ப் பெளவம் மண்டியுண்ட பெருவயிற்ற கருமுகிலே யொப்பர்'

முனிவர்:—'திருக்கைகள் எத்தனை?'
ஸ்ரீமதி:—'மலையிலங்கு திண்டோள் இரண்டே.'
முனிவர்:—'திருக்கைகளில் திருவாயுதங்கள் என்னென்ன?'
ஸ்ரீமதி:—'செருவரைமுன் னாசறுத்த சிலையன்றோ கைத்தலத்தது. புரங்கள் மூன்று மோர் மாத்திரைப் போதில் பொங்கெரிக்கரை கண்டவ னம்பிற் கொடியதா யடும்சரம் மற்றொருகை.'

முனிவர்:—'திருக்கை, திருக்கண், திருவடிகள் எவ்வண்ணத்தன?'
ஸ்ரீமதி:—'கைவண்ணம் தாமரை வாய்க்கமலம் போலும் கண்ணிணையு மரவிந்த மடியு மஃதே.'

முனிவர்:—'திருவடியில் திருவாபரணங்கள் உண்டோ?'
ஸ்ரீமதி:—'துன்னுமா மணிமுடி துலங்கும்; மின்னமா மணிமகர குண்டலங்கள் வில்வீசும்; பொன்னின் மாமணியாரம் அணியாகத் திலங் கும்; முடித்தலமும் பொற்பூணு மென்னெஞ்சத் தகலாது.'

முனிவர்:—'வடித்தடங்கண் மலரவளை வரையாகத்துள் காண்டியோ?'
ஸ்ரீமதி:—'காண்கிறிலேன்.'

பின்னர், மாவளரு மென்னோக்கி மாதராள் மாயவனைக் கண்டமை கேட்ட தமப்பனான அரசனும், 'ஸ்ரீமதி! அவர் விஷயத்தில் உன்னுடைய சித்த வ்ருத்தி எப்படி?'

ஸ்ரீமதி:—'பெற்றக்கா லவனாகம் பெண்பிறந்தோ முய்யோமோ? உண்டிவர்பா லன்பெனக்கென் றொருகாலும் பிரிகிலேன்' என்றனள்.

இதுகேட்ட அரசனும் அவரோடு திருமணத்தை உகந்து அவரை வரிக்கும்படி அநுமதிசெய்ய, ஸ்ரீமதியும் திருமண மாலையை அம்மாலின் திருக்கழுத்தி லிட, ஸ்ரீமதி அவருடைய திருமேனி ஸம்பந்தத்தால் மஹா நந்தம் அந்தர்த்தாநம் இவைகளையும், அம்முனிவர் இருவரும் க்ரோத சோகங்களையும், அரசன் முதலானவர் அனைவரும் மிகுந்த ஆச்சர்யத்தை யும் அடைந்தார்கள். பிறகு அம்முனிவர் இருவரும் க்ஷீராப்திக்குச் சென் றனர். ஸ்ரீபகவானும் இவர்கள் வருவதை அறிந்து, ஸ்ரீமதியை மறைய

இருக்கச்செய்து வந்த இம்முனிவரை விசாரிக்க, இவர்களும் உபகரிப்பது போலிருந்த உம்மாலேயே இக்கார்யம் கெடுக்கப்பட்டதே என்று சொல்ல, பகவானும் நடந்த ஸமாசாரத்தைக் கேட்க, இவர்களும் நடந்த உண்மை யைத் தெரிவிக்க, பகவானும், மாயாவியான யாரோ ஒருவன் இப்படிச் செய்துவிட்டான்; நான் அல்லேன்' என்று சிரிக்க, முனிவரும் அரிசினத் தால் அரசனிடம் வந்து, 'எங்களை இப்படி நீர் அவமதித்தபடியால் அரிய பெரிய ஆத்மாவின் அறிவை அழிக்கும் அந்தகாரம் அகலாமல் உன்னை அடர்த்திடுக' என்று சாபமிட, தத்க்ஷணமே மிகக்கரிய வடிவுடன் அந்த காரம் அரசனிடம் செல்ல, முன்னமே அவரின் காவலுக்காகப் பெருமா ளால் நியமிக்கப்பட்ட திருவாழியாழ்வான் அவ்விருளை நசிப்பதற்காகத் தொடர, அது நடுங்கி அம்முனிவரைத் தொடர, நடுக்கமுற்ற இம்மூவரும் நடுக்கத்தைத் தரும் திருவாழியாழ்வானுமென்று இந்நால்வரும் க்ஷீராப்தி செல்ல, முனிவர்கள் பகவானைச் சரணம் புக, பகவானுமிரங்கி "வாதெத்ரு ஷா நத்ரஷா' என்கிற ந்யாயத்தைக் கொண்டு இந்த அம்பரீஷ மஹா ராஜாவின் சில தலைமுறைக்குக் கீழான தசரத சக்ரவர்த்திக்குப் பிள்ளை யாக ஆகப்போகிறோம்; அப்போது இவ்வந்தகாரத்தை நம்முடைய அடிய னை அரசனுக்காக நாமே அங்கீகரிப்போம்" என்று அநுமதி செய்து, அப் படியே அந்த அவதாத்தில் அதை அங்கீகரித்து, 'ஆத்மானம் மாநுஷம் மந்யே' என நடந்தாரென்று லிங்கபுராணத்தில் உத்தரபாகத்தில் ஒரு கதை உள்ளது. இத்தால், ஸ்ரீராமாவதாரத்தில் ஆத்மாவின் அறிவைத் தகையும் அந்தகாரத்தைத் தாமே அங்கீகரித்தாகத் தெரிகிறது.

க்ருஷ்ணாவதாரத்திலோவென்றால் எல்லாரிடத்திலு முள்ள அவ்வந்த காரத்தை ஸ்ரீபகவத்கீதா தீபலக்ஷ்மியால் போக்கினபடியால் பெரும்புகழ் உண்டாயிற்று. அதன் காரணம் பகவத்கீதை யாகையால் இப்புகழ் பகவத் கீதையின் புகழென்றே நிச்சிதமாயிற்று.

இனி: 'அநாவிலதபோவீர்ய:' என்கிற இரண்டாம் ச்லோகத்தின் பொருளை விசாரிப்போம்.

"உதக்ராஹதி வாதமஸ்ய: ஸீதீஹோ தைர் நிராமய: ।"

[வழியில் புறப்படும்போது அதன் குளிர்ச்சியால் துக்க காரணங் களின் திவலையு மில்லாமல் உயர்ந்த பரமபதத்தை உத்தேசித்துப் புறப்படு கிறான்] என்கிறபடி உயர்ந்த தேவயாந மென்னும் வழியினால் புறப்பாடு ந்யாய்யமா யிருக்க,

"அவிஸ்ராந்த தநாயம்பஹவோ(அ)ய தைவிகா: ।
தமஸ: காஷ்டாம்ஷ்வ்யாநம் கம் தே கமயிஷ்யஸி ॥"

[ச்ரமபரிஹாரம், ஏதேனும் தங்குமிடம், கட்டுசாதம், வழி காட்டுபவர் என்னும் இவை யொன்று மில்லாததும், இருள் நெருங்கின காடாயுமுள்ள வழியில் நீ எப்படிப் போவையோ ?] என்று காருணிகர் நெஞ்சாறல்படக்கூடிய வழிகளால் அளவில்லாத நடைகளை நினைத்து, இனி மேலும் இவ்வழி நடக்கும்படி நேர்ந்து விடு மோவென்கிற அளவிறந்த பயமும், அதைப் பரிஹரிக்க 'என்ன செய்வோம்? ஆர்காலில் விழுவோம்? என்கிற அளவிறந்த சிந்தையும், பரிஹாரோபாய மில்லாமையாலும், இவ்வுயர்ந்த புருஷார்த்தத்தை இவ்வளவு காலம் இறந்தமையாலும் உண்டான அளவிறந்த சோகமும் நமக்கினி வேண்டியதில்லை. அளவில்லாத பாபங்களையெல்லாம் நீக்கி, அகில ச்ரேயஸ்ஸுக்களையும் அவற்றிற்குரிய ஸ்வபர ஸ்வரூபாதி விவேகங்களையும் எளிதில் தரும் ஸ்ரீ கீதோபநிஷத்தைத் தம்மடிக்கீழ்ச் சரணம் புகுந்த யாரோ ஒருவரை வ்யாஜமாகக் கொண்டு எல்லாரும் வாழ்வதற்காக அருளுமவனும், ஆஸ்ரித விரோதிகளை அடியோடு போக்கப் பரிகர பந்த முடையவனுமான பகவான், தம்மடிக் கீழ் அடைக்கலம் புகுந்த நம்மையும் அஞ்ச லஞ்சலென்று அளிக்க அருளிப்பாடு இடுகிறு ஞகையாலே, இக்கீதையில் முதல் ஆறு அத்யாயங்களால் தேஹாதிகளில் காட்டில் வேறுபட்ட ஜீவாத்மாக்களின் ஸ்வரூபத்தையும், அதன் ஸாக்ஷாத்காரத்துக்கும் அதன் அநுபவத்துக்கும் உபாயங்களான கர்மயோக ஜ்ஞாநயோகங்களையும், நடுவிலுள்ள ஆறு அத்யாயங்களால் உள்ளபடியான ஆத்மஸாக்ஷாத்காரம் பிறந்து, அதற்குரிய பரம புருஷார்த்தாபேக்ஷையுள்ளவர்களுக்குப் பகவானுடைய உண்மைப்பாடு முதலியவற்றையும், அவன் திருவடிகளில் நித்யகைங்கர்யத்தையும், ஐஸ்வர்ய கைவல்யங்களையும் தரவல்ல உபாயம் முதலியவற்றையும் கடைசி ஆறு அத்யாயங்களுக்குள் முதல் மூன்று அத்யாயங்களால் முதல் ஷட்கத்தால் சொல்லிய அர்த்தங்களில் அயர்வு மயர்வுகள் தீரும்படி அபேக்ஷிதங்களையும், பிந்தின மூன்று அத்யாயங்களால் மத்யம ஷட்கத்தால் சொல்லப்பட்ட அர்த்தங்களில் அயர்வு மயர்வுகள் தீர்வதற்கு வேண்டும் அர்த்தங்களையும், கடைசியில் சாஸ்த்ர ஸாரார்த்தமான சரணாகதியையும் சொல்லி, இந்த ஸ்ரீபகத்வ கீதா சாஸ்த்ரத்துக்கு ப்ரதாந ப்ரதிபாத்யனை திருமகளோடு வரும் திருமால்தம் மருளால் நம்முடைய சோகம் தவிர்த்தருளினன். ஸ்ரீ பாத்ம புராணத்தில் இக் கீதையில் ஒவ்வோர் அத்யாயத்தையும் ஆதரித்துரைப்பவர்க்கும் கேட்பவர்க்கும் ஓதுமவர்க்கும் துன்பக்கடலுள் துளங்குகை நீங்கி, இன்பக்கடலுள் துலங்கும் வகை விரிக்கப்பட்டுளது. அப்படியையும் இங்கு கண்டு கொள்ளவேணும்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஸ்ரீ:

சமயாசாரியர்களும் தமிழும்

[ஸ்ரீ. உப. டி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார், M. L. C., மதுரை.]

வைதிக சமய சாஸ்திரங்களுக்கு மூலாதாரமாயுள்ளது வடமொழி வேதங்கள். அவ்வேதங்களிற் சொல்லப்படும் புருஷார்த்தங்கள் தர்மார்த்த காம மோக்ஷங்கள். அவற்றுள், அர்த்தகாமங்க ளிரண்டும் லௌகிக புருஷார்த்தமாயும், தர்மமும் மோக்ஷமும் பாரலௌகிகமாயும் உள்ளன.

இந்தப் பாரலௌகிகமான புருஷார்த்தங்களை வேதம் சொல்லுகையாலே அதில் நம்பிக்கை யில்லாத கேவல லௌகிகர்களுக்கு அந்த வேதங்களில் த்வேஷ புத்தி யுண்டாவது ஸஹஜமாயிருக்கிறது.

முதலில் மதுகைடவர் என்னும் அசுரர்கள் வேதத்தை மறையச் செய்தார்க ளென்றும், பகவான் மத்ஸ்யாவதாரஞ் செய்து அவர்களை ஸம்ஹரித்து வேதத்தைப் பிரவர்த்திப்பித்தா ரென்றும் புராண கதையுள்ளது. பின்பொரு காலத்தில் ஹிரண்ய—ஹிரண்யாக்ஷர்கள் வேதங்களையும் வைதிக தர்மங்களையும் அழிக்க, அப்பொழுதும் பகவான் அவதரித்து அவர்களை ஸம்ஹரித்து, வேதங்களையும் வைதிக தர்மங்களையும் ப்ரவர்த்திப்பித்தா ரென்றும் அறிகிறோம்.

இப்படி வைதிக தர்மம் அழிய வருங்காலங்களில் அந்தத் தர்ம ஸம்ஸ்தாபநத்தின் பொருட்டு அடிக்கடி பகவான் அவதரிப்ப துண்டென்றும், அதை ஜ்ஞாநாதிகரான பெரியோர்கள் அறிவார்க ளென்றும் கீதையும் வேதமும் முறையிடுகின்றன.

இவற்றால் தர்ம ஸம்ஸ்தாபநம் செய்வது ஈஸ்வர க்ருத்ய மென்றும், அதனை அநுஷ்டிப்பது ஸாது ஜந க்ருத்ய மென்றும், அதனை அழிப்பது துர்ஜ்ஜந க்ருத்ய மென்றும் வெளியாகிறது.

இந்தப் பிரகாரத்தாலே வைதிக தர்மங்கள் அழியாமற் பாதுகாக்க வேண்டிய் கடமையை, ரக்ஷண கர்த்தாவான பகவான் லோக பாலர் உருவமாக நின்று லோக ரக்ஷணம் செய்வதால், அந்த லோக ரக்ஷணகர்த்தாக்களான அரசர்கள் தாமே செய்யவேண்டியவ ராஞர்கள். இதனை,

‘அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்’. (543)

என்ற பொய்யாமொழி புலப்படுத்துவதால் அறியலாம்.

ஆகவே சென்ற சில நூற்றாண்டுகளில் வைதிக தர்ம ரக்ஷகர்களான நாடாளும் முடிமன்னர் நலி வெய்திப் பல்வேறு குறுநில மன்னர்களும் குறும்பர்களும் புவியாளத் தொடங்கவே, அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய் நின்று ஆதரிப்பாரின்றித் தரும நெறி அழியத் தலைப்படுங் காலத்தில், பகவதவதாரமாகவோ, பகவதம்ச பூதர்களாகவோ பகவத் கடாக்ஷத்தாலே ஜ்ஞாந விகாஸமுடையவர்களாகவோ பல மஹான்கள் அவதரித்து, வேதாகம விதிகளின் வழியாய் வந்த பல திருமுறைகளையும் திவ்யப் பிரபந்தங்களையும் தேச பாஷையான தமிழ் மொழியாலே பயின்று வல்லோரும் அல்லோரும் எல்லோரும் உய்யும்படி உபகரித்தார்கள். அவையெல்லாம் சைவ வைஷ்ண ஸந்தாநாசாரியர்கள் பரம்பரையால் பரிபாலிக்கப்பட்டன.

அக்காலத்தில் நாதமுனிகள் ஆளவந்தார் உடையவர் முதலான ஆசார்ய புருஷர்கள் அவதரித்து, தங்கள் வேதாந்த வித்யையின் உதவியைக்கொண்டு திவ்ய ப்ரந்தங்கள் வேதார்த்தங்களையே வெளியிடுவதை யறிந்து, வடமொழி வல்லுநரோடு வல்லாரல்லாரோடு எல்லாரும் வாசியற வேத துல்யமாக அவற்றை ஓதியுணரப் பணித்துப் பொருளும் விரித்துரைத்து வந்தார்கள்.

அந்த நியமனத்தை மேற்கொண்டு தமிழே தெரியாத அந்நிய பாஷை பேசும் உத்தர தேச வாசிகளும், இத்திவ்யப்ரபந்தங்களை ஸம்ஸ்கிருதம் போலவே அர்த்தமறியமாட்டாதவர்களும், வேத துல்யமாய் ஓதி வருவாராயினர். அப்போது ‘வேத நூல் உணர்ந்தோர்க் கல்லால் விரித்திடும் பொருள் விளங்காத நிலையிலே திவ்ய ப்ரபந்தங்கள் விளங்கின.

ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் அவதரித்த பின்பு, அவை ‘தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே’ [திவ்யப் பிரபந்தார்த்தங்கள் தெரிந்தோர்க்கல்லது வேதாந்தார்த்தங்கள் தெரிதலரிது] என்று அவர் தாமே சொல்லும்படி வேதார்த்தங்களை விளக்க வல்லனவாய் விளங்கின.

ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகனுக்குள்ள வடமொழி வித்யா வைதுஷ்யமும், அவர் செய்தருளிய க்ரந்தங்களும் இவ்வளவவ்வளவென்று சொல்லவொண்ணாதன வென்பது எல்லோரும் அறிந்ததே. அவருக்குத் தமிழிலும்

வைதுஷ்ய முண்டென்பதைச் சிலரே அறிவர். அவற்றைக் கிஞ்சிஜ்ஞனான அடியே னறிந்தவளவில் ஒரு சிறிது விஜ்ஞாபிக்கிறேன்.

ஆழ்வார்கள் அருளிச் செயல்களில் அவர்க்குள்ள ஈடுபாடுகளால் அவ்வர்த்தங்களை யெல்லாம் எல்லாரும் சுலபமாய் அறிந்துகொள்ளவேணுமென்று திருவுள்ளம் பற்றி, அவர் அந்தத் திரமிட வேத சாஸ்த்ராப்யாஸத்துக்குப் பூர்வாங்கமாய் அப்யஸிக்க வேண்டியதொரு பால பாடம் போலே சுருக்கியும் விளக்கியும் பல பிரபந்தங்கள் செய்தருளினர்.

அந்தப் பிரபந்தங்களின் தொகுதிதான் ‘தேசிக ப்ரபந்தம்’ என்று வழங்கப்படுகிறது. இப்பிரபந்தத்தின் தனியனால் இதற்குப் ‘பழமொழி’ யென்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதனால் இப்பிரபந்தம் திருவாய்மொழி முதலிய திருமொழிகளிலிருந்தும் ஆசார்ய பரம்பரையில் வந்த உபதேச மொழிகளிலிருந்தும் தெரிந்து அருளிச்செய்ததென்பது பெறப்படுகிறது.

இந்த விஷயத்தை ஸ்வாமியே பிரபந்தாரம்பத்தில் ‘திருமால் உவந்தேற்கு முபாய மொன்றால்’ என்று சரணாகதியையும், அதனால் ‘நம் பிறவித் துயர் மாற்றிய ஞானப் பெருந்தகவோர்’ என்று ஆழ்வாராசார்யர்களையும், (அவர்கள்) ‘சம்பிரதாயம் பெற்று’ என்று அவரடைந்த ஜ்ஞாநாநுஷ்டாநங்களையும், சொல்லி யிருப்பதால், அவையே இப்பிரபந்தத்தாற் சொல்லப்படுகிற விஷயம் என்று தெரிகிறது.

அன்றியும்: பிரபந்தங்களின் தொடக்கத்திலேயே அப்பிரபந்தத்தி லடங்கிய விஷயங்கள் இவையெனக் குறிப்பாற் கொள்ளும்படி சொல்லுவது சம்பிரதாயம். அவற்றை இவர் இரண்டு சூத்திர ரூபமான பாசுரங்களால் வெளியிட்டிருக்கிறார். அவையாவன :—

‘முத்திக் கருள்கூட மூன்றைத் தெளி’ என்பதும்,

‘மூன்றி லொருமூன்று மூவிரண்டு முந்நான்கும்
தோன்றத் தொலையும் துயர்’.

என்பதும் ஆம்.

இவற்றுள், ‘மூன்றைத் தெளி’ யென்றதனால், ஸ்வரூபோபாய புருஷார்த்தங்களை யறியவேணுமென்பதும், ‘மூன்றிலொரு மூன்று மூவிரண்டு முந்நான்கும், தோன்றத் தொலையும் துயர்’ என்றதினால், அந்த ஸ்வரூபோபாய புருஷார்த்தங்களை, மூன்று வேதங்களினின்றுந் தோன்றிய ப்ரணவார்த்த விவரணமான திருமந்திரமும், அதன் விவரணமாய் மூவிரண்டு பதங்களாயுள்ள த்வயமும், அதன் விவரணமாய் முந்நான்கு பதங்களா

யுள்ள சரம ச்லோகமும் ப்ரதிபாதிக்கு மென்பதும், அவற்றை ஆசார்ய உபதேசத்தால் அடைந்து தந்நிஷ்டையுடையனும் வர்த்திக்கு மவனுக்கு ஸம்ஸார துக்கமெல்லாம் தீரு மென்பதும் இப்பிரபந்தத்தால் அறியலா மென்று பெறப்படுகிறது.

இவைகளை யெல்லாம், திருமந்திரச்சுருக்கு, துவயச்சுருக்கு, சரம ச்லோகச் சுருக்கு, அர்த்த பஞ்சகம் என்னும் பிரபந்தங்களிலும் கீதார்த்த ஸங்க்ரகத்திலும் காணலாம்.

இப்படியாகச் சொல்லப்பட்ட சாஸ்த்ரார்த்தங்களில் குத்ருஷ்டிக ளின் கொள்கைகளைக் கேட்டு ஸம்சய முண்டாகாதிருக்கும்படி பரபக்ஷ நிராகரண ரூபமாகப் பரமதபங்கம் என்னும் ப்ரபந்தமும் செய்தருளி யிருக்கிறார். அதில் வைதிக மார்க்கத்தினின்று தவறியும் விரோதித்து மிருக்கிற பல சமயக்கொள்கைகளும், அவற்றுக்கு மறுப்பும் சுருக்கமாகச் சொல்லப்பட்டுள்ளன.

மேலும், இப்பிரபந்தம் திவ்யப்பிரபந்தங்களை அடியொற்றியதென்று தோன்றுகைக்கும், திருமண்காப்புச் சாத்திக்கொள்ளும்போது அநுஸந் திப்பதற்குமாகப் பன்னிருநாமப்பாட்டு ஸாதித்திருக்கிறார்.

அதிகார ஸங்க்ரகத்தால் ஆழ்வாராசார்யர்களுடைய ப்ரபாவங்களும் திவ்ய ப்ரபந்த ப்ரபாவங்களும் வெளியிடப்பட்டன.

பிரபந்த சாரத்தால் ஆழ்வார்களுடைய திரு நக்ஷத்ரம், அவர்களது அவதார ஸ்தலம், அவர்கள் செய்தருளிய பிரபந்தங்கள், வைபவங்கள், பாசுரத் தொகைகள் ஆகிய எல்லாம் சொல்லப்பட்டுள்ளன.

இவற்றால், திவ்ய ப்ரபந்தங்களில் இவருக்குள்ள ஈடுபாடும் அவற்றை எல்லோரும் எளிதி லுணர்ந்து உஜ்ஜீவிக்கவேணு மென்னும் பரஸம்ருத்தி யும் அறியலாம்.

இவையே யன்றி மற்றும் பல ப்ரபந்தங்களும் பகவத்குணாநுபவங்கள் தோன்றச் சொல்லப்பட்டன.

தமிழ் கற்பவர்க்கு உபயோகமான கௌட பாஞ்சால வ்ருத்தி பேதங் களும், வ்ருத்த பேதங்களும், ரஸாலங்காரங்களும் அமைந்த ப்ரபந்தங் களும் இவராற் செய்யப்பட்டுள்ளன.

இப்படி, ஸ்வாமி காவ்யரூபமான ப்ரபந்தங்கள் செய்திருப்பது மன்றி, இவற்றைக் கற்பதற்கும் அசக்தராயுள்ளவர்களும் எளிதில் ஸ்வரூப விஷ யங்களெல்லாம் அறிந்து உஜ்ஜீவிக்கும்படி மணிப்ரவாள வாசகநடையில் ரஹஸ்ய க்ரந்தங்கள் பல ஸாதித்திருக்கிறார்.

இவ்வளவும் அநந்ய ப்ரயோஜனராய் சேதநோஜ்ஜீவநார்த்தமாகவும், பகவந்முகோல்லாஸமாகவும் செய்தருளியதல்லது வேறில்லை.

பேசுவாரில்லாதிருந்தும் ஸம்ஸ்க்ருதபாஷை நிலை பெற்றிருப்பதற்குக் காரணம், அது அறிதற்கரிய சாஸ்த்ரார்த்த ஞாநப்ரதமாயும் காவ்ய ஸமூஹமுடையதாயும் இருப்பதே.

எந்தப் பாஷையில் அறிதற்கரிய சாஸ்த்ரார்த்தங்களை வெளியிடும் நூல்களும் காவ்யங்களும் அமைந்திருக்குமோ, அந்தப் பாஷை நிலைபெற்று வருகிறது.

நம் தமிழ்ப்பாஷை ஓராயிர வருஷகாலமாக ஆதரிப்பாரின்றியிருந் தும், சமய நூல்களும் காவியங்களும் இருந்துகொண்டே அதைக் காப்பாற்றி வருகின்றன.

அவ்வாறு நம் தேச பாஷையாகிய தமிழ் ஸ்வரூப மழியாமலிருக்கும் படி வைதிக சமய சாஸ்த்ரார்த்தங்களமையப் பல நூல்களை நமக்கு உப கரித்தருளிய ஸமயஸந்தாநாசார்யர்களுக்கும் வித்வான்களுக்கும் நாம் க்ருதஜ்ஞர்க ளாவோமாக.

ஸ்ரீ:

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகனும் பாதஞ்ஜல யோகமும்

[ஸ்ரீ. உ.வே. திருமலாபிஜந: கிருஷ்ணமாசார்யர், யோகாப்ரொபஸர், அரண்மனை, மைஸூர்]

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிக கேஸரீ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி॥

யோகோ வேதாந்தவிஷயே விவக்ஷிதோ விபஸ்சித: ।
ஸாயாஹ்நாய க்ருதாயம் விசாரோ யததே யதா ॥

இந்த மௌந கைங்கர்யம் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரோபய வேதாந்தா சார்யரான ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகனுடைய நித்யகர்மாநுஷ்டாந

க்ரமத்தில் ஸ்ரீமத் பாதஞ்ஜல யோகதர்ஶந விஷயமும் ஆசரண பரிபாடி யைக்குறித்து எவ்விதமாக இருந்தது என்கிற ஸூசனையை அவலம்பிக் கிறதாக அறியவேண்டியது. யோகாங்காநுஷ்டாநமாவது அந்தந்த வேதாந்தோஜ்ஜீவகமாகு மென்கிற ஸாராம்ஶம் யோகிவர்யராய் விஶிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸ்தாபகரான ஸ்ரீமந் நாதமுனி, ஸ்ரீமந் நம்மாழ்வார், ஸ்ரீமதாள வந்தார் முதலான ப்ரபந்நாக்ரேஸருடைய சரித்ர த்வாரா பெரியோர்கள் அறிந்திருக்கிறார்கள். அந்த வழியாக எழுந்தருளியிருந்த அவர் ஶிஷ்ய ரான யதிராஜ ஸார்வபௌமரான ஸ்ரீமத் ராமாநுஜனுடைய நித்யகர் மாநுஷ்டாந க்ரமத்திலும், அநுபவகோசரமாயிருக்குமா என்கிற ஸந் தேகத்திற்கு அவகாஶமில்லை யென்கிறது.

"நாயம் தேஶோ ந வயோ ந ஸாதநம் ஸம்ஶயாந்வித:"

என்கிற ஸ்ரீகீதாசார்யவசநமே ப்ரபலோத்பலகமாய் இருப்பதென்று ஸ்ரீகீதாயுகமான இக்கலிகாலத்தில் இவ்வளவு விஶதீகரணம் பண்ண வேண்டுவதில்லை. இப்படி யிருக்க, அந்த ஸ்ரீ ராமாநுஜ தயா பாத்ரமான ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேஶிக ஸ்வாமியின் திருவுள்ளம் ஸ்ரீமத் பாதஞ்ஜல யோகாநுஷ்டாந பரீவாஹத்திற்கு ஆதாரமாயில்லை யென்கிறதாகச் சிலர் வசிப்பது விஷாதாவஹமென்று விவரணம் செய்யவேண்டி வந்த தென்று இவ்வாத்மா அதீவ ஸங்குசித சித்தனாயிருக்கிறான்.

யதிராஜ ஸார்வ பௌமரான ஸ்ரீமத் ராமாநுஜ ஸ்வாமி தம்முடைய ஸ்ரீ பாஷ்யத்தில் "ஏதேந யோக: ப்ரத்யுக்த:" என்கிற பாராஶர்ய ஸூத்ர விவரண பாஷ்யத்தால் ஸர்வ ப்ரகாரமான யோகாநுஷ் டாந க்ரமத்தை நிரஸநம் பண்ணினாரென்கிறதாகச் சில மஹாந்கள் உத் கோஷித்து, அந்த யதிராஜஸித்தாந்த ஸ்தாபகாசார்யரான ஸ்ரீமந்நிக மாந்த மஹாதேசிகனுடைய நித்ய கர்மாநுஷ்டாந க்ரமத்திலும் எவ் விதமான யோகாப்யாஸமு மிருந்ததில்லை என்கிறதாக ஸாதிப்பதற்கு யத்னிப்பர்.

இம்மஹான்களுடைய இந்த ஸாதநாப்ரயத்நத்திற்குத் தகுந்த ஶாஸ்த்ரீயாதார அநுபவங்கள் இது வரையிலும் லபிக்கவில்லை யென்ற தாக இவ்வாத்மா ப்ரமாணீகரிக்கிறான். ஏனென்றால்: அந்த யதிராஜ ஸார்வ பௌம ரசித ஸ்ரீபாஷ்யம் ஸ்ரீ ஸரஸ்வத்யபிநந்திதமான பின்பு அந்தப் பேர் பெற்றதென்றதாக நாம் அவருடைய திவ்ய சரித்ர முகத்தாலே கேள்விப் பட்டிருக்கிறோம். அவ்விதமான அபிநந்தநமும் அந்த ஸ்ரீ பாஷ்யத்திற்கு ஒரு விதமான பூர்வோத்தர ஸந்தர்ப்ப விரோதங்க ளில்லாமையாலே

வேதாந்த ஸாரதம ஸங்க்ரஹமாயிருப்பதால் இருக்குமென்று ஸத் க்ரந்த ப்ரணேதாக்களான மஹாந்க ளெல்லாரும் ஸம்மதிக்கிறார்கள்.

ஒருக்கால் ஸ்ரீ பாஷ்யகாரர் "ஏதேந யோக: ப்ரத்யுக்த:" என்கிற வ்யாஸ ஸூத்ர விவரண தஶையில் யோகஸ்ம்ருதியுக்த யோகத்தினுடைய ப்ரத்யாக்யாநம் பண்ணியிருந்ததானால் உத்தரோத்தர "தஹர உத்தரேப்ய:" என்கிற அதே வ்யாஸஸூத்ரத்தினுடைய விவரண ஸ்ரீபாஷ்யத்தில்,

"அத யதிதமஸ்மிந் ப்ரஹ்மபுரே தஹரம் புண்டரீகம் வேஶ்ம ।
தஹரோऽஸ்மிந்நந்தராகாஶஸ்தஸ்மிந் யதந்தஸ்தததந்வேஷ்டவ்யம் தத்வாவ
விஜிஜ்ஞாஸிதவ்யம் ॥"

என்கிற ஶ்ருதியை விஷயீகரித்து ஹ்ருத்புண்டரீக மத்யவர்த்தியான ஸர்வாந் தர்யாமியை உபாஸநம் பண்ணுகிற யோகாப்யாஸ க்ரமத்தைச் சொன்ன பரிபாடி நிதராம் ஸ்ரீபாஷ்ய விரோதமாகும்.

ஸ்ரீமத் பாதஞ்ஜல யோகத்திலும் அந்த தஹர வித்யா க்ரமத்தை "விஶோகா வா ஜ்யோதிஷ்மதீ" (பா. யோ. பா. 1. ஸூ 36) "தேஶ பந்தஶ்சித்தஸ்ய தாரணா" (பா. யோ. பா. 1. ஸூ 36) என்கிற ஸூத்ரங்களுக் குப் பாஷ்யகர்த்தாவான அதே வ்யாஸர் தம்முடைய யோக பாஷ்யத்தில் க்ரமேண

"ப்ரவ்ருத்திருத்பந்நா மநஸ: ஸ்திதிநிபந்தநீத்யநுவர்த்ததே ।
ஹ்ருதய புண்டரீகே தாரயதோ யா புத்திஸம்வித் ॥"

இத்யாதிநா நாபிசக்ரே, ஹ்ருதய புண்டரீகே, மூர்த்நி ஜ்யோதிஷி, நாஸிகாக்ரே. இதே முதலான ரீதியில் மநோவ்ருத்தி நிரோத பூர்வகமாக அந்தர் யாம்யுபாஸநா க்ரமத்தை விஶதம் பண்ணியிருக்கிறார். யோகஸூத்ரத் திற்குப் பாஷ்யகர்த்தாவான வ்யாஸரே ப்ரஹ்ம ஸூத்ர கர்த்தாவாயிருக் கிறாரென்றதாக நிர்விவாதமாயிருப்பதால், அவ்வம்ஶத்தில் இனிமேல் நமக்கு விசார ஶங்கை வேண்டியதில்லை.

மேலும் உத்கீதோபாஸந வித்யையில்:

"ய ஏஷோऽந்தராதித்யே ஹிரண்மய: புருஷோ த்ருஶ்யதே ।
.... ஸ ஏவ ஸர்வ ஸுவர்ண: ॥" (சாம். 2. ப்ர. 1.)

இந்த உபநிஷத்திற்குப் பாஷ்ய கர்த்தாவான ஸ்ரீ ரங்கராமாநுஜஸ்வாமி தம்முடைய பாஷ்யத்தில் "ஹிரண்மய: புருஷோ த்ருஶ்யத இதி"

"யோகிநாமிதி சேஷ:" என்று விவரணம் பண்ணி 'யோகாப்யாஸத்திற்கு அந்தர்யாமியான பகவான் நாராயணன் ஸ்ரீமந் நம்பியனும்; அவ்விடத்தில் ஒரு ஸந்தேகமில்லை' யென்றதாக ஸ்வாநுபவயோகத்தை ப்ரகாஶிப்பித்தருளினர்.

ஆகையால் ஸ்ரீமத் யதிராஜ ஸார்வபௌமரும் தம்முடைய நித்ய கர்மாநுஷ்டாந க்ரமத்தில் பாதஞ்ஜலீய யோகாப்யாஸத்தை மேலநம் பண்ணியே யிருந்தார் என்றதாக ப்ரமாணம் செய்யலாம்.

ஆனால் யோக ப்ரத்யாக்யாநத்தைப் பற்றி ஸூக்ஷ்ம விசேஷணஜ்ஞரும் நிஷ்கல்மஷ மஹர்ஷிகளும் ஸத் ஸம்ப்ரதாய பரிபாலகரும் இவ்விதமாகச் சொல்லுவார்கள். எந்த யோகாப்யாஸம் அணிமாத்யஷ்ட ஸித்திதாயகமாய் புநராவ்ருத்திகரமா யிருக்குமோ, எவ்வித யோகக்ரமாசரணம் ஸர்வேஶ்வரனை ஸ்ரீமந் நாராயணனுடைய ஸகல கல்யாண குண உபேக்ஷகமாயிருக்குமோ, அவ்வித ஹடயோக ஸாங்க்ய யோகாதிகள் ப்ரத்யாக்யாதங்களென்றதாக அறியவேண்டும். இந்த ஸூக்ஷ்மார்த்தத்தை

"ப⁴வ ப்ரத்யயோ விதே³ஹ ப்ரக்ருதிலயாநாம்
ஶ்ரத்³தா⁴ வீர்ய ஸ்ம்ருதி ஸமாதி⁴ ப்ரஜ்ஞாபூர்வக இதரேஷாம் ॥"
[பா. யோ. பா. 1. ஸூ. 19, 20.]

என்னும் வ்யாஸ ப்ரணீத பாதஞ்ஜல யோக பாஷ்யத்தாலே விசேஷமாகக் கண்டு கொள்வது.

இனி, ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரான ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேஶிகனுடைய நித்ய கர்மாநுஷ்டாநத்தில் பாதஞ்ஜல யோகாப்யாஸ க்ரமத்தைக் காட்டுகிற ஸத்க்ரந்த மஹா மார்க்கத்தையும் ஸங்க்ரஹமாக ஸேவிக்கலாம்.

நம் பூர்வாசார்ய ஸத் ஸம்ப்ரதாயம் விஶிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸ்தாபகமாகவே யிருக்குமென்ற அம்ஶம் அடியேன் சொல்லவேண்டியதில்லை. அந்த சிதசித் விஶிஷ்ட தத்வோத்தீபநமும், பகவச்சரீரமான அசித்துக்கு ஸத் ஸம்ஸ்காரத்தாலே ஒரு விஜாதீயமான தேஜோ விசேஷமுண்டானால் ஸ்வாத்ம ப்ரத்யக்ஷகோசரமாம். அதற்கு அவ்விதமான தேஜோ விசேஷமும் அந்தந்த சேதநருடைய ப்ராக்தந கர்ம பரிபாகாநுகுணமாக வந்த தாத்காலிக ஸதஸத் கர்மங்களில் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளாலே ஒவ்வொரு ஶரீரிகளுக்கு ஒவ்வொரு ஸமயத்தில் உத்புத்தமாயும் நிகூடமாயு மிருக்கும்.

சில வ்யக்தி விசேஷங்களில் எப்பொழுதும் "ஸஹயோகத விஜ்ஞாநநிவ்ருத்திம் யஶஶ்ஶரீர தா:" என்னுமாப்போலே உத்புத்தமாகவே யிருக்குமென்கிற அம்ஶமும் காணலாம்.

அநேகமாக நம் பூர்வாசார்ய ஸந்தாநிகள் எல்லாரும் ஸர்வதோத்புத்த தேஜஸ்க ஶரீரி கூடத்திற்குச் சேர்ந்தவரென்பது அவரவர்களுடைய ஸதாசார பரம வைராக்ய பரம பக்தி பரஜ்ஞாநாதி ஸத்ஸம்பத்தியாலே ஸகலலோக ப்ரகாஶகமாய் இருக்கிறதென்ற விஷயத்தை இப்பொழுது அதிஶயமாக உபந்யஸநம் பண்ணவேண்டியதில்லை.

அந்த கூடத்தில் நம் ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் அநுத்தம ஸ்தாநத்தை வகித்தவர். இவரைப்போலே ஸத்கர்மிகளும், பர வைராக்ய ஸம்பந்நரும், பரமயோகிகளும், பரம பக்தியுதரும், பரஜ்ஞாந ஸம்பந்நரும், பரம புருஷ ப்ரபந்நரும் இவ்வுலகத்தில் மற்றொருவருமில்லை யென்பதை இவருடைய ஸத்க்ரந்தங்களாலே அறியலாம்.

இப்படி யிருந்தபோதிலும், இவருடைய நித்ய கர்மாநுஷ்டாந விஷயத்தில் யோகாப்யாஸ க்ரமத்தைப்பற்றிச் சிலர் ஸம்ஶயிப்பதால், அந்த விஷயத்தை இவ்விடத்தில் ஸங்க்ரஹமாக நிரூபணம் பண்ணி, அந்த மஹானுடைய கைங்கர்யாபிமாநத்தாலே இவ்வாத்மாவைக் கிஞ்சித் க்ருதார்த்தனாக்க வேண்டியது அத்யாவஶ்யகமாயிருக்கும். அதிலும் யோகாப்யாஸ க்ரமமானது, பஹிரங்க ஸாதநம் அந்தரங்க ஸாதநம் என்று இரண்டு ப்ரகாரமாயிருக்கிறது. யம நியம ஆஸந ப்ராணாயாம ப்ரத்யாஹார என்கிற ஐந்து உபாயங்களுக்குப் பஹிரங்க ஸாதநமென்றும், தாரணா த்யாந ஸமாதி என்ற மூன்று உபாயங்களுக்கு அந்தரங்க ஸாதநமென்றும் அபிதாநமுண்டு. இவ்விடத்தில் பஹிரங்க ஸாதநங்களுக்கு,

'ஆரோக்³யமலௌல்யமாயதா, ஸ்தா²யீந ஶரீரலாக⁴வம், தீவ்ரவைராக்³யம் ஸம்வ்ருத்தி: ப்³ரஹ்மஸாக்ஷாத்காரம், ஸித்³தி⁴காமதா, ஸர்வஸஹிஷ்ணுதா ஶக்தி: ॥"

இத்யாதிகள் முக்ய பலங்கள். அந்தரங்க ஸாதநங்களைப் பர வைராக்யம், பரஜ்ஞாநம், பராபக்தி, பரம புருஷ ப்ரபதந நிஷ்டா இத்யாதிகளென்று அறிந்துகொள்வது. அந்தரங்க ஸாதந தத் பலங்கள் பஹிரங்க ஸாதந யோகாப்யாஸம் இல்லாவிடில் ஸித்திக்கமாட்டா. ஸகலவித ஜ்ஞாநாதி ஸம்பத்தியைக் குறித்து ஶரீராரோக்³ய ப³லபா³ஹ்ய ஶக்தி ஸித்³தி⁴காத்ராதிகள் ப்ரபல காரணங்களென்கிறது. நிகிலலோக விதமாகையால் அதைப்பற்றி விசித்ரவாக் வ்ருத்திக்கு அவகாசமில்லை.

இத்யாதிகள் வ்யாஸ பாஷ்ய முகமாக்கலாம். ஸமாதியும், ஸம்ப்ரஜ்ஞாத அஸம்ப்ரஜ்ஞாத என்று இரண்டு விதமாக உண்டு. இவ்விடத்தில் ஸம்

27

ப்ரஜ்ஞாத ஸமாதி க்ரமம், அர்ச்சா விக்ரஹோபாஸந த்வாரா ഹാൎദ്ദാമത്துக்கு (அந்தர்யாம்யுபாஸநத்துக்கு) பரமோபகாரமாயிருக்கிறது.

அஸம்ப்ரஜ்ஞாத ஸமாதி க்ரமமாவது, பகவத் ப்ரபதநத்துக்கு அநு கூலமாயிருந்து ஸாயுஜ்ய பலதமாயிருக்கும்.

நம் ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகனும் தீர்க்காயுஷ்கரா யெழுந் தருளியிருந்து, அரோக த்ருடகாயராய் அவ்வளவு திருநக்ஷத்ரங்கள் அப்ரதிம புத்தி பல பரவைராக்யாதிகளாலே ஸ்ரீமத் ராமாநுஜ ஸித்தாந்த ஸ்தாபக ஸத்க்ரந்த ப்ரவசந ப்ரசார ஸத்க்ரந்த ரசநங்களைச் செய்தரு ளினர் என்ற அம்ஶம் நிர்விவாத மாகையால் அதைப்பற்றி அத்யுபந்யாஸம் பண்ணவேண்டியதில்லை.

நம் ஸத்ஸம்ப்ரதாயத்தை விசாரித்தால், ஸந்த்யாவந்தந பகவதாரா தநா பூதஶுத்த்யாதிகளில் அந்தரங்க பஹிரங்க ஸாதநமான யோகிக ஸூகா ஸந ப்ராணாயாம த்யாந தாரணாதிகள் அநுஸ்யூதமா யிருக்கிறதென்றதாக ஸ்வாத்ம ஸாக்ஷிகமாயிருப்பதால், அதை அபந்நபம் பண்ணினுல் மஹா தோஷத்திற்கு அவகாஶமாகும். இனிமேல் அந்த மஹாநுபாவர் நிர் விண்ணரான ஸமயத்தில் பரபுருஷ த்யாநாஸக்தராய் யோகவிஷயத்தில் எவ்விதமான ஸ்ரீ ஸூக்தியை அநுக்ரஹித்தார் என்கிற விடத்தை "ഭജേ ജ്യോതിഃ കിമപി യതീനാം സംവദനം യോഗദൃഷ്ടേഃ" என்கிற பகவத்த்யாந ஸோபநத்தாலே கண்டு கொள்ளலாம். இவ்விடத்தில் "യതീനാം യോഗ ദൃഷ്ടേഃ" என்கிற பதத்வயத்தால் பாதஞ்ஜல யோகத்தினுடைய பஹி ரங்க ஸாதநமான ஸமாதியை அந்தரங்க ஸாதநமான ധാരണാத்யாநாதி யையும் அவஶ்யாநுஷ்டேயமாகத் தம்முடைய அநுஷ்டாநத்தாலே நிரூ பித்தார். இப்படி அந்த பகவத்த்யாந ஸோபாநத்தில் முழுவதும் சித்த வ்ருத்தி நிரோதோபாயத்திற்கு ஸாதநமான ஸம்ப்ரஜ்ஞாத ஸமாதியையும் விஶதமாகக் காட்டியருளினர். மேலும், கநகதாரா ஸ்ரீ ஸ்துதியில்:

"പക്ഷ്മവാസ.... തജ്ജ്ഞാനസിദ്ധി യതിനാ ദേകദേശ്യം സദായ... ...നിർവ്വൃത്തിഹേതുണയ വടിതം...ശേഷശ്രിതം വിശുദ്ധനസാം...ശയ്യാ വിശേഷാഃ ॥"

என்கிற இரண்டு பாட்டுகளில் ദഹര வித்யோபாஸந க்ரமத்தை நிரூபித்து ஸ்ரீ பாஷ்யகாரருடைய அந்தர்யாம்யுபாஸநாக்ரமத்தை ப்ரகாஶிப்பித்தார். ஸ்ரீ ஹயக்ரீவ ஸ்தோத்ரத்தில் "സമാധിസംവ്യാന (ഭോഗ) ഹയാഹി ഷേകാഃ" என்ற இடத்தில் பாதஞ்ஜலயுக்த "തത്ര പ്രത്യയൈകതാനതാ ധ്യാനം" (பா. யோ. பா. 3 ஸூ. 2) என்கிற த்யாநக்ரமத்தை அநுஷ்ட

டித்துக் காட்டியருளினர். அவருடைய வாதக்ரந்த பரிஶீலநம் பண்ணிப் பார்த்தாலும், "സംപ്രജ്ഞാതധൃതി സ്തിമിതേ" என்ற ஶ்லோக முகேந பாதஞ்ஜலயோக ஶாஸ்த்ரத்திலிருந்த "ஸம்ப்ரஜ்ஞாத்" ஶப்தத்தைச் சொல்லி, "വൃത്തിനിരോധവശതേ" என்ற ஶப்தத்தாலே பர்யாயமாக அஸம் ப்ரஜ்ஞாத ஸ்வரூப நிர்வசநம் பண்ணிக் காட்டினர்.

இப்படியிருக்க: ஸதாசார்ய ஸத்ஸம்ப்ரதாய பரிக்ருஹீதமான இந்த யோக்ய யோகாப்யாஸத்தினுடைய ഹ്രാശபாகத்திற்கு "സംസമഞ്ജ ഭോഷ്ടമണാ ഭവതി" என்கிறதே காரணமாயிருக்கும். ஸர்வஜநா தரணீயமான ஸ்ரீ பகவத்கீதையைப் பார்த்தாலும்,

"പ്രാണാപാനൌ സമൌ കൃത്വാ നാസാഭ്യന്തരചാരിണൌ,
ഭ്രുവോർമ്മദ്ധ്യേ പ്രാണം, സ്ഥിരമാസനമാത്മനഃ, സംപ്രേക്ഷ്യ നാസികാ
ഗ്രം സ്വം, ദിവ്യം ദദാമി തേ ചക്ഷുഃ"

இத்யாதி வசநங்களாலே யோகியந்தரங்க ஸாதந பஹிரங்க ஸாதநங்க ளிரண்டே ஆத்மஜ்யோதி தர்ஶநமாகும் என்கிற அம்ஶம் ஸ்பஷ்டமாகும்.

இவ்விடத்தில் சில மஹாநுபாவர் "യോഗ" ஶப்தத்திற்கு "ജ്ഞാന ദർശന" மென்று அர்த்தம் செய்கிருர்கள். அந்த அர்த்தம் கிஞ்சித் உசித மானபோதிலும், தத்ஸாதந யோகமில்லை யென்ற அர்த்தத்தை அத்தாலே ஸாதிக்கிறதற்கு ஶாஸ்த்ராநுயவாதாரங்க ளில்லை.

ஶப்தார்த்த நிர்வசநம் பெரியோர்கள் பூர்வோத்தர ஸந்தர்ப்பத் திற்கு அவிரோதமாகப் பண்ணவேண்டுமென்கிற அம்ஶம் மேல் காட்டின ஸதாசார்ய வசநங்களாலே காணலாம். ஆகையால் பகவச்சாஸ்த்ர ஸத் ஸம்ப்ரதாயங்களுக்கு அவிரோதியான யோகாங்காநுஷ்டாநம் அவஶ்ய சரணீய மென்றதாக ஸ்ரீமத் பதஞ்ஜலியோக ஸூத்ர வ்யாஸக்ருத தத்பாஷ் யங்களும் ப்ரதிபாதநம் பண்ணுகின்றன.

இந்த அகிஞ்சநன் ஒரு அபிமாநத்தாலே இப்படி விண்ணப்பம் செய்தானில்லை. குணக்ரஹணம் பண்ணின மஹான்கள் ப்ரஶ்நிப்பதால் யதா ஶக்தி உத்தரவாதியாக இருக்கிறதற்குக் கிங்கரனுகவிருக்கிறுன்.

ஸ்ரீ:

மீமாம்ஸா ஸங்க்ரஹம்

[திவான் பஹதூர் ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜாசார்யர்.]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

பன்னிரண்டாவது அத்தியாயம்

மூன்றாவது பாதம்

310. "பர்வணி நாத்யேயம்" என்று ஒரு விதி. இதன் பொருள்—பர்வகாலத்தில் அத்யயநம் பண்ணக் கூடாது—என்பது யாகங்களைப் பர்வகாலங்களிலேயே செய்யவேண்டும். அவைகளை மந்திரமில்லாமல் செய்யலாமா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்—மந்திரங்களைப் பர்வ காலங்களில் சொல்லுவது நிஷித்தமாகையால், அவைகளைச் சொல்லாமல் யாகங்களைச் செய்யவேண்டும்.

ஸித்தாந்தம்—இந்த விதியானது வேதத்தைச் சிஷ்யன் க்ரஹிப்பதற்கும் ஆசார்யன் உபதேசிப்பதற்கும் ஏற்பட்டது; யாகங்களின் ப்ரயோகங்களுக்காக ஏற்பட்டதன்று. ஆகையால் நிஷேதமில்லை. மந்திரங்களைச் சொல்லியே யாகங்களைச் செய்யவேண்டும். [அதி—7]

311. கர்மங்களுக்கு அங்கமாக விதிக்கப்பட்டிருக்கிற மந்திரங்களை எப்போது சொல்லவேண்டியது என்று ஸந்தேஹம். மந்திரத்தைப் படிப்பதற்கு முன்னாலே கர்மத்தைச் செய்யவேண்டியதா? அல்லது அதைச் சொல்லிக்கொண்டிருக்கும்போதா? அல்லது அதை முடித்த பிறகா? அல்லது அதை முடித்துக் கொஞ்ச காலம் சென்ற பின்பா?—என்று.

பூர்வபக்ஷம்—இப்படித்தான் செய்யவேண்டியதென்று ஏற்பாடில்லாமையால் எப்படியாவது செய்யலாம்.

ஸித்தாந்தம்—முழு மந்திரத்தினால் உண்டாகும் கர்ம விஷயமான ஸ்மரணம் (நினைவு) கர்மத்துக்கு அங்கம். ஆகையால் மந்திரத்தை முழுவதும் சொல்லாமல் ஸ்மரண முண்டாகாது. மந்திரத்தை முடித்தவுடன் கர்மத்தைச் செய்யாவிட்டால் ஸ்மரணம் போய்விடும், ஆகையால் மந்திரத்தை முழுவதும் படித்து உடனே கர்மத்தைச் செய்யவேண்டும். (அதி—10)

312. புரோடாசத்தை விபாகம் பண்ணுவதற்கு மூன்று மந்திரங்கள் படிக்கப்பட்டிருக்கின்றன.. அவைகளாவன—"பூஷா வாம் விபஜது । பகோ வாம் விபஜது । அர்யமா வாம் விபஜது" என்பன. இவைகளுக்குப் பொருள்—உங்களைப் பூஷன் விபாகம் செய்யட்டும்; உங்களைப் பகன் விபாகம் செய்யட்டும்; உங்களை அர்யமா விபாகம் செய்யட்டும்—என்பது. இங்கே செய்யவேண்டிய கார்யம் ஒன்று. மந்திரம் மூன்று. மூன்றையும் சொல்லவேண்டியதா? ஒன்றை மாத்திரமா என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்—மூன்றையும் சொல்லி விபாகத்தைச் செய்ய முடியுமாகையால் ஸமுச்சயம்.

ஸித்தாந்தம்—ஒரு மந்திரத்தைச் சொன்னவுடனே கீழ்ப் பாராவில் சொன்னபடி கர்மத்தைச் செய்யவேண்டும். ஆகையால் மற்ற மந்திரங்களைச் சொல்ல இடமில்லை. 308வது பாராவில் சொன்ன நியாயத்தையே இந்த அதிகரணம் விரிவாய்ச் சொல்லுகிறது. [அதி—13]

313. அக்னி சயனத்தில் ஒரு மந்த்ரம்—"சதஸ்ருபிரப்ரிமாதத்தே" என்று. இதன் பொருள்—நான்கு மந்திரங்களைக்கொண்டு அப்ரியை (மண்வெட்டியை) எடுத்துக்கொள்ளுகிறான்—என்பது. இங்கே நான்கையும் சொல்லவேண்டியதா? கீழ்ப் பாராவில் சொன்னபடி ஒன்றைச் சொன்னால் போதுமா? என்பது ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்—இங்கே கீழ்ப் பாராவில் சொன்னபடி ஒவ்வொரு மந்திரமும் கர்மத்துக்கு அங்கமன்று. நாலு என்கிற ஸங்கையினால் நாலு மந்திரங்களும் சேர்ந்தே அங்க மாகையால் ஸமுச்சயம். இங்கே யொரு கேள்வி—கீழ்ப் பாராவில் விசாரித்த புரோடாச விபாக விஷயத்திலும் மூன்று மந்திரங்களும் சேர்ந்தே அந்தக் கர்மத்துக்கு அங்கம் என்று ஏன் சொல்லக் கூடாது என்று. பதில்—இங்கே வசனத்தினால் ஸங்க்யை சொல்லப்பட்டிருக்கிறது. புரோடாச விபாக விஷயத்தில் ஸங்க்யை நியாயத்தால் ஏற்படவேண்டும். அது துர்ப்பலம்; வசனத்தால் சொல்லப்பட்ட ஸங்கியை ப்ரபலம். ஆகையால் இங்கே நான்கு மந்திரங்கள் சேர்ந்தே கர்மத்துக்கு அங்கம். ஆகையால் நாலையும் சொல்லிக் கர்மத்தைச் செய்யவேண்டும் [அதி—14]

மூன்றாவது பாதம் முற்றிற்று.

நான்காம் பாதம்

314. ஜபம், ஸ்தோத்ரம் ஆசீர்வசனம் ஆகிய இவைகளின் மந்திரங்களுக்கு விகல்பமா? ஸமுச்சயமா? என்பது ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்—ஜபத்தின் கார்யமானது ஒன்றானதாலே விகல்பம்.

ஸித்தாந்தம்—ஜபத்தின் ப்ரயோஜனம் அத்ருஷ்டம். ஒவ்வொரு மந்த்ரத்தின் ஜபத்தாலே உண்டாகும் அத்ருஷ்டம் வெவ்வேருகையால் ஸமுச்சயம். இப்படியே ஸ்தோத்ரமந்த்ரங்களுக்கும், ஆசீர்வசன மந்த்ரங்களுக்கும் ஸமுச்சயம்.

இங்கே ஜபம் என்பது ஒரு மந்த்ரத்துக்கு அர்த்தம் இருந்தாலும், அதைத் தேடாமல் அத்ருஷ்டத்துக்காக மாத்ரம் அந்த மந்த்ரத்தைச் சொல்லுவது. ஸ்தோத்ரம் என்பது ஒருவனுடைய குணங்களைச் சொல்லுவது [அதி—1]

315. யாஜ்யா என்கிற மந்திரத்துக்கும் புரோநுவாக்யா என்கிற மந்திரத்துக்கும் விகல்பமா? ஸமுச்சயமா? என்று ஸந்தேஹம். புரோநுவாக்யா என்பது தேவதைக்கு ஒரு ஹவிஸ்ஸைக் கொடுப்பதற்காக அத்வர்யு அதை எடுக்கும்போது ஹோதா சொல்லும் மந்திரம். யாஜ்யா என்பது அந்த தேவதைக்குக் கொடுப்பதற்காக ஹோதாவே சொல்லும் மந்திரம்.

பூர்வபக்ஷம்—மந்த்ரத்துக்கு ப்ரயோஜனம் இன்ன தேவதைக்கு ஹவிஸ்ஸைக் கொடுக்கவேண்டியதென்று காட்டுவது. அந்தக் கார்யம் ஒன்று. ஆகையால் விகல்பம்.

ஸித்தாந்தம்—இது கூடாது. புரோநுவாக்யை யென்பதற்கு முன்னாலே சொல்லப்பட்டதென்பது பொருள். பின்னால் ஒரு மந்த்ரத்தைச் சொல்லாவிட்டால் இந்தச் சொல்லுக்கு அர்த்தம் கிடைக்காது. மேலும், "புரோநுவாக்யாமநூச்ய யாஜ்யயா ஜுஹோதி" என்று ஒரு வசனமிருக்கிறது. இதன் பொருள்—புரோநுவாக்யை என்கிற மந்திரத்தைச் சொல்லி யாஜ்யையென்கிற மந்திரத்தைச் சொல்லி ஹோமஞ்செய்ய வேண்டும் என்பது. இங்கே இரண்டு கார்யங்களைச் சொல்லி மந்த்ரங்களின் சேர்க்கை சொல்லப்படுகிறது. ஆகையால் ஸமுச்சயம்.

நான்காம் பாதம் முற்றிற்று.

பன்னிரண்டாவது அத்யாயம் முற்றிற்று.

316. இதுவரையில் மீமாம்ஸா சாஸ்த்ரம் இன்னதென்றும், அதில் தீர்மானிக்கப்படும் ந்யாயங்கள் எவைகள் என்றும் அறிவதற்குவேண்டிய அதிகரணங்கள் மாத்ரம் எழுதப்பட்டன. வேறு சில அதிகரணங்களையும் ஸ்ரீபாஷ்யத்திற்காக அறியவேண்டும். அவைகள் மேலே எழுதப்படுகின்றன.

317. "வைஶ்வாநரம் த்வாதஶகபாலம் நிர்வபேத் புத்ரே ஜாதே" என்று ஒரு வசனம். இதன் பொருள்—பிள்ளை பிறந்தபோது வைஶ்வாநரதேவதைகுப் பன்னிரண்டுக் கபாலங்களில் சுடப்பட்ட புரோடாசத்தைக் கொடுப்பதற்காக நிர்வாபம் செய்யவேண்டும் என்பது. இதின்மேலே ஐந்[...] வாக்யங்களில் எட்டுக் கபால புரோடாசத்தையும், ஒன்பதுகபால புரோட[...] சத்தையும், பத்துக் கபால புரோடாசத்தையும், பதினொரு கபால புரோ[...] டாசத்தையும் சொல்லி ஒவ்வொன்றுக்கும் பலன் சொல்லப்பட்டிருக்[...] றது. இங்கே ஸந்தேஹம். 'அஷ்டாகபால:' முதலான பதங்கள் முன்[...] சொன்ன யாகத்தின் பெயர்களா? அல்லது அவைகளால் குணம் விதிக்கப்[...] படுகிறதா? அல்லது அவைகள் அர்த்தவாதங்களா? என்று.

ஸித்தாந்தம்—இங்கே த்வாதச கபாலம் என்னும் பதமானது புரோடா[...] சத்தைச் சொல்லுகிறது. அப்படியே அஷ்டா கபால: முதலான ப[...] களும் புரோடாசங்களையே சொல்லுகின்றன. ஆகையால் அவைகள், முதல்[...] யாகத்தின் பெயர்கள் அல்ல; அவைகளால் குணங்களும் விதிக்கப்பட[...] வில்லை. ப்ராப்தமான கர்ம விஷயத்தில் அனேக குணங்களை விதிப்பதானா[...] வாக்யபேதம் என்னும் குற்றம் வரும். முதல் வாக்யம் முதல் கடைசி வரை[...] யில் ஒரே மஹா வாக்யம். ஆகையாலே பன்னிரண்டு கபால புரோடாசத்தை[...] ஸ்தோத்ரம் பண்ணுவதற்காக, பன்னிரண்டு என்கிற ஸங்கியையில்[...] சேர்ந்த எட்டு, ஒன்பது, பத்து, பதினொன்று—என்கிற ஸங்க்யைகளை ஸ்தோத்ரம் பண்ணுகிறது. பன்னிரண்டு கபாலம் அம்சி. மற்றவைகள் அம்சங்கள். அம்சியை ஸ்தோத்ரம் பண்ணுவதற்காக அம்சங்கள் ஸ்தோத்ரம் பண்ணப்படுகின்றன. [அதி—1—4—12]

318. பதங்கள் முக்யமான அர்த்தத்தைச் சொல்லவில்லை. அத்துடன் சேர்ந்த அர்த்தத்தைச் சொல்லுகிறதுஎன்று கொள்வதற்குஉதாரணங்கள்.

(1) 'யஜமாந: ப்ரஸ்தர:' என்று ஒரு வாக்யமிருக்கிறது. ப்ரஸ்தரம் என்பது ஹவிஸுக்களை வைப்பதற்காக வேதியில் போடப்பட்ட தர்ப்பங்கள். யஜமானன் யாகத்தைச் செய்கிறவன். இங்கே இரண்டு சொல்லுக்கும் ஒரே விபக்தியிருப்பதாலே ஒன்று மற்றொன்றுக்குப் பெயரா? அல்லது குணம் விதிக்கப்படுகிறதா? அல்லது அர்த்தவாதமா? என்று ஸந்தேஹம். இரண்டு பதங்களுக்கும் பொருள்வெவ்வேறு என்று ப்ரஸித்தமாகையாலே ஒன்று மற்றொன்றுக்குப் பெயர் அன்று. யஜமானனுக்குப் பிரஸ்தரம் என்கிற குணம் விதிக்கப்படவில்லை. ஏனென்றால், ப்ரஸ்தரத்தைக் கடைசியில் அக்னியில் போட்டுவிட வேண்டும். அப்படியே யஜமானனையும் அதில் போட்டு விடும்படியாய் நேரிடும். ஆகையால் விதிக்கப்பட்ட ப்ரஸ்தரம் "யஜமாந:" என்கிற சொல்லாலே ஸ்தோத்ரம் பண்ணப்படுகிறது. எப்படி யஜமானன் யாகத்துக்கு ஸாதனமாயிருக்கிறானோ, அப்படியே ப்ரஸ்தரமும் அதற்கு ஸாதனம்—என்று. யஜமானன் என்கிற பதத்துக்கு யஜ்ஞத்துக்கு ஸாதனமாயிருக்கிற விஷயத்தில் யஜமானனைப்போல் என்பது பொருள். (அதி—1—4—13)

319. 'ஆக்நேயோ வை ப்ராஹ்மண:' என்று ஒரு வாக்யமிருக்கிறது. இதன் பொருள்—ப்ராம்மணன் ஆக்னேயன் என்பது. கீழ்ப்பாரவில்போல இங்கேயும் பெயருமன்று, குணமும் விதிக்கப்படவில்லை. ஆகையால் இது ஸ்தோத்ரம். ப்ரம்மாவின் முகத்திலிருந்து ப்ராம்மணனும் அக்னியும் உண்டானபடியால், அவனை ஆக்னேயன் என்று சொல்லுகிறது. ஆக்னேய: என்பதற்கு அக்னியைச் சேர்ந்தவன் என்பது பொருள். (அதி.—1—4—14)

320. 'ஆதித்யோ யூப:' என்று இன்னும் ஒரு வாக்யமிருக்கிறது. இதன்பொருள்—யூபம் ஸூர்யன் என்பது. யூப மென்பது பசு யாகத்தில் பசுவைக் கட்டுவதற்கு வேண்டிய மரம். இங்கேயும் ஆதித்ய என்கிற பதத்தாலே யூபம் ஸ்தோத்ரம் பண்ணப்படுகிறது. நெய்யினுல் யூபத்துக்கு அஞ்ஜனம் செய்கிறபோது அது ஸூர்யனைப்போல் ப்ரகாசிக்கும். இங்கே ஆதித்ய என்பதற்கு, ஸூர்யனைப்போல் ப்ரகாசிக்கிறது என்பது பொருள். (அதி. 1—4—15.)

321. 'அபஶவோ வா அந்யே கோஅஶ்வேப்ய: பஶவோ கோஅஶ்வா:' என்று ஒரு வாக்யமிருக்கிறது. இதன் பொருள்—பசுமாட்டையும் குதிரையையும் காட்டிலும் வேறான பசுக்கள் பசுக்கள் அல்ல. பசுமாடுகளும் குதிரைகளும் தான் பசுக்கள்—என்பது. இங்கே பசு என்கிற பதத்துக்கு நான்கு கால் ப்ராணியென்பது பொருள். பசுமாடுகளையும் குதிரைகளையும் காட்டிலும் வேறான ஆடு முதலானவகளைப் பசுவல்ல என்று சொல்ல முடியாது. ஆகையால் பசு என்கிற சொல்லுக்கு ச்லாக்யமான பசு என்று தான் பொருள். (அதி.—1—4—16)

322. 'வத்ஸமாலபேத' என்று ஒரு வாக்யமிருக்கிறது. வத்ஸம் என்றால் கன்றுக்குட்டி. 'ஆலபேத' என்பதற்குக் கொல்லவேண்டும் என்றும், தொடவேண்டும் என்றும் பொருள் கொள்ளலாம். இங்கே வேறு கர்மம் விதிக்கப்படுகிறதா ? அல்லது விதிக்கப்பட்ட கர்மத்துக்கு ஒரு குணம் விதிக்கப்படுகிறதா ? என்று ஸந்தேஹம். வத்ஸம் என்கிற த்ரவ்யமிருந்தாலும் தேவதையில்லை. ஆகையால் கர்மம் விதிக்கப்படவில்லை. இந்த வாக்யம் அக்னிஹோத்ரம் செய்வதற்காக மாடுகறக்கிற ப்ரகரணத்தில் படிக்கப்பட்டிருக்கிறது. அங்கே அனேக ஸம்ஸ்காரங்கள் சொல்லப்படுகின்றன. அவைகளைப்போலவே இந்த வாக்யம் சொல்வதும் ஒரு ஸம்ஸ்காரம் என்பது ஏற்படுகிறது. அப்போது 'ஆலபேத' என்கிற பதத்துக்குத் தொடவேண்டும் என்பது பொருள். இந்த ந்யாயத்துக்கு ப்ராயபாடம் என்று பெயர். [அதி—2—3—6]

323. 'அதஸ்தாத் ஸமிதம் தாரயந் அநுத்ரவேத் உபரி ஹி தேவேப்யோ தாரயதி' என்று ஒரு வாக்யம். இதின் பொருள்—ஸ்ருக்தண்டத்தின்

கீழ் ஸமித்தை வைத்துக்கொண்டு போகவேண்டும். தேவகார்யங்களில் அன்றே அதை மேலே வைத்து கொள்ளவேண்டும்—என்பது. இங்கே இரண்டாவது வாக்யம் அர்த்தவாதமா ? விதியா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்—முதல் வாக்யத்தில் சொன்ன விதியை இரண்டாவது வாக்யம் ஸ்தோத்ரம் பண்ணுகிறது. இதற்கு அடையாளம் அதிலிருக்கிற "ஹி" என்ற பதம். "ஹி" என்பது அர்த்தவாதத்தைக் காட்டுகிறதென்பதை எல்லாரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

ஸித்தாந்தம்—தேவகார்யங்களில் ஸமித்தை ஸ்ருக்தண்டத்துக்கு மேலே வைத்துக்கொண்டிருப்பது வேறு விதியால் ஏற்படவில்லை. ஆகையால் அதை வேறு விதியாக வைத்துக்கொள்ளவேண்டும். அதற்கு விரோதமான 'ஹி' என்னும் பதத்தைக் கவனிக்கவேண்டியதில்லை. [அதி—3—4—5]

324. 'ப்ரைது ஹோதுஶ்சமஸ:, ப்ர ப்ரஹ்மண: ப்ரோத்காத்ரூணாம்' என்று ஒரு வாக்யம். இதின் பொருள்—ஹோதாவின் சமஸம் ஸதஸ்ஸுக்குப் போகட்டும். ப்ரம்மாவின் சமஸமும் உத்காத்ருக்களின் சமஸமும்—என்பது. ஸோமரஸத்தைச் சமஸங்களில் வைத்துக்கொண்டு கொஞ்சம் ஹோமஞ்செய்து பாக்கியை ஸதஸுக்குக் கொண்டுபோய் மீதி ரஸத்தைப் பக்ஷணம் செய்யவேண்டும். அவைகளில் உத்காதாவின் சமஸம் ஒன்று. இங்கே ஸந்தேஹம். இதிலிருக்கும் ஸோமரஸத்தை உத்காதா மாத்ரம் பக்ஷணம் பண்ணவேண்டியதா ? அல்லது அவன் கணத்தில் சேர்ந்த மற்ற மூன்று பேர்களும் கூடவா ? அல்லது பதினாறு ருத்துவிக்குகளும் பக்ஷணம் பண்ணவேண்டியதா ? என்று.

பூர்வபக்ஷம்—உத்காதா என்னும் பதம் ஸாமத்தில் உத்கீத மென்கிற பாகத்தைக் கானம் பண்ணுகிற ஒருவனையே சொல்லுகிறது. ஆகையால் அவனொருவனே பக்ஷணம் பண்ணவேண்டும். 'உத்காத்ரூணாம்' என்கிற பதத்திலிருக்கிற பஹுவசனத்தைக் கவனிக்கவேண்டியதில்லை.

இரண்டாவது பக்ஷம்—இது பிசகு. பஹு வசனத்தைக் கவனிக்க வேண்டும். ஆகையால் உத்காதாஎன்கிற பதத்துக்கு ரூடியான அர்த்தத்தை விட்டு விட்டு, யாகத்தில்-சேர்ந்த பதினாறு ருத்துவித்துக்குகளும் ஸோம ரஸத்தைப் பக்ஷணம் பண்ணவேண்டியதென்றும், உத்காதா என்றபதம் உபலக்ஷணமாயிருந்து அவர்களைச் சொல்லுகிறது என்றும் கொள்ள வேண்டும்.

ஸித்தாந்தம்-இதுவும் பிசகு. "உத்காதா" என்கிற பதத்துக்கு உயர்ந்த குரலோடு கானம் பண்ணுகிறவர்கள் என்று தான் பொருள் கொள்ளவேண்

டும். அப்போது உத்காதா தவிர அந்தக் கணத்தில் கூட்டத்தில் சேர்ந்த மூன்று பேர்களும் உத்காதாவோடு கூட ஸோமரஸத்தைப் பக்ஷணம் பண்ணவேண்டும். கானம் பண்ணுவது நான்கு பேர்களுக்கும் அஸாதாரண ஆகாரம். ருத்விக்குகளாயிருப்பது அவர்களுக்கும் மற்ற பன்னிருவர்களுக்கும் பொதுவான ஆகாரம். ஒரு பதத்துக்கு யோகத்தினுல் அர்த்தம் பண்ணும்போது பொதுவான ஆகாரத்தை விட்டு விசேஷமான ஆகாரத்தையே யெடுத்துக் கொள்ளவேண்டும். இந்த நான்கு பேர்களில் ஸுப்ரமண்யன் என்பவனுக்குப் பக்ஷணம் கிடையாது என்று வார்த்திகாரர் அபிப்ராயம்; ஏனென்றுல் அவனுக்கு ஸதஸ்ஸில் இடம் கிடையாது. [அதி—3—5—8]

325. 'ஸர்வே வா ஏதஸ்ய ஹாரியோஜநஸ்ய ஸவ-ே வாவ ஶ்ரீஸஜேஷ' என்று ஒரு வாக்யம். இங்கே ஸோமயாகம் முடியுங்காலத்தில் எல்லா ஸோமரஸத்தையும் த்ரோணகலசத்தில் எடுத்துக்கொண்டு உந்நேதா அதை ஹோமஞ் செய்யவேண்டும். இந்த ரஸத்தை க்ரஹிக்கிற மந்திரத்தைக் கொண்டு இதற்கு ஹாரியோஜனம் என்று பெயர் வந்திருக்கிறது. வாக்யத்திற்குப் பொருள்: இந்த ஹாரியோஜனத்தை எல்லாரும் அடைய ஆசைப்படுகிறுர்கள்—என்பது. இங்கே ஸந்தேஹம். இதைச் சமஸிகள் மாத்ரம் பக்ஷணம் செய்யவேண்டியதா ?

பூர்வபக்ஷம்—'ஸர்வே' என்ற பதத்துக்கு எல்லாரும் என்று பொருள். முன் வாக்யத்தில் சமஸிகள் (அதாவது சமஸமுள்ளவர்கள்) சொல்லப்படுகிறுர்கள். ஆகையால் ஸர்வே என்கிற பதத்தின் பொருளைச் சுருக்கி சமஸிகள் தாம் பாக்கி ரஸத்தைப் பக்ஷணம் பண்ணவேண்டியது. ஆகையால் க்ராவஸ்துத் என்பவனுக்கு இந்த ரஸபக்ஷணம் கிடையாது என்று.

ஸித்தாந்தம்—இது கூடாது. 'ஸர்வ' என்பதாலும், 'ஸவ-ே வாவ' என்கிற விடத்தில் 'வாவ' என்பதாலும், சமஸிகளுக்கு மாத்ரம் என்கிற ஸந்தேஹம் போக்கப்படுகிறது. விசாரிக்கிற வாக்யத்தில் வாக்யம் என்கிற ப்ரமாணத்தாலே எல்லாருக்கும் அதிகாரமுண்டு. இங்கே யொரு கேள்வி. 'ஸவ-ே' என்பதற்கு எல்லாரும் என்று பொருள். ஆகையால் யாகத்தைப் பார்க்க வந்திருக்கிற எல்லாருக்கும் பக்ஷணத்தில் அதிகாரமில்லையா என்று. பதில்—அவர்களுக்கும் ரஸத்துக்கும் ஸம்பந்தமே கிடையாது. ஆகையால் இந்தப் பதத்தின் அர்த்தத்தை ஸங்கோசம் பண்ணவேண்டும். அப்போது யாகம் செய்துகொண்டிருக்கிற க்ராவஸ்துத் உள்பட' பதினுறு ருத்துவிக்குகள் எல்லாருக்கும் பக்ஷணத்தில் அதிகாரமுண்டு. [அதி—3-5-]

(326) 'அக்நீஷோமீயம் பஶுமாலபேத' என்று ஒருவாக்யம். அதின் பொருள்—அக்னீஷோம தேவதைகளுக்குக் கொடுக்கவேண்டிய பசுவை ஆலம்பனம் செய்யவேண்டும் என்பது. இங்கே பசு என்பது வெள்ளாடா அல்லது வேறு எந்தப் பசுவாகவாவ திருக்கலாமா ? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்—இன்னதென்று விசேஷித்துச் சொல்லாமையாலே எந்தப் பசுவையும் வைத்துக்கொண்டு யாகத்தைச் செய்யலாம்.

ஸித்தாந்தம்—அத்வர்யு பசுவின் வகையை எடுக்கும்போது ஹோதாவைப் பார்த்து ஒரு மந்திரம் சொல்லுகிறுன். அதாவது—'சாகஸ்ய வபாயா மேதஸோ(அ)நுப்ரூஹி" என்பது. இதன் பொருள்—சாகத்தினுடைய மேதஸ்ஸாகிய வபையைத் தேவதைகளுக்கு கொடுப்பதற்காகப் பொருத்தமுள்ள மந்திரத்தைச் சொல் என்பது. சாகம் என்பது வெள்ளாடு. இந்த இரண்டு வாக்யமும் ஒரே ப்ரகரணத்திலிருப்பதால் பசு என்கிற பொதுவான பதம் சாகம் என்கிற விசேஷத்தையே சொல்லுகிறது. ஆகையால் சாகத்தை ஆலம்பனம் செய்யவேண்டும். இந்த ந்யாயத்துக்கு ஸாமான்ய விசேஷ ந்யாயம் என்று பெயர். [அதி—6-8-9]

இந்த ஸங்க்ரஹத்தில் எழுதியிருக்கிற அதிகரணங்களைத் தவிர மற்ற அதிகரணங்கள் யாகவிஷயமான விசாரங்களைச் செய்கின்றன. அவச்யம் அறியவேண்டிய ந்யாயங்களை இந்த ஸங்க்ரஹத்தை கொண்டே அறியலாம். மீமாம்ஸா ஸங்க்ரஹம் முற்றிற்று.

ஸ்ரீமதே வேதாந்தராமாநுஜமஹாதேஶிகாய நம: ॥

மதிப்புரை

இதிஹாஸ ரத்ந மாலா—ரத்நம் 1.

ஸ்ரீ ஸீதா கல்யாணம்:—இது, திருச்சி ஸ்ரீ. உ.ப. பார்த்தஸகன் அவர்களால் இயற்றப்பட்டு, ஸ்ரீரங்கம் ஸ்ரீராம பிரசுராலயத்தில் பதிப்பிக்கப்பட்டது. இதன் விலை அணு 0-4-0.

இச்சிறு நூல், திருச்சி நகரத்தில் புத்தக ப்ரசுரங்கள் செய்துவரும் ஸ்ரீ. உ.ப. ஏ. ஆர். ராஜகோபால அய்யங்காரால் ஸ்ரீ. உ.ப. பார்த்தஸகன் அவர்களைக் கொண்டு எழுதப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இதிஹாஸ ரத்நமாலாவில் முதல் புத்தகத்தின் கதை, ஸ்ரீராம ஜநநம் முதல் ஸீதா கல்யாணம் முடிந்து ஸ்ரீ ராமபிரான் அயோத்தி போய்ச்சேருமளவும். கம்பராமாயணச் செய்யுளை யொட்டி,இது மிகவும் அழகான எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது. ஸ்த்ரீகளுக்கும், பாலர்களுக்கும், ஸம்ஸ்க்ருதம் தமிழ் முதலிய பாஷைகளில் அதிக பாண்டித்யம் இல்லாதவர்க்கும், இது மிகவும் உபயோகமாயிருக்கும். இவ்வளவு குறைந்த விலையில் இந்த ரத்நமாலாவில் இன்னும் அநேக ஸ்ரீ ராமாயண கதைகள் சீக்ரத்தில் வெளிவருமென்று எதிர்பார்க்கிறேம். இது எல்லாராலும் ஆதரிக்கத்தக்கது.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

விவாத பாகம்

'அத்யமே' ச்லோகார்த்த விமர்சம்

[கோயமுத்தூர் வக்கீல், ஸ்ரீ. உ. வே. திருமலை நல்லான் சக்ரவர்த்தி V. R. ஸ்ரீசைல சக்ரவர்த்யாசார்யர் B. A.]

['அத்யமே' என்கிற ச்லோகத்தைப் பற்றின விவாதம் முடிவில்லா, விவாதமாகத் தோன்றினதாலும், ஏற்கெனவே இரண்டு கக்ஷிகளும் அதை பற்றி அவச்யமான அளவு செவ்வனே சொல்லியிருப்பதாலும், இனி அதை பற்றிய விவாத விஷயமான லிகிதங்களை மேன்மேலும் ப்ரசுரப்படுத் வேண்டாமென்று ஒருவாறு நிர்ணயித்திருந்தோம். ஆயினும் இது விஷ மாய் ஸ்ரீ. உப. ஸ்ரீசைல சக்ரவர்த்தி ஸ்வாமி, அடியில் ப்ரசுரிக்கப்பட்டுள்ள லிகிதத்தை எழுதி யனுப்பி யிருப்பதையும், அந்த ஸ்வாமியின் பாண்டி யத்தையும் தகைமையையும் யோசித்து இது ப்ரசுரப்படுத்தலாயிற்று இனி இந்த விஷயமாய்ப் பத்ரிகையில் இடமில்லாத காரணத்தை யோசித்தாவது வேறொன்றும் எழுதி ப்ரசுரப்படுத்தவேண்டா மென்கி விஷயம் விஜ்ஞாபிக்கப்படுகிறது.—ப.]

அடியேன் நெடுநாளாக 'அத்யமே' ச்லோக விஷயமாய்த் தில வ்யாக்யாநத்திலும், 'யானொட்டி' என்கிற பாசுர ஈட்டின் பங்க்தியிலும் அரும்பதக்காரரது உரையிலும், அத்ருப்தியும் அஸமாதாநமும் விஞ் 'ஸ்வரஸமும் ப்ரகரணாநுகுணமுமான க்ரமாந்வயத்தை விட்டு, அஸ்வர மும் ப்ரகரண விருத்தமுமான அர்த்தத்தை ஸ்வீகரித்துப் பூர்விகர்க ஏன் க்லேசப்பட்டுப் போந்தார்கள்?' என்று மனக்கலக்கத்துடன் குழம் யிருந்தேன். முந்துற முன்னம் ஸ்ரீ. உப. அண்ணா ஸ்வாமியின் திவ்யார்த் தீபிகையில் 'யானொட்டி' என்கிற பாசுர வ்யாக்யாநத்தில் ஈட்டின் பங் தியை வெகு அழகாகத் திருத்தி, பாசுரத்திற்கும் ஸ்ரீ ராமாயண ப்ரகரண திற்கும் சேரும்படி செய்திருக்கும் ச்லோக நிரூபணத்தால் கலங்கா தெளிவு பெற்றேன்.

இந்த ஶ்லோகம் பெருமாள் செய்த சரணாகதி ப்ரகரணத்திலுள்ள தென்பது பூர்வாசார்யர்களின் ஸ்ரீ ஸூக்திகளால் தெற்றென விளங்கும் இப்ரகரணத்திலுள்ள பல பதங்கள் நன்கு கவனிக்கத்தக்கவை.

"உத்தாநாஸீந—அஞ்ஜலிம் ப்ராங்முக: க்ருத்வா—ப்ரதிசிச்யே ஸ விநயஜ்ஞ ப்ரயதோ நியதோ முநி:—நியமாத்வ்ரதஸ்ய... நயஜ்ஞோ தர்மவத்ஸல:—உபாஸத ததா ராமஸ் ஸாகரம்... ப்ரயதேநாபி ராமேண யதார்ஹமபி பூஜித: ॥"

இத்யாதி மூலஸ்த பதங்களையும்,

"ராகவ: ஸர்வசரண்ய: ஸுஹ்ருத்ஸமேத:, விநயஜ்ஞ:=ஸாஷ்டாங்கப் ரீத்யா, ப்ரயத:=காயிகநியமயுக்த:, நியத:=வாசிகநியமவாந், முநி:= மாநஸநியமோபேதஸ்ஸந்; அநுவ்ருத்தநியமஸ்ய த்ரிஷ்வபி ராத்ரிஷு உபாஸநமவிச்சிந்நத்வாத்—ஸர்வசக்த: க்ருத ஏவம் நிஷ்டய: இத்யாசங்க்ய தர்மவத்ஸலத்வாந்நாயமதிக்ராமதீதி—தர்மவத்ஸல:=ஸாம ணாமதி யஸ்ய ஸ: இதி பாவ: ॥"

இத்யாதி கோவிந்தராஜ வ்யாக்யாந பதங்களையும் பராமர்சிக்கும்போது, பெருமாள் கபடமாக வன்றிக்கே த்ரிகரண சுத்தராய், ஆநுகூல்ய ஸங்கல் பாதிகளான அங்கங்களோடு அல்லது ஸம்பாவித ஸ்வபாவங்களோடு கூடியவராய், கடலரசனுடைய ப்ரஸாதத்திற்காக அவனைத் தேவதையாக உபாஸித்தார் என்கிற அர்த்தம் நன்கு விளங்குகிறது. 'உபாஸத' என் கிற பதம் நன்கு கவனிக்கத்தக்கது. உபாஸநமாவது தேவதாதி மஹநீய ப்ரீதிஜநக வ்யாபார விசேஷம். இங்கு ஸமுத்ர ப்ரீதி ஸாத்ய ஸமுத்ர தர ணம் ஃபலம். எவ்விடத்திலும் உபாஸ்யனுடைய ப்ரீதியின் பொருட்டு அவனை நன்கு அநுவர்த்திப்பதே உபாஸகனுடைய க்ருத்யமாகும். உபா ஸகன் உபாஸ்யனுடைய அபிப்ராயத்துக்கு விரோதமாக ஒருக்காலும் நடக்கமாட்டான். உபாஸ்யனுக்கு எவ்வித கெடுதலையும் ஸ்வப்நத்தில் கன விலும் கருதமாட்டான்; கபடமான எண்ணமும் கொள்ளான்.

"ராமோ ராஜ்யமுபாஸித்வா ப்ரஹ்மலோகம் கமிஷ்யதி"

என்கிற விடத்திலும் வெகு அழகாக பதம் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது. "ப்ரஜைகள் எக்கேடு கெட்டாலும் கெடட்டும். நமக்கென்ன? நம்முடைய வரும்படியும் அதிகாரவல்லமையுமே நமக்கு வேண்டுவது. ப்ரஜைகள் அர சாட்சி முறையில் ஏதாவது அத்ருப்தியை வெளியிட்டால் அவர்களை அடக் கும் முறையில் அடக்கி நம் உத்தேச்யத்தை ஸாதித்துக்கொள்வோம்" என்று அரசாட்சி புரியும் மன்னர்கள் போலன்றிக்கே, 'ஸ்ரீ ராமபிரான், தான் தாழ்ந்தவன் ப்ரஜைகள் மேலானவர்கள்' என்னும் எண்ணத்துடன், தனக்கு மேலான தேவர்களை உபாஸிப்பதுபோல் ப்ரஜைகளை உபா ஸித்து, ப்ரஜைகளின் ப்ரீதியையே பலமாகக் கொண்டு, அவர்கள் மனம்

கோனுமலும், அவர்களுக்குக் கனவிலும் கெடுதல் நினையாமலும், செய்யாமலும் அரசு புரிவார் என்னும் அர்த்தத்தை உள்ளடக்கி ஸ்ரீ கோவிந்த ராஜரும்,

"सांकल्पिकं जनानन्दतन्त्रेण वरिवस्यत्ययमः"

என்று சுருங்க வ்யாக்யாநம் அருளிச்செய்தார். ஆகவே இங்கும், தர்மஜ்ஞனான பகவான், ஸமுத்ர ராஜனுடைய ப்ரஸாதத்திற்காக அவனை உபாஸித்தார் என்று சொல்லப்பட்டிருப்பதால், 'மூன்று நாள் இடைவிடாமல் உபாஸிக்கும்போது கடலரசன் நேர்படாவிடில் அவனை முடிப்பேன்' என்கிற எண்ணம் பெருமாளுக்கு இருந்திருக்க முடியாது. மேலும் ஶரணாகத ஸம்ரக்ஷண லக்ஷண தர்ம ப்ரவர்த்தநத்திற்காக ஸர்வசரண்ய குலத்தில் அவதரித்தவரும், தர்ம வத்ஸலரும், சரணாகதி தர்மத்தில் ப்ரீதியுள்ளவருமான பெருமாள் தார்மிக வேஷம் பூண்டு கபடமாக,

"उदवस्य च वधस्य च कश्मण्यदृष्टान्ताम्"

என்றிருக்கும் துராத்மாக்கள் போல், 'கடலை முடிப்பேன்' என்கிற எண்ணத்துடன் சரணாகதி செய்தார் என்றும், இந்தக் கபட தர்மத்தையே உலகத்தார் அநுஷ்டிக்குமாறு தாம் நடத்திக் காட்டினார் என்றும், தர்ம வத்ஸலனுக்குத் தர்மாபாஸத்தில் ருசி யிருந்ததென்றும், அப்ரச்யுத நியமராகவே மாநஸ நியமமில்லாமல் சரணாகதி செய்தார் என்றும் சொல்லுவது மிகவும் அஸங்கதம். அப்படியிருக்க: சரணாகதி காலத்திலேயே ஸமுத்ரமாரணத்தைப் பெருமாள் ஸங்கல்பித்தார் என்று ஶ்லோகத்தை வ்யுத்க்ரமமாக அந்வயித்து அர்த்தம் சொல்லுவது சரணாகதி ப்ரகரணத்திற்கும், பெருமாளின் ஆர்ஜவத்துக்கும், அவரது தர்ம ப்ரவர்த்தநத்திற்கும், ப்ராக்ருதாபிஸந்திக்கும் சிறிதும் சேராது. இந்த ச்லோகத்துக்கு மேல்,

"प्रशमश्च क्षमा चैव आर्जवं... असामर्थ्यं फलन्त्येते"

என்று இளைய பெருமாளைப் பார்த்துச் சொல்லும் வாக்யத்தினாலும், சரணாகதி காலத்தில் பெருமாளுக்குக் கௌடில்ய லேசமும் ஸர்வதா இருந்திருக்க முடியாதென்று நன்கு விளங்குகிறது. பின்பு அஜ்ஞனான கடலரசன் வரக் காணாமையால், பிறகு அக்காரணத்தால் பெருமாள் சற்று சீற்றம் கொண்டார் என்று சொல்லப்பட்டிருப்பதால், சரணாகதி காலத்தில் 'இதை முடிப்பேன்' என்று சொல்வதற்குக் காரணமான கோபத்திற்கு ப்ரஸக்தியே யில்லை.

இந்த ஶ்லோகத்தில் விகல்பம் த்விகோடிகம். அந்யோந்ய வ்யாவர்த்தகங்களான (mutually exclusive) இரண்டு ஸம்பவங்களில் ஒன்று அவசியம் நேர்ந்தே தீரும் என்பது பெருமாளுக்கு விவக்ஷிதம்.

"कामसंस्थे बलवेल्व अयि वा प्रतिपद्यतः ।
... वा सर्वलोकस्य विशीर्यन्त वसुन्धरा ॥"
"अरावणमरामं वा"

இத்யாதி ஸ்தலங்களிற்போல் இரண்டில் ஒன்று அவசியம் நேரும். எல்லா ஜனங்களுடைய தலைமே லிருக்கவேண்டும்; அல்லது வநத்தில் பூப்போல் வாடி யழியவேண்டும். ஒன்று நேர்ந்தால் மற்றொன்று நேர முடியாது. ஜநங்கள் தலைமே லிருந்தால் வநத்தில் அழியாது. வநத்திலேயே அழியுமானால் அவர்கள் முடிமேல் ஏறாது. இரண்டில் ஒன்றுதான் ஸம்பவிக்கும். மூன்றாவது இல்லை. இரண்டும் சேர்ந்து ஸம்பவிப்பது மில்லை. ஏனெனில்: அவைகள் பரஸ்பர விருத்தங்கள். இது விகல்பத்தின் ஸ்வரூபம். விகல்பாலங்காரத்துக்கு லக்ஷணம் கூறிய ஆலங்காரிகர்களும்,

"विरोधे तुल्यबलयोः विकल्पालंकृतिर्मता ॥"

என்றார்கள். ஸம பலமுள்ள இரண்டு விஷயங்களுக்கு விரோத மிருந்தால், அவைகளில் ஒன்று நேருமென்று சொல்வது விகல்பமென்னும் அலங்காரமாகும்.

"सद्यः शिरांसि चापान्वा नमयन्तु महीभुजः ॥"

[உடனே தலைகளையோ விற்களையோ வளைக்கட்டும்] என்று ஓரரசன் மற்ற அரசர்களுக்குத் தூது அனுப்புகிறான்.

"अत्र सन्धिविग्रहपूर्वकयोः शिरश्चापनमनयोः युगपदसम्भवतयोः युगपच्च कर्तुमशक्ययोः विकल्पः"

இரண்டும் சேர்ந்து ஸம்பவிக்க முடியாத பரஸ்பர விருத்தமான இரண்டு விஷயங்களைச் சொல்லுவது விகல்பாலங்காரம் என்று வ்யாக்யானிக்கப்பட்டிருக்கிறது.

"पतत्यविरतं वारि नृत्यन्ति च कलापिनः ।
अद्य कान्तः कृतान्तो वा दुःखस्यान्तं करिष्यति ॥"

விரஹமடைந்த ஒரு ஸ்த்ரீ பேசும் பேச்சு இது. 'இடைவிடாமல் மழை பெய்கிறது. மயில்கள் கூத்தாடுகின்றன. என் துக்கத்தைப் போக்கவல்லவர் என் நாயகன் அல்லது யமன். நாயகன் வந்து சேர்ந்தால் எனக்கு மரணமில்லை. நாயகன் வாராவிடில் மரணமே. மரணமானால் நாயக ஸமாகம

மில்லை' யென்று விகல்பஸ்வாராஸ்யம் சொல்லப்பட்டிருக்கிறது. அதுபோல் இங்கும் 'கடலரசனுடைய ப்ரஸாதத்தால் கடலை நான் கடப்பது ; இல்லாவிடில் நான் மரணமடைவது ; ஒன்று நேர்ந்தால் மற்றொன்றில்லை' என்கிற அர்த்தம் ஸ்வரஸமாக யதாஸ்ருதாந்வயத்தில் ஏற்படுகிறது. அதனால் விகல்ப ஸ்வாரஸ்ய முண்டு. வ்யுத்க்ரமாந்வயத்திலோ வென்றால் விகல்ப ஸ்வாரஸ்ய லேசமுமில்லை. ப்ரத்யுத: 'வா' பத வையர்த்யம் வருகிறது.

'அத்ய மே தரணம் வா ஸாகரஸ்ய மரணம் வா பவிதா'

என்று அந்வயித்து மரண பதத்திற்கு மாரணம் என்கிற ணிஜார்த்தத்தை ஔபசாரிகமாகக் கல்பித்து, க்லேசப்பட்டு அடைந்த அர்த்தத்தில் என்ன ஸ்வாரஸ்யம் ? 'நான் கடலை வற்றடித்துக் கொல்வேன் ; அல்லது நான் அதைக் கடப்பேன்' என்று சொல்லும்போது, வற்றடித்தல் கடப்பதற்கு விரோதமன்றிக்கே யிருப்பதோடு, ப்ரத்யுத அதற்கு ஸாதநமாயிருப்பதால் இரண்டும் சேர்ந்தே ஸம்பவிக்கும். ஆதலால் 'வா' என்கிற பதஸ்வாரஸ்ய லேசமும் இந்த வ்யுத்க்ரமாந்வயத்தில் கிடைப்பதில்லை. இல்லாத பதங்களை அத்யாஹரித்துக்கொண்டு ஸ்வாரஸ்யத்தைக் கல்பிக்கவும் முடியாது. அத்யாஹாரத்துக்கு ஆவஶ்யகதையுமில்லை ; ப்ரஸக்தியுமில்லை. ஆகையால் வ்யுத்க்ரமாந்வயத்தில் கிடைக்கும் அர்த்தம வால்மீகி ஹ்ருதயமல்லாததால் ஸஹ்ருதய ஹ்ருதயங்கம மாகாது.

ஸ்ரீ கோவிந்தராஜருடைய பூர்வாபர வ்யாக்யாந பங்க்திகளைப் பராமர்சித்தால், அவருடைய அந்வயத்தை க்ரமிகாந்வயமாகக் கொள்ளலாம். 'அத்ய மே' என்பதற்குப் பிறகு ஒரு 'கமா' கொடுத்து, 'தரணம் ஸாகரஸ்ய' என்பதற்குப் பிறகும் ஒரு 'கமா' கொடுத்து, 'மரணம் வா பவிதா' என்று படித்தால் 'இன்று எனக்குக் கடலைக் கடத்தலோ (அதில்லாவிடில்) மரணமோ நேரும்' என்கிற அர்த்தம் கிடைக்கும். ஆனால் அரும்பதக்காரருடைய பங்க்தியை அங்ஙனம் யோஜிக்க முடியாது. ஏனெனில்: அவர் "ஸாவமாநய இத்யாதியைக் கடாக்ஷித்து இப்படி யோஜித்தது" என்று 'உத்க்ருஷ்ட ஸாகரமரணம் வா உத்க்ருஷ்டஸாகர தரணம் வா' என்பதை விவக்ஷிதமாகக் காட்டியிருக்கிறார்.

வ்யுத்க்ரமாந்வயத்திலுள்ள அநுபபத்திகளைப் பராமர்சித்து "இத்தை முடித்தல்" என்பது நம்பிள்ளை திருவுள்ளமாயிருக்க முடியாதென்றும், 'அத்ய' என்பதின் தர்ஜிமாவாக 'இற்றை' என்றும், 'மே மரணம்' என்பதற்கு முடிதல் என்று ஈட்டின் பங்க்தி யிருக்கவேண்டு மென்றும், ஓலைச்சுவடிகளிலும் அச்சுப் புஸ்தகங்களிலும் பிழைகள் வந்திருப்பதற்குக் காரணங்களையும், வெகு அழகாக உபபாதநம் செய்து, ஸ்ரீ: அண்ணா ஸ்வாமி தம்முடைய அத்புத ஆராய்ச்சியை வெளியிட்டிருக்கிறார்.

ஸ்ரீ நிகமாந்த மஹா தேஶிகாய நம:

ஸ்ரீ தேசிகன் திருவவதார வைபவம்

பம்பாயில் கொண்டாடிய விவரம்

ஸ்ரீ நிகமாந்த மகா தேசிகன் திருவவதார வைபவம் பம்பாய் (மாட்டுங்காவில்) வெகு விபவமாகக் கொண்டாடப்பெற்றது. சென்ற ஐந்து ஆண்டுகளாக, ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸபையின் ஆதரவில் இவ்வுற்சவம் வெகு விமரிசையுடன் கண்டவர் ஆச்சர்யப்படும்படி பத்து தினங்களில் நாலாயிர திவ்யபிரபந்த ஸேவையும், ஸ்தோத்திர பாடல்களும் கோஷ்டியும் நடைபெற்றதுண்டு. இவ்வருஷம் ஷை ஸபை மெம்பர்களின் அஸ்ரத்தையின் காரணத்தால் இவ்வுற்சவம் ஒரு தினம் தான் (அதாவது: 27-9-'36) நடைபெற்றது. அன்று காற்று மழை. ஸ்ரீமான் ஸ்ரீரங்கராஜ அய்யங்கார் ஸ்வாமியின் பெரு முயற்சியாலும், அவருக்கு ஸ்ரீ தேசிகனிடத்திலுள்ள பக்தி ப்ராவண்யத்தாலுமே இவ்வவதார உற்சவம் நிகழ்ந்தது. அன்னார் இன்னும் சிறிது முயற்சி எடுத்துக்கொண்டிருந்தால், பத்து தினங்களும் மிகவும் கம்பீரமாய் உத்ஸவத்தைக் கொண்டாடி யிருக்கலாம். ஸ்ரீமான் பீ. பீ. ராஜகோபால அய்யங்கார் ஸேவாகால விஷயத்தில் புரிந்த உதவி மறக்கற்பாலதன்று. மற்று முள்ளோர் அனைவரும் எழுந்தருளியிருந்து, காலை முதல் கோஷ்டி ஸேவையும், திருவாராதனமும், பின்னர் சாற்றுமுறையும், ஸ்தோத்திர பாடமும், பகல் சுமார் ஒருமணி வரையில் நடைபெற்றன. இவற்றுக்கெல்லாம் ஸ்ரீ தேசிகனிடத்திலுள்ள பரம பக்தியே காரணமாகுமன்றோ ? இனிமேலாவது, மாட்டுங்காவிலுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்கள் முன்வந்து, ஸபையை அபிவிர்த்தி செய்வதோடு, வேதாந்த தீபிகையின் பெருமையையும் பரவச்செய்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

C. P. ராஜகோபாலன்.

ஸ்ரீ:

ஸ்ரீ வரதராஜ பஞ்சாசத்

[ஸ்ரீ. உப. ஏ. வி. கோபாலாசார்யர் M. A., B. L., அட்வொகேட்,
திருச்சி.]

விச்வாதிசாயி ஸுகரூப யதாத்மகஸ்த்வம்
வ்யக்திம் கரீச கதயந்தி ததாத்மிகாம் தே ।
யேநாதிரோஹதி மதிஸ்து உபாஸகாநாம்
ஸா கிம் த்வமேவ தவ வேதி விதர்க்கடோலா ॥ 17 ॥

கரீச–ஆனைமலைக்கரசே! விச்வாதிசாயிஸுகரூப–எல்லாவற்றிற்கும் மேற்பட்ட ஆநந்த ஸ்வரூபமானவரே! (ஆநந்தத் திருமேனியுடையவரே) த்வம்–நீர், யதாத்மக:–எந்த ஸ்வரூபத்தையுடையவரோ, தே–உம்முடைய, வ்யக்திம்–ஆவிர்ப்பாவமான திருமேனியை, ததாத்மிகாம்–அதே ஸ்வபாவமுடையதாக, கதயந்தி–சொல்லுகிறார்கள்; யேந–எந்தக் காரணத்தால், உபாஸகாநாம்–உம்மை உபாஸிப்பவர்களுடைய, மதி–புத்தி, ஸா–அந்த திருமேனியானது, த்வமேவ கிம்–நீரேதானு, தவ வா கிம்–அல்லது உம்முடையதா, இதி–என்று, விதர்க்கடோலாம்–ஊசலாட்டத்தை ஸம்சயத்தை, அதிரோஹதி–ஏறுகிறது (அடைகிறது.)

அவ:—(1) திவ்யாத்ம ஸ்வரூபத்தை த்யாநம் செய்பவர் புண்யவான்கள் என்றார். திவ்யாத்ம ஸ்வரூபத்தை த்யாநம் செய்ய சுபாச்ரயமான திவ்ய மங்கள விக்ரஹத்தின் உதவி வேண்டுமே. சுபாச்ரயமான திருமேனியை முதலில் த்யாநத்திற்கு ஆலம்பநமாகக் கொள்ளவேண்டுமே. முதலிலேயே ஸ்வரூப த்யாநத்தில் இறங்கக்கூடுமோ? சரணாகதி தீபிகையிலும் ஸங்கல்ப ஸூர்யோதயத்திலும் ஸாலம்பந த்யாநத்தின் அப்யாஸத்தால் ஸ்வரூப த்யாநம் எளிதாகலாம் என்றுளது.

2. பவத: ஸ்வரூபம்—உம்முடைய ஸ்வரூபத்தை த்யாநம் செய்கிறார்கள் என்றீரே. நான் வேறு, ஸ்வரூபம் வேறு? 'உம்முடைய' என்கிற ஆறும் வேற்றுமைக்கு என்ன பொருள்? அபேதம் பொருள் என்று சொன்னால் 'உம்முடைய வ்யக்தி உம்முடைய திருமேனி' என்ற பேச்சில் ஆறும் வேற்றுமைக்கு அப்படியே அபேதம் பொருளா? அல்லது ஸ்வரூபம் வேறு விக்ரஹம் வேறு என்று பொருளா?

3. ஸ்ரீமத்வ மதத்தை எம்பெருமானார் தர்சநத்திற்கு ஸந்நிக்ருஷ்டம் (நெருங்கியது) என்று பேசியிருக்கிறீரே. அவர்கள் மதத்தில் எம்பெருமானுடைய ஸ்வரூபமே தான் திருமேனி; இரண்டும் வேறல்ல, ஒன்றே என்று சொல்லுகிறார்களே. உம்முடைய மதமும் அப்படியே தானே. ஜீவர்கள் விஷயத்தில் தேஹாத்மவாதம் கூடாது. ஈச்வரன் விஷயத்தில் மட்டும் கூடுமென்று சொல்லலாமோ? இப்படி சங்கைகள் வரக் கூறுகிறார். த்யாநதசையில் ஏற்படும் எல்லையில்லாத ஆநந்த பாரவச்யத்தில் ஸ்வரூபாநந்தாநுபவத்தினுல் உண்டாகும் ஆநந்தமா? திருமேனி அநுபவத்தாலுண்டாகும் ஆநந்தமா? என்று நிதானிக்கக் கூடவில்லையே ஸ்வாமி! ஸர்வாதிசாயியான ஸுகத்தில் மூழ்கியிருக்கும்போது ஒன்றோ வேறோ என்று பகுத்தறியத் திறமையில்லையே. நாங்கள் என்ன செய்வோம்? இரண்டும் ஸுஸத்ருசமாக ஏகரூபமாக இருப்பதால் எப்படி பிரித்து விவேகிக்கக்கூடும்? ஸ்வரூபமும் ப்ரஹ்மம். திருமேனியும் மூர்த்தமான (உருவெடுத்த) ப்ரஹ்மம். ஆநந்தமய பரஸ்வரூபத்திலும், ரூபம் இன்னு மதிகம் ப்ரியமான தென்பரே. இரண்டும் ஸ்வயம் ப்ரகாசம்; சுத்த ஸத்வம். நம் தர்சநத்தில் அதுவும் சேதநமென்று சொல்வதுண்டு. [illegible]யனும் பெருமாள் திருமேனி விஷயத்தில் தேஹாத்மவாதி யென்பர். 'உயர்வற வுயர் நலம்' என்று தொடங்கியதும் வரதனை வீக்ஷணம் செய்து தொடங்கியதாக ரத்நாவளியில் ஸாதித்ததை அநுஸரித்து, இந்த ச்லோகத்தில் 'உயர்வற வுயர்நல முடையவன்' என்பதற்கு, ஸம்ஸ்க்ருத ப்ரதிபதமாக 'விச்வாதிசாயிஸுகரூப' என்று இந்த ச்லோகத்தை ஆரம்பிக்கிறார்.

விச்வாதிசாயி ஸுகரூப—உம்முடைய திருமேனி எல்லாவற்றையும் அதிசயித்து ஆநந்தமயமானது. 'எல்லாவற்றையும்' என்பதால், பெருமாள் ஆநந்தமய ஸ்வரூபத்தைக் காட்டிலுங்கூட அதிசயிதமான ஆநந்தமானது. முன் ச்லோகத்தின் கடைசியில் ஆநந்தமயமானது உம்முடைய ஸ்வரூபம் என்று பேசிவிட்டு, அடுத்தபடி இங்கே துவக்கத்தில் எல்லாவற்றிலும் அதிசயித ஸுகமானது திருமேனி என்றதால் இது ஸ்பஷ்டம். "ஸர்வாதிசாயியான ஷாட்குண்யம் பகவத் பிம்பத்தில் நிலையுள்ளது' என்ற பாஞ்சராத்ர வசநத்தையும் இந்தப் பதத்தால் காட்டுகிறார். 'தஸ்ய விச்வரூபரூப்யம்' என்னும் வசநத்தையும் கூட்டிக்கொள்ள 'விச்வாதிசாயி' என்றது விச்வ விலக்ஷணம்.

யதாத்மகஸ்த்வம்—மூலவேத மென்னும் ஏகாயந சாகையிலுள்ள வசநத்தை அப்படியே இங்கே ச்லோகத்தில் அமைக்கிறார். 'யதாத்மகோ பகவாந் ததாத்மிகா வ்யக்தி:' என்று அங்கே யுள்ளது. உம்முடைய ஸ்வரூபம் யந்மயமோ தந்மயமே அவர் திருமேனியும். ஜ்ஞாநாநந்தஸாரர் பகவான்; திரு

மேனியும் அப்படியே. தே வ்யக்திம் = உம் உருவத்தை. கரீஶ — கரிமலைப் பெருமாள் திருமேனியும் அவ்வுருவமே.

ஸூரய: = (ஆசிரியர்கள்) சொல்லுகிறார்கள். வேத புருஷர் சொல்லுகிறார். தமிழ் வேதங்கள் சொல்கின்றன. உம்மால் ஸ்வயம் ப்ரோக்தமான ஆகமங்கள் சொல்லுகின்றன. நீரும் சொல்லுகிறீரென்று ஏற்படுகிறது. நீர் சொன்னதை நீர் ஆக்ஷேபிக்கலாமோ?

தாதாத்ம்யகம் — அந்த ஜ்ஞாநாநந்தங்களாலேயே அமைந்ததாக; அதே பொருளாக.

'தே' — உம்முடைய. 'ஸ்வம்' என்று முதல் பாத முடிவி லிருப்பதற்குத் தக்கபடி இரண்டாம் பாத முடிவில் 'தே' என்றார். உம் திருமேனி நீரே தானா அல்லது உம்முடையதா? என்று விசாரம். த்வம் ஆ? அல்லது தே யா? ஸா கிம் ஸ்வயமேவ அல்லது தவ வா? என்று விசாரம். இதற்குத் தக்கபடி பொருந்த 'தே வ்யக்தி:' என்பதைப் பிரித்து 'த்வம்' என்பதைப்போல் பாதமுடிவில் வைத்திருப்பது அழகு.

யேந — எந்தக் காரணத்தால். வேத புருஷனே இரண்டும் ஒரே பொருளால் (ஜ்ஞாநாநந்தப் பொருளால்) அமைந்தது என்று பணித்திருப்பதால், இரண்டும் ஒன்றா வேறா என்று முன்னும் பின்னுமாக புத்தி ஓடுவதற்கு இடமாகிறது.

அதிரோஹதி — ஏறுகிறது. ஸம்சயம் மேலே மேலே ஏறுகிறது; ஊசலி லேறுகிறது; ஏறி ஆடுகிறது.

புத்தி: — புத்தி. த்வதுபாஸகாநாம் — உம்மைப் பஜிப்பவர்களுக்குக் கிட்டே நெருங்க நெருங்க ஸுகம் அத்யந்த விபுலமாவதால் ஸம்சயம் அதிகமாகிறது. மெய் மறந்தபோது புத்தி வேலை செய்யுமோ?

ஸா — அந்த வ்யக்தியானது. (திருமேனியானது). 'கிம் ஸ்வயமேவ வா' நீரே தானா? ஶ்ருதியிலுள்ள 'கிம்' என்னும் பதத்தையும் ச்லோகத்தில் கூட்டுகிறார். 'கிம் தவ வா' அல்லது உம்முடையதா? இதி — என்று.

விதநோதி டோலாம் — ஊசலாட்டத்தை. (இப்படியா அப்படியா என்கிற இரண்டு கோடி ஸம்சயமாகிற ஊசல் ஏறுகிறது.) புத்திக்குத் தக்க ஊசல். ஶ்ருதியில் கேள்வி முந்தி பதில் பிந்தி. இங்கே ஸித்தாந்தம் முன்பு ப்ரஶ்நம் பிந்தி. ஸம்சய டோலைக்காக இப்படி அமைப்பு. திவ்ய மங்கள விக்ரஹத்தை டோலையில் எழுந்தருளப்பண்ணி உத்ஸவம் செய்வதிலும், புத்தியில் பெருமாளையும் திருமேனியையும் இப்படி டோலையில் ஆட்டுவது போல் ஆட்டுவது ஓர் இன்ப ரஸம். திருமேனியைப் பேசத் தொடங்கும்

போதே டோலோத்ஸவத்தை நினைக்கிறார். பாஹ்ய டோலையிலும் ஆந்தர டோலை உயர்ந்தது.

மோஹாந்தகார விநிவர்த்தந ஜாகரூகே
தோஷா திவாபி நிரவக்ரஹம் ஏதமாநே ।
த்வத்தேஜஸி த்விரதஶைலபதே விம்ருஷ்டே
ஶ்லாக்யேத ஸந்தமஸவத் ஸஹஸ்ரபாநோ: ॥ 18 ॥

த்விரதஶைலபதே — ஆனைமலை ப்ரபுவே!, மோஹாந்தகார விநிவர்த்தந ஜாகரூகே — மோஹமென்னும் இருட்டை நன்றாய்ப் போக்கும் வ்யாபாரத்தில் ஜாக்ரதையாயிருப்பதும், தோஷா — ராத்ரியிலும், திவாபி — பகலிலும், நிரவக்ரஹம் — தட்டுத் தடையில்லாமல், ஏதமாநே — மேல் மேல் ஜ்வலித்துக்கொண்டிருக்கும், த்வத்தேஜஸி — உம்முடைய தேஜஸ்ஸானது, விம்ருஷ்டே — நன்றாக விமர்சிக்கப்படும்பொழுது, ஸஹஸ்ரபாநோ: — ஆயிரக்கணக்கான கிரணங்களையுடைத்தான ஸூர்யனுக்கு, ஸந்தமஸவத் — இருட்டுத் தசை, ஶ்லாக்யேத — மெச்சத்தக்க தாகலாம்.

அவ — 1. 'அந்த பராவர தத்வம் த்ருஷ்டமான க்ஷணத்திலேயே ஸர்வ ஸம்சயங்களும் சேதிக்கப்படும்' என்று உபநிஷத்து கூறுகிறது. வரதனைத் தர்சநஸமாநாகாரமாகக் கனமாக உபாஸிப்பவர்களுடைய புத்தி ஸம்சய ஊஞ்ஜலில் ஏறி ஆடுமோ? 'வரதன் திருமேனியைக் கண்ட மாத்ரத்தால் குதர்க்கங்களெல்லாம் ஓடிப்போம்' என்று சாஸ்த்ரம் சொல்லுகையில் விதர்க்கம் தலையெடுக்கலாமோ? இதற்குப் பதில் — உம்முடைய புகரை அநுபவிக்கையில் மோஹமென்னு மிருள் பறந்து போவதில் ஐயமில்லை. ஸ்வரூபம் திருமேனி இரண்டும் ஒரே சுடராயும் ஒரே இனிப்பாயு மிருக்கையில் கண்ணும் கூசிப்போகிறது; மனமும் இனிப்பின் மிகுதியால் தன் வசமில்லாமல் தன்னையே மறந்து விடுகிறது. இரண்டு தீபங்களின் ப்ரகாசம் ஒன்று சேர்ந்தால் அந்த ப்ரகாசங்களை எப்படிப் பிரித்தறிவது? முடிச்சோதியில் போல் இங்கு ஓர் ஊசலாட்டம் வந்தது.

2. ஒருவாறு ஒற்றுமையுடைய இரண்டு பொருள்களைப் பிரித்துத் தீர்மானிக்க முடியாததற்குக் காரணம், வெளிச்சக் குறைவு இருட்டு முதலியன வாகும். வெளிச்சம் குறைவாய்க் கொஞ்சம் இருட்டான விடத்தில், பழுதைக்கும் பாம்புக்கும் வெள்ளிக்கும் சிப்பிக்கும் வேற்றுமை தெரியாது. பெருமாள் திருமேனி நல்லிருள் போலிருப்பதால், அத்திருமேனி யருகாமையில் வெளிச்சக் குறைவால் ப்ரமம் உண்டாகிறதென்று தாத்பர்யமா? அல்லவே அல்ல. ஸ்வாமி! 'ஆகாசத்தில் ஸூர்ய ஸஹஸ்ரங்கள் ஏககாலத்தில் கிளம்பினால் அதனால் எத்தகைய வெளிச்சமுண்டாகுமோ அந்த

வெளிச்சம் கண்ணனுக்கு விச்வரூப திருமேனிக்கு ஒருக்கால் ஸத்ருசமாகலாம்' என்றார் ஸஞ்ஜயர். ஆயிரம் ஸூர்யர்கள் சேர்ந்தாலும் உம்முடைய திருமேனியின் புகருக்கு ஒப்பாகாது. உம் திருமேனி இருட்டையும் மோஹத்தையும் பறக்க அடிப்பதே ஸூர்யனை இருட்டாக்கும்.

மோஹாந்தகார விநிவர்த்தந ஜாகரூகே—நீர் ஒருக்கால் தூங்கினாலும் உம்முடைய திருமேனியின் புகர் எப்பொழுதும் விழித்து ப்ரகாசித்துக் கொண்டேயிருக்கிறது. தூக்கதசையில் அழகு மிகும்; புகர் மிகும். ஆஶ்ரிதருடைய மோஹவிருளை அடியுடன் தொலைப்பதிலேயே நோக்குடையதாக விருந்து அதை விரட்டி விடுகிறது. நிவர்த்தநமென்பதே போக்குவதைச் சொல்லும். 'விநிவர்த்தநம்' என்றால் அடியோடு' போக்குவது. உம்மை ஆஶ்ரயிப்பவரின் மனத்திலுள்ள இருளெல்லாம் அகலும். உம்க்குப் போட்டியாக ஸூர்யன் ப்ரகாசிக்க வந்தால் அவர் இருட்டாவார். முதல் பாதத்தில் ஆஶ்ரிதர் மனத்துள் அந்தகாரம் போவதைப் பேசுகிறார். கடைசி பாதத்தில் ஸூர்யன் அந்தகாரம் போல் (ஸந்தமஸம் போல்) ஆவதைப் பேசுகிறார். நல்லிருளடைந்த நம் மனமென்னும் இருட்டு குஹை ப்ரகாசத்தால் உஜ்வலமாகிறது. இங்கே பெருமாள் திருமேனி ஜாக்ரதையாய் விழித்துக்கொண்டிருப்பதைப் பேசுகிறார். அடுத்த ச்லோகத்தில் பக்தர்கள் அப்படியிருப்பதைப் பேசுகிறார். ஜாகர்த்தி—

தோஷா—இரவில். உலகமெல்லாம் தூங்கும் இரவிலேயே விழித்துக் கொண்டிருக்கையில் பகலில் விழித்திருப்பதற்குக் கேட்கவேண்டுமோ என்று ஓர் ரஸத்தைக் காட்ட 'இரவிலும்' என்று முதலில் ஸாதித்தார். தீப ப்ரகாசம் போன்ற தேஜஸ் இரவில் ப்ரகாசிப்பது மாத்ரமின்றியில் பகலிலும் ப்ரகாசிக்கிறதென்று காட்ட 'திவாபி' (பகலிலும்) என்பதற்கு ஓர் கருத்து. விளக்கொளிப் பெருமாள் புத்தியில் நிற்கிறார். பகலில் தான் ப்ரகாசிப்பதுமன்றியில், ஸூர்யனையே இருட்டுக்கு ஸமானமாக்கி விடுமென்றும் ரஸம். இரவில் அப்பெருமையில்லை.

திவாபி—பகலிலும். 'ஸக்ருத்திவா பவதி' ஒரே பகலாகும் என்று வேதம் ப்ரமபத ஜ்ஞாநப் பெருமையைப் பேசுகிறது. இந்த தேஜஸ்ஸுக்கு அஸ்தமயோதயங்கள் கிடையா. சாந்தோதிதமான இன்பத்தை 16-ல் பேசினார். இங்கே திருமேனிப் புகர் நித்யோதித மென்கிறார். 'நாஸ்தமேதா நோதேதா' என்பது உபநிஷத்து.

நிரவக்ரஹம்—ஸூர்யனை இருட்டாகச் செய்து மின்னலை விழுங்குகின்ற மேகம்போல் ப்ரகாசிக்கும் புகர் இந்தக் கரிமலைக் கருணை நீர் காள மேகம் ப்ரகாசிக்கையில், அவக்ரஹமென்னும் அநாவ்ருஷ்டிக்கு இடமெங்கே? ஸூர்யனுக்கு க்ரஹமுண்டு. சாயைகள் வந்து மறைத்து

இருட்டாக்கிவிடும். இங்கே ஸூர்ய ஸூர்யன் வந்து இருட்டாக்குகிறது. இந்தத் திருமேனி ஜ்யோதிஸ்ஸை ஒன்றும் மறைத்து க்ரஹணம் செய்விக்க முடியாது. ஜ்யோதிஸ்ஸுக்களுக்கும் ஜ்யோதிஸ்; தமஸ்ஸுக்கும் பரம்.

ஸ்பர்தமாநே—மற்ற தேஜஸ்ஸுக்கள் போட்டிக்கு எதிர் வந்தால் ப்ரகாசம் மேன்மேல் அபிவ்ருத்தமாகும். எப்போதும் அந்த தேஜஸ்ஸுக்கு வ்ருத்தியே யொழிய ஹ்ராஸம் ஒருபோதும் கிடையாது.

தவ தேஜஸி—உம்முடைய புகர். ஸ்வரூபத்தையும் திருமேனியையும் சேர்த்துத் 'திருமேனியின் புகர்' என்று பேசுகிறார்.

ஹஸ்திசைலபதே—ஆனைமலை ப்ரபுவே! ஆனை நிறமானாலும் ஸூர்யனையும் மழுங்கச் செய்யும் தேஜஸ்ஸே!

விம்ருஶே—விமர்சிக்குங்கால் திருமேனியும் ஸ்வரூபமும் ஒன்றோ வேறோ என்ற ஸம்சய ஊசலாட்டமிருந்தாலென்ன? திருமேனிக்கும் ஸ்வரூபத்திற்கு முள்ளதல்லவோ அது? ஸூர்யன் முதலிய தேஜஸ்ஸுகளுக்கும் திருமேனியோடு கூடிய உமக்கும் உள்ள வாசியைப் பற்றி யல்லவோ இங்கே விமர்சிப்பது.

ஸஹஸ்ரபாநோ:—ஆயிரங் கிரணங்களுள்ளவன் ஸூர்யன் என்று அவர் ப்ரகாசத்தைப் புகழ்வர். அப்புகழ்ச்சியும் அவருக்கு உம்மால் வருவது. உம்முடைய ப்ரகாசத்தாலே தானே அவர் ப்ரகாசிப்பது. ஆயிரம் ஸூர்யர்கள் (ஸஹஸ்ர ஸஹஸ்ர பாநுக்கள்) சேர்ந்த ப்ரகாசம் உம் ப்ரகாசத்திற்கு ஒருவாறு ஒப்பாகுமென்றார் ஸஞ்ஜயர். ஸூர்யனை ஸஹஸ்ர பாநுவென்று ச்லாகித்துச் சொல்வது உம்முடைய ப்ரகாசத்தைப் பெருக்கத்தான். ஆநந்தத்தை நூறு நூறாய் பெருக்குகிறது ச்ருதி. ப்ரகாசத்தை ஆயிர மாயிரமாய் (ஸஹஸ்ரகுணிதோத்தர க்ரமமாகப்) பெருக்கவேண்டும். 'ஸாக்ஷீக்ருத த்விகுணித பிம்ப ஸஹஸ்ரதீதிபி:' என்று தேவநாயக பஞ்சாசத்தில் சோதி வர்ணநம். 'பாநு' என்ற பதத்தை எடுத்தது 'தமேவ பாந்தமநுபாதி' என்ற ச்ருதியைக் காட்ட. 'பாநம்' என்கிறார்கள் தத்வமறியாத லௌகிகர்கள். பாநமேது? அநுபாநம் தானே தத்வம். அநு பாநு என்று பெயரிடுவது உசிதம். மற்றோர் ரஸமுண்டு. பாநுவென்று ஸூர்யனுக்குப் பெயர். 'ஸஹஸ்ரபாநு' வென்பதற்கு ஆயிரம் ஸூர்யர்கள் சேர்ந்தவர் என்று பொருள். 'ஸஹஸ்ரபாநு' என்கிற நாமம் உமக்கே தகும்.

ஸந்தமஸம்—இருட்டைப் போன்ற அவஸ்தை. ஸூர்யன் முன்பு இருட்டு நிற்குமோ என்பர். இங்கே ஸூர்ய ஸூர்யன்

முன்பு ஸூர்யன் நல்லிரு ளானனென்று வேடிக்கை. க்ரஹணத்தில் ஸூர்யனும் உலகமும் இருட்டாகும். இங்கே ஸூர்ய பிம்பம் மட்டும் இருட்டாகிறது. உலகம் ஜ்வலிக்கிறது. வெறும் இருட்டல்ல. நல்லிருள் என்று காட்ட 'ஸந்தமஸ' என்றது. இருட்டெல்லாம் வெளிச்சமாய் விடுகிறது. ஸூர்யனும் இருட்டோடு இருட்டா யிருந்திருந்தால் ப்ரகாசத்தை யடைந்து உயர்ந்து போகலாம். ஸூர்யனுக்கு முன் தீபங்கள் பரிபவத்தை யடையும். இருட்டில் ஒரு சிறிய தீபமும் ஜ்வலிக்கும். பகலில் பெரிய தீபங்களும் ஒளி மழுங்கிவிடும். பகல் ஆரம்பிக்கு முன் இருட்டி லிருந்ததெல்லாம் ஒளியாகி உயர்வடையும். அப்படியே ஸூர்யனும் இருட்டா யிருந்தானேயாகில் அவன் ஒளியை யடைந்து புகழ யோக்யனுவான். அவன், தான் ப்ரகாசப் பொருளென்று நினைத்து இந்த தேஜஸ்ஸுக்கு எதிர் வந்தால் அவன் இருட்டைப்போல ஒளி மழுங்கி இகழப்பட நேர்ந்தது. இப்படி ஒரு பொருள். ஸூர்யனை காரணப் பரஞ்சுடர் முன் கார்யச்சுடர் மழுங்கினு லென்ன? இருண்டால் தானென்ன? காரணச் சுடரின் ஒளியை அதிகமாகக் காட்டுவது தானே தன் சேஷத்வத்திற்கு அழகு. இருண்ட தன் பிம்பத்தைப் பார்த்துப் பரஹாஸமாக ஶேஷி தேஜஸ் ஜ்வலிப்பதனுல் ஸூர்யன் ஸாது ஸாதுவென்று ஶ்லாகிக்கப்படுகிறுன். தன் ஆயிரம் சுடரையும் ஒடுக்கி ஒளிக்கச்செய்து நீசனுய் நல்லிருள் போல் தன் ஸ்வாமி ஸந்நிதியில் நிற்கிறுரேயென்று புகழ்ச்சி.

ஶூர்வெ) த—க்ரஹணத்தில் அகப்பட்டுக்கொண்டு இருளும்பொழுது, இவர் தலையிலும் இப்படி எழுதியுள்ளதே. தலை யெழுத்தை வெல்ல முடியுமோ வென்பர். இப்பொழுது புகழே கிடைக்கிறது. ப்ராக்ருதமான ஒளி மறைந்தா லென்ன? திவ்யமான கீர்த்தி ஒளி கிடைக்கிறது. வரதன் ஸந்நிதியில் நல்லிருள் தசை வந்தால் என்ன குறை? ஶ்லாகையேயாகும்; உத்கர்ஷமே மிகும். தான் இருட்டானதால் ஶேஷி தேஜஸ்ஸு இன்னம் நன்ருய் ப்ரகாசிக்கிறது. அதிசயத்தை யடையவு மிடமாயிற்று. தனக்கும் ஶேஷத்வ ரக்ஷணமும் கீர்த்தி அதிஶயமும் ஏற்படுகின்றன.

ஸ்ரீ:

மன்னுபுகழ் மாமுனிவன்

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரெ. திருமலை ஐயங்கார், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.]

உலகிலுள்ள பல தேசங்களிலும் சிறந்தது பரதகண்டம். அதிலும் திரவிட நாடு மிகவும் மேம்பட்டது. பகவானது திருக்கலியாண குணங்கள் நீர்மை பெறுவது பாகவதர்களால் தான். எனவே அன்று முதல் இன்றளவும் அடியார் குழாம் மிகுந்திருக்கும் பிரதேசமே மிகச் சிறந்ததாகையால், நந்தமிழ் நாட்டின் ஏற்றம் அளவிடற்கரியது. ஆழ்வார்கள் அவதரித்த காரணம் பற்றி இந்நாட்டின் அருமை ஆதிசேடனுலும் சிலாகிக்க முடியாது. செந்தமிழ் நாட்டை அலங்கரிப்பது தண் பொருநல் நதியாகும். தமிழெனும் அளப்பரும் சலதி தந்த அகத்தியன் வதியும்பொதியமலைச் சாரலினின்று வருதலால், அந்நதி இவ்வாறு தமிழ் மணம் கமழ்ந்தே ஓடும். இம்மாநதிக் கரையில் திருக்குருகாபுரி என்ற திவ்வியதலம் உள்ளது. அது குருகூர் என்று சாமான்யமாக வழங்கப்படும். ஸ்ரீவைஷ்ணவ பிரபந்த ஜநகூடஸ்தரான நம்மாழ்வார் அவதரித்தற் பின் இத்தலம் 'ஆழ்வார் திருநகரி' என்ற பெயருடன் வழங்கி வருகிறது. திருத்துழாய் பரிமளத்தோடே அங்குரிக்குமாறுபோலத் திருவவதரிக்கும்போதே ஞானநலத்தோடு திருவவதரித்த நம்மாழ்வாரது திருவவதார ஸ்தலம் திருக்குருகூரென்று ஒரு தரமேனுஞ் சொல்லுதலே வாய்படைத்த பயன் என்பர் சம்பிரதாய மறிந்த பகவர்.

இத்திரு நகரியில் கலி 4471க்கு மேல் ஸாதாரண வருஷம் ஐப்பசி மாதம் மூல நக்ஷத்திரத்தில் கோமடத்துத் திருவம்சஸ்தரான திகழக்கிடந்தார் அண்ணருக்குத் திருக்குமாராய் 'மன்னுபுகழ் மாமுனிவன்' திருவவதரித்தார். ஸாதாரண வருடம் அவதரித்து அஸாதாரணமான புகழ் படைத்ததே முதல் விசேடம். மாதமோ துலாம்; இம்மாதத்திற்ருன் முதலாழ்வார்கள் என்று கொண்டாடப்படும் பொய்கையார், பூதத்தார், பேயாழ்வார் அவதாரம். 'ஐப்பசியில் ஓணம் அவிட்டம் சதயமிவை, ஒப்பிலவா நாள்கள்' என்று மாமுனிவரே அருளிச்செய்துள்ளார். ஓங்கு துலாப் பூராடத்துதித்த செல்வன் சேனை முதலியார். ஐப்பசியில் திருவோணத் தவதரித்தவர் பிள்ளை லோகாசார்யர். இலகு துலா வாதிரையில் இங்கு உதித்தான் கூரகுலோத்தம தாசர். ஐப்பசியில் திருமூலத் தவ

தரித்தவன் மன்னுபுகழ் மாமுனிவன். மேலும் இம்மாதப் பூராடத்தில்
குருகைப்பிரான் பிள்ளானும், அவிட்டத்தில் திருமலை யாண்டானும் அவ
தாரம். ஸம்ஸாரப் பற்றை நிர்மூலமாக்கி அந்தமில் பேரின்ப வீட்டை
இங்கு அளிக்க வந்தனனோ என்று கூறலாம்படி யிருக்கிறது இவர் திரு
மூல நக்ஷத்திரத்தில் தோன்றியது. இவரது திருநாமம் அழகிய மண
வாளர்.

இப்புருடரேறு தொல் குருகாபுரியினைத் துலக்கினவரும், சடகோபன்
மறை வளர்த்தவரும், எதிராசரடி பணிபவரும், வைகாசி விசாகத்தில் உதித்
தவருமான திருவாய்மொழிப் பிள்ளை திருவடியில் ஆச்ரயித்துப் பஞ்ச ஸம்
ஸ்காரம் பெற்று, ஸகல சாஸ்த்ரங்களையும் ஸ்ரீ பாஷ்யாதிகளையும் ஆழ்
வார்கள் மகிழ்ந்து பாடம் செய்ய தமிழ்மாலை முதலான நம் ஸம்ப்ரதாய
கிரந்தங்களையும் அதிகரித்து, தனக்கொப்பாரில்லை யெனலாம்படி திகழ்ந்து
விளங்கினர். நம் மாமுனிவன் தம் ஆசாரியனைக் குறித்துப் பல படியாகப்
புகழ்வதைக் காணலாம். "எந்தை திருவாய்மொழிப் பிள்ளை"; "தேசிகர்
கள் போற்றும் திருவாய்மொழிப் பிள்ளை"; "தீதற்றஞானத் திருவாய்
மொழிப் பிள்ளை", "தேசந் திகழும் திருவாய்மொழிப் பிள்ளை" என்ற
அமுதமொழிகள் நோக்கி அனுபவித்தற் குரியன. ஆசார்ய லக்ஷணம்
ஆசார்ய வைபவம், சிஷ்ய லக்ஷணம், குரு சிஷ்ய பாவம் முதலியவற்றை
உபதேசரத்தின மாலையில் விளக்கமாகக் காணலாம். ஞானம், அநுட்டானம்
இவை நன்றாகவே யுடையவனான குருவை அடைந்தக்கால், தேனார் கமலத்
திருமாமகள் கொழுநனான திருமால் தானே வைகுந்தம் அளிப்பன். குருக்
கள் திருவடிகளில் அன்பு வைக்க மாயன் பரமபதம் கிடைப்பது எளிது
ஆசாரியனுக்கு அடிமை செய்யும் நாளே நன்னாள். ஆசாரியன் சீடன்
ஆருயிரைப் பேணுபவன். நல்ல குணமுடையோருடன் கூடியிருப்பதுவே
குணம். இவ்வாறெல்லாம் பரோபதேசமாகக் கூறுவன தம்மாசாரியனை
வணங்குவதாகவும் கொள்ளலாம்.

உலகத்தை உஜ்ஜீவிப்பதற்காக மிகச் சிறந்த துரியாச்ரம ஸ்வீகாரம்
செய்து, முன்னிருந்த திருநாமத்தோடே அழகிய மணவாள மாமுனிகள்
என்னும் திருநாமம் பெற்று, திருவரங்கம் பெரிய பெருமாள் நியமனத்
தால் கோயிலிலேயே நித்ய வாஸமா எழுந்தருளியிருந்து, நம்மிராமானுச
தர்சனத்தை விலக்ஷணமாய் வளர்த்து வந்தார். இம்மாமுனிவர் மணவாள
மாமுனி, பெரிய ஜீயர், வரவர முனி, வரயோகி, ஸௌம்ய ஜாமாத்ரு
யோகீந்த்ரர், ரம்யஜாமாத்ரு முனீந்த்ரர், யதீந்த்ர ப்ரவணர், ராமானுஜன்
பொன்னடி, அழகிய மணவாள ஜீயர் என்ற திருநாமங்களாலும் வழங்கப்
பெறுவர்.

இவர் செய்தருளின ப்ரபந்தங்கள் தத்வத்ரய வ்யாக்யானம், ரஹஸ்ய
த்ரய வ்யாக்யானம், ஸ்ரீ வசன பூஷண வ்யாக்யானம், ஆசார்ய ஹ்ருதய
வ்யாக்யானம், ஞானசார ப்ரமேயஸார வ்யாக்யானம், பெரியாழ்வார் திரு
மொழி ராமாநுச நூற்றந்தாதி வ்யாக்யானம், ஈட்டு ப்ரமாணத் திரட்டு,
தத்வத்ரய ப்ரமாணத்திரட்டு, ஸ்ரீ வசன பூஷண ப்ரமாணத்திரட்டு, உப
தேச ரத்தினமாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி, ஸ்ரீ ஆர்த்திப்பிரபந்தம்,
ஸ்ரீ யதிராஜ விம்சதி முதலியன.

ஆழ்வார்களிடத்தும் அவர் அருளிச்செயல்களிடத்தும் இம்முனி
வர்க்கு அதிக ஆர்வம் உண்டு. 'தெருளுற்ற ஆழ்வார்கள் சீர்மை யறிவாரார்?
அருளிச் செயலை அறிவாரார்?' என்று தொடங்கி, 'அருள் பெற்ற நாத
முனி முதலான நம் தேசிகரையல்லால்' என்று பேசுவதின் திறம் விரித்
துரைக்கவும் வேண்டுமோ? 'ஆழ்வார்களையும் அருளிச் செயல்களையும் தாழ்
வாக நினைப்பவர்களே நரகில் வீழ்வார்கள்' என்றும்; 'அதனால் எமனமே!
எப்பொழுதும் நீ அவர்போல் சென்றணுகக் கூசித்திரி' என்ற ஹிதோப
தேசம் வேறு யார் அருளிச் செய்தனர்? ஆழ்வாராசார்யர்கள் அவதார
தினங்களைக் கொண்டாடும் அழகு மிகவும் போற்றற்குரியது. "சித்திரை
யில் சித்திரை நாள்"; சித்திரையில் செய்ய திருவாதிரை," "சித்திரை
யில் ஏய்ந்த திருவாதிரை," "உண்டோ வைகாசி விசாகத்துக்கு ஒப்பு
ஒரு நாள்?"; "ஏரார் வைகாசி விசாகம்" "நல்லானியிற் சோதி நாள்";
"இன்றோ திருவாடிப் பூரம்"; "ஐப்பசியில் ஓணம் அவிட்டம் சதய
மிவை ஒப்பிலவா நாள்கள்"; "கார்த்திகையிற் கார்த்திகை நாள்"; "மன்
னிய சீர் மார்கழியில் கேட்டை" "தையில் மகம்......நற்றவர்கள் கொண்
டாடும் நாள்"; "மாசிப் புனர்பூசம்......நல்லவர்கள் கொண்டாடும் நாள்"
என்று உத்கோஷிக்கின்றனர். ஆழ்வார்களைக் கூறுமிடத்து, "எப்புவியும்
பேசு புகழ்ப் பொய்கையார் பூதத்தாழ்வார் பேயாழ்வார்"; "முதலாழ்
வார்களென்னும் பேர் இவர்க்கு நின்ற துலகத்தே நிகழ்ந்து" "வாய்த்த
புகழ் மங்கையர்கோன்" "வாய்த்த புகழ்பாணர்" "மன்னுபுகழ்
மாமறையோன் தொண்டரடிப்பொடி யாழ்வார்"; "துய்யமதி பெற்ற
மழிசைப்பிரான்"! "கொல்லி நகர்க்கோன் குலசேகரன்"; "சீராரும்
வேதம் தமிழ்செய்த மெய்யன் எழில் குருகை நாதன்"; "நன்றிபுனை
பல்லாண்டு பாடிய நம் பட்டர்பிரான்"; "ஆழ்வார் திருமகளார் ஆண்
டாள்"; "ஏரார் மதுரகவி"; என்று சிறப்பித்துப் பேசுகிறார்.

திருவாய் மொழியைக் காத்த குணவாளர், பிள்ளான், நஞ்சீயர், பெரிய வாச்சான் பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளை, மணவாளயோகி என்பார். தெள்ளாரும் ஞானத்திருக்குருகைப்பிரான்பிள்ளான் எதிராசர் பேரருளால் உள்ளாரும் அன்புடனே மாறன் மறைப்பொருளை அன்றுரைத்தது இன்ப மிகும் ஆறாயிரம். நஞ்சீயர் பட்டர் நல்லருளால் எஞ்சாத ஆர்வமுடன் ஆய்ந்துரைத்தது ஏரொன்பதினாயிரம். நம்பிள்ளை நல்லருளால் ஏவியிட பெரியவாச்சான் பிள்ளை சொன்னது இருபத்து நாலாயிரம். நம்பிள்ளை செப்பு நெறிதன்னை வள்ளல் வடக்குத் திருவீதிப்பிள்ளை இந்த நாடறிய நன்குரைத்தது ஈடு' முப்பத்தாறாயிரம். அழகிய மணவாள சீயர் பின் போரும் கற்றறிந்து பேசுகைக்குப் பொருள் உரைத்தது ஏதமில் பன்னீராயிரம். இவ்வைவர் பஞ்ச வியாக்யனங்களையும் செய்தருளியதை மிக அழகாக விவரிக்கிறார் நம் மன்னு புகழ் மாமுனிவர். இவ்வரிய வியாக்கியைகளில்லாவிடின் என்செய்வோம் என்பதைப்பற்றி "முந்துறவே பிள்ளான் முதலானோர் செய்தருளும் அந்த வியாக்கியைகளின்றாகில், அந்தோ! திருவாய்மொழிப் பொருளைத் தேர்ந்துரைக்கவல்ல குருவார் இக்காலம் நெஞ்சே! கூறு" என்று தம் மனத்துடன் பேசுகிறார். என்னே இம்முனிவரின் பெருந்தகைமை இருந்தவாறு! உபகார ஸ்மிருதி இதனினும் காண்டல் கூடுமோ?

மாமுனிவன் கையாண்ட உபமானங்கள் மிக எளிதாகவும் அழகாகவும் உள்ளன. அவற்றிற் சிறிது தருவம். "வேதத்துக்கு ஓமென்னு மதுபோல் உள்ளத்துக் கெல்லாம் சுருக்காய்த் தான் மங்கலமாதலால் ஆழ்வார்கள். கூறு கலைக்கெல்லாம் ஆதிதிருப் பல்லாண்டு"; "நல்ல குணமுள்ள தொன்றை நண்ணியிருப்பதற்கு நல்ல மணமுண்டாம் நயமதுபோல்"; "தீய கந்தமுள்ள தொன்றைச் சேர்ந்திப்ப தொன்றுக்குத் தீய கந்த மேறும் திறமதுபோல்"; "வேம்பு முற்றக் கைப்பு மிகுவதுபோல்"; "கூபத்தில் வீழும் குழவியுடன் குதித்து அவ்வாபத்தை நீக்கும் அந்த வன்னைபோல்"; "வேம்பு கறியாக விரும்பினார் கைத்ததென்று தாம்பு கடாதே புசிக்குந் தன்மைபோல்"; "கனககிரிமேல் கரியமுகில் போல்";

இவர் அருளிச்செய்த வ்யாக்யானங்களைப் பற்றிச் சற்றுப் பகர்வாம். பிள்ளை லோகாசார்யர் திருவாய் மலர்ந்தருளின முமுக்ஷுப் படிக்குத் "திருமந்த்ரார்த்தம்" என்கிற வ்யாக்யானம் இவ ரருளிச்செய்தது.

அவதாரிகையில் இப்ரபந்தம் இட்டருளிய காரணமும், அதுவே அனைவர்க்கும் ஆதரணீயமா யிருக்குந் தன்மையினையும் எவ்வளவு அழகாகச் சாற்றுகிறார் கேளுங்கள்.

"இனி இந்த ரஹஸ்யத்ரயந்தான், ஶப்தம் ஸுக்ரஹமா யிருந்ததேயாகிலும் அர்த்தம் உபதேஶ கம்யமாகையாலும், அதறிந்த எல்லார்க்கும் உஜ்ஜீவிக்க வேண்டுகையாலும், அந்த ரஹஸ்யத்திலும் பூர்வாசார்யர்களுடைய உபதேஶ பரம்பரா ப்ராப்தமான அர்த்த விசேஷங்களை ஸர்வர்க்கும் ஸுக்ரஹ மாகவும் ஸுவ்யக்த மாகவும் பிள்ளை லோகாசார்யர் தம்முடைய பரமக்ருபையாலே இப்ரபந்த முகேந அருளிச்செய்கிறார். முன்பே ரஹஸ்யத்ரய விஷயமாக மூன்று ப்ரபந்தம் இட்டருளி யிருக்கச்செய்தேயும், அதில் யாத்ரிச்சிகப்படி அதிஸங்க்ரஹ மாகையாலும், பரந்தபடி அதிவிஸ்த்ருத மாகையாலும், ஶ்ரிய꞉ பதிப்படி உபய தோஷமு மின்றிக்கே இருந்ததேயாகிலும் ஸம்ஸ்க்ருத வாக்ய பஹுளமாகையாலே பெண்ணுக்கும் பேதைக்கும் அதிகரிக்கப் போகாமையாலும், த்ரிவித தோஷமு மில்லாதபடி இன்னமும் ஒரு ப்ரபந்த மிடவேணு மென்று திருவுள்ளம் பற்றி எல்லாவற்றுக்கும் பின்பிறே முமுக்ஷுப்படியாகிற 'இப்ரபந்தம் இட்டருளிற்று. ஆகையிறே, அல்லாத ப்ரபந்தங்கள் கிடக்க, இத்தை எல்லாரும் அதிகரித்துப் போருகிறது. இன்னமும் பூர்வ ப்ரபந்தங்களில் அநுக்தமான அர்த்தவிஶேஷங்களும் இப்ரபந்தத்திலே உண்டாகையாலும், இதுவே எல்லார்க்கும் ஆதரணீயமாயிருக்கும்."

ஆரம்பம் போலவே நிகமனமும் செவ்விதாய் அமைக்கப்பட்டுள்ளது. த்வயப்ரகாணத்தில் பிரதிபாதித்த விஷயங்களை ஸங்க்ரஹித்து "ஆக, புருஷகாரத்தையும் தந்நித்யயோகத்தையும், ததுத்பாவிதமான வாத்ஸல்யாதி குணங்களையும், அந்தக் குணப்ரகாஶகமான திவ்யமங்கள விக்ரஹத்தையும் குணவிக்ரஹ விஶிஷ்ட வஸ்துவினுடைய உபாயத்வத்தையும், அவ்வுபாய ஸ்வீகாரத்தையும், தத்பலமான கைங்கர்யத்துக்கு ப்ரதி ஸம்பந்தி ஒரு மிதுந மென்னு மத்தையும், அவ்வஸ்துவினுடைய ஸர்வஶேஷித்வத்தையும், தத்விஷய கைங்கர்யத்தையும், கைங்கர்ய விரோதி நிவ்ருத்தியையும் சொல்லிற்றாயிற்று" என அருளிச்செய்துள்ளதை உற்று நோக்குமிடத்து, இவர் ஓர் பேருரையாசிரியர் என்பது போதரும். கிரந்த கர்த்தாவினும் உரையாசிரியனை உலகம் போற்றும். உரையின்றேல் மூலப்பொருட்

சுவைகள் எங்ஙனம் நன்குணர முடியும்? இம்முறையில் நம் மாமுனிவன் செய்த பரமோபகாரத்துக்கு எவர்தாம் எக்கைம்மாறுதான் ஆற்ற இயலும்?

வ்யாக்யாந மத்தியில் நம்மிராமாநுசன் ஸ்ரீஸூக்திகளை மேற்கோள் காட்டும் அழகு மிக அழகே. "ஆகையிறே த்வய விவரணமான கத்யத்திலே நமஶ்ஶப்தார்த்தத்தை அநுஸந்தித்து அருளுகிறவளவில் 'உதாரா வாப்தயே' இத்யாதி சூர்ணையாலே அக்ருத்யகரணாதி அகில கர்ம நிவ்ருத்தியையும், 'அநாதி கால ப்ரவ்ருத்த' இத்யாதி சூர்ணையாலே அவித்யா நிவ்ருத்தியையும், 'தைவீ ஹ்யேஷா' இத்யாதி சூர்ணையாலே ப்ரக்ருதி ஸம்பந்த நிவ்ருத்தியையும் பாஷ்யகாரர் ப்ரார்த்தித்தருளிற்று" என்றும், "அஶேஷ விஷய ப்ராப்தாஹா ஸியா நிகவெஷ்யவஹ ராஹ்யகாஶ" என்றிறே பாஷ்யகாரரும் அருளிச்செய்தது" என்றும் வருவன காண்க.

பூர்வாசார்யர்களிடம் நம்முனிவனுக்கு விசேஷ அபிமானம் உண்டு. அதை விசதமாக வெளியிடுகிறார். "என்று பட்டர்க்கு எம்பார் அருளிச்செய்த வார்த்தை" என்பது மூலம். "என்று ஸகல ஶாஸ்த்ர வித்தமரான பட்டருக்கு ஆப்ததமரான எம்பார் அருளிச் செய்த வார்த்தை யென்கை" என்பது வ்யாக்யாநம். "அருள் பெற்ற நாதமுனி முதலான நம் தேசிகரையல்லால் பேதை மனமே உண்டோ பேசு" என்றும், "ஓராண் வழியாய் உபதேசித்தார் முன்னோர்" என்றும், "பூருவர்கள் சீர்த்த நிலை தன்னை நெஞ்சே சேர்" என்றும், "பூருவாசாரியர்கள் போதம் அனுட்டானங்கள் கூறுவார் வார்த்தைகளைக் கொண்டு நீர் தேறி, இருள்தரு மா ஞாலத்தே இன்பமுற்று வாழும் தெருள்தருமா தேசிகனைச் சேர்ந்து" என்றும் இவர் தாமே கூறுகை கான்க.

ஸ்ரீ வைஷ்ணவலக்ஷணம் தன்னைப்போன்ற இதர ஸ்ரீ வைஷ்ணவனிடத்தில் உகந்திருக்கை. "இப்படியிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களேற்றம் அறிந்து உகந்திருக்கையும்" என்பதற்குக் "கீழ்ச்சொன்ன இவ்வாகாரங்களெல்லா முடையராயிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களைக் கண்டால், இந்தளத்திலே தாமரை பூத்தாற் போலே இந்த விபூதியிலே இங்ஙனேயும் சிலருண்டாவதே! என்று அவர்கள் வைபவத்தை யறிந்து அவர்களளவில் ப்ரீதியுக்தனாயிருக்கை. கீழ்ச் சொன்னவை யெல்லாம்

உண்டாக அரிதாயிருப்பதொன்றிறே" என்று இவர் வ்யாக்கியாநம் இட்டமையை நோக்க இவர் குணப்ரபாவம் நன்கு விளங்கும். 'பிறர் மினுக்கம் பொறுமையில்லாப் பெருமையும் பெற்றோமே' என்றதன் உள்ளுறை பொருள் தெளியக் கண்டு கொள்வது. "கற்றோர்கள் தாமுகப்பர் கல்வி தன்னி லாசையுள்ளோர், பெற்றோ மெனவுகந்து பின்பு கற்பர்—மற்றோர்கள், மாச்சரியத் தாலிகழில் வந்தது என் நெஞ்சே! இகழ்கை, ஆச்சரியமோ தான் அவர்க்கு" என்பதுங் காண்க.

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகனிடமும், அவர் திவ்யஸூக்திகளிடமும், நம் மாமுனிவனுக்கு விசேஷ பாராட்டுதல் உண்டென்னத் தட்டில்லை. "ஶிஷ்யனாய் நின்றது—ஶிஷ்யனாயிருக்கு மிருப்பு; நாட்டார் அறியாமையாலே அத்தை யறிவிக்கைக்காக" என்றதின் கீழ் "தானே ஶிஷ்யனுமாய்க் கொண்டு நின்றது, "ஸர்வஜ்ஞாய ஸுஶீல ஸத்வ ஹித ஸ்வ ஸம்பத்ஸ வாயா ஸிதாஸீஶாஸ்த்ர ஶிஷ்யஸ்யத்ரூ நிஜ பக்த நவாஸ் ப்ரஸ்காலப்ரதீக்ஷ: ஶாஸ்தாஹா நஸ்ய ஶரண பக்த ஶாஸ்த்ர விஶ்வாஸ ஶாலீ ஶிஷ்ய: ப்ராப்த: பரீக்ஷாம் க்ருத விதி ஹிதஸ்வ தஸ்ய ஶிக்ஷணீய: ॥"

இத்யாதிகளிற் சொல்லுகிறபடிகளும்" என்று ந்யாஸ விம்சதிஶ்லோகத்தை மேற்கோள் காட்டியிருப்பதே போதுமான சான்று.

திருவாய்மொழி நூற்றந்தாதி, திருவாய் மொழிப் பதிகம் ஒன்றுக்கு ஒரு பாடல் கொண்ட ஒரு அழகிய பிரபந்தம். அஃது அப்பதிகக் கருத்தை அடக்கிக்கொண்டு, அதின் முதற் பாசுர முதலெழுத்தும் சொல்லும், அந்திமப் பாசுரக் கடையெழுத்தும் சொல்லும் அமைந்து அந்தாதியாக வரல் வேண்டும். இத்தால் நம் முனிவன் தமிழ்த்திறம் நன்கு புலனாகும்.

ஆர்த்தி ப்ரபந்தத்தின் அருமை அளவிட முடியாது. "வாழியெதிராசன் வாழியெதிராசன்" என ஆரம்பித்து, "நற்றாதை சொற் புதல்வர் தம்மதன்றோ தாயமுறை தான்" என்று முடித்த அழகே அழகு. இது இம்முனிவனது ஆர்த்தியை உள்ளவாறே கூறுகின்றது.

இம்மாமுனி வந்திலனேல் 'ஆற்றிற் கரைத்த புளியல்லவோ தமிழாரணமே' என்றும், 'சடகோபர் திருவாய்மொழியோடு கடலோசையோடென்ன வாசியுண்டே' என்றும் கூறுகிறபடியாயிருக்கும். இதற்கு ஐயமின்று. நம் முனிவனுக்கு 'முப்பத்தாறாயிரப் பெருக்கர்' என்ற பிரசித்த திருநாமம் உண்டென்பதும் விவக்ஷிதம்.

'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்றபடி, இளமை முதல் நற்புகழ் மன்னப்பெற்றவர் இம்முனி. மாமுனி—சிறந்தமுனி. பெரிய பிராட்டியின் திருவருள் நிரம்பிய மனன சீலன். மன்னுபுகழ் மாமுனிவன். இம்மாமுனி திருவடியில் அஷ்டதிக் கெஜங்கள் என்னப்படும் எறும்பி யப்பா, கந்தாடை அண்ணன், ப்ரதிவாதி பயங்கரம் அண்ணன், பரவஸ்தூர் பட்டபிரான் ஜீயர், வானமாமலை ஜீயர், திருவேங்கட ஜீயர், அப்பிள்ளை, அப்பிள்ளார் முதலியோர் ஆஶ்ரயித்த முதலிகள். முனிவன் திருநாடலங்கரித்தது ருதிரோத்காரி வருஷம் மாசிமாசம் க்ருஷ்ண பக்ஷ த்வாதசியில்.

"மணவாள மாமுனிகள் சிறிய திருமேனியோடு எழுந்தருளியிருப்பதால், மங்களாசாஸனத்துக்காக அவர் புறப்பட் டெழுந்தருள்வதில்லை. பெரிய அவஸரத் திருவாராதனத்துக்கு முன் பெருமாள் அலங்காரம் அனுப்புவார். அலங்காரத்தோடு பெரிய கோயில் அர்ச்சகர் வந்து மணவாள மாமுனிகளுக்கு அதை அமுது செய்வித்து, அந்த ஸந்நிதித் திருவாராதனக்காரரிடம் தீர்த்தமும் மணவாள மாமுனி பாதுகையான மஹாப்ரஸாதமும் பெற்றுக்கொள்வார்."

"மணவாள மாமுனிகள் பெருமாளுக்கு ஆசாரியனாயிருந்து ஈடு காலக்ஷேபம் ஸாதித்தருளியதால், பெருமாள் பரிகரமான ஸகலருக்கும் ஆசாரியரானதுபற்றி, அவருடைய திருநக்ஷத்திரத்தன்று எல்லா கைங்கர்யபரர்களும் தங்களுக் கேற்பட்ட வரும்படியை ஸமர்ப்பித்து அக்காலத்தில் உற்சவத்தைச் சிறக்க நடத்திவைத்த வழக்கப்படியே, இப்பொழுதும் எல்லாக் கைங்கர்யபரர்களுக்கும் அன்றை தினம் ஏற்பட்ட வரும்படி தேவஸ்தானம் கச்சேரியிலேயே பிடிக்கப்பட்டு மணவாள மாமுனிகளுக்கு ஸமர்ப்பிக்கப்படுகிறது."

"சிந்தித் தாங்கரைச் சிந்தை பயங்கெடச் சென்னிதன்னால்
வந்தித்து நிச்சலும் வாயார வாழ்த்துமெய்ம் மாமறையோர்
புந்திக்குண் மேவும் வரயோகி தம்மைப் புகைந்துசிலர்
நிந்திக்கினு மேவிடா ரிதுகாணவர் நீர்மைநெஞ்சே".

"மன்னு புகழ்சேர் மணவாள மாமுனிவன்
தன்னருளால் உட்பொருள்கள் தம்முடனே—சொன்ன
திருவாய் மொழிநூற் றந்தாதி யாம்தேனை
ஒருவா தருந்துநெஞ்சே! உற்று."

ஒவைஹ-ஷணீ ஹவதி கா ஜிரஉ ஜோாாம் ஸா
ஒஹெ வர்ஷ்ஒஜெவ நிஶியாzஶி ஹவதிஹூ-திஃ ॥ 73

ஸ்ரீவத்ஸகௌஸ்துபகிரீட லலாடிகாஷிஃ
கேயூரஹாரகடகோத்தஂஸகர்ணிகாஷிஃ ।
உதாரஹாரஸணி நடவாரநீவிபந்தை
ஹ-ாஜம் ஹவஜஸநிமேஷமுதீக்ஷிஷீய ॥ 74

ஹஹெ - ஆச்சர்யம். தயாசஶி - அப்படியிருக்கையிலும், ஈந்யா ஸா ஒவைஹ-ஷணீ காஜிஃ - ப்ரஸித்தமான மற்றொரு விபூஷண ஸம்பந்த காந்தியானது, ஈஉஜோாம் ஹவதி - [உன்னுடைய யோக்யதைக்கு] மிகவும் பர்யாப்தமாகின்றது. ஒஹெ - என்ன ஆச்சர்யம்? நிஶியாசஶி ஹவதிஹூ-திஃ - உன்னுடைய விபூதியாக இருக்கும் ஸகலமும், வர்ஷ்ஒஜெவ - பரிபூர்ணமே. அதாவது: ஒவ்வொன்றும் யாவத் காலமும் அநுபவிக்கப் பர்யாப்தமே.

நிஶியாzஶிஹவதிஹூ-திஃ - இவ்விடத்தில் சோபையாகிற விபூதி விவக்ஷிதம். திருமேனி சோபையோ, திருவாபரண சோபையோ, ஒவ்வொன்றும் பகவானுடைய கல்யாணகுணங்கள்போல நித்யர்களாலும் முக்தர்களாலும் யாவத் காலமும் அநுபவிக்கப் ப்ராப்தமன்றோ?

74. கீழ் ச்லோகத்தில் விபூஷண காந்தி ப்ரஸ்துதமாகவே, அதை அநுபவிக்க வேண்டுமென்று இந்த ச்லோகத்தில் ஆசம்ஸிக்கிறார்.

[ப-ரை] ஸ்ரீவத்ஸ - ஶ்ரீ வத்ஸம் என்னும் மறு, கௌஸ்துப - கௌஸ்துப ரத்நம், கிரீட - கிரீடம், லலாடிகா - திருநெற்றிக்கு அலங்காரமாகும் திலகம் முதலியன, ஆஷி - இவை முதலியவைகளாலும், கேயூர - தோள்வளைகள், ஹார - (கண்டத்தில் தரிக்கப்படும்) மாலைகள், கடக - (முன்கையில் அணிந்து கொள்ளப்படும்) கடகங்கள், உத்தஂஸகர்ணிகா - உயர்ந்த கர்ண பூஷணங்கள் இவைகளாலும்; உதாரஹார - அப்ரதிஹதமான சோபையை யுடைய வநமாலை, நடவார - ரத்ந மஞ்ஜீரங்கள், நீவிபந்த- உதர பந்தம் இவைகளாலும், ஹாஜ - ஜ்வலித்துக்கொண்டிருக்கும், ஹவஜ - உன்னை, ஈநிமேஷ - இமைகொட்டாமல், உதீக்ஷிஷீய - பார்த்துக்கொண்டே யிருக்க விரும்புகிறேன்.

"ஸதா பஶ்யந்திஸூரயஃ" என்கிறபடி எப்பொழுதும் பகவானைப் பார்த்துக்கொண்டு அவனுடைய சோபை முதலிய விபூதிகளை அநுபவித்திருப்பதே பரம கைங்கர்யம்.

ஐந்தீவரீ க்வசிதபி க்வசிதாரவிந்தீ
சாந்த்ராதபீ க்வசந ச க்வசநாபி ஹைமீ ।
காந்திஸ்தவாந்யோந்யவர்ணஸமவாயஸம்ஸ்ரீ:
பர்யாப்த பாரணயிதும் கிமு சக்ஷுஷோர்மே ॥ 75

த்வாம் ஸேவிதம் ஜலஜசக்ரகதாஸிஶார்ங்கை:
தார்க்ஷ்யேண ஸைந்யபதிநா ச ததாபரைரநுசரைஶ்ச ।

75. அந்தத் திருமேனி காந்தியையும் விபூஷண காந்தியையுமே இன்னமும் அநுபவிக்கிறார்.

[ப - ரை] க்வசிதபி - சிலவிடங்களில், ஐந்தீவரீ - இந்தீவர புஷ்பம்போன்றதும், க்வசந - வேறு சில விடங்களில், ஆரவிந்தீ - அரவிந்த புஷ்பம்போன்றதும், க்வசந ச - மற்றும் சிலவிடங்களில், சாந்த்ராதபீ - சந்த்ரிகைபோன்றதும், அபி க்வசந - இன்னும் சில விடங்களில், ஹைமீ - ஸுவர்ணம்போன்றதுமான, அந்யோந்யவர்ணஸமவாயஸம்ஸ்ரீ: - பரஸ்பரம் ஸாமீப்யத்தால் ஏற்படும் வர்ணோத்கர்ஷத்தை யுடைய சோபையை உடைத்தாயிருக்கும், தவ காந்தி: - உன்னுடைய காந்தியானது, மே சக்ஷுஷோ: பாரணயிதும் - என்னுடைய கண்களுக்கு த்ருப்தி செய்விக்க, கிமு வா பர்யாப்த - சக்தமாகுமோ? அதாவது: 'எவ்வளவு காலம் எவ்வளவு விதமாக அநுபவித்தாலும் எனது கண்களுக்கு ஒருபொழுதும் த்ருப்தி ஜநிக்கமாட்டாது; பார்க்கப் பார்க்க இன்னும் பார்க்கவேண்டு மென்னும் ஆஸ்தை தலையெடுத்து நிற்குமே யன்றிப் போதும் என்னும் எண்ணம் ஒருகாலும் இல்லை' என்று சொன்னதாயிற்று. இதுதான் காந்தியின் பௌஷ்கல்யம்.

வர்ணஸமவாய — ஒவ்வொரு வர்ணமும் ஸ்வயமே மிக்க காந்தியை யுடையதாக இருந்தாலும், வர்ணாந்தர ஸாந்நித்யத்தைப் பெறும்பொழுது ஒரு வித உத்க்ருஷ்ட சோபையைப் பெற்று விலக்ஷணமாக ப்ரகாசிக்கின்றதன்றோ? அப்படி வர்ணாந்தர ஸாந்நித்யத்தால் ஏற்படும் உத்கர்ஷத்தை 'வர்ணஸமவாய:' என்று சொல்வார்கள்.

76. திவ்யாயுதங்களுடனும் அநந்த கருட விஷ்வக்ஸேநர் முதலிய நித்யர்களுடனும், ஸாக்ஷாத் லக்ஷ்மியுடனும் எழுந்தருளி யிருக்கும் திருவோலக்கத்தை எக்காலத்திலும் ஸேவிக்கப் பெறுவோமோ என்னும் அபிலாஷத்தை ஆவிஷ்கரிக்கிறார்.

[ப - ரை] ஜலஜ - [பாஞ்சஜந்யம் என்னும்] சங்கம், சக்ர - [ஸுதர்சநம் என்னும்] சக்ரம், கதா - [கௌமோதகீ என்னும்] கதை, அஸி - [நந்தகம் என்னும்] வாள், ஶார்ங்க - சார்ங்கம் என்னும் வில், இவைகளாலும், தார்க்ஷ்யேண - கருடனாலும், ஸைந்யபதிநா - விஷ்வக்ஸேநராலும், ததா அபரைரநுசரை: — [பாஞ்சஜந்யம் முதலியவை போன்ற குமுத சண்ட ப்ரசண்டர்கள் முதலிய] மற்றை அநுசரர்களாலும், ஸேவிதம் - ஸேவிக்கப்பட்டும், அநந்தபோகே - ஆதிசேஷனுடைய சரீரத்தின்மீது, ஶ்ரியா ஸஹ வஸந்தம் - லக்ஷ்மியுடன்கூட எழுந்தருளியிருக்கும், த்வாம் - உன்னை, அஹம் - நான், ஸாஞ்ஜலி: - கூப்பின கைகளுடனும், அஸஞ்சலிதாக்ஷிபக்ஷ்மா - இமை கொட்டாமலும், புஞ்ஜீய - அநுபவிப்பேனோ!

ஶேஷே ஶ்ரியா ஸஹ வஸந்தமநந்தபோகே
புஞ்ஜீய ஸாஞ்ஜலிரஸஞ்சலிதாக்ஷிபக்ஷ்மா ॥ 76

கைங்கர்யநித்யநிரதைர்பவதேகபோகை:
நித்யைரநுக்ஷணநவீநரஸார்த்ரபாவை: ।
நித்யாபிவாஞ்சித பரஸ்பரநீசபாவை:
மத்தைவதை: பரிஜநைஸ்தவ ஸங்கஸீய ॥ 77

ஸ்ரீ பகவான் அநந்த கருட விஷ்வக்ஸேநாதிகளாற் போல் பாஞ்சஜந்யம் முதலிய திவ்யாயுதங்களாலும் ஸேவிக்கப்படுகிறார் என்று சொல்வது, அவர்கள்போல் இவையும் சைதந்ய முடையவை என்பதை விளக்குகின்றது.

77. "ஸதா பச்யந்தி ஸூரய:" என்று அங்கு எழுந்தருளியிருக்கும் நித்ய ஸூரிகளுடன் தமக்கு நித்ய ஸஹவாஸம் கிடைக்குமோ என்று ப்ரார்த்திக்கிறார்.

[ப - ரை] கைங்கர்யநித்யநிரதை: — [பகவத்] கைங்கர்யத்திலேயே எப்பொழுதும் வ்யாப்ருதர்களாயும், பவதேகபோகை: - உம்மிடத்திலேயே ஸகல போகாநுபவங்களையும் உடைத்தாயிருப்பவர்களாயும், அநுக்ஷணநவீநரஸார்த்ரபாவை: - [எவ்வளவு காலம் ஸேவித்துக்கொண்டிருந்தபோதிலும்] ஒவ்வொரு க்ஷணத்திலும் புதிது புதிதாக ஜநிக்கும் ரஸ விசேஷத்தால் எப்பொழுதும் நிறைந்து குளிர்ந்திருக்கும் மநோபாவத்தை உடைத்தாயிருப்பவர்களாயும், நித்யாபிவாஞ்சித பரஸ்பரநீசபாவை: - ஒவ்வொருவரையும் மற்றொருவர் தமது ஸ்வாமியாகவும் தம்மை அவருக்குத் தாஸராகவும் உணரும்படியான மநோபாவத்தை எப்பொழுதும் ஆசம்ஸித்துக்கொண்டிருப்பவர்களாயும், மத்தைவதை: — எனக்கு ஆராத்யர்களாயுமிருக்கும், தவ பரிஜநை: - [அநந்த கருட விஷ்வக்ஸேநர்கள்

யத்கிஂசிது ஜ்வலிதம் யதுபாஸ்யஸர்வஹ
ஸௌந்தர்ய ஸம்பதிதி யந்மஹிமாஂசலேசஃ ।
நாம்நைவ யாம் ஶ்ரிய மஸங்கி யதீயதாம
க்ஷாமாந்தி யத்ர யதயோநவஸித்தயஃ ॥ 78

முதலான] உன்னுடைய பரிஜநங்களாகிற, நித்யைஃ - நித்ய ஸூரிகளுடன் ஸங்கஸீய - கூடுவேனே!

நித்ய விபூதியில் நித்யர்களாலும் முக்தர்களாலும் அநுபவிக்கப்படும் அநுபவம் வாக்குக்கும் மநஸ்ஸுக்கும் எட்டாததே. அவ்விடத்தில் அவர்கள் செய்யும் கார்யம் முழுவதும் பகவத் கைங்கர்யமே என்றும், அவர்கள் அநுபவிக்கும் போகம் முழுவதும் பகவானே என்றும், அவர்களுக்குப் பகவத் சேஷத்வம் போல் பாகவத சேஷத்வமும் அத்யந்தம் உத்தேச்யமென்றும் இவ்வளவு மாத்ரமே நாம் சொல்லக்கூடும். இதற்குமேல் அநுபவைக வேத்யம்.

78. இவ்விதம் பகவத் பரிஜநங்களின் ஸமாகமத்தை ப்ரார்த்தித்து விட்டு, பிறகு லக்ஷ்மீ விசிஷ்டனை பகவானுடைய கைங்கர்யத்தை ப்ரார்த்திக்கிறவராய், மூன்று ஶ்லோகங்களால் லக்ஷ்மியின் மஹிமையைப் புகழ்ந்து, கடைசியாக 'ஸஂஸ்ரீம் தாஂ க்ஷாஂச வரிவஸ்யேயம்' [ஈஶ்வரியாயிருக்கும் அந்த லக்ஷ்மிக்கும் உனக்கும் கைங்கர்யம் செய்யும் பாக்யத்தைப் பெறுவேனே] என்று ப்ரார்த்திக்கிறார். மூன்று ஶ்லோகங்களும் ஒரே அந்வயம்.

[பதவுரை] உஜ்ஜ்வலிதம் யத்கிஂசித—இந்த ஜகத்தில் ஒருவித தேஜோ விசேஷத்துடன் கூடியிருப்பதாகத் தென்படும் வஸ்துக்களெல்லாவற்றையும், யதுபாஸ்யயா - எவளுடைய பெயரையிட்டு, ஜநாஃ-[எல்லோரும்] பேசுகிறார்களோ; ஸௌந்தர்ய ஸம்பதிதி - அவயவ சோபை என்றும் ஸம்பத்தென்றும் சொல்லப்படுமவையெல்லாம், யந்மஹிமாஂசலேசஃ - எவளுடைய பெருமையின் ஏகதேசமோ, யாம் - எவளை, நாம்நைவ - பெயரினாலேயே, ஶ்ரிய மஸங்கி - ஸ்ரீ என்று வ்யவஹரிக்கிறார்களோ, க்ஷாம் - உம்மை, யதீயதாம - எவளுடைய வாஸஸ்தாநமென்று, க்ஷாமந்தி - சொல்லுகிறார்களோ, யதயோ - எவள், யதயோநவஸித்தயஃ - யோகிகளுடைய ஸித்தி எல்லாவற்றுக்கும் காரணமோ.

யதுபாஸ்யயா - எவளுடைய பெயரையிட்டு. லோகத்தில் 'யஶஸ்ஸ்ரீ' 'யாஜ்ஞஸ்ரீ' 'ரூபஸ்ரீ' இத்யாதியாக ஸ்ரீ. ஸ்ரீ என்றே ஸகல மஹிமை விசேஷங்களையும் வ்யவஹரிக்கிறார்கள். யத்கிஂசித - ஒரு பொருள் எவ்

ஸாஸௌ க்ஷயாஸ்தவதுதயிந்தய நயந்தலஜ்ஜா
யாஸ்தஹிதேதி ஜகதுத்ஸ்யஸேநாத்யதாஸஃ ।
யா ச ப்ரதிக்ஷணஸ்வேதிவஸாநுபாஂஸியே
ஸாரேவஸேவதே ஸஹிநந்யதே ஸதைவ ॥ 79

விடத்திலிருந்தாலும், எந்த ஜாதியைச் சேர்ந்ததாக இருந்தாலும், எவ்வளவு அல்பமாக இருந்தாலும், அதனிடம் ஏதாவது ஒரு விசேஷித்த தேஜஸ் இருந்தால், அந்தத் தேஜஸ்ஸை எவ்வித ஸங்கோசமுமின்றி 'ஸ்ரீ' என்றே வ்யவஹரிக்கிறார்கள் என்பதை இந்த 'யத்கிஂசித' என்பது காட்டுகின்றது.

நாம்நைவ—'ஸ்ரீ' என்பதே அவளுடைய பெயர். இதை விட வேறு பெருமையும் வேண்டுமோ? 'ஸ்ரீரித்யேவ ச நாமதே' என்று ஸ்ரீ ஆளவந்தாரும் கொண்டாடி யிருக்கிறார்.

யதீயதாம—பகவான் 'ஸ்ரீநிவாஸன்' அன்றோ? 'ஸ்ரீநிவாஸனாகிற பரப்ரஹ்மம்' [பரஸ்மிந் ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே] என்பது ஸ்ரீ பாஷ்யகாரருடைய திவ்ய ஸூக்தி.

யதயோ—'யத்' என்னும் சப்தத்துடன் 'தம' என்னும் ப்ரத்யயம் சேர்க்கப்பட்டிருக்கின்றது. 'தர' என்பது சேர்க்கப் பெற்றால் 'யதர' என்று ரூபம் ஸித்திக்கும். 'அந்யதர' 'அந்யதம' 'கதர' 'கதம' என்பவை போல. 'இரண்டில் ஒன்று' என்னும் அர்த்தத்தில் 'தர' ப்ரத்யயமும், 'பஹுவில் ஒன்று' என்பதில் 'தம' ப்ரத்யயமும் சேர்க்கப் படும் என்று ஒரு விசேஷம் இருந்த போதிலும், அவ்விசேஷமின்றிக்கே ப்ரயோகமும் உண்டு. இவ்விடத்தில் 'யதயோ' என்பதற்கு 'யா' என்பதே பொருள்.

79. [பதவுரை] யா—எவள், க்ஷயாஸ்தவ—உன்னாலும், உதயிந்தய நயந்தலஜ்ஜா—ஸமுத்ரத்தைக் கடைந்து [மிக]ப்ரயாஸத்தின் மீது அடையத் தகுந்தவளோ, யா—எவள், அஸ்தஹிதேதி—கண் மறைந்து விட்டாள் என்னும் காரணத்தினாலேயே; [க்ஷம்—நீ], ஜகதுத்ஸ்யஸேநாத்யதஃ— ஜகத்தையே ஸ்ருஷ்டிக்க ப்ரவ்ருத்தனாக, ஆஸஃ—ஆனாயோ, யா ச—எவள், ப்ரதிக்ஷணம்—ஒவ்வொரு க்ஷணத்திலும், அபூர்வ ரஸாநுபாஂஸியே—அபூர்வமான ரஸத்தை யுடைய சித்த வ்ருத்திகளால், ஸவந்தம் - உம்மை, ஸதைவ - எப்பொழுதும், ஆநந்தயதே - ஆநந்திப்பிக்கிறாளோ.

ரூபேண யா கு³ணக³ணேந விலாஸபே⁴தை³ர் ஸ்தா²நை
ருதா³ரமது⁴ரைஶ்ச விசேஷ்டிதைஶ்ச ।
நித்யம் தவைவ ஸத்³ருஶீம் ஶ்ரியமீஶ்வரீம் தாம்
த்வாம் ச ஶ்ரித: பரிசரேயமுதீ³ர்ணபா⁴வ: ॥ 80

ஸத்யஸங்கல்ப:—நீ ஸத்ய ஸங்கல்பன். ஸங்கல்ப மாத்ரத்தினுல் ஸகல இஷ்டங்களையும் ஸாதித்துக்கொள்ள வல்லவன். அப்படிப்பட்ட நீயும் ஸமுத்ரத்தைக் கடைவது முதலான ப்ரயாஸத்தை முன்னிட்டே அவளை அடையவேண்டு மென்ருல், அவளுடைய மஹிமை எவ்வளவு பெரியதாய் இருத்தல் வேண்டும் என்பது கருத்து.

ஜநகாத்மஜா நீதா—ஸீதா தேவியை ராவணன் அபஹரித்துப் போனுன்; தேடியும் அவள் அகப்படவில்லை. அப்பொழுது 'ஜக³த் ஸமஸ்தம் பரிவர்த்தயாம்யஹம்' [ஜகத் முழுவதையும் கீழ் மேலாகத் திருப்பி விடுகிறேன்] என்று மிக்க ஸம்ரம்பம் கொண்டாய். ஸர்வேச்வரனுகை இருக்கும் நீ அப்படிப்பட்ட கோபம் கொள்ளுமளவு மஹிமை பெற்றவளன்ரே இவள்? 'ஸீதைக்கு ஒருவித தீங்கும் ஏற்படவில்லை; கண் மறையும்படி அபஹரிக்கப்பட்டதைத் தவிர்த்து வேரென்றும் ஸம்பவிக்கவில்லை. கோபம் கொள்வதற்கும் காரணம் அல்பம்' என்பதை ஸூசிப்பிக்கின்றது 'ஸுஹ்ருதா' என்னும் சப்தம்.

80. [ப-ரை] ரூபேண யா - விக்ரஹ சோபையாலும்; கு³ணக³ணை: - குண ஸமூஹங்களாலும்; விலாஸேந - அவதாரத்தாலும்; ஸ்தா²நை: - வாஸஸ்தாநத்தாலும், உதா³ரமது⁴ரைஶ்ச - அத்யுதாரங்களாயும் அதிமதுரங்களாயுமுள்ள சித்த வ்ருத்திகளாலும், விசேஷ்டிதை: - ஸமர்த்தங்களான சேஷ்டிதங்களாலும், நித்யம் தவைவ ஸத்³ருஶீம் - எப்பொழுதும் உனக்கே அநுரூபையாயிருக்கும், ஸர்வபூ⁴தேஶ்வரீம் தாம் ஶ்ரியம் - ஸர்வ பூதங்களுக்கும் ஈஶ்வரியாயுள்ள அந்த லக்ஷ்மியையும் த்வாம் - உன்னையும், ஶ்ரித: - அடைந்தவனுக, [அஹம் - நான்], உதீ³ர்ணபா⁴வ: - உதாரமான மநோரதத்துடன், பரிசரேயம் - [உங்களிருவருக்கும்] கைங்கர்யம் செய்வேனே?

நித்யம் தவைவ ஸத்³ருஶீம்—'ஸகல அம்சங்களிலும் லக்ஷ்மீ பகவானுக்கே அநுரூபை' என்பதால் 'அவனும் இவளுக்கே அநுரூபன்' என்பது த்யோதிதமாகின்றது.

"துல்யஶீலவயோவ்ருத்தாம் துல்யாபி⁴ஜநலக்ஷணாம் ।
ராக⁴வோऽர்ஹதி வைதே³ஹீம் தம் சேயமஸிதேக்ஷணா ॥"

யா பி³ப்⁴ரதீ ஸ்தி²ரசராத்மகமேவ விஶ்வம்
விஶ்வம்ப⁴ரா பரமயா க்ஷமயா க்ஷமா ச ।
தாம் மாதரம் ச பிதரம் ச ப⁴வந்தமேவ
வ்யுச்ச²ந்து ராத்ரய இமா: பரிசர்யதோ மே ॥ 81

என்பதன்ரே வால்மீகி மஹர்ஷியின் அநுபவம்? பிராட்டியின் ரூபமும் குணமும் சித்த வ்ருத்தியும் எம்பெருமானுடைய ரூபம் முதலியவைகளைக் காட்டிலும் அதிசயித்தவை என்று சில ஆசார்யர்கள் அநுக்ரஹித்திருப்பதெல்லாம் '[illegible]' என்று ஸ்ரீ பட்டர் ஆதராதிசயத்தால் சொன்னபடியே; வஸ்து ஸ்திதியோ இரண்டும் துல்யங்கள் என்பது தான். இரண்டு பெயர்களுடைய மஹிமையும் அளவுக்கு உட்பட்ட தன்ருகையால், அவர்களுக்குள் பரஸ்பர தாரதம்யம் சொல்லக் கூடுமோ?

81. பெரிய பிராட்டியின் வைசிஷ்ட்யத்தை அநுபவித்துவிட்டு, இப்பொழுது பூமிப் பிராட்டியின் வைசிஷ்ட்யத்தை அநுபவிக்கிருர். இவர்களுடைய பரிசர்யை யாவத்காலமும் ப்ராப்தமாகவேண்டு மென்று ப்ரார்த்திக்கிருர்.

[ப—ரை] யா - எந்தப் பூமி தேவியானவள், ஸ்தி²ரசராத்மகம் விஶ்வம் பி³ப்⁴ரதீ ஏவ - ஸ்தாவர ஜங்கம ஸ்வரூபமாயுள்ள ஜகத் முழுவதையும் பரிக்கிறவளாயிருக்கிருள் என்னும் காரணத்தாலேயே, விஶ்வம்ப⁴ரா - விச்வம்பரை என்னும் பெயரைப் பெற்றிருக்கிருளோ, பரமயா க்ஷமயா - நிரவதிகமான பொறுமை என்னும் குணத்தால், க்ஷமா - க்ஷமை என்னும் பெயரைப் பெற்றிருக்கிருளோ, மாதரம் தாம் - அப்படிப்பட்ட தாயாயிருக்கிற பூமியையும், பிதரம் ப⁴வந்தம் ச - பிதாவாயிருக்கிற உம்மையும், பரிசர்யத: - பரிசரிக்கிற, மே - எனக்கு, இமா: ராத்ரய: - இந்த ராத்ரிகள், வ்யுச்ச²ந்து - விடிதல் வேண்டும்.

பூமிப்பிராட்டிக்கு 'விச்வம்பரை' என்றும் 'க்ஷமை' என்றும் இரண்டு பெயர்களுண்டு. இவை இரண்டும் காரணப் பெயர்கள் என்பது இவ்விடத்தில் விவரிக்கப்படுகின்றது. [விஶ்வம் பி³ப⁴ர்த்தீதி விஶ்வம்ப⁴ரா] விஶ்வம் முழுவதையும் ஹரிக்கிறபடியால் 'விஶ்வம்ஹரை'. அளவற்ற பொறுமையுடன் கூடியிருக்கிறபடியால் 'க்ஷமை' ['க்ஷமா' என்பதற்குப் 'பொறுமை' என்பது பொருள்]. ஹரிப்பதும் பொறுத்துப் போவதும் லோகத்தில் தாய்மார்களுடைய அஸாதாரண குணங்களாகக் காணப்படுகிறபடியால், அந்தக் குணங்களைப் பரிபூர்ணமாக வஹிக்கும் பூமிப் பிராட்டி எல்

காம்பீர்யபாவமதுரைர் விவிதைர் விலாஸை:
ப்ரூவிப்ரமஸ்மிதகடாக்ஷநிரீக்ஷணைஸ்ச ।
யா த்வந்மயீ த்வமபி யந்மயவாந் ஸ மாம் ஸா
நீலா நியோஜயது கிங்கரதாதிகாரே ॥ 82

லாருக்கும் நிருபாதிக மாதாவாகிறாள் என்பது ‘[illegible]’ என்பதால் ஸூசிப்பிக்கப்படுகின்றது.

[illegible]—அவ்விதம் கைங்கர்யம் செய்யாமல் விஷய போகங்களில் ப்ரவர்த்தித்திருக்கும் காலத்தை இருளடைந்த இரவுகளாகவும் கைங்கர்யத்தில் ப்ரவர்த்தித்திருக்கும் காலத்தை விடியற் காலமாகவும் பேசுவது உபபந்நமன்றோ?

82. நீளா தேவியின் அநுக்ரஹத்தை ப்ரார்த்திக்கிறார்.

[ப—ரை] காம்பீர்யமதுரை: - கம்பீரங்களாகவும் மநோஹரங்களாகவுமிருக்கும், பாவை: - சித்த வ்ருத்திகளாலும், விவிதை: விலாஸை: - பல்வித விலாஸ சேஷ்டிதங்களாலும், ப்ரூவிப்ரமஸ்மிதகடாக்ஷ நிரீக்ஷணைஸ்ச -புருவ பங்கங்கள் மந்தஹாஸம் கடாக்ஷ பார்வைகள் இவைகளாலும், யா - எந்த நீளையானவள், த்வந்மயீ - உனக்கு அத்யந்தம் அநுரூபையாகவும் அபிமதையாகவும் இருக்கிறாளோ, த்வமபி - நீயும், யந்மயவாந் - எவளுக்கு அநுரூபனாகவும் அபிமதனாகவும் இருக்கிறாயோ, ஸா உதாரா நீலா - உதாரையான அந்த நீளாதேவி, மாம் - என்னை, கிங்கரதாதிகாரே- [நித்ய கிங்கரனாக] அங்கீகரிக்க வேண்டும்.

த்வந்மயீ - நீயாகவே இருக்கிறாளோ. அதாவது உனக்கு அதிமாத்ரம் அநுரூபையாகவும் அபிமதையாகவும் இருக்கிறாளோ.

‘[illegible] தஸ்யஸ்யாம் நித்யம் ஹ்ருதி ஸம்ஸ்தித: ।’

என்பது இவ்விடத்தில் அநுஸந்தேயம்.

நீளா தேவியின் போக படலங்கள் அத்யத்புதங்கள் என்பது ப்ரஸித்தம். அந்தப் போகங்களுடைய அநுபவத்தால் மயங்கி, எம்பெருமான் பக்தர்களுடைய தோஷங்களைப் பாராமலே இருக்கிறானென்று ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் ஸரஸமாக அநுக்ரஹித்திருக்கிறார்.

“ நிஶாமயது மாம் நீலா யத்போகபடலைர் த்ருவம் ।
பாவிதம் ஸ்ரீநிவாஸஸ்ய பக்ததோஷேஷ்வதர்ஶநம் ॥ ”

விழிவழி யொழுகுநீ ரருவி மெய்யினை
முழுமையு மூடவீண் கழிந்த நாளெலாந்
தொழுதன னரவணைத் துலங்கு சோதியின்
றெழுதரு நகையுட னிருகை கூப்பியே. 89

பருகிடப் பருகிடத் தெவிட்டு றுதவிண்
சுரர்களுங் கண்டிலாச் சுவைய ருந்துமா
றருகிட வுளமுமவ் வனுப வந்தனை
யருகணை திரும்பொழு தயின்று மற்றரோ. 90

தந்திருப் புதல்வரி ரிருவர் தம்மையுஞ்
சுந்தரத் தமகுரு துணைப்ப தங்களி
லுய்ந்துமற் றுயர்தர வுளுற்றி ரூடும்
பந்தமற் றவரெல்லாம் பரவும் பண்பினர். 91

ஆயபின் பாரிய ரருளிச் செய்தசெம்
பாயிரங் கொண்டரங் கத்திற் பாம்பணை
மேயவன் மிளிர்பத மலர்க்கட் டம்பரந்
தோய்தரச் சமர்ப்பணம் புரிந்து தூய்மையின். 92

இத்திருப் பொருளுணர்ந் தெங்கு முய்ந்திடச்
சித்திரத் திருப்பிர பதனஞ் செய்ததை
யொத்தநற் சதுச்சுலோ கியெனு மொன்று நூல்
வித்தகத் திணையற விளம்பி மற்றரோ. 93

தோத்திர விரத்தின மெனுமோர் தூய நூல்
பார்த்தனின் வலவனின் பதத்திற் சேர்தலை
யேத்திட வுலகெலா மியற்றி யெய்தினர்
நீத்திரண் டாவதை நான்கி னின்றதை. 94

வேறு

அக்கா லவரடியி லாளவந்தா ராழ்வாரு
மிக்கார் விழைகோட்டி யூர்பெரிய நம்பிகளு
மொக்காப் பெரியதிரு மலைநம்பி யுத்தமருந்
திக்கா மடையவர்க்குத் திருமாலை யாண்டானும். 95

வையம் புகழ்தெய்வ வாரியாண் டானுடனே
யைய ருயர்வான மாமலையி சாண்டாரும்
மெய்யன் றிருமோகூ ரப்பனொடு நின்றானுந்
தெய்வப் பெருமா ளிருக்குருகூர் தாசனுடன். 96

பின்மாற னேரிநம்பி பெருமகனின் காதலியாந்
தென்மாத் திருவரங்கத் தம்மைதிருக் கச்சிநம்பி
நன்மா லிருஞ்சோலை தாசருமிந் நந்நான்காம்
மன்மா மகிமையவர் மன்னினர்க ளுய்வண்ணம். 97

ஆங்குமணக் காலநம்பி யாளவந்தா ரின்பகட்டி
ஞேங்கு முவகையுடன் கண்டவரி னெண்முகத்தைத்
தேங்கு புகழ்க்குருகைக் காவலப்பன் றேத்துமக்குப்
பாங்கினரு ளப்பகர்ந்தார் பரிட்டனெரி ராசியமே. 98

என்றே யிசைத்தருள விவரவரின் றுடொழுது
நன்றே யெனையாள நாளருளி யாட்கொள்ளா
மின்றே யிடையைவர் மெல்லியலின் றுயர்களைந்த
பொன்றேயும் புட்கொடியான் றிருமந்தி ரம்புகன்று. 99

மற்றுமுள வருத்த மெல்லா மகிழ்ந்தளித்துச்
சிற்றறிவி னேனுய்யச் செய்தருணும் மாணையினைப்
பெற்று விளைகுவதே பேறடியேற் கென்றேத்தி
முற்றுந்தந் தரிசனமே மொய்த்திலகச் செய்துறைந்தார். 100

மாமணக்கா னம்பியடி மன்னினர்க ளாளவந்தார்
தீமையகல் சொட்டைநம்பி தெய்வத்துக் கரசுநம்பி
யாமத்தி ருவரங்கப் பெருமாள ரையருடன்
காமர்சிற பிள்ளையுடை யாரிங்கச் சோளாண்டான். 101

பிள்ளை யரசுநம்பி பின்னை ராசுநம்பி
வள்ள லிரும்பகடார் வங்கிபுரத் தாச்சியெனு
மெள்ள லறுமொன்ப தின்மரின்னோர் வியனுலகம்
விள்ளவகம் பேரின்பம் வீறக் கிளர்ந்தனரால். 102

ஆளவந்தார் சேயடிக்க ணவ்வொன்பா னுத்தமருட்
கோளமர்ந்த திருவரங்கப் பெருமா ளரையர்மிக
நீளவந்த பத்தியொடந் நின்மலனுர் நன்குதவும்
வாளமர்ந்து வாழ்பொருள்க ளெல்லாம் வகித்தருளி. 103

ஓவாத வைகலையே சிந்தனைசெய் துற்றவர்கண்
மேவாவு யிர்பிழைக்க மிழற்றுவதுங் கண்டுகந்து
தாவாப்பெ ருங்குணத்தோர் தந்தனரோர் பேரவர்க்கே
யாவாவென் றுளவந்தா ராழ்வா ரெனநயந்தே. 104

ஆன்றோ ரறைதருமவ் வாளவந்தார் மற்றுமவர்
தேன்றோ யியலிசையிற் றிருவாய் மொழிபாடும்
வான்றோய் வகையுணர்ந்து வண்மைபெறு மூதாதை
ஆன்றோர்ந் தருள்புரிந்த வாணை யதுவழியே. 105

ஈழை யகத்தாழ்வா னென்னக் கிளரரங்கற்
காழி நிகர்பிரபந் தங்களைநீ ராமாறே
வாழும் வகையுணர்ந்து பாடுகென வார்கருணை
வீழும் படியவர்மேல் வீழ்ந்து கடைக்கணித்தார். 106

அன்பா யவர்பாவ ராக மொடுதாள
மின்பா யியைந்தமுத மேன்றோர் செவிபருகப்
பொன்பா யுரவரங்கன் பொன்முடியுங் கண்டசைப்ப
மின்பாய் முகிலெனவே மேன்மையுறப் பாடினரால். 107

அம்மா வெனவவரு மார்வ மொடுபுகழா
விம்மா வுணர்வினர்க்கிங் கேன்ற திருநாமஞ்
செம்மாத் திருவரங்கப் பெருமா ளரையரென
விம்மா நிலமுரைக்க வென்றதனை யீந்தனரே. 108

மண்டலமெல் லாமணக்கும் மாமணக்கா னம்பிமறங்
கொண்டயமு னரியரைக் கூவியினி நீருலகிற்
றிண்டிறலார் தம்போனந் தர்சனத்தைத் திகழ்வுறுத்தப்
பண்டைநெறி யொருவர் பயின்றொளிரப் பண்ணுகென. 109

திருவாய் மலர்ந்தருளித் தேசிகர்தந் தாண்மலரைப்
பரிவா யுளத்திருத்திப் பயின்றுகொடு பண்ணவர்கண்
மருவா வழிகாட்ட வண்டமுக டுங்கடந்து
திருவாழ் வலமார்பன் றிருநாடு புக்கொளிர்ந்தார். 110

முனிகள் பவுத்திரனுர் முதலா முனிவர்களுங்
கனிவா யுளமுருகிக் கரைந்தே தெளிந்தன்பின்
னினியா ரரசுநம்பி யெழிற்கையா னுங்கவர்க்குத்
தனியார் சரமகயிங் கரியந் தாமுடித்தார். 111

வேறு

கோட்டின் மோதுங் குரைகடலின் றிரைசேர் மேதை குலவுளத்துத்
தீட்டும் புகழி:னுளவந்தார் பின்னை சின்ன ளவணகலக்
காட்டுங் கைதை முகைகுருகிற் கழனி சூழுங் கவலையெலாம்
வீட்டும் வீர நாரணமா புரமாந் தம்மூர் விழைந்தடைந்தார். 112

ஆண்டு குருகைக் காவலப்ப னடைவே யோகந் தனிலிருப்ப
மாண்ட தவக்கோர் மறையுறுமென் றஞ்சிப் பின்னே மறைந்துறைய
வீண்டெஞ் சொட்டைக் குலத்தவரீங் குளரோ வென்ன வவர்வினவ
மீண்டன் னொரு மிகவிரும்பு தெய்தி யப்ப னடிதொழுதே. 113

அடியே னெமுனைத் துறைவனும தழகார் வெரினின் புறத்திருந்த
படியே கண்ட படியேதென் றங்கை குவித்துப் பரவவர்
கொடியேம் பின்னைக் கெருதேழுங் குன்ற வடர்த்த நங்கண்ணன்
கடியேய் சொட்டைக் குலத்தவர்தங் காக்குங் கடவு ளாகையினே. 114

குலவா மகனை யீங்கவ்னுங் குளிரத் திருமீக் கண்டிடயா
நலமா யறிந்தே நுமையென்ன நகையும் வியப்பும் விஞ்சவிவர்
பலமா மயினேர் பொதுவியர்பால் குரவை பிணைந்த் பரனையகப்
புலவா வுணர்ந்து பொருவருமின் புறவே நும்போல் விழைந்தனறல். 115

ஐயே யதனு னகவிழியா னளைத்து முணரு மருயோகங்
கையே கமழக் கருணைபுரி யெனவே யடியிற் கிடந்திடனு
மெய்யே கமழு மவரிவரை மெல்லச் செங்கை கொடுவெழுப்பி
மையே றிந்த வுடலொருவு மைய்த் ததுவு மகிழ்ந்தளிப்பேம். 116

வருதைம் மதியி லதுவுமென வரைந்தோர் திருமா முகமளிக்கக்
கருதற் கரிய களிப்பினதைக் கையேன் றவர்பூங் கழறெழுது
நிருதர் வீயப் பொருதழித்த நிமலன் றஞ்சு மயர்வகலக்
கரிதோய் முகில்கள் கண்ணுறங்கு மெயில்சூ ழரங்கங் கலந்துறைந்தார். 117

ஆங்கோர் வைக றிருவத்திய யயனோற் சவமா மமயமதிற்
பாங்கே பெருகுந் திருவரங்கப் பெருமா ளரையர் பலர்மகிழத்
தீங்கே கெடுமிட ராயவெலாங் கேசவ வென்னுந் திருமொழியை
யோங்கும் பொருள்சே ரபிநயத்தி னுரகசாயிக் கெதிரோத. 118

முனிகள் பேரன் றிருமுகத்தைத் முன்னிப் பல்கா லெதிர்நோக்கிக்
கனிவாய் நடமி னோர்நமர்க ளுள்ளீ ரென்று கழறவவர்
நனியார் புகழி னம்மாழ்வார் நவிலு மாணை யிதுவெனவே
பனியா ருள்ளங் கொடுவனந்த புரத்திற் கன்றே படர்ந்தனரால். 119

சின்னு ளங்கு செலவப்ப னருளுஞ் செய்ய திருமுகத்தை
யுன்னு நோக்க வதன்றவனை யொருவக் காணு வுளமெலியாத்
தென்னு தெனவென் றளிமுரலும் பொழில்சூ ழரங்கந் திருமியெழு
தென்று ருயிர்க்கோ ருபிராம ரங்கன் பாத மிறைஞ்சினராம். 120

தம்மா சிரியன் பிரிவழலே தணற்றத் தளர்ந்து கிடந்தவவ
ணிம்மா வவனிக் கிசைபறப்புந் தெய்வ வாரி யாண்டானை
யம்மா நீரிங் கழுங்கலென்னே யாசா னடியிற் பரமளித்துச்
செம்மாந் தொழுகும் பிரபன்னன் செஞ்சொற் குரவர் பணித்ததையே. 121

வனைந்து வைக லதுவன்றே வழங்கும் வண்மை யெழிற்குரவர்
புனைந்து களிக்குங் கயிங்கரிய மென்றே தெருளப் புகலவவர்
நினைந்து தேறி நிலவவவ ணின்றே ராய முதலிகளு
மினைந்துதெருண்டவிவரின றத் தியற்கைதுணிந்தோ மெனமகிழ்ந்தார். 122

வேறு

அந்தவண்ண மானியம் பலநிகழ்ந்த பின்னுல
கிந்தமுந்து தரிசனத்தை யினிவிளக்கு மாறொரு
சந்தமுந்து குருவரங்கன் றந்தளிக்கு கென்றுள
நொந்திரந்தி யாமுனேயர் நோக்கிநின்ற வெல்லையில். 123

ஒழிவில்கால மெல்லாமென்னு முயர்திருவாய் மொழியினை
வழுவிலாத பொருளுடன் செவிப்புலத்து மாந்துபு
கெழுதகைத் திருமலை நம்பியும்மொர் கிளர்தினத்
தெழுதருந் திருமலைக்க ணேகவாவெ ழுந்தனர். 124

கண்டைதை யரங்கனங் கருத்தையிப் பெரியரால்
கொண்டருண் முடிப்பனென்று கூரிருங்க ளிப்புடன்
றெண்டிருப்ப தத்திலங்கு தீர்த்தமீந்து விட்டன
னுண்டுவந்து விடைமணந்து மாளிகைக்க ணுட்புகா. 12

தந்தைதெய்வத் துக்கரசு நம்பியோடு தம்முடன்
வந்தநான வார்குழலி ரண்டுதங்கை மாரொடு
மைந்தருவின் சினையடர்ந்த லங்குபொன் முடிகள்சே
ரிந்துலூரும் வேங்கடத்தை யேகியெய்தி னரரோ. 12

கலியுகக் கடவுளென்று கழறுமந்த மாயனைப்
பொலியவெப்பொ ழுதும்பூசை புரிந்துவைகு போதுபேர்
மலிபெரும்பூ தூராசூரி கேசவப்பெ ருமாளும்
மழலைமங்க லக்கமல நயனபட்ட ருஞ்செலா. 12

நும்முடன் பிறந்து மின்னு நுண்ணிடைக் குயில்களை
யெம்முடன் மணந்து வாழ்வீ ரம்புனலி னீகென்த்
தம்மனம் விழைந்தவர்க்குத் தாபமாதி யைந்தையுஞ்
செம்மையின் விளங்குமாறு செயலுணர்ந்து செய்துமுன். 12

முன்னவர்பூ மிப்பிராட்டி யென்னுமாதை முயங்கவும்
பின்னவர் பெரும்பிராட்டி யென்னுமாதர் பிணையவும்
பன்னரிய் தூரியம் பரவையிற் கறங்கவு
நன்னராகு மோர்கடிக்க ணடத்தினார்வ துவையே.

தயரதற் கரும்புதல்வர் தரணியுய்ய வாகுகென்
றுயர்கலைக்கோட் டொருமுனிவ ரருளின்முன் னுரைத்தவா
மயர்வகற்று மதலையிந்த மாதவர்க ளுக்குமிங்
கியலிருக்கும் வகையுதிக்க வென்றுமாசி கூறினார்.

ஆயபின்ன ரவ்விரண்டு தூயரும்வி டைகொளாச்
சேயரிக்கண் வதனமன்னு திருவனாரொ டுஞ்செலா
நேயமாய சேவலோடு நீலகண்ட முறைதிருத்
தேயரம்பை வளர்தம்பாடி யெய்திவாழு மெல்லையில்.

கண்ணனா ரணத்தினுண்மை காசினிக்க ணொளிருமா
றெண்ணியாதி சேடனாயி ரம்வதன நோக்கிநீ
முன்னனந்த னிலக்குவன்பின் மோதிலாங்க லீமிசை
நண்ணியிந்த வவதரிப்பை நானிலத்து மற்றுமே.

இக்கலிக்க ணின்னுமோ ரவதரிப்பை யெய்துவா
யொக்கவென் றுரைபுராண விரத்தினத்தி னுரைவணஞ்
சிக்கிமாயை யின்மயங்கு சீவராசி யுய்யுமா
றிக்கணத்தி ராமானுச னென்றுதிக்க வென்றனன்.

எம்பெருமானார் வைபவம்

22-வது சருக்கம்

இச்சையினெ திர்ந்தபகு திக்கணெழு மைந்தை
வைச்சவிர விற்கிளரி தற்குளிவண் வாழு
நச்செனும்வி னைக்குரியர் நாடினொரு மூன்றைப்
பச்சைமுகிற் பாதமிணைந் தென்றுமவண் வாழ்வார்.

வையமெனும் வார்கடலு டுக்கைவள மாதின்
மெய்யமரு மிப்பரத கண்டமெனு மின்னுஞ்
செய்யவத னத்துறுதொண் டீரமெனுஞ் சேணா
டையவொளி செய்யுமணி யந்திலக மாமே.

நாடதனு ணண்ணுபெரும் பூதூரெனு நல்லூர்
நீடுதில கத்துளிடை நேருமத னேரிற்
பீடினையெ ழுந்திலகு பேருலக முய்யச்
சேடனெனி னுஞ்சகலஞ் செப்பவரி தாமால். 3

நம்பரிய பாயலினி யந்நகர நண்ணு
மிம்பரின வன்பிரிவை யெய்துகில மென்று
வம்புயையு டன்கரிய மாலவண டைந்தா
னும்பருமு வந்தறையுங் கேசவனெ னப்போய். 4

அந்தணர வண்புரியு மவ்வரிய வேள்விச்
செந்தணலி னின்றெழுசெ ழுங்கரிய தூம
மிந்திரனி ருந்தவுல குக்கிவரு மேணிச்
சுந்தரமி டைந்ததுவெ னச்சொலுவ ரென்றும். 5

செய்யவெதி ராசனில யக்கெதிர் செகத்தோ
ரையவுயர் வும்பரும னும்மறிய லாகாத்
துய்யகருங் கல்லெழுவைத் தூக்கியதிற் பூதம்
பொய்யகலும் பூதபுரி யென்றதுபு கல்வார். 6

அஞ்சொலிய ரன்பருழை யிற்றொருக லாழும்
பஞ்சணையி லன்னவர்ப கர்ந்தவொரு பொய்யு
மஞ்சுநிக ரோதியர்வி ழிக்கணைம லைப்பும்
விஞ்சிடுவ தன்றியவண் வேறுபுரை யின்றால். 7

இருகடையிற் கச்சிமணி யிந்திரன தூரே
புரையரிய சென்னைமணி பொருந்துமொரு பொன்செய்
வரையபூமி ரத்தினவ டக்கிடைவ யங்குந்
தரையினது தங்குநடு நாயகமெ னத்தான். 8

இன்னநகர் தன்னிலன வரதமுல கேத்தும்
பன்னிரபி தானன்பத பங்கயமி ணைந்தே
மன்னரிய வாசுரிகே சவரெழின்ம னாட்டி
தன்னொருத வத்தினிலெ ழிற்கருத ரித்தாள். 9

முப்புரமெ ரித்தவனை முன்னருளு மாய
னப்பொழுது ரைத்ததிரு வாணையுள முன்னாத்
திப்பியக ருப்பையத னூடுதலைப் பெய்தான்
மைப்புயனி றத்தரியின் மன்னமளி யானாள். 10

ஆயிரமு நான்குசத மொன்றொருபத் தொன்பா
னேயகலி பிங்களமெ னும்வருட மேய
தூயமதி சித்திரையி னாதிரையிற் றோன்றிப்
பாயொளிப ரந்திடவொ ளிர்ந்தனன வன்பின்.

வேறு

இவ்வண்ண மெம்பெருமா னாருதித்தா
ரெனுமமுதி னினைந்த மாற்ற
முய்வண்ணம் பெரியதிரு மலைநம்பி
யுளங்குளிரச் செவியின் மாந்திச்
செவ்வண்ணச் சிசுவைமிடைந் திதம்பெருக
கடைக்கணித்துச் செய்ய வைய
வொவ்வெண்ணற் கரியமுக வொளிவிடுமு
தமகுணங்க ளுற்று நோக்கி.

இலக்குமியின் சம்பன்னா யிலகுவதி
னிலக்குமண னெனுமந் நாம
நலக்குரிய விளையபெரு மாண்முன்ன
நண்ணியவா நண்ணற்பாற் றொன்
னலக்கணறத் திருநாம கரணமிழைத்
தரியதிரு விலச்சினை செய்
துலப்பரிய வுலகறிய விளையாழ்வா
ரெனமுவந் துரைத்திட் டாரால்.

மற்றவரு மணிவடமா வனமுலையார்
மருங்கணைய வதியும் பாங்க
ருற்றபல முழைபொதுளு முரைமுடிக
ளாயிரமா யோங்கு மின்பம்
பெற்றதமிழ் வளம்பொழிலின் வடக்கெலை
பிறங்குதிரு மலையைச் சார்ந்தார்
கற்றவர்க ளுளங்களிக்கு மிளையாழ்வார்
கன்னலென வளர்ந்தார் நாளும்.

ஈன்றவெழிற் குரவருமவ் விளையாழ்வார்க்
கியல்சாத கரும மாதி
யான்றவுப நயனமுடி யாயியற்றற்
காமனைத்து மடைவே யாற்றி

வான்றருமா ரணநான்கும் வகைபெறவே
யோதுவித்து வயதீ ரெட்டி
லேன்றகுல மெழுவாயா யெவற்றினுமோர்
நன்னுதலை வேட்பித் தாரால். 15

மூவகையோர்க் காதரமா மொழிவரிய
மனையறமு மணந்த வன்னா
ராவல்கொடு வேதாந்தத் துறைபடிய
வதன்முதற்பங் காய முன்னம்
பாவலர்க ளனவரதம் பாடியுந்தன்
பண்படைய வளக்க லொல்லா
மீவருடுந் துகிற்படலம் வெயின்மறைக்குங்
கச்சிநகர் மேவா மன்னோ. 16

ஒருதடியே யுள்ளவொரு துறவியவன்
யாதவப்ர காச னென்போ
னருகணையா வவன்முகங்கொண் டஃதோதி
யுறைந்தனராங் கவரங் காரத்
திருமழலை மங்கலத்திற் றிகழ்கமல
நயனபட்டர் தமக்கு மீங்கே
யொருகருவிற் றிருமணந்த வுரைப்பரிய
தகைச்சிசுவொன் றுதித்த தம்மா. 17

கொன்னாருங் குரோதனத்திற் குலவுறுதைப்
புனர்வசுவி லுதிக்கக் கேட்ட
தென்னாரந் தணரிறையாந் திருமலைநம்
பியுமெழுந்தாங் குவந்து செய்ய
மின்னாரங் குழவிதனைக் கடைக்கத்து
மிகுகுணங்கண் மிளிரக் காணாப்
பொன்னாரங் கோவிந்த பட்டரெனும்
பொருவறுமோர் பெயரு மிட்டார். 18

தந்துபெய ரிலச்சினையுந் தகவிழைத்து
மிகவழுத்தித் தமதூர் சென்றார்
பிந்தியுயிர்த் தவர்புதல்வர் பெருகுதொறு
மமையமெலா மியற்றற் கேய்ந்த

வெந்தவிதி களுமியற்றி யெழின்ஞானப்
பிறப்புமளித் தீரிரண் டாய்
வந்ததனி மறையாவும் வரன்முறையே
யோதுவித்தார் வளர்செந் தீயார்.

பட்டருமே னிரம்புதற்குப் பண்புறுபன்
னூற்கடலைக் குடைந்து தீர
மெட்டியபின் பஞ்சலகா ரம்பொருந்து
மொருமயிலை யில்லா ளாக்கி
மட்டவிழுந் துளவமணி வண்ணனையே
மனத்திருத்தி மறையி னந்தம்
பட்டவொரு பரம்பொருளப் பண்ணவனே
யெனத்துணிந்து பணிந்து போந்தார்.

வேறு

பின்னே யவர்பெட் புறுகச் சிநகர்
மன்னே யடைந்தெம் பெருமா னாரிரு
பொன்னே ரடிகண் டுபொருந் தியுட
னன்னூல் பயில்வுற் றவணண் ணினரால்.

அங்குப் பலவை கலகன் றிடலுந்
துங்கத் தடியொன் றுளவத் துறவி
சங்கத் துறுசீ டர்சவைக் கிடைநூற்
சங்கைத் திரள்சா டிடவோர் தினமே.

சீவான் மவிசிட் டமுஞ்செய் யவுரு
வோவா வுயர்ஞா னமுமா யொளிருந்
தாவா |வொளிதங் குபரம் பொருளென்
றுவாழ் பொருளா மறையொன் றினையே.

வேறு யதுமா றிடவீண் பொருளைக்
கூறு வருகோ ணலுணர்ந் ததுபின்
மாறு விழமன் னுறுமெய்ப் பொருளை
யாறு யிளையாழ் வாரறைந் தனரால்.

அவரோர் தினமா ரியனின் றலைமே
னவமார் தயிலந் தனைநன் கிடலு
திவளுந் தினநா தன்செழுங் கதிரா
னவிழும் புரியம் புயமா மலர்போல். 25

கண்ணன் முகங்கா ணுமெனும் பொருளே
நண்ணும் மொருநன் மறையின் பொருள்வே
றுண்ணும் வகையுய்த் துணர்வின் றிளிவாய்த்
திண்ணங் கொளுமா றுதெரிக் கவவன். 26

செவியுற் றதுசெய் யவராற் றுகிலா
தவியத் திருவுள் ளமழும் விழிநீர்
சவியுற் றெரிதீ பிகைதன் னெயென
வவனிட் டகுறங் கிடைவீழ்ந் ததுவே. 27

வீழா வதுவெம் பவெரித் திடலுங்
காழா ருளன்கம் பமுறத் துடியா
மாழாந் துளமற் றழவிங் கெவனீ
தாழா துரைதா வெனவெங் குரவர். 28

உபமா னிடதத் துறுமொண் பொருளுஞ்
சுபமா மிதுவென் றுசெலச் சொலிவீ
ணபவா தமுறும் பொருளா டியநீ
நிபமா மனநெக் குறுகின் றனலுல். 29

என்று வவரேங் கியிம் பிடலும்
முன்று வவன்மூ ளுசினத் தொடுநீ
யென்று வுரையேன் றிடினீங் குகலை
யுன்று துளமோ திலதே லகல்வாய். 30

வேறோ ரிடமென் றுவிளம் பிடலும்
பேறு யுலகுக் கெழுமென் றியவர்
தேறு தயலெத் தலஞ்செல் குதுமே
லூறு கியதென் னவுயங் கினரால். 31

வேறு

அள்ளலங் கரிய பங்கத் தாமைகண் படுக்கும் பூதூர்
வள்ளலுங் கையினின் வாயின் வல்சியைப் பறிகொடுத்த
கொள்கையா யுழல வந்தக் குத்திரன் மறைவிற் றன்னை
யுள்ளுநர் சிலரைக் கூவி யறைந்தனன் பழித்த தொன்றை. 32

பரலொடு கலந்த நீரிற் பயில்வுறும் பண்பி னீர்நம்
மேலுறு மதமு மிந்த மேதையிற் சிறந்த நீரான்
சேலுகள் செழுநீர்ப் பண்ணை செறிபெரும் பூதூ ரானல்
வேலைசூழ் புவியி னெங்கும் விளங்குரு தவியுந் திண்ணம். 33

முண்மர முளைக்க வாங்கே யுகிர்கொடு களைத லின்றேற்
பின்மலிந் தடர்ப்போர் கையும் பிழைபடப் போழு மன்றே
தண்மையி னிவனைக் கொண்டே தடம்புனல் படிய வேகி
யொண்மைசேர் வரத திக்கண் வீழ்த்துவ துறுவ தாமால். 34

அஞ்சலீ ரிதனு னங்க ணகமொன்று மணுகா தென்று
செஞ்சொலாற் றெருட்ட வன்னார் தெருண்டொருப் படலு மந்த
வஞ்சகன் பூதூர் வள்ளல் வருகென வருகே கூவி
யெஞ்சலை யகநீ யைய வியந்ததுன் பொருளே கண்டாய். 35

நின்கருத் துணர்வா னீங்கு நிகழ்த்துமிம் மாற்றங் கொண்டே
பொன்கருத் துணரேல் வேறொன் றென்றவன் புகல வைய
னன்கருத் தவையே நாடி நாடொறும் பயின்று வந்தா
ரென்கருத் திவனுக் கென்றே யோர்ந்திடார் தினையு மென்றேன். 36

சிலபக லகல வேக தண்டியு மொருநாட் சீடர்
பலரொடு மிளையாழ் வாரைப் பண்புறத் திரட்டிக் கொண்டு
மலர்தலை யுலகி னெங்கு மல்கிய புனித நீரி
னலமுறப் படிது மென்று நவின்றன னடந்தான் மன்னோ. 37

செல்லலு மொருநா ளெய்யுஞ் செழுமத கரியு மாதி
யல்லல்செய் விலங்கின் சங்க மடர்தர வுலவு மாமோர்
புல்லருங் கரிய கானிற் கால்கழூஉங் கருமம் பூணுத்
தொல்லரும் பூது ரையர் தனித்தொரு துறையி னின்றார். 38

ஆங்கொரு தடிய னிந்த வாரியர் திறத்திற் கொண்ட
தீங்கது தெரிந்த முன்னங் கோவிந்த பட்டர் பைய
நீங்குக வயலே யென்று நிகழ்த்தின ரதனை யன்னார்
பாங்குறப் பரிவின் மற்றுங் குழூஉக்கொடு படர்ந்தா ரன்றே. 39

சிக்கிய கொலைஞர் தம்பாற் செவ்வியோ னொருவன் பைய
முற்புரி தவத்தி னுய்ந்த செயலென முதிய ஞானத்
திப்பெரும் பூதூ ராரும் வெருவுறு விகந்து வேறோர்
கப்புறு நெறியிற் பாய்ந்தார் கலங்குறுங் கானத் தம்மா. 40

பனிப்பகை யிளையாழ் வாரைப் பைம்புன லிடையில் வீழ்த்த
லினிக்கனிற் காண லொல்லே னிதன்முன்னர் யானும் வீழ்வே
னெனக்குட கடலுட் பாய்ந்தா னிருளெங்குங் கொடிய மாந்தர்
மனத்துறழ் தரவே பாய மண்விணுங் கறுத்த மாதோ. 41

அரணிய மடையப் புண்ட ரீகங்க ளுலவ லாய
முரணிய வலகைத் தோடு முடுகியே திரிய லாய
கரணமூன் றொருமை யாமக் கலைஞரக் கங்கு லாங்கோர்
மருணனி மனத்தின் வான்றோய் மரத்தடி யொதுங்கி மன்னோ. 42

ஆவாரார் துணைநீ யன்றி யருளாளா வென்ன மாழ்கி
நாவாரப் பழிச்சி யேத்த நான்முக னயர்ந்த வேள்வித்
தீவாருங் குண்டத் தன்று திகழ்தர வெழுந்த தேவன்
பூவாரும் பெரியதேவி புடைவரப் புறப்பட் டானல். 43

மருங்கிலா விலிச்சி யன்பின் மருங்குறப் படர வேகுங்
கருங்கலா ருரத்த ளுமோ ரிருளனே யென்னக் கண்ண
னெருங்கலாற் குரவ ரைய நீவிரா ரென்ன மாய
னிருங்கலா ரிந்தக் கானில் வதிதரு மிருள ராவேம். 44

நாமமும் வரத னென்ப நானிலத் தவர்க ளென்னைப்
பூமலி நறும்புன் னாகம் பொதுளிய மறுகே யார்ந்த
காமுறு மமரர் நாளுங் கச்சியம் பதிக்குச் செல்வேந்
தேமரு குழலா ளிந்தத் திருவுமெற் குரிய ளென்றான். 45

யானுமப் புரியே போவ லென்னையு மழைத்துப் போதி
நீனிறப் படிவத் தாயென் றியம்பவந் நிமலன் மாயன்
பானிறப் படிவத் தாய்நீ படர்கவெம் புறமே யென்னுத்
தேனிமிர் துளவத் தாரான் றிகழ்தர நடந்தான் முன்னம். 46

ஆரிய மணியு மாங்கே யகங்குளிர்ந் தவர்பின் போக
நேரிய னெறியு மிக்க நிகழ்தர நிலவே காலுஞ்
சீரிய வதனத் தாளுஞ் செல்வனை யினிது நோக்கி
வேரியந் தொடையா யுண்ணீர் வேண்டுமீங் குளதோ வென்றான். 47

வாதனு முறுவல் பூத்தோர் வாவியை யவட்குக் காட்ட
வருகுறு மிளையாழ் வாரு மான்றரு முதலி யாய
திருவின ரிவர்க்கு நாமோர் கைம்மாறு தெரிந்திங் காற்ற
லரியதோர் தரும மாமென் றிழிந்தன ரதனு ளாங்கே. 48

நறும்புனன் முகந்தி வர்ந்து நல்கலும் பருகி யந்த
மறங்கிளர் மறவ னுசை மங்கையின் மறையின் வல்லோய்
பிறங்குவ ததுகாண் செய்ய பீதக முடிய னென்று
மறங்கினர் புணியகோடி விமானமென் றறைவ ரம்மா. 49

என்றிசைத் தவரு மாங்கே விழிப்புலன் கதுவா தேக
முன்றிசை வெளுத்து வைகன் மணந்தது முரரரி கோயிற்
பொன்றிருப் புணிய கோடி விமானமும் பொலிவ துங்கண்
டென்றிருக் குரவ ருள்ளந் திகைத்தன ரிறும்பூ தெய்தி. 50

மூலமே யெனவாய் விண்டு முன்னரற் றியநால் வாயை
நீலமே கமென வோடி நேர்பெற வளித்த நீண்ட
தாலமே வியவி ராமன் றம்பியே யெனையு மிந்தக்
காலமே நெறியுங் காட்டிக் காத்தன னருளி னன்றே, 51

எய்த்தவர்க் கெயில்போ லைய னெம்மனை யுடனே வந்திப்
பித்தனை யளித்த வாறே யென்றவ னருளைப் பேணி
மெய்த்திரு வுளமு மாழ்கி முசித்தனர் கிடந்து மோகித்
துய்த்தறி வதனின் மற்றுந் தேறின ருவப்பி னுங்கே. 52

அஞ்சனைச் சிறுவ னீந்த வாழியா னன்று மோதம்
விஞ்சிய சனகி யென்ன விளம்பருங் களிப்பி னுடி
யெஞ்சலி னுதயகன்ம மருகுள விருந்த டாகத்
தஞ்செறி புனலி னுடி யாற்றுபு நகருட் புக்கார். 53

புக்கவ னனந்தப் பொய்கைத் தடத்தினிற் பொலியு மத்தி
வெற்பிடை யருளா ளன்றன் விரைமலர்ப் பதமு மன்னைச்
செக்கரின் மலரந் தாளுஞ் சிரங்கொடு வணங்கிக் காணிற்
றக்கதங் காத்துத் தண்ணீர் பருகிய தயையு முன்னு. 54

ஆனந்த பரித ராகி யன்றுதொட் டருளிற் காட்டுந்
தேனுந்து தெளிநீர்ச் சாலைக் கிணற்றுநீர் திரட்டிக் கொண்டு
வானுந்து புகழார் செய்ய மஞ்சனம் புரிய நாளுந்
தேனந்து துளவத் தாற்கே யுதவினர் திகழ்ந்தா ரன்றே. 55

வேறு

எங்கருங் குரவரிங் கிலகவவ் வடவியிற்
சம்பரன் மானுமச் சன்னியா சியுமவ
ரெங்கழிந் தனர்கொலோ வெவ்விலங் கயின்றதோ
சங்கையின் றினியெனப் பொங்கினன் றன்னுளம். 56

பெருகுகோ விந்தபட் டரையவன் பெட்பினந்
திருவளர் பூதூரன் றிறமுமொன் றறிகிலே
னுருகுமென் னுளமென வுண்மைபோ லுரைசெயா
மருவின னகங்கையை மற்றவ ருடனரோ. 57

மாகமா நானமா டுறவவண் மற்றவன்
மோகமா விஞ்சையின் மொய்ம்பொடோ ரிலிங்கமவ்
வாகையார் பட்டரின் வலக்கரத் தொன்றிட
வேகமா யியற்றியே விம்மிதம் பெறவுடன். 58

பட்டரே நுமதகத் தானருள் பட்டவா
றிட்டமே காணுநும் மிட்டதே வதையிதே
கட்டமே யகலுமிக் கடவுளே கதியெனத்
திட்டமே தொழுகெனத் தெரித்துளம் பிறழவே. 59

மயர்வுறும் படியதோர் மோகன மந்திர
வயமுறுஞ் செபமிழைக் கலுமவர் வளமன
மயர்வுறத் தகுமென வரனையே நாடினர்
பெயர்வரும் விதியினும் பெலமுளா ரெவர்கொலோ. 60

அன்றுதொட் டுள்ளங்கைக் கொணர்ந்தநாய் னுரெனு
வொன்றுடைப் பெயருட னுழுகமற் றவரெலாஞ்
சென்றுதத் தமதலஞ் சேர்வுறப் பட்டரு
மொன்றியுத் தமதமூ ரொண்டிலிங் கந்தனை. 61

வைத்தருச் சனைசெயா வருபொழு தருவளந்
தத்துகா ளத்தியிற் றகையுளோர் பலர்கள்வந்
தொத்தழைத் தேகவங் கேகியவ் வுயர்தலத்
தெத்திறத் தவர்களு மேத்துமா வதிந்தனர். 62

ஏகதண் டியுமெழிற் கச்சியே யெய்தியங்
கோகைகொண் டொளிருமெங் குரவரைக் கண்டுநீ
ரேகிலெங் கானிடை யெமையகன் றெத்தகைச்
சோகமுற் றலைந்திரோ வெனவகந் துளங்கினேன். 63

மணியிழந் தழிவுறும் மாசுணம் மற்றதை
யிணைதரக் களிகொளும் பெற்றியே யிங்கியான்
றுணையிலா வுமையிணைந் துளமகிழ் தூங்கினே
னணிகெடா வந்தவா றறைதிர்நீ ரென்றனன். 64

கரவடந் தினையெனுங் காண்குறு வவருமப்
புரையறும் வில்லியின் புகழுறுஞ் செய்தியை
யுரைசெயப் பின்னவன் னுளநடுக் குற்றிவர்
வரையறும் பீடினர் வலியுறும் பத்தரே.

இப்பரம் பாகவ தரையிழித் திடுவதிங்
கொப்பதன் றென்றவ ருழைதவ நசைகொளா
வப்பொழு திருந்தவ ரகவழிக் கூறுறு
தெப்பொழு தும்மவர்க் கியலுமா றெழுகினன்.

வேறு

ஈதிங்கி யங்கவிரு பாகவத ரிங்கிருந்து
மீதெங்குப் பொற்கிழிக்ன் மிக்குவெ யின்மறைக்கு
மாதங்கத் தேழெயில்சூழ் மன்னரங்கம் போயரங்கன்
பாதங்க ளைவணங்கி யாளவந்தார் பாலணைந்தார்.

அம்மா முனியடியு மஞ்சலிசெய் தாங்கெழலுஞ்
செம்மாந் துளமவரை நல்லுதவுஞ் செய்ததற்பி
னும்மா நகரிலெது நோன்மைபெறுஞ் செய்கையென
வெம்மா விளையாழ்வார்க் கிருளநளித் ததுமுதலாம்.

எல்லா விளைவுகளு மியம்பவெமு னைத்துறைவ
ரெல்லா ரவணையா னெம்மரங்கன் றாளிணையிற்
புல்லாச் சரண்புகுந்து போற்றியதும் பலித்ததியா
மல்லார்ந்த திண்புயமா மாயன்பி ராட்டியுடன்.

பேரா ரணிய மெழுந்தெம் பெருமானார்க்
கோரா வழித்துணையா யெழினகர நண்ணுவித்துச்
சீரார் புனல்பருகித் திருமஞ் சனநீரு
நேரா வுகந்துளனந் நின்மலனார் தாங்கொணர.

கோயிலெழு வாய்மூன்று கோளார் திருப்பதிகண்
மேய திருமாலின் மிக்கவருண் மேயினரா
லேயுந் தரிசனமிவ் வெம்பெருமா னார்வழியே
தோயும் பெரும்பகடென் றுள்ளந் துணிந்துடனே.

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயி ரத்தாண்டென்
றெல்லார் திருவரங்கற் கியம்பிமகிழ் மங்கள்முஞ்
செல்லா விளையாழ்வார் கண்டருளச் செய்யவிடை
புல்லா முதலிகளிற் புறப்பட் டனரடைவே.

எல்லா ஆயுர்வேத வைத்தியர்களும் இங்கிலீஷ்
டாக்டர்களும் பிறரும் கொண்டாடும்

சார்ங்கதர ஸம்ஹிதை

ஆயுர்வேத சாஸ்திரத்தின் ஸகல ஸாராம்சங்களும் அடங்கிய மிகப்
பிராசீன வைத்தியக் கிரந்தம்.

வைத்தியரத்னம்

பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,

ஆயுர்வேத பூஷணம், ஆயுர்வேதாசார்யர் அவர்களால்
ஸம்ஸ்க்ருதத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.
சீர்திருத்திய மூன்றாம் பதிப்பு

மூன்று கண்டங்களும் 32 அத்தியாயங்களும் அடங்கியது.

வைத்திய பரிபாஷை முதலியவைகள்.

1. பூர்வகண்டத்தில்:—(1) வைத்திய பரிபாஷைகள், (2) ஔஷதி முதலியவற்றின் விவரணம், (3) நாடீ பரீக்ஷாதிகள், (4) தீபந-பாசநாதி குண விவரணம், (5) சரீரதத்வாதிகள், (6) உணவு உட்செல்லும் வகை முதலியன, (7) ரோகவிவரணம் என்னும் ஏழு அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

ஔஷத முறைகள்.

2. மத்திம கண்டத்தில் :—(1) ஸ்வரஸ முறைகள், (2) க்வாத-கஷாய முறைகள், (3) பாண்ட கஷாய முறைகள், (4) ஹிமகஷாய முறைகள், (5) கல்க முறைகள், (6) சூர்ண முறைகள், (7) குளிகை-மாத்திரை முறைகள், (8) லேஹ்ய முறைகள், (9) ஸ்நேஹ-தைல-க்ருத-முறைகள், (10) ஸந்தாந ஆஸவாரிஷ்ட-முறைகள், (11) தாது-லோஹ-பாஷாணாதி-சுத்தி பஸ்மாதி முறைகள், (12) ரஸங்கள்-ரஸ-கந்தகாதி முறைகள் என்னும் பன்னிரண்டு அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

சிகித்ஸா கிரமங்கள்.

3. உத்தரகண்டத்தில் :—(1) ஸ்நேஹபாநவிதி, (2) ஸ்வேதவிதி, (3) வமநவிதி, (4) விரேசநவிதி, (5) வஸ்திவிதி, (6) நிரூஹவஸ்திவிதி, (7) உத்தரவஸ்திவிதி, (8) நஸ்யவிதி, (9) தூமபாநவிதி, (10) கண்டூஷாதி விதி, (11) லேபநாதி விதி, (12) இரக்த மோக்ஷணவிதி, (13) நேத்திர சிகித்ஸை, ஆகப் பதின்மூன்று அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

வேறு விவரம்.

எளிய வசனநடை, விஷயங்கள் ஒழுங்காகவும் தலையங்கங்களோடும் அமைக்கப்பட்டிருக்கின்றன. விரிவான உரை. விசேஷ அநுபந்தங்கள் ஸகல விஷயங்களுக்கும் விஸ்தாரமான விஷய அகராதிகள்.

உயர்ந்த காலிகோ பைண்டு	ரூ.	5	4	0
இரண்டாந்தர பைண்டு	ரூ.	4	4	0

வைத்திய கலாநிதி ஆபீஸ்,

11, ஆதியப்ப முதலித் தெரு, வேப்பேரி, மதராஸ்.

Registered No. M. 916.

தீபாவளிப்பண்டிகையில்

ஆடையாபரணங்களை உபயோகிப்பது மங்களகரம்.

ஆனால் அனைவரும் புதிய ஆடைகளையே அதிகமாய் உபயோகிக்கிறார்கள். அவற்றுடன் நவீன ஆபரணங்களையும் அணிவது அதிஷ்டங்களத்திற்கும் அகமகிழ்ச்சிக்கும் ஏற்றதல்லவா ?

பணக்காரர்களுக்கும் மற்றவர்களுக்கும் நகை !

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் நகை !!

சாதாரணகாலத்திற்கும் பிரயோஜனத்திற்கும் நகை!

எப்படி ?

இதில்

பொன்னெல்லாம் அசல் சவரன் பொன்.

சிகப்பு, நீலம், பச்சை, ஊதா முதலிய நிறங்களில் கற்கள் அமைக்கப் பட்டுள்ளன.

ஒரே விதமான கற்களாவது, கலந்தாவது கொடுக்க முடியும்.

கற்களோ கண்ணைக் கவரும் கற்கள்.

நீளம் இருபத்தைந்து இஞ்ச்.

டிஸைன் நாணயத்தில் நாணயம் அழகுக்கு அழகு.

ஆனால் விலையோ சர்வ சரச விலை !

சூராஜ்மல் லல்லுபாய் அண்டு கம்பெனி,

313, எஸ்பிளனேட், :: மதராஸ்.

Printed by Kabeer Printing Works, Triplicane, and Published by Vankipuram S. Vasudevachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd., Madras.

SRI VEDANTA DIPIKA

Vol. 25] DECEMBER 1936 [Part 6

ஸ்ரீ

வேதாந்த தீபிகை

OFFICE OF THE RE... 12 MAR 193.. MADRAS

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபையாரால்

ப்ரசுரிக்கப்படும் மாதத் தமிழ்ப் பத்ரிகை.

தாது ௵ கார்த்திகை ௴

பத்ராதிபர்கள் :

ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

CONDUCTED BY

Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd.,

VANI VILAS, 4—5, BADRIAH GARDEN ST., PARK TOWN, MADRAS

[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

விஷய ஸூசிகை

1. தமிழ்க்கிளி—திருமங்கை மன்னன் **235**
   [ஸ்ரீ உப. டி. ராமஸ்வாமி ஐயங்கார், அட்வொகேட், சென்னை.]
2. சௌசம் அல்லது பாரிசுத்யம் **242**
   [வைத்திய ரத்னம் பண்டித ஸ்ரீ. உப. எம். துரைசாமி அய்யங்கார்]
3. ஆவ்ருத்யதிகரண ரஸங்கள் **251**
   [ஸ்ரீ. உப. ஏ. வி. கோபாலாசார்யர்]
4. ஸ்ரீமத் ராமாயண ரஸாஸ்வாதம் **261**
   [ஸ்ரீ. உப. தி. வீரராகவாசார்யர்]
5. சரீராரோக்யமும் புது நாகரிகங்களும் **269**
   [ஸ்ரீ. உப. வி. அநந்தாசார்யர், சென்னை.]
6. திருவள்ளுவரும் திருமகளும் **271**
   [ஸ்ரீ. ரெ. திருமலை ஐயங்கார்]
7. விவர்த பாகம் **280**
   [ஸ்ரீ. உப. ஸ்ரீ மதுராந்தகம் தி. ஈ. வீரராகவாசார்யர்]
8. ஸ்ரீ வேதாந்த தீபிகையும் தமிழும் **289**
   [ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸராகவய்யங்கார், ஸ்ரீ ரங்கம்]
9. ஸ்ரீ ரஹஸ்ய சந்தேசம் **292**
   [ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸராகவன், ஸ்ரீரங்கம்]
10. திவ்விய சூரி சரிதம் **281—296**
   [வங்கீபுரம் : கோ. ஸ்ரீ. உப. ஸ்ரீனிவாஸாசார்யர்]

குறிப்பு :—(1) *சந்தாத் தொகையை தாமதமன்னியில் அனுப்பாவிடில் அடுத்த சஞ்சிகை* V. P. *யில் அனுப்ப நேரிடும்.*

(2) *மற்ற ஸமஸ்த விஷயங்களுக்கும் சபையின் ரிஜிஸ்டார்ட் ஆபீசின் விலாஸத்தைக் கவனிக்கவும்.*

T. Rajagopalachari,
General Secretary.

வையமேலா மறைவிளங்க

வாள்வேலேந்தும்

மங்கையர்கோன்

தமிழ்க் கிளி—திருமங்கை மன்னன்

[ஸ்ரீ. உப. டி. ராமஸ்வாமி ஐயங்கார் B.A. B.L. அட்வொகேட், சென்னை.]

[கார்த்திகை மாதம் க்ருத்திகா நக்ஷத்திரம் கூடிய பௌர்ணமியில் அவதரித்த திருமங்கை யாழ்வாரின் அஸாதாரண விசேஷத்தைத் தாம் அறிந்து அநுபவித்த படியை, நமது ரஸிகமணி ராமஸ்வாமி அய்யங்கார் இம்மாதம் பத்ரிகைக்கு அருளி யிருப்பது மிகவும் கொண்டாடத்தக்கது—வ. வே. ஸ்ரீ.]

வடமொழியாகிய ஸம்ஸ்க்ருத பாஷைக்கு ஶுகமஹர்ஷி போல், தென்மொழியாகிய தமிழுக்கு ஒரு ஶுகம் திருவாலி திருநகரிக் கடுத்த திருக்குறையலூரில் ஒரு கார்த்திகையின் கார்த்திகைத் திருநாளில் தோன்றியது. இந்த ஶுகம்தான் தமிழ் அமுதைத் தனது ப்ரபந்த ரூபமாய் உலகிற்கு ஊட்டிவைத்தது. செந்திறத்த தமிழோசை வடசொல்லாகிய எம்பெருமானை அச் செந்தமிழைக்கொண்டே பாடி, அவன் பெருமையை வெளிக்காட்டி யருளியவர் இவ்வாழ்வார். முன்புள்ள ஆழ்வார்கள் பாடிய பாசுரங்களைக்காட்டிலும், திருமங்கையாழ்வார் பாசுரங்கள் மிகுந்த சொற்சுவையுடையன வென்பது ப்ரஸித்தம். இவர் இருந்தமிழ்நூற் புலவராகையால், தமிழினிய ஓசையை வெகு செம்மையாகக் கையாண்டிருக்கிறார். வெண்சங்கமொன் றேந்திய கண்ணனும் கற்கவேண்டும்படியன்றோ கவியமைந்தபடி! பாசுரங்களில் சீர்களும் ப்ராஸ அநுப்ராஸங்களுமே மனதை ஆகர்ஷிக்குமவை. இச் சொல்லி னினிமையைக் கடந்து நோக்க மனமுடையோர் அளவற்ற பொருளி னினிமையிலும் ஈடுபடலாம்.

எம்பெருமானுடைய விபவாவதார மேன்மைகளை விரிக்கப் புகுந்தவர் ஶுகப்ரஹ்மம். அர்ச்சாவதார மஹிமைகளை அநுபவிக்க அவதரித்தவர் திருமங்கை மன்னன்.

" பரிநிஷ்டிதோऽபி நைர்குண்ய உத்தமச்லோக லீலயா ।
க்ருஹீதசேதா ராஜர்ஷே ஆக்யாநம் யததீதவாந் ॥ "

[ஸ்ரீபாகவதம் 2-1-9]

என்கிறபடி நிர்க்குண ஸமாதியிலிருந்து பகவத்குண சேஷ்டிதங்களில் அவகாஹித்தார் ஶுகமஹர்ஷி. தமது வாள்வலியால் எம்பெருமானிடத்து ஸர்வார்த்த க்ரஹணம் செய்த மங்கை மன்னனும், தாம் தற்ற

மந்திரத்தின் வழியே நின்று வைகுந்தம் புகுந்து நித்ய விபூதியை அநுப விக்க ப்ராப்தராயிருக்க, அர்ச்சாவதாரத்தில் ஆவிஷ்கரிக்கப்பட்ட ஆபிரூப் யத்தால் ஆகர்ஷிக்கப்பட்டு, 'எமக்கு இம்மையே அருள் பெற்றமையால்' என்று அநுஸந்தித்து, அறம் பொருள் வீட்டைத் துறந்து, காமபுருஷார்த் தத்தை அர்ச்சைகள் பக்கல் அவலம்பித்துத் தாமும் வாழ்ந்து நம்மையும் வாழ்வித்தருளுகிறார். இவர் அர்ச்சாரூபத்தில் தேஹாத்மவாதியாய்ப் போந்தமையைப் பெரிய திருமொழி தொடக்கமான இவரது ஆறு ப்ரபந் தங்களிலும் காணலாம். திவ்யாத்ம ஸ்வரூபம் நிற்க: இவர் திவ்ய மங்கள விக்ரஹத்தைக் காட்டிக்கொடுப்பதுபற்றி இவரது திருமொழி "அறிவு தரும் பெரிய திருமொழி"யென ஆசார்ய ஸ்ரேஷ்டரால் புகழப்பட்டது.

இவரைக் கிளி யென்னப்போமோ வெனில்: இது;அவர் தாமே தம் மைக் குறித்துச் சொல்லிக்கொள்ளும் சொல். திருமங்கை மன்னனுக்குக் கிளியினிடத்தில் அதிக மதிப்பு. பெரிய திருமொழியில், கிளிகள் மறை பாடுவதாக அடிக்கடி ஸாதிப்பதுண்டு. "அருமாமறை யந்தணர் சிந்தை புகச் செவ்வாய்க் கிளிநான் மறைபாடும்" என்று தில்லைத் திருச்சித்திரக் கூடத்திலும்,

"......................வேல் நெடுங்கண்
முளைவா ளெயிற்று மடவார் பயிற்று
மொழிகேட் டிருந்து முதிராத வின்சொல்
வளைவாய கிள்ளை மறைபாடு......"

[பெ. தி: 3-8-8].

என்று திருநாங்கூர் மணிமாடக் கோயிலிலும் பாசுரம் பாடுகிறார். திருச் சித்திரக்கூடத்துக் கிளி பாடியது நான்மறை; ஸம்ஸ்க்ருத வேதம். திரு நாங்கூர்க் கிளி பாடியது தமிழ்மறை. ஏனெனில் இங்கே பயிற்றியது மடவார்.

"மான்போலு மென்னோக்கிற் செய்ய வாயார்
மரகதம்போல் மடக்கிளியைக் கைமேற் கொண்டு
தேன்போலும் மென்மழலை பயிற்று நாங்கூர்"

[பெ. தி. 4-4-6].

என்றவிடத்தே இவ்விஷயம் துலக்கப்பட்டது.

5896

'முதிராத இன்சொல்' என்பதும், 'தேன்போலும் மென்மழலை' என்பதும், வட மொழியிலும் தென் மொழிக்கே மிகுந்த பொருத்த முடை யவை. தில்லையில் 'நான்மறை' யென்று பேசியவர் திருநாங்கூரில் 'மறை' யென்றுமட்டிலும் பேசியபடி. வேதம் தமிழ் செய்தான் மறையாயிரத்து இன்தமிழையே திருவுள்ளத்துக்குக் கொண்டாரெனத் தோற்றுகிறது. இவ்வண்ணம் கிளிகளுங்கூட செந்தமிழும் வடகலையும் திகழ்ந்த நாவுடை யனவென்று ஆழ்வார் அநுபவம். ஆதலால்தான் "வொயயஷ꞉ வாஸூரம்" என்கிற நிலைக்கு அநுகுணமாகத் திருநெடுந்தாண்டகத்தில் இவர் ஒரு பாசுரத்தில், 'சொல்லெடுத்துத் தன்கிளியைச் சொல்லேயென்று' என் றும், அடுத்த பாசுரத்தில் 'திருமாலைப் பாடக் கேட்டு வளர்த்ததனுற் பயன் பெற்றேன் வருகவென்று மடக் கிளியைக் கை கூப்பி வணங்கி னளே' என்று அதனை வணங்கியும், இப்படியெல்லாம் உயர்ந்த ரஸாஸ் வாதம் செய்தருளுகிறார். திருமங்கை யாழ்வாரையும் அவர் வளர்த்த கிளியையும் "உஹிதாஃ உஹதவ்யாணாஃ" என்னத் தட்டில்லையிறே. அவ் விருவரும்

"கூயபஷ்ூ ஊரம் நிதும் தாஷ்யூஷி வ ரஊஷி வ"

என்று செய்தவற்றைத் திரு நெடுந்தாண்டகத்திற் கண்டுகொள்வது.

பரகால நாயகியின் ப்ரேமாதிசயம் தலைக்கேறியபோது, திருத்தாயார் பாசுரத்தால் கிளியென்றே வ்யவஹாரம் ஏற்படுகிறது இவ் வாழ்வாருக்கு. மணவாளன் அவள் வளைக்கை பற்றி யழைத்து நடத்திச் சென்ற போது, கிளிபோல் மிழற்றி நடந்து போயினளாம் அப்பூங்கொடி. திரு நெடுந்தாண்டகத்தில், "மென்கிளிபோல் மிகமிழற்று மென்பேதையே" என்கிற விடத்தும், ஆழ்வார் 'மென்கிளி' யெனப் பேசப்படுகிறார். ஆக: தாமே தமக்கு ஸத்ருசம் சொல்லு மிடத்துக்குக் கிளியையே தேடிப் பிடிக்கிறார் கலியன். இதற்கு இனிமையாய் மிழற்றுவது தவிர வேறு காரணமு முண்டு.

இவ் வாழ்வாருடைய மார்த்தவம் வேறொருவருக்கும் கிடையாது. தனது மென்மை யறிந்து தன்னிடத்து விலக்ஷண கடாக்ஷம் செய்யாதது பற்றி எம்பெருமானைக் குறை கூறுமிடத்து, "நும்மடியா ரெல்லாரோடும் ஒக்க எண்ணியிருந்தீர் அடியேனை" என்று வைஷம்யம் பாராட்டாததற் காக அவனுக்கு வசைமொழி ஏற்படுகிறது. ஸ்வரூபத்தில் வைஷம்யாதி கள் தட்டாத ஸர்வ ஸமன் என்று முழங்குமவன் விஷயத்தில் இக்குறை யைக் கற்பித்ததும், 'எல்லாம் அறிவீர் ஈதே அறியீர்' என்று அவனது

65-911
N36-25

ஸர்வஜ்ஞத்வத்திற்குப் பங்கம் வரப் பாடியதும், தமது ஸௌகுமார்யத்திற்கேற்ப ஶரண்யன் அருள்புரியாமையால் எல்லாரும் விஶ்லேஷத்தில் நோவு படுவார். இவர் ஸம்ஶ்லேஷத்திலும் கடுமை தாங்கார்.

"வஞ்சி மருங்கு லிடைநோவ மணந்து நின்ற கனவகத்தென்
நெஞ்சு நிறையக் கைகூப்பி நின்றார்........"

என்றபடி இவரிடத்தில் ஸம்ஶ்லேஷித்து நின்ற தசையில் இவர் மார்த்தவத்தைக் கண்டு மனமிளகி அஞ்சலித்து க்ஷமைகொள்ள வேண்டிவருகிறது ஸர்வேஶ்வரனுக்கு. இப்படிப்பட்ட தசை யுடையோருக்கு விஶ்லேஷ ப்ரஸ்தாவம் ஸஹிக்கவொண்ணுமோ? மயர்வற மதிநல மருளப்பெற்று எப்பொழுதும் கண்ணநீர் கொண்டு ஆவி துவர்ந்து நிற்கும் நம்மாழ்வாரும் தோற்கும்படி யன்றோ தோற்றுகின்றது கலிகன்றியின் மிக மெலிந்த நிலை!

"பாவி நீயென் றொன்று செல்லாய் பாவியேன் காணவந்தே"

என்று நிராகரிக்கவாயினும், 'ஒருநாள் காணவராய்' என்று வேண்ட வல்லவரானார் நம்மாழ்வார். திருமங்கை மன்னனோ

"நிலையாளா நின்வணங்க வேண்டாயே யாகிலுமென்
முலையாள வொருநாளுன் னகலத்தா லாளாயே"

என்று கதாசித் ஸம்ஶ்லேஷமாயினும் பொறுப்பேனே யன்றி இப்பிரிவு தாங்க முடியாது என்று தபிக்கிறார். பராங்குசநாயகி "உண்ணுஞ் சோற்றில்" திருக்கோளூரேறத் தனிவழியே போகவல்லளா யிருந்தாள். இப்பரகால நாயகியோ திருவாலி எம்பெருமான் துணையா அவன் கைப்பற்றிச் செல்லச் சென்றனள். துணை யில்லாது போனால் இந் நாயகி முடிந்துவிடுவள் என்று அச்சங்கொண்டே இவள் தோழியும் உறங்காதிருப்பள்.

"தோழியும் நானு மொழிய வையந் துயின்றது." [பெ. தி. 11-2-6.]

என்றார் இவர். நம்மாழ்வார் பாசுரம் அமைந்தபடியோ

"...........அன்னையருந் தோழியரும்
நீரென்னே யென்னாதே நீளிரவுந் துஞ்சுவரால்" [திருவா. 5-4-5.]

என்று நள்ளிராவும் நன்பகலும் ஓலமிட வல்லவ ராயினர் நம்மாழ்வார்.

"உள்ளெலா முருகிக் குரல்தழுத் தொழிந்தே
னுடம்பெலாங் கண்ணநீர் சோர
நள்ளிரு ளளவும் பகலுநா னழைப்பன்" [பெ. தி. 1-1-5.]

என்கிறபடி முதல் முதலிலேயே வாடிக் குரல் கம்மிவிடுகிறது கலியனுக்கு.

"மாயும் வகையறியேன் வல்வினையேன்பெண் பிறந்தே"

என்று தமது பாரதந்த்ர்யத்தையிட்டுத் தேறியிருப்பர் நம்மாழ்வார்.

"நைஞ்சுடலம் துயின்றால் நமக்கினி நல்லதே"

என்று மங்கை மன்னன் முடிவதற்கு ஆஶாஸிப்பர். சங்கு சக்கரங்களென்று காணுதவிடத்தும் கைகூப்பவல்லார் நம்மாழ்வார். 'ஆழியொடும் பொன்னார் சார்ங்க முடைய வடிகளை இன்னாரென் றறியேன்' என்றவண்ணம், அஸாதாரண பரத்வ ஸூசகங்களான திருவாயுதங்களை ஏந்தி எதிர் நிற்கும் நாதனை இன்னாரெனவு மறியவொட்டுகிறதில்லை கலிகன்றியின் கரை கடந்த ப்ரேமை. இப்படியே கண்டபோதெல்லாம் "அழகியதா மிவரார் கொல்" என்றும், "பிணியவிழ் தாமரை மொட்டலர்த்தும் பேராளர் கொல் யானறியேன்" என்றும், "இவரா ரிதுவென் னிதுவென் னிதுவென்னோ?" என்றும், "அவ்வண்ணத் தவர்நிலைமை கண்டும் தோழி அவரை நாம் தேவரென்று அஞ்சினோமே" என்றும் பலபடியாக அறிவு மயங்கி நிற்பர்.

நம்மாழ்வா ரொழிந்த மற்ற ஆழ்வார்களையும் இவ்வண்ணமே நம்மடியா ரெல்லாரில் வைத்து ரஸிகர்கள் பார்த்துக்கொள்வது. பெரியவாச்சான் பிள்ளையும் திருநெடுந்தாண்டக அவதாரிகையில்: "அல்லாத ஆழ்வார்களைப் போலேயும் ஸ்ரீ ஜநகராஜன் திருமகளைப் போலேயு மன்றிக்கே ஸம்ஶ்லேஷாஸஹமான ஸௌகுமார்யத்தை யுடையராயிருப்பர்" என்று நம் மங்கை மன்னனைப்பற்றி வெகு அழகாய் ஸங்க்ரஹித்தருளினர். ஆனது பற்றி இவ்வாழ்வார் மென்கிளி யாயினர். திருப்பாவை அருளிச்செய்த ஆண்டாளும், எல்லா ஆழ்வார்களையும் தோழிகளாக்கித் திருப்பள்ளி யுணர்த்தும் பாசுரங்களில், இனி திருவவதரிக்கப்போகும் திருமங்கை மன்னனை "எல்லே! இளங்கிளியே!" என்று அழகுபெற நிர்த்தேசித்தருளுவதும் அத்யந்தம் அநுபவிக்க வேண்டிய விஷயம்.

குறிப்பு:—அர்ச்சாவதார வடிவழகில் மிக்க ஈடுபடும் திருமங்கை மன்னனுடைய அர்ச்சாரூபமான திவ்யமங்கள விக்ரஹம் திருவாலி திருநகரியில் மிகுந்த லாவண்யத்துடன் எழுந்தருளியிருப்பதை இன்றைக்கும்

அநேகர் ஸேவித்து ஆநந்திக்கிறார்கள். அந்த திவ்யமங்கள விக்ரஹ விஷய மாய்ச் சில பாசுரங்களை அங்கே எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரேஷ்டர்கள் அநுஸந்தித்து வருகிறார்கள். அவைகளை அருளிச்செய்த வர் இன்னாரென்று அறியக்கூடவில்லை. மணவாளமாமுனிகளா யிருக்க லாம் என்பது சிலர் அபிப்ராயம். அப்பாசுரங்கள் பின்வருமாறு:—

திருமங்கை மன்னன் திவ்யமங்கள விக்ரஹ விஷயமான ஈடுபாடு

(1) அணைத்த வேலும், தொழுத கையும்; அழுந்திய திருநாமமும், ஓமென்ற வாயும், உயர்ந்த மூக்கும், குளிர்ந்த முகமும், பரந்த விழியும், பதிந்த நெற்றியும், சுருண்ட குழலும், வடித்த காதும், அசைந்த காது காப்பும், தாழ்ந்த செவியும், செறிந்த கழுத்தும், அகன்ற மார்பும், திரண்ட தோளும், நெளித்த முதுகும், குவிந்த இடையும், அல்லிக் கயிறும், அழுந் திய சீராவும், தூக்கிய கருங்கோவையும், தொங்கலும், தனிமாலையும், தளிருமிளிருமாய் நிற்கிற நிலையும், சாற்றிய திருத்தண்டையும் சதிரான வீரக்கழலும், தஞ்சமான தாளிணையும், குந்தியிட்ட கணைக்காலும், குளிர வைத்த திருவடி மலரும், வாய்த்த மணங்கொல்லையும், வயலாலி மணவாள னும், வாடினேன் வாடி வாழ்வித்தருளிய நீலக் கலிகன்றி, மருவலர்த முடல் துணிய வாள் வீசும் பரகாலன் மங்கை மன்னனான வடிவே.

(2) உறைகழித்த வாளையொத்த விழிமடந்தை மாதர்மே
லுருகவைத்த மனமொழித்து வுலகளந்த நம்பிமேல்
குறையைவைத்து மடலெடுத்த குறையலாளி திருமணங்
கொல்லைதன்னில் வழிபறித்த குற்றமற்ற செங்கையான்
மறையுரைத்த மந்திரத்தை மாலுரைக்க வவன்முனே
மடியொதுக்கி மனமடக்கி வாய்புதைத்து வொன்னலார்
கறைகுளித்த வேலணைத்து நின்றவிந்த நிலைமையென்
கண்ணைவிட் டகன்றிடாது கலியனாணை யாணையே.

(3) காதுசொரி முத்தும் கையும் கதிர்வேலும்
தாதுபுனை தாளிணையும் தனிச்சிலம்பும்—நீதிபுனை
தென்னாலி நாடான் திருவழகைப்போல்
என்னானை யொப்பாரில் லையே.

(4) வேலணைத்த மார்பும் விளங்குதிரு வெட்டெழுத்தை
மாலுரைக்கத் தாழ்த்த வலச்செவியும்—காலினில்
தண்டையும் வீரக்கழலும் தார்க்கலியன் வாண்முகமும்
கண்டு களிக்குமென் கண்.

(5) இதுவோ திருவரசு இதுவோதிரு மணங்கொல்லை
இதுவோ எழிலாலி யென்னுமூர்—இதுவோதான்
வெட்டுங் கலியன் விரட்டி நெடுமாலை
யெட்டெழுத்தும் பறித்த விடம்.

(6) ஸ்ரீமான் ஸ்ரீநகரீநாதாய கலிவைரிணே ।
சதுஷ்கவிப்ரதாநாய பரகாலாய மங்களம் ॥

கலியன் வாழித் திருநாமம்

ஐயனருள் மாரிசெய்ய வடியிணைகள் வாழியே
அந்துகிலுஞ் சீராவு மணியரையும் வாழியே
மையிலகு வேலணைத்த வண்மைமிக்கு வாழியே
மாறும லஞ்சலிசெய் மலர்க்கரங்கள் வாழியே
செய்யகல னுடனலங்கல் சேர்மார்பும் வாழியே
திண்புயமும் பணிலமன்ன திருக்கழுத்தும் வாழியே
மையல்செய்யு முகமுறுவல் மலர்க்கண்கள் வாழியே
மன்னுமுடித் தொப்பாரம் வலயமுடன் வாழியே.

ஶ்ரீ:

சௌசம் அல்லது பாரிசுத்யம்

வைத்தியரத்னம் பண்டித ஶ்ரீ. உப. எம். துரைசாமி ஐயங்கார்,
ஆயுர் வேதபூஷணம், ஆயுர்வேதாசார்ய. (புரசபாக்கம்.)

['சௌசம்' என்கிற விஷயத்தைக் குறித்துப் பத்ரிகைக்கு ஒரு வ்யாஸம் எழுதியனுப்பவேண்டுமென்று நாமே இவ்வாசிரியரை ப்ரார்த்தித்தோம். அது விஷயத்தில் அந்த ஸ்வாமி அநுக்ரஹித்ததற்கு நாம் நிரம்பவும் நன்றி பாராட்டுகிறோம். அது நிற்க: இவ் விஷயத்தைக் குறித்து அவச்யம் எழுதவேண்டுமென்று நாம் ப்ரார்த்தித்ததற்கு அநேக முக்ய காரணங்களுண்டு. ஆர்யர்களான நமக்கு அநாதி காலம் முதல் சாஸ்த்ரங்களிலும் அநுஷ்டாநங்களிலும் ஏற்பட்டிருக்கும் ஆசாரங்கள் அனைத்தும் காரணங்களை வெளியிடாமலே விதிரூபமாகவே ஏற்பட்டிருந்தபோதிலும், அவை இஹத்திலேயே ஸுகத்திற்கும் ஸந்தோஷத்திற்கும் ஸாதநமாக இருப்பனவென்பதைத் தத்காலத்தில் அறிந்தார்களில்லை. பாஶ்சாத்ய வித்யையினால் ஏற்பட்ட குணமோ தோஷமோ காரணத்தைத் தேர்ந்து கண்டுபிடிக்கும் விஷயத்தில் தீராத ஓர் அவாவும் உத்ஸாஹமும் உண்டு. அதனால் தத்காலத்தில் பாஶ்சாத்ய ரீதியில் அதிக அபிநிவேசமுள்ள சிறுவர்கள் செய்யவேண்டுமெனச் சொல்லப்படும் ஒரு கார்யத்திற்குக் காரணம் தெரிந்தாலொழிய, அதைச் செய்யவேண்டியதில்லையென்று தீர்மாநம் கொண்டவராயினர். ஆதலால் ஒரு கார்யம் சாஸ்த்ரத்தால் விதித்திருப்பது 'சிஷ்டாசாரம் ப்ராசீந அநுஷ்டாநம்' என்று சொல்வது கார்யத்தைச் செய்வதற்குப் போதாத காரணமாயிருப்பது மன்றி, மேலும் அவ்வித கார்யங்களில் ஸ்வதந்த்ர புத்தியினால் அநாதரமும் த்வேஷ புத்தியுங்கூட உண்டாகிவிடுகின்றன. அது பற்றியே சாஸ்த்ர ரீதியிலும் ப்ராசீந ஆசார ரீதியிலும் நம்மவர்களால் எண்ணிறந்த நூற்றாண்டுகளாய் அநுஷ்டிக்கப்பட்டுவரும் அநேக வழக்கங்கள் வைதிகர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டும் அனுஷ்டிக்கப்பட்டும் வந்தபோதிலும், அவைகள் ஹேயமானவைகளல்ல. அவைகளெல்லாம் வைத்ய சாஸ்த்ரத்தாலும், ஸுகாதார சாஸ்த்ரத்தாலும் நன்கறிந்து நியமிக்கப்பட்டவைகளென்று இக்காலத்தவர்க்குத் தெரிய வருமேயாகில், மற்றுள்ள வேதாந்தம் முதலான அபிமத மதங்களிலும் ஆதரணீய புத்தி உண்டாகலாமென்று எண்ண இடமிருக்கின்றது. அதற்கும் இவ்வித வ்யாஸங்கள் உபகாரகங்களாய் ஏற்படக்கூடும்.

இந்த நமது மாதப் பத்ரிகையில் ஆசிரியரால் எழுதப்பட்ட வ்யாஸத்தில் பாஹ்ய சௌசத்தைப் பற்றி எழுதப்பட்டிருக்கும் முதல் பாகமே ப்ரசுரப்படுத்தப்பட்டிருக்கிறது. மறு ப்ரசுரங்களில் ஆப்யந்தர சௌசம், மனஶ்சௌசம் முதலானவைகளைக் குறித்து எழுதப்பட்டிருக்கும் பாகங்கள் ப்ரசுரிக்கப்படும். இதனடியில் பதிப்பிக்கப்பட்டிருக்கும் பாஹ்ய சௌச விஷயத்தில் முக்யமாய் கவனிக்கவேண்டியது எதுவெனில்: நம்மவர்களால் ஆதிகால முதல் கண்மூடித்தனமாய் அநுஷ்டிக்கப்படுபவை யென்று எண்ணப்படக்கூடிய ஆசாரங்கள் யாவையும் ஒன்று ஒன்றாக ஆதுநிக பாஶ்சாத்யர்களால்

மிகவும் உயர்ந்தவை யென்றும் ஆதரணீயங்களென்றும் வ்யாதி நிவாரண ஸுகாதாரங்களுக்கு அத்யாவச்யகங்களென்றும் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. அவைகளில் சிலவற்றை இங்கு ஸூசிப்பபது உபயோகமாகும். முகம் வாய்களை அடிக்கடி அலம்புவது, வாய் கொப்பளிப்பது, தினம் பல் தேய்ப்பது, ப்ரதி தினமும் ஸ்நாநம் செய்வது, எச்சிலின் தோஷத்தை யறிந்து எவ்விடத்திலும் துப்பாமலிருப்பது, ஒருவர் கடித்துச் சாப்பிட்டதையாவது சாப்பிட்ட பாத்திரத்தி லிருந்தாவது மற்றொருவர் உபயோகப்படுத்தாதது, கண் மூக்குக் காது மலங்களை ஸ்பர்சித்த கைகளை அலம்புவது, ஜலமலத்வாரங்களை ஜலங்கொண்டு சுத்தி செய்வது, வெளியில் போய் வந்ததும் கை கால்களை அலம்புவது, அசுசியானவைகளைத் தொட்ட பிறகு சுசியானவைகளைத் தொடுமுன் கைகளை யலம்பிக்கொள்வது, வீடுகளையும் பாத்ரங்களையும் அசுத்தமான ஸ்தலங்களையும் சுத்தம் செய்வது, உடுத்தின வஸ்த்ரத்தைத் திரும்பவும் உடுத்துமுன் தோய்த்துலர்த்துவது, அசுசியானவர்களை ஸ்பர்சித்தாலும் கிட்ட நெருங்கினாலும் ஸ்நாநம் செய்வது, இப்படி பல விதத்தில் சுசியின் பாவமாகிய சௌசம் என்பதை முக்யமாகக் கருதிக் கொண்டாடி அப்யஸித்து வருவதின் மேன்மையும் அவச்யமும் வைத்யரத்ந பண்டித ஸ்வாமியால் எழுதப்பட்டிருக்கு மிந்த வ்யாஸத்தை வாசிப்போர்க்கு அது ஸம்பந்தமான விஷயங்களின் உண்மையைக் கண்டறிவதால் நம்முடைய ப்ராசீநமான ஆசார. அநுஷ்டாநங்களில் ஸ்திரமான பஹுமதி உண்டாகக்கூடுமென்று நம்புகிறோம்—வ. வே. ஶ்ரீ.]

முன்னுரை

வேதாந்த விமர்சங்களை அல்லது வைதிக ஸம்பிரதாயோசித விஷயங்களைப் பிரசுரிப்பதற்கான இப்பத்திரிகைக்கு விஷயதாநம் செய்யுமாறு 'பத்திராதிப ஸ்வாமிகள் வைத்தியத் துறையிற் பிரவ்ருத்தியுள்ள என்போன்றவனை அடிக்கடி நியமிப்பது அடியேனுக்கே விநோதமாகத் தோன்றும்போது, பிறர் அவ்விதம் நினைக்க நேருமென்பதில் வியப்பொன்று மில்லை. பெரியோரது உத்ஸாஹ பூர்வகமான கட்டளையினால் தூண்டப்பட்டு, அவர்கள் குறிப்பிட்டுக் கூறிய மேற்படி விஷயமாய் இக்கட்டுரையை எழுதத் துணிந்தேன். ஆசாரம், ஆரோக்கியம், ஆத்மசுத்தி, ஐஹிகாமுஷ்மிக ஶ்ரேயஸ்ஸுகள் ஆகிய அகில அம்சங்களுக்கும் அடிப்படையா யுள்ள அளவு கடந்த விஷயங்களடங்கியது சௌசமென்பது. வைதிகக் கிரந்தங்களிலும் வைத்திய சாஸ்த்ர நூல்களே சௌச முறைகளை அர்த்த புஷ்டியுள்ள வகையில் அதிகமாக விளக்குகின்றன. ஆனால் வைதிக வித்வான்களிற் பலர் ஆயுர்வேத க்ரந்தங்களில் ஆதரவு காட்டுவதும், அவை கூறுவனவற்றைப் பிரமாணமாகப் பரிக்கிரஹிப்பதும் அரிதென்பதை அறிந்து, இவ்வியாஸத்தில் வைத்திய—வைதிக ப்ரமாணங்களைச் சேர்த்துக் காட்டியே சௌசவிதியை விமர்சம் செய்ய முயல்கிறேன். உள்ளும் புறமும் எப்பொழுது சுசியா யிருக்கவேண்டு மென்கிற உபதேசமொழியை ருசியாக ஆஸ்

வாதநம் செய்யப்பட வேண்டுமென்றால், வேதாந்த தீபிகையின் வாசக நேயர்களைப் போன்ற விவேகிகள் அதற்கு ஏற்றவராவர். மற்றவருக்கு அதிற் சில அல்லது பல அம்சம் நாவிற்குச் சுவைக்காத நோய்தீர்க்கும் மருந்து போல் வெகுட்டலா யிருக்கு மன்றோ?

சௌசம் ஸர்வ ஸம்ப்ரதிபந்நம்.

ஶௌசம் என்கிற சப்தத்தைக் குறிப்பிடும்போதே வைதிகர்களுக்கு —முக்கியமாய் வைஷ்ணவர்களுக்கு—ஜல-மலோத்ஸர்ஜநங்களுக்கும் பிறகு ம்ருத்திகையும் ஜலமுங்கொண்டு செய்யப்படும் குஹ்யசோதந விஷயமே முதலில் முக்கியமாய் மனத்தில் தோன்றும். நமது ஆஹ்நிககாரர்களும் யாஜ்ஞவல்க்யாதி ஸ்ம்ருதிகாரர்களும் "गन्धलेपक्षयकरं शौचं कुर्यादतन्द्रितः" என்று ஆரம்பித்து, இதைத்தான் முதலில் ஶௌசமாகக் கூறுகிறார்கள். ஆனால் ஆபாதமாக அவ்வாறு குஹ்யசுத்தியை ஶௌசமென்று ரூடார்த்தம் போல் கருதுபவர் விஷயவிமர்சம் செய்யாத ஸாமாந்ய வைதிகரேயன்றி வைதுஷ்யம் பெற்ற வைதிகர்களல்லர். இஹபர ஸுகங்களை ஜனஸமூஹத்திற்கு அறிவிப்பதற்காக ஏற்பட்ட நமது தர்ம சாஸ்திர வைத்திய சாஸ்திரங்களும், நவ்யநாகரிகர்களெனப்படும் மேனாட்டு ஆரோக்கிய சாஸ்திர ஆசிரியர்களும் ஶௌசம் என்கிற சுத்தி நியமத்தை மூன்று அல்லது நான்கு விதமாக வகுத்துக் கூறியிருப்பதை நோக்குங்கால், புராண-நூதனக் கொள்கைகள் யாவும் ஶௌச மென்கிற சுத்திவிஷயத்தில் ஒரே சீரா யிருப்பதாகவும், பலமான அடிப்படையின்மேல் அமைந்திருப்பதாகவும், அந்நியமங்களிலிருந்து அணுவளவு தவறினாலும் அநர்த்தங்களுக்கு அது ஹேதுவாகுமென்பதாகவும் தெரியவரும். மூன்று நான்குவிதமெனக்கூடிய ஶௌசம், ப்ராசீன-அர்வாசீனர்களனைவரின் கொள்கைப்படி பொதுவாக பாஹ்யமென்றும் ஆந்தரமென்றும் இருவகைப்படும். அவற்றுள் பாஹ்ய ஶௌசமானது, தேஹ ஶௌசமென்றும் தேச ஶௌசமென்றும் மீண்டும் இரண்டு விதமாகப் பகுக்கப்படுவதுண்டு. அவ்விதமே ஆந்தர ஶௌசமும், ஆப்யந்தர தேஹ ஶௌசமென்றும் மநஶ்ஶௌசமென்றும் இருவகையாகப் பிரிக்கக் கூடியதாம். இவ்விதம் ப்ரக்ருத விஷயத்தை விபஜநம் செய்து விளக்கத் துவக்கும்போதே, இது ஸம்பந்தமாக என் மனத்தில் தோன்றுகிற உபயோகமுள்ள விசேஷங்களையெல்லாம் சுருக்கிக் கூறுவதெங்ஙனமென்று நானே சங்கையுடன் தயங்கி யெழுத வேண்டியிருக்கிறது.

சௌசம் பொதுவாய் இரண்டு விதம்.

வைதிக தர்மங்களின் அநுஷ்டானத்திற்கு அடிப்படையான ஶௌசம் என்பது வைத்திய சாஸ்திரக் கொள்கையையே மூலமாயுடையது. ஆகவே

வைதிக ஸம்பிரதாயார்த்தமாயுள்ள தர்ம சாஸ்திராதிகளைப்போலவே வைதிகக் கொள்கைகளில் ஈடுபட்ட வைத்தியதந்திரப் பிரவர்த்தகர்களும், ஶுசித்வத்தின் பெருமையையும், அதனால் மானிடர் அடையக் கூடிய பெரும் பேறுகளையும் பற்றி இவ்வாறு விபஜநபூர்வகமாக விளக்கி யிருக்கிறார்கள் :—

' बहिरन्तश्च शुचिना सुखिना धर्मचारिणा ।
भवितव्यं नरेणात्र चामुत्र श्रेयसे सदा ॥

बाह्यान्तश्शौचनित्यस्य सुखे शारीरमानसे ।
सुखार्थाः सर्वभूतानां मताः सर्वाः प्रवृत्तयः ॥ ''

[இம்மையிலும் மறுமையிலும் பேறுகளை விரும்பும் விவேகமுள்ள மனிதன் பாஹ்யமாகவும் ஆப்யந்தரமாகவும் ஶுசியாய் நடக்கவேண்டும்; பிணிகளை விலக்கி இனிது வாழவேண்டும்; அவனவனுக்குக் கடமையாயுள்ள தர்மங்களைச் சரிவர நிறைவேற்றவேண்டும். இவ்வாறு உள்ளும் புறமும் இடையறாது ஶுசியாயிருப்பவனிடம் வியாதிகளும் வாரா; ஆதிகளும் அணுகா; விவேகிகளுடைய ஸகல ப்ரயத்னங்களும் அனைவருடைய ஐஹிகாமுஷ்மிக ஸுகங்களுக்காகவே யன்றி வேறல்ல] என்று பாவமிஶ்ரர் என்கிற வைதிக மார்க்காவலம்பியான வைத்தியப் பிரமுகர் கூறுகிறார். பாஹ்யமான மலமூத்திரங்கள் போன்ற அழுக்குகளை அலம்பிச் சுத்தம் செய்ய ம்ருத்திகையையும் ஜலத்தையும் உபயோகிக்கிறார்கள்; ஸ்வேதம், தைலப்பசை யடங்கிய வேறு மலாம்சங்கள், ஆகியவற்றைக் கழுவித்தள்ள கஷாய ரஸமுள்ள சீயக்காய் அல்லது அது போன்ற தசாங்காதி சரக்குகள் கலந்த ஜலமோ அல்லது அவற்றாலாகிய க்வாதங்களென்கிற கஷாயங்களோ ஏற்றவையே யன்றி வெறும் ம்ருத்திகையும் தண்ணீரும் போதா. ஆகவே சரீரத்தின் பாஹ்ய மலங்களை அலம்பிச் சுத்தம் செய்ய ம்ருத்திகை, ஜலம், கஷாயவகைகள் முதலியவை தேவையென்றும், ஸத்வாவலம்பநத்தினால் காமக்குரோதாதி மாநஸிக தோஷங்களை விலக்கி மநஶ்ஶுத்தியைப் பெறவேண்டுவதவஶ்யமென்றும் நம் ஸம்பிரதாயஸ்தர்கள் கூறும் "शौचं तु द्विविधं प्रोक्तं बाह्याभ्यन्तरभेदतः । मृत्कषायजलैर्बाह्यं भावशुद्धिरथान्तरम्" என்கிற இப் பிரமாண ஶ்லோகம் பிரதிபாதிக்கின்றது. வைத்திய சாஸ்திர ரீதியான பாஹ்யசுத்தி யென்கிற தேஹ ஶௌச தேச ஶௌசங்களிரண்டில் தேஹ ஶௌசத்தைப் பற்றியே ஒரு சிறிது விவரிப்போம்.

தேஹ சுத்தி.

ஒருவனுடைய நடக்கை நீதிதவறாததா யிருக்கலாம்; மனதும் மாசற்றதா யிருக்கலாம்; ஆனால் உடலும் உடையும் ஊணும் அசுசியாய் அல

கோலமா யிருந்தால், அவன் அநாரோக்கிய நிலைமைக்கு ஆஸ்பதமாவதுடன், ஜன ஸமூஹத்தினிடையே அணுகிப் பழகவொண்ணாத அஸஹ்ய புருஷனென்கிற அவச் சொல்லுக்கும் பாத்திரமாவது திண்ணம். இதைத்தான் நிகமாந்த தேசிகன் "**द्विजराजाङ्कसंस्थोऽपि सन्मार्गाकरवानपि। विशुद्धिरहितः कश्चित् न विन्दत्यकलङ्कताम्**" என்று நிபுணமாக நிரூபித்திருக்கிறார். "**शुचिः प्रसाधितकेशः, कर्तितनखः, सुप्रसन्नमुखः, साधुवेषः, प्रशंसनीयः साधुभिः**" [சுத்தஸர்வாங்கனாய், தைல-ஸ்நானாதிகளால் ஸம்ஸ்கரிக்கப்பெற்ற கேசங்களைப் பெற்றவனாய், கத்தரித்துச் செம்மைப்படுத்திய நகங்களுடையவனாய், பரிசுத்தமாகத் தெளிவுற்ற முகமுடையவனாய், வெகு ரம்யமான உடை முதலிய வேஷமுள்ளவனா யிருப்பவனையே சான்றோர் சாலவும் மதிப்பர்] என்று ஆயுர் வேதப் பிரவர்த்தகரான அக்னிவேசரும் பாஹ்யமான தேஹ ஶௌசித்வத்தைச் சிறப்பாகக் கூறுகிறார். தேஹத்தைப் பரிசுத்தமாக வைத்துக்கொள்வதும், வேஷம் சுத்தமா யிருப்பதும் ஆசார-ஆரோக்கியங்களுக்கு மாத்திரமல்ல; உருவத்தின் உயர்பாட்டிற்கும் உவக்கக்கூடிய ஒளிக்குங்கூட அது காரணமாவதாக நாம் அறிவோம். ஸ்நாநாதிகளாற் பரிசுத்தமாகவும், ஆஶ்ரமதர்சன நிமித்தமாய் அடக்கமான வேஷத்தினால் புனித ஸ்வரூபமாகவும் வஸிஷ்டாஶ்ரமம் செல்லும் திலீபதம்பதிகளையும் கவி ஸார்வபௌமன் அங்ஙனமே "**कान्त्यभिख्या तयोरासीत् व्रजतोः शुद्धवेषयोः**" என்று உருவமும் வேஷமும் சுத்தமாயிருப்பதன் பெருமையை வர்ணிப்பது இங்குக் குறிப்பிடத்தகுந்தது. ஆகவே ஶௌசம் அல்லது பாரிசுத்யமானது வைத்திய சாஸ்திரப் பிரவர்த்தகர்களாலும், வைதிக தர்மங்களைப் பிரவசநம் செய்தவர்களாலும், விலக்ஷணமான நாகரிக மர்மங்களை விளங்கச் செய்த கவிசிரோமணிகளாலும், மனித வாழ்க்கையின் மாசற்ற நிலைமைக்கு இன்றியமையாததென்று ஒருமனதாக எக்காலத்திலும் பிரசம்ஸிக்கப்பட்டதென்கிற உண்மையை முற்கூறிய மூன்று பிரமாணங்களும் விளக்குகின்றன.

அருணோதயத்தில் துயிலெழுக.

அவ்வாறு தேஹ சுத்தியைப் பராமரிக்கும் முறைகளைப் பற்றியே ஆயுர்வேத நூல்களில் திநசர்யாதிப் பிரகரணங்களும், நம் ஆசார்யர்கள் இயற்றிய ஆஹ்நிகக் கிரந்தங்களும், யாஜ்ஞவல்க்யர் - பராசரர் முதலிய முனிவர்க ளியற்றிய ஸ்ம்ருதிகளும் நமக்கு நல்வழி காட்டுகின்றன. நம் தேஹாத்ம சுத்தியைக் கோரிப் பிரவ்ருத்தித்துள்ள வைத்திய - வைதிகக் கிரந்தங்கள் எல்லாம் அருணோதயத்திற்கு முன்பே அனைவரும் எழுந்து தேஹ சுத்தியை நிறைவேற்றுவது தான் நிஷ்டைக்கும் நிகரில்லாத ஸௌகத்திற்கும் ஆஸ்பதமென்று உபதேசிக்கின்றன.

"**अपनोदनहेतवे मलानां मनसश्चापि शरीरतश्च सद्भिः।**
अरुणोदयकालतः पुरस्तात् शयनोत्थानमुदीरितं सुखार्थम्॥"

என்று ஆரம்பித்து, மலோத்ஸர்ஜநம் செய்து மேனியின் ஸௌகத்தையும், மனதின் நைர்மல்யத்தையும் பெருக்கிக்கொள்ளப் பிராஹ்ம முகூர்த்தந்தான் ஏற்ற காலமென்று 'ராஜவல்லபம்' என்றும் வைத்திய நூல் கூறுகிறது. ஆசார்ய வாக்படர் முதலிய வைத்தியாசார்யர்களும்,

"**ब्राह्मे मुहूर्त उत्तिष्ठेत् स्वस्थो रक्षार्थमायुषः।**
शरीरचिन्तां निर्वर्त्य कृतशौचविधिस्ततः॥"

என்று சரீர சிந்தை என்கிற ஜல-மலோத்ஸர்க்கங்களைப் பிராஹ்ம முகூர்த்தத்திலேயே எழுந்து செய்து, ஶௌசத்தையும் சிறிதும் முறை தவறாது நிறைவேற்றும் ஆசாரமே ஆரோக்கியமும் ஆயுள் அபிவ்ருத்தியும் பெற ஹேதுவாகும் என்கிறார்கள். இவ்விதம் அதி காலையில் துயிலெழுந்ததும் மலோத்ஸர்ஜநத்தை அடுத்து ஒரு முறை ஶௌசத்தைச் செய்துவிட்டால் மாத்திரம் ஆரோக்கியாசாரங்கள் நிறைவேறிவிடு மெனக் கூறியதாகச் சிலர் தவறுதலாகக் கருதிவிடக் கூடுமென்று யோசித்து, ராஜவல்லபகாரர் "பாதங்களையும், மலமார்க்கங்களையும் அழுக்குகள் சேரும்பொழுதெல்லாம் அடிக்கடியும் அலம்பிச் சுத்தம் செய்வது அவசியம். அவ்விதம் ஶௌசம் செய்வதுதான் மேதை என்கிற மதி விசேஷத்திற்கும், புனிதத்தன்மைக்கும், ஆயுள் அபிவ்ருத்திக்கும், பாவ மொழிந்து பாக்கியம் அபிவ்ருத்தியாவதற்கும் ஆஸ்பதமாகும்" என்று பின் வரும் ஶ்லோகத்தினால் பிரதிபாதிக்கிறார்:—

"**मेध्यं पवित्रमायुष्यमलक्ष्मीकविनाशनम्।**
पादयोर्मलमार्गाणां शौचाधानमभीक्ष्णशः॥"

மல-ஜலோத்ஸர்ஜந முறை

வைத்திய தந்திரங்கள் இவ்வாறு விதித்துள்ள தேஹாத்ம சுத்திக்கு அவஶ்யமான ஆரோக்கிய ஸாதநமான ஆசார முறைகளும், தர்ம சாஸ்திரகாரர்கள் மொழிந்துள்ள ஶௌசாசார முறைகளும், ஒரு சிறிதும் வேறுபட்டவைகளாகத் தெரியவில்லை. யாஜ்ஞவல்க்யருடைய

"**दूरादुच्छिष्टविण्मूत्रः पादाम्भांसि च मार्जयेत्।**
श्रुतिस्मृत्युदितं सम्यक् नित्यमाचारमाचरेत्॥"

என்கிற இந்த வசநம் வைத்திய சாஸ்திரத்திலுள்ள ஆரோக்கிய விதிக்கு எவ்விதத்திலும் அநுகூலமா யிருக்கிறது. விஜ்ஞாநேஶ்வர வியாக்யாநப்

படியும், ஆரோக்கிய சாஸ்திர ரீதியாகவும், **दूरात्** என்கிற பதம் அதிக் அர்த்தபுஷ்டியுள்ளது. வீடுவாயில்களுக்கும், நதீ தடாகாதிகளுக்கும் அருகில்லாமல் அதிக தூரம் சென்று, ஜன ஸஞ்சாரமுள்ள மார்க்காதிகளுக்கும் தூரத்தில் ஏகாந்தமான பிரதேசத்தில் ஜல மல விஸர்ஜநம் செய்ய வேண்டுமென்று 'தூர' சப்தம் விதிக்கிறது. பாநார்ஹமான நதீ தடாகாதிகளிலேயே பிரக்ஷாளநாதிகள் செய்வது மிகவும் நிந்தநீயம். மல விஸர்க்கத்திற்குப் பிறகு செய்யப்படும் ஶௌச க்ருத்யம் வெகு நன்றாகச் செய்யபடவேண்டுமென்பதோடு, ராஜவல்லபம் சொல்லுமாறு அவ்வித சுத்தியை அவஶ்யமானபோதெல்லாம் எப்பொழுதுமே செய்யவேண்டுமென்று 'நித்யம்' என்கிற பதமும், 'அபீக்ஷ்ணஶ:' என்கிற பதமும் வற்புறுத்துகின்றன. ஜலமலவிஸர்க்கத்துக்குப் பிறகானாலும் சரி, வேறு ஸந்தர்ப்பங்களிலானாலும் சரி, மலாயதநங்கள் எனப்படும் குஹ்ய-கக்ஷாதி அவயவங்களையும், ஸ்வேதாதிகள் சேரும் மற்றும் அவயங்களையும், அவை நிர்மலமாய் விட்டன என்று திருப்திகரமா யுணரும் வரையில், பல தடவைகளிலோ அடுத்தடுத்தோ சுத்தம் செய்யவேண்டியது அவஶ்யமென்று "**यावता मन्यते शुद्धिं तावच्छौचं समाचरेत्। प्रमाणं शौचसंख्याया न शिष्टैरुपदिश्यते**" என்கிற வசநமும் விளங்க உபதேசிக்கின்றது.

பல மலாயதநங்களின் சௌசம்.

மலாயதநங்களான அவயவங்களை நிர்மலமாகப் பராமரித்தலோடு மாத்திரம் ஶௌச க்ருத்யம் நிறைவேறுவதாக நினைப்பது தவறு. பற்களைப் பல முறையும் துலக்கிச் சீராக வைப்பது, நாக்கைத் தேய்த்து அழுக்கற்றதாகச் செய்வது, சிரஸ் தேஹம் இவற்றைச் சீராக நிர்மல நிலைமையில் வைக்க நீராடுவது, ஆகியவைகளும் ஆரோக்கிய-ஆசாரங்களுக்கு அவசியமான ஶௌச க்ருத்தியங்களென்று வைத்தியாசிரியர்கள் பலவிடங்களிற் பிரதிபாதநம் செய்திருக்கிறார்கள். அவ்விதமான பிரமாணங்களுள் சக்ரதத்தருடைய அடியில் வரும் வசநமும் ஒன்று.

> " **मलायतनशोधनं ननु विधाय दन्ताननु**
> **प्रमृज्य खदिरेङ्गुदीसुरसनिम्बकाष्ठादिभिः ।**
> **मलं च रसनातलात् अथ निवार्य चाद्भिर्मुखं**
> **विशोध्य सुजलैश्चरेत् स्नपनकर्म शौचार्थकम् ॥** "

இதில் **शौचार्थकम्** என்கிற பதத்திற்கு மல சோதநம், தந்ததாவநம், ஜிஹ்வாநிர்லேகநம் (நாக்கைத் தேய்த்து வழித்துக் கழுவுவது) கண்டூஷம் என்கிற முகப் பிரக்ஷாளநம், ஸ்நாநம் ஆகிய இவ்வனைத்தும் ஶௌசம் என்கிற பாரிபாஷிகப் பெயரால் வழங்கப்படும் என்பது பொருள் என்று

சிவதாஸரது வியாக்யாநம். தர்ம சாஸ்திர வாக்கியங்கள் இதினும் மேலாக ஆரோக்கியாசாரங்களுக்கான உபாயங்களை வற்புறுத்த உத்தேசித்தே ப்ரவ்ருத்தித்திருப்பதாகத் தெரியவருகிறது. நித்திரை செய்து எழுந்திருக்கையிலும், மல-ஜல விஸர்க்காதிகள் செய்யுமிடங்களிலும், நாசி முதலிய இதரத்வாரங்களிலும், மலங்கள் நுண்ணிய அளவாகவேனும் சேர்ந்திருக்குமென்றும், அவற்றையும் கண்டூஷாதிகளால் மாத்திரமல்ல, மிக்க நிர்மலமான ஜலத்தைக்கொண்டு ஆசமநமென்கிற ஶௌசோபாயத்தினால் பல முறை சுத்தி செய்யவேண்டுமென்பதைக் கருதியே "**त्रिः प्राश्यापो द्विरुन्मृज्य खान्यद्भिः समुपस्पृशेत्। अद्भिस्तु प्रकृतिस्थाभिर्हीनाभिः फेनबुद्बुदैः**" என்று ஸ்ம்ருதியும் விதிக்கிறது. இவ்வசநத்திற்கு வியாக்யாநம் செய்யும் விஜ்ஞாநேஶ்வரர் "ஊர்த்வகாயமென்கிற கழுத்திற்கு மேற்பட்ட அவயவங்களில் அடங்கியுள்ள நாசி முதலிய த்வாரங்களை அவற்றிற் சேரும் மலாம்சங்களை விலக்கும்பொருட்டு அதி பரிசுத்தமான் தண்ணீரால் அலம்பிச் சுத்தம் செய்யவேண்டும்" என்பது இவ்வசநத்தின் பொருள் என்று "**ऊर्ध्वकायगतानि घ्राणादीनि द्वाराणि अन्तस्सञ्चितमलनिवारणार्थं अतिनिर्मलाभिरद्भिः शोधयेत्**" என்கிற வியாக்யாந வாக்கியத்தினால் விவரித்திருக்கிறார். ஆசமநமும் புனிதமான ஒரு ஶௌச க்ருத்யமே. '**शुचिप्रणीः**' என்று அது வழங்கப்படுவதற்கும் இது தான் காரணம்.

அஸாங்கர்யம் அல்லது தீண்டாமை.

ஸங்கரமான ஸ்தலங்களில் புசிப்பதும், அசுத்தமான உணவுகளையுண்பதும், அழுக்குள்ள அல்லது நோய் கொண்ட அல்லது வேறு அருவருக்கத் தகுந்த மனிதருடன் ஸம்ஸர்க்கம் செய்வதும், தர்ம வியவஸ்தைகளைத் தழுவாமல் அவ்யவஸ்திதனாயிருப்பதும் துராசாரமாகுமென்றும், அவற்றைப் பரிஹரிப்பதும் முக்கியமாக ஶௌச கர்மமாகக் கருதப்படுவதாகவும் அடியிற் குறிக்கப்படும்

> " **अभक्ष्यपरिहारश्च संसर्गश्चाप्यनिन्दितैः ।**
> **स्वधर्मे च व्यवस्थानं शौचमेतत् प्रकीर्तितम् ॥** ",

என்கிற பார்ஹஸ்பத்ய ஸம்ஹிதா வாக்கியம் (ஏகாதசீ தத்வப்பிரகரண வாக்யம்) நமக்கு நன்கு விளக்குகின்றது. ஜ்வரம் முதலிய அறுபத்து நாலு வித ஸாங்கிராமிக வியாதிகளில் எதனாலாவது வருந்துபவருடைய உடல் தோஷ துஷ்டமாயிருக்குமென்றும், ஆகவே அத்தகையவருடைய அருகிற் செல்வதுகூட தகாதென்றும், அவ்விதம் பிணியாளிகளிடம் அணுகாமலிருப்பதால் தேஹத்திற்கு ஶுசித்வமும், ஶுசித்வத்தினால் வியாதிகளிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்வதற்கான அநுகூலமும் ஏற்படுமென்றும் சக்ரபாணி ஸங்கிரஹம் பின்வருமாறு கூறுகிறது.

"ज्वरादिभिश्चतुष्षष्ठिव्याधिभिर्ये ह्यभिद्रुताः ।
वपुस्तेषामशुद्धं स्यात् न गच्छेत् तत्समीपतः ॥
शुचित्वमात्मनस्तेन रोगतश्चापि रक्षणम् "

நைர்மல்யத்திற்கான நெறிகளில் நோக்கமுள்ள சிஷ்ட புருஷன் பிறர் உபயோகித்த சயநம், ஆஸநம், உடைகள் முதலியவற்றை உபயோகிக்கக்கூடாது. பரஸ்த்ரீ ஸம்ஸர்க்கம் தகாது. உரத்து வாய்திறந்து சிரிப்பதும், தோன்றிய விடங்களில் வெளிப்படையாக இருமுவதும், கண்டவிடங்களில் எப்பொழுதும் நாசியைச் சிந்திப் போடுவதும், தோன்றியவாறு கொட்டாவி விடுவதும், பிரமேய முணராது பிறரைத் தீண்டுவதும், சுசியாயிருக்க விரும்புபவனால் முற்றிலும் விலக்கத் தகுந்த விஷயங்களாம். ஏனெனில்: ஆசாரத்திற்கு அடிப்படையா யிருப்பது சௌசமே; அது தான் ஆரோக்கியத்திற்கும் ஆயுள் அபிவ்ருத்திக்கும் காரணமாகும். 'தேஹ-மனோவலிமையையும், சரீர காந்தியையும், மற்றுமுள்ள நன்மைகளையும் வளர்ப்பது சௌசமே' என்றவாறு சௌசம் என்பதைப்பற்றி மிகச் சுருங்கவே சுக்ர நீதி ஶ்லோகங்கள் நமக்கு உபதேசிப்பதை அடியிற் குறிப்பிடுகிறேன்.

"परशय्यासनादीनि परिधानपरिग्रहान् ।
उच्चैःप्रहसनं कासं ष्ठीवनं कामतः सदा ॥
जृम्भणं गात्रसङ्गं च शुचिकाङ्क्षी विवर्जयेत् ।
शौचमाचारममलं स्यादारोग्यस्यकारणम्
ओजसस्तेजसश्चापि श्रेयसश्चापि वर्धकम् ॥"

ஸ்ரீ:

ஆவ்ருத்யதிகரண ரஹஸ்யங்கள்

[ஸ்ரீ. உப. வே. வி. கோபாலாசார்யர் M. A., B. L.,
அட்வோகேட், திருச்சி.]

நம் ஸித்தாந்தப்படிக்கு இந்த அதிகரணத்தின் விசார ரீதியைப் பராமர்சிப்போம். மோக்ஷ ஸாதநத்தைப் பற்றி மூன்றும் அத்யாயத்திலும், மோக்ஷ மென்னும் பலத்தைப் பற்றி இந்த நான்காம் அத்யாயத்திலும் விசாரிப்பதாக எண்ணி, இவ்விரண்டு அத்யாயங்களுக்கும் திருநாமம் சாற்றப்பட்டது. இந்த அதிகரணத்தில் மோக்ஷ ஸாதநத்தின் ஸ்வரூபம் தீர்மானிக்கப்படுகிறது. மோக்ஷ சாஸ்த்ரமாகிய இந்த சாஸ்த்ரத்தில் இந்த விசாரம் ஸங்கதமானாலும், இந்த பலாத்யாயத்தில் இது எப்படி ஸங்கத மென்று முதல் எடுப்பிலேயே ஆக்ஷேபம் வருகிறது. இந்த ஆக்ஷேபம் ச்ருதப்ரகாசிகையிலும் ஸாராவளியிலும் அழகாகப் பரிஹரிக்கப்பட்டிருக்கிறது. இது விஷயமான ஸாராவளி ச்லோகத்தை அத்வைத ஸபைகளில் நாம் உபந்யஸிப்பதைக் கேட்டுப் பரவச மடையாத வித்வான்களில்லை.

"ஸங்க்தா ப்ராகேவ வித்யா: க்ஷிதி ஸாதநீயம் வக்தி யத்யப்யஸ்தி சேஷம்
ப்ரோக்தாத்யாயே த்ருதீயே ந ஹி ததிஹ புன: ஸம்பதேதேதி
சங்காம் நிர்ணேஷ்யன் ப்ரத்யக்ஷதயா வித்யா நாநாவிதாஸம்ஸ்திதிம் [வேத।
சாந்தாவஸ்யாவஸ்த்வம் ச ஸ்யாதஹஜந பூரம் ஸம்ஹாரேத்யா நாபம்ய: ॥"

"முன் அத்யாயத்திலேயே ப்ரஹ்மப்ராப்திக்கு ஸாதநமான வித்யை நன்றாக விசாரித்துக் கூறப்பட்டுள்ளதே. எதற்காக மறுபடியும் இங்கே (இந்த பலாத்யாயத்தில்) ஸாதநத்தைப் பற்றி ஸூத்ரகாரர் பேசுகிறார்? உபாயமான ஜ்ஞாநத்தைப் பற்றி இன்னும் கொஞ்சம் சொல்லவேண்டிய பாக்கியிருந்தால், அந்தப் பாக்கியையும் முன் அத்யாயத்தில் பேசலாகாதோ? இத்தனை அதிகரணங்களுக்குள் முன் அத்யாயம் முடியவேண்டுமென்று யாதேனும் நிர்ப்பந்த முண்டோ? அங்கே சொல்லாதது மட்டுமல்ல. இந்த பலாத்யாயத்தில் உபாயத்தைப் பற்றிய விசாரம் ஒட்டமாட்டாதே (ஸங்கதமாகாதே). சாஸ்த்ர காண்ட அத்யாய பாத பேடிகா ஸங்கதிகளெல்லாம் வேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஸூத்ரகாரருக்கு முண்டே." இப்படி ஆக்ஷேபங்களைப் பலமாகக் காட்டி அப்படியில்லை யென்று 'ந' என்ற

ஒரு சிறிய வார்த்தையால் முன்பாதிக் கடைசியில் ஸாதித்துவிட்டுப் பரி
ஹார யுக்திகளைப் பின்பாதியில் ஸாதிக்கிறூர். (1) 'மோக்ஷ மென்னும்
ஃபலம் இந்த ஸாதநத்தால்தான் ஸித்திக்கும்; வேறொரு மார்க்கத்தாலும்
ஸித்திக்காது' என்று காட்டுவதற்காக ஓரே அத்யாயத்தில் காரணமான
ஸாதநத்தையும் ஃபலமான ஸாத்யத்தையும் சேர்த்துப் பேசுகிறூர்.
(2) இங்கு ஸாதநத்தை யநுஷ்டித்தால் ஃபலம் கட்டாயம் ஸித்திக்கு மென்
பதைக் காட்ட ஓரே இடத்தில் ஸாதநத்தைப் பேசி, உடனே அதனுல்
கிடைக்கும் ஃபலத்தையும் அங்கேயே பேசுகிறூர். சாஸ்த்ரத்தின் ஒரு
மூலையில் ஸாதநமும் மற்றோர் மூலையில் ஃபலமு மிருப்பது அழகல்ல.
ஸாதநத்தைப் பேசி முடித்த க்ஷணத்திலேயே ஃபலத்தையும் காட்டவேண்
டும். இரண்டையும் பிரிக்காமல் சேர்த்துக் காட்டவேண்டும். வேறு
ஸாதநமில்லை யென்பதைக் காட்டுவதுடன், இந்த உபாயம் தவறுமல்
ஃபலத்தை அங்குரிக்கச் செய்யும் என்பதைக் காட்டவும் இப்படி இரண்
டையும் ஓரிடத்தில் சேர்த்துப் பேசுகிறூர். இந்த ஓரே பாதத்திலேயே
ஆறு அதிகரணங்களால் உபாயத்தைப் பற்றி விசாரித்துவிட்டு, உடனே
ஏழாவது அதிகரணத்தில் இந்த பக்தி யென்னும் வித்யை அநுபவத்திற்கு
வர ஆரம்பிக்கையிலேயே, உத்தர பூர்வாகங்களுக்கு முறையே ஒட்டாமை
யும் அழிதலு முண்டாகுமென்றும் ஃபலபர்வ ஆரம்பத்தைக் காட்டுகிறூர்.
இந்த முதல் பாதத்தில் ஸாதநவிசாரம் முடிந்ததும், ஏழாவது அதிகரணத்
தில் உடனே ஸ்தூலமான தேகத்தோடிருக்கையிலேயே கிடைக்கும் பல
பர்வங்களை விளக்க ஆரம்பித்து, இரண்டாம் பாதத்தில், தேஹத்தை விட்டு
வெளிப்படும் விஷயத்தில் அந்தப் பர்வங்கள் மேல்மேலே கிடைப்பதைப்
பேசி முடிக்கிறூர். மூன்றுவது பாதத்தில் இந்த தேஹத்தை விட்டு ஜீவன்
புறப்பட்ட பிறகு, ஆதிவாஹிக஗ணத்தால் அர்ச்சிராதி ஸோபாநத்தின்
வழியாய்ச் செல்லும் கதி யென்னும் ஃபலபர்வத்தை வர்ணித்து விட்டு,
நான்காம் பாதத்தில் மோக்ஷ ஸ்வரூபத்தை விளக்குகிறூர். இப்படிக்கு
ஸாதநத்தைப் பேசும் முதல் பாதத்திலேயே ஃபலத்தின் வர்ணநமும்
தொடக்கமாகிவிடுகிறது. இந்த நாலு பாதங்களின் விஷயவிபாகம் ஸாரா
வளியில் இதற்கு முன் ச்லோகத்தில் விளக்கப்பட்டது. (3) ஃபலம்,
ஸாதநம் அநுஷ்டித்த ஸமீப காலத்தில் நெருங்கிவிடும். தேஹம் விழவேண்
டியதுதான் தாமதம். 'தாவதேவ சிரம்'. ஸக்தி என்னும் ப்ரீதிரூபாபந்நமான
ஜ்ஞாநம் தொடங்குகையிலேயே ஃபலபர்வம் அங்குரிக்கிறது. வாசாம
கோசரமான ஆநந்தம் மேலும் மேலும் அபிவ்ருத்தமாகிறது. ஸித்தி
உடனே அங்குரிப்பதுடன் பரமமான ஸித்தியும் ஆஸந்நமே. கூலிக்
கொள்ளுங் காலம் குறுகியே யிருக்கும். (4) ஸாதநமான பக்தியும், த்யாநம்
செய்யப்படும் ப்ரஹ்மம் அத்யர்த்தம் (வாசாமகோசரமாக) ப்ரியமா யிருப்

பதால், ரஸவநமாகவே தெவிட்டாமல் மேலே மேலே இனிப்பாயிருக்கும்.
உலக ஸுகங்க ளெல்லாவற்றிற்கும் அதீதமான ஓர் விலக்ஷண ஸுகமா
யிருக்கும்; துக்கமென்பதே கலக்காத ஸுகமாயிருக்கும்; பரிசயம் பண்
ணப்பண்ண இனிப்பு அதிகரிக்கும்; அநுபவருசி வளரும். இந்த பஜந
ரஸம் ஒருவாறு முக்தாவஸ்தையை ஒக்கும்படியிருக்கும். ஸாதநமான
பக்தியே ஃபலரூபமா யிருப்பதையும் இந்த ஃபலாத்யாயத்தில் ஸாதநவிசா
ரத்தைச் செய்வதால் ஸூத்ரகாரர் காட்டுகிறூர். இந்த விஷயங்களை யெல்
லாம் ஸூத்ரகாரர் த்வநியினுல் (வ்யஞ்ஜநத்தால்) ஸூசிக்கிறு ரென்பதைக்
காட்ட 'வ்யங்க்யம்' என்று ஸ்வாமி ஸாதித்தது.

இந்த ஸங்கதி யெல்லாம் இருக்கட்டும். முன் அதிகரணத்தோடு
ஸங்கதியுண்டோ? பாதத்தின் முடிவு அதிகரணத்திற்கு அடுத்த பாதத்
தின் முதல் அதிகரணத்தோடு ஸங்கதி காட்டவேண்டு மென்று நிர்ப்பந்த
மில்லை யென்பர். ஆகிலும் இருப்பதாகக் காட்டினுல் அழகே யென்பர்;
ஸ்ரீ வ்யாஸராய ஸ்வாமி சந்த்ரிகையில் இப்படிப் பேச்சைக் காண்கிறோம்.
முன் அதிகரணம் முக்தி ஃபலாதிகரணம். அதோடு ஸங்கதி அழகாக
அமைவதை விண்ணப்பிப்போம். வித்யை (பக்தி) என்பது இரண்டு
விதம். அவை: மோக்ஷஃபல முடையது, அப்யுதயத்தை (மற்ற ச்ரேயஸ்
ஸுக்களை) ஃபலமாக வுடையது என்பன. இரண்டு விதமான வித்யை
களும் நல்ல கர்மங்களின் அநுஷ்டாநத்தால் உண்டாகவேண்டும்.
மோக்ஷம் தவிர மற்ற பலங்களைக் கொடுக்கும் வித்யைகள் உயர்ந்த ப்ர
வ்ருத்தி தர்மங்களால் கைகூடும். மோக்ஷஃபலமான வித்யை உயர்ந்த
நிவ்ருத்தி தர்மங்களால் கைகூட ஆரம்பிக்கும். அப்யுதய ஃபலமான
வித்யை கைகூடுவதற்காகப் புண்யகர்மங்களை யநுஷ்டித்தால் இந்த ஜந்
மத்திலேயே அந்த வித்யை உத்பத்தியாகுமா வென்று அதற்கு முன் அதி
கரணத்தில் விசாரித்து, ப்ரதிபந்தக மில்லாமலிருந்தால் இந்த ஜந்மத்திலே
யும், ப்ரதிபந்தக மிருந்தால் தாமதித்து மற்றோர் ஜந்மத்திலும் வித்யை உத்
பத்தியாகு மென்று தீர்மானிக்கப்பட்டது. அடுத்த அதிகரணமான முக்தி
ஃபலாதிகரணத்தில் நிவ்ருத்தி தர்மங்களால் ஸாதிக்கப்படும் மோக்ஷ
ஃபலமான வித்யையும் பாகவதாபசாரரூபமான ப்ரபல ப்ரதிபந்தகங்க
ளிருந்தால் இந்த ஜந்மத்தில் உத்பத்தியாகாமல் தாமதிக்குமென்று தீர்
மானிக்கப்பட்டது. அந்த அதிகரணத்தில் பக்தி யென்னும் வித்யைக்கு
ஸாதகமான நிவ்ருத்தி தர்மங்களென்னும் கர்மங்கள் வித்யை என்னும்
ஸாதநத்தை உத்பத்தி செய்வதைப் பற்றி ஸாக்ஷாத்தாகப் பேசியிருந்தா
லும், அதே ந்யாயத்தை வித்யை விஷயத்திலும் கொள்ளலா மென்பது
ந்யாயஸித்தாஞ்ஜநத்தில் ஜீவபரிச்சேதத்தில் ஸாதிக்கப்பட்டது.

“ஐஹம் வ ஸ௱ஐத்ரும் விஜ்ஞாநம் கர்ஷவிஷயவீ விஜ்ஞாயாம் தாமஜ்ஞ்யாயு தயா கநாவஸம்யெயய ”

என்று ப்ரஹ்மவித் அபசாரரூபமான ப்ரபல ப்ரதிபந்தக மிருந்தால் மோக்ஷ ஃபலம் தாமதிக்கு மென்று அந்த அதிகாணத்திலும் தீர்மானித்ததாக ந்யாயஸாம்யத்தால் சொல்லலாம். மோக்ஷ வித்யையை வாழ்நாள் முழு வதும் அநுஷ்டித்துக்கொண்டு வருகையில் மத்யையில் பாகவதாபசார மெனும் ப்ரபல ப்ரதிபந்தகம் நேரிட்டால், மோக்ஷ மென்னும் ஃபலம் இந்த ஜந்மத்திலேயே கூடாமல் தாமதிக்கலாம். மோக்ஷஸாதநமான வித்யை யென்னும் ஜ்ஞாநம் ஸக்ருத் (ஒரு தரம்) வேதநமாக இருந்தால் ஸ்வல்ப க்ஷணங்களில் ஸாதநபூர்த்தி யாகிவிடுவதால் உபாயாநுஷ்டாநத்தின் நடுவில் ப்ரஹ்மவித்துக்களிடம் அபசாரப்படுவதற்கு இடமேயில்லை. ஆயுஸ் முழு வதும் ப்ரயாண வேளைவரையில் ப்ரதி திநமும் த்யாநம் செய்துகொண்டே யிருப்பதுதான் மோக்ஷஸாதந மென்று ஏற்பட்டாலல்லவோ நடுவே பாக வதர்களிடம் அபசாரப்பட அவகாசமிருக்கும். மோக்ஷஸாதந மென்பது ஒரு தரம் ப்ரஹ்மத்தை அறிவதுதானென்றால், மூன்று நான்கு விநாடிக ளுக்குள் அந்த அறிவு ஏற்பட்டுவிடுவதால், முன் அதிகரணத்தில் பாக வதாபசார மென்னும் ப்ரதிபந்தக மேற்பட்டால் மோக்ஷம் தாமதிக்கு மென்று ந்யாயம் காட்டியது தவறுதலாகுமே யென்று ஒருவாறு ஆக்ஷேப ஸங்கதியைச் சொல்லலாம். மோக்ஷஸாதநமான வித்யை ஒரு தரம் அறி தல் (ஸக்ருத்வேதநம்) அல்ல. அநேகம் தரம் ஆவ்ருத்தமான அறிதலை (ஸ்மரணத்தை) யுடைய உபாஸநம் த்யாநம் என்று சொல்லப்படும் பக்த் யுபாயந்தானென்று இங்கே நிர்ணயிப்பதால் அந்த ஆக்ஷேபம் நீங்கு கிறது.

இந்த ஸூத்ரத்திலுள்ள ‘அஸக்ருத்’ என்னும் பதத்தால் பூர்வபக்ஷம் எப்படி வருகிறதென்பது ஸூசிதம். ஸூத்ர பதங்களைக்கொண்டே பூர்வ பக்ஷத்திற்கு ஹேதுவான ஸம்சய பீஜத்தைக் காட்டுவது அழகு. ‘அஸக்ரு தாவ்ருத்தமான வேதநம் மோக்ஷஸாதநமான சாஸ்த்ரார்த்தம்’ என்று ஸித்தாந்தி பேசுவதால், பூர்வபக்ஷி அநாவ்ருத்தமான ஸக்ருத் ப்ரத்யயம் ஸக்ருத்வேதநம் ஆவ்ருத்தி செய்யாமல் ஒருதரம் அறிவதே மோக்ஷ ஸாதநமான ஜ்ஞாநம் வித்யை என்று கக்ஷி சொன்னாரென்பது திண்ணம். இதைக் காட்டுவதற்காக ஸ்ரீ பாஷ்யத்தில் வேதாந்த வாக்யங்களில் ப்ரஹ் மத்தை யடைய உபாயமாக விதிக்கப்பட்ட வேதநம் (அறிதல்) ஒரு தரம் செய்வதே (ஸக்ருத்க்ருதமேவ) சாஸ்த்ர விஹிதமான உபாயமாய் விடு கிறதா? அல்லது பலதரம் ஆவ்ருத்தி செய்த அறிதல் சிந்தநம் சாஸ்த் ரார்த்தமான மோக்ஷஸாதநமா வென்று ஸம்சய கோடிகள் ஸாதிக்கப்பட்

டன. ஸூத்ராக்ஷரங்களிலிருந்து இப்படி பக்ஷத்வயமும் ஏற்படுகிற தென்று ஸ்ரீ பாஷ்ய வாக்குகளின் தாத்பர்யம். ஸூத்ரத்திலுள்ள ‘ஆவ்ருத்தி:’ என்பதற்கு ‘ஆவ்ருத்த:’ ஆவ்ருத்தி செய்யப்பட்டது என்பது பொருள். தீபத்தில் ‘வேதாந்தங்களால் மோக்ஷோபாயமான சாஸ்த்ரார்த்த மாக விதிக்கப்பட்ட வேதநம் ஸக்ருத் க்ருதமான வேதநமா அஸக்ருத் ஆவ்ருத்தமான வேதநமா’ என்று ஸாதிக்கப்பட்டது. முன் அத்யாயத்தில் ஸாதநமான ப்ரஹ்மவித்யை (ப்ரஹ்மஜ்ஞாநம்) ப்ரக்ருதம். ‘ஸர்வவேதா ந்த ப்ரத்யயைகம் ஜ்ஞாநம்’ என்று மூன்றும் பாதத்தின் ஆரம்பத்திலும், ‘புருஷார்த்தோ(அ)த:’ என்று நான்காம் பாதத்தின் ஆரம்பத்திலும் வித்யை என்னும் ஜ்ஞாநத்தைப் பேசினர். வித்யையிலிருந்து புருஷார்த்தம் கிடைத்த தென்றார். முன் அதிகரணத்திலும் முக்தி ஃபலமான வித்யை (ஜ்ஞாநம்) ப்ரக்ருதம்.

‘ப்ரஹ்ம வேத ப்ரஹ்மைவ பவதி’, ‘ப்ரஹ்மவிதாப்நோதி பரம்’ ‘ஸ யோ ஹ வை தத் பரமம் ப்ரஹ்ம வேத’, ‘தமேவம் வித்வாந்’, ‘தரதி சோகமாத்மவித்’

என்று சில வாக்யங்களால் மோக்ஷஸாதகமாக ப்ரஹ்ம ஜ்ஞாநத்தை விதித் திருக்கிறது. ‘ஸக்ருத்க்ருத: சாஸ்த்ரார்த்த:’ என்கிற ந்யாயத்தைக்கொண்டு ‘வேதநம்’ என்று உபாயமாக விதிக்கப்பட்ட அறிதல் ஒருதரம் செய்தால் போதுமென்று பூர்வபக்ஷம். ஸக்ருத் என்கிற சங்கையை அஸக்ருத் என்று நிஷேதிக்கையாலும், ‘ஸக்ருத்க்ருத: சாஸ்த்ரார்த்த:’ என்கிற ந்யாயத்தையும் பொதுவான வேதந பதத்தையும் கொண்டு பூர்வபக்ஷம் வந்ததென்றும், அந்த ந்யாயம் ‘உபாஸநம் செய்யவேணும் த்யாநம் செய்யவேணும் யஜ நம் செய்யவேணும்’ என்கிற ஸ்பஷ்ட வசநங்களோடு விரோதிப்பதால் செல்லாது என்கிற ஸித்தாந்த யுக்தியும் ஸூசிதம். ‘சாஸ்த்ரங்களில் ப்ரஹ்ம ப்ராப்திக்கு ஸாதநமாக விதிக்கப்பட்டுள்ள ப்ரஹ்ம வித்யை (அதாவது: ப்ரஹ்மோபாஸநம்) ஒருதரம் அநுஷ்டிக்கப்பட்டால் போதுமா? அல்லது அநேகாவ்ருத்தி அநுஷ்டிக்கப்படவேண்டுமா?’ என்பது சங்கை என்றும், ‘உபாஸநம் ஸக்ருத் அநுஷ்டிதமானால் போதும், அவ்வளவோடு சாஸ்த்ர நிர்வஹணமாகக் குறையில்லை’ என்பது பூர்வபக்ஷம் என்றும், தீபிகையில் 618, 620 பக்கங்களில் பூர்வபக்ஷ சரீரத்தைக் காட்டியிருப்பது ஸ்ரீ பாஷ்யம் டீகை முதலிய ஸர்வ ஸித்தாந்த க்ரந்தங்களோடு விரோதிக் கிறது. ஸ்ரீ சங்கர பாஷ்யத்தில் ஒரு தரம் ச்ரவணம் ஒரு தரம் மநநம் ஒரு தரம் நிதித்யாஸநம் போதாதோ என்று ஒரு விதமாகப் பூர்வ பக்ஷத்தைக் காட்டியிருப்பதை ச்ருத ப்ரகாசிகையில் தூஷித்திருக்கிறது. நிதித்யாஸந மென்பது உபாஸநத்துக்குப் பர்யாயமாகும். உபாஸநம் ஒருதரமா பல

காலா என்று பூர்வபக்ஷம் காட்டுவது ச்ருத ப்ரகாசிகையில் தூஷிக்கப் பட்ட பிறர் ரீதியாகும். ஆவ்ருத்தியை யுடையது உபாஸநம். ஆவ்ருத்த ரூபத்வம் ஸாத்யம். பக்ஷமே ஸாத்ய மாகாது. ச்ருதியில் மோக்ஷஸாதநமாக விதிக்கப்பட்ட வேதநம் ஸக்ருத் வேதநம் தான். 'ஸக்ருத்க்ருதஃ சாஸ்த்ரார்த்தஃ' என்கிற ந்யாயத்தை யநுஸரித்து என்று பூர்வபக்ஷாநுமாநம். மோக்ஷோபா யமாக விதிக்கப்பட்ட வேதநம் அஸக்ருத் ஆவ்ருத்தமான வேதநம் தான். மோக்ஷோபாயமான அதே விஷயத்தில் அஸக்ருத் ஆவ்ருத்தமான வேத நத்தைச் சொல்லும் உபாஸந சப்தோபதேசத்தால். 'வேதநமும் உபாஸந மும் மோக்ஷத்தை ஸாதிக்க ஸமர்த்தமென்று ஒரே பொருளுள்ளதாக சாஸ்த்ரத்தில் உபதேசிக்கப்படுவதால்) என்று ஸித்தாந்தாநுமாநம். ஒரு தரம் மட்டும் வேதநமென்னும் சாஸ்த்ரார்த்தத்தைச் செய்தால் போதும் என்பதற்குக் காட்டிய ந்யாயத்தை மோக்ஷஸாதநமான வேதநம் பலகால் சிந்தநமான உபாஸநமென்று விசேஷித்து சாஸ்த்ர வசநங்க ளிருப்பதைக் கொண்டு ஸித்தாந்தி வாதிக்கிறார். 'உபதேசாத்' என்னும் ஹேது, உபாஸநம் த்யாநம் என்கிற சாஸ்த்ர வசநங்களைக் காட்டி அந்த வசந பலத் தைக்கொண்டு 'ஸக்ருத்' என்னும் ந்யாயத்தை வாதிக்கிறது. 'நஹிவச நவிரோதே ந்யாயஃ ப்ரவர்த்ததே'. மாற்றி மாற்றி உபக்ரமோபஸம்ஹார ஸ்தலங்களில் உபயோகித்திருப்பதால் என்னுமிடத்தில் த்யாநம் என்கிற தாதுவையும் என்று தீபிகை 621—ம் பக்கத்தில் சேர்த்திருப்பதை விட்டு விடவேணும். மோக்ஷோபாயத்தை விதிக்கும் வேறு உபநிஷத் வாக்யங்களில் த்யாநம் விதிக்கப்பட்டுளது. விஹ்யுபாஸ்தி யாதநக்களைப்போல் ஒரே இடத்தில் உபக்ரமோபஸம்ஹாரங்களில் கலந்து காண்பது அல்ல. ஸ்ரீபாஷ் யத்திலும் இது ஸ்பஷ்டம். மேலே காட்டப்போகிற சததூஷணீ வாக்யங் களிலும் ஸ்பஷ்டம். மோக்ஷார்த்தமான ஸாதநத்தை விதிக்கும் மற்ற சாகைகளில் த்யாந சப்தமிருந்தாலும், அதை ஸாமாந்ய விசேஷ ந்யாய பலத்தால் சாகாந்தரத்திலுள்ள மோக்ஷோபாயமான வேதநத்திற்கு விசேஷ பொருளாகக் கொள்ளவேண்டும். இங்கே ஸாமாந்ய விசேஷ ந்யா யத்தைக் கொண்டு மோக்ஷோபாயமாக ஸாமாந்யமாகப் பேசின வேதநம் அஸக்ருத் வேதநமாகிய த்யாநமென்னும் விசேஷத்தில் பர்யவஸிக்கும். இந்த ந்யாயம் ச்ருத ப்ரகாசிகையில் ஸித்தாந்த யுக்தியாக ஸாதிக்கப் பட்டு, பாவ ப்ரகாசிகையில் விவரிக்கப்பட்டிருக்கிறது 'உபதேசாத்' என்பதற்கு 'விசேஷஶப்தோபதேசாத்' என்று பொருள் கொள்ளலாம். வேதநமென்னும் ஸாமாந்யத்தைப் பலகால் வேதநமென்னும் குறிப்பான சப்தங்களால் உபதேசிப்பதால், 'ஸாமாந்ய விஶேஷ ஸந்நிதௌ ஸாமாந்ய ஶப்தஸ்ய விஶேஷபரத்வம்' என்று ஸாராவளியிலும், 'ஸாமாந்யதஸ் ஸாதநத்வகாரணவதிதா ஶப்தஸ்ய விஶேஷே' என்று தத்வ

முக்தாகலாபத்திலும், வேதநம் ஜ்ஞாநம் என்னும் பொதுவான சப்தங்கள் த்யாநம் உபாஸநம் பக்தி என்னும் விசேஷ சப்தங்களோடு ஒரே பொரு ளாக உபதேசித்திருக்கிறபடியால், உபாஸநம் த்யாநம் என்று சொல்லப் பட்ட அஸக்ருத் ஆவ்ருத்த சிந்தநமான ஜ்ஞாந விசேஷத்தில் பர்யவஸிக்கு மென்று காட்டப்பட்டது. சாஸ்த்ர விஹித மோக்ஷோபாயமான வேதநம் என்றும் (ஸக்ருத அஸக்ருத் இரண்டுக்கும் பொதுவான) ஜ்ஞாநத்தை உபா ஸநம் த்யாநம் என்று அஸக்ருத் ஆவ்ருத்த ஜ்ஞாநத்திற்கு மட்டும் அஸா தாரணமான விசேஷ சப்தங்களால் மோக்ஷ ப்ரகரண வாக்யாந்தரங்கள் உபதேசிப்பதால்' என்று 'உபதேசாத்' என்ற ஸூத்ரஹேதுவுக்குப் பொருள். ஒரே ப்ரகரணத்தில் உபக்ரமத்தில், உபக்ரமோபஸம்ஹாரங் களில் மிச்ரமாய் உபதேசத்தாலும் சாகாந்தரங்களில் மோக்ஷோபாயத்தை விதிப்பதெனும் ஒரே விஷயத்தில் த்யாநம் உபாஸநம் என்று அஸக்ருத் ஆவ்ருத்தி கர்ப்பமான விசேஷ சப்தங்களால் உபதேசத்தாலும் என்ற இரண்டும் வேதநத்தை உபாஸந த்யாநங்களோடு ஏகார்த்தத்வேந (ஒரு பொருளாக) உபதேசிக்கிறபடியால் என்கிற ஒரு ஹேதுவில் முடியும். இரண்டையும் சேர்த்துப் பிடித்து த்யாநோபாஸந பர்யாயமான வேதந சப்தத்தால் உபதேசித்திருப்பதால் என்று ஸ்ரீ பாஷ்யத்தில் பர்யவஸிதப் பொருள் ஸாதிக்கப்பட்டது.

வேதநம் சொல்லப்பட்ட வித்யைகளில் ஒருதரம் வேதநம் போதும்; உபாஸநம் சொல்லப்பட்ட விடங்களில் அஸக்ருத் ஆவ்ருத்த வேதந மிருக் கட்டுமே. இரண்டும் விகல்பமாகட்டு மென்று ஆக்ஷேபம் வரலாம். ஒரே அதிகாரிக்குக் குருவான அஸக்ருத் வேதநத்தையும் லகுவான ஸக்ருத் வேதநத்தையும் விதிக்கக்கூடாதென்று அதற்கு ஸமாதாநம். சக்தன் அசக் தன் என்ற அதிகாரி பேதத்தை இந்த வித்யைகளில் பேசவில்லை. இதே அதிகரணத்தில் ஸாராவளியில் மற்றோர் வாக்யத்தின் பொருளைப் பற்றிய விசாரத்தில்

'ஸாமாந்யே ஸவிஶேஷே சாப்யநுஷ்டாநாத் ஸர்வ ஸாமாந்ய ஸித்தௌ யோக்யோ விகல்பஃ'

என்று இந்த யுக்தி காட்டப்பட்டது. டீகை பாவ ப்ரகாசிகைகளில் இது விவரிக்கப்பட்டுள்ளது. சததூஷணீ ஸூக்திகளைப் பின்பு காட்டுவோம். இங்கே உபக்ரம பலந்யாயம் உபஸம்ஹார பலந்யாயம் என்கிற ந்யாயங் களைக்கொண்டு, உபக்ரமோபஸம்ஹாரங்களில் பரஸ்பர பலாபல விசார மில்லை. ஓர் உபநிஷத்தில் வேதநம் உபக்ரமத்திலும், ஓர் உபநிஷத்தில் உபா ஸநம் உபக்ரமத்திலும் காணப்படுகிறது. தாத்பர்ய லிங்கங்கள் எட்டென் பர். அவை: 1. உபக்ரமம் 2. உபஸம்ஹாரம் 3. உபக்ரமமும் உபஸம்ஹார

மும் ஒரே விதமாய் (ஏகரூபமாய்) இருப்பது. உபக்ரமோபஸம்ஹாரங்களின் ஏக ரூபமான சேர்க்கை—என்று மூன்றும் மற்ற ஐந்துமாகச் சேர்ந்து எட்டென்பர். ‘உவக்ரொவஸம்ஹாரள’ என்கிற தாத்பர்யலிங்கச்லோகத்தில் உபக்ரமம் உபஸம்ஹாரம் என்று தனித்தனியாக ஓரோர் அடையாளமென்றும், இரண்டும் ஒரே விதமாய்ச் சேர்ந்திருப்பதை ஸமுதிதமான ஓர் அடையாளமென்றும் மூன்றாகக் கணக்கிட்டு, எட்டெனும் கணக்குப்படி விவரணத்தைச் சந்த்ரிகை ஸமந்வயாதிகரணத்தில் காண்கிறோம். அஷ்டலிங்கங்கள் என்னும் கணக்கை ஸ்ரீதேசிகனும் ஸாதித்திருக்கிறார். இங்கே ஒரே விதமாய் ஸமுதிதமாயிருப்பது தாத்பர்யலிங்கம். இரண்டும் ஒன்றாயிருப்பதாகக் கொள்ளவேண்டியது ஸ்வரஸகதி. இரண்டும் ஒரே விதமாயிருப்பது நியதமில்லாவிடினும், ஒரு விதமாயிருப்பது அழகு. கூடியவரையில் ஒன்றாகவே கொள்ளப் பார்க்கவேணும். ஆவ்ருத்திக்கு அதிக ஃபலம் ப்ரயோஜநமாகும். இங்கே மோக்ஷமென்னும் ஃபலம் ஏகரூபமானபடியாலும், தாரதம்ய மில்லாமல் எல்லோருக்கும் நிரதிசயமானபடியாலும், ஆவ்ருத்தியால் அதிக ஃபலமென்று சொல்ல இடமில்லை யென்று பூர்வபக்ஷி சொல்லும் யுக்தி. அதை ஸித்தாந்தி ஆக்ஷேபிப்பதில்லை. சாஸ்த்ரார்த்தமான (சாஸ்த்ரவிஹிதமான) உபாயத்தை ஒருதரம் அநுஷ்டித்தால்போதுமென்பதை ஒப்புக்கொள்வதாலும் ஸித்தாந்தத்திற்கு விரோதமில்லை. சாஸ்த்ரார்த்தம் இன்னதென்று தெரிந்துகொண்டால் அதை ஒரு தரம் அநுஷ்டித்தால் போதும். ப்ரயாணகாலம் வரையில் ப்ரதிதிநம் அநுவர்த்திக்கப்படும் அஸக்ருத் ஆவ்ருத்த வேதநம் என்னும் உபாஸநம் மோக்ஷோபாயமென்று ஏற்படும்பொழுது, உபாஸநம் தொடங்கியது முதல் கடைசி ஸ்ம்ருதி வரையில் சேர்ந்து கூடிய உபாயசரீரம் ஒரு தரம் தானே அநுஷ்டிக்கப்படுகிறது. ஸ்ம்ருதி ஸந்தாநம் முழுவதும் சேர்ந்து தான் சாஸ்த்ரார்த்தமாவதால், அதற்கு இரண்டு தரம் ஆவ்ருத்தியில்லை. இந்த ஸமாதாநத்தை ஸ்ரீரங்கராமாநுஜஸ்வாமி காட்டியருளினார். நமக்குத் தெரியாத முறையில் அத்ருஷ்ட வழியாக உபகரிக்கும் ஸாதநங்களை ஒரு தரம் அநுஷ்டித்தால் போதும். நமக்குத் தெரிந்த முறையில் த்ருஷ்ட வழியில் உபகரிக்கும் ஸாதநங்களைப் பலன் கிடைக்கும் வரையில் ஆவ்ருத்தி செய்ய வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. தர்ச பூர்ணமாஸ யாகத்திற்கு ப்ரயாஜங்கள் அங்கங்கள். அவை ஓர் அத்ருஷ்டத்தை உண்டு பண்ணி உபகரிக்கின்றன. நமக்குத் தெரியாத வழியில் உபகரிக்கும் சாஸ்த்ரார்த்தத்தை ஒரு தரம் அநுஷ்டித்தால் போதும். ‘தாந்யத்தை உலக்கையால் குத்தவேணும்’ என்று யாகத்திற்கு வேண்டிய ஹவிஸ்ஸான புரோடாசத்தைப் பண்ண உபயோகப்படுவதான மாவைச் செய்ய அவகாதம் என்னும் குத்தலை விதித்திருக்கிறது. தாந்யத்தை உலக்கையால் குத்தினால் உமி போய்

அரிசியாக்கி மாவாக்கி உபயோகப்படுவது நமக்குத் தெரிந்த வழி. தெரிந்த வழியில் த்ருஷ்ட த்வாரமாக உபகரிப்பதை, அந்த உபகாரம் பூர்த்தியாய்க் கிடைக்கும் வரையில் ஆவ்ருத்தி செய்யவேண்டும். உமி போகாமல் எப்படி மாவாக்கிப் புரோடாசத்தைத் தட்ட முடியும் ? ப்ரஹ்ம வேதநம் என்பது ப்ரஹ்ம தர்சநத்திற்கு (ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரத்திற்கு) ஸாதகமான சாஸ்த்ரார்த்தமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. அது அத்ருஷ்ட முறையில் (அதாவது: ஈஶ்வர ஸங்கல்பமடியாக) அபரோக்ஷமென்னும் ப்ரஹ்ம தர்சநத்தைத் தேஹம் விழுந்த பிறகு பரமபதத்தில் கொடுக்கிறது.

இந்த அதிகரண விஷயங்களைப் பற்றிச் சததூஷணியில் நாலாவது வாதத்தில் உள்ள விசாரத்தைச் ஸங்க்ரஹிப்போம். பூர்வபக்ஷிகள் சொல்லுவதாவது:—‘ப்ரஹ்மத்தை அறிந்தவன் ப்ரஹ்மமே யாகிறான்’ என்ற ஶ்ருதியும், அதைப் போன்ற ஶ்ருதிகளும் ஜ்ஞாநமாத்ரத்திற்கே மோக்ஷ ஸாதந சக்தியைச் சொல்லுகின்றன. இப்படி ஸ்பஷ்டமாய் சாஸ்த்ரங்கள் அறிவிக்கும் விஷயத்தை நாம் நாஸ்திகர்கள்போல் மறுதளிக்கலாமா ? ஆகையால் தான் ‘இந்த ப்ரஹ்ம ஜ்ஞாநம் தர்க்கத்தால் அடைக்கூடியதல்ல’ என்று ஶ்ருதி சொல்லுகிறது என்று.

இதற்கு ஸித்தாந்தியின் பதில்:—இது ஸரியல்ல. ஜ்ஞாநம் அறிவு முதலிய பொதுவான சப்தங்களை, நினைப்பின் நிரந்தரமான தொடர்ச்சியைச் சொல்லும் உபாஸநம் த்யாநம் முதலிய விசேஷ சப்தங்களைக் கொண்டு அந்த ஜ்ஞாந விசேஷங்களைச் சொல்லுவதாகக் கொள்ள வேண்டும் என்பது பஶ்வதிகரண ந்யாயத்தால் (ஸாமாந்ய விசேஷ ந்யாயத்தால்) ஸித்திக்கிறது. இது போன்ற ந்யாயங்களைக் கவனிக்க மாட்டோமென்றால் ப்ரஹ்ம மீமாம்ஸா சாஸ்த்ரமே வேண்டாம். த்யாநம் உபாஸநம் என்னுமிரண்டு சப்தங்களும் ஜ்ஞாந விசேஷத்தைச் சொல்லுவன. (இடைவிடாமல் சிந்திப்பது என்னும் ஓர் குறிப்பிட்ட ஜ்ஞாநத்தைச் சொல்லுவது). வேதநம் என்பது பொதுவாக அறிதலைச் சொல்லும். சில ஶ்ருதிகளில் வேதநம் என்று பொதுப் பேச்சாயும், வேறு ஶ்ருதிகளில் நிரந்தர ஸ்மரணமான உபாஸநம் த்யாநம் என்று குறிப்பிட்ட அறிவு விசேஷத்தைப் பற்றிய பேச்சாகவு மிருப்பதால், பொதுப் பேச்சான வேதநத்திற்கு உபாஸநம் த்யாநமென்றும் குறிப்பிட்ட விசேஷ சப்தங்களின் பொருளையே கொள்ளவேணும். இஷ்டம்போல் இப்படியாவது இருக்கட்டும், அப்படியாவது இருக்கட்டும் என்று விகல்பம் ஆஶ்ரயிக்க முடியாது. ஸ்வல்பமான ஓர் ஸக்ருத் அறிவுக்கும் கஷ்டமான பல்கால் சிந்தநத்திற்கும் விகல்பம் சொல்ல முடியாது. த்யாநம், உபாஸநத்திற்குள் ஒருதரம் அறிவு அடங்கியதானபடியால், இரண்டையும் சேர்த்து ஸமுச்சயமாக அநுஷ்டிப்

பதாகச் சொல்லவும் முடியாது. ஒருதரம் அறிதலால் மோக்ஷஃபலம் கிடைத்து விடும். அதை ஆவ்ருத்தி செய்தால் மோக்ஷத்தில் ஆவ்ருத்திக்குத் தக்கபடி அதிக ஃபலம் கிடைக்குமென்றும் சொல்ல முடியாது. மோக்ஷ ஃபலத்தில் தாரதம்ய மில்லை. விகல்பத்தில் எட்டுத் தோஷங்க ளுண்டு. இன்னொருக்கு ஓர் அறிவு, இன்னொருக்குப் பல ஸ்ம்ருதிகள், என்று வ்ய வஸ்தை செய்வதென்பதில் கௌரவ தோஷம். ஸமுச்சய மென்றால் ஒன்றுக் கொன்று நிரபேக்ஷமா யிருக்கவேணும். ஒன்றுக் கொன்று அங்காங்கி பாவமுமில்லை. “விதி” தாதுவையும் “உபாஸி” என்னும் தாதுவையும் ஒரு பொருளாகக் கலந்தபடி பேச்சைக் காண்கிறோம். பின் பேச்சு முன் சொன்னதின் அநுவாதமாகக் காணப்படுகிறது. ‘மநஸ்ஸைப் ப்ரஹ்மமாக உபாஸிக்கக்கடவன்’ என்பது முன் பேச்சு. அதற்கு ஃபலனைச் சொல்வதற்காக ‘எவன் இப்படி அறிகிறானோ அவன் கீர்த்தி யசஸ் ப்ரஹ்மவர்ச்சஸத்தால் ப்ரகாசிக்கிறான்’ என்று அநுவாதம். உபாஸநத்தை ‘அறிதல்’ என்னும் பதத்தால் அநுவாதம் செய்வதால், உபாஸநம் என்பது வேதநம் என்னும் பதத்தோடு ஒரு பொருள் உள்ளதென்று ஏற்படுகிறது. அப்படியே ஸம்வர்க்க வித்யையில் ‘உபாஸி’ தாதுவால் வேதநத்தின் அநுவாதம். ‘வேதநத்தால் அம்ருதனாகிறான் மோக்ஷ ப்ராப்திக்கு வேறு மார்க்கமில்லை’ என்று ஸ்ருதி. “வேதங்களாலும், தபஸ்ஸாலும், தாநத்தாலும், யஜ்ஞத்தாலும் நீ இப்பொழுது கண்டது போல் நான் காணக்கூடியவனல்லன்; அநந்யமான பக்தியால் மட்டும் காணக் கூடியவன்” என்று கீதையில் காண வேறு மார்க்கமில்லை யென்றும், பக்தியொன்றே மோக்ஷோபாய மென்றும் அறுதியிடப்படுகிறது. இதனால் ‘வேறு மார்க்க மில்லை’ என்ற ஸ்ருதியிலும் வேதநம் என்பது பக்தி என்பதோடு ஓரே பொருளுடையதென்று ஏற்படுகின்றது. ஸாமாந்ய விசேஷ ந்யாய பலத்தினால் இவ்விரண்டிற்குள் வேதந மென்பதைப் பக்தி உபாஸநம் த்யாந மென்னும் ஜ்ஞாந விசேஷமாகக் கொள்ளவேணு மென்று தீர்மாநம்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீமத் ராமாயண ரஸாஸ்வாதம்

[சிரோமணி தர்க்கார்ணவ பண்டிதரத்ந உத்தமூர்
ஸ்ரீ. உப. தி. வீரராகவாசார்யர்]

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

இப்படி மஹர்ஷி நியமநத்தாலே யஜ்ஞ வாடத்திலே ராமாயண காநம் செய்ய ஸீதா தேவியின் குமாரர்க ளிருவரும் புறப்பட்டார்கள் என்கிற பர்யந்தம் கதையாகக் கேட்டு, ராமன், மறுபடி பாதிவ்ரத்ய ப்ரகடந பூர்வகமாக ஸீதா ஸங்கமத்தை விரும்பி மஹர்ஷியிடம் தூதர்களை யனுப்ப, அதன்படி மஹர்ஷி பிராட்டியை அழைத்து வந்ததும், மஹாஸபையிலே அவளைப் பரிசுத்தையாக நிரூபித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டதும், அவளும் பூமிதேவியைப் பிரார்த்தித்து, அவளால் அழைக்கப்பட்டு பூப்ரவேசம் செய்து, அதன் மூலமாய்த் தன் பாதிவ்ரத்யத்தை நிரூபித்ததும், ராமன் அவள் வியோகத்தை ஸகிக்கமாட்டாமல் பூமியை அழைக்க முயன்றதும், அப்போது ப்ரஹ்மா நடந்ததற்கு சோகியாமலிருக்கும்படிக்கு ஸமாதாநம் செய்து, பிறகு ஸ்ரீமத்ராமாயணகாவ்ய ப்ரசம்ஸை செய்து வால்மீகி விரசிதமான பவிஷ்யத் வ்ருத்தாந்தத்தையும் கேட்கும்படி ப்ரேரணம் செய்ததும், அத்தருணத்திலே க்ரியாரூபமாகத் தலைக்கட்டினது. இங்கே மேல் ராமாயண கதையைக் கேட்கும்படி ப்ரஹ்மா ப்ரேரணம் செய்ததிலிருந்தே, அடியிலிருந்து ஆநுபூர்வியாகக் கதையைக் கேட்டுக் கொண்டுவந்ததில் ஏதோ ஈஷத் விச்சேதம் வந்ததும், அதன்மேல் ஆரப்த கார்யத்திலே ராமனை அவர் தூண்டினதும் வ்யக்தமாகிறது. ஆக, ‘உத்தர காண்டத்தில் 93-வது ஸர்க்கம் வரையில் ராமன் கீதரூபேண கேட்டார்’ என்பதே யுக்தம். பிறகு ப்ரஹ்மாவின் ப்ரேரணையின் மேல் அந்த அச்வமேத யாகத்திற்குப் பிறகு வரப்போகிற கதையைக் குசலவர்கள் காநம் செய்தார்கள். ஆக உத்தர காண்டத்தில் 94-முதல் 98-வரையில் ஐந்து ஸர்க்கங்கள் மாத்ரம் ப்ரஹ்மாவின் ப்ரேரணையால் பவிஷ்யத்மாத்ர காநத்திலே வ்யாப்ருதரான குசலவர்களாலே விடப்பட்டன. அந்த ஸர்க்கங்களின் அர்த்தமும் அப்போது ப்ரத்யக்ஷமாய் நடந்தேறினதே. ஆக 93-ஸர்க்கம் வரையிலுள்ள வ்ருத்தாந்தம் அங்கே குசலவ காநத்திற்கு முன் நடந்துவிட்டதே; அதில் பிராட்டி வால்மீக்யாச்ரமத்திற்கு வருவதற்கு முன்னமே —அயோத்தியிலிருக்கும் போதே—ராமாயணம் செய்யப்பட்டதாகச் சிலர்

சொன்னதும், அவள் விவாஹத்திற்கு முன்னம் சிறு கந்யகையாக மிதிலையி லிருக்கும்போதே வால்மீகி ராமாயணத்தைச் சிஷ்யர்களுக்குச் சொல்லி வைத்ததாகப் பாத்மபுராணத்தில் (க. 1 அ. 58) இருப்பதும், முன் நாம் சொல்லியபடி அங்கீகரிக்கமுடியாம லிருப்பதாலும்,

“ஸ்வராஷ்ட்ரரஞ்ஜநஞ்சைவ வைதேஹ்யாஶ்ச விஸர்ஜநம் | அநாகதம் ச யத்கிஞ்சித்” (1-3)

ஸ்வாஶ்ரமத்திற்கு ஸீதாபிராட்டி எழுந்தருளினது வரையில் பூத காலிகமாகச் சொல்லியிருப்பதாலும், மஹர்ஷி ராமாயணம் இயற்றியபோது 70-வது ஸர்க்க பர்யந்த கதாபாகம் வ்ருத்தமான தென்பதற்கு ஸம்ஶய மில்லை. ஆகையால் அதுவரையில் மஹர்ஷி பூதகாலிகமாக நிர்த்தேசம் செய்ததில் யாதொரு பாதகமுமில்லை. ஆக, மேல் நாற்பது ஸர்க்கங்களில் கதையை பூதகாலிகமாகக் குறிப்பிட்டது எப்படியென்றே கேள்வி நிற்கிறது. அதற்கு இதுவே ஸமாதாநம்.

ராஜ்யபரிபாலந காலத்திலேயே மஹர்ஷி முற்றும் எழுதிவிட்டார். ஆனால் ஸர்வஶக்தனான ஸர்வேஶ்வரனுடைய எதிர்காலத்திய வ்ருத்தாந்தங் களை முன்னமே உலகத்திற்கு உணர்த்திவிட்டால், அதிலிருந்து ப்ரஜைக ளுக்குச் சில ஹர்ஷசோகங்கள் நடையாடக் கூடும். சில பாவி வ்ருத் தாந்தங்களை முன்னமே தெரிந்துகொள்வதில் அநேக க்லேசங்கள் ஏற் பட்டுவிடுகின்றன வென்பது அனைவரும் அறிந்த விஷயம். ஆகையாலேயே தசரதர் வஸிஷ்டாஶ்ரமத்திலே ஒருஸமயம் சாதுர்மாஸ்ய வ்ரதம் அநுஷ் டித்த துர்வாஸ மஹர்ஷியினிடத்திலிருந்து, ராமனுக்கு நேரிடப்போகும் ஸீதா வியோகாதி வ்ருத்தாந்தத்தை முன்னமே அறிந்திருந்தும், தாம் அதை வெளியிடாமலிருந்ததோடு, ஸுமந்த்ரரையும் மறைத்து வைக்கும்படி சொல்லியிருந்ததாக 7-51-வது ஸர்க்கத்திலிருந்து அறிகிறோம். ஆகவே வரப் போகும் ரஹஸ்யங்களை வெளிடலாகாதென்பதும், அந்த அம்ஶமும் நடந் தேறினபிறகே தத்ப்ரதிபாதகமான பாகத்தை ப்ரசாரத்திற்குக் கொண்டு வரவேணு மென்பதும் மஹர்ஷியின் உட்கருத்து. ஆக, ப்ரசார காலத்திலே எல்லாம் வ்ருத்தமாய் விடுகிறபடியால் இப்போது பவிஷ்யத் காலத்திலே நிர்த்தேசிக்கவேண்டியது அநாவஶ்யகம். பின்னுள்ளார் நீடித்து அநுஸந் திக்கவேண்டிய முறையிலேயே யிருக்கவேண்டு மென்றே மஹர்ஷி அவ் விதம் எழுதினார். ஆனாலும் ப்ரஹ்மா நியமித்துவிட்டபடியாலே, ரஹஸ்ய மாய் அந்த பாகத்தையும் க்ரஹித்திருந்தவர்களாய் ஆஶ்ரமவாஸ மஹர்ஷ் யநுக்ரஹாதிகளாலே கலக்கமிலா மனம் பெற்றவர்களுமான குசலவர்கள் மாத்ரம் ராமஸந்நிதாநத்திலே தத்க்ஷண மாத்ரத்திற்காக வெளியிட நேரிட்

டது. பிறகு அந்த பாகம் குப்தமாகவே யிருந்தது. ஆக, ப்ரசாரகாலத்தை அநுஸரித்து பூதகாலம். பாலகாண்டத்தில் முதல் ஸர்க்கத்திலே பட்டா பிஷேகத்திற்குப் பிற்பட்டதை பவிஷ்யத்தாகச் சொன்னதும், நாரத மஹர்ஷி எப்படி உபதேசித்தாரோ அப்படியே அநுவாதம் செய்யவேண்டி யதை அனுஸரித்து யுத்தகாண்டம் வரையில் அப்போதே ப்ரசாரத்திற் கிருந்தபடியாலே அங்கே ஒருவித ஆசங்கைக்கு மிடமில்லை. ஆகையால் பரஸ்பர விரோதத்திற்கும் ப்ரஸக்தியில்லை. இப்படி உசிதமான ஸமாதாந மிருக்க, யாரோ எழுதினதாக வீண் கல்பநம் செய்வது அநுசிதம். விலக்ஷ ணமாய் வால்மீகி எழுதினமாதிரி எழுதிச் சேர்க்கவேணுமென்று நினைத்து யாரோ சேர்த்தார்க ளென்றால், அவர்களுக்கு இப்படி பவிஷ்யத்தை பூதமாக நிர்தேசித்தால், உள்ளது லகுவாய் வெளிவந்து விடுமென்று ஸ்வஸாமர்த்யத்தை ஸ்வயம் பராமர்சிக்கச் சக்தி யிருந்திருக்க முடியாதா? இனி அவர்களுக்கு அவ்வளவு திறமையில்லை யென்பதையும் ஊஹிக்க வேணும். ஆகையால் இவ்வளவு க்லேசப்பட்டு விமர்சம் செய்வதை விட, நாம் சொன்னபடி அங்கிகரித்தால் ஒருவருக்கும் ஒருவித ப்ரமத்திற்கும் அவகாசமில்லை. ஆக, ப்ரமாணத்தில் கண்டபடி மஹர்ஷியே இயற்றியருளி னார் என்பதே உசிதம்.

இப்படியே பாலகாண்டத்தில் முதல் நாலுஸர்க்கங்கள் விஷயத்திலும் விமர்சிக்கவேணும். அங்கே ‘சகார சரிதவ்ரத:’ என்று பூதகால நிர் தேசம் செய்திருப்பது, ‘மஹர்ஷி வெகு சீக்ரத்திலே க்ரந்தத்தை எழுதி முடிக்க வல்லமையுள்ளவராகையாலே பூதப்ராயமாக நினைத்து’ என்றும் ஸமாதாநம் சொல்வதுண்டு. மேலும் முதல் நாலு ஸர்க்கங்களைக் குசலவர் கள் பாடவில்லை யென்று முன்பே சொன்னோம். இந்த நாலு ஸர்க்கங் களும் ஸ்ரீமத்ராமாயணத்திற்கு முகவுரை போன்றவை. முகவுரை க்ரந்தத் திற்கு வெளிப்பட்டு மிருப்பதுண்டு; க்ரந்தத்தில் உட்பட்டிருக்கச் செய்தே க்ரந்தம் மெழுதுவதற்கு முன்னமே எழுதப்படுவது முண்டு. க்ரந்த மெழுதிச் சிலர்க்குக் காண்பித்த பிறகு எழுதிச் சேர்க்கப்படுவது முண்டு. ஆகையால் முதலில் எழுதிய க்ரந்தத்தை ராமனுக் கெதிரில் மஹாஸபை யிலே குசலவர்கள் கானம் செய்த பிறகு தாமே தம்முடைய க்ரந்தத்திற்கு இதை முகவுரையாக எழுதி சேர்த்தார் என்று விமர்சிப்பதில் ஒருவித விரோதமுமில்லை. ஆகையால் அவைகளையும் வால்மீகியே இயற்றினார்.

மற்றொரு ஆக்ஷேபம்—இப்படி வால்மீகியே செய்திருந்தால் முதலில் ‘நாரதம் பரிபப்ரச்ச’ என்று க்ரியாபதத்திலே லிட் ப்ரயோகம் செய் திருப்பது எப்படி யுக்தமாகும்? ‘பூதாநத்யதநே பரோக்ஷே லிட்’ என்று தனக்கு ப்ரத்யக்ஷமாயிராமல் ஒரு நாளைக்கு முன் நடந்ததைச்

சொல்வதாயிருந்தா லன்றோ லிட் ப்ரயோகிக்கப்படலாம். வால்மீகி நாரதரைக் கேட்டது வால்மீகிக்கே தெரியாமலிருக்குமா? இப்படியே 'வளஷு வயதிச்சிவ வகார வரிதவ்ரத:' என்கிற விடத்திலும் காண்க. ஆக இவை வால்மீகியினால் செய்யப்பட்டவையன்று—என்று. இது ஒரு பெரிய ஆக்ஷேபமன்று. ஏனெனில்: சாஸ்த்ரப்படிக்கு லிட் ப்ரயோகத்திற்கு அந்த வ்யவஸ்தை யிருந்தாலும், வெகுகாலமாக மஹாகவிகளும் சாஸ்த்ரஜ்ஞர்களும் இந்த நியமத்தை அவ்வளவாக ஆதரிக்காமல் பூத காலமொன்றை மாத்ரம் விவக்ஷித்து இதை ப்ரயோகிக்கிறார்கள். இந்த ராமாயணத்திலேயே 3. 38. ல் மாரீசன் ராவணனோடு தன்னால் ப்ரத்யக்ஷமாக அநுபவிக்கப்பட்டதைச் சொல்லும்போது

'பஹூந்யேவம்விதா ராமஸ்ய த்ரூம் விஷாராயது யநா:'

'தமஹம்.....உவரிஷா ஜகாம தஹாஶ்ரம:'

'ராக்ஷஸ ஜ்யஷ்டா யநாஸ்ம ஜ்யேஸம் ராக்ஷஸகார வஸ:'

என்று லிட்டே ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது.

'அஹம் வஞ்சஸ ஹம்தேஷ உநஷஷேஷ்டாவவ । விவிஷ்ய ஸீதாம் ஶ்ரவெஸ்தி ஜஹ்ராஹ வநகிரமே' (7-96-22)

என்கிற ஶ்லோகத்திலே, ஸீதை பரிசுத்தை யென்று தீர்மானித்து அவளை வால்மீகி ஆஶ்ரமத்துக்கு அழைத்துக் கொண்டதை அவர்தாமே வெளியிடும் போது 'அஹம் ஜக்ராஹ' என்று ப்ரயோக மிருக்கிறது. ஆகையாலே இந்த கவிக் கிது ஸஹஜம். 'நாரதம் வரிவஷ்ரு' என்ற விடத்தில் ப்ரஷ்டவ்ய பகவத் குணங்களிலும் எதிரில் எழுந்தருளியிருக்கும் நாரத மஹர்ஷியின் மஹிமாதிசயத்திலும் ஈடுபாடு பிறந்து, தமக்குத் தெரியாமல் தாம் பரவசமாகக் கேட்டதாகத் தெரிவிப்பதற்காக லிட் ப்யோகம் செய்ததாகலாம். வேதோபப்ரும்ஹணமான இதனுடைய இந்த உபோத்காத ஸர்க்கங்கள் பின்னிட்டும் பிறருக்கு அநுஸந்தாநார்த்த மாகையாலே, அவர்களுக் கிருக்கிறபடி இங்கே பரோக்ஷ நிர்த்தேச மென்றும் சொல்லலாம். இப்படியே ஆங்காங்கு லிட் ப்ரயோக ஸ்தலங்களிலே ப்ரத்யக்ஷ விஷயத்திலும் பாரோக்ஷ்யத்தை ஒருபடியாலே வைத்து நிர்வாஹம் செய்வது ஸர்வ ஸம்ஸ்க்ருத பண்டித ஸம்மதம். ஆக இது ஒரு பெரிய விஷயமன்று.

முதலில் வால்மீகி யென்றும், உத்தரகாண்டத்திலே ப்ராசேதஸ்வலினுடைய பிள்ளை யென்றும் சொல்லியிருப்பதும் விருத்தமன்று.

'இதி ஸம்ஷிஷ்ய பஹூநெபா ஷீநி: ப்ராசேதஸஸ்ததா । வால்மீகி: வரஶோதா:' (7-93-17)

என்று ஒரு ஶ்லோகத்திலேயே வால்மீகியாகவும் ப்ராசேதஸராகவும் ஒருவரே சொல்லப்பட்டிருக்கிறார். இப்படியே

'உவாவ்யாநஶ்தம் வெவ ஹாமகவெண தவஷிநா' (94-26)

என்று அவரை ஹார்க்கவரென்று சொன்னதும் கவனிக்கப்படவேண்டும். விஷ்ணு புராணத்திலே 'ருக்ஷாஹமஹூமவஷூஸ்கு வால்மீகியெர்ா ஷியதெ' என்கிறதிலிருந்து இந்த ஹார்க்கவ வால்மீகிக்கு ருக்ஷரென்கிற முக்ய நாமதேயத்தையும் காண்கிறோம். இவ்வாக்யங்களை யெல்லாம் பராமர்சித்தபோது ப்ருகுவம்சத்திலே ப்ரசேதஸ்ஸுக்குப் புத்ரராய் ருக்ஷர் என்கிற பெயரோடு பிறந்து, மெய்ம்மறந்து மஹத்தான தபஸ்ஸை அநுஷ்டிக்கும்போது வல்மீகத்தால் (வல்மீகம்—புற்று) மூடப்பட்டு, பிறகு அதிலிருந்து வெளிக்கிளம்பி வந்ததாலே வால்மிகியென்று ப்ரஸித்தியை யடைந்தாரென்று நிர்ணயிக்கப்படுகிறது. ஸ்ரீபாகவதத்திலே ப்ராசீந பர்ஹிஸ்ஸு என்பவருடைய புத்ரர்கள் எல்லோரையும் 'ப்ரசேதஸ:' என்று சொல்வதால், ப்ரசேதஸ் என்கிற பெயர் அநேக வ்யக்திகளுக்குப் பொதுவானது. ஆக: வால்மீகியின் பிதாவுக்கும் ப்ரசேதஸ் என்கிற பொதுப் பெயரோடு 'வல்மீகர்' என்று தனிப்பெயர் உண்டென்று ஊஹிக்கப் பார்க்கலாம். ஆனால் புற்றிலிருந்து வெளிப்பட்டதாலே வால்மீகி எனப்பட்டார் என்பதே ப்ராமாணிகம்.

'ப்ராசேதஸஸ்ராதி கவிஸ்ஸ்யாமெத்ராவரணிஶ்ச ஸ: । வால்மீகிஶ்ச'

என்று விஶ்வ நிகண்டு. ஆக இவ்வளவு பெயர்களும் ஒருவரையே குறிப்பதால் உத்தரகாண்டம் இவர் செய்ததன்று என்று நினைப்பதற்கு ப்ரஸக்தியில்லை.

இனி: யுத்தகாண்டத்தின் முடிவில் விசேஷ பல ஶ்ருதிகளிருப்பதாலே அத்தோடு க்ரந்தம் முடிந்திருக்கவேண்டு மென்கிற ஆக்ஷேபத்தைப் பார்ப்போம். பால காண்டம் முதல் ஸர்க்கத்தின் முடிவில் பலஶ்ருதி யிருப்பது போல, யுத்தகாண்டத்தின் முடிவில் பலஶ்ருதி விசேஷித்திருப்பதைக் கொண்டு, 'அடியிலிருந்து யுத்த காண்டம் வரையில் பாராயணம் செய்தால் கூட அவ்வோபலங்கள் ஸித்திக்கும்; உத்தரகாண்டத்தையும் சேர்த்துப் பாராயணம் செய்யவேணுமென்று நிர்ப்பந்தமில்லை' யென்று மாத்ரம் நிச்சயிக்கலாமே யொழிய க்ரந்தமே அத்தோடு முடிந்துவிட்டதென்று ஊஹிக்கமுடியாது.

'ஆஹதெக ஶ்ரோஷெஜா ஶ்ரூகெ ஸ்ருக்வா ராமாபிஷேசநம்'

என்று ஸ்ரீராம பட்டாபிஷேகம் வரையிலுள்ள பாகத்தைப் பாராயணம் செய்யும்வர்களுக்கு ஐஹிக பலங்களின் ஸித்தியைச் சொல்லியிருக்கிறார்.

இப்படி யுத்த காண்டத்தோடு பாராயணத்தை முடிக்கலாமென்பதைத் தெரிவிப்பதற்காகவே,

'ஸர்வராமசரிதம் ராமநிர்யாணீதம் உத்தரமஸ்து வயம் நிபோதத'

என்கிற விடத்தில் 'உத்தரமஸ்து வயம்' என்றும் சொன்னது. ஆக: யதாவஸ்தித ராமசரித்ரத்தை க்ரமமாகச் சொல்லத் தொடங்கினபடியாலே முற்பட ஸீதாவியோகத்தையும், பிறகு அவர் பரிவாரத்துடன் ஸ்வலோகத்திற்கு எழுந்தருளினதையும் உத்தரகாண்டத்திற் சொல்ல நேரிட்டதால், மங்களார்த்தமாக க்ரந்தம் இராததினால் ஐஹிக பலார்த்திகள் ஆந்தம் பாராயணம் செய்வதைக் காட்டிலும் பட்டாபிஷேகத்தோடு முடிந்து மங்களாந்தமாயிருக்கும் யுத்தகாண்டம் வரையில் பாராயணம் செய்வது நலமென்று நிச்சயித்து, உத்தரகாண்ட விஷயத்தையும் சுபமாய் முடிவதற்குத் தக்கபடி யுத்த காண்டத்திலே சேர்த்துத் தாமே பலஶ்ருதியைச் சொல்லி விட்டு, விஸ்தரேண அறிய விரும்புவோர்க்கு அநுகூலமாக உத்தரகாண்டத்தையும் அம்மஹர்ஷியே செய்தருளினாரென்று ப்ரமாண பரிசீலநத்தாலே ஏற்படுவதால் அதை அநாதரிக்கக் காரணமில்லை.

ஒரு க்ரந்தத்திற்கு இரண்டு அநுக்ரமணிகைகள் எதற்காக என்று மற்றொரு ஆக்ஷேபம். இதற்கு இரண்டு அநுக்ரமணிகைகளில்லை யென்பதே பரிஹாரம். முதலில் நாரதமஹர்ஷி உபதேசித்த முறையை அநுவாதம் செய்திருக்கிறாரே யல்லது, தாம் சொல்லப்போகும் விஷயம் இன்னதென்று க்ரந்தார்த்த ஸங்க்ரஹத்தை மஹர்ஷி செய்யவில்லையே. சதகோடி ப்ரவிஸ்தரமாக சதுர்முகன் எழுதின ஸ்ரீமத் ராமாயணத்தின் அர்த்தத்தை ஸங்க்ரஹித்து, பலஶ்ருதியோடு நாரத மஹர்ஷி உபதேசித்தபடி முதலில் அநுவாதம் செய்து, பிறகு அதையும்,

'ரஹஸ்யம் ச ப்ரகாஶம் ச யத்வ்ருத்தம் தஸ்ய தீமத: ।
தத்ஸர்வம் தர்மவீர்யேண யதாவத் ஸம்ப்ரபஶ்யதி'

என்று ப்ரஹ்மாவினுடைய அநுக்ரஹத்தையும் முன்னிட்டுத் தாம் மேலே சொல்லப்போகும் ப்ரகாரத்தை வால்மீகி மஹர்ஷி மூன்றாவது ஸர்க்கத்திலே அநுக்ரமணிகாரூபேண அறிவித்தார். ஆக: அநுக்ரமணிகை ஒன்றே இங்குளது.

இங்கே மற்றும் சில நவீந விமர்சக வாதங்களையும் ஸங்க்ரஹேண விமர்சித்து வாஸ்தவார்த்தத்தை வெளியிடுகிறோம். அவர்களின் வாதங்களாவன—முதலில் நாரத வாக்யத்திலே பாலகாண்டோத்தரகாண்டகதை இராததினால், அவை யிரண்டும் வால்மீகியால் செய்யப்பட்டவையல்ல. ராமனுக்கு ராஜ்ய ப்ரம்ஶமும், வநவாஸமும், ஸீதாபஹாரமும்,

ராவணவதமும், பிறகு ஸ்ரீராம பட்டாபிஷேகமும் நடந்தது வாஸ்தவம். இவ்வளவே கதை முந்துற முன்னம் ஏற்பட்டது. 'ராவணனுக்குத் தலைகள் பத்து; கைகள் இருபது; விசேஷ வரலாபம்; அவனுடைய வதத்திற்காக விஷ்ணுவே ராமனாக அவதரித்தார்; ஸீதை அயோநிஜை' என்றிப்படி தைவமாநுஷ ஸம்பந்தத்தைக் கல்பித்துச் சொல்லப்பட்டவையெல்லாம் பின்னிட்டுப் பக்தி விசேஷத்தாலே ப்ரக்ஷிப்தமானவையே. ஒவ்வொரு காண்டத்திலும் ஒன்றோடொன்று முரண்படும் பாகங்களும் பல வுள்ளன. ஆக: முற்றிலும் வால்மீகி க்ருதமென்று தீர்மானிக்க முடியாது.

இப்படி ஒரு விமர்சம். இஃதென்ன விந்தை! 'ஆர்யர் வடதேசத்திலிருந்து தக்ஷிணத்தில் குடியேறினதை, இப்படி ராமாயண கதையாகக் கல்பித்திருக்கலாம். அல்லது ருக்வேதத்தில் பலவாறாகப் புகழப்பட்ட இந்திரனை ராமனாகவும், அவன் பகைவனான வ்ருத்ரனை ராவணனாகவும், ஸீதையென்று படைச்சாலுக்குப் பெயராகையாலே ருக்வேதத்தாலே தேவதையாகத் துதிக்கப்பட்ட அதையே ஸீதாதேவியாகவும் பாவித்து,இக்கதை கல்பிதமாயிருக்கலாம்' என்றிப்படியெல்லாம் விமர்சிக்கும் மேதாவிகளும் உண்டு. வாயை வைத்துக்கொண்டு வெறுமனே யிருப்பது எப்படி? நம் நாட்டிலிருப்பவர்க்கோ இப்போது அந்யதேசத்திய மொழியே அமுதம். அவர்கள் அச்சிட்டதே புத்தகம். பராவர தத்வங்களெல்லாம் அவர்களுக்கே ப்ரத்யக்ஷம்போலும். நம் க்ரந்தத்தை நேரில் பார்த்துப் பரிசீலிக்க நமக்கு ப்ரவ்ருத்தியில்லை. பாரத பூமியில் பிறந்து வளர்ந்து, பரம்பரையாகவே ராமப்ரவணமாய் விளங்கும் அயோத்யா ப்ராந்தங்களையும், க்ருஷ்ண ப்ரவணமான ப்ருந்தாவநம் முதலிய விடங்களையும், ஆங்காங்கு அவ்வோ சரித்ரங்களுக்கு ஸாக்ஷியாக அநேக ஸ்தலங்களிலிருக்கும் சிந்நங்களையும், ஆலயங்களையும், அகில ஜந பரிஸ்திதியையும் அநுபவிக்கப் பெறாத பல பரதேசிகள் என்னென்ன விதந்தான் எழுதிட வரைய முடியாது? கஜகூர்ம (ஆடு கழுதை) ந்யாயேந அநேகர் சொல்ல முன் வந்தால், அபத்தமும் உண்மையாகத் தோற்றும். பூத பவிஷ்யத் விஷயங்களையும் ப்ரத்யக்ஷீகரிக்கும்படி இவர்களுக்கு ஶக்தி ப்ரதாநம் செய்ய நமக்கு முடிந்தாலல்லது இவர்கள் மனத்தை மாற்ற முடியாது. ஆனால் வரவர விமர்சகர்களே இப்படி முழுமோசமான முறைகளைக் கைப்பற்ற மன மற்றிருப்பதாலே, நமக்கு அந்த பாரம் குறைந்திருக்கிறதென்று வைத்துக்கொள்ளலாம். இப்போது முன் எடுத்த *விமர்சவாதத்தை விசாரிப்போம்.

---

* இத்தைகய விமர்சங்கள், The Kiddle of the Ramayana by C. V. Vaidya, (2) Macdonell's Literature (3) The History of Indian literature by M. Winternity முதலிய நூல்களில் உள்ளன.

நாரதர் சொல்லியே வால்மீகிக்கு ராம வ்ருத்தாந்தம் தெரியவேண்டியிருந்தாலன்றோ, 'எப்படி அவர் உபதேசிக்காதவற்றை இவர் சொன்னார்?' என்று கேட்கக்கூடும். ப்ரஹ்மாவின் அநுக்ரஹத்தாலும் இவர் இதை விஸ்தாரமாக அறிந்திருக்கிறார். மேலும் 'ராமோ நாம ஜநை: ஶ்ருத:' என்று நாரதர் மொழிந்தபடி, ஸர்வதேச ப்ரஸித்தரான ராமனுடைய சரித்ரத்தை அதிக தூரமல்லாத, கங்கைக்கு அருகிலே வஸித்த வால்மீகி அறியாமலிருக்க முடியாது. இதனை இவர் அறிந்தவரே யென்றும், அப்படியாகில் நாரதரை இவர் ஏன் வினவினாரென்பதற்கு ஸமாதானமும், மேலே ப்ரகரணத்திலே பரக்க நிரூபிக்கப்படும். ஆக: நாரதர் சொல்லாமலிருந்தாலும் ராமாவதாரம், விஶ்வாமித்ர ஸமாகமம், ஸீதா விவாஹம், பரசுராம விஜயம் முதலிய பாலகாண்டார்த்தத்தையும் உத்தரகாண்டார்த்தத்தையும் இவர் விளக்கத் தட்டில்லை. மேலும் நாரதர் சொல்லவில்லையென்பது எங்ஙனே நிச்சயிக்கப்படுகிறது? அயோத்யா காண்டம் முதல் யுத்தகாண்டம் வரையிலுள்ளவை யாவும் மாத்ரம், நாரத வாக்யமான இந்த ஒரு ஸர்க்கத்திலேயே வ்யக்தமாக ஜ்ஞாதமாய் விடுகின்றனவா? அயோத்யா காண்டத்திலேயே,

> "ஸ ஹி தேவைருதீர்ணஸ்ய ராவணஸ்ய வதார்திபி:।
> அர்திதோ மாநுஷே லோகே ஜஜ்ஞே விஷ்ணு: ஸநாதந:॥"

என்றுளது. யுத்த காண்டத்திலே மந்தோதரிகூட ராமனை நாராயணாவதாரமாகச் சொல்லியிருக்கிறாள். ஆகையால் அவர் அருளிச்செய்ததைத் தாம் மேலே விஸ்தரேண சொல்லப் போவதாலே இங்கே சுருக்கி ஶ்லோக ரூபேண ஸங்க்ரஹித்த தத்தனை. ஸங்க்ரஹிக்கும்போது எல்லாம் வாச்யமாகவே இருக்க முடியாது. ஒரு சில ஸூக்ஷ்மமாய் உக்தமாயும், மற்றும் சில ஸூசிதமாயுமிருக்கும். ஆக 'இக்ஷ்வாகுவம்ஶப்ரபவ:' என்கிற விடத்திலே அவதாரம் ஸூசிதமே. பட்டாபிஷேகம் தடைப்பட்டு ஸீதையோடு வநவாஸத்திற்குப் புறப்பட்டதை மேலே நாரதர் சொன்னதாலே, முந்துற முன்னம் ஸீதா விவாஹமும் ஸூசிதம். அது விஶ்வாமித்ர மூலமாகையாலே ஸர்வமும் ஸூசித ப்ராயமே. 'ஜநை: ஶ்ருத:' என்பதிலிருந்தே ஸித்தாஶ்ரமாதிகளிலே ரிஷிஜந மைதில ஜநப்ரஸித்தி யெல்லாம் ஸூசிதமாகிறது. 'ந புத்ரமரணம் கேசித் த்ரக்ஷ்யந்தி' என்றாரம்பித்து, ஆறு ஶ்லோகங்களாலே ஹவிஷ்யத் விஷயங்களைக் குறிப்பிட்டிருப்பதாலே, உத்தரகாண்ட விஷயத்தை அவர் விட்டுவிட்டார் என்பது ஸர்வதா வாயிதம்.

(தொடரும்)

ஸ்ரீ:

சரீராரோக்யமும் புது நாகரிகங்களும்

[ஸ்ரீ. உப. வி. அநந்தாசார்யர், ஸம்ஸ்க்ருத பண்டிதர்,
பச்சையப்பன் காலேஜ், சென்னை.]

"ஶரீரரக்ஷணம் ஸம்யக் ப்ரயத்நேந யத்நேந உச்யதே" என்பது ஸ்ரீபாத்ம புராணத்தின் வசநம். "ஶரீரமாத்யம் கலு தர்மஸாதநம்" என்பது மகாகவி காளிதாஸனுடைய வார்த்தை. தத்காலத்தில் வெகுவிரைவாய்ப் பரவிவருகிற நவீந நாகரிகத்தில் சில பாகங்கள் சரீராரோக்யத்திற்கு முற்றும் விரோதமாய்க் காணப்படுகின்றன. இதை உணர்ந்தவர் சிலர்; உணராதவர் பலர். க்ராமங்களில் வசிப்பவர்களைவிட, நவீந நாகரிகங்கள் நிறைந்த நகரத்தில் வஸிக்கும் ஜநங்கள் பெரும்பாலும் ஆரோக்யக் குறைவினால் வருந்துகிறார்கள். இதற்குக் காரணம், பஞ்சமஹா பூதங்களால் உண்டாகக்கூடிய குணபேதமே. அதிலும் குடி தண்ணீரின் குணபேதமே முக்ய காரணம் என்று உரைக்கலாம். குடிப்பதற்குக் குழாய் ஜலத்தை உபயோகிக்கும் வழக்கம் கொஞ்சங்கொஞ்சமாய் நாடெங்கும் பரவிவருகிறது. சில நகர பரிபாலந ஸபைகளில் குழாய் ஜலத்தையே குடிக்கவேண்டும் என்று குடிமக்களை வற்புறுத்தத் தொடங்கி விட்டார்கள். வைத்ய சாஸ்த்ரத்தில் தேர்ச்சியடைந்த நிபுணர்கள் இவ்விஷயத்தை ஆராய்ந்து பாராமல், புஸ்தகப் படிப்பையே பின்பற்றி நிற்பதன் பயன் இப்படி விபரீதமாய் முடிகிறது. நமது முன்னோர்களால் எழுதப்பட்ட பற்பல நூல்களில் இவ்விஷயம் விரிவாய் உரைக்கப்பட்டிருப்பதை யாரும் கவனிப்பதில்லை. ஆபஸ்தம்ப மஹர்ஷி, பூமியிலிருந்து நேராக எடுத்த ஜலத்தைக் குடிப்பது நன்று என்று கூறுகிறார். இவ்விஷயத்தைச் சற்று விசாரிப்போம். நதி, தடாகம், கிணறு, முதலான இடங்களிலிருந்து எடுத்த ஜலத்தை ஒரு பாத்ரத்தில் வைத்தால் நாழிகைக்கு நாழிகை அந்த ஜலம் மாறுதலடைவதை ப்ரத்யக்ஷமாய்க்காணலாம். சில காலத்திற்குப் பிறகு அது துர்க்குணம் அடைந்திருப்பதையும்காணலாம். "ஸூர்யாக்ராம் ஶீதி ரோஹிதா ந ச விவேஷ்டநம் ஜலம் தோஷலம்" என்று தந்வந்தரி நிகண்டுவில் விதி. துர்க்கந்த மற்றதும் சுத்தமானதுமான மண், ஜலத்தைச் சுத்தம் செய்வதில் சிறந்ததாகும். "ஜலப்ரஸாதவிதி ஶ்ரீதம் ஶாஸ்த்ரதரம் வர்ணைர்வ வர்ஜிதம்" என்றும் தந்வந்தரி கூறுகிறார். பாசி பிடித்த இரும்புப் பாத்ரத்தில் எடுத்து வைத்த ஜலம் கூடிய சீக்ரத்தில் துர்க்குணம் அடைவதைப் பார்க்கலாம். குழாய் ஜலத்தில் துர்க்குணம் உண்டு என்றால், இக்காலத்திய நிபுணர்களுக்கு

மஹா கோபம் வருகிறது. குழாய் ஜலத்தை உபயோகிக்கிற ஜநங்களுக்குத் தோன்றும் பிணிகளோ எண்ணிறந்தவை; விசித்ரமானவை; வைத்யர்களுடைய நுட்பமான அறிவுக்கும் அகப்படாதவை. அப்படியிருந்தும், குழாய் ஜலத்தை உபயோகிக்காமல் இருக்க முடிகிறதில்லை. அநேக முனிஸிபாலிடிகளில் இந்தக் குடி தண்ணீரை வடிகட்டுவதற்காக ஏராளமான பொருள் செலவிடப்படுகிறது. இப்படி வடிகட்டுவதனால் ஜலம் சுத்தமாகிறது என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் யானையைக் குளிப்பாட்டுவதுபோல் வீண் ஶ்ரமம் தானே. இவ்வளவு பாடுபட்டுச் சுத்தம் செய்த ஜலத்தை வெகு காலமாய்ப் பாசி பிடித்தும், ஸூர்ய வெளிச்சம் சந்த்ர கிரணம் வாயு ஸஞ்சாரம் இவைகளுக்கு எட்டாததும், பலவித க்ருமிகளால் நிறைந்தும், துர்க்கந்த முள்ளதுமான இரும்புக் குழாயில் விட்டு அதைக்குடிக்கச்செய்வதும் மிகவும் அநுசிதம். இக்குழாய் ஜலத்தில், மிகவும் அநாகரிகமான விஷயம் மற்றொன்று உண்டு. கக்கூஸில் உபயோகிப்பதற்கும், சமையலின் உபயோகத்திற்கும் ஜலம் ஒன்றே. கக்கூஸில் பரவியிருக்கும் துர்க்கந்தத்தைக் குழாயின் சிறிய துவாரத்தின் வழியாய் உள்ளே செல்லாமல் தடுக்க யாரால் முடியும்? இந்த அசுத்தி மூக்கு முதலிய நமது இந்த்ரியங்களுக்குப் புலப்படாவிட்டாலும், ஸூக்ஷ்மமாய்க் குழாயுள் சென்று நீரில் கலக்கிறது என்பதில் ஸந்தேகமே இல்லை. இந்த ஜலத்தையே குடிக்க நேரிடுகிறது. ஜலத்தை உபயோகிக்கும் மார்க்கத்தில் தர்ம சாஸ்த்ரங்களின் விதி மிகவும் கண்டிப்பானது.

ஶௌசம், பாதப்ரக்ஷாளநம், ஹஸ்தப்ரக்ஷாளநம், ஸ்நாநம், பாநம் இவைகளுக்கு ஜலபாத்ரங்கள் வெவ்வேறு வேண்டும். ஒரு கார்யத்திற்காக ஏற்பட்ட ஜலபாத்ரத்தை மற்றொரு கார்யத்திற்கு உபயோகிப்பது அநாகரிகம். மேற் சொன்ன எல்லா கார்யங்களுக்கும் ஒரே ஜலாதாரத்திலிருந்து ஜலம் எடுத்து நிரப்பப்பட்டிருந்த போதிலும், பாத்திரத்தில் வந்த பிறகு ஜலத்தின் உரிமை வெவ்வேறு விதமாய் மாறுகின்றது. இவ்விதம் ஜலத்தின் யோக்யதை மாறுவதற்கு நமது மனமே காரணம்; மனமே ப்ரமாணம். இவ்விஷயத்தை மிகவும் நுட்பமான வழியில் ஆராய்ச்சி செய்ய இடமுண்டு. மிகவும் விரியுமென்று அஞ்சி இத்துடன் நிறுத்துகிறேன். ஆகவே: வைத்ய சாஸ்த்ரங்களும் தர்மசாஸ்த்ரங்களும் ஏகமுகமாய்க் குழாய் ஜலத்தை உபயோகிக்கும் விஷயத்தில் முரண்பாடுடையவை. ஶௌசம் தவிர மற்ற கார்யங்களுக்கு உபயோகிக்க ஆக்ஷேபமே தவிர, ஶௌசத்திற்கு உபயோகிப்பதில் யாதொரு விரோதமும் இல்லை.

ஆனால் நமது வைத்ய சாஸ்த்ரங்களும் தர்ம சாஸ்த்ரங்களும் ஒற்றுமை வாய்ந்து எவ்விதமான தண்ணீரைக் குடிக்க அநுமதி தருகின்றன

வென்பதையும் கூறுகிறேன். ஜநங்களை அசுத்தம் செய்யவொட்டாமல் தடுத்துக் காப்பாற்றப்பட்ட நதி, தடாகம், அருவி, கிணறு, இவைகளின் ஜலத்தைக் குடிக்க உபயோகிக்கவேண்டும். சுத்தமான மண் உள்ள பூமியில் கிணறு தோண்டி, ஸூர்ய சந்த்ரகிரணங்கள் படும்படியாக வைத்து, சுற்றி அசுத்தங்கள் சேரவொட்டாமல் காப்பாற்றி வைத்துக்கொண்டு, அதன் ஜலத்தைக் குடித்தால் சரீராரோக்யம் குன்றாமல் இன்பமுற வாழலாம். அசுத்தமான கிணற்று ஜலத்தைக் குடித்தால் யானைக்கால் முதலிய வ்யாதிகளால் வருந்த நேரும். குழாய் ஜலத்தில் உண்டான துர்க்குணத்தால் காசரோகம் க்ஷயரோகம் முதலிய வியாதிக்கு உட்படுவோம். சரீராரோக்யத்தில் ஶ்ரத்தையுடையவர் அனைவரும் மேற்சொன்ன விஷயத்தை நன்கு கவனிக்கவேண்டும். பாநீயத்தின் ஆதாரமான கிணற்றைச் சுத்தமான நிலைமையில் ரக்ஷிப்பது எளிதல்ல; குறைந்த வருமான முள்ளவருக்கு ஸாத்யமுமல்ல. ஆனாலும், ப்ரபுக்களாவது இவ்விஷயத்தைச் செய்து தாங்களும் இன்பமுற்று, மற்றவர்களுக்கும் வழி காட்டுவார்களானால் நம்மைப் போன்ற எளியவரும் அதைப் பின்பற்றி நீடூழி காலம் நீரோகிகளாய் வாழ இடமுண்டு.

ஸ்ரீ:

திருவள்ளுவரும் திருமகளும்

[பந்தல்குடி பார்த்வாஜ மாடபூசி ரெ. திருமலை ஐயங்கார், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்]

“தேவிற் சிறந்த திருவள் ளுவர்குறள்வெண்
பாவிற் சிறந்திடுமுப் பால்பகரார்—நாவிற்
குயலில்லை சொற்சுவை யோர்வில்லை மற்றுஞ்
செயலில்லை யென்னுந் திரு.”

[தெய்வத் தன்மையாற் சிறந்த திருவள்ளுவரது குறள் வெண்பாக்களோடு கூடிச் சிறந்து தோன்றுகின்ற முப்பால்களையும் ஓதிக் கல்லாதவரது வாக்கிற்கு இன்சொற் கூறி வாழ்தல் உண்டாகாது; மனத்திற்குச் சொற்களின் சுவையை உணர்தல் உண்டாகாது; இவையன்றியும் சரீரத்திற்கு நல்ல செயல் உண்டாகாது என்று நினைத்து அவரிடத்துத் திருமகள் சேரமாட்டாள்.]

திருவள்ளுவர் திருக்குறளாசிரியராகத் திகழ்ந்தவர். அறிவுடையவரால் விரும்பப்படுந்தன்மை திரு. ஈகையுடையார் வள்ளுவர். எனவே,

சுருதி, ஸ்மிருதி, இதிகாச புராணாதிகளில் இலைமறை காய் போலிருந்த விசேஷ விஷயங்களை யெல்லாந் தமிழ் மக்கள் எளிதில் அறிந்து உய்யுமாறு தொகுத்து அருள் செய்தவராதலின், திருவள்ளுவர் என்னுங் குறியீடு பெற்றார் என்பர் பெரியோர். வள்ளுவரிடத்து வளர்ந்தமை பற்றி வள்ளுவ ரெனப்பட்டார் என்பதும் பொருந்தும். சங்கப் புலவர்களில் ஏனையோருக் கில்லாத 'திரு' என்ற அடைமொழி அசாதாரணமாக நம் வள்ளுவருக்கே வழங்கலாயிற்று என்பதை அறிஞர் நன்கு கருதுவர். திருவின் திருவருளால் திருவள்ளுவர் திருக்குறள் இயற்றியருளித் தன் பெயரை நிலைநிற்குமாறு செய்தார் என்பதும் மிகையாகாது. நாயனார் முப்பாலில் திருவைப் போற்றியுள்ள பிரகாரங்களை அதிகார வரிசையில் சற்றுக் கவனிப்போம்.

இல்லற வியல் 'விருந்தோம்பல்' என்ற அதிகாரத்தில் நான்காவது குறள் வருமாறு :

"அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில்."

[முகமலர்ச்சியு டையனாய்த் தக்க விருந்தினரை யுபசரிப்பவனுடைய வீட்டின்கண் திருமகள் மன மகிழ்ச்சியுடன் வாழ்வாள் என்பது இக் குறட் கருத்து.]

தென் புலத்தார் (பிதிரர்), தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தான், என்னும் ஐந்திடத்து அறஞ்செய்தல் அற நெறியாகும். இவற்றுள் முன்னுள்ள இரண்டும், கண்ணாற் காணாதவரை நினைத்துச் செய்வன. பின்னுள்ள இரண்டும், பிறர்க்குக் கொடுத்த லல்லாமையின. எனவே நடு நின்ற விருந்தோம்பலே இல்லறங்கட்கு முதலாயிற்று. விருந்தோம்பல் என்ற அதிகாரத்தில் முதலிரண்டு பாட்டாலும் விருந்தோம்பலின் சிறப்புக் கூறி, மேல் மூன்று பாட்டாலும் விருந்தோம்புவார் இம்மைக்கண் எய்தும் பயன் கூறுகின்றார் திருவள்ளுவர். இம் மூன்றின் நடுவில் நிற்பது 'அகனமர்ந்து' என்ற குறள். இக்குறளால் பொருள் வளர்தற்குங் காரணங் கூறுகிறார். 'இல்' என்பதின் விசேஷணம் 'முகனமர்ந்து நல்விருந்து ஓம்புவான்,' நல்விருந்தென்பது தக்க விருந்தினரை. விருந்தினர்க்குத் தகுதியாவது ஞானத்தினாலும் ஆசாரத்தினாலும் மேம்படுதல். திருமகளைத் திருவள்ளுவர் 'செய்யாள்' என்று போற்றுகிறார். செல்வம் செல்வோம் என்பதன்றி, திருமாலின் திருமார்பில் உறையும் திருமகள் முகமினியனாய்த் தக்க விருந்தினரை ஓம்புவான் அகத்தில் மன மகிழ்ந்து உறையும். 'செய்யாள் அகனமர்ந்து உய்யும்' என்ற செவ்வியை நோக்குக. விருந்தோம்புவார்க்கு இன்றியமையாதன மூன்று. அவையாவன:—

தூரத்திற் கண்ட விடத்து முகமலர்ச்சி காட்டல், அம்முகமலர்ச்சி பற்றிச் சமீபத்தில் வந்தவிடத்து இன்சொற் சொல்லுதல், அவ்வின்சொற் பற்றி உடன்பட்டபோது உபசாரஞ் செய்தல் என்பன. இம்மூன்றனுள் முதலாயது முகமலர்ச்சி. இஃது இல்லாவிடின் விருந்தினர் முகம்வாடி நீங்குவராதலின் 'முகனமர்ந்து ஓம்புவான்' என்றார். அகத்தியன், ஸ்ரீராமன் தனதாச்சிரமத்துக்கு எழுந்தருளுவதைப் பார்த்து அன்பு மிகுதலால் தாமரை மலர் போன்ற ஒளியினையுடைய கண்கள் ஆநந்தக் கண்ணீரைச் சொரியும்படி நின்றான் என்ற கருத்துப்படக் கம்பர் 'கண்டனனி ராமனைவ ரக்கருணை கூரப், புண்டரிக வாணயன நீர்பொழிய நின்றான்' என்கிறார். சவரி ஸ்ரீராமனுக்கு விருந்து செய்து உபசரித்தலைக் கம்பர் 'ஆண்டவ னன்பி னேத்தி யழுதிழி யருவிக் கண்ணள் * * * * வேண்டிய கொணர்ந்து நல்கி விருந்து செய்து' என அழகாகக் குறிக்கின்றார். நல்விருந் தென்பார் எய்தா விருந்தினரை; கிடைத்தற்கரிய விருதினரை. விதுரர் குடிசிற்குக் கண்ணபிரான், விருந்தாகச் சென்றது போல்வது.

பின்னர் செய்யவள் நீங்குவ தெப்போது என்றும், தனக்கு மூத்தவளைக் காட்டுவ தெவ்விடம் என்றும், வள்ளுவர் 'அழுக்காறாமை' என்ற அதிகாரத்தில்,

"அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும்"

என்று கூறுகிறார். [பிறர் செல்வத்தைக் கண்டு பொறாமைப்படுபவனிடத்துத் திருமகள் தானும் பொறாமை கொண்டு, அவனைத் தனது தமக்கையாகிய மூதேவிக்குக் காட்டிவிட்டு நீங்குவாள் என்பது இக் குறட் பாவின் கருத்து.]

அழுக்காறு என்பது பிற ராக்கம் பொறாமை. பிற ராக்கம் பொறாமையாவது: அன்னியருக் குண்டாகும் கல்வி, செல்வம், அதிகாரம், மரியாதை முதலாயினவற்றைக் கண்டு அசூயை யடைதல். அழுக்காறு என்னுஞ் சொல், அழுக்காற்றைச் செய்யாமை என்னும் பொருள் தோன்ற எதிர்மறை ஆகாரமும் 'மை' விகுதியும் பெற்று அழுக்காறாமை என நின்றது. அழுக்காறாமை யென்றால் பொறாமைப்படுதலைச் செய்யாமை; பொறாமைப்படாமை. அஃதாவது: பொறுத்தல் என்பது பொருளாகும். இவ்வதிகாரத்தில் முதல் இரண்டு பாட்டாலும் அழுக்காறின்மையது குணங் கூறி, மேல் ஆறு பாட்டாலும் அழுக்காறுடைமையது குற்றங் கூறினார். [அழுக்காறுடையானை பிறர் செல்வம் கண்டவிடத்துப் பொறாமைப் படுகின்றவனைத்

செய்யவள்-திருமகள், அவ்வித்து-தானும் பொறாமைப்பட்டு, தவ்வையைத்-தனது தமக்கைக்கு; காட்டி-காண்பித்து; விடும்-நீங்குவாள்.]

தேவாசுரர் திருப்பாற் கடலைக் கடைந்தபோது, அக்கடலினின்று மூதேவி முன்னும் இலக்குமி பின்னும் பிறந்தமையாலே, மூதேவிக்கு மூத்தவள் என்னும் பெயர் உண்டாயிற்று. பொறாமை யுடையவனது மனத்தைத் திருமகளே கோணப் பண்ணிவிடுவாள். எனவே திருமகட் குறைவிடம் அழுக்காறற்ற அகமே என்பது பெறலாம். பொறாமையுடையவனை மூதேவி யடைவாள் என்பது வெளிப்படை. இக்குறளில் சீதேவி மூதேவி இருவரையும் ஒருங்க விடுகிறார் திருவள்ளுவர். இதற்கடுத்த குறளில்:

“அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்.”

என்கிறார். [அழுக்காறென்று சொல்லப்பட்ட ஒப்பில்லாத பாவியானவன், தன்னை யுடையவனை இம்மையில் செல்வத்தைக்கெடுத்து மறுமையில் நரகத்தினிடத்துச் செலுத்திவிடுவான்.] பொறாமையானது தன்னையுடையவனைக் கெடுத்து நரகத்திற் குள்ளாக்கும். அழுக்கா றென்னுங் குணத்திற்குக் குணமின்றாயினும், தன்னை யுண்டாக்கினவனை இருமையிலும் கெடுக்கின்ற கொடுமை பற்றி அதனைப் ‘பாவி’ என்றார். தீய காரியங்களைச் செய்கின்றவனைப் பாவி என்று பேசுவது உலக வழக்கு. பாவி என்பதற்குத் தகுந்த ஏது காட்டிச் சமர்த்திக்கிறார் திருவள்ளுவர்.

அப்பால் ‘வெஃகாமை’ என்ற அதிகாரத்தில் பிறன் பொருளை விரும்பாமையின் குணஞ் சொல்லுமிடத்து,

“அறனறிந்து வெஃகா வறிவுடையார்ச் சேருந்
திறனறிந் தாங்கே திரு.”

என்கிறார் நாயனார். [இது அறனென் றறிந்து பிறர் பொருளை விரும்பாத அறிவுடையாரைத் திருமகள் தான் அடைதற்கு ஆகும் வழியை அறிந்து அவ்வழியாலே சென்று சேர்வள்.] இதனால் திருமகள் யாரை எவ்வாறு அடைவள் என்ற விஷயம் விளக்கப்பட்டது. பிறன் பொருளை விரும்பாத அறிவுடையாரை இலக்குமி தானே சென்றடைவாள். அறிவுடையார்ச் சேருந் திரு. எந்த அறிவுடையார்? இது அறம் என்றறிந்து பிறர் பொருளை விரும்பாத அறிவுடையார். திறனறிந்து—தான் சேர்தற்காந் திறத்தை அறிந்து, ஆங்கே—அத்திறத்தினாலே, சேரும்—சென்றடைவாள். அடைதற்காந் திறம் காலமும் இடனும் சமயமும் முதலாயின. சமயமாவது மனமகிழ்ச்சியும், முகமலர்ச்சியும், இனிய சொல்லும் உடையவராயிருக்குஞ் சமயம். வெஃகாமை என்பது, பிறர்க்குரிய பொருளை

அபகரித்தற்கு நினையாமை. பிறருடைமையைக் கண்டவிடத்துப் பொறாமையடைதலும், அதனைத் தான் வௌவக் கருதுதலும் குற்றமாகும். அறிவுடையராதற்கு வெஃகாமையே ஏதுவாகும். நாம் அரிதிற் பெறவேண்டிய திரு தானே வந்தடையும் வெஃகாமை என்றதிருக்குணம் நம்மிடம் உளதாயின். இனம் இனத்தைச் சேருமல்லவா? ‘ஒப்புர வறிதல்’ என்ற அதிகாரத்தில்

“ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் திரு.”

என்பர் நாயனார். [உலக நடையை விரும்பிச் செய்யும் பேரறிஞ ரிடத்துள்ள செல்வம், ஓர் ஊரிலுள்ளார் யாவராலும் உண்ணுதற் குரியதொரு நீர்நிலையி னிடத்து நீர் நிறைந்தாற்போலும்.] உலக நடையினை அறிந்து செய்தல் ஒப்புர வறிதல். இதற்குப் பயன் இம்மையிற் புகழ். இவ்வதிகாரத்தில் ஒப்புரவினது சிறப்பை மூன்று பாட்டானும் கூறி, நான்காவது குறளால் உலக நடையிற் றவறுதல், வேத நடையிற் றவறுதல்போல் தீரும் வழியை யுடையதன் றென்பதுங் கூறி, மேற்குறித்த குறளால் உபகாரஞ் செய்பவனது பொருள் பயன்படுமாறும் கூறுகின்றார். ஊருணி என்பதற்கு ஊராரால்உண்ணப்படுவது என்பது பொருள். உலக நடையை விரும்பிச் செய்யும் பேரறிவாளனது செல்வமானது ஊருணி நீர்போல் பாழ் போகாமல் நெடுங்காலம் நின்று, யாவர்க்கும் அவர் விரும்புவனவற்றைத். தப்பாது உதவும். முன்னவர் இராம மகுடாபிஷேகத்திற்கு இசைந்ததற்குக் காரணந் தெரிவித்தலைக் கூறுமிடத்துக் கம்பரும்,

“ஊருணி நிறையவும்......... ....மறுக்கின்றார்கள் யார்”

என்பர். பாழ் போகாது நெடிது நின்று எல்லாருக்கும் எளிதில் வேண்டும் பலன்களைத் தப்பாது கொடுத்து உதவுகின்ற ஊருணி முதலியனவற்றிற்கு நீர் நிரம்புகை முதலியன நேர்படுதல் அவற்றைத் தடை செய்வாரில்லையாதற்போல், பெரு நன்மையே செய்ய நின் மகன் மன்னுயிர்களைப் பாதுகாக்குமாறு மகுடஞ் சூடுதல் உலகத்துப் பிராணிகள் நன்மை பெறுதற்கே காரணமாதலால் அதனை மறுப்பார் ஒருவருமில்லை என்று தயரதற் குரைத்தார் தாரணி வேந்தர். ‘பேரறிவாளன் திரு ஊருணி நீர் நிறைந்தற்று.’

திருவள்ளுவர் பின்னர் ‘ஊழ்’ என்ற அதிகாரத்தில்

“இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு.”

என்கிறார். [உலகத்தில் ஊழினாலாகிய தன்மை இருவகைப்படும். ஆதலால், செல்வ முடையவராக இருத்தற்குரிய ஊழ் வேறு; அறிவுடையவராக இருத்தற்குரிய ஊழ்வேறு.] நல்வினையின் பயனாகிய இன்பமும், தீவினையின்

பயனாகிய துன்பமும், அவ்வவ்வினையைச் செய்தவனையே சென்றடைவதற்குக் காரணமாகிய நியதியே ஊழ். இவ்வதிகாரத்தில் முதல் ஆறு பாட்டாலும் பொருளுக்குக் காரணமாகிய ஊழின் வலி கூறுகின்றார். இதில் நாலாவது மேற் காட்டிய குறள்.

செல்வத்தினைச் சம்பாதித்தலும், காப்பாற்றலும், பயன் கொள்ளுதலும், அறிவுடையவர்க் கல்லாமல் ஏனையார்க்குக் கூடாவன்றே. அவ்விதமின்றி அறிவுடையவர் வறியராயும், மற்றவர் செல்வராகவும் காணுதலால், அறிவுடைய ராதற்குக் காரணமாகும் ஊழ் செல்வமுடைய ராதற்குக் காரணம் ஆகாது. செல்வமுடைய ராதற்குக் காரணமாகும் ஊழ் அறிவுடைய ராதற்குக் காரண மாகாது. எனவே செல்வத்தைத் தேடும்போது அறிவாகிய துணைக் காரணமும் வேண்டாம் என்பது பெறலாம்.

நாயனார் 'கல்லாமை' என்ற அதிகாரத்தில்,

"நல்லார் கட்பட்ட வறுமையி னின்னாதே
கல்லார் கட்பட்ட திரு."

என்பர். [படித்தவரிடத்தில் ஏற்பட்ட தரித்திரத் தன்மையைக் காட்டிலும் மிக்க துன்பந் தருவது, கல்லாதவரிடத்தில் உண்டாகிய செல்வமேயாம்.] கல்லாதவரின் திருவின் குற்றங் கூறுகின்றார். செல்வம் தனக்குரிய கற்றவரையும், வறுமை தனக்குரிய கல்லாதவரையும் விட்டு மாறி நிற்றலால், தாம் இடுக்கண் படுதலும் உலகிற்குத் துன்பஞ் செய்தலும், இரண்டற்கும் ஒக்கும். ஆயினும் செல்வம் கல்லாதவரைக் கெடுக்க, வறுமை கற்றாரைக் கெடுக்காது நிற்றலால் வறுமையினும் திரு இன்னாதாகும்.

செந்நாப்போதார் 'காலம் அறிதல்' என்ற அதிகாரத்தில்,

"பருவத்தோ டொட்ட வொழுகல் திருவினைத்
தீராமை யார்க்குங் கயிறு."

என்கிறார். [அரசன், காலத்தோடு பொருந்தத் தொழிலைச் செய்து நடப்பது, ஒருவரிடத்திலும் நிலையில்லாது நீங்கும் தன்மையதாகிய செல்வத்தைத் தன்னிடத்தினின்றும் நீங்காதபடி வைக்கும் கயிறாகும்.] காலமறிந்து தொழில் செய்பவரிடத்துச் செல்வம் நீங்காது. மேற்கொண்ட தொழிலைக் காலந் தப்பாமற் செய்தலே சாலச் சிறந்தது.

தெய்வப் புலவர் 'தெரிந்து வினையாடல்' என்ற அதிகாரத்தில்,

"வினைக்கண் வினையுடையான் கேண்மைவே றாக
நினைப்பானை நீங்குந் திரு."

என்கிறார். [எப்பொழுதும் தன் தொழிலினிடத்தே முயற்சி செய்தலை

யுடையவன், அவ்வுரிமையால் தனக்கு அந்தரங்கனாய் நடக்கும் தன்மையைப் பொறாமை கொண்டு கலகஞ் செய்பவரது சொற்கேட்டு அரசன் மாறுபட நினைப்பானால் திருமகள் அவனை விட்டு நீங்குவாள்.] கேண்மை என்பது தனக்குச் சுற்றமாய் நடக்கின்ற தன்மை. அதாவது: வினையுடையான் அரசனுக்குத் தான் பிறனாய் நில்லாமல் சுற்றத்தார் செய்யும் உரிமையை யெல்லாம் செய்து நடத்தல். அரசன் அவனை அவமதிப்பாகக்கொண்டு கோபிக்க நினைப்பானாயின், பின் ஒருவரும் உட்பட்டு தொழிலில் முயல்வா ரில்லையாம். இல்லையாகவே தன் செல்வம் கெடும். தனது காரியத்தில் முயற்சியுடையவனா யிருப்பவனை மாறுபட நினைக்கும் அரசனது செல்வம் அழிந்து விடும்.

மாதாநுபங்கி 'வெருவந்த செய்யாமை' என்ற அதிகாரத்தில்

"இனத்தாற்றி யெண்ணாத வேந்தன் சினத்தாற்றிச்
சீறிற் சிறுகுந் திரு."

என்பர். [தான் செய்யவேண்டிய காரியத்தைப் பற்றி வந்த ஆலோசனையைத் தன் இனமாகிய அமைச்சரோடு கலந்து, ஆலோசித்துச் செய்யாத அரசன், அந்தக் குற்றத்தினால், தன் காரியம் தவறியபோது தன்னைச் சினத்துக்கு ஆளாக்கி, மந்திரிகளைக் கோபிப்பானால் அவனது செல்வம் நாடோறும் சுருங்கும்.] வெருவந்த செய்யாமையாவது: குடிகள் அஞ்சுவதும், மந்திரி முதலாகிய அங்கங்கள் அஞ்சுவதும், தான் அஞ்சுவதும் ஆகிய தொழில்களைச் செய்யாமை. மந்திரிகளுடன் ஆலோசியாது தான் செய்த காரியம் தவறியபோது அவர்களைக் கோபிக்கு மரசனது செல்வம் நாளுக்கு நாள் குறைந்து போம்.

நான்முகனார் 'ஆள்வினையுடைமை' என்ற அதிகாரத்தில்,

"முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
யின்மை புகுத்தி விடும்."

என்கிறார். [அரசரிடத்தில் உண்டாகிய முயற்சி, அறுவகை அங்கங்களாகிய அவரது செல்வத்தை வளரச் செய்யும்; அம் முயற்சி இல்லாதிருத்தல் அவரை வறுமையில் ஆழ்த்திவிடும்.] அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்பன அறுவகை அங்கங்கள். வறியாதல், இவ்வங்கங்களால் குறைவு பட்டவராதல், முயற்சி யில்லாத அரசர் அமைச்சு முதலிய அங்கங்களால் குறைவுபட்டிருத்தலால், அவர் எளிதில் பகைவரால் அழிவர். எனவே, முயற்சி செல்வத்தையும் அஃதின்மை தரித்திரத்தையும் உண்டாக்கும்.

மேற்சொன்ன அதிகாரத்திலேயே

"மடியுளாண் மாமுகடி யென்ப மடியிலான்
தாளுளாள் தாமரையி னாள்"

என்பர். [கரு நிறமுடைய மூதேவி, ஒருவனது சோம்பலினிடத்தே தங்குவாள்; திருமகள் சோம்ப லில்லாதவனுடைய முயற்சியினிடத்தே தங்குவாள் என்று அறிந்தோர் கூறுவர்.] மாமுகடி கரிய மூதேவி. இவள் சீவர்களுக்குச் சோம்பல் முதலியவற்றை யுண்டாக்குந் தெய்வம்; கருமை நிறமும், சர்ப்பாபரணமும், கழுதை வாகனமு முடையவள். காகம் இவளது கொடி; துடைப்பம் ஆயுதம். சோம்பலை யுடையவனிடத்து மூதேவியும் முயற்சியை யுடையவனிடத்துச் ஸ்ரீதேவியும் வசிப்பர். தாமரையினாள் என்ற பதப்ரயோக அழகை உற்று நோக்குக. தாமரையினாள் உள்ளாள்—திருமகள் வசிப்பள்.

முதற்பாவலர் 'வரைவின் மகளிர்' என்ற அதிகாரத்தில்

"இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறுந்
திருநீக்கப் பட்டார் தொடர்பு."

என்கிறார். [ஒற்றுமையில்லாத இரண்டுபட்ட மனத்தையுடைய பொதுமகளிரும், கள்ளும், சூதும் ஆகிய இவை மூன்றும், திருமகளால் துறக்கப் பட்டவர்க்கு நட்புப் பொருள்களாம்.] வரைவின் மகளிர், தமது நலத்தை விலை கொடுப்பவர் யாவர்க்கும் விற்பதல்லாமல், அக்காலத்திற்கு ஆவார் ஆகாதார் என்னும் வரைவில்லாத மகளிரது இயல்பு. இருமனம்—ஒருவனோடு புணர்தலும் புணராமையும் ஒரு காலத்தே யுடைய மனம்.

நாயனார் 'நாணுடைமை' என்ற அதிகாரத் தலைப்பில்,

"கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்
நல்லவர் நாணுப் பிற."

என்பர். [நன்மக்களுடைய நாணுவது, இழிந்த செயல் காரணமாக உள்ளம் ஒடுங்குதல். மனம், மொழி, மெய்களின் ஒடுக்கத்தால் வரும் நாணங்கள், அழகிய நெற்றியையுடைய குலமகளிரின் நாணங்களாகும்.] நாண் என்பது பெண்டிர்க்கு இயல்பாக வுளதொரு தன்மை. நாணுவது செயத் தகாதனவற்றின்கண் உள்ளம் ஒடுங்குதல். திருநுதல் நல்லவர் என்பது புகழ்ச்சிக் குறிப்பு. "மானமில்லா இல்லாளும் மானமுறும் வேசியரும் ஈனமுறுவாரிவர்" என்பதையும் நோக்குக.

பெரு நாவலர் 'கயமை' என்னும் அதிகாரத்தில்

"நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்".

என்கிறார். தமக்கு உறுதி பயக்கும் புகழையும் அறத்தையும் ஞானத்தையும் அறியும் மேன்மக்களைக் காட்டிலும், அவற்றை அறியாத கீழ்மக்கள் நன்மையுடையராவர். எப்படியெனில்: புகழ் அறம் ஞானங்களை அறிந்தொழுகும் போது மேன்மக்கள் அடையும் கவலை கீழ்மக்களுக்கு இல்லையாதலின். கீழ்மக்கள் பழி முதலியவற்றிற்கு ஏதுவாகிய காரியங்களை அஞ்சாது செய்தும், அதுபற்றிக் கவலையில்லாதும் இருப்பர். கயவர் புகழ் முதலியவற்றை யொழித்துப் பழி முதலியவற்றைச் செய்யா நின்றும், சிறிதுங் கவலையுடைய ரல்ல ராகலால் 'திருவுடையர்' என அவரைக் குறிப்பா லிகழ்ந்தவாறும்.

வள்ளுவர் 'காதற்சிறப் புரைத்தல்' என்னும் அதிகாரத்தில்:

"கருமணியிற் பாவாய்நீ போதாயாம் வீழுந்
திருநுதற் கில்லை யிடம்"

என்பர். [என் கண்ணில் கருமணியிடத்து இருக்கின்ற பாவையே! நீ அவ்விடத்தைவிட்டு நீங்கு வாயாக; நீங்காதிருப்பாயாகில், எம்மால் விரும்பப் படுகின்ற அழகிய நெற்றியையுடைய இவளுக்கு இருக்க வேறிட மில்லை.] அன்பின் மிகுதியால் தலைமகன் தலைமகளை உறுப்பிற் சிறந்த கண்ணின் கருமணியின் பாவையிலும் சிறந்தவளாகக் கூறினன். திருநுதல்-அழகிய நெற்றியை யுடையவள்.

திருக்குறள் நீதிநூல், பொதுமறையான இவ்வரிய நூலில் திருவள்ளுவர் உபயோகிக்கும் சில அழகிய பதங்களால், இவரது சமயம் வைணவம் என்பது நன்கு புலப்படும்.

"ஆதிபகவன்" "வாலறிவன்" "பொறி வாயில் ஐந்தவித்தான்" "தனக்குவமையில்லாதான்" "அறவாழி அந்தணன்" "எண்குணத்தான்" "அடியளந்தான்" "தாமரைக் கண்ணான்" என்று தேவிற்சிறந்த திருமாலின் நாமங்களைத் திருவள்ளுவர் பிரயோகித்திருப்பதாலும், அது போலவே பிராட்டியைக் குறித்து மேலே விவரித்தபடி "செய்யாள்" "செய்யவள்" "திரு" "தாமரையினாள்" என்ற செவ்விதான செஞ்சொற்களால் ஈடுபடுவதாலும், இவ்வள்ளுவர் ஸ்ரீவைஷ்ணவ மதத்தைத் தழுவியவர் என்னத் தட்டில்லை. செய்யாள் உறையும் இடமும், தானே செல்கின்ற திறனும், நீங்குதற்குரிய காரணங்களும் நன்றாக விளக்குகிறார் நாயனார். ஆத்மகுணங்கள் நிறைந்த இடத்துத் திருமகள் நித்யவாசஞ் செய்வள் என்றும், தாளாண்மை யுள்ளவனை மிக உகப்பள் என்றும், அழுக்காறுடையானை உடன் நீங்கி தன் மூத்தவளுக்கு இருப்பிடமாக்கி விடுவள் என்றும் தேற்றெனத் தெளிகின்றோம்.

"பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச் சாம்புநதம்
ஆவிற் கருமுனியா யானைக்—கமாரும்பல்
தேவிற் றிருமா லெனச்சிறந்த தென்பவே
பாவிற்கு வள்ளுவர்வெண் பா."

ஸ்ரீ:

விவாத பாகம்

வேதவைபவ விமர்சம்மும், ப்ரஹ்ம விசாராதிகார நிர்ணயமும்

[ஸ்ரீ. உப. ஸ்ரீ மதுராந்தகம் தி. ஈ. வீரராகவாசாரியர் :
ந்யாய வேதாந்த சிரோமணி, திருவாதி.]

வெஜாஜ தீவிகாஙா ப்ரகடீக்ருத வெஜவெவஹவெ விஷயெ ।
வெஜ விஜா ஜொஜகாரம் கூவெவி விஸூஸ்ம் கரொஷி கூதாசெ ந ॥
கூவி வ ப்ரஹவிசாரா நயி க்ரதிரயா நாத நெவ்ருதி கெவகெ ।
ஶ்ஊயாஷி ஜொஹ ஜெஷர்ம் ப்ரஹவிசாராபிகார நிர்ணீத்யா ॥

ஸ்ரீ வேதாந்த தீபிகையில் ப்ரசுரித்துள்ள 'வேத வைபவ' மென்னும் வ்யாஸத்தில் சில விஷயங்கள் ஶ்ருதி ஸ்ம்ருதிகளுக்கும் ஆழ்வார் ஸ்ரீ ஸூக்திக்கும் அந்யதாவாக அர்த்த வர்ணநம் பண்ணப்பட்டிருப்பதால், அவைகளின் வாஸ்தவிகார்த்தத்தை நிரூபணம் பண்ணிவிட்டு, இப்பொழுதுள்ள மஹாந்களின் ப்ரஹ்ம விசாராதிகாரத்தைப் பற்றிச் சிலர் ஆக்ஷேபங்களையும்; அவைகளுக்கு அடியேன் பண்டே எழுதியுள்ள ஸம்ஸ்க்ருத ரூபமான ப்ரஹ்ம விசாராதிகார நிர்ணயத்தில் உபபாதிக்கப்பட்ட ஸமாதாநங்களையும் விஜ்ஞாபநம் பண்ணிக்கொள்ளுகிறேன்.

ப்ரமாண வசநங்களில் ஏகதேசத்தை மட்டும் உதாஹரித்து, அவைகளுக்கு ஏதேனும் நமக்கு விவக்ஷிதமான ப்ரமேயத்துக் கநுகுணமாக ஒரு அர்த்தத்தை ஆரோபித்தால், ஷை வசநங்களின் ஸ்வரஸார்த்தம் பாதிக்கப்படுவதோடு, அதன் மூலமாக பல ஆக்ஷேபங்களுக்கும் இடமுண்டாகிறது. ஸ்ரீ வேதாந்த தீபிகை முதலிய பத்ரிகைகள் பண்டிதர்களுக்கு மட்டுமன்றியே இதரர்களுக்கும் உண்மையான அர்த்தங்களைப் போதிப்பித்து வருவதால், அவர்களுக்கு அந்யதாவாக அர்த்தம் தோன்றுவண்ணம் தாத்விகார்த்தத்தைத் தெரிவித்துக்கொள்ளவேண்டும் என்பதற்காகவே இந்த வ்யாஸத்தை எழுதியுள்ளேன். ஸுபாலோபநிஷத்தி லுள்ள

1. "தஸ்யெஹ வா எதஸ்ய மஹதோ பூதஸ்ய நிஶ்வஸிதமேதத் யத்ருக்வேதோ யஜுர்வேத:"

இத்யாதி வாக்யத்திற்கு, ஒருவன் ஜீவித்திருப்பதை மூச்சுக் காற்றைக்கொண்டே எப்படி யறிகிறோமோ, அதுபோல் பகவானை யறிவதற்கு

வேதமே சிறந்த ஸாதநமென்றும், வேதமில்லாவிடில் பகவானை அறிய முடியாதென்று ஏற்படுகிற தென்றும் விவரணம் செய்யப் பட்டிருக்கிறது. ஷை ஶ்ருதியில் மூச்சுக் காற்றுப்போல் நான்கு வேதங்களும் சிக்ஷை முதலிய ஷடங்கங்களும், ந்யாய மீமாம்ஸை முதலியவைகளும், எல்லா பூதங்களும் பகவானிடமிருந்து அநாயாஸேந உண்டானவை என்பதற்காக 'நிஶ்வஸிதம்' என்றும் ப்ரயோகிக்கப்பட் டிருக்கிறது. ஸ்ரீ ஶ்ருதப்ரகாஶிகாசார்யரும், உபநிஷத் பாஷ்யகாரரும், ஈஶ்வரன் சாஸ்த்ர ப்ரவர்த்தநம் செய்வதைச் சொல்லுகிறதென்று இந்த ஶ்ருதியை அவதாரிப்பித்து,

"நிஶ்வஸிதமிதி ததः ப்ரவ்ருத்திகத்வம் விவக்ஷிதம்"

என்று பாஷ்யம் செய்தருளினார்கள். ப்ருஹதாரண்யகோபநிஷத்தில் நான்கு ஆறு அத்யாயங்களிலும் இம்மாதிரியான வாக்யம் உளது:—

"ஸ யதார்த்ரைதாக்நேரப்யாஹிதாத் ப்ருதக் தூமா விநிஶ்சரந்தி, ஏவம் வா அரே! அஸ்ய மஹதோ பூதஸ்ய நிஶ்வஸிதமேதத்ருக்வேதோ யஜுர்வேத இத்யாதி"

[ஈரக்கட்டையைச் சேர்ந்த நெருப்பிலிருந்து புகைகள் எப்படி வெளிக்கிளம்புகின்றனவோ, அப்படியே வேதம் அங்கம் முதலியவைகள் ப்ரஹ்மத்தினிடமிருந்து அநாயாஸேந வெளிக்கிளம்புகின்றன என்பது பொருள்.]

"நிஶ்வஸிதமிவ நிஶ்வஸிதம் யதாப்ரயத்நேநைவ புருஷநிஶ்வாஸோ பவதி"

என்று ஸ்ரீ சங்கர பாஷ்யம். உபநிஷத் பாஷ்யகாரராலும் அவ்வாறே அருளிச் செய்யப்பட்டது. ஸ்ருஷ்டி ப்ரகரண மாகையால் சாஸ்த்ர ஸ்ருஷ்டியையே விவக்ஷிக்க வேண்டியிருக்க, பாஷ்யகாரர்களும் அதையே உபபாதித்திருக்க, அவைகளுக்குப் பொருத்தமன்றியில் செய்த விவரணம் ஶ்ருதி தாத்பர்யத்தைப் பற்றியதாகாது. மேலும் வேதங்களைப்போல் ந்யாய மீமாம்ஸா தர்ம சாஸ்த்ராத்யங்கங்களையும் நிஶ்வஸிதமாகச் சொல்லியிருப்பதால், பகவானை யறிவதற்கு வேதமே சிறந்த ஸாதநம் என்று எப்படி உபபாதிதமாகும்? "ஸர்வாணி ச பூதாநி நிஶ்வஸிதம்" என்று சொல்லியிருப்பதால், பூதங்களும் ஈஶ்வரனை யறிவதற்குச் சிறந்த ஸாதநம் என்று தானே சொல்லியாக வேண்டும்; அப்பொழுது கார்யங்களைக்கொண்டு ஈஶ்வராநுமாநம் தானே ஶ்ருதியில் சொல்லப்பட்டதாகும்.

இப்படியானால் சாஸ்த்ரயோநித்வாதிகரணத்தில் நையாயிகர் சொல்லும் ஈஸ்வராநுமாந ஸித்தமான வஸ்துவை ப்ரதிபூதிப்பதால் ஈஸ்வரனை ஸாதிப்பதில் சாஸ்த்ரப்ராமாண்யம் எங்ஙனே ? மேலும்:

“ ஶ்வாஸ ஸஞ்சாரே நாZவி தத்ர ப்ரமாணமிதி வேத ; நிஶ்வஸிதவசநா Zவி ந ஸ்யாத் ”

என்று ந்யாயாசார்யர் சொல்லியபடி மூச்சடக்கியும் ஜீவித்திருக்கலா மான படியால், ஜீவித்திருப்பதை ஶ்வாஸத்தைக் கொண்டே யறியவேண்டுமோ ? இந்த ஶ்ருதியில் வேதங்களும் அங்கங்களும் பூதங்களும் பகவானிட மிருந்து அநாயாஸேந உண்டானவையென்று பகவானுடைய வைபவம் சொல்லப்பட்டதாகிறதே யொழிய, வேதங்களுக்கு இதர் வ்யாவ்ருத்த மான வைபவம் சொல்லப்படவில்லை.

2. “ வேதை ந ரூபே வ்யாகரோத் ஸதாஸதீ ப்ரஜாபதி: ”

என்கிற ஶ்ருதிக்கு ‘ப்ருதிவீ’ முதலிய ஸாவ பதார்த்தங்களையும் முயல் கொம்பு முதலிய அஸாவ பதார்த்தங்களையும் ஸ்ருஷ்டித்தார்’ என்று விவரணம் செய்திருப்பதும் உசிதமாயில்லை. தேவதாதிகரண ஶ்ருதப்ரகாசிகையில்,

“ ஸதாஸதீ=வித்யவிதீ, ரூபே வ்யாகரோத் ”

என்று இதற்கு விவரணம் செய்யப்பட்டது. ஸ்ருஷ்டி ப்ரகரணங்களில் ஸாவ பதார்த்தங்களின் ஸ்ருஷ்டி ப்ரதிபாதிக்கப்படுகிறதே யன்றி, முயல் கொம்பு முதலிய அஸத்ய பதார்த்தங்களின் ஸ்ருஷ்டி சொல்லப்படவில்லை. அவைகளும் ஸ்ருஷ்டிக்கப்படுவதானால் அவை எப்படி அஸத்யங்களாகக் கூடும் ?

“ உத்திதகர்ம யோக்யதாகார்ஸர்வார்த்த ஸத்யத்வ ”,

என்று ஜிஜ்ஞாஸாதிகரண ஸ்ரீ பாஷ்யம். இவை ப்ரத்யேகம் ஸத்யத்வ ஸாதகம் என்று ஶ்ருதப்ரகாசிகை. ஸ்ரீமததிகரண ஸாராவளியில் ஸ்வப்நத் தில் அஸம்பாவிதங்களான அர்த்தங்கள் தென்படுகின்றனவே, அவை எப்படி ஸத்யமாகும் என்று ஶங்கித்து,

“ ஸ்வப்நாத்ரும் வீக்ஷ்யந்த்யாம் ஶேதா பாயார்ஹே ஐவி வயமாஜா ஶாஶம் ந கஶ்வா: ”

என்றருளிச் செய்தார். ‘அத்யந்த வ்யாஹதங்களான அர்த்தங்களில் ஜாக்ரத் தசையில்போல் ப்ரமரூபத்வம்’ என்று சிந்தாமணி வ்யாக்யாநம். முயல்

கொம்பு முதலியவைகளும் ஈஸ்வர ஸ்ருஷ்டங்களாகில் அது ப்ரமமாவ தெப்படி ? அந்த ஜ்ஞாநம் ப்ரமையேயன்றோ ? மேலும்:

“ ஸ ஶுரிதி வ்யாஹரத், ஸ ஶுமி மஸ்ருஜத ”

என்று பூமி முதலியவைகளின் ஸ்ருஷ்டியை ஶ்ருதி மேலே உபபாதித்தாப் போல்

“ ஸ ஶஶஶ்ருங்கமிதி வ்யாஹரத், ஸ ஶஶஶ்ருங்க மஸ்ருஜத ”

என்று உபபாதிக்கவில்லையே. ஆகையால் “ ஸத்த்வாஸவத் ” இத்யாதி களில் போல் ஸாவ ப்ரபஞ்ச ஸ்ருஷ்டியே விவக்ஷிதம். “ ஸதா வேதை ந ஸதீ ரூபே வ்யாகரோத் ” என்றும் யோஜநாந்தரம். பக்ஷ த்வயத்திலும் முயல் கொம்பு முதலிய அஸாவ பதார்த்தங்களின் ஸ்ருஷ்டி யில்லை என்று ஏற்படுகிறது.

3. தைத்தரீய ஆரண்யகம் இரண்டாம் ப்ரஶ்நத்திலுள்ள

“ யே அர்வாஞ்சஸ்தவா பராஞ்சோ வேதம் விதுஷ்டஸ்ஸமிதா வதந்தி ....யாவதீர்வை தேவதாஸ்தாஸ்ஸர்வா வேதவிதி ப்ராஹ்மணே வஸந்தி, தஸ்மாத்ப்ராஹ்மணேப்யோ வேதவித்ப்யோ திவேதிவே நமஸ்குர்யாத்’’

என்கிற ஶ்ருதியிலுள்ள ‘வேதவித்’ சப்தங்கள் அர்த்த ஜ்ஞாந மன்றியில் கேவலம் வேதாத்யயநம் செய்பவர்களைச் சொல்லுகின்றன என்று எழுதி யிருப்பது, சப்த ஸ்வாரஸ்யத்துக்கும் ஶ்ருதியின் பூர்வ ப்ரகரணத்திற்கும் வேத பாஷ்யத்திற்கும் விருத்தமாயிருக்கிறது. ‘வேதவித்’ சப்தத்திற்கு ‘வேதார்த்த மறிந்தவன்’ என்கிற அர்த்தமே சாஸ்த்ரகாரர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டது. “ வாராஶயர்வவஸ்வயாம் ” என்கிற ஸ்ரீ பாஷ்ய ஸூக்தி வ்யாக்யாந ஶ்ருத ப்ராகாசிகையில், ‘வேதவித், ஶாஸ்த்ரவித்’ இத் யாதி ஸ்தலத்தில், ‘வேத’ சப்தம் முதலியவைகளுக்கு அர்த்தத்தில் தாத் பர்யம் போல் என்று த்ருஷ்டாந்தீகரிக்கப்பட்டது. “ தத்யீதே தத்வேத ” என்று பாணிநி ஸூத்ரம். இங்கு மஹா பாஷ்யம்:—

“ கிமர்த்தோஸாவவ்யயர்ள நிர்தேஶ்யதே. ந யோZயீதே வேத ஸ்ள.........ஸவதி ஹி கஶ்சித் வாக்ஶம் வக்தி நவேத்தி, தயா கஶ்சித்வேத்தி ந வக்ஶம் வாக்ஶம் வக்தி ”

என்று அர்த்தத்தை யறிவதே வேதநம்; ஶப்த ஸ்வரூபத்தை மாத்ரம் அறிவதன்று, என்று மஹா பாஷ்ய வ்யாக்யாந கையடத்திலும் சொல் லப்பட்டது. “ வேதவித் ஹாதி யோ யோகீ ” என்கிற ஸ்ரீ விஷ்ணு புராண ஶ்லோகத்தின் வ்யாக்யாநத்தில், ‘வேதவித்= வேதார்த்தவித்வாந:’ என்று

சொல்லப்பட்டது. ஆகையால் கேவலாத்யேதாவை 'வெதவித்' சப்தம் போதிப்பிக்காது. இந்த ஸ்ருதியின் பூர்வ ப்ரகரணத்தைப் பராமர்ஸித்தாலும், இதிஹாஸ புராண கல்ப ஸூத்ராத்யங்கங்களோடுகூடவே ப்ரஹ்ம யஜ்ஞாத்யயநம் பண்ணவேண்டும் என்று ஸ்பஷ்டமாவதால், அப்படிப்பட்ட அதிகாரியைப் பற்றிய ஏற்றத்தைச் சொல்லும் இவ் வசநத்தில் கேவல அத்யேதாவை 'வெதவித்' சப்தம் போதிக்காது. எங்ஙனேயெனில்: ப்ரஹ்ம யஜ்ஞவிதி ப்ரஸ்தாவார்த்தமான "ஸஜாநு ஹ வெ" என்கிற ஒன்பதாவது அநுவாகத்தில்,

"யத் ப்ராஹ்மணாநீதிஹாஸாந் புராணாநி கல்பாந்"

என்று ப்ரஹ்ம யஜ்ஞாங்கமாக இதிஹாஸாதி ஸாக்ஷாத்காரம் சொல்லி, பத்தாவதது அநுவாகத்தில் ப்ரஹ்ம யஜ்ஞத்திற்குப் ஃபலம் சொல்லுமிடத்தில் இதிஹாஸ புராணாத்யத்யயநங்களுக்கு ப்ரத்யேகமான ஃபலத்தைச் சொல்லிற்று. ஆஸ்வமேதிகத்தில்:

"இதிஹாஸ புராணாநி யதாஸக்தி ந ஹாபயேத்।"

என்றும், யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதியில்:

"வேதாதர்வ புராணாநி ஸேதிஹாஸாநி ஸக்தித:।"

என்றும், விஜ்ஞாநேஸ்வரத்தில் "வாகோ வாக்யம் புராணம் ச" என்றும், ப்ரஹ்ம யஜ்ஞத்தில் இதிஹாஸாதி அத்யயநம் சொல்லப்பட்டது. இங்கு, "புராணம் ச" என்கிற 'ச' சப்தத்தினால் 'மந்வாதி தர்ம சாஸ்த்ரம் விவக்ஷிதம்' என்று வ்யாக்யாநம் செய்தார்கள். சாஸ்த்ர தீபிகையிலும் "ஸ்வாத்யாயம் நித்ய ப்ரஹ்மயஜ்ஞவிதிவிஷயத்வாத்" என்றும், தந்த்ர வார்த்திகத்தில்

"ஸ்வாத்யாயாத்யாநாதி ப்ரஹ்மயஜ்ஞ நிருக்தாநி ஸூத்ராணி"

என்றும் சொல்லப்பட்டது. ஆக: இவ்வளவால் ப்ரஹ்ம யஜ்ஞத்தில் இதிஹாஸ புராண தர்ம சாஸ்த்ர கல்ப ஸூத்ராத்யயநம் செய்ய வேண்டு மென்று ஸ்ருதி தாத்பர்ய மேற்படுகிறது. ஆகையால் தான் "யம் யம் க்ரதுமதீயீதே" [இதிஹாஸ புராண கல்ப ஸூத்ராத்யங்கங்களோடு கூட யாக ப்ரதிபாதகமான எந்தெந்த வேதபாகத்தை அத்யயநம் செய்கிறானோ] என்று வேத பாஷ்யகாரரும் சொன்னார். "அங்கங்களுடன் கூடின எந்தெந்த யாகத்தைத் தெரிவிக்கிற வேத பாகத்தை அத்யயநம் செய்கிறானோ" என்று அர்த்தம் எழுதியது சரியன்று. இங்கு 'க்ரது' சப்தம் க்ரது ப்ரதிபாதக பரமாகையால் 'க்ரது'

சப்தார்த்த ஏகதேசத்தில் அபேத ஸம்பந்தத்தினால் இதர பதார்த்தாந்வயம் சொல்ல முடியாதன்றோ? ஸித்தாந்தத்தில் ஸிக்ஷாதிகளான ஷடங்கங்களோடு வேதாத்யயநம் செய்தவுடன் கர்ம ப்ரஹ்ம விசாரங்கள் செய்து, பிறகு இதிஹாஸ புராணாதி ஸ்ரவணத்தை அங்கீகரிப்பதால், இப்ரகரணத்தில் இதிஹாஸாத்யத்யயநம் சொல்லப்பட்டதிலிருந்தே ஷடங்காத்யயந பூர்வக கர்ம ப்ரஹ்ம விசாரம் ஸ்வரஸ ஸித்தமாகையால், இப்படிப்பட்ட அதிகாரி விசேஷத்தையே "யம் யம் க்ரதுமதீயீதே" என்றும் "யஸ்ய ......வ்ருணாதி" என்றும் ப்ரதிபாதிக்கிறது என்று அவஸ்யம் ஒப்புக்கொள்ளவேண்டும். ஆக: இப்ரகரணத்தில் கேவல வேதாத்யேதாவை விவக்ஷிக்க ப்ரஸக்தியில்லை. பாஷ்யகாரரும் 'வெதவித்' சப்தத்தை ஸர்வ வித்யாஸ்தாந குஸலன் விஷயமாக வ்யாக்யாநம் செய்தார். ருக்வேத பாஷ்யத்தின் உபோத்காதத்தில் "வேதம் வித்வாந் = அர்த்தமறிந்த புருஷன் சதுர்த்தஸ வித்யாஸ்தாந குஸலன்" என்று அர்த்தம் எழுதி, 'வேதமதீயாந:' என்று சொல்லாமல் "வேதம் வித்வாம்ஸம்" என்று சொல்லப்பட்டிருப்பதால், இது கேவலாத்யயநத்தின் ஃபலமாக ஸங்கிக்கக் கூடாது என்று கண்டரூபேண சொல்லப்பட்டது. வேத பாஷ்யத்திலும் "வேதம் வித்வாம்ஸ:—பாடத்தாலும் அர்த்தத்தாலும் வேத தத்வத்தை நன்றாக அறிந்தவனை" என்னும் பாடத்தாலும் அர்த்தத்தாலும் வேத மறிந்த ப்ராஹ்மணனிடத்தில் வஸிக்கிறார்களென்றும், எந்தெந்த பாகத்தை அங்கங்களோடு கூட அத்யயநம் செய்கிறானோ என்றும், ருக்வேத பாஷ்ய உபோத்காதத்தில்போல வேதார்த்த மறிந்தவன் விஷயமாகவே வ்யாக்யாநம் பண்ணியிருக்கிறார். 'ஸ்தெய்யம் தத்வஜாதி வேத தத்த்வவித்' மந்த்ரங்கள் இருக்கின்றன என்கிற பாஷ்ய வாக்யத்தில் 'வேதித்வா:' என்கிற விடத்தில், எப்படி கேவல அர்த்த ஜ்ஞாநவானை விவக்ஷிக்கமுடியாதோ, அப்படி 'ஸ்தெய்ய தத்வ:' என்கிற விடத்தில் கேவலாத்யேதாவை விவக்ஷிக்க முடியாது. கேவலாத்யேதா 'வெதவித்' சப்தார்த்த மாகமாட்டானன்றோ? அர்த்த மறிந்து அத்யயந ப்ரதாநனான புருஷன் வாக்கிலும் அத்யயநம் செய்து ஜ்ஞாந ப்ரதாநனான புருஷன் மனத்திலும் இருக்கின்றன என்று தாத்பர்யம். ஆக: இவ்வளவால் சப்த ஸ்வாரஸ்யம், ப்ரகரண ஸ்வாரஸ்யம், பாஷ்ய ஸ்வாரஸ்யம், இவைகளால், 'வெதவித்' சப்தம், கேவலாத்யயநம் செய்தவனைக் குறிக்கமாட்டாது என்பது ஸ்தாபிதமாயிற்று.

4. ருக்வேத பாஷ்ய உபோத்காதத்தில் 'அத்யயநம் செய்து அர்த்தத்தை யறியாதவனை நிந்தித்திருப்பதால் கேவல வேதாத்யயநம் பயனற்றது' என்று ஆக்ஷேபித்துக்கொண்டு, 'அர்த்த ஜ்ஞாநத்தின் ஆவஸ்யகத்தை ப்ரதிபாதிப்பதில் உபோத்காதம் தாத்பர்யமுடையதே தவிர, அத்யய

நத்தைப் போல் நித்யம் என்பதை ப்ரதிபாதிப்பதில் தாத்பர்யமுடைய தன்று’ என்று எழுதியிருப்பது ஸரியன்று. அங்கு “ஷடஙொ வெஷொ Zயெ்யா ஜெஞயஸ்” என்கிற ப்ரமாணத்தின்படி அத்யயநமும் அர்த்த ஜ்ஞாநமும் நித்யம் என்றே உபபாதிக்கப்பட்டிருக்கிறது.

“ஸ்ரணைபாயம் ஹாரவாஹஃ கிலாஹ-பூஸ, ஈயீதா வெஷம் ந விஜாநாதி யொZய-ஃபூ.”

இத்யாதிகளால் ‘அர்த்த ஜ்ஞாநமில்லாதவனை நிந்தித்திருப்பதால் அர்த்த ஜ்ஞாந விதி கல்பிக்கவேண்டும்’ என்று கண்டோக்தமாகச் சொல்லியிருக்கிறார். பராஶர மாதவீயத்திலும்:

“கூபூஃவெ-பாராணெZயாயந தஷய-ஃவிவாரயொரஹாவெ வாயஃ ஸூய-ஃதெ” ஶ்ருதா

என்று ஆரம்பித்து, அத்யயநம் நியதம் என்பதில் ப்ரமாணத்தைக் காட்டி

“வெஷஸ்ய வாஂ ஶாதெணை ஸதைஷொ வெவ ஹவெஷுஜிஃ ।
வாஂஶாதூாவஸாயீ தா வக்ஷெ மளஸிவ ஸீஷதி ॥
யொZயீதா வியிவவெஷம் வெஷாய-ஃம் ந விவாரயெஸ ।
ஸ ஸாநயஃ ஶூஷ்ரஸஃ வாதுதாம் ந ஶுவஷ்யெத ॥”

என்று அர்த்த ஜ்ஞாநம் நித்யம் என்பதில் ப்ரமாணம் காட்டப்பட்டது. இப் பக்ஷத்தை மஹா பாஷ்யத்திலும் கையடத்திலும் காணலாம். அத்யயநம் அர்த்த ஜ்ஞாநம் இவை யிரண்டிற்கும் ஸமுச்சயம் “ஈயெ்யயொ ஜெஞயஸ்” என்கிற ஶ்ருதியினால் இரண்டும் சேர்ந்தே தர்மமென்று சொல்லப்படுவதினால்

தயா வ வ்யாஸஃ—

“வெஷாய-ஃஜெஞா ஜவம் ஜஷ்ா தயெெ வாயயநம் ஜிஜஃ ।
கூவஃநு ஷூமஃ ஶவாநெஂதி நாகம் தா விவயஃயெ ॥”

என்று ப்ரமாணம் காட்டப்பட்டது. இப்பக்ஷமே ருக்வேத உபயோத்காதத்திலும் அங்கீகரிக்கப்பட்டது. ஸ்வாத்யாய விதியே அர்த்த ஜ்ஞாந பர்யந்தம் என்றார்கள் மீமாம்ஸகர்கள். “ஜெஞயஸ்” இத்யாதியால் அர்த்த ஜ்ஞாநம் ப்ரத்யேகமாக விதிக்கப்படுகிறது என்று ஸாயந மாதவ மஹா பாஷ்யகாரர் முதலியோர் பக்ஷம். அர்த்தஜ்ஞாநம் நித்யமன்று என்று ஸித்தாந்திகளின் பக்ஷம். இப்படி யிருக்க, ‘உபோத்காதத்திற்கு அர்த்த ஜ்ஞாநம் நித்யமில்லை என்று தாத்பர்யம்’ என்று சொல்வது எப்படிப் பொருந்தும்?

“யஷ்யெ்யதாZய-ஃஶவி ஜாநாதி தஷா........ஶாநவெஸாZவி நிஷ்ஷ்யெத”

என்று வேதபாஷ்யத்தில் ‘யதி’ சப்தமானது

“யஶஃாத்ா ஸதா ஸாஙஸ் ராஶெ ஷாஶாயிய-ஃதி । ”
“உவெஞமஃதிஜஃமதி ஸியாதி யஶஃதவெஞஸ ॥ ”

இத்யாதிகளைப் போல் நிர்வாஹ்யம். “தி விமொ ஹி யாமஃ” என்று சொல்லுமிடத்தில், காயிகமில்லாவிடில் போகட்டும் என்று சொன்னாற் போல், மாநஸிக மில்லாவிடில் போகட்டும் என்று சொல்லவில்லையே! ஸந்த்யாவந்தநாதிகளை அநுஷ்டித்தால் அதன் ஃபலத்தை யடைகிறான் என்று சொன்னால், ஸந்த்யாவந்தநாதிகள் நித்யங்க ளென்று என்று ஏற்பட்டுவிடுமோ? வக்தாவின் ஸித்தாந்தத்திற்கு அநுகுணமாகத் தாத்பர்ய வர்ணநம் பண்ணுவதன்றோ பண்டித க்ருத்யம்? ‘அவித்வானுக்குக் கர்மாநுஷ்டாநத்தில் அதிகாரமில்லை’ என்றும், ‘அநுஷ்டித்தால் ஃபல ஸித்தியில்லை’ என்றுமே பாஷ்யகாரர் முதலியோர் ஆஶயம். ஸித்தாந்தத்திலும்

“யொ ஹவா ஈவிஷிதாஷெஃயஞெொ வெஷவெதந ஶம்ணெ யஜதி யாஜயதி வாZயாவயதி வா, ஸ்ராணைம் வஹஃதி, மதஃம் வா வஷ்யெத, ஶுவாரீயெத, வாவீயாநூவதி, யா தயாஶாநயஸ ஊநுாஂஸி ஹவநி”

என்கிற ஶ்ருதி முதலிய ப்ரமாணங்களால் மந்த்ரார்த்த ரிஷி தேவாதி ஜ்ஞாந பூர்வகமாகவே கர்மாநுஷ்டாநம் அவஶ்யம் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. உபநீத மாத்ரனுக்கும் உபதேஶத்தினாலாவது இவ்வளவு அர்த்தஜ்ஞாநம் அநுஷ்டாந உபயோகியாக அவஶ்யாபேக்ஷிதமே. ஆகையால் அர்த்தஜ்ஞாந மடியோடு வேண்டுவதில்லை என்று எழுதியது எப்படிப் பொருந்தும்?

5. நம்மாழ்வார் திருவிருத்தம் (65):—

“இருக்கார் மொழியால் நெறியிழுக் காமை யுலகளந்த
திருத்தா ளிணைநிலத் தேவர் வணங்குவர் யாமும்அவா
ஒருக்கா வினையொடு மெம்மொடும் நொந்து கனியின்மையில்
கருக்காய் கடிப்பவர் போற்றிரு நாமச்சொல் கற்றனமே.”

இதில், ஆழ்வார் வேதமொழியைக் கனிஸ்தாநத்திலும், பகவந் நாமாக்களைக் கருக்காய் ஸ்தாநத்திலும் வைத்து, ஹரிநாமம் வேதாக்ஷரத்தைக் காட்டிலும் மிகவும் அஸாரம் என்று அபிப்ராயப்படுகிறாராம். இங்கு, பெரிய பரகாலஸ்வாமி வ்யாக்யாநமாவது:—“உபாயத்தில் ஸவிஶஷஜ்ஞாந

மும் அநுஷ்டாந சக்தியு முண்மைக்குக் கனி நிதர்ஶநமும் ஶ்ரத்தா நஶக்தி களுக்குக் கருக்காயும்” என்று. இங்கு நம்பிள்ளையீடு:—“நெறியிழுக்காமை வணங்கும்படி அவர்க ளத்தனை பாகம் எனக்கு இல்லையேயாகிலும், கனி யில்லாமையாலே கருக்காய் மெல்லுவாரைப் போலப் பழமில்லாமையாலே பிஞ்சாக உலர்ந்ததைக் கடிப்பாரைப் போலத் திருநாமச்சொல் கற்றனமே. இதில் அர்த்தாநுஸந்தாநம் நமக்கில்லை” என்று. இவ்வாறே ஸ்ரீ பெரிய வாச்சான் பிள்ளையாலும் வ்யாக்யாதம். இப்படி வ்யாக்யாதாக்கள் ஏககண்டர்களாய்ப் பேசியிருக்க, இப்படி விருத்தார்த்தம் பண்ணுவது உசிதமோ? “ஸர்வேஷாமக்ஷராணாம்” என்கிறபடியே இருக்கார் மொழியாகிற திருநாமச் சொல்லைத் தாம் கற்றதாக ஆழ்வார் பேசியிருக்க, அந்த மொழி கனியாக விவக்ஷிதமானால் கனியின்மையில் என்பது எப்படிப் பொருந்தும்?

“வேதாக்ஷராணி யாவந்தி படிதாநி த்விஜாதிபி: ।
தாவந்தி ஹரி நாமாநி கீர்த்திதாநி ந ஸம்ஶய: ॥”

என்று ப்ரமாணத்தில் பகவந்நாமம் உபமாநமாகவும் வேதாக்ஷரம் உபமேயமாகவும் சொல்லப்பட்டிருக்க, அதற்கு விருத்தமாக அவைகளின் உபமாநோபமேயங்களை மாற்றி, ஹரி நாமம் மிகவும் அஸாரம் என்று ஆழ்வார் அபிப்ராயப் படுவதாக ஸாவவர்ணநம் ஸ்ரீ வைஷ்ணவ கோஷ்டியில் செவி சாய்க்கக்கூடியதன்றே.

“ஏகோ யஜ்ஞம்ஷி ஸாமாநி யோऽதீதே தத்வஸஹஸ்ரஶ: ।
ஸக்ருதஷ்டாக்ஷரம் ஜப்த்வா ஸ தஸ்ய ஷோடஶீம் லபேத் ॥”

என்றும் “குலம் தரும் செல்வம் தந்திடும்..........நாராயணா வென்னும் நாமம்” “நரகமே சுவர்க்கமாகும் நாமங்களுடைய நம்பி” என்றும், இப்புடைகளிலே திருநாமச் சொல்லின் ஏற்றம் கோஷிக்கப்பட்டதன்றோ?

(தொடரும்)

ஸ்ரீ.

ஸ்ரீ வேதாந்த தீபிகையும் தமிழும்

[ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸராகவ அய்யங்கார், M.A. ஸ்ரீரங்கம்]

[நமது நண்பர் ஸ்ரீமான் ஏ. ஸ்ரீநிவாஸராகவ அய்யங்கார் எழுதி யனுப்பின ப்ரார்த்
தநா ரூபமான இந்த நிருப வ்யாஸத்தை நம் தீபிகைக்கு விஷயப்ரதாநம் செய்யும்
ஸ்வாமிகள் அனைவருடைய ஜ்ஞாபநார்த்தமாக ப்ரசுரித்திருக்கிறோம். இது விஷயத்
தில் கொஞ்சமும் அஸந்துஷ்டி யில்லாமல் உபய வேதாந்தத்திலும் உபய பாஷையிலும்
ப்ராவீண்யதை அடைந்திருக்கும் அவர் எழுதினது தமக்காகவன்று என்னும் நிச்
சயத்தை யறிந்து, அவர் சொல்லிய விஷயம் லக்ஷக்கணக்கான நம்மவர்களைச் சார்ந்த
வௌகிகர்க ளெனப்படுவோர் சொல்லாமல் படும் கஷ்டத்தை மொழி பெயர்த்து
வெளியிட்டது போலாகும். வ. வே. ஸ்ரீ.]

எம்பெருமான் திருவருளால் நம் “வேதாந்த தீபிகை” எவ்வ
ளவோ வருஷங்களாகப் பிரகாசித்துக்கொண்டு வருகிற தென்பது
யாவரும் அறிந்ததே. அதிலும் கொஞ்சகாலமாக, மிகவும் உத்ஸாஹ
மும் ஊக்கமும் அநுபவமும் ஆற்றலும் படைத்த நிர்வாஹகர்களின் கீழ்
அது மேன்மேலும் விருத்தி யடைந்து, பொது ஜனங்களின் ஆதரவையும்,
விசேஷித்து விஶிஷ்டாத்வைதிகளின் ஸஹாயத்தையும் பெற்று வளரும்
என்பது நிச்சயம். ஸமீபத்தில் வெளி வந்த “ஸ்ரீ நிகமாந்ததேசிக மலர்”
இதற்குப் போதிய சான்றாகும். இதன் பத்ராதிபர் முதலான நிர்வாஹ
கர்களும், விஷயதாநம் செய்யும் மஹான்களும், இன்னொரு ஸௌகர்யத்
தைச் செய்துகொடுக்க மன மொப்பினார்களானால், இது பரவுதற்கு அதிக
ஹேதுவிருக்கும் என்று நினைத்து இதை எழுதலானேன். [இதனால்
யாரையும் குறை கூறுவதாக வாசகர்கள் எண்ணலாகாது. இதன் அபி
வ்ருத்தியைக் கோரும் பலர்க்கு இம்மாதிரி எண்ணமிருப்பதாக அடியே
னிடம் தெரிவித்தார்கள். பத்ராதிபரும் விஷயதாநம் செய்வோர்களும்
அறிந்து செய்யவேண்டிய கார்யமாகையால், தீபிகையின் வாயிலாகவே
வெளியிட முன் வந்தேன்.]

தற்காலம் நம் நாட்டில் தேசபக்தியும், இந்திய நாகரிகத்தில் கௌரவ
புத்தியும், நம் தேசத்துப் பெரியார்களிடம் மதிப்பும், தேசீய ஸாஹித்யங்
களில் ஆதரவும் ஏற்பட்டிருப்பது போலவே, மத விஷயத்திலும் ஒரு புத்
துணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. மதத்தின் கொள்கைகள், அவற்றைப் பரவச்
செய்த ஆசார்யர்களின் சரித்ரம், அவர்கள் செய்தருளின க்ரந்தங்கள்,
இவற்றை யெல்லாம் அறிய ஓராவல் பொது மக்களிடையே இருந்து வரு
கிறது. இந்த ருசி நீங்கு முன்னமேயே, எல்லோரும் அறியக் கூடிய தெளி

வான பாஷையில் மத விஷயமான தத்வங்களையும் விசாரங்களையும் ஸ்தோத்ரங்களுக்கு உரைகளையும் சாஸ்த்ர விரோதமில்லாத முறையில் ப்ரகாசப்படுத்தி, எல்லோரையும் திருத்தி உபகரிக்க வேண்டியது பெரியோர்களின் கடமையாகும். நம் தீபிகையும் இந்த நோக்கத்துடனேயே உழைத்து வருகின்றது என்று நினைக்கிறேன்.

ஆனால் தத்காலம் தீபிகையில் வெளிவரும் வ்யாஸங்களினுடைய நடையைப் பார்த்தால், அது ஏதோ சில வித்வான்களுக்கு மட்டுமே உபயோகமுள்ளதாயிருக்கும்போல் தோன்றுகிறது. அப்படியின்றி, வித்வான்கள் அவித்வான்கள் எல்லோருக்கும் உதவ வேண்டுமானால், தீபிகையின் தமிழில் அவ்வளவு புதிய ஸம்ஸ்க்ருத பதங்கள் சேராமல், எளிதில் அறியக்கூடியதும் பழக்கத்திலுள்ளதுமான ஸம்ஸ்க்ருத பதங்களை வைத்துத் தமிழில் எழுதினால்தான் நலம். வட மொழியும் தென் மொழியும் முத்தும் பவழமும்போல இசைந்து, ‘மணிப்ரவாளம்’ என்ற மதுரமான பெயர் பெற்று, நம் ஆசார்யர்களால் தங்கள் புஸ்தகங்களிலும் உபதேசங்களிலும் அதிகமாக உபயோகப்படுத்தப்பட்டு வந்த பாஷையிலுள்ள விஷயங்கள், துரத்ருஷ்டத்தால் இரு மொழிகளையும் அறியாத அடியேன் போன்ற லௌகிகர்களுக்கு அறிய அரிதாயிருக்கின்றன. நாள் முழுதும் ஸேவகா வ்ருத்தி செய்துவிட்டு, இரவில் பகவானின் ஸ்வரூபம் ஸ்வபாவம் உலகின் இயற்கை முதலியவற்றைப்பற்றி ஏதாவது அறியலாமென்றால், உபநிஷத்துக்கள் முதலியவைகளும், பூர்வாசார்யர்களின் க்ரந்தங்களும், ஆசார்யோபதேசம் இல்லாமல் அறிய முடியவில்லை. ‘வேதாந்த ப்ரகாசகமான தீபிகையையாவது படித்து அறிவோம்’ என்று கையிலெடுத்தால், “ஆத்மஶ்லாகாதத்வம்,” “குணம்ருதாஸ்வாதிநீ,” “விவேசந ஸௌக்ஷ்ம்யம்” போன்ற தலைப்புகளும், “ஶப்த ஸௌஷ்டவத்தாலும், அர்த்த பௌஷ்கல்யத்தாலும், ஆநந்தாவஹங்களாயிருக்கின்றனவென்பது நிர்மத்ஸரர்களான ஸகல வித்வத் ரஸிக விவேகிகளுக்கு ஸுஜ்ஞேயம்,” “விஶாநா வ்ருத்யாதி உபாதிகளில்லாமல் க்ருபாநுக்ரஹம் செய்ததற்கு ப்ரதாந ஹேது ஸமிதி க்ரஹணஸாமர்த்யம்” என்பன போன்ற சொற்றொடர்களும் மேல் விழுந்து பாய்ந்து, எங்களை நிராஶர்களாகச் செய்துவிட்டு, வித்வஜ்ஜநைக ரஸிகமாக உறைந்து விடுகின்றன.

ஆனால் வேதாந்த பரிசயமுள்ளவர்களுக்கு அது தெளிவாயிருக்கும் என்பதும், ஸம்ஸ்க்ருத பதத்தால் ஸ்பஷ்டமாக அர்த்தம் உணர்த்தப்படுவது போல தமிழ்ப் பதத்தால் உணர்த்தப்படவில்லை என்பதும் ஒருவாறு உண்மையே. இருந்தபோதிலும், பலருக்கு உபகரிப்பதற்காக ப்ரஸித்தமான தமிழ்ப் பதத்தை உபயோகித்தோ அல்லது வாக்யத்தை விரித்தோ எழுதினால் அதுவே தெளிவாகும். தவிரவும் ஸம்ஸ்க்ருதத்திலுள்ள

ஹாவங்களையெல்லாம் காட்டத் தமிழில் பதங்கள் இல்லை என்று சொல்ல ஆழ்வார்களின் திருவடிகளான யாரும் முன் வர முடியாது. தாங்கள் வாசித்து அறிந்ததோடு மட்டும் நிற்காமல், ஸ்ரீ பாஷ்யகாரரின் “பாஷ்யத்தை வாசித்து ப்ரவர்த்திப்பித்தல்” என்ற நியமநத்தை அநுஸரித்துப் பிறருக்கும் உதவும்படி எளிய நடையில் வித்வான்களே எழுத முன்வரவேண்டும். அப்படி எழுத வல்லார் பலரிலரெனில், அவர்களுடைய வ்யாஸங்களையே எளிய தமிழில் எழுதி, அவர்கள் அநுமதிபெற்று ப்ரசுரிக்கலாம். அதுவும் நடத்த இயலாதெனின், தீபிகையில் ஒரு பகுதியாவது மணிப்ரவாள நடை விஷயத்தில் பாலர்களான எங்களுக்கென்று ஏற்படுத்தி, சில பெரியோர்களை எங்கள் நிலைக்கு இறக்கி, அவர்களை, இரங்கி எழுதும்படி ப்ரார்த்திக்கிறேன்.

ஸமீபத்தில் வெளிவந்த தேசிக மலரைச் சில நண்பர்களிடம் காட்டி, அவர்களைச் சந்தாதாரராகச் சேர்க்க முயன்றேன். அவர்கள் மறுநாள் வந்து சொன்னதாவது—“ப்ரஸித்த மஹான்களான ஸ்ரீ கோஷ்டீபுரம் ஸ்வாமி போல்வாரிடம் வாசிக்க எங்களுக்குப் பாக்யமில்லாவிட்டாலும், அவர்களுக்கும் எங்களுக்கும் இடையே பாலம் போன்ற தீபிகை வழியாகவாவது அவர்கள் ஸ்ரீ ஸூக்திகளைப் படித்து க்ருதார்த்தராகலாம் என்று எண்ணினோம். அந்த பாக்யமும் அற்றவர்களானோம்” என்று மனம் வருந்திச் சொன்னார்கள். அவர்கள் சொன்னது இந்த வ்யாஸத்திற்குக் காரணம். இன்னமும் இந்த மாதிரி பெரியோர்களின் வ்யாஸங்களின் தலைப்பில் வ்யாஸ ஸாரத்தைப் பத்ராதிபர்களாவது ஸங்க்ரஹமாகக் கொடுத்திருந்தால் ஆறுதலாயிருக்கும்; அதுவுமில்லை. வ்யாஸங்களின் தலைப்புக்கும் அர்த்தம் தெரியவில்லை; வ்யாஸத்திற்கும் அர்த்தம் தெரியவில்லை’ என்கிறார்கள். யாரையும் குற்றம் கூறினதாக எண்ணலாகாது. நம் பெரியோர்களின் பெருமையை அறிய விரும்பித் தீபிகையை எடுத்தால், ஒன்றும் புரியாமல் போனபோது ஏற்பட்ட ஆசாபங்கத்தினாலும், தீபிகை உண்மையிலேயே ‘தமிழ்ப் பத்ரிகை’ யாகி அபிவ்ருத்தி யடையவேண்டும் என்கிறதில் உள்ள ஆவலினாலும் எழுதினேன். தவிற முடியாத வழியில் தூஷணம் ஏற்பட்டிருந்தாலும், ஹாவசுத்தியைக் கண்டு பாகவதர்கள் க்ஷமித்து அடியேனை ஆட்கொள்ளுவார்கள் என்று உறுதியாக நினைத்தே எழுதினேன்.

ஆக: அடியேனை க்ஷமித்து அதிக படிப்பில்லாத எளியோங்களையும் திருவுள்ளத்தில் இருத்தி, ‘இவர்களும் படித்துப் பகவானை யறிந்து ஆஶ்ரயித்து உஜ்ஜீவிக்கட்டும்’ என்று க்ருபை செய்து, எங்களுக்கு விளங்கும் முறையிலும் எழுதும்படி, விஷயதாநம் செய்யும் மஹான்களையும், அதற்குத் தகுதியான முறைகளை அநுஷ்டிக்க மனமொப்பும்படி தீபிகா பத்ராதிபர்களையும், பொது ஜனங்களின் சார்பாக ப்ரார்த்திக்கின்றேன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீரஹஸ்ய ஸந்தேசம்

[ஸ்ரீ. உ.வே. ஸ்ரீநிவாஸ ராகவன், ஸ்ரீரங்கம்.]

"ராமாநுஜ தயாபாத்ரம் ஜ்ஞாநவைராக்ய பூஷணம் ।
ஸ்ரீமத் வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்ததேசிகம் ॥"

யானறி யுஞ்சுட ராகிநின் றேன்மற்றும் யாதுமல்லேன்
வானம ருந்திரு மாலடி யேன் மற்றோர் பற்றுமிலேன்
தானமு தாமவன் தன்சர ணேசர ணென்றடைந்தேன்
மானமி லாவடி மைப்பணி பூண்ட மனத்தினனே."

"அஹமாத்மா ந தேஹாத்மா விஷ்ணுசேஷைகவிக்ரஹ: ।
தமேவ ஶரணம் ப்ராப்தஸ்தத்கைங்கர்ய ஜிகீர்ஷயா ॥

அயர்வறு மமரர்களான அநந்த கருட விஷ்வக்ஸேநாதிகளோடு துல்யமாக அபரிச்சின்ன ஆநந்தரூபமான பகவத்கைங்கர்யத்திற்கு ஸ்வரூப யோக்யதை யுண்டாயிருக்க, அநாதிமாயையாலே ஸுப்தனாய், அநந்த க்லேஶ பாஜநமான ஸம்ஸாரஸாகரத்திலே அழுந்திக் கிடக்கிற க்ஷேத்ரஜ்ஞன், *பரிவ்ருட ப்ரதிபாஜநன் ஆசார்யனாலே; அத்யந்த ஶோகார்த்தனான அளவிலே 'நீ அதிசங்காஸ்தாநங்களில் ஒன்றும் அலையவேண்டாம்; அப்பாபங்களெல்லாவற்றையும் விடுவிக்கைக்கு ஸமர்த்தனுமாய், ஸர்வஜ்ஞனுமாய் நிற்கிற என்னை ஒருவனையுமே ஶரணமாகப் பற்று' என்று ஶரண்யனான ஶ்ரிய:பதி தானே சரமஶ்லோகத்தாலே அருளிச்செய்த ஸாங்காதிகார ஶரணாகதியினுடைய விஷயஸ்வரூப பரிகர பலவிசேஷங்களை விசதமாகப் ப்ரகாசிப்பிக்கிற அர்த்தத்திற்கு அபேக்ஷிதாம்ச ஸங்க்ரஹரூபமான திருமந்த்ரத்திலே ப்ரக்ருத்யாத்ம விவேகமும் ஜீவேஶ்வர விவேகமும் பிறந்து, ஸ்வாபாவிக பகவச்சேஷத்வ ஸம்பந்தத்தையுணர்ந்து, ஔபாதிக தேஹ ஸம்பத்த்யாதி ஸம்பந்தத்தை யிகழ்ந்து, ஸ்வரூபாநுரூப பரமபுருஷார்த்த ப்ராப்திக்கு ஸ்வாதிகாராநுகுணமான ஸாதநோபாய விசேஷத்தைப் பற்றி ஸ்வாமி கைங்கர்யைக நாயகனாய் நிற்கிற நிலையை "அஹமாத்மா" என்கிற ஶ்லோகம் ப்ரதிபாதிக்கிறது.

* பரிவ்ருட ப்ரதிபாஜநன் — பாலக: ।

இதில் 'அஹமாத்மா' 'ந தேஹாத்மா' என்கிற இரண்டு வாக்யமும் த்ருதீயாக்ஷரத்தின் பொருளைச் சொல்லுகிறது. (அஹம்) என்கிற பதத்தாலே [3] அநாத்மந்யாத்மபுத்தியைக் கழிக்கிறது. அநேகாவயவோபேதமான தேஹத்திற்காட்டில் வேறு என்று சொன்ன வித்து இந்த்ரியங்களில் அந்யதைக்கும் உபலக்ஷணமாகையாலே பஞ்சவிம்ஶகனுடைய தத்வாந்தர வைலக்ஷண்யம் ஸூசிக்கிறது. (விஷ்ணுசேஷ:) என்கிற பதம் ப்ரதமாக்ஷரத்தில் [4] ப்ரக்ருதி ப்ரத்யயங்களைக் காட்டுகிறது. இதில் [5] விசேஷ நிர்தேசஸாமர்த்யத்தாலும் ஸமாஸஸாமர்த்யத்தாலும் 'விஷ்ணுவுக்கே சேஷன்' என்று தோற்றுகையாலே உகாரார்த்தம் ஸித்தம். ஆகையாலே [6] (அபரிக்ரஹ:) என்கிற பதம் அந்யசேஷத்வத்தைக் கழிக்கிற 'நம:' ஸில் அர்த்தத்தைக் காட்டுகிறது. இந் 'நமஸ்ஸ' தன்னிலே விவக்ஷிதமான ஸமஸ்த ஶரணாகதியை தத்வஶ்ரிதனாய்க் கொண்டு, தான் பண்ணின ப்ரகாரம் (தமேவ ஶரணம் ப்ராப்த:) என்று சொல்லப்படுகிறது. [7] (தத்கைங்கர்ய ஜிகீர்ஷயா) என்கிற பதம் த்ருதீயபதத்தில் ப்ரக்ருதி ப்ரத்யயாம்ஶ தாத்பர்யத்தை ஸங்க்ரஹிக்கிறது.

இதில் அர்த்த ஸங்க்ரஹத்தைப் பார்த்தால், 'தேஹாதிவிலக்ஷணனாய், ஜ்ஞாதாவாய், ஜ்ஞாநஸ்வரூபனுமாய், இரண்டுபடியாலும் ப்ரத்யக்காய், பகவதேகவாய், நிருபாதிக சேஷிகாதிரஹிதனான நான் நிருபாதிக சேஷபூதனாய், நிருபாதிக பகவத்கைங்கர்ய ரஸஸாஹாய்யமாக அவன் தன்னையே ஶரணமாகப் பற்றினேன்' என்று ப்ரபன்னனுடைய ஸ்வநிஷ்டாபிஜ்ஞாநம் சொல்லுகிறது. ஸ்வபரஸந்தோஷார்த்தமாக நித்யம் அநுஸந்தேயம்.

சீலங் கவர்ந்திடுந் தேசிகர் தேசின் பெருமையினால்
தூலங் களன்ன துரிதங்கள் மாய்ந்தன துஞ்சல்தரும்
கோலங் கழிந்திடக் கூறிய காலங் குறித்துநின்றோம்
மேலிங்கு நாம்பிற வோம்வேலை வண்ணனை மேவுதுமே.

ஸ்ரீமத்வேங்கடநாதேந ஶிஷ்யாணாம் ஹிதகாங்க்ஷிணா ।
இதம் ரஹஸ்யஸாரார்த்த: ஸம்க்ருஹ்ய ஸமீரித: ॥
இதி ரஹஸ்ய ஸந்தேஶ: ஸம்பூர்ண: ॥

குறிப்பு.

1. ஸ்ரீரங்கத்தில் திருக்கோட்டியூர் ஸ்ரீ. உ. வே. ஸௌம்ய நாராயணாசார்ய ஸ்வாமியிடம் அடியேன் காலக்ஷேபம் செய்தபொழுது, இல்லவர ரஹஸ்யங்கள் முழுவதும் இரண்டு தாளபத்ர ஸ்ரீகோசங்களை வைத்து

ஶோதிக்கப்பட்டன. அவற்றுள் இந்தச் சிறிய ரஹஸ்யத்தில் அவஶ்யமாக இருக்கவேண்டிய சில பதங்கள் அச்சிட்ட ப்ரதிகளில் காணப்படாதவை கிடைத்தன. அந்தப் பதங்களையும் சேர்த்து, அச்சிட்ட ப்ரதிகளில் இருக்கும் வேறு சில பிழைகளையும் ஓலை ஏடுகளில் கண்டவாறு திருத்தி நம் தீபிகாபிமாநிகளுக்காக ஸமர்ப்பிக்கிறேன்.

'சரமஶ்லோகத்தில் விதிக்கப்பட்ட உபாயத்தின் அங்கங்களை ஐயம் தெளிவாகக் காட்டுகிறது; ஶரணாகதனை விரும்புவனுக்கு வேண்டிய ஸம்பந்தஜ்ஞாநத்தைத் திருவஷ்டாக்ஷரம் கொடுக்கிறது என்று ரஹஸ்யத்ரயத்தின் பரஸ்பர ஸம்பந்தத்தையும் உபயோகத்தையும் நிரூபித்தருளி, 'ஸஹஸ்ராக்ஷ' என்னும் ஶ்லோகம் திருவஷ்டாக்ஷரத்தின் வ்யாக்யான ரூபம்' காட்டுகிறார். அதில் 'ஸஹஸ்ராக்ஷ' 'ந தேவோ ஹரிர்' என்பவை 'ஓ' என்று அகாரார்த்தம். 'விஷ்ணோஶ்ஶேஷீ' என்பது லுப்தசதுர்த்யர்த்தம். பிறகு உகாரார்த்தத்தைச் சொல்லி 'இது உகாரார்த்தம்' என்று இருக்கவேண்டியிருக்க, அச்சிட்ட பிரதிகளில் பதங்கள் இல்லை. அவை இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. வாசகர்களே அதன் ஆவஶ்யகதையை யறிவார்கள்.

2. 'ஸஹஸ்ராக்ஷ' என்று மேலே எழுதி வ்யாக்யாநம் செய்யப்பட்ட ஶ்லோகத்தின் அர்த்தத்தை இந்தப் பாசுரத்தினால் அருளிச் செய்கிறார்.

3. 'ஓ'காரம் ஜ்ஞாநஸ்வரூபனான ஆத்மாவைச் சொல்லுகிறது. 'க'காரம் முதல் ஆரம்பித்து அது இருபத்தைந்தாவது அக்ஷரமாதலால், இருபத்திநாலு தத்வங்களான அசேதநங்களிற் காட்டில் வேறுபட்டவனான ஜீவாத்மாவைச் சொல்லுகிறது.

4. லுப்தசதுர்த்தியான அகாரத்தின் அர்த்தம் 'விஷ்ணு'; சதுர்த்யத்தின் தாத்பர்யார்த்தம் 'ஶேஷீ'.

5. 'விஷ்ணு' என்று ஒரு தேவதையைக் குறிப்பிட்டுச் சொன்னதால், மற்றவர்களுக்கு இவன் ஶேஷனல்லன் என்றும், ஸமாஸத்தில் 'விஷ்ணோரேவ ஶேஷீ' என்று 'ஏவ' காரம் தொக்கியிருப்பதால், மற்றவர்களுக்கு ஶேஷபூதனல்லனென்றும் கிடைக்கிறது.

6. 'ஸ்வாமித்வஹம்'—மற்று யாதும் எனது என்று உடையனல்லேன்.

7. 'தஸ்' என்பதால் 'நாராயண' பதார்த்தமும், 'கைங்கர்ய' என்பதால் நான்காம் வேற்றுமை உருபின் தாத்பர்யார்த்தமும், 'வி-ஷ்டியா' என்பதால் 'ஸ்யாம்' என்று வருவித்துக் கொள்ளவேண்டிய பதத்தின் அர்த்தமும் சொல்லப்பட்டதாகிறது.

தேமொழிகண் மாமுகமென் றிருமா மலரலரு
மேமமுறும் பெண்ணை யிருங்கோட்டி னிடையிலகும்
வாமமுறுங் கோவ லூரின் வழிநடந்து
காமுறுபொற் கச்சிநகர் கண்டு களித்தனரால். 73

வந்தங் கெதிர்கொ டிருக்கச்சி நம்பியையுஞ்
செந்தண் கடைக்கணிப்புச் செய்தே யவர்கொணர்ந்த
பந்தங் களைசடகோ பஞ்சிரத்திற் பணிந்தேன்று
கந்தங் கமழ்துளப தீர்த்தங்களு மறைந்தார். 74

ஏகா விபமலைக்கே யெம்மான் வரதனையும்
பாகா ரெழின்மொழியே பசுருபெருந் தேவியையுங்
காகா வெனத்தொழுது கண்ணீரு டன்மறைப்ப
நாகா சனக்கொடியா யென்று நனிபோற்றி. 75

வாழ்வாய் வலம்வந்து வண்கரிய மாணிக்கத்
தாழ்வா ரொடுமிரகு நாத னடிதொழுது
பேழ்வா யரக்கியுரம் போழ்ந்த பெருமானே
போழ்வா ளெயிற்றுகிரின் புலிதிரியுங் கானத்தே. 76

ஒப்பரிய நின்பகடே யுலகெங்குந் தானெனிர
விப்பெரிய மண்ணெழுந்த வெம்பெருமா னார்க்களித்த
செப்பரிய செய்கையினீ யிளையாழ்வா ரென்றிசைக்குந்
தப்பரிய பேர்பொருளிற் றனிலகுந் தன்மைத்தே. 77

மாலே யெனப்பரவு மன்னமயத் தோர்சிறையோர்
கோலே யுளன்பயில்வோர் கூட்டத்து டனெதுங்க
நூலே யிளையாழ்வார் நூற்றுவரு ளேவரெனப்
பாலே யிவரென்றோர் பாகவதர் சுட்டினரால். 78

கண்டா மரைமலரக் கண்டருளி யித்தகையார்
தண்டாநந் தரிசனத்தைத் தாங்குநரா யோங்கவென்றுந்
தொண்டாயிவ் வொருதடியன் றாயவர்பா லாகவென்றுங்
கொண்டார் திருவுளத்திற் கூப்புகரத் தோடிருந்தே. 79

காதற் றவர்கேட்பக் காலற் றவரோட
வோதச் சுவைபடவே யூமன் விழியிலிகண்
மோதத் துடன்காண முன்னித் தொழுதிறைஞ்சிற்
றோதக் கருணைபுரி யருளாளா செய்கருணை. 80

கண்ணு வெனத்தொழுது கட்டழகா ரோடளவித்
தண்ணுர் மொழிபகரத் தக்கதென்றென் றிக்கடியும்
பண்ணுர் முதலிகளின் சங்கம் பலசூழ
விண்ணுர் புரிசைபல விளங்காங்கஞ் சென்றனரால். 81

வேறு

பின்னே கச்சி நன்னக ராளும் பெருமானின்
மன்னே ரேயு மின்மகன் றன்னை மறையோதுங்
கொன்னே யோர ரக்கன் வலித்துக் கொடுநாளு
மென்னே யென்னே யென்றுபு லம்ப விழைத்திட்டான். 82

வையம் போயே மாற்றலர் வீய வயமேவா
வையங் காவன் மன்னிய வள்ளன் மகன்வாதை
செய்யும் பூதம் வீயுமு பாயஞ் சிறிதோரா
னையுங் காலை நண்ணின ஞேரா ரணநாவான். 83

காளா யாத வப்பிர காச னெனுநீத்தோன்
கோளா ரெந்தக் கூனி கணங்க ளெனினும்விண்
டாளா யாளா யேகுது மென்றே யழுதோட
நீளா தின்னே யாற்றுவ னுங்கே நிகழ்த்தென்றுன். 84

தேனே யன்ன வம்மொழி கொண்ட திறன்மன்னன்
பாஞேர் வெள்ளிப் பல்லின னந்தப் படிவத்தோன்
பானே ரேகித் தன்றுய ரோதப் பலர்போத
நானே வல்லோ னென்றுந வின்றே நடந்தன்ஞேன். 85

கோவின் புத்தி ரன்றனை யண்மிக் குணநாடி
மேவும் வெய்ய ராக்கத விண்டே விலகென்ன
வாவுந் தானை நீட்டிந கைத்தவ் வளர்பூத
நாவின் மந்தி ரம்புகல் வாய்கே ளெனமற்றும், 86

ஓதும் முன்றன் மந்திரங் கொண்டென் னுளமஞ்சேன்
றீதின் முன்னர்ச் செய்திடு நந்தஞ் சனனங்க
ளோதும் வன்பிங் குண்டெனி னன்றே யுரையென்ன
வேதும் வல்லே னெண்ணுவை யேனீ யிசையென்றுன். 87

விட்டோ னந்த வீதமி சைக்க விரும்பேய்நீ
மட்டே வாருந் தண்பொழில் சூழு மரங்கத்தி
னட்டோர் பாத நன்குற வீறு நனிகோன்
முட்டா ளிண்டைத் தாளிணை முன்னு முனைவோர்கள். 88

பல்லோர் வேங்க டந்தொழு தேத்தப் படர்போழ்தி
னல்லோர் வாழு மாமது ராந்தகந் தனைநண்ணித்
தொல்லோர் போற்றுந் தொல்பதி யேரித் துறைநீரி
னெல்லோ ருந்தம் மின்புறு நீம மியற்றிப்பின். 89

கொண்டல் வண்ணன் கொண்டருள் சேடச் சுவைமூர
லுண்டங் கேக வன்மிக மொன்றி லுடும்பாநீ
விண்டங் குள்ள வேதிய ரெச்சில் விழைந்துண்டே
யெண்டங் கிந்த வேதியர் சன்ம மெடுத்தின்னும். 90

முன்னு றாலே முன்பல முந்நீர்க் கரைகண்டா
யென்னு ழிந்தச் சன்ம மியம்பு வதுங்கோடி
முன்னு ளியானே ரந்தண னுகி முதுவேள்விப்
பொன்னு டுண்ணப் பொன்செல விட்டே புரிதந்தேன். 91

அப்பே ரிட்டி மந்திர லோப மடைகுற்ற,
தப்பா னிந்தத் தன்மைப டிந்தே னினதாட
லொப்பே னேகற் குன்முத லோது மிளையாழ்வார்
செப்பான் விண்டே செல்குவ னென்றன் செடியும்போம். 92

உய்வே னிந்த வுத்தமர் செய்ய வருளாலென்
செய்வேன் வேறு சேர்கதி யில்லே னெனவேகி
மெய்வே ருன்றம் மிக்கவர் தாளின் மிசைவீழ்ந்தே
பொய்வே ரற்ற புண்ணிய காவென் றிரைந்தன்றே. 93

அக்கா லேக தண்டியு மன்னுர் முகங்காணு
விக்கா லேக வீ துவை தம்பி னெனவாழ்வார்
புக்கா விந்தப் பூருகம் வீழப் புரிந்தேபின்
பெக்கா லேனு மேகுதி யென்ன வஃதன்றே. 94

மன்னன் சேயை விண்டும ருங்கே மலராதி
துன்னும் பேரோ ரந்துரு மத்தைத் தொலைவூட்டிப்
பின்னங் கோடப் பேரொலி யோடே மரம்வீழப்
பொன்னங் குன்றிற் பூபதி மைந்தன் பொலிவுற்றுன். 95

கண்டே காவ லன்முத லாருங் களிதூங்கத்
தண்டா வந்தத் தாபதர் தன்மை தனைநாடிக்
கொண்டா டக்கோ லொன்றுள னுள்ளுங் குளிர்தூங்க
மண்டா னின்னின் மானுறு மென்றே மடம்புக்கான். 96

வேறு

வெயிலேறுழை யின்றிக்குயி னுழைதண்பொழில் வீறு
மயிலாடுயர் மனைசேரெழிற் பூதூரிறை மற்றும்
பயிலாவரு பொழுதன்னவ னொருகாற்பிர பஞ்சம்
வெயிலாரிறை வற்கேயொரு விசேடண மாகும். 97

என்னும்பொருள் படுமாவுப நிடதந்தனக் கியையாத்
தன்னின்மத மியையும்வகை மற்றோர்பொரு டானும்
பன்னும்பொரு ளஃதுவென்றன மறியாநலம் படியத்
துன்னுந்திரு வாய்மைப்பொரு டுறையிற்றுலக் குற்றார். 98

நெறியேபடு மதன்மேலவ னிகழ்த்தும்வலி யில்லான்
பொறியேபட வெகுளிக்கனல் போனீரயல் பயில்வா
னறியேனுமக் கறையும்வகை யென்னுவகல் விக்க
வெறியேகமழ் துளவத்தரி விரையார்மல ரடியை. 99

சிந்தித்தகஞ் சிதைவுற்றவர் திருமாளிகை செறியா
வந்தித்தனை யடிமேலதை வழங்கிக்கரை தானும்
புந்தித்திரு மாகாமனந் தெருளும்படி புதல்வர்
செந்துப்பெனுந் திருவாய்மலர்ந் திதமுண்மொழி செப்பும். 100

எம்மாவுயர் மரபும்படி யெங்கும்பக டுறவே
யிம்மாநில நீவந்தனை யெல்லோர்களு நின்பா
லம்மாவுள கலையென்பன வடையப்பயில் வமையும்
மும்மாமல முழுகும்மவ னுழையேகுத லென்னே. 101

தன்றாளடை தருவோர்விழை தருமேவையு மருளுங்
கன்றாலடல் விளவின்கினி யுகுத்தோன்கழல் களின்மா
சொன்றாவகை யுயளுழியம் வனைவரென நாளும்
பொன்றாமுழா வாதற்கவர் பணிசெய்தனர் போந்தார். 102

வேறு

ஈங்கிது நிகழ விரும்புன லரங்கத்
திலகுறு மெழுனையர் துறைவர்
தாங்குறு மமையத் தாமயம் பெரிய
கோட்டியூர் நம்பிக டகையே

யோங்கிய பெருமா ளரையரை முதலிட்
டெழுந்தன ருவர்மல ரடியைப்
பாங்குடன் பணியா வெமக்குயு முறுதி
பகர்திரே யருளினென் றிரந்தார். 103

ஆரிய ரருளிற் பிரபன ராவோர்
திகழ்தரு மாரியர் நிரைவாய்க்
கூர்தா நன்றி யறிதரு குணமுங்
குருக்களே பாகவ தர்களே
சீரிய பெரியோ ரேயிவர்க் கியையச்
செய்கடன் சிதைவுறு தியற்றி
நேருறு தரிய பிழைகளெந் நெறியி
னுயினு மகநிலை நிறுவி. 104

தகைபெறு மயலோர் தூமுமீ ரிரண்டா
முறுபயன் றணப்பற நுகா
நகைபெறு வதனத் தியம்பிய வண்ண
நாடொறு நாரணன் பதமே
பகைதடிந் தருளு மெனவலிந் துறலே
பான்மைய தெனம்பகர் தாலும்
வகையுடன் செவியுண் முதலிகள் பலரிந்
திரியையம் வரைந்துளந் தெளிந்தார். 105

மற்றிரும் பூதூர் மாதவ ரியாத
வன்றனை விலக்கினர் மலரின்
புற்றன ருறைத திருச்செவி யுறவு
முவந்தன ராளவந் தாரெம்
பற்றிய பிரபத் தியும்பயன் படுமா
றருளினன் போரு ளாளன்
பொற்றதா நமது கொள்கையே பொலிந்த
தெனத்தமர் முதங்கொளப் புகலா. 106

தருந்தகை யிளையாழ் வாரைநீ ரேகித்
தண்மையி னழைத்துமீள் கெனனு
மிருந்தகைப் பெரிய நம்பியு மடவார்
மேலக நிறைமிசை யைம்பால்

வருந்தகை யின்றாய்ப் புலர்த்துலா வருதன்
மஞ்ஞையின் வரிசைக ளகவிற்
புகுந்தகை யெனலாம் புனிதநீர் வாவி
பொதுளுமங் கச்சியுட் புக்கார்.

புக்கவண் சாலைக் கிணற்றரு கிருந்து
புரையறு மெழுனையந் துறைவர்
தொக்கவின் னமுதிற் புகன்றரு ளூலிற்
றூய்மைய சிலவெடுத் துரைப்ப
வக்கலைப் பூதூ ரவர்செவி மடுத்தா
ரருளின ரிவையென நம்பி
யெக்கலை வலரு மிறைஞ்சுமெம் முனைத்து
றைவரே யிசைத்தன ரென்றார்.

எழுதிடாக் கேள்வி யின்றுணி பியைந்த
வினைதபு மிவைபுகன் றருளுந்
தொழுதகு பெரியோர் துணையடி யின்னே
தொழுவனென் றுளத்தகந் துணியாக்
கெழுதகு திருமஞ் சனந்தனைக் கொடுபோய்க்
கிளர்திரு வரதனுக் குதவிப்
பழுதறு விடையு மணந்தனர் படர்ந்தார்
நம்பியின் பதஞ்செலும் படியே.

இங்கிது நிகழ விரும்பெரு வைய
மிடையறு தருளகன் மறுகா
ரங்குல வரங்கத் தாளவந் தாரு
மடுபிணி முதிர்தர முதலிச்
சங்கமுஞ் செறியத் தளர்வொடும் போகிச்
சக்கரத் தடங்கரத் தரங்கன்
பங்கயப் பதங்கண் முடியுறப் பணிந்து
பரிவுட னெழுந்தெதிர் நின்றார்.

பூவையார் மேனிப் புங்கவ னவரின்
பொற்புணர்ந் தருச்சக முகமாய்ப்
பூவைநீ ரிகந்தெம் பெரும்பத மின்னே
புகுமினென் றருளமற் றவரு

மேவரு விடையு முருகவிழ் துளப
மாதிகண் மிடைந்தரு ளுடனே
தாவருஞ் சூழன் மீண்டணைந் துள்ளந்
தயங்கிமுத் துருத்தனர் விழியின். 111

முதலிகள் காணு வியப்புட னவரின்
முளரியா ரடிபணிந் தெழுந்து
முதமுறு நமது திருவுளஞ் சிதைய
முதலெனோ வெனக்கரங் குவிப்பப்
பதமுறு மனத்தீர் மைம்பொழிற் பூதூ
ருதித்தவர் பங்கய முறமும்
வதனமென் கண்கள் காண்குறுச் சிறுமை
வாட்டுமா லென்செய்கேன் மற்றும். 112

வேதமே விழுப்பம் பெறவகுத் தருளும்
வியாதசூத் திரப்பொருள் வாய்மை
மேதினி வழங்கப் பாடியும் வனைந்து
மேம்படு திருமகள் கொழுந
னேதமின் மிறலை யிலகுற விரித்த
பாராசரன் பெயரையோர் மகற்கு
மோதுமின் றமிழ்மா மறையுயர் மாற
னுமமோர் மகற்குமிங் குதவி. 113

கூட்டுணக் கூருந் தவத்தின ரமுத
மென்றிடு மமுதினைக் கொடுக்கும்
யார்ட்டுள வாயி ரம்பெருந் திருவாய்
மொழியினைப் பாரகம் விளக்கி
மாட்டினுக் கருளு மாயவன் பெருவீ
டணைதர விருந்தன னிவைக
ளூட்டிடா ளவிவி னெனழத் துணிந்தே
னெனநவின் றழுங்கினர் நனியே. 114

வேறு

அந்தா மரையிற் பாய்நறவி ளங்கண் மலரி னீருகுப்ப
னொந்தே மூன்று விரன்முடக்கி நுண்ணே ரறிவின் முதலிகளுங்
கொந்தார் துளவன் கூட்டுவிப்பன் குழைமீ ரினியிங் கிழைப்பனக
டுளந்தா யினையீ ரியம்புகவென் றிறைஞ்ச வவுரு மியம்புவாரால். 115

கேளீ ருரகப் பாயன்மிசைக் கிளரும் பெரிய பெருமாளுங்
கோளா ரபிசின் முகுர்த்தத்தின் றயமெம் பதநீ கூடுகென
மீளா வருளின் மிழற்றினனுன் மேலோர் பாத தீர்த்தமுவந்
தாளா யருந்தற் காரிவணீங் கறைமி னென்ன வவர் பணியா. 116

ஆயே மானு மாரியரே யடியே மிங்க ணனைவோருஞ்
சேயே யுந்தந் திருவடியைச் சேர்ந்தே யுள்ளே மாகையினீர்
தூயேய் பாதந் துலக்கியநற் றோயங் கொள்ளற் காருளரே
நோயே காணே நுவலுகென நோற்றூர் மற்று நுவலுவரால். 117

முன்னே நாத முனிகளுயக் கொண்டா ரம்பொன் முடிமீதே
தந்நே ரிரண்டு தாள்களையுந் தயங்க நயந்தே யணிந்திடலும்
பொன்னே புரியு மோர்படத்திற் பொருத்தி யந்த வடிச்சுவட்டைப்
பின்னே பெரிய பராங்குசா னெனவே யதனைப் பேணினராய். 118

ஆரா தனைசெய் தவர்கடையின் மணக்கா னம்பி யாங்குருவிற்
கேரா யருள வெமக்கவரு மீந்தா ரதனை யதன்றீர்த்தஞ்
சீரா யருந்திச் செந்நெறியே சேறு மென்ன முதலிகளு
மாரா தித்தவ் வடிநிலையின் றீர்த்த மவர்க்குப் புகட்டியரோ. 119

அடிகே ளெமக்கு நும்மடியி னிலையும் பாதத் தரும்புனலுஞ்
செடியே போகிச் சீர்பெறயாஞ் செய்வீ ருருளென் றவர்வேண்டும்
படியே தந்து வுபநிடதந் திருவாய் மொழியும் படிக்கவெழுங்
கடியா ரொலியுந் திருச்செவியிற் கமழத் துவயோச் சரிப்பினொடும். 120

ஆசா ரியர்க ணிரையடியை யகவா யிருத்தித் திருமுடிமேற்
பூசார் நாத முனியடிகள் பொருந்து நிலையைப் போர்த்தடைவிற்
பேசா மோனி யாய்ப்பிரமத் துளையே திறந்து பெறற்கரிய
காசா மலரிற் கருமாய னுலகங் கழுமிக் களித்தனரே. 121

தேவார் செய்ய திருவரங்கப் பெருமா ளரைய ரெழுவாயா
நாவார் முதலித் திருக்குலங்க ளெண்ணும் வேரற் றடிசாயும்
பூவா ரரிய பூருகமே போலப் புரண்டு விழுந்தரற்றி
யாவா வென்றே யழுங்கியுள மறிவிற் றேறி யாற்றினவே. 122

சூழுந் தொகையி னடியார்கள் சுருதிப் பிள்ளை யரசுநம்பி
வாழுங் கரத்திற் றிருச்சுண்ண பரிபா லனமும் வனைவித்தே
வீழு மரங்க னருளியதண் விரையார் தொடையன் முதலுடைய
வூழி னணிந்தே பிரமரதத் தொழுகும் பொன்னித் தடமுய்த்தே. 123

க்கடியா ரிஞ்சி பல்புடைசூழ் புரியிற் கழ்மு மனைவோரு
மடியோ டொருங்கு படர்ந்துதிருக் கரம்பன் றுறையி னகங்குழுமிப்
பொடியே கமழு நீர்மலரின் பொன்னே பொருவு நுண்மணலி
னிடையே பள்ளி யிடச்செம்பொ னிரும்பிற் பள்ள மெடுத்தனரே. 124

அம்மா வமயத் திளையாழ்வா ரரிய பெரிய நம்பியொடுஞ்
செம்மாந் துள்ள மின்றெமுனைத் துறைவர் சேவை செய்குவலென்
றெம்மா லியம்பற் கின்னசையி னெழுவோர் சிறிது சேணிருந்தே
யிம்மா குழுவைக் கண்டனரீங் கென்னோ வென்று ரெதிர்ந்தோரை. 125

குருவின் பச்சை யமுதுண்டு கோடா ஞானங் கொண்டவரின்
றொருவை குந்த முவந்தனரவ் வுயரின் கோட்டி யெனக்கரையத்
தெருமந் துள்ள மிருவோருந் திருக்கென் றவனித் தலைவீழ
வரிதி னுணர்ந்த நம்பிமுன மெழுந்தே யாழ்வார் தமைத்தெருட்டி. 126

சூறு வளியி னுடன்சாருஞ் சருகே நேரத் தொல்லுயிர்கள்
வீறூர் வினையைக் கதிசாரு மென்றே விழுப்பம் பெறுநூலி
னூறு ளாழ்வார் தெருண்டாள வந்தா ருருகி னணைந்தவரின்
பேறு மரிய திருமேனி யெங்கும் பேணிப் பணிந்தனரே. 127

அன்பே யுருகி வழிவதென வழிநீர்க் கண்க ளவைகாணு
முன்பே யுளவோ விவ்விரல்கண் மூன்று முடங்கி யெனவுழையார்
பின்பே யவரி னகத்துணிபும் பெருக யர்வும் பேசவிவ்
வென்பே யுருகக் கரைந்துள்ள வெவருங் கேட்ப வீங்கிசைப்பார். 128

கற்று கன்றின் கடையுறல்போற் கழற்ற் கரிய வவாருளென்
பற்று யுளதி னருளாள னென்னு னந்தப் பாக்வதர்
கற்று ருள்ளங் கருதியன கடைபோ மாறிங் கருளுமெனப்
பொற்று மரையிற் பொலிகையினம் முடங்கு குலிக ணிமிர்ந்துடனே. 129

ஆற்றற் கரிய போராற்ற லானே முற்று மவர்முகம்போற்
போற்றற் கரிய வவர்வதனம் பொலியக் கண்ட வனைவோரு
மாற்றற் கரிய விளையாழ்வார் மாட்சிப் பெருக்கி னமதுமதர்
தோற்றிப் பொலியு மெனவெண்ணர் துணிந்து மகிழ்ந்து துதித்துப்பின் 130

முனிகள் போன் றனையகழ்ந்த மூடும் பள்ளிக் குள்வளர்த்தக்
கனிகொண் மனத்திற் பூதூரார் பெரிய நம்பி கான்மலரைச்
செனியின் வணங்கி யரங்கனையுஞ் செந்தாளீ பணியா துடன்மீண்டு
துனிகொண் டுள்ள மத்திகிரித் தொல்லோன் பணியே துவக்கினரால். 181

வேறு

இவ்வா றுள்பூ தூரிறை யோர்பகற் கச்சிநம்பி
யொவ்வா தவின்கைங் கரியங் களுனுற் றுமாறுஞ்
செவ்வாய் வரத னவர்பா லருள்செய் யும்பண்பு
மெவ்வா யுமின்றென் றிதயங்குளிர்ப்பே றிமற்றும். 182

நம்மா ளவந்தா ரருணண் ணுநலத் தரென்றுந்
தம்மா வுளங்கொண் டவர்கோ யிறனித் தியங்கக்
கைம்மா மலர்கூப் பொடுந்தம் மனைக்கண் ணழைத்துச்
செம்மாந் திருநான் குறுப்பும் படிசேர்த் தவுள்ள. 183

கண்டந் தநம்பி கலிநீங் கவெழுந் தநீரே
விண்டிங் குவன்றுச் சிரமத் தடம்வீட்ட லென்னே
புண்டங் குவேலா னரையன் புறம்போக ஞானக்
கண்டங் குநாத முனியார் முனமுய் யக்கொண்டார். 134

நூலா றகற்ற னுமக்குற் றதன்றென் னவன்னார்
மாலா மனத்தை மறித்தீர்த் தனர்மீ ளனுற்றுர்
மேலா மிறைசேர் திருக்கண் ணமங்கைக் கணுண்டா
னேலா துறக்க முணவுந் துறந்திட் டவாற்றுன். 135

கன்மந் துறந்தார் கருதும் பணிக்கா கவுனு
மின்மென் றுயிலா திகளே வையுமெய்ந் தறும்மின்
றன்மந் தெரிந்த தன்கயோ ரறந்தா யலென்னே
மன்மின் புதல்வன் றுயர்தீர்த் தநன்மாண் புளீரே. 136

என்றே தெருட்டத் தெளிந்தெம் பெருமா னுரைய
நன்றே நுமது திருவாய் மொழிநா டுநூலி
னன்றே யரிய பெருநூற் பொருளான் றோர்வாய்மை
மின்றே யுளத்தீ ரொருவேண் டுகைமே வுகின்னும். 137

மற்றென் றுமின்றம் மறைபே ரருளா ளன்மாட்டிற்
பற்றென் றுமின்றென் மனம்பற் றியபண் பையொன்றி
னுற்றங் குதவி யடியேற் குரைத்தாள் கவென்னப்
பெற்றந் திருந்து பெயர்ந்தா ரதைப்பெட் பினன்றே. 138

பூதூ ரிறைவ ரவர்பின் சிறிதா றுபோகி
மீதூர் விழைவி னிறைகொண் டனர்மீ ளவில்லின்
மாதே விதன்மத் தருஞ்சூக் குமஞா னமற்று
ளேதோ விதர குலத்தர் ருயர்நம் பியென்றே. 139

அன்னோ ரிருந்த வழகா தனந்தன் னைநீரின்
முன்னே யலம்பி யதுதொட் டதின்மூழ் கிநிற்க
வென்னே யிஃதென் றெழினு யகன்கேட் பவில்லா
டன்னே ரொழுக்கந் தனைமெச் சுபுதாள் புகன்றுள். 140

கேட்டா ரதனைக் கிளருள்ளங் கலங்கி யந்தோ
நாட்டார் புகழு நலம்வாய்ந் திடுந்தன் மவில்லாள்
கூட்டா தவென்றன் கொடுமா வினைதன் னைநோக
மாட்டே னலெனே வெனநொந் தனர்மற் றுமன்னே. 141

நன்மா மணத்த வபைகவ் வியநா கவெற்பன்
பொன்மா மரைப்பூங் கழல்கண்டு வணங்கிப் போற்றிக்
கன்மா மனத்தென் கடியாளபசா ரநின்ற
னின்மா மனத்தி னியையா தருளென் றிரந்தார். 142

திருக்கச் சிநம்பி யொருகாற் றிகழ்தே வராசற்
குருக்கத் தினேமத் தொளியர் லவட்டத் தின்வீசும்
பெருக்கத் திற்பை யப்பெரும்பூத புரிய ரென்ன
டுரைக்கத் திருமா லுணர்ந்துள் ளமுவந் துரைக்கும். 143

வேறு

கறையறுங் கச்சி நம்பி கணிப்பருங் குணத்தி யாமே
மறையுறும் வாய்மை யாய பரம்பொருள் விலக்கின் வேறு
நிறைதரப் பொருத்தி னென்றுய்த் திகழ்வதுஞ் சமய மாமே
இறையறு பிரபத்தி யொன்றே செயற்கரு முபாய மன்றே. 144

அந்திம நினைப்பும் வேண்டா வவசான தசையின் முத்தி
வந்திடும் பெரிய நம்பி யடியிடை வதிவ தொக்கு
மந்திலென் றிரிய வாறு வார்த்தைக ளருள வன்னார்
அந்தார்க் கதனைச் சொல்லச் சொலற்கரு முவகை பூத்தார். 145

இன்னண நிகழ வீங்கே யிரும்புன லரங்கந் தன்னின்
மன்னுறு முனிகள் பேரன் மலரடி யடைந்தோ ராருந்
துன்னினர் பெரிய நம்பி துணைப்பதந் தொழுது நீரே
பொன்னகர் பொருவுங் கச்சி யெழினகர்க் கெழுந்து மாதோ. 146

இப்பெருந் தரிச னத்திற் கிறையென விளையாழ் வாரை
யொப்புற வமைக்க வீங்கே யுவகையிற் கொணர்க வென்ன
வப்பக டுடைய நம்பி யமையுமென் றரிய தேவி
மைப்புயற் குழலா ளோடு மனமுற நடந்தா ரன்றே.

கடநக நதிக ளெல்லாங் கடந்தனர் நெறியி னேகிக்
கடனிகர் கரிய வேரி காத்தரு ளிராமன் வைகுந்
தடவயல் செறியுஞ் செய்ய தண்புனன் மதுராந் தத்தே
யடைதர விளையாழ் வாரு மருளாள னருளும் வண்ணம்.

நம்பியி னடியை நாடி நளிர்புன லரங்கஞ் செல்ல
வம்பவிழ் பொழிலின் கச்சி வளநகர் தணந்து போகி
யும்பரு ருறழு மந்த வுயர்மது ராந்த கஞ்சென்
றெம்பிரா னிராமன் கோயி னுழைந்தன ரிறைஞ்ச மன்னோ.

நுழைதலும் பெரிய நம்பி நோன்மையப் பரமன் பர்தம்
விழைவுடன் பணியக் கண்டிவ் விழுமியோ ரியாவ ரென்ன
வுழையுளா ருண்மை செப்ப வுவப்பெனுங் கடற்கு ளாடிப்
பழமையி னவரின் பாத பங்கயம் பணிந்து மற்றும்.

கும்பிடப் போன தெய்வங் குறியெதிர்ப் பட்ட தேபோ
னம்பியே நுமது பாத நாடியா னுய்யும் வண்ணங்
கம்பமாக் களிறு காத்த கரிகிரி வரத னேவ
நம்பியே படர்ந்த வென்றன் கட்புல னணுகி னீரால்.

கேசியைப் படுத்தோன் வாழுங் கெடலரும் பூதூர் வந்தேன்
பேசிடு மிளையாழ் வானென் றளியனைப் பெரிய வையந்
தேசிக மணியா யென்ற னுயிர்க்களிம் பொழியச் செய்வீ
ராசற மடிகே ளென்ன வங்கரங் குவித்தி ரந்தார்.

இன்முகத் தவருங் கேளா விபமலை வரதன் கோயின்
முன்மனப் படியி னைத்து மெனவிவர் முகமுஞ் சாம்பித்
தன்மநற் றுறையீர் காலந் தாழ்ப்பது தகுமோ வைய
தொன்மறைத் தடமே தோயுந் தெமுனையந் துறைவர் தம்பால்.

கண்டதே யமைவு றுதோ கலைவலார்க் குணரா துண்டோ
கொண்டலின் சபலை மானுங் கொளற்கரு மனித யாக்கை
மொண்டுள வினையை வீட்டி முதமுறற் கிதுவே யன்றோ
திண்டிறற் கருவியைய தேவரீர்க் கறைவ தென்னே.

உம்பரு முலைய வீறு நிசிசர ரொழிய முன்ன
மம்பெனுஞ் சோனை மாரி யளவறப் பொழிந்த விந்தக்
கொம்பனை சனகி மின்னிற் குலவுறுங் கரிய மேகத்
தம்பொனி னிலயத் தூடே யளியனை யளித்தி ரென்றார். 155

ஞானமா வுறையு ணம்பி நன்குணர்ந் தவரி னூற்ற
நானவார் குழலி னுண்டா ணிலயக்குப் புறம்பே நண்ணுந்
தேனிமிர் மகிழின் கீழே திருத்தமைந் தினையுஞ் செய்து
மானமார் துவய மாதி மந்திரம் பலவு மீந்தார். 156

அத்தின முதலே யந்த வழகுறுந் திருப்ப திக்குத்
தொத்தறுந் துவயம் விளைந்த திருப்பதி யெனும்பே ருண்டாம்
வித்தகக் குருவே சீட ரெனுமிரு விழுமி யோரும்
பத்தருக் கருளி ராமன் சானகி பதமும் போற்றி. 157

இருவரு மிருந்தங் கேகி யிணைதபுங் கச்சி யெய்திப்
பொருவரு மருளா ளன்றன் பொற்பதந் தொழுது நாளு
மரியநூல் பலவு மாராய்ந் தடைபவர்க் கருளி யாங்கே
யொருபெரு மனையுள் வாழ்ந்தா ரும்பரு முவக்கு நீரார். 158

ஆங்குறை பொழுதிற் பூதூ ரவதரித் தவரு நம்பி
பாங்கினில் வியாத சூத்தி ரப்பொருள் பலவு மற்று
மோங்குவாய் மொழியோ ராயி ரந்தமை யொருவி மற்றத்
தேங்கமிழ் தொருமூ வாயி ரங்களுந் தெரிக்கப் பெற்றார். 159

நிகழவின் னணமோர் வைணி கர்செலா விளையாழ் வார்தந்
திகழ்திருச் சென்னிக் கெண்ணெய் தேய்த்தவோர் வைண வர்க்கு
நுகர்தரப் பணியா ரங்க ளளியென நுவலத் தேவி
பகர்தரச் சிறிது மின்றென் றகத்தினுட் படர்ந்து கண்டார். 160

பெய்தசெம் பெரிய பாண்ட நிறைவுறச் சினந்த வற்றை
வெய்துயிர்த் தெடுத்த வர்க்கு விருப்புட னருளிப் பின்போர்
செய்தியி னவத ரித்த செழும்பதிக் கெழலு மீங்கே
நெய்திகழ் நெடுவேற் கண்ணார் தேவியோர் நிமித்தத் தானே. 161

ஆரியர் பெரிய நம்பி யன்புறு மனைவி யோடுஞ்
சீரிய வுணரா ரென்னப் படுகலாஞ் சினந்து செய்யக்
கூரிய வுணர்வி னந்தக் கோதிலா ருடனே யின்பூ
வேரியங் குழலி னுளி னடந்தனர் விரைவி னுங்கே. 162

பூதலத் திருவை குந்த மாந்திரு வரங்கம்போகப்
பூதலூ ரிறையு மீளாக் கச்சியம் பதியுட் புக்குத்
தீதுற நிகழ்ந்த செய்தி யாவையுந் தெரிந்து தேவி
மீதுளம் வெகுளி பொங்க மெல்லியன் முகத்தை நோக்கா

முச்சக முவக்கு ஞான முனிவரா யிலகு மம்பொற்
கச்சிநம் பியையி ழித்தாய் கமழுண விருந்த தின்றென்
றச்சமின் றதுக ரந்தா யாரியர் மனைவி மாட்டு
நச்செனுங் கலக மாடி நகர்தணந் தகலச் செய்தாய்.

ஆகையிற் றரும பன்னி யன்றுநின் பிறந்த கத்திற்
கேகுதி யெனவே யென்ற துணையொடும் விடுத்துப் போக்
நாகவெற் பருளா ளன்முன் னணுகியஞ் சலிசெய் தைய
காகமும் பிழைக்க முன்னங் காத்தனை யெனநொந் தேத்

இல்லறந் தணந்து மற்றைத் துறவற மியைய யானே
நல்லருங் குருவாய் நீயே நயந்தருள் புரிகவென்ன
மல்லடு திணிதோண் மாய னியமன மருள முன்னம்
புல்லிய வுரிய மந்தி ரோபதே சத்திற் பொங்கி.

மும்மையா முலகங் காக்கு முத்திருக் கோலும் வண்ணஞ்
செம்மையா முடையுங் கொண்டே திகழ்தரச் செங்கண் ப
கொம்மையார் விழியி னோக்கிக் கூர்தரு முவப்பிற் பூசை
யம்மையா யிழைக்கி ஞானத் தருச்சகன் வதனத் தானே.

கதிராயி ரஞ்செய் தேவன் காசினி விரவ மூசும்
விதிராருந் திமிர மோச்சும் விதமக விருளை வாட்டும்
யதிராச னெனவே யாரு மிசைக்குமின் பெயரு மீந்தே
மெதிராடும் வாதி சங்க மடர்த்தினி யிலகு கென்றான்.

வேறு

இன்ன வண்ணமெ திக்கிறை யாயவர்
பின்னர் தாமெழுங் காரியம் பீடுற
வுன்னி யோர்திரு வைணவ ரோண்முகந்
தன்னை நோக்குபு தாமருள் செய்குவார்.

பெரிய பேர்திரு மாமலை நம்பியை
யருகி யந்திருக் கோவிந்த பட்டரை
யுரிய நந்திரு வொண்மத மொன்றிடப்
புரியு மாறுபு கல்கெனப் போக்கினார்.

முதலி யாண்டான்மு தன்மைபெ ருங்கூர
மதனில் வாழ்வுறு மாழ்வான டாதூரின்
முதமு றூழ்வாரெ னுமிந்த மூவரு
மெதிய திக்கழன் மாமல ரெய்தினார். 171

யாத வன்றனை யீன்றவள் யாவரு
மோது சீர்த்திய திபதி யொண்கழன்
மீது நம்மகன் மேவிடி னுய்குவன்
பூத லத்தெனப் புந்தியி னோர்கையில். 172

ஒக்கு மொக்குமெ னவய லோர்மொழி
மிக்கெ ழச்செவி மேவிவி யந்தவள்
புக்க ரும்புதல் வற்கது புந்தியி
னிற்கு மாறுநி லவுறச் செப்பினாள். 173

கேட்டி யாதவன் கேண்மையி னீன்றவ
ளூட்டு நன்மொழி யுற்றுயற் பாலதே
மாட்டு நானுஞ்சி கையும றந்தநம்
வாட்டு பாவம்வ ரைந்தொழி தற்கரோ. 174

ஆழி யாடையி னம்புவி யையலஞ்
சூழ வந்திடச் சொல்லுவ ரீங்கியி
னேழை நாமினி யென்செயற் பாலதென்
றூழ வுள்ளம ருந்துயர் வாடினான். 175

அன்று கங்குல வன்கன வின்னிடை
நன்று சூழ்வரி னம்மெதி ராசனை
யொன்று ஞாலம்வ லம்வரி னெண்பய
னென்று தேப்பெரு மாளிசைத் திட்டனர். 176

மற்றை நாளவன் சொப்பன மாயதை
யுற்று ணர்ந்துவி யந்துட னேகையி
னற்ற வத்திருக் கச்சியி னம்பியின்
பொற்ற நன்மையின் புக்கது ரைத்துமேல். 177

எண்ணு மெண்ணமெ ழுந்தரு ளாளனுக்
கண்ண லேமொழி தந்தவ னேமனம்
பண்ணு மாறடி யேற்கருள் பண்ணுகென்
றண்ண யந்துக ரங்குவித் தோதினான். 178

ஆதி நாயக னக்கன வாயதே
நீதி யாமென நேர்ந்தவர் மீண்டவற்
கோத வன்னவ னேங்குவ கைக்கட
லோத மூடுபெ டிந்தது வென்றரோ.

அக்க ணத்தெதி ராசரி னண்டையிற்
புக்கொ டுங்கிவ லங்கொடு போகியு
மொக்க நாலிரண் டாயவு றப்புமண்
மிக்க மூழ்ந்தவி ழுந்துத ரம்பல.

ஆய செய்தியை னைத்துமி பம்பியிந்
நாயி னேனுய்ய நாடித்தி ருவுள
மேய செய்யவி லச்சினை யாதிக
டேய ஞகுந்து றையினி ழைத்துடன்.

ஒற்றை யித்தடி தன்னையொ ருவியே
பற்றி மூன்றுப யன்றரு கோலினைச்
சொற்ற நன்னெறி சூழ்ந்தடி யேற்கினி
மற்றொர் சன்மம ணந்திட லின்றியே.

வாழும் வண்ணம் வளரருள் செய்கெனத்
தாழ வெம்பெரு மானார்த மதுளங்
காழி றும்பூது றக்கரு ணாதம்
வீழ நீதுவி ழிக்கடை செய்தரோ.

வேண்டு மாறுவி ழுப்பமு றவிழைத்
தாண்ட மூன்றுத டியரக் காடையுங்
காண்ட கப்படைத் தாயிரங் கண்ணனுந்
தேண்டு மாறுதி ருத்திப்ப ணிகொளா.

செய்ய கோவிந்த சீயரெ னும்பெயர்
வைய கம்புகல் வண்ணம ளித்துல
குய்யு மாறொரு நூலையு ஞற்றுவான்
பொய்ய றும்புனி தர்புகன் றாரரோ.

அதிர்ஷ்டம :

L. N. பெப்பர்மெண்டையே வாங்கவேண்டும்.

குழந்தைகளின் சிநேகிதர்கள் ! பெற்றோர்களின் களிப்பு !!

விலை மலிவு ! சுவை பெரிது !

நன்மை தரும் !.

இந்திய முதல்—இந்திய தொழிலாளிகள்.

வாங்க முந்துங்கள் ! கொடுக்கும் பணத்திற்கு

நல்ல பெப்பர்மெண்டு !!

For Delicious and wholesome Confectionery made of selected Fruit Essence and healthy glucose, apply to :—

SRI L. N. CONFECTIONARY,
Sales Depot :—West Chitrai St., Madura.

MADRAS OFFICE :—**Phone No. 3658.**
Y. M. I. A. Buildings, Armenian St., Madras.

L காயம்—பெருங்காயம் G

இதை ஹிங்கு—हिङ्गु என்று ஏனைய பாஷைகளிலும் வழங்குகிறார்கள். இது தன் குணத்தினாலும் நறு மணத்தினாலும் ஜீர்ணகாரியான மற்றச் சரக்குகள் பலவற்றையும் வென்றது என்பதை இப்பெயர் குறிக்கிறது. அதனாலேயே இதற்கு "ஸஹஸ்ர வேதி" என்றும் மற்றொரு பெயரும் வடமொழியில் வழங்கப்படுகிறது. "வயிற்றில் வாயு சேருவதையும், நெஞ்சில் கபம் சேருவதையும் தடுத்து விலக்கும்; வயிற்றுவலி முதலிய அஜீர்ணக் கோளாறுகளை அகற்றும்; பித்தஹரம்; சுவையில் காரமாயிருப்பதால், உண்வை நன்கு ஜீர்ணம் செய்யும்; அரோசகத்தைப் போக்கும்; பசி தீபகம் செய்யும்" என்று ஆசார்ய வாக்படர் ஆயிரங் காலத்திற்கு முன் உயர்ந்த பெருங்காய குணங்களை உவந்து மொழிந்திருக்கிறார்.

" हिङ्गु वातकफानाहशूलघ्नं पित्तनाशनम् ।
कटुपाकरसं रुच्यं दीपनं पाचनं लघु ॥ "

இக்குணங்களை யெல்லாம் பெற்ற பெருங்காயம் எல். ஜி. குறியுள்ளதைத் தவிர உண்மையில் வேறெதுவுமன்று. இதைக் கவனித்து எப்பொழுதும் காயம் வாங்குங்கள்.

லால்ஜி கோது & கம்பெனி

பிரபல பெருங்காய வியாபாரிகள்,

பம்பாய் சென்னை கும்பகோணம்

अमृतांजनम्

அம்ருதாஞ்சனம்

உண்மையில் அம்ருதம் போன்றது இப்பெயர் அகரத்தில் ஆரம்பிப்பதால் இது அகில மங்களமும் அளிக்கக் கூடியது என்று அடியில் கூறும் ப்ராசீன முது மொழி கூறுகிறது.

" अ इति भगवतो वाचकमकारं
प्रयुञ्जानेन किं नाम मङ्गलं न कृतम् । "
" अकारोपक्रमश्चास्मिन्मङ्गलत्वाभिसन्धितः । "

தலைவலி, ஜலதோஷம்,
சுளுக்கு முதலான சகல
நோய்களையும் தீர்க்கவல்ல
ப்ரஸித்தமான லேபனம்—

அம்ருதாஞ்சனம் லிமிடெட்

பம்பாய், மதராஸ், கல்கத்தா.

இளங்குழந்தை முதல் கிழவரீறாக
சரீரம் திடமாகவும் புஷ்டியாகவும் இருக்க விரும்பினால்

ஆயுஷ்ய ரஸாயனம்

ஒன்றே அவர்களுக்கு இன்றியமையாதது.

சுவையில் தேனினும் இனிது.

வைத்தியரத்தினம் பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார், ஆயுர்வேத பூஷணம் ஆயுர் வேதாசார்ய அவர்களால் தயார்செய்யப் பட்டது.

சாஸ்த்திர தத்துவப்படி ஒவ்வொரு தாதுவின் போஷணைக்கும் இன்றியமையாத பொறுக்கி யெடுத்த சரக்குகளான அச்வகந்தி, பார்ங்கீ, முஸலீ கந்தம், அயக்காந்த பஸ்மம், சிலாஜது, பஞ்சமூலங்கள் முதலியவற்றின் ஸத்துவங்களைக்கொண்டு தயார் செய்யப்பட்டது.

நூற்றுக்கணக்கான வைத்தியர்களால் புகழப்பெற்றது. தவறாமல் குணம் செய்வது. இருபது வருஷங்களுக்கு மேலாக ஆயிரக்கணக்கான ரோகிகளுக்குக் கொடுத்து எவ்வித பலஹீனத்தையும் சொஸ்தம் செய்யக் கூடியதென்று விசேஷ அனுபவத்தின்பேரில் இவ்விதம் விளம்பரம் செய்யப்படுகிறது. ஆயுஷ்ய ரஸாயனம் இரத்த விருத்தி செய்யும். ஆகவே ஜ்வரம் முதலிய பல வியாதிகளாலுண்டாகும் இரத்தக்குறைவு, சர்மவியாதிகள், கீல்வாயு, இளைப்பு முதலியவை இதனால் தீரும். மூளையையும், நரம்புகளையும், தசைகளையும் பலப்படுத்தும். இருதயத்துக்கு வன்மை யுண்டாக்கும். ஸகல தாதுக்களையும் புஷ்டியுள்ளதாகச் செய்யும். க்ஷயரோகத்தில் மிக்க உபயோகமானது. இளைத்துப்போயுள்ள குழந்தைகளுக்கு உண்மையில் இது அமுதம் போன்றது. சுமார் 48 வேளைக்குப் போதுமான புட்டி 1க்கு ரூ. 3-4-0.

வேறு ஔஷதங்களுக்கு ஜாபிதா தேவையானால் அனுப்பப்படும்.
வியாபாரிகளுக்கும் வைத்தியர்களுக்கும் விசேஷ கமிஷன்.

சார்ங்கதர ஸம்ஹிதையிற் கூறியுள்ள பெரும்பான்மையான ஔஷதங்களும் ஆர்யன் பார்மஸியில் கிடைக்கும்.

ஆர்யன் பார்மஸி,
11, ஆதியப்ப முதலித் தெரு,
வேப்பேரி, மதராஸ்.

15896

சீரும் சிறப்பும் செழித்துப் பெருமையாய் வாழ
அழகிய ஆபரணங்களை அணிவது அவசியம்.
ஆபரணங்களுக்கெல்லாம் அரசனுயிருப்பது

வைர நகையே.

ஜெமைக் கமலங்களைச் செம்மையாகத் தேடியணிபவரிடம் ஸ்ரீதேவி தானே வந்து தாண்டவமாடுவாள். இது விளம்பரக் கட்டுரையென்று வீணில் நினைத்துவிடாதீர்கள். வைரம் முதலிய இரத்தினங்களின் அருமை பெருமைகளைப் பகுத்தறிந்த பண்டைக் காலத்திய பண்டிதோத்தமர்கள் நிர்ணயித்து நிரூபித்துள்ள வசனங்களையும் வாசித்துப் பாருங்கள்.

षड्भिर्वाष्टभिरस्रैर्यत् बहुभिर्वा समन्वितम् ।
अम्बुदेन्द्रधनुर्वारितरं वज्रं प्रशस्यते ॥
वज्रस्य सर्वदा तादृग्गुणयुक्तस्य धारणम् ।
शोभाकरं श्रेयसां च साधकं दोषघातकम् ॥

"ஆறு பட்டைகள், எட்டு பட்டைகள், அநேகம் பட்டைகள் உள்ள வைரங்கள் குணத்தில் ஒன்றுக்குமேல் ஒன்று உயர்ந்தவை. நீர்கொண்ட மேகத்தில் தோன்றும் இந்திர தனுஸ்ஸுக்கு ஒப்பானநிறங்களோடுகூடி நிரம்ப நீரோட்டமுடைய வைரக்கல் வெகுப் பிரசஸ்தமானது. அவ்வாறு உயர்குணமுள்ள வைரத்தை எப்பொழுதும் அணிவதால் அழகும் ஒளியும் ஓங்கி வளரும்; சீரும் சிறப்பும் செழிக்கும்; பீடையும் பிணிகளும் பற்றறவே ஒழியும்."



உத்தம குணம் பொருந்திய வைரங்களே அணிபவருக்கு அவ்வித அழகையும் ஐச்வர்யத்தையும் அளித்திடுமென்பதை ஆற அமர யோசித்து அவ்வித வைரங்களை வாங்கியணிய முயலவேண்டும். அவ்வகை வைர நகைகளை நாகரிகமான மோஸ்தரில் நன்ருகச் செய்து நம்பிக்கைக்குப் பாத்திரமாய் பெரும் வியாபாரம் செய்பவர்ஸுராஜ்மல் கம்பெனியாரே.



SURAJMAL'S
The Jewellers
313 ESPLANADE, MADRAS.

Printed by Kabeer Printing Works, Triplicane, and Published by
Vankipuram S. Vasudevachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd., Madras